மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ஆய்வுமாலை 2000

தொகுதி - 1

பதிப்பாசிரியர்

முனைவர் ச. மெய்யப்பன்

முனைவர் ச. வே.சுப்பிரமணியன்

முனைவர் வே. இரா. மாதவன்

மீனாட்சிசுந்தரம்பிள்ளை ஆய்வுமாலை

தொகுதி - I

திருவாவடுதுறை ஆதீனமும் உலகத்தமிழ்க் கல்வி இயக்கமும், மெய்யப்பன் தமிழாய்வகமும் இணைந்து நடத்திய மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இலக்கிய ஆய்வு மாநாட்டு வெளியீடு.

பதிப்பாசிரியர் :
முனைவர் ச. மெய்யப்பன்
முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
முனைவர் வே.இரா. மாதவன்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
இலக்கிய ஆய்வுமாநாட்டு வெளியீடு
தஞ்சாவூர்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆய்வு மாலை

முதற்பதிப்பு : 25, நவம்பர் 2000

பதிப்பாசிரியர் :

பதிப்புச்செம்மல், தமிழவேள்
முனைவர் ச. மெய்யப்பன்
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001.

செந்தமிழ்ச் செம்மல், பேராசிரியர்
முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்
தமிழூர், அடைக்கலப்பட்டணம் அஞ்சல்
திருநெல்வேலி மாவட்டம் - 627 808.

முனைவர் வே.இரா. மாதவன்
இணைப்பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை, சுவடிப்புலம்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

விலை : ரூ. 100-00

நூல் கிடைக்குமிடம் :
மணிவாசகர் நூலகம்
12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

கணினியாக்கம் : உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், தமிழூர் - 627 808.
அச்சாக்கம் : ஸ்டெட்பாஸ்ட் பிரஸ், சென்னை - 600 013



பெரும்புலவர்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை
1815–1876



தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியில் ஆய்வுக்கோவைகளின் பங்களிப்பு

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

நிறுவனர் : மெய்யப்பன் தமிழாய்வகம்

ஆங்கிலக் கல்வியின் வரவால் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழாய்வு புதிய திசை நோக்கிப் புறப்பட்டது. பெரும் புலவர்கள் மரபுவழி ஆராய்ந்து முடிவுகளை நிறுவினர். மறைமலை அடிகள் பட்டினப்பாலை ஆராய்ச்சி, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி எனத் தனித்தனி நூல்களை உருவாக்கினார். 40களில் பல்கலைக் கழகங்களில் முறையான Ph.D. ஆய்வுகள் முகிழ்த்தன. மரபுவழிக் கல்வியில் சிறந்த மு. வரதராசனார், மா. இராசமாணிக்கனார், வ.சுப. மாணிக்கனார் ஆங்கில ஆய்வு முறையில் தங்கள் ஆய்வேடுகளை ஆங்கில மொழியில் பணித்தனர். அடுத்த தலை-முறையினர் 60-80களில் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வேடுகளைத் தமிழில் உருவாக்கினர். 61, 68ல் நிகழ்ந்த உலகத் தமிழ்மாநாடுகள் தமிழ் ஆராய்ச்சியில் திருப்பு முனையாக அமைந்தன.

70களில் தோன்றிய அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் இளம் பேராசிரியர்களுக்கும் இளம் ஆய்வாளர்களுக்கும் ஆய்வு வாயில்களைத் திறந்துவிட்டது.

தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசனார், வ.சுப. மாணிக்கனார், தனிநாயக அடிகள், சாலை இளந்திரையன் ஆகியோரின் நன்முயற்சியால் தோன்றிய இம்மன்றம் நாளொரு

மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. ஆண்டுக்கு ஆண்டு வலிமைபெற்றது; ஆராய்ச்சியும் வளர்ந்தோங்கியது. 33 ஆண்டுகளாக வெளிவந்துள்ள ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்துப் பார்த்தால் மலைப்பாக இருக்கிறது. திரும்பிப் பார்க்கிற போது இளைஞர்களின் சாதனை திகைப்படையச் செய்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் ஆய்வுக் கோவையில் பாதிக்கு மேல் அறிமுகக் கட்டுரைகள்; கால்பகுதி தரவுகளின் தொகுப்புக்கள்; கால் பகுதி ஆராய்ச்சி மின்னல் ஒளிவீசும் கட்டுரைகள். ஒட்டுமொத்தமாகச் சேர்த்துப் பார்க்கும்போது அடிப்படைச் செய்திகள் அனைத்தும் தொகுக்கப்பட்டுவிட்டதாகவே கருதுகிறேன். இனிவரும் ஆய்வுகளுக்கு இவை அடித்தளமாக அமையும். எவ்வாறாயினும் ஒரு பொருளை எடுத்துக் கொண்டு, ஐந்து, ஆறு பக்கங்களில் எடுத்த கருத்தை நிறுவுதற்குரிய பயிற்சியை ஆய்வாளருக்கு வழங்கும் வாய்ப்பாகக் கட்டுரைகள் அமைந்துவிட்டன.

சற்றொப்ப 25,000 பக்கங்களில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தலைப்புகளில் கல்லூரி ஆசிரியர்களின் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக் கோவை தொய்வின்றித் தொடர்ந்து வருவது தமிழ்இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட முயற்சியாகும்.

கோவையில் நடைபெற்ற பாம்பன் சுவாமிகள் கருத்தரங்கும் நல்லதொரு ஆய்வுக் கோவையை நற்றமிழுக்கு நல்கிய நல்லதொரு முயற்சி. திருப்பனந்தாள் காசிமடமும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் காசியில் இணைந்து நடத்திய குமரகுருபரர் கருத்தரங்குக் கோவைகளும் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளன. தனியொரு புலவர் ஆய்வில் 200க்கு மேற்பட்ட ஆய்வாளர்கள் கட்டுரைகள் அளித்த வகையில் இது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இதனைத் தொடர்ந்து சாதனைச்செம்மல் பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் அரிய, பெரிய முயற்சியால் **திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** அருளாசியுடனும், உதவியுடனும் இம்மாநாடு வலிவோடும் பொலிவோடும் நடைபெறுகின்றது. இளைஞர் மாதவனின் நன்முயற்சிகள் அனைத்தும் நம் பாராட்டுக்குரியவை. மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்னும் பேராற்றில்

ஆய்வு மதுகையோடு குளித்து மகிழும் ஆய்வாளர்களின் கட்டுரைகளைக் கொண்டது இத்தொகுப்பு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் நீராடுகின்றனர். தாங்கள் கண்ட, துய்த்த நல்லின்பத்தை நமக்கு நல்குகின்றனர். பெரிய ஆலமரத்தின் கிளைகளைச் சில ஆய்வாளர்கள் அடையாளம் காட்டுகின்றனர். சிலர் இலைகளை, சிலர் காய்களை, சிலர் கனிகளை, சிலர் தெள்ளிய ஆலின் சிறு பழத்துச் சிறு விதையை தம் நுண்மாண் நுழைபுலத்தால் இனங்கண்டுச் சுட்டுகிறார்கள்.

பிள்ளையவர்களும் பிள்ளைத்தமிழும்
பிள்ளையவர்களும் தலபுராணங்களும்
சொல்லாட்சித் திறன்
கம்பரும் மகாவித்துவானும்
பிள்ளையவர்களின் கவிதைமொழி
கவிஞர் காண விழைந்த சமுதாயம்
பிள்ளையவர்களின் அவையடக்கப் பாடல்கள்
ஆரும் ஊரும் நாடும்
மகாவித்துவானும் வேதநாயகரும்
புராணம் பல புனைந்த புலமையோர்
பிள்ளையவர்களின் மாணாக்கர்
யமக அந்தாதியின் புலமைவளம்
சென்னையில் எழுந்த செந்தமிழ்ப் பனுவல்கள்
பிள்ளையவர்கள் கற்ற, கற்பித்த முறைகள்
மகாவித்துவானின் பன்னூல்களும் பதிப்புக்களும்
திருவாவடுதுறை பெற்ற பெரும் புலவர்

முதலிய கட்டுரைகள் செய்திகளின் களஞ்சியமாயும், ஆய்வு வன்மை சிறந்தும் தமிழ்வளம் பொதுளியவையாகவும் இருப்பதை வாசகர்கள் இனங் காண்பர்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்னும் மாபெரும் மனிதரின் படைப்பாற்றல், கவித்துவம், வாழ்வு, வாக்கு அனைத்தையும் ஒருசேரத் துய்த்து மகிழ்வதற்கு இவ்வாய்வுமாலை துணைசெய்யும்.

செந்தமிழ்ச்செம்மல் பேராசிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்
தமிழூர், அடைக்கலப்பட்டணம் அஞ்சல்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 808.

அணிந்துரை

தமிழ்ப் புலமை வானில் மிகவும் ஒளிபரப்பிப் புகழ் பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பெருங்கவிஞர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பர் என்றே இவர் அழைக்கப் பெறுபவர். இவர் தம் ஐந்து வயதில் கல்வி கற்கத் தொடங்கிய நாள் முதல் வாழ்நாள் இறுதி வரையிலும் "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர், விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்'' என்ற கொள்கையோடிருந்து தமிழுக்காகவே வாழ்ந்த பெருந்தகையாளர்.

திரு சி. தியாகராச செட்டியார், டாக்டர் உ.வே. சாமிநாதையர் போன்ற பலர் இப்புலவர் பெருமான்பாற் பாடங் கேட்டு உயர்ந்தவர்களாவர். அவரால் விளக்கம் பெற்ற தமிழ் நூல்கள் பல. தமிழ் மாணாக்கர் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தாமே வாழ்ந்து காட்டியும், அவ்வாறே பல மாணாக்கர்களை உருவாக்கியும் தமிழுலகைச் சிறப்பித்தவர் இக்கவிஞர் சிகாமணி.

தமிழ் இலக்கண இலக்கியங்களை மிகவும் போற்றிப் பயின்ற இவர் பிறமொழிகளையும் மதித்துப் போற்றியவர். இதனால், தமிழிலக்கண நெறிகளை நுணுகி ஆராய்ந்து பாடஞ் சொல்லியவர். செய்யுள் இயற்றும் புலமைத் திறத்தை வளர்த்துச் செந்தமிழ்வளம் பெருக்கியவர். தமிழ்ச் சிற்றிலக்கிய வளர்ச்சியில் இவருக்கென ஒரு சிறப்பிடம் உண்டு. தமிழில் தலபுராணங்களைப் பாடிக் குவித்த இவர் பாடாத இலக்கிய வகைகளே இல்லை என்னும் அளவிற்கு அனைத்தையும் மிக இயல்பாகப் பாடினார். பாடல்களை ஏட்டில் விரைந்து எழுதும் ஆற்றலும் மிக்க இவருடைய எழுத்துப் பயிற்சியும் போற்றத்தக்கதாகும். அணிநயங்களோடு கற்பனை வளம் பெருக இயற்கையைப் புனைந்துரைப்பதிலும் ஈடுஇணையற்றவர் இவர்.

இத்தகைய பெரும்புலவரை அக்காலத்தில் ஆதரித்துப் பெருமை பெற்றோர் பலர். ஆதீனங்கள் இவருடைய புலமையையும் சைவ ஒழுக்க மேன்மையையும் பாராட்டிச் சிறப்பித்தன. அவ்வகையில் திருக்கயிலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் இவரை மகாவித்துவான் ஆக ஏற்று உலகறியச் செய்த பெருமை உலகம் உள்ள அளவும் நிலைக்கும்.

இந்தத் தமிழ்ப் புலவரின் பெருமையை இன்றையத் தலைமுறையினரும் அறிந்துணரச் சிறப்பானதொரு கருத்தரங்கை நடத்தவேண்டுமென விழைந்தோம். உலகத்தமிழ்க் கல்வி இயக்கத்தின் இந்த எண்ணத்தைத் திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருமுன்பு விண்ணப்பித்தோம். அவர்கள்

உள்ளன்போடு உவந்து இப்பணியைப் பாராட்டியதுடன் புரவலராக அமைந்து சிறப்பிக்கவும் அருளினார்கள். குருமகா சந்நிதானம் அவர்கட்குத் தமிழன்பர்களின் நன்றியறிதலை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

தமிழ்நூல் பதிப்புலகில் பதிப்புச்செம்மலாக விளங்குபவரும் என்னுடைய அருமை நண்பருமாகிய பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பனார் அவர்கள் இப்பணியின் மதிப்புறு தலைவராகவும் பொருளாளராகவும் பொறுப்பேற்று, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை ஆய்வு மாலைத் தொகுதிகளை அச்சேற்றி வெளியிட்டு, அனைத்து உதவிகளையும் நல்கி, அருந்தமிழ்த் தொண்டினை ஆற்றியுள்ளார்கள். அவர்களுடைய அன்புள்ளத்திற்கு எங்கள் பாராட்டுகள் என்றும் உரியன.

மகாவித்துவான் தமிழ்ப்பணியைப் பற்றி ஆய்ந்து எழுத இசைவு தந்த இருநூற்று ஐம்பது அறிஞர்களுள் நூற்றிரண்டு பேராளர்கள் உரிய காலத்தில் எழுத்துரைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களின் ஆர்வத்தினைப் பாராட்டி மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

அண்மையில், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையினர் கோவை கௌமார மடத்துடன் இணைந்து வண்ணச்சரபர் தண்டபாணி சுவாமிகள் ஆய்வுமாலை இரண்டு தொகுதிகளையும், திருப்பனந்தாள் காசிமடத்துடன் இணைந்து பிரபந்தவேந்தர் குமரகுருபரர் ஆய்வுமாலை மூன்று தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்கள். இவ்வகையில், இப்பொழுது திருவாவடுதுறை ஆதீனமும் உலகத்தமிழ்க் கல்வி இயக்கமும் மெய்யப்பன் தமிழாய்வகமும் இணைந்து மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆய்வுமாலையை உருவாக்கியுள்ளனர்.

தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றும் என்னுடைய மாணாக்கர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்கள் இக்கருத்தரங்கப் பணிகளையும் பதிப்புப் பணிகளையும் முழுமையாக ஏற்று உழைத்துள்ளார். தமிழில் பல நல்ல நூல்களை உருவாக்கியுள்ள அவர் இன்னும் பல நூல்களை ஆக்கித்தர விரும்பி வாழ்த்துகிறோம்.

தமிழறிஞருக்கானதொரு ஆய்வுக்கருத்தரங்கைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்த வேண்டுமென நாங்கள் விரும்பியதை அறிந்த மாண்புநிறை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் கதிர். மகாதேவன் அவர்கள் மனமுவந்து இப்பணியைப் பாராட்டி உதவியமையை எண்ணி மகிழ்ந்து போற்றுகிறோம். பல்கலைக்கழகப் பதிவாளர் பொறுப்பிலுள்ள பேராசிரியர் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களின் பேருதவிகளுக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகும்.

ஆய்வு மாலையிலுள்ள அரிய கருத்துரைகளை ஏற்றுப்போற்றி இப்பெரும் புலவரின் தமிழ்ப்புலமை மாண்பை உலகறியச் செய்யும் அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.

தமிழூர்
14-11-2000

அன்பன்,
ச.வே. சுப்பிரமணியன்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

ஆதீனகர்த்தர் - திருவாவடுதுறை ஆதீனம்.

திருவாவடுதுறை - 609 803. தமிழ்நாடு

வாழ்த்துரை

நமது ஆதீனமும் திருநெல்வேலி தமிழூரிலுள்ள உலகத் தமிழ்க் கல்வி இயக்கமும் தஞ்சாவூரில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இலக்கிய ஆய்வு மாநாட்டினை அண்மையில் நிகழச் செய்து கருத்தரங்க ஆய்வு மாலையாக மகாவித்துவான் பிள்ளை அவர்களின் தனிப்பெரும் புலமைத் திறனை விரித்துரைக்கும் அறிஞர் பெருமக்களின் 102 ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட இரு தொகுதி நூல்களை வெளியிடுதல் தமிழர்களுக்குப் புரியும் உயர் பணியென மகிழ்கிறோம்.

நமது ஆதீனத்துப் பதினைந்தாவது குருமூர்த்திகள் அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகள், இவர்கள்தம் உயர் புலமைத் திறன் தெரிந்து இவர்களை ஆதீனவித்துவானாக நியமித்தும், பின், ‘ஆதீன மகாவித்துவான்’ என்னும் பட்டம் வழங்கியும் சிறப்பித்தருளினார்கள். தொடர்ந்து, அருள்திரு மேலகரம் சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் அருளாட்சிக் காலத்திலும் இவர்கள் ஆதீனத்திலிருந்து மாணாக்கர் பல்லோர்க்குப் பாடஞ் சொல்லியும் நூல்கள் பல இயற்றியும் புகழ்பரவ விளங்கியவர்கள்.

மகாவித்துவான் பிள்ளையவர்கள் பிறப்பிலேயே கவித்வ சக்தியுடன் பிறந்தவர்கள். வளம்பெற்ற செய்யுட்களின் விளை நிலமாகவே இவர்கள் மனம் அமைந்தமையால் சிற்றிலக்கியங்களும், பேரிலக்கியங்களும், தனிப்பாடல்களுமாக அளவிறந்த செந்தமிழ் நலஞ்சொட்டும் தமிழ்ப்பாக்கள் தமிழுலகிற்குக் கிடைத்துள்ளன. சிவபக்தி, குருபக்திகளின் முதிர்வு, சைவ சித்தாந்த சாத்திர நூற் கருத்துக்களைப் பல்வேறு உருவங்களில் வடித்துக் காட்டுதல், பல்வகைச் சுவைகளையும் பாங்குடன் அமைத்தல், கற்பனை வளம், சந்த அமைப்பு, இலக்கண நுட்பங்களைப் புலப்படுத்துதல் முதலிய உயர் நலன்களையெல்லாம் கொண்டு திகழ்வன இவர்களுடைய பாடல்கள்.

தமிழன்னையின் திருத்தொண்டர்களாகித் தமிழகத்தைத் தமிழின்பால் ஈடுபடுத்திய தமிழ்ப் பெரியார்களில் மகாவித்துவான் பிள்ளை அவர்கள் சிறந்து விளங்குபவர்கள். பிள்ளை அவர்களின் இனிய நினைவாகத் திருவாவடுதுறையில் அவர்கள் வசித்த இல்லம் இருந்த இடத்தில் புதுவதாக மாளிகை ஒன்றினை அமைத்து, பிள்ளை அவர்கள் நினைவு நாளாகிய 25.1.1993இல் அதனைத் திறப்பித்தும், அவ்வாண்டு முதல், ஆண்டுதோறும் அந்நினைவு நாளில் தமிழ் மூதறிஞர் ஒருவருக்குப் பொற்கிழி, மோதிரம், பட்டாடை முதலியன வழங்கியும் மகிழ்கின்றோம்.

மகாவித்துவான் பிள்ளையவர்கள் நூல்களுள் நமது ஆதீனத்தில் திருநாகைக் காரோணப் புராணம், பேரூர்ப் புராணம், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், ஸ்ரீஅம்பலவாண தேசிகர் கலம்பகம், ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் மாலை, ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடுதூது, திருவிடைமருதூர் உலா முதலியன வெளியிடப் பெற்றுள்ளன.

சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநரும், தமிழூர் உலகத் தமிழ்க் கல்வி இயக்க நிறுவனருமாகிய பேராசிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியனார் அவர்களும், பதிப்புச்செம்மல் பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பனார் அவர்களும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை இணைப் பேராசிரியர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களும், கட்டுரைகள் வழங்கிய அறிஞர் பெருமக்களும், மாநாடு சிறப்பாக நடைபெறவும், மகாவித்துவான் பிள்ளையவர்கள் கருத்தரங்க ஆய்வு மாலை உயர்பயன் விளைக்க வெளிவரவும் துணை நிற்கும் அன்புடைமையைப் பாராட்டுகிறோம்.

மாநாடு சிறப்பாக நடைபெறவும், ஆய்வு மாலை மகாவித்துவான் பிள்ளையவர்கள் உயர் தமிழ்ப் புலமையின் தனி நலம் தெரிக்கும் அரிய படைப்புகளுடன் நன்கு மலர்ந்து இன்பம் பெருக்கவும் அருள நம் ஆன்மார்த்த மூர்த்தி அருள்திரு ஞானமா நடராசப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

13.11.2000

ஆய்வு மலர்கள்

1.அம்பர்ப் புராணத்தில் ஒன்பான் சுவைகள்

அரு.அப்பாசாமி
புதுவை

அம்பர் என்பது சோழநாட்டிலுள்ள தோரூர். இதனைக் 'காவிரி யணையுந் தாழ் நீர்ப்படப்பை, நெல்விளை கழனியம்பர்' என்று புறநானூற்றின் 385ஆம் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. அப்பாடல், அவ்வூரில் விளங்கிய 'அம்பர்கிழான் அருவந்தை' என்ற வள்ளலைக் கல்லாடனார் பாடியதாகவும் அமைந்துள்ளது. அரிசில் என்ற ஒரு நதி இவ்வூரின் அருகே ஓடுகின்றது. நற்றிணை 141ஆம் பாடலில், 'ஏந்து கோட்டு யானை இசைவெங் கிள்ளி, வம்பணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த, அரிசிலந் தெள்ளறல்' என்று இவ்வூரும், இவ்வாறும் பாடப்பெற்றுள்ளமையினால் சங்க காலத்திலேயே இவை மிக்க சிறப்புடன் விளங்கின எனவும் அறிய வியலும்.

இவ்வூர் தல விசேடத்தாலும் பெருமை பெற்று விளங்குவது, இதன் புகழை மேலும் மேம்படுத்துவதாகும். இவ்வூர் பற்றி ஞான சம்பந்தப் பெருமான், 'அரிசிலம் பொருபுனல் அம்பர்', 'அறைபுனல் நிறைபெயல் அம்பர்', 'அங்கனி விழவமர் அம்பர்','பைம்பொழில் நிழல் வளர் நெடுநகர்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சிறப்பிக்கப்பெறும் அம்பர் என்னும் ஊரில் கோயில் ஒன்று யானை ஏறமுடியாதவாறு படிக்கட்டுகள் அமைத்துச் செய்குன்றுகள் போல் கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட காரணம் பற்றி அம்பர்ப் பெருந்திருக்கோயில் எனவும் பெயர் பெற்றதென்பர்.

தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாதலின் இவ்வம்பர்ப்பெருந் திருக்கோயில் காவிரித்தென் கரைத் திருத்தலங்கள் வரிசையில் 54 ஆவதாக வைத்தெண்ணப்படுகிறது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியருளிய அம்பர்ப்புராணத்தில்

பெருமையிற்பொலியு மம்பர்ப் பெருந்திருக்கோயில் மேய
கருமையிற் பொலியுங் கண்டக் கடவுளர் திருப்பு ராணம்

என்று நூல் வரலாறாகக் குறிப்பிடப்பெறும் பாடலில் கோயில், 'அம்பர்ப் பெருந்திருக்கோயில்' என்று குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகையுள், 'அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்' என்று சுட்டப்பெறுபவரும், சேக்கிழார் பெருமான் இயற்றியருளிய திருத்தொண்டர் புராணத்தில் சோமாசி

மாறநாயனார் புராணம் என்ற பகுதியில் விளக்கிக் கூறப் பெற்றிருப்பதுவம் ஆகிய சோமாசி மாறநாயனார் இவ்வூரினர். இவர் பல சோம யாகங்களைச் செய்து புகழ்பெற்றதால் சோமாசி மாறர் என்றழைக்கப்பெற்றார்.

காளி வழிபட்ட திருத்தலங்களாகப் போற்றப் பெறுவன மாகாளம் எனப்படும். இத்தகைய திருத்தலங்கள் அம்பர் மாகாளம், இரும்பை மாகாளம், உஞ்சேனை மாகாளம் என்பனவாம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பழுத்த புலமை முதிர்ந்த காலத்தில் இயற்றியருளிய அம்பர்ப்புராணம் 15 படலங்களையும், 1007 செய்யுட்களையும் உடையது. பொருளணிகள் பலவற்றோடு நைமிசாரணியப் படலத்தில் மடக்கு, திரிபு, கோமூத்திரி, கூடசதுக்கம், முரச பந்தம், அக்கர வருத்தனம், அக்கரச் சுதகம், சுழிகுளம், சருப்பதோபத்திரம், மாலை மாற்று, காதை கரப்பு, கரந்துறைசெய்யுள், மாத்திரைச்சுருக்கம், மாத்திரைப்பெருக்கம், நாகபந்தம், இரதபந்தம், நாலாரை முதலிய பலவகைச் சக்கரம், மிறிது படுபாட்டு, திரிபங்கி, நிரோட்டகம், அநாசிகம் அகர இகர முதலிய உயிர்ச் செய்யுட்கள் முதலிய சொல்லணிகளையும் உடையது. ஒன்பான் சுவையும் அமையப்பாடப் பட்டது. அச்சுவைகளை இந்நூற் பாடல்களின் துணை கொண்டு சிறிதளவு விளக்குதலே இவ்வுரையின் நோக்கம்.

அம்பர்ப் புராணப் பாடல்களில் காணப்படும் ஒன்பான் சுவை பற்றி அறியுமுன் அவை பற்றிய விளக்கங்களை ஒருவாறு அறிந்து மேற்செல்வது பயனுடைத்தாம்.

'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும், கண்ணிய புறனே நானான் கென்ப' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு 'உரை வகுத்த பேராசிரியர் 'முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டுங் கேட்டுங் காமநுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும் அவை கருதிய பொருட் பகுதி பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு' என்று கூறியுள்ளார். அன்றியும் 'நாலிரண்டாகும் பாலுமாருண்டே' என்னும் நூற்பாவிற்குப் பேராசிரியர் முப்பத்திரண்டு மெய்ப்பாடும் பதினாறாதலே யன்றி எட்டாதலும் உண்டு என்றும் பொருள் செய்வார்.

அவை வீரம், அச்சம், வியப்பு, இழிவு, காமம், அவலம், நகை, நடுவு நிலை என்பன. இவற்றின் விகாரமாகிய சத்துவங்கள் எட்டனையும் இவற்றுளடக்கி எட்டாக்கிக் கூறிய வரறிது வென்பது என்பார் பேராசிரியர்.

நாலிரண்டாதலும் உண்டென்பது, 'பாலென்றதனான் எட்டாதலேயன்றி அவை ஒன்பதாதற்குப் பகுதியுமுடையவென்பது' என்னை? உருத்திரம் தன்னோடொன்பதாகும் என்ப ஆதலின். இதுவும் பேராசிரியம்.

இவ்வாறு கூறப்பட்ட ஒன்பான் சுவைகளுள் நகைமுதல் உவகையீறாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடு எனப்படும். இவற்றுள் எள்ளுதலும்

இளமையும் பேதைமையும் மடனுமெனக் கருதப்பட்ட நான்கும் நகைப்பொருளவாம் என்று கூறுவர்.

நகை:

அம்பர்ப் புராணத்தில் 'பரத்தையர் தெரு வருணனை' பற்றிக் கூறுமிடத்து எள்ளல் பற்றிய நகைச்சுவைப்பாடல்களைக் குறிப்பிடுவோம்.

பாடல், பரத நூல் தவறாது ஆடல், தேவரும் விரும்பும் பேரழகுடைமை இவற்றினால் விலை மதிக்க முடியாத மகளிரைச் சிறந்த அறிஞர்களும் 'விலைமாதர்' என்று கூறுவது வியப்பாக உள்ளது. இது பற்றிக் கூறும் பாடல்:

பாடலின் நயத்தி னாலும் பரத நூல் வழுவாது ஆடும்
ஆடலின் நயத்தி னானு மரம்பையர் அவாவும் யாணர்
வீடலில் நயத்தி னாலும் விலையிலா தவரை அந்தோ
வாடலில் நயத்தி னாரும் விலைமட மாத ரென்பார் (219)

இதே வருணனை பற்றிக் குறிப்பிடும் அடுத்த தொரு பாடற் கருத்துப் பின் வருமாறு.

சிவபெருமானே வந்தனைக் குரியவன் என்று அவனையே சிந்தனை செய்யும் பரத்தையர், முருகனை யொத்த பேரழகுடைய இளைஞர்களை எல்லாம் கைகுவித்து அழைத்து அவர் நல்கும் இன்பத்தைத் தாமும் துய்ப்பது தவறு இல்லை. ஆனால் அவ்வின்பம் துய்ப்பதற்கு மேல் அவர்களிடமிருந்து பொருள்களைக் கவர்தலே குற்றம், பாடலைக் கேளுங்கள்:

வந்தனை ஏற்கத் தக்கோன்
மாதேவ னேயென்று ஓர்ந்தும்
கந்தனை அனையார்க்கு எல்லாம்
கைகுவிப் பார்மா தேவற்
சிந்தனை செய்வார் அன்ன
திறத்தவர் நல்கும் இன்பப்
பந்தனை துய்ப்பார் என்னின்
பைம்பொன்கொள் ளுதல் ஓர் குற்றம் (220)

இதே வருணனையில் மலரும் ஒரு பாடல் குறிப்பிடுவது:

நறுமணப்பொருள்களோடு கூடிய வெற்றிலைப் பாக்கைப் பரத்தையர் மென்று சுவைத்தாராக, அவர்கள் சுவைத்த தம் பலத்தை காமுகர், அவர்கள் வாயிலிருந்து தாம் சுவைக்கும் திறத்தை நோக்கப் பரத்தையர் கண்ணப்பராகவும், காளையர் காளத்தியராகவும் உள்ளனர். இவையாவும் எள்ளல் பொருட்டாகிய நகைச்சுவை திறத்தன என்பர். இதனை நுவலும் பாடல்:

கண்ணப்பச் சிலையும் பாகுந் துவருற மென்று ஆனந்தம்
நண்ணப்பல் தரம் அவாவி நல்குபு களிப்புச் செய்யும்
வண்ணப்பன் மணியும் பொன்னும் வயங்கப்பூண் பரத்தை மாதர்
கண்ணப்பர் நிகர்த்தார்; மைந்தர் காளத்தியாரை யொத்தார் (222)

பஞ்ச நிலை குறித்துப் பாடப்பட்ட பாடல்:

உணவுப் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் மக்கள் யாவரும் வயிற்றுப் பசியினால் உடற்பசியாகிய காமத்தையும் மறந்து விட்டனர். தம் கண்ணால் கண்ட மகளிரை எல்லாம் அடைவதற்காக அவர்களைச் சுற்றித் திரியும் கழி காமத்தரும் பற்றற்ற துறவியர் போலாயினர். தம் கணவர் தரும் இன்பம் போதாமல் பிறரையும் நாடித்திரியும் கயத்தியரும் வயிற்றுப் பசி மேலிட்டால் அருந்ததி போலத் தூயரராயினர். பாடல் இதோ கேளுங்கள்:

பொருசிலை மாரவேள் போரின் நீங்கினன்
வெருவரும் விடரெலாம் விரத்தர் போன்றனர்
பெருகொளிக் கொழுநரைப் பிழைக்க மாதரும்
ஒருவுஅரும் அருந்ததி யொத்து வைகினர் (968)

இதுவும் எள்ளல் பற்றிய நகைச்சுவை

அவலம்:

இனி, அழுகைச் சுவை பற்றிக் காண்போம். இளிவும் இழத்தலும் அசைதலும் வறுமையுமென இந்நான்கின் நிலைக்களனாக அவலச் சுவை பிறக்கும். இச்சுவை பற்றிக் குறிப்பிடும் அம்பர்ப் புராணப் பாடல் கருத்து:

சங்கர சீலன் என்ற வலிமை மிக்க அசுரனால், தவம் செய்யும் சான்றோர்கள் எல்லாம் பெரிதும் அலைக்கப்பட, இந்திரன் அவர்கள் படும் துயரங்களை இறைவனிடம் முறையிட்டுப் பரிகாரம் தேடலானான். 'திரிபுரங்கள், மன்மதன் உடல், காலன் உடல் இவற்றை எல்லாம் அழித்து நல்லோரைப் புரந்த பெருமானே! நீ கருணை செய்யாவிடில் எல்லா உயிர்களையும் இவன் தின்று தீர்த்து விடுவான். உன்னைத் தவிர எங்களுக்கு வேறு பற்றில்லை. சான்றோர்தம் களை கண்ணாகிய நீயே எங்களுக்குக் கதி' என்று அவன் ஓலமிட்ட இடத்தில் இளிவு இழவு என்பன பற்றிய அவலச்சுவையைக் காண்கிறோம். பாடல் வருமாறு:

திரிபுரம் முழுதும் நீறாய்ச் சிதைதர நகைத்தாய் ஓலம்
அரிமக னுடலஞ் செந்தீ உணாக்கொள வமைத்தாய் ஓலம்
பரிவு அற வந்த காலன் பதைத்திட வுதைத்தாய் ஓலம்
பிரியம்மிக்கு எவருஞ் சாரும் பிரமபு ரீசா ஓலம் (681)

இனி, பஞ்சநிலை குறித்து மேலும் ஒரு பாடல்:

நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுக் குடிக்கவும் தண்ணீர் இல்லாமல் மக்கள் வருந்திய நிலையில் செல்வர்கள் கூட உண்ணுநீர்க்கும் குடையும் நீர்க்கும் என் செய்வோம் என்று ஆலோசிக்கத் தொடங்கினர்' என்னும் பாடல் கருத்து வறுமை பற்றிய அவலத்தைக் குறிக்கிறது. பாடலைக் கேட்போம்.

உண்ணுநீர் வறந்தனர்; உடம்பு மாசற
மண்ணுநீர் எவ்வயின் பெறுவர்? மாநிலத்
தண்ணுநீர் மையிற்றிரு வமைந்த யாவரும்
எண்ணுந்நீர் மையர்நனி யிரங்கி னார்அரோ (964)

இளிவரல்:
அடுத்து இளிவரல் சுவை பற்றிக் குறிப்பிடுவோம்:

மூப்பும் பிணியும் வருத்தமும் மென்மையுமென நான்கு பொருள் பற்றி வரும் அடிப்படையில் இளிவரல் சுவை பிறக்கும். அவுணனும் இந்திரனும் பொருதல் குறித்து வரும் பாடல் கருத்து வருமாறு:

சங்கரசீலன் என்ற அசுரனுக்கும் இந்திரனுக்கும் போர் நிகழ்ந்தவழி, இந்திரன் அசுரனை மலைமீது இடி விழுந்தாற்போல அவன் தலை மிசை வச்சிரப் படையால் தாக்க அவன் நிலைகுலைந்து அயர்ந்து தரையில் சிறிது நேரம் இறந்தவனைப்போலக் கிடந்தான் என்ற விடத்தும், பின் சங்கரசீலன் எழுந்து விரைந்து அயிராவதத்தின் மேல் குதித்துத் தன் கைகளை உயர்த்தி இந்திரன் மார்பில் குத்த, இந்திரன் கீழே விழுந்து மூர்ச்சித்தான் என்ற விடத்தும் மென்மையின் அடிப்படையில் இளிவரல் தோன்றியது. இது பற்றிய பாடல்கள்:

மலைமிசை இடிவீழ்ந் தென்ன
வன்சத கோடி வந்து
தலைமிசைத் தாக்க லோடும்
சங்கார சீலன் என்பான்
நிலைகுலைந்து அயர்ந்து இரண்டு
நாழிகை நேரம் மண்மேல்
புலைஉடல் கிடத்திச் சோர்ந்து
பொன்றினான் போல்கி டந்தான் (660)

எழுந்து, நின் வீர மெல்லாம்
இன்றுஅறி குவல்என்று ஓதி
உழுந்து உருள் முன்னம் நாற்கோட்டு
உம்பலின் மேல்குப் புற்றுச்
செழுந்துணைக் கரங்கள் ஓச்சித்
தேவர்கோன் நித்திற் குத்த
விழுந்துமூர்ச் சித்தான் அஞ்சி
வெள்ளிய களிற்றி னின்றும் (662)

என்று இளிவரல் சுவை பற்றிக் குறிப்பிடுகின்றன.

இறைவர் புலையுருவங் கொண்டு வந்தது இளிவரலுக்கு எடுத்துக் காட்டாகும், மற்றொரு பாடலாம். இதனை மேலே காண்போம்:

'சோமாசிமாறனார் வேள்வி செய்த கூடத்தில் சிவபெருமான் கருகிய இருள் போன்ற மேனியோடு, இடையில் அழுக்கு உடையணிந்து, புலால் நாற்றம் வீசும் தோல் ஒன்றைத் தோளில் இட்டுப் புலால் சுமையோடு கள் நாற்றம் வீசப் புலையராய் வந்தார் என்ற வருணனையில் கண்டோர் யாவருக்கும் அருவருப்பைத் தரும் வகையில் வந்த இறைவன் உருவமும் இளிவரலுக்கு எடுத்துக் காட்டு. பாடலைப் பாருங்கள்:

உருளது கொடுசென்றாலும் உணருவர் அன்பர் என்று
கருகிருள் மேனி தாங்கி அழுக்குடை கடியிற் சூழ்வுற்று
ஒருமுடைத் தோல்தோள் தாங்கி ஊன்சுமை யொடும் வெறிக்கள்
மருவிய நாற்றத் தோடும் புலையரராய் வந்தா ரன்றே (802)

வியப்பு:

அடுத்து வியப்பாகிய மருட்கைச் சுவை பற்றிக் கூறுவோம்: மருட்கைச் சுவையானது புதுமை பெருமை சிறுமை ஆக்கம் என்பனவற்றின் நிலைக்களனாகத் தோன்றும்.

இச்செய்தி பற்றிய பாடல்கள் சில காண்போம்:

புல் வெளிகளில் மேய்ந்த பசுக்கூட்டங்கள் தாமாகவே சுரந்த பால் குளத்து நீரில் கலக்க அன்னப் பறவைகள் குளத்து நீரிலிருந்து பாலைப்பிரித்து உண்டு உளம் மகிழும். ஆய்மகள் பாலைக் கொடுத்து விட்டு மீள்கையில் கொண்டு வரும் பாத்திரம் வாழைக்குலை மேல் பட்ட அளவில் வாழைப் பழங்கள் அந்தப் பாத்திரம் நிறைய உதிரும். பாடல் இதோ:

கான ஆன்இனம் பொழிந்தபால் வாவிநீர் கலப்ப,
மான ஓதிமம் நீர்பிரித்து உண்டுஉள மகிழும்
ஆன செய்க்குலை அரம்பைஅங் கனிவனத் தான்பால்
தான மாம்கலந்து ஆய்உவப் புறஉதிர் தருமால் (143)

அம்பர்ப்புராணம் திருநாட்டுப் படலத்தில் முல்லைவளம் கூறுமிடத்து கூறப்படும் செய்தி: பசுக்கள் தரும் பயம்(பால்) அல்லது அவ்வூரில் வேறுபயமில்லை. சிறந்த பல நறுமணம் கமழும் அலர் (பூக்கள்) அல்லது மக்கள் பேசும் அலர்(பழிமொழி) அவ்வூரில் இல்லை. பூக்கள் மலரும் களவு(களாமரம்) அல்லது மக்கள் (கள்ளுதல்) செய்யும் களவு அவ்வூரில் இல்லை. தரையில் தோன்றும் கோபம் (இந்திர கோபப் பூச்சி) அல்லது மக்களிடையே கோபம் என்ற தீப்பண்பு இல்லை. பாடல் வருமாறு.

ஆன்த ரும்பயம் அல்லது பயம்பிறி தடையாது;
ஏன்ற பல்விரை அயலர்அலால் அலர்பிறி தில்லை
மான்ற பூங்களவு அல்லது களவு ஒன்றும் மருவா;
தோன்று கோபமல் லால்பிறர் கோபம்தோ யாதே (84)

இதுவும் மருட்கைச் சுவை பற்றிய பாடலாகும்.

தேவர்கள் இத்திருத்தலத்திற்கு வந்து அம்மையப்பர் திருவடிகளை வணங்கி இவ்வூர் வளத்தைக் கண்டு வியந்து இவ்வூர் நிலவுலகில் இருப்பினும் அம்பரே (தேவலோகமே) என்று கருதியதால் இத்தலத்திற்கு அம்பர் என்பது பெயராயிற்று எனத் திருநகரப்படலப் பாடல் ஒன்று 'அம்பர் தலத்தின் பெயர்க்காரணம்' கூறுகிறது. இது பற்றிய பாடல்:

உம்பர் ஆதியர் ஒருங்குவந்து உமையவள் ஒருபால்
நம்பர் தாள்பணிந்து அந்நகர் வளமெலாம் நயந்துஈது
இம்பர் ஆயினும் அம்பரே என்றிசைத் திடலால்
அம்பர் என்றுஒரு பெயர்புனைந் ததுதிரு வம்பர் (150)

முதிய பார்ப்பனன் உடன் வந்த காளி தேவியின் பேரழகில் ஈடுபட்ட அம்பரன் என்ற அசுரன் காமன் அம்புகள் தைத்ததனால் கருத்து அழிந்து தன் வசமிழந்து மெய் சோர்ந்து, 'இவளை நான் கூடாவிட்டால் இப்பொழுதே எனக்கு மரணம் நேர்ந்து விடும் என்று அஞ்சிக் கையற்றான் அவன் தம்பி அம்பனும் அவ்வாறே காம பரவசனானான். இது பற்றிய பாடல்களில் புதுமை பற்றியும், ஆக்கம் பற்றியும் மருட்கைச் சுவை தோன்றியது. பாடல் பின்வருமாறு

காமவேள் சரம்து ளைக்கக் கருத்தழிந்து அவச மாகி
நாமஅம் பரன்மெய் சோர்ந்து நாம்இவட் புணரே மாகில்
ஏமம்இல் மரணம் இன்றே எய்திடும் எனஅச் சுற்றான்
ஆமவன் தம்பியாய அம்பனும் அனைய னானான்'. (603)

அச்சம்:

இனி, அச்சம் பற்றிய சுவைப் பாடலைக் காணப் புகுவோம்:

'அணங்கு விலங்கு கள்வர் இறை என்ற நான்கின் நிலைக் களத்தில் அச்சம் பிறக்கும் என்பர். கீழ் வரும் பாடங்களில் இச்சுவையை நுகரலாம்: 'நந்தன் என்ற மன்னன் வேட்டையாடிய போது அறியாமையால் புலித்தோல் போர்த்துத் தவத்தில் இருந்த முனிவன் ஒருவனை அம்பெய்து கொல்ல அந்த பிரமகத்தி, கொலை செய்த கள்வனே! உன்னைக் கொன்ற பின் அல்லால் நான் நீங்க மாட்டேன்' என்று தன் திண்மார்பத்தில் வன்கைகளால் தட்டிக் கொள்ளும்; தன் முக ரோமங்களை முறுக்கிக் கொண்டு மாறுபட்டு வெகுண்டு வரும். அவனைப் பலவாறு துன்புறுத்திக் குதித்துக் கூத்தாடும், நெருப்பைப் போன்ற தன் வாயைத் திறக்கும். அவன் நிற்கும் போதும் துன்புறும் போதும் அமர்ந்திருக்கும் போதும் வெகுண்டு அவனைப் புடைக்கும். அவன் படுத்திருக்கும் போது மிதிக்கும். மலை ஒத்த தோள்களைத் தட்டிக் கொண்டு போருக்கு வா வென்றழைக்கும். கரும்பைக் கடிப்பது போன்று உன்னைச் சுவையாகக் கடித்து உண்பேன்' என்னும். இவ்வாறு அமைந்த பாடலில் அணங்கு பொருளாக அச்சம் பிறந்தவாறு. பாடல் இதோ:

கொலைபுரி சுயவா நின்னைக்
கொன்றன்றி யொழியே னென்று
மலையினும் திண்மை வாய்ந்த
மார்பம்அங் கையால் தட்டும்
உலைவுஅற முகரோ மங்கண்
முறுக்கிடும் முடன்று சீறும்
அலைவு செய்து அதிர்க்கும் துள்ளும்
அழலென வாய்அங் காக்கும் (896)

வீரம்:

இனி, அடுத்துக் காண்பது பெருமிதமாகிய வீரச்சுவை. கல்வி தறுகண் இசைமை கொடை என்பன நிலைக்களனாகப் பிறக்கும் வீரச்சுவை. இச்சுவை பற்றிய பாடல்கள் சில:

பிறவியைப் பற்றி எண்ணுவோர் 'யானை முதல் எறும்பீறாக' என்று எங்களை முதலில் வைத்து எண்ணுவர். ஆதலின் ஏனைய உயிரினங்கள் எல்லாம் எங்களுக்குக் கீழ்ப்பட்டனவே என்று கூறுவன போன்று பிளிறுகின்றன யானைகள் என்று புறநகரில் உள்ள யானைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆசிரியர். பாடல் வருமாறு:

பிறவி எண்ணிடல் குறித்தவர் எமைமுதல் பேசி
உறவி யோனியை ஈற்றில்வைத்து ஓதுவர் அதனால்
அறிமின் நள்ளுள எமக்குப்பின் ஆகுமென்று அறைந்தாங்கு
றிமின் ஒடைமால் யானைகள் சிலைப்பன எங்கும் (167)

அவ்வூரில் உள்ள கழகங்கள் சிறிதும் பகை இலராய்க் கூர்த்த புலமையராயுள்ள நால்வகைக் கவிஞர்களைக் கொண்டு பல துறை நூல்களை இயற்றுதல் அவற்றை வேண்டியர்களுக்கு எடுத்துரைத்தல், வழுக்களைந்து இயற்றமிழை முழுதுரைத்தல், புதுப்புது இலக்கியங்களைப் பயிற்றல் என்ற அன்னார் செயல்களைக் கொண்டு விளங்கின. இதனைக் குறிக்கும் பாடல்:

இகல்சிறி தேனும் இல்லதுஎஃ குடையார்
ஈரிரு புலமையர் குழுமி
அகல்பல துறைநூல் இயற்றுதல் விளங்க
அகலிடத் தவர்க்கு எடுத் துரைத்தல்
நகல்வனப்பு ஒருங்கு தழீஇவழுக் களைந்து
நாடுறும் இயல்முழு துணர்த்தல்
புகல்இலக் கியங்கள் பறிற்றல்மற் றிவற்றால்
பொலிதரு கழகமும் பலவால் (243)

அம்பர் கோயில் ஒரு மாடக் கோயிலாதலின் அதனை வரைமேல் ஒளிர் காட்சி உடையது என்னும் கருத்தமைந்த பாடற் பொருளைக் காண்போம். 'செங்கல்லானமைத்த கோயில், மலைமேல் விளங்குதலானும், தேவர்கள் சேவித்துச் சூழ்தலானும், பெரும்புகழ் மேவிய பண்பினானும், ஊழிக்காலம் வரை அழியாது விளங்கலானும் சிவபெருமான் அம்மை அப்பராய் எக்காலத்தும் விளங்கி அமர்தலானும் அது கயிலாய மலைக்கோயில் போல இருந்தது. இது பற்றிய பாடல்:

ஓங்கு மால்வரை மேல்ஒளிர் காட்சியால்
தேங்கு வானவர் சேவித்துச் சூழ்தலால்
வீங்கு மாபுகழ் மேவிய பண்பினால்
வாங்க நாளழி யாமை வயங்கலால் (247)

வேட்டைக்குச் சென்ற மன்னனுடைய படைவீரர்கள், தளர்நடைக் குருளைகள் சூல் உடைய விலங்குகள் மழவுகளுக்கு முலைப்பால் அளித்திடும் மாக்கள். வெப்பத்தால் நீர் உண்டு கொண்டிருக்கும் விலங்குகள். இவற்றை விடுத்துத் தம்மை எதிர்த்த கொடிய விலங்குகளையே வேட்டையாடினர். பாடல் இதோ:

நடைதளர் குழவைக் கொல்லான் தூலுடைப் பிணவை நாடான்
அடைமழ உணமு லைப்பால் அருந்திடு மாவை மாயான்
உடைவெயில் வெப்பத்தால் நீ ருண்டிடு மவையுஞ் சாயான்
மிடைவலி யுடன்என திர்க்கும் வெய்யமாத் தொலைக்கும் வேந்தன்.
(889)

இப்பாடல்களில் கல்வி இசைமை கொடை பற்றிய பெருமிதங்களைக் காணலாம்.

வெகுளி:

இனி, வெகுளிச்சுவை என்பது, 'உறுப்பறை குடிகோள் அலைகொலை இவற்றின் நிலைக்களனாக வெகுளி பிறக்கும். கொடிய விலங்குகள் காட்டினுள் புகுந்து மக்களுக்கும் மக்களை நம்பி வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவித்தமையால் அரசனுக்குக் கொலைப் பொருட்டாகிய வெகுளி தோன்ற அரசன் வீரர்களுடன் சென்று வேட்டையாடினான். அவ்வீரர்கள் வெகுளியோடு அம்பு எய்தும் வேல்களை எறிந்தும் விலங்குளின் தலைகளைக் கொய்தும், வாளால் வீழ்த்தியும், பெரிதாக ஒலி செய்தும், முரசுகளை இயக்கியும் சில விலங்குகளைத் தரையில் வீழ்த்தியும் சிலவற்றை வாளால் வெட்டியும் குத்தியும், சிலவற்றின் மேல் அம்புகளை எய்து, அவை முள்ளம் பன்றி போல் காட்சி வழங்கச் செய்தும் தம் வெகுளியைப் போக்கிக் கொண்டனர். பாடல் இதோ:

சிலமாக்களை யடிபற்றுபு சிலர்மண்மிசை அறைந்தார்;
சிலமாக்களை வாள்வீசுபு சிலர்வெட்டுபு சிதைத்தார்;
சிலமாக்களை அடுவாளியின் சிலர்எய்யெனச் செய்தார்
சிலமாக்களை உடைவாள்கொடு சிலர்குத்துபு வீழ்ந்தார். (879)

உவகை:

அடுத்து உவகைச் சுவையைக் காணலாம்: செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்ற நான்கின் அடிப்படையில் உவகைச் சுவை தோன்றும். 'காளியானவள் மறையவர் கன்னிகையாகி இள ஞாயிற்றின் உதயம் போல மெய் ஒளி எங்கும் களங்கம் இல்லாத சந்திரனைப் போல முகமண்டிலம் வனப்பு விளங்க சிலம்பும் தண்டையும் மேகலையும் ஒலிப்ப மெல்ல நடந்து வந்தாள். இருவர் போரிடுவதன் முன்தத்தம் வாளைத் தீட்டும் சாணைக்கல் போல அவளுடைய கன்னங்கள் ஒளிவீசின. தன் பேரழகால் காண்போருடைய மனமும் கண்ணும் வேறு எங்கும் செல்லாதவாறு மயங்கிற்று. அவளுடைய மோவாய் அழகுடன் திரண்டு மன்மதன் தன் போரிடும் வில்லோடு சேம வில்லையும் குளிர்ந்த குடைமேல் சாய்த்து வைத்தாற்போல அவள் புருவங்கள் விளங்கின. பேராற்றலுடையவர்களுடைய உயிர்களைக் கவர்வதற்கு இரண்டு காலர்கள் இணைந்து வந்தாற் போல அவள் கண்கள் பொலிந்தன. இனி, பாடல்களைக் காண்க:

இருவர்தான் நனிபோர் ஆற்றற்கு எடுக்கும் வாள் திட்டற் காய
பொருவருஞ் சாணை என்னப் பொலிதரு கபோலச் சீரும்
மருவரும் வனப்பு வாயந்து காண்பவர் மனமும் கண்ணும்
ஒருவறக் கவரா நிற்கு மொள்ளிய சுபுகச் சீரும் (586)

பொருசிலை யோடு சேமச் சிலையையும் பொற்ப மாரன்
மருவுதண் குடைமேற் சார்த்தி வைத்தன புருவச் சீரும்
ஒருவரும் வலிசா றங்கள் உயிர்கொளற்கு இணைந்து வந்த
வெருவரு மியம ரென்ன விளங்கிரு நயனச் சீரும். (584)

துருவாச முனிவரைக் காணவந்த மதலோலை கார்முகிலையும் வெளுப்பு என்று சொல்லத்தக்க கருங்குழலாள்; கச்சினையும் கடந்து விம்மும் கனதனத்தாள். புடை பரந்த கடிதடத்தாள்; பெரிய முனிவர்களின் தவத்தைக் குலைக்கும் பிறழ் நெடுங் கண்ணாள்; முல்லை முகை போன்ற நகை முறுவலாள்' என்ற பாடலில் செல்வப் பொருட்டாகிய உவகை தோன்றியது. இதனைக் குறிக்கும் பாடல்:

கருமுகிலும் விளர்த்திடச்செய் கருங்குழலாள் வார்கிழித்துப்
பொருமுபெருங் கனதனத்தாள் புடைபரந்த கடிதடத்தாள்
பெருமுனிவர் தவங்குலைக்கும் பிறழ்நெடுங்கண் ணாள்தளவின்
வருமுகைநேர் முரலாள் மதலோலை எனும்பெயராள் (505)

குட்டம், தொழுநோய், குன்மம், காமாலை முதலிய நோய்கள் அம்பர் தலத்தில் சூல தீர்த்தத்துள் மூழ்கி அங்குள்ள புவனேசம் என்னும் கோயிலிலுள்ள வடுகபைரவரை வணங்கினால் நீங்கிவிடும் என்பது புலன் அடிப்படையாகத் தோன்றும் உவகையாகும்.

குட்டநோய் தொழுநோய் காசம் குன்மநோய் கொடுங்கா மாலை
துட்டநோய் ஆனமற்றும் லதீர்த் தத்துள் முழ்கி
உள்தவா அன்பு பொங்க உயர்புவ னேசம் மேவி
இட்டமார் வடுகப்புத்தேள் பதம்தொழ இரியுமன்றே (696)

நடுவுநிலை:

இனி, இறுதியாக நடுவுநிலை என்னும் காந்தச் சுவையையும் காண்போம். மாறனார் என்ற அடியவர் காமம் வெகுளி மயக்கம் என்ற மூவகைக் குற்றமும் நீங்கினவர். பலதரப்பட்ட வேதங்களையும் உணர்ந்தவர். சோழ பாண்டிய மன்னர்களால் வழிபடப்படும் சிவபெருமான் திருவடிகளை அன்றித் தமக்கு பிரமலோகமோ வைகுந்தமோ கிட்டினும் அது விரும்பாதவர் என்ற செய்தியில் முக்குற்றமும் நீங்கிய சாந்த நிலை புலப்படுத்தப்படுகிறது.

மாறனா ரெனுநாம மருவினார் மூவகைத்தோம்
ஆறனார் அறிவெனப்பன் மறையுணர்ந்தார் வளவனார்
மாறனார் சேரனார் வழுத்துவார் பிரமபத
மால் தன்ஆர் தருபதமும் மதித்தறியா மதியினார் (780)

இவ்வாறு இப்புராணத்தில் ஒன்பான் சுவையும் காணலாம். நாம் ஓராற்றல் கண்டு மகிழ்வுற்றோம். '

2.சிறப்புப்பாயிரங்கள்

க. அமுதா
காரைக்குடி

பாயிரம் பெறும் மரபு

இன்றைக்கு நூல் வெளியிடுவோர் தக்காரை நாடி முன்னுரை/ அணிந்துரை, மதிப்புரை பெற்று நூலை வெளிடுகின்றனர். இந்த மதிப்புரை நூலைப் பற்றியும் நூலாசிரியரைப் பற்றியும் பல்வேறு செய்திகளைத் தருவதுடன் நூலைப் பாராட்டியும் அமைகிறது. இவ்வாறு நூலுக்குப் பாயிரம் அமைவது நூலுக்கும் ஆசிரியனுக்கும் ஓர் அறிமுக வுரையாய் அமைகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் அந்தக் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் சிறப்புப் பாயிரம் பெற்று நூல்களை வெளியிட விரும்பினர். அவர்கள் நூலை அச்சிடுமுன்பே பாயிரம் பெற்று நூல் வெளியீட்டுக்குப் பொருள் உதவி பெற்றனர்.

பாயிரச் சிறப்பு

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த பெரும் புலவர். இவரிடம் பயின்றவர்கள் தமிழகம் எங்கும் தமிழக கல்வியைப் பரப்பினர். இவருக்குச் சைவ ஆதீனங்கள் அளித்த பாராட்டு இவரின் மேன்மையைக் கூட்டியது. இவருடைய முறையான படிப்பும், ஆழ்ந்த அறிவும் நுண்மாண் நுழைபுலமும் தமிழகம் எங்கும் பரவியிருந்தது. இதனால் இவரிடம் தங்களுடைய நூலுக்குப் பாயிரம் பெற வேண்டும் என்று புலவர்கள் விரும்பினர். உரியவர்கள் தான் பாடிய நூலையோ தான் பதிப்பித்த நூலையோ கொடுக்காது வெறும் அறிமுகத்தால் மட்டும் இவரிடம் பல தமிழ்ப்புலவர்களும் பாயிரம் பெற்றனர். இளகிய மனமும், மனித நேயமும் மிக்க மீனாட்சி சுந்தரனார் தமிழ்ப் புலவர்களின் நலன் கருதியும் நூல் வெளியீடு கருதியும் அவர்களுக்குப் பாயிரம் பாடியளித்தார். இவருடைய பாயிரம் இருந்தால் தமிழ்ப் புலவர்கள் நூலை அச்சிடக் கூடுதலாகத் தொகை கொடுத்து நூல்களுக்கு முன்பதிவு செய்து கொண்டனர். இந்த வரலாறுகளையும், பாடல்களையும் உ.வே.சாமிநாதைய்யர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரத்தில் விரிவாக எழுதியுள்ளார்.

பாயிரம்-விவரம்

உ.வே. சாமிநாத அய்யர் குறிப்புகளால் இவர் பதினான்கு நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடிக் கொடுத்துள்ளார் என்று அறிய முடிகிறது. தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரைப்பதிப்பிற்கு மட்டும் (கி.பி.1869) சிறப்புப்பாயிரம் தந்திருக்கிறார். இஃதொன்றே இவர் சிறப்புப்பாயிரம் வழங்கிய இலக்கணப்பதிப்பு. பிற நூல்கள் அனைத்தும் சமயசார்புடையன. இவற்றுள் சேற்றூர் சுந்தரதாச பாண்டியர்க்குப் பாடிக் கொடுத்த சிறப்புப்பாயிரம் கிடைக்கவில்லை. உ.வே.சாமிநாதைய்யர்

வெளியிட்ட பிரபந்தத் திரட்டில் சிறப்புப் பாயிரப் பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இதில் தொண்ணூற்றாறு பாடல்கள் உள்ளன. இவற்றை முப்பத்து மூன்று நூல்களுக்காக ஆசிரியர் வழங்கியிருக்கிறார்.

செய்யுளே-பாயிரம்

இவர் வழங்கிய சிறப்புப் பாயிரங்கள் சில செய்யுள் நூல்களுக்கும் சில பதிப்பு நூல்களுக்கும் தரப்பட்டன. இவையன்றி வேறு சில சிறப்புப் பாயிரங்கள் நூல்களிலேயே சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றை உ.வே.சாமிநாதைய்யர் திரட்டிப் பதிப்பிக்கவில்லை.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை வாழ்ந்த காலம் தமிழ் உரைநடை வளர்ந்த காலம். எனினும் அவர் உரைநடையில் எந்தச் சிறப்புப் பாயிரத்தையும் எழுதிக் கொடுக்கவில்லை. அவர் வளமான கவிஞர். புலமையாளர் ஆதலின் பாயிரங்கள் அனைத்தும் செய்யுள்களாகவே அமைந்தன. அந்தப் பாடல்களில் பிற்காலத்தார்க்கு அறிய வேண்டிய இலக்கிய வரலாற்றுக்குதவும் குறிப்புகள் பொதிந்துள்ளன. ஆதலால் அவருடைய சிறப்புப் பாயிரங்களில் பாயிரத்திற்குரிய நீர்மையன என்று, இலக்கணிகளால் சொல்லப்பட்ட அனைத்து இயல்புகளும் பொருந்திக் கிடக்கின்றன.

நட்பைக் காட்டும் பாயிரம்

இப் பெருங்கவிஞர் தன்னுடைய நண்பர் வேதநாயகம் பிள்ளையின் நீதிநூலுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரமே மிகவும் விரிவானது. இது நேரிசை ஆசிரியப்பாவாகவும், விருத்தங்களாகவும் திகழ்கின்றது.

வேதநாயகம்பிள்ளை மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் இனிய நண்பர், நீதிபதியாக இருந்த வேதநாயகர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் பெரிதும் மதித்துப் பாராட்டிப் பேணியவர். இவருடைய உறவால் இவருக்குத் தமிழகத்தில் பெரும் மதிப்பு இருந்தது. நீதிநூலுக்குரிய சிறப்புப்பாயிரம் நேரிசையாசிரியப்பா நூற்றுநாற்பத்து ஐந்து அடிகளை உடையது. இதிலுள்ள எண்பது அடிகள் நீதிநூலின் அதிகார முறை வைப்பைக் காரணகாரியத்தோடு கோவையாகத் தெளிவுப்படுத்துகிறது. ஒரு நூலின் திறனாய்வாக இந்தப் பாயிரம் அமைகிறது. மீனாட்சிசுந்தரம் பிள்ளை நீதி நூலைத் 'திருமாறந்த தெள்ளமுது' (பாட்டு எண்-5090) என்று குறிப்பிடுகிறார். அவர், கண்ணன் கூறிய பகவத்கீதை என்று நீதிநூலைப் பாராட்டுகிறார். இச்சிறப்புப்பாயிரம், நூல் முழுமையும் ஓதிக் கருத்துநயம், சொல் நயம் போன்றவற்றையும் உணர்ந்து பாடியது.

பழக்கமும் பாயிரமும்

நூலைப் பற்றித் திறனாய்ந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளை நூலாசிரியன் பற்றிய குறிப்புகளையும் குறிப்பிடுகிறார். வேதநாயகம்பிள்ளை பிறந்த ஊரான குளத்தூரைப் பற்றிக் குறிக்கவந்தவர் அவ்வூர் உள்ள கோனாடு பற்றியும் கோனாட்டிலுள்ள வேளாளர் பற்றியும் குளத்தூர் பற்றியும் விளக்குகிறார். காப்பியத்தில் நாடு, நகர் ஆகியவற்றைப் புனையுமாறு

இப்புனைவு விளங்குகிறது. இவை வேத நாயகரின் வரலாற்றினை ஆராய்வதற்குப் பெரிதும் துணையாகும். படைப்பாளியொடு பாயிரம் பாடுவோன் நெருங்கிய தொடர்புடையவனாக இருந்தமையால் அவனைப் பற்றிய செய்திகளையெல்லாம் அறிந்து பாடமுடிகிறது. இதனை உண்மைப் படுத்துவது போல் மீனாட்சிசுந்தரம் பிள்ளை வேதநாயகரின் பண்புகளையும் இப்பாடலில் சுட்டிக் காட்டுகிறார்.

சிற்றிலக்கிய மரபுதழுவிய பாயிரம்

வேதநாயகரைப் பலபாடல்களால் பாடிய இப்பெரியார் இச்சிறப்புப் பாயிரத்திலும் தசாங்க உறுப்புகளை அமைத்து வேதநாயகரைப் போற்றுகிறார். அவரைப் பலவாறு பாராட்ட வேண்டும், பாடவேண்டும் என்ற உணர்வே ஓர் சிற்றிலக்கிய வகையைச் (தசாங்கம்) சிறப்புப் பாயிரத்தில் இடை மடுத்துப் பாடத் தூண்டியிருக்கிறது.

பாயிரத்தில் பொதுவாக நூலைப் பற்றியும் நூலாசிரியரைப் பற்றியும் கூறும் மரபுக்கு மாறாக ஓர் சிற்றிலக்கிய வடிவையும் ஆசிரியர் இணைத்துப் பாட்டுத்தலைவனைக் காட்டுகிறார். இது சிறப்புப் பாயிர அமைப்பில் புதுமையாகும், சிறப்புப்பாயிரத்தை வேறு எவரும் இவ்வாறு பாடவில்லை.

திருக்குறட்பண்பாளர்

இதனை அடுத்துப் பதினோரு விருத்தங்கள் சிறப்புப் பாயிரமாகத் தொடர்ந்து அமைகின்றன. இதன் கண்ணுள்ள பத்துப் பாடல்கள் வேத நாயகம் பிள்ளையின் புலமையையும், பிள்ளையின் பெருமையையும் கூறுகின்றன. நீதிநூலைப் படித்த மீனாட்சிசுந்தரர் திருக்குறள் நினைவோடு பாயிரம் பாடுகிறார். வேதநாயகம் பிள்ளை தேடிய செல்வம் பலருக்கு உதவுவதை நன்கு அறிந்தவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், எனவே பாயிரத்தில் 'ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்ற திருக்குறளை எடுத்துக் காட்டி வேதநாயகர் சொல்லும் செயலும் ஒன்றே என்று வலியுறுத்துகிறார். நீதிநூல் பாடியவர்க்கு நீதி நூற் பாடல்களை உவமையாக்கியே வேதநாயகருடைய பண்புகளை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இந்த இரண்டு திருக்குறளாலும் பன்னிப் பன்னிப் பேச வேண்டிய பல உண்மைகளைக் குறள் பாக்களால் இரத்தினச் சுருக்கமாக ஆசிரியர் உய்த்துணர வைக்கிறார். இந்தப் பதினொரு விருத்தங்களும் கருத்து நயமும், சொல்நயமும் புலப்பாட்டு நயமும் உடையன. கி.பி. 1859-ல் இந்த நூல் அரங்கேறியது என்று நூல் அரங்கேற்றுக்காலத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார். நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே பதிவு செய்வது போல இந்தப் பாயிரம் அமைந்திருக்கிறது.

நட்புரிமைப்பாயிரம்

இன்று அணிந்துரை எழுதுவோர் ஆழ்ந்த நட்புடையவராயின் நூலைப் பாராட்டு முறையாகப் பாராட்டி எழுதுவர். நூலின் பொருளை ஆராய்வதைக் காட்டிலும் நூலாசிரியரைப் பற்றிய புகழ்ச்சி மாலையாகவே பாயிரம் அமையும். ஆனால், மீனாட்சிசுந்தரம்பிள்ளை நூலையும் பயின்று

நூலாசிரியர் பண்புகளையும் உணர்ந்து பாயிரம் பாடியிருக்கிறார். அதனால் தான் இவர் பாடிய சிறப்புப்பாயிரம் ஏனையோருக்குக் கொடுத்த சிறப்புப்பாயிரங்களை விடச் சீர்மையும், மேன்மையும் உடையதாக விளங்குகிறது.

மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் சிறப்புப் பாயிரத்தைப் பயின்றால், அவர் இனிய நட்போடு பழகியவர்க்குச் சிறப்புப்பாயிரத்தை அழுத்தமாகவும் பொருள் பொதிந்ததாகவும் பாடியிருப்பதை அறிய முடிகிறது. பதிப்பாளர் பாயிரம் கேட்டுப் பெற்றால் மிகச் சுருக்கமாகப் பாடியிருப்பர்; நெஞ்சு மிக்கது வாய்கூறும் என்னுமாறு இவருடைய உள்ள நிலையைப் பாயிரங்கள் வெளிப்படுத்தும். தொடர்புடையவர்கள் - பழகியவர்கள் - பெற்ற பாயிரப் பாடல்கள் காவியம் போலத்திகழ்கின்றன.

அக்காலத்தில் நூல் அச்சாவதற்கு முன்பே சிறப்புப் பாயிரங்களைப் பெற்றுவிடுவர். இதனால் நூல் அச்சிடப்படவில்லை என்றால் பாயிரப்பாடல்களும் அழிந்துபோய்விடும். இன்று போல நூலை அச்சிட்டு முடித்துப் பாயிரம் பெறுவது வழக்கமில்லை. நூலை அச்சிடுவதற்குத் தேவையான பணத்தைத் திரட்ட சிறப்புப் பாயிரங்கள் ஒருகருவியாக விளங்கின. இதனால் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை ஏமாற்றிப் பாயிரம் பெற்றவர்களும் உண்டு.

ஏமாற்றுக்காரர்களும் சிறப்புப் பாயிரமும்

மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாடங்கேட்ட மாணாக்கர்களில் ஒருவர் மதுரை இராமசாமி பிள்ளை; இவர் படிக்கும் காலத்திலேயே சிதம்பரத்திலிருந்த ஆறுமுக நாவலரோடு தொடர்பு கொண்டிருந்தார். இராமசாமி பிள்ளை; இராமநாதபுரத்தைச்சார்ந்தவர். இவர் பொன்னுசாமித் தேவருக்கு உசாத் துணையாக இருந்தவர். இவர் திருக்கோவையாருரை, திருக்குறட் பரிமேலழகருரை ஆகியவற்றைப் பொன்னுசாமி தேவர் பொருளுதவி கொண்டு ஆறுமுக நாவலரால் பதிப்பிக்க முயன்றார்.

> அவ்வாறே முயலுகையில், தன்மையும்
> பதிப்பிப் போரையும் புகழ்ந்துள்ள
> சிறப்புப் பாயிரங்களைப் பெற்றால்தான்,
> பாட்டுக்களிற் பிரியமுடைய தேவர்
> (பொன்னுசாமி தேவர்) மகிழ்ந்து உதவி
> செய்தலை மேற்கொள்வாரென்றறிந்
> தார் (ப.277)

இதனால் சென்னையில் இருந்தவர்களிடம் சிறப்புப் பாயிரம் வாங்குமாறு ஆறுமுக நாவலர்க்கு எழுதினார். ஆறுமுக நாவலர், சென்னையில் இருந்தவர்களோடு அளவளாவி அக்காலத்துப் பழகவில்லை. அதனால் அவர்களிடம் சிறப்புப்பாயிரம் பெறுதற்கு நாவலரால் இயலவில்லை.

இராமசாமிபிள்ளைக்கு ஆறுமுக நாவலர் தன்னிலையை எழுதித் திருவாவடுதுறை ஆதீனத்திலுள்ள மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடமும் அவரைச் சார்ந்தோரிடமும் சிறப்புப்பாயிரம் பெறுமாறு இராமசாமி பிள்ளைக்கு எழுதினார். இராமசாமிபிள்ளை, திருவாவடுதுறை வந்து ஆதீன முதல்வரை வேண்டித் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

பொன்னுசாமித் தேவர், திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வேண்டியவர், ஆதலின் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, சிறப்புப்பாயிரம் பாடிக் கொடுத்தார். அவர் கட்டளைக்கு இணங்க வித்துவான் சி. தியாகராச செட்டியாரும் பிறரும் சிறப்புப் பாயிரம் பாடிக் கொடுத்தனர். மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாடிய சிறப்புப் பாயிரப்பாடல்களைக் கண்டு பொன்னுசாமி தேவர் பெரிதும் ஈடுபட்டார்.

இதனால், இராமசாமி பிள்ளையின் வேண்டுகோளை ஏற்று ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்களுக்கெல்லாம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சிறப்புப் பாயிரம் பாடி அனுப்பினார். அப்பாடல்கள் ஒன்றைவிட ஒன்று சிறந்தததாகவே இருந்தது (ப228).

மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் சிறப்புப்பாயிரங்கள், அதனைப் பெற்றுவரும் நூல்களைத் திருவாவடுதுறை ஆதீன வட்டாரத்தில் பெரிதும் போற்றச் செய்தன. மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்குப் படித்தோரிடையேயும் அரசுப் பணியாற்றுவோரிடையேயும் இருந்த மதிப்பால், அந்த வட்டாரத்திலும் அந்த நூலுக்குத் தனிமதிப்பு இருந்தது. இதனை அறிந்த இராமநாதபுரம் இராமசாமி பிள்ளை, மீனாட்சிசுந்தரம்பிள்ளையையும் பிறரையும் ஊக்கப்படுத்த பொய்யும் புனை சுருட்டுமாகப் பல கடிதங்கள் எழுதினார். இராமசாமிபிள்ளை, புனைந்து எழுதியவை எவை என்று உ.வே. சாமிநாதையர் குறித்துள்ளார் (ப.288).

இராமசாமிபிள்ளை, திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வந்தபோது வித்துவான் சி. தியாகராச செட்டியார் அவரைக் கடிந்து கொண்டார். அதற்கு இராமசாமி பிள்ளையோ,

> ஆம் ஐயா, நான் இவ்வாறெல்லாம்
> எழுதாவிட்டால் நீங்கள் நன்றாகச்
> சிறப்புப் பாயிரம் பாடித்தருவீர்களா?

என்று கேட்டார். மீனாட்சிசுந்தரம்பிள்ளை இவ்வாறு பாடிக் கொடுத்த சிறப்புப் பாயிரங்கள் பல. ஆறுமுகநாவலர் சில நூல்களையே பதிப்பித்தமையின் பல சிறப்புப் பாயிரங்கள் வெளிவரவில்லை. அவை கிட்டாமல் அழிந்து போயின.

இந்த நிகழ்ச்சி, மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் சிறப்புப் பாயிரம் பெறுவது என்பது அன்றைய நாளில் தமிழ்ப் புலவர்களிடையே இருந்த பெருமதிப்பைப் புலப்படுத்துகிறது. ஆறுமுக நாவலர் பதிப்புகளுக்கே இந்த நிலை என்றால் பிற பதிப்பாளர்களின் நிலை என்னவாக இருந்திருக்க வேண்டும்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் பாடங்கேட்டவராக இருந்தும் இராமநாதபுரம் இராமசாமி பிள்ளை, சிறப்புப்பாயிரம் பெறக்கையாண்ட நெறி அல்நெறி என்பது உறுதி. ஏமாற்றிப் பிழைக்கும் இத்தகையோர் எக்காலத்தும் இருப்பர்போலும். ஆனால், மீனாட்சிசுந்தரம்பிள்ளை, இராமநாதபுரம் இராமசாமி பிள்ளையின் போக்கைக் கண்டு வாளா இருந்தமை அவர் தம் பண்பு மேம்பாட்டைக் காட்டுகிறது.

இவர் பாயிரம் பாடுவதற்குக் கைமாறாகப் பொருள் பெற்றதாக எந்த இடத்திலும் குறிப்பில்லை. நூல்கள் அச்சாகி வெளிவருகின்ற அக்காலத்தில் இப்பெரும்புலவரின் சிறப்புப்பாயிரங்கள் இத்தமிழ்உலகில் நூல்களுக்குத் தனிமதிப்பை ஏற்படுத்திக் கொடுத்தன. சிறப்புப் பாயிரப் பாடல்கள் அனைத்தும் தனித்து ஆராய்வதற்கு உரியன. அவற்றை நோக்கினால் யார் மனமும் நோகாது பாடுகின்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் ஆழ்ந்த புலமையும், உயர்ந்த பண்பும் வெளிப்படும்.

3. விளத்தொட்டிப் புராணச் சிறப்பு

தி.அரங்கநாதன்
கும்பகோணம்

தலங்களின் பழைய வரலாறுகளை எடுத்துவைக்கப் படைக்கப் பட்டவை தலபுராணங்கள். தமிழ்நாட்டில் உள்ள சிவத்தலங்களுக்கு வடமொழியில் புராணங்கள் உண்டு. பின்பு சில புலவர் பெருமக்கள் காப்பிய இலக்கணங்கள் அமையும்படி புராணங்களைத் தமிழில் மொழி பெயர்த்தனர். அங்ஙனம் எழுந்த நூல்கள் திருக்குற்றாலத்தலப்புராணம், திருக்கழுக்குன்றத் தலப்புராணம், சீகாளத்திப் புராணம், காஞ்சிப் புராணம் முதலியன என்பர். உ.வே.சா. (விள.பு.முகப..1) அதையொட்டித் தலப்புராணங்களை இயற்றியவர் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள். அவர் இயற்றிய தல புராணங்கள் 'மூர்த்தி தலம், தீர்த்தம் முதலானவற்றின் பெருமையை எடுத்துரைப்பன. அவற்றில் ஒன்று விளத்தொட்டிப் புராணம் ஆகும்.

விளத்தொட்டி என்ற ஊர் மண்ணியாற்றிற்கும் கொள்ளிடத்திற்கும் நடுவே உள்ள ஒரு சிவத்தலம். பந்தணை நல்லூர், வைத்தீச்சுரன் கோயில் முதன்மைச் சாலையில், பந்தணை நல்லூரில் இருந்து மூன்று கி.மீ. தொலைவில் முதன்மைச் சாலையிலிருந்து மூன்று கி.மீ வடக்கில் உள்ளது இவ்வூர். இது திருநாவுக்கரசரின் சேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் குறிக்கப்பட்டுள்ள ஒரு வைப்புத்தலம். அச்சிவ தலத்துப் பெருமானின் புகழ்பாடும் இலக்கியமாய் அமைந்தது விளத்தொட்டிப்புராணம்.

நூலமைப்பு

விளத்தொட்டிப்புராணம் கடவுள் வாழ்த்து, நூல் இயற்றுவதற்குக் காரணம் உட்பட 19 பகுதிகளையும் 353 பாடல்களையும் கொண்டுள்ளது. திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, நைமிகப் படலம், வைரவ பூசைப் படலம், வேணுகோபால பூசைப் படலம், பிரமன் பூசைப்பட்லம், திருமணப்படலம், திருவிழாப்படலம், விளத்தொட்டிப் படலம், இந்திர தீர்த்தப்படலம், அக்கினி தீர்த்தப்படலம், யமதீர்த்தப்படலம், நிருதி தீர்த்தப்படலம், வருண தீர்த்தப்படலம், வாயு தீர்த்தப் படலம், சோம தீர்த்தப் படலம், ஈசான தீர்த்தப்படலம் என அமைப்பு கொண்டு நூல் இலங்குகிறது.

வாழ்த்துச் சிறப்பு

புராணங்களும், காப்பியங்களும் கடவுள் வாழ்த்துடன் தொடங்கப் பெறுவது மரபு. அவ்வாழ்த்து நூலியற்றும் செயலுக்கு இறையருளைப் பெற எண்ணி அமைவது. புலவர்கள் இறைவனின் அருட்குணத்தையும், தம் பக்திப் பெருக்கையும் வெளிப்படுத்தும் பகுதி அது. பிள்ளை அவர்கள் கடவுள் வாழ்த்துப் பகுதியில் விநாயகர் தொடங்கி அம்பலவாண தேசிகர்

ஈறாகப் பத்தொன்பது இறை மற்றும் அடியார்க்குரிய வாழ்த்துப் பாக்களைப் பாடியுள்ளார். அவற்றில் அவர் செலுத்தும் வணக்கமும் வாழ்த்தும் இறைவனிடம் உயிர்கள் செலுத்த வேண்டிய பக்தியையும், செலுத்துவதற்கான முறையையும் வெளிப்படுத்துகின்றன.

நாமேவு மாவத்துக் கூத்தபிரான் திருவடி ணயந்து வாழ்வாம் (1)
பிரமபுநீ சரைநாஜம் கருதி வாழ்வாம் (2)
கரும்பிரத நாயகிதாள் வணக்கம் செய்வாம் (3)
ஆட்டுவா ரின்றி ஆடு மண்ணலுக் கன்பு செய்வாம் (4)
அம்மைதா ளகத்துட் கொள்வாம் (5)
அருட்பைரு வடுகன் செம்பொன் அம்புயப் பாதம் போற்றி (7)
நாவற் செம்மலை சிந்தித்து உய்வாம் (13)
திருமே னிக்கட் புண்சுமந் திடவும் வாளாப்
பொலிந்திருத் தவரை யுள்வாம் (14)
தந்தை தாடழந் தார்புகழ் சாற்றுவாம் (15)
அறுபத்து மூவர் தாளு முடிக்கண் ஆக்குவாம் (16)
தமிழ்முனிபொற் பாதம் பணிந்து பரவுவாம் (17)
பூவடு கழல்தகப் போதும் புந்தியைச் செலுத்தி யுய்வாம் (18)

என்பன மகா வித்துவான் எடுத்தாண்ட தொடர்கள். இறையை நினைத்தல் ஒன்றே பக்தியாகவும், வாழ்த்தாகவும் அமையாது. இறைவன் திருவடியை நயந்து வாழ்தல், கருதி வாழ்தல், வணங்குதல், அன்பு செய்தல், அகத்துள் கொள்ளுதல், பாதம் போற்றல், சிந்தித்து உய்தல், இறையை உள்ளுதல், புகழ் சாற்றுதல், அடியவர்தாள் முடிக்கு ஆக்குதல், பாதம் பணிந்து பரவுதல், புந்தியை செலுத்துதல் எனப் பல்வகையாலும் இறையை எண்ணும் நெறியையும் பக்தி செலுத்தும் முறையையும் அத்தொடர்களில் இருந்து உணர முடிகின்றது. சமயச் சான்றோர் வாழ்வின் வழி உணர்ந்த இறை அருளிப்பாட்டைப் பிள்ளை அவர்கள் வாழ்த்தின் வழி வெளிப்படுத்தும் முறை இங்கு எண்ணத்தக்கது.

விளத்தொட்டி நகரச் சிறப்பு

சிறப்புடைய சிவத்தலமாகத் திகழ்ந்த விளத்தொட்டி நகர் இன்று ஒரு குக்கிராமமாக உள்ளது. சிவபெருமான் எழுந்தருளிய செயலால் ஆன்மீகப் பெரு வரலாற்றில் அது மிக முக்கிய இடமாகியது. கொள்ளிடக் கரைக்கருகில் அமைந்துள்ள அவ்வூரை மகாவித்துவான் பாடும் விதம் மிகச் சிறப்புடையதாக உள்ளது.

வீழ்ந்து நான்முகன் போற்றும் வியனகர்ச்
சூழ்ந்து மேவுதல் தொல்வழக் கென்றுபார்
போழ்ந்து வாழ்கடல் போந்து வளைந்தெனத்
தாழ்ந்து சோலை வளைந்து தழையுமால் (37)

எனும் பாடல் அதற்குச் சான்று. அத்தலம் பற்றிக்கூறும் அவர் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றாலும் சிறந்து விளங்கும் இயல்புடையது

என்பதைப் பலவாறு விளக்குகிறார். நினைத்தாலும் கேட்டாலும் எத்தலமும் அதற்கு ஒப்பாகாது என்பது அவர் கருத்து. அதனை,

முத்தலமும் விரும்பும்விளத் தொட்டியெனு
　　மொருபெயரு மொழியு நாளும்
கைத்தலநெல் லியன்விளங்கு மதைப்பிரம
　　புரியெனவும் கரைவர் யாரும் (69)

என்ற தொடர்களால் வெளிப்படுத்துகின்றார்.

இறையைப் பற்றுவதன் நோக்கம் இம்மைத் துன்பம் நீங்கி மறுமைத் துயர் பெறாத நிலை அடைவதற்கே என மறைநூல்கள் பகர்கின்றன. மானிட உருக்கெண்டு வந்த உயிர்க்கு அவ்வெண்ணத்தைப் பெற இயலாத நிலை ஏற்பட்டு விடுகின்றது. ஆயினும் தாய் தேடி ஓடும் கன்று போலத் தன்னைக் காக்கும் இறை ஓடின் துன்பம் நீங்கும், என்பதைத் தல புராணங்கள் விளக்குகின்றன. அதனால்தான் தலப்பெருமைகள் பெருமளவில் விளக்கப்பெற்றன. அந்த அடிப்படையில் விளத்தொட்டித் தலத்தின் பெருமையை,

முந்தைவினை அறவேண்டின் இந்திரனா
　　தியர்போக முயங்க வேண்டின்
நிந்தையறு மெய்ஞ்ஞானம் பெறவேண்டின்
　　இரப்புநோய் நீங்க வேண்டின்
கந்தையடு கடோலமதக் களிற்றரசர்க்
　　கிடவேண்டின் கவலா தின்றும்
சிந்தைநினைத் தவையெல்லாம் வரவேண்டின்
　　அத்தலமே சேரவேண்டும் (61)

என்று பிள்ளை பாடுகின்றார்.

வேளாளர் சிறப்பு

பிள்ளை அவர்கள் தலபுராணங்களைப் பக்தியின் பொருட்டாயப் பாடினாராயினும் அதற்கும் மேலும் காரணங்கள் சிலவற்றைக் கொள்ளும் சிந்தனையாளர். அவ்வகையில் விளத்தொட்டிப் புராணம் எழுந்ததற்கான காரணத்தை,

பழுதறு பத்தி வாய்ந்து பரம்பரை சைவ ராய
உழுதொழில் வேளாண் மாக்க ளொருங்குள முவந்து கூற
முழுதுல கேத்துஞ் சீர்த்தி முதல்வில்வா ரனிய மேன்மை
தொழுதகு கல்வி சாலாத் தொழுத்தையேன் பாட லுற்றேன் (20)

என்று பாடுகின்றார். பாடியதற்கான காரணத்தை மட்டும் பகராது வேளாண் மக்களின் சிறப்பையும் நான்கு பாடல்களில் எடுத்தியம்புகிறார். மூவகையாரையும் தாங்கும் இயல்புடைய அவர்கள் உழவுத் தொழிலைப் போற்றக்கூடியவர்கள். பெருஞ்செல்வத்தால் நிறைவு பெற்ற அவர்கள் நிறைந்தது விளத்தொட்டி நூல்கள் பலவற்றையும் உணர்ந்த தெளிவுடைய அவர்கள் நீதியின் வழி வழுவாது நிற்கும் சிறப்புடையவர்கள். ஆதிநாதனாம் தில்லையம்பலப் பெருமானின் ஐந்தெழுத்தை ஓதி திருநீறாகிய சாதனம் பொருந்திப் பொலியும் இயல்புடையவர்கள் என்று பலவாறாக

வேளாளர்களைப் போற்றும் நிலையை அறியமுடிகிறது.

குற்றமில்லா மனமுடைய வேளாளர்கள் வாழ்வதால் இலங்கும் அந்நக ரெற்றைக்கும் ஓங்கியே(48) என்றும் வாய்மொழி தவறாத வேளாளர்கள்,

மன்று சீரிளை யான்குடி மாறனார்
என்று மானியல் பாக விளங்குவார் (50)

என்றும் பிள்ளை அவர்கள் பாடும் நிலை உழவுத் தொழிலால் உயர்ந்த அவ்வூர் மக்களின் இயல்பை எடுத்துரைக்கிறது.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு (குறள்:81)

என்ற குறளுக்கு விளக்கமாக அத்தல மக்கள் வாழ்ந்தனர் என்பதை மகாவித்துவான்

அறப்பெருஞ் செல்வ ராய வணிகிளர் வேளாண் மாந்தர்
மறப்பெருஞ் செய்கை நீத்து வருவிருந் தெதிர்கொண் டோம்பு
நிறப்பெருஞ் செல்வத் தாடி நிரப்பிரைக் குவந்து நல்கி
உறப்பெரும் போகந் துய்க்க வுறுவளந் தருமந் நாடு. (31)

எனத் திருநாட்டுப் படலத்தில் எடுத்துரைக்கிறார்.

சிவபெருமான் சிறப்பும் துதியும்

பெருமானின் புகழ்பாடுவதும் தலத்தின் பெருமை பேசுவதும் தீர்த்தத்தின் சிறப்பு உரைப்பதும் தல புராணங்களின் அடிப்படைக் கருத்து. விளத்தொட்டிப் புராணத்தில் புலவர் பெருமான் மூன்றின் மேன்மையையும் எடுத்துரைப்பினும் அவை ஒன்றின் ஒன்று விஞ்சும் நிலையில் அமைந்துள்ளன. முழுமுதற் கடவுளாம் முக்கணானின் இயல்புகளைப் பலவகையில் பாடுகின்றார். திருமாலும் பிரமனும் தாங்களே முழுமுதற் கடவுள் என வாதிட்டபோது வேதம் சிவபெருமானின் சிறப்பை எடுத்துரைத்ததாகப் பிள்ளை கூறுகின்றார். பிரமத்தின் இயல்பு வேதம் வழி நின்று விளக்கம் பெறுகின்றது. சிவபெருமான், 1.உயிருக்கு உயிராய் நிற்பவன், 2.உயிர்களைக் காத்து படைப்பவன், 3.பிறப்பு இறப்பு இலாதவன், 4.மலங்களுக்குக் கட்டுப்படாதவன், 5.யாவர்க்கும் இன்பம் தருபவன் எனப் பொது இயல்புகளைப் பாடுகிறார்.

அடுத்த நிலையில் புராணக் கதைகளை எடுத்துரைத்து சிவபெருமானின் முழுமுதற் தன்மையை வெளிப்படுத்தும் நிலை அமைகிறது. ஒரு சமயம் தேவர்கள் தம்முள் யார் தலைவர் என்று போட்டியிட, சிவபெருமான் துரும்பை நட்டு அதை அசைக்கச் சொன்னார்.தேவர்கள் அவ்வாறு செய்யலாகாது தவித்தனர். சிவனே முழுமுதற் கடவுள் என ஏற்றனர். திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய வரலாறும் இங்கு உரைக்கப்பெறுகின்றது. இவை இரண்டும் புராணங்களின் வழி சிவனின் பரம்பொருட் தன்மையை விளக்க அமைந்தவை.

தத்துவ நிலையிலும் சிவபெருமானின் தன்மையை மகாவித்துவான்

எடுத்தியம்புகிறார். ஒங்குநிறை புகழ்க் கடவுள், விசுவாதீதன், விசுவசேவயன் என்றும் அவன் கொள்ளுகிற வடிவம் அரு, உரு, அருவுரு என அமையும் என்றும் எடுத்துக் காட்டும் வகையால் சமயக் கூறுகளில் அனைத்து நிலையிலும் இறையை உணர்த்தும் சிறப்பு வெளிப்படுகின்றது.

சிவதுதி

சைவம் தோத்திரங்கள், சாத்திரங்கள் வழி வளர்ந்த ஒரு சமயம். தோத்திரங்களில் அமையும் சிவதுதிகள் உமைபங்கனின் வடிவை உள்ளப்பெருங்கோயிலில் எழுந்தருளச் செய்பவை. பக்தி உணர்வுக்கு இவ்வுடலை விளைநிலமாய் ஆக்குபவை. அத்துதிகளில் பெருமானின் பெரும்புகழ் இடம்பெறும். அவ்வகைத் துதிகளை மகாவித்துவான் சரணம், போற்றி, வாழ்த்து எனும் மூன்று நிலைகளில் அமைக்கிறார்.

சரணம் என்ற துதியுடன் வேணுகோபால பூசைப்படலத்தில் மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மங்கை பங்குடைமை, மணிமிடற்றுடைமை, கங்கை தாங்கியமை, கண்ணுதற்பெற்றமை, கொன்றை ஏந்தியமை, அம்சோதியானமை, அன்பின் உள்ளுறை இன்பம் ஆனமை, நிட்கசைகள மெய்ப்புராதன தன்மை முதலியன எடுத்துரைக்கப்படுகின்றன. அவையன்றிச் சிவனின் பெருமை விளித்துச் சரணம் கூறும் தன்மையும் அமைகிறது.

அடியர் குற்றமும் குணமெனக் கொண்டரு ளமலா
கொடியர் மும்மதி லொருங்கெரித் தருளிய குடிகா
படியர் வானவர் பரவுதோ றருள்செய்யும் பரமா
கடிய வல்விட முண்டருள் கண்டநின் சரணம். (111)

என்னும் பாடல் அதற்குச் சான்று.

இறைவனைப் போற்றி எனத் துதித்தலும் உண்டு. மணிவாசகரின் போற்றித் திருவகவல் இத்தகையது. பிள்ளை அவர்கள் விளத்தொட்டிப் புராணத்தில் போற்றித் துதியையும் அமைத்துப் பாடுகிறார். பிரமன் பூசைப் படலத்தில், பிரமன் தலந்தோறும் சென்று சிவபெருமானைத் துதித்துப் பாடுகிறார். மன்றுள் ஆடும் தம்பிரான் பாதம் போற்றிப் பெருமணநல்லூர், மயேந்திரப் பள்ளி, முல்லைவாயில், தென்குருகாவூர், காழிமாநகர், திருவெண்காடு, கடவூர், நாகைக் காரோணம், மறைக்காடு, திருநள்ளாறு, ஆரூர், அம்பர் மாகாளம், வழுவூர், மாயூரம், ஆவடுதுறை, இடைமருது, நாகேச்சுரம், கலயநல்லூர், குடந்தை, வலஞ்சுழி, திருப்பனந்தாள், பந்தணைநல்லூர் ஆகிய சிவத்தலங்களையும் வழிபட்டு இறுதியில் வில்வரணியமாகிய விளத்தொட்டியை அடைந்ததாகப் பாடுகிறார் மகாவித்துவான்.

பிரமன் வில்வாரணிய ஈசனைப் போற்றித் துதித்ததையும் இரு பாடல்களில் புராணம் எடுத்துரைக்கிறது. அவற்றுள்,

பெருகுபே ரொளியே போற்றி பிரணவப் பொருளே போற்றி
ஊருகுமெய் யடியா ருள்ளத் தூற்றெழு மமுதே போற்றி
கருகுமும் மலமுந் தீர்க் கடைகளித் தருள்வாய் போற்றி
திருகுதீர் வில்வக் கானச் சிவபரஞ் சுடரே போற்றி (140)

என்ற பாடல் போற்றித் துதியின் முத்தாய்ப்பாய் அமைந்திருப்பது வெளிப்படை.

சரணம் போற்றி என்ற துதிகளுடன் 'வாழ்க' என அமையும் வாழ்த்துத் துதியும் புராணத்தில் இடம்பெற்றுள்ளது.

பொன்பூத்த விளந்தொட்டி நகர்வாழ்க
ஒளிர்பிரம புரீசர் வாழ்க
மின்பூத்த சிறுமருங்குல் கரும்பிரத
நாயகிசீர் மேன்மேல் வாழ்க
தென்பூத்த வைதிகமுஞ் சைவமுநாள்
தொறும் ஓங்கிச் செழித்து வாழ்க
மன்பூத்த சிதம்பரத்து நடநவிலும்
குஞ்சிதத்தாள் வாழ்க வாழ்க. (353)

என அமைந்த பாடல் அதற்குச் சான்று.

பிள்ளைத் தமிழ்

விளத்தொட்டிப் புராணத்தில் விளத்தொட்டிப் படலம் முருகப் பெருமான் பிறந்து வளர்ந்ததைக் கூறும் பகுதி. இத்தலத்தில் கந்தவேள் தொட்டியில் வளர்ந்த காரணத்தால் அத்தலத்தில் வாழ்பவர்கள் தம் வீடுகளில் குழந்தைகளுக்குத் தொட்டில் இடுவதில்லை, தூளி முதலியவற்றையே கட்டி வளர்ப்பர் என இத்தலப்புராணம் கூறுகிறது. முருகனின் இளமைப் பருவச் செயல்களைப் பாடவேண்டும் என்று எண்ணிய பிள்ளை அதற்கு இப்படலத்தை பயன்படுத்திக் கொண்டார். பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவங்களையும் ஏழு பாடல்களில் பாடும் சிறப்பை இங்குக் காணமுடிகிறது.

'திருநீற்றுக் காப்பணிந்து சீராட்டிப் பாராட்டச் செங்கீரை ஆடி, தன்னிடமே உறக்கிடத்தித் தாலோதாலென உவந்து கரமுகிழ்த்தும் சப்பாணி கொட்டியே, முதுகுரவர் அவாவவாய் முத்தளித்து வருக வருக என வந்தும் மதிதனை ஆட வருதி என உவந்தழைத்தும் மடவார் இயற்று சிறுவீடு பதத்தழிந்தும் நண்ணு சிறுபறை எறிந்தும் நகுசிறுதேர் உருட்டியும் வரும் நிலைகண்டு,

எண்ணு மனித் தொட்டிமிசை யிவர்ந்தமரு மதுகண்டு
கண்ணு மன மும்குளிர்வாள் கரும்பிரத நாயகியே (233)

என முடிக்கும் பிள்ளை அவர்களின் பெரும்புலமை இலக்கியத்துள் இலக்கியம் படைக்கும் பேராற்றலை பறைசாற்றி நிற்கின்றது.

சைவத்தையும் தமிழையும் தம் சிந்தையாகக் கொண்ட மகாவித்துவான் சைவக்கடவுளரின் மேன்மையை இனிய தமிழால் பாட விரும்பியதன்

வெளிப்பாடே தலபுராணங்கள். அவற்றுள் பிள்ளையாம் குருநாதனின் இளம் பருவச் செயல்பாடவும் இவ்விலக்கியத்தை இடமாகக் கொண்டார்.

அரிய சொல்லாட்சி

மகாவித்துவான் தன் பெரும்புலமையாற்றலைக் கற்பனை, உவமை, சொல்லாட்சி எனப் பல இலக்கிய உத்திகளாலும் வெளிப்படுத்துவதைக் காணலாம். அவருடைய அரிய சொல்லாட்சிகள் பல கற்பவருக்குச் சொல்லாட்சித் திறனை வளர்க்கும் வகையில் அமைவன. விளத்தொட்டிப் புராணத்தில் பிள்ளை இடம் நோக்கியும் பொருள் நோக்கியும் அரிய சொல்லாட்சிகளைக் கையாண்டுள்ளார்.

அறவன்-பிரமன்(74), காரி-வயிரவர்(86), குளமகவு-முருகன்(237), தண்டதரன்-எமன்(294) முதலியன கடவுளர் பற்றி அமைவன. குருவின் மனைவியை ஆசான் பன்னி (332) என்ற சொல்லாலும் முனிவர்களே என்பதைப் பனவீரே(324) என்றும் குறிக்கும் சொல்லாட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஆலம்பம்-பற்றுக்கோடு(83), குழிசி-பானை(86), பயோதரம்-மேகம் (177), லியல்-ஈயோட்டி(188), வரவு-வன்மை(280), பளகு-குற்றம்(336), அரந்தை-துன்பம்(340) முதலான சொற்கள் அரியனவாய் அமைவன. மலங்கு-கலங்குதல்(48), கலாய்த்தல்-சண்டையிடுதல்(77), சமழ்க்கும்-நாணும்(202), கொன்னும்-பெருமை உறும்(210), மந்த-மெல்ல(218), கண்ணி-கருதி(257), மாழாந்து-மயங்கி(266), சிங்கல்-குறைதல்(286) முதலான வினைச் சொற்கள் அரிய ஆட்சியை உடையனவாய் அமைந்து இலக்கியத்தின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.

நூற்பயன்

தலபுராணங்களில் நூற்பயன் பற்றிய விளக்கம் அமையும். மகா வித்துவான் விளத்தொட்டிப் புராணம் பற்றிய பயனை இரு இடங்களில் குறிக்கின்றார். விளத்தொட்டிப் படலத்தில் விளத்தொட்டியின் சிறப்புக்குரிய இக்கதையை எழுதியவர்களும் படிப்பவர்களும் பக்திநெறி வழுவாது கேட்டவர்களும் இந்த உலகில் சிறப்புடைய மனைவி மக்களோடு உவந்து பலநாள் வாழ்ந்து புகழுடைய சிவலோகம் எய்திச் சிறப்புற்றிருப்பர்(244) என்று அமைகிறது. ஒரு பாடல் ஈசானப் படலத்தில் சூதமுனிவர் கூற்றாக இப்புராணம் மற்றும் தலம் ஆகியவற்றின் சிறப்பை,

மன்னிய விளத்தொட்டி மாநகர் மான்மியத்தை
மின்னிய பேரன்பின் விரித்துரை செய்வோரும்
பன்னிய வதனுண்மை பரிந்துறக் கேட்போரும்
துன்னிய பெருவாழ்க்கை யுறுவர்வெந் துயர்தீர்ந்தே (347)

என்று பாடுகின்றார்.

மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தம் புலமை நலத்தால் தமிழையும் சைவத்தையும் வளமை படுத்தினார் என்பதை அவருடைய படைப்புக்கள் விளக்கி நிற்கின்றன. அவ்வகையில் விளத்தொட்டிப் புராணம் மிக இன்றியமையாத இடத்தைப் பெற்றுத் திகழ்வது வெளிப்படை.

4. நாகைக்காரோண புராணத்தில் மருத்துவக் கருத்துக்கள்

மரு.ச.அரங்கராசன், மரு.சே.பிரேமா
தஞ்சாவூர்

மகாவித்துவானின் சிறந்த நூல்களில் தலையானது நாகைக்காரோண புராணமாகும். இதில் சிறந்த சைவசமயக் கருத்துகளும், வரலாற்றுண்மைகளும் விரவி அமைந்து பல இடங்களில் சித்த மருத்துவத்தின் கருத்துகளும் காணப்படுகின்றன. சித்த மருத்துவத்தை நூலாசிரியர் பெரிதும் பயின்றவரில்லை என்றாலும் இளமையில் இவருக்குத் தமிழ் கற்பித்த ஆசிரிய பெருமக்களில் கொட்டடி ஆறுமுகம் பிள்ளை என்பவர் சிறந்த தமிழாசிரியரும், சித்த மருத்துவரும் ஆவார். அவ்வழி மகாவித்துவான் அவர்கள், சித்த மருத்துவம் பற்றி அறிய வாய்ப்புகள் இருந்திருக்கும். இவரைப்பற்றிப் பேராசிரியரும், பழுத்த கடவுள் மறுப்பாளராகிய சாலை, இளந்திரையன் கூறுவது "பலருக்குக் கல்வி நிழல் வழங்கிய பேர் ஆலாக விளங்கியவர் மகாவித்துவான், அவர் பொழிந்த கவிதைப் பெருக்கத்தைக்கண்டு "கம்பனை மிஞ்சிய பாவலன்" என்று பாராட்டிய மக்களுக்குப் புதுமைக்காவியம் எதையும் அவர் தரவில்லை. அவருடைய செய்யுள் வெள்ளம் தலபுராணங்களாகவும், சிற்றிலக்கியங்களாகவுமே பெருகிவடிந்து போயிற்று. பேரறிவாளரும் பெரும் பண்பாளரும் புலவருமாக விளங்கிய மகாவித்துவானின் பேராற்றல் காலத்தாலும் இடத்தாலும் கட்டுண்டு போயிற்று" (புதுத்தமிழ் முன்னோடிகள், ப.11) என்பர்.

நூலமைப்பும் சிறப்பும்

காஞ்சி புராணத்தை ஒத்து இப்புராணம் இருத்தல் வேண்டும் என்ற எண்ணமுடன் இது செய்யப்பட்டதாகும். இவர் 22 புராணங்களும் ஆறு காப்பியங்களும் ஏராளமான தனிப்பாடல்களும், 45 பிரபந்தங்களும் செய்திருந்தாலும் இப்புராணமே உள்ளத்தைத் தொடுவதாகவும், மகாவித்துவானின் பெரும்புலமையைக் காட்டுவதாகவும் காணப்படுகின்றது. இப்புராணத்தின் பாடல்கள் 2506. இதில் அரியவகையிலான செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. கலிவிருத்தம், யமகம், இரண்டடிப்பாடக மடக்கு, முற்று மடக்கு, கோமூத்திரி, கூட சதுக்கம், முரசபந்தம், வஞ்சி விருத்தம், சுழிகுளம், மாலைமாற்று, வஞ்சித்துறை , திரிபங்கி, மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை, பிறிதுபடுபாட்டு, கரந்துறை செய்யுள் நந்திநாதபடலத்தில் சித்திரகவிகள் 24 முதல் 46 ஆம் பாடல்கள் முடியவுள்ளன. இவ்வகையிலான இலக்கணச் செறிவுள்ள செய்யுள், வகைகளைப் பாடியது இவரது பெரும் புலமைக்குச் சான்றாகும். சித்த மருத்துவக் கருத்துக்களையும் இப்புராணத்தில் புகுத்தியது மேலும் சிறப்பைச் சேர்ப்பதாக உள்ளது.

புராணத்தில் சித்தர்கள்

மகாவித்துவான் அவர்கள் சித்தர்களிடத்தில் பெரும் பக்தி செலுத்தியவர். இதைப்புராணத்தின் பல இடங்களில் காணலாம். புராணத்தின் கடவுள் வாழ்த்து அகத்தியருக்காக உள்ளது. மூன்று வகையான குற்றங்களை உடைப்பது உயிர்; இக்குற்றங்களால் உளநோய்களும்-உடல்பிணிகளும் ஏற்படும் எனவும் சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஆவணம், கன்மம், மாயை என்ற முக்குற்றங்களால் உளநோய்கள் ஏற்படுகின்றன. இக்குற்றங்களுக்கு உவமையாக மூன்று கனிகளை மகாவித்துவான் எடுத்துக்காட்டுகின்றார். விளாம்பழம்-ஒரு ஓட்டையுடைய ஆணவ மலத்திற்கும்; மட்டை, மேல்ஓடு என்ற இரண்டையும் கொண்ட கன்மமாகிய தேங்காய்க்கும்; பசுமை உடைய வெளித்தோல், பின்னர் அதையடுத்த மெல்லியதோல் அதற்குள்ளே நுண்ணியதோலையும் கொண்ட நாரத்தைப்பழம் மாயைக்கும் ஒப்பிடுகின்றார். "இரு ஆணவ குற்றமுள்ளவர் விஞ்ஞானகலர், இரு குற்றங்களையுடையோர் பிரளயாகலர், மூன்று குற்றங்களையுடையவர் சகலர் என்றும் இங்கு முனிவர்களை வகைப்படுத்தியுள்ளர். நைமிச படலத்தில் கூறப்படும் பல முனிவர்களில் சித்தர்களின்பெயர்களும் உள்ளன. உரோமரிசி (உரோமசன்), அகத்தியர், (காக) புசண்டர், புலத்தியர் போன்றவர்கள் பல சித்த மருத்துவ நூல்களை இயற்றியுள்ளார்கள். ''சுச்மாண்டர்'' என்ற முனிவரின் பெயரும் இப்பட்டியலில் உள்ளது. இது "கூர்மானந்தர்" ஆதல் கூடும், "கூர்மானந்தர்" என்ற சித்தரின் பெயரில் பல பாடல்கள் உள்ளன. கடவுள் வாழ்த்தில் மட்டுமன்றி, தலவிசேடப்படலத்தில், "சித்தர் சாரணரியக்கர் திகழ்விச்சாதரர் கருடர்" (பாடல்.17), எனவும் "லிடாதற்பி எனான்பான் கோடிசித்தர்கள் விழைந்து போற்ற" (பாடல்.34) எனவும், ஏழு முனிவர்கள் பூசித்த படலத்தில் அகத்தியர், புலத்தியர் ஆகிய சித்தர்களின் பெயர்களும், சித்தர்களின் அரிய ஆற்றல்களை சித்தாச்சிரமப்படலத்தில் ''தேடுமலை மாமுதலெண்சித்தியும் பெற்றுற வாழ்ந்தோம்" (பாடல்.3) எனவும், "ஒன்று பல சித்தர்களுமுரைத்த மொழி கேட்டு வந்து (பாடல்.5) எனவும் "பத்தி நெறி வழுவாதொன்பான்கோடி சித்தர்களும்'' (பாடல்.18) எனவும், வருகின்றன.

சித்தமருத்துவுக்கருத்துகள்

இடகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்றின் வழி மூச்சுக்காற்று உடலில் இயங்கும், இக்காற்றைக் கட்டுப்படுத்த, நீண்ட நாள் வாழலாம் என்பது சித்தர்களின் கொள்கையாம். இதைச் சாகாக்கலை என்பர். இவ்வரிய கருத்தை "வளியிருவழியும் சேறன் மாற்றுபு நாப்பணாடி" (புண்டரிக முனிவர்-3ஆம் காட்சி பாடல்.8) என விளக்குகிறார். உயிர்வளியானது, இடகலை, பிங்கலையான வழிகளில் செல்லுதைக் கட்டுப்படுத்தி, சுழுமுனையில் செலுத்தும் யோகிகளைப் பற்றி இப்பாடலில் வருகின்றது. "நாடி" களைப் பற்றி சித்தாச்சிரமப்படலத்தில் வருகின்றது. "நாடு இருவளியடைத்து நடுநாடி உறப்படுத்தி" (பா.30) என்றவரிகளின் பொருள் இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய நாடிகளில் உயிர்வளியை

சுழுமுனையில் செலுத்தி "மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களில் உள்ள தேவதைகளை அமிழ்முகம் பண்ணிக்கொண்டு, சந்திர மண்டலத்தின் அமுதத்தை வாரியுண்டு தேக்கித் திளைத்திருத்தல் சன்மார்க்கமாம் என்பர். சித்த மருத்துவம் மணி மந்திரம், மருந்து என்ற பிரிவுகளை உடையது. இக்கொள்கையை இவர் "மணி மனு மருந்து மூன்றினு முயன்றும், வன்பிணி தவிர்ந்ததிலதாக" என்று காட்டுகிறார். மணிமந்திர மருந்துகளால் தீராத கொடுநோயைத் தீர்க்கும் இறைவன் காரோகணப்பெருமான் ஆவர் என்பர்.

சித்த மருத்துவர்கள்

இப்புராணத்தில் பல்வேறு இடங்களில் சித்த மருத்துவர்கள் பற்றிக் கூறுகின்றார். தேவ மருத்துவர்களான அசுவினி தேவர்களை "திருநகரப்படலத்தில்" "நேரிய நாளுக்கெல்லாம் மருத்துவநாண் முதனுள்ள" (பா.28) வருகின்றது. குதிரைத் தலைகளையையுடைய அசுவினி தேவர்களின் பெயரை உடைய அசுவினி விண்மீன் என்பன இவ்வடிகளுக்குப் பொருளாம். புராணவலிமை ஓங்கிய காலத்து ஆயுள் வேத கடவுளர்களுக்கும் தனியிடம் தந்தமையையே இது காட்டும். இதையே பின்வரும் பாடலடிகள் வலியுறுத்தும் "சிறந்த பல்லாயுள் வேதியர்க்கூலி" (பா.6) "தரணிகள் அகன்றனர் பின்னர் (பா.7) தரணிகள் என்ற சொல் மருத்துவர்களைச் சுட்டியதாக அமைந்துள்ளது. "ஆயுள்வேதியர் ஒழித்தகன்றார்" (பா.10) "ஆயுர்வேத மருத்துவ மரபும், சித்தர்களின் மரபும் ஒன்றாகக்கருதி இப்பாடல்கள் இயற்றப்பட்டன. இதன் மூலம் இரு மருத்துவமும் ஒன்று என்ற அக்காலத்திய எண்ணம் தெளிவாகின்றது.

புராணத்தில் இடம் பெற்ற நோய்களும் பிணிகளும்

பல்வகைப்பட்ட நோய்களையும், பிணிகளையும் இப்புராணத்தில் காணலாம்.

"விருத்திடுபிணிக்கோட்பட்டு மெலிந்தறவாடுவாரை" (பா.9) பிணியால் மெலிந்து வாடாமல் இருக்கும் மக்கள் உள்ள சோழநாடு என்பது பொருள்.

விளை நலஞ்செய் கல்வி தகை மிடி பிணிகாமாதி என (பா.76) "மற்றிவராயுளும் சிறிய வல்வினை ஒற்றிய நோய்களோ பெரிய ஒன்றுபு" (தேவதீர்த்தப்படலம்.197) "நோயினும் கோட்பட்டு நோதக ஒழுங்குமிக" (முனி தீர்த்தப்படலம்.26) உடலில் சீழ் பிடித்து, ஒழுகும் சிறிய புண்களில் கொடிய நஞ்சைப்பரப்பும் கிருமிகள்; இளைப்பு, நோய், முதலான பல்வேறு பிணிகள்; இத்துடன் பசியைத் தரும் பிணி. உடலில் கெட்ட நாற்றம் தாங்காமல், எதிர்வருவோர் மூச்சுப்பயிற்சி செய்வார் போல மூக்கைப்பிடித்து செல்வார்கள் என நோயும் பிணியும் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய பெரும்பிணி நல்லோரைப் பழித்ததால் ஏற்பட்டது. இந்நோயானது "மெய்யுறு நோய்" எனப்பட்டது. காகதீர்த்தப்படலத்தில் இந்திரன், உடல் முழுவதும் பெண் குறியை அடைந்த நிகழ்ச்சி உள்ளது.

மேக நோயின் 3-ஆம் நிலையில் கொப்புளங்கள் தோன்றி, உடையும் புண்கள் தோன்றும், இதையே மறைமுகமாக ''பெண் குறி'' என்றழைத்தார்கள். குழந்தைகள் இல்லாத நிலை பற்றி நாகநாதப்படலத்தில் (பாடல்கள் 4,5) வருகின்றது. புகழ்ந்துரையாத கொடை, மணமில்லா மலர், நிலவற்ற வானம், அருளில்லா அருந்தவம், அறிவற்ற கலவி, இசையில்லாப்பாடல், தீய நட்பு, பரத்தையருடன் கல்வி, புகழற்ற வாழ்வு, நெய்யில்லா உணவு, பார்வையில்லா முகம் என்பன குழந்தைகளில்லா வீட்டுடன் ஒப்பிடப்படுள்ளன. திருநள்ளாற்று தியாகராசப் பெருமானின் திருநடனம் உன்மத்த நடனம் எனப்படும். "உன்மாதம்" என்பது உள நோயாகும். எனவே பித்துக்கொண்டவனின் நடனம் போன்றதாக திருநள்ளாற்றுப் பெருமானின் நடனம் கூறப்பட்டுள்ளது. "மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களுக்கு வரும் நோய்களைத் தீர்க்கும் மருத்துவ நூல்கள்" வாகடம் எனப்படும். எவ்விதமான நோய்களும் வராமல் ஆச்சிரமத்தில் உள்ள பசுக்கள் இருப்பது வாகடநூல்களின் கருத்தேயாகும். இக்கருத்தை ஆசிரமுனிவரின் சிறப்பாகக் காட்டுவது நயமிக்கதாகும்.

மருவும் வெம்பால நோய்க்கோர்
மாமருந்தாகி மன்னும் (பஞ்சகுரோசமான்மிய படலம், 23)

கொடிய பாவங்களான நோயைத் தீர்க்கும் சிறப்பான மருந்தாக நாகையின் இறைவன் எழுந்துள்ளார். கண்டக சம்விருதம் என்ற நரகத்தில் கொடியோர் உடலில் கொப்புளங்கள் தோன்ற தீராநீர்வேட்கை ஏற்படும். சிறு நிழலும் இல்லாமல் வருந்தி அழிவர் (அரசகேசரி முக்தியடைந்த படலம், 28) கருத்தமம் என்ற நரகம் கிருமிகளைக்கொண்டது. இது குருதியை உறிஞ்சி, துன்பம் செய்யும், தத்தாங்காரம் என்ற நரகம் கொடிய சுடுநீரைக் கொண்டது. கொடியோரின் உடல் இச்சுடுநீரில் அழுத்தப்படும். உடல் முழுவதும் வெந்து, புண்ணாகி, அழியும், பார்ப்பதிச்சரமான்மியப் படலத்தில் (பாடல் 7) ஐவகையான பிணியாளர்கள் காட்டப்படுகின்றனர். அரையாப்பு என்ற மேகநோய் கொண்டவன், அழுகிய புண்களை உடைய நாற்றமுடையவன், பல்லைக்கடிக்கும் காக்கை வலிப்பு நோயாளி, முயலகன் என்ற வலிப்பு நோயாளி, தொழு நோயாளி ஆகியோர் வசிட்ட முனிவரின் அறிவுரைப்படி, நாகை சென்று திருக்குளத்தில் நீராடி, காயாரோகணத்திலுள்ள சிவபெருமானை வழிபட இவை நீங்கியன என்பர். இதில் உரையாசிரியரின் கருத்துகளில் மாறுபாடு உள்ளன. பற்கடுநோயன்" என்பதற்கு "கொடிய பல் நோயினனும்" என்று கொள்ளுகின்றார். முசுகுந்தன் பிரமகத்தி தீர்த்த படலத்தில் பிரமகத்தியின் செயல்கள் மிகவும் அருமையாகக் கூறப்பட்டுள்ளன. பிரமகத்தி என்பது செய்த தீவினையால் நேர்வதாக அறநூல்கள் கூறும். இம்மரபை ஒட்டி ''அகத்தியர் கன்மகாண்டம் 300" என்ற நூல் எழுந்தது. எவ்வகையான தீவினையால் எத்தகைய நோய்கள் தோன்றும் என்பதும் இந்நோய்களை நீக்கும் வழிகளும் கூறப்பட்டுள்ளன. பிரமகத்தியின் செயல்களை நோக்க பிரமகத்தி என்பது உள நோயாகவே தோன்றுகின்றது. (பாடல் 8) மிகவும் ஆவேசமுடன் பொருள்களைத்தூக்கி வீசும், பொருள்களை அசைக்கும்,

பற்களை கடிக்கும், சுழற்றி எல்லாவற்றையும் எறியும் என்பன பிரமகத்தி" யின் செயல்கள். இச்செயல்கள் யாவும் உளப்பிணியை ஒத்துள்ளன. இதுபோன்ற உளப்பிணிகள் யாவும் அகத்தியரின் கிரிகை 18 என்ற நூலில் விரிவாக உள்ளன. அடுத்து கயநோய், வெண்குட்டம், மகப்பேறின்மை, பேச இயலாமை என்ற நோய்களும் கூறப்பட்டுள்ளன. இப்பிணியாளர்கள் யாவரும் நாகைகாரோணத்தாரை வழிபட நீங்குவதாக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. வெண்குட்டம் பற்றி விடூரதன் சாபம் தீர்த்த படலத்திலும், தருமன் பூசித்த படலத்திலும்,மகப்பேறு பற்றி நீருகன் பூசித்த படலத்திலும் நாகநாதப்படலத்திலும் வருகின்றது. வெண்குட்ட நோய்க்கு இப்புராணம் மிகவும் முதலிடம் தந்துள்ளது.

மகாவித்துவானின் தலைசிறந்த இலக்கியப்படைப்பான திருநாகை காரோணப்புராணம் ஓர் கலைக்களஞ்சியமாகவே உள்ளது. தமிழிலக்கியங்களைக் கற்றோர் மட்டுமன்றி ஏனைய துறையினருக்கும் இப்புராணமானது பெரிதும் பயன்படும்.

5. தமிழ் வாழ்க்கை

சபா. அருணாசலம்
தேவகோட்டை

தமிழ் இலக்கியமே வாழ்க்கையாகவும், வாழ்க்கையையே இலக்கியமாகவும் வாழ்ந்தவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். இவரது மாணவராகிய உ.வே. சாமிநாதையரவர்கள் இக்கவிச் சக்கரவர்த்தியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். அது மிகச் சுவையான இலக்கியம். ஆங்கில இலக்கியத்தில் ஜான்சன்-பாஸ்பெல் உறவு போலத் தமிழ் இலக்கியத்தில் இவர்கள் உறவு அமைந்ததை உ.வே.சா.வின் நூல் தெளிவாகக் காட்டுகிறது. மகாவித்துவான் பேரறிஞர். தமிழ்ப்புலமை நலம் நிரம்பியவர் என்பதைக் காட்டும் இந்நூல் அவர் மனிதாபிமானம் மிக்க மாபெரும் மனிதர் என்பதையும் காட்டுகிறது. இந்நூலின் வழி மட்டுமே அறியலாகும் மகாவித்துவானின் சில தனிப்பாடல் பிறந்த சூழலையும் அவற்றின் சிறப்பையும் இக்கட்டுரையில் காண்போம்.

மகாவித்துவான் 1815ஆம் ஆண்டு முதல் 1876ஆம் ஆண்டு வரை 61 ஆண்டுகள் வாழ்ந்து புகழ்வளி விளங்கினார்கள். உ.வே.சா. மகாவித்துவானிடம் 1870 ஏப்ரலில் பாடம் கேட்கச் சேர்ந்தார். ஏழு ஆண்டுகள் பழகினாலும் நூறு ஆண்டுகள் பழகியதுபோல் ஆசிரியப்பெருமான் வரலாற்றைச் சிறப்பாக எழுதியுள்ளார்.

அன்பே சிவம்

உ.வே.சா. எழுதியுள்ள வரலாறு இவரை மாபெரும் மனிதாபிமானியாகவும் அன்புதவழ் சில வடிவானவராகவும் காட்டுகிறது. "நான் போடும் காலங்களில் எல்லாம் 'ஆகாரம் ஆயிற்றா?' என்றும் 'சௌகரியமாக இருக்கிறதா?' என்றும் விசாரிப்பார். நான் ஆகாரம் பண்ணிக்கொண்டு வருவதற்கு நேரமானால் என்ன காரணத்தால் வரவில்லையோ என்று கவலையுற்று நான் வரும் வழியையே நோக்கிக் கொண்டு தெருத்திண்ணையில் இருந்ததைச் சிலமுறை நான் கண்டிருக்கிறேன்". (பாகம்-2, பக்.17) என உ.வே.சா. எழுதும்போது ஆசிரியர் தாயாகவும் இவர் பிள்ளையாகவும் தோன்றுகின்றனர்.

பட்டீச்சுரத்தில் உ.வே.சா. பாடம் கேட்ட காலத்தில் "உதயகாலந் தொடங்கியே பாடம் ஆரம்பிக்கப்படும். மணி எட்டானால் காலை யாகாரம் செய்து கொண்டு வரும்படி என்னையிவர் அனுப்பி விடுவார். காலை ஆகாரமானவுடன் பத்து அல்லது பதினோரு மணிவரை பாடம் நடைபெறும். மாலையில் திருமலைராயனாறு சென்று அனுஷ்டானம் செய்துவிட்டுத் திரும்புகையில் ஆகாரம் செய்து கொண்டு வரும்படி அக்கிரகாரத்தில் உள்ள வீட்டினுள் என்னை அனுப்பி நான் உண்டுவரும் வரையில் அவ்வீட்டுத் திண்ணையில் தனியே இவர் இருப்பார். இவர் இருத்தலை வீட்டுக்காரர் தெரிந்து கொண்டு தீபம் கொண்டுவந்து வைத்தால்

உண்டு. இல்லாவிட்டால் இருட்டிலேதான் இவர் தனியேயிருப்பார். அங்ஙனம் அமைந்த பேரன்பை என்னவென்று சொல்வேன். இப்படி ஒருவர் இருந்ததாகக் கதையிலும் கேட்டதில்லை" என்று எழுதுகிறார். ஆதீனத்துதி தலைவர் முதல் செல்வர்கள் அறிஞர்கள் பேரன்பும் வைத்துப் போற்றிய ஒருவர் தமது மாணவர்க்காக வெளிவந்த தன்மையையும்; மகாகவிக்குள் இருந்த மாமனிதரையும் இது போன்ற நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

பட்டாடை கொடுத்த பாட்டு

திருவாவடுதுறையில் தை மாதத்தில் நடைபெறும் ஸ்ரீ நமசிவாய மூர்த்தியினுடைய குருபூசையில் இக்கவிப் பேரரசரின் அன்பும் தமிழ்ப்புலமைத் திறமும் வெளிப்பட்ட நிகழ்ச்சியை உ.வே.சா. எடுத்துக்காட்டியுள்ளார். இரவு 10 மணிக்குமேல் மகாவித்துவான் உறங்கச் சென்றுவிட்ட வேளையில் ஆவூர்ப் பசுபதி பண்டாரம் இவர்தம் உறக்கத்தைக் கலைத்துத் தமக்கொரு பாடல் செய்து தருமாறும் அதை ஆதினத்தலைவர் கொலுவில் படித்துப் பட்டு வேட்டிகள் பரிசு பெறப்போவதாகவும் வேண்டினார். பசுபதிப்பண்டாரம் போன்றவர்க்ளுக்கு மனுக்கள் ஏதாவது தானம் ஆகத் தருவார்கள். ஆனால் புலவர்களுக்கு மட்டும் முதல் நாள் கொலுவில் சிறப்புச் செய்யப்பெறும். அவ்வேளையில் தாமும் சென்று பரிசு பெற விரும்பிய பசுபதிப்பண்டாரம் மகாவித்துவானைத் தொல்லை செய்தார். களைப்புற்ற வேளையிலும் கருணைப் பெருக்கான கவிப்பேரரசர் ஒரு பாடலை இயற்றிப் பண்டாரத்திடம் கொடுத்தார்.

> எந்நாடும் புகழ்துறைசை வருகுரு சுப்பிரமணிய
> எந்நாடும் புகழ்துறைசை வருகுரு சுப்பிரமணிய எம்மானே முன்
> இன்னாத புலியதனை உடுத்தி இருந்திடு பொழுதில்
> ஏத்தினோர்க்குப்
> பொன்னாடை களையளித்தாய் பொன்னாடை புனைந்தவிந்தப்
> பொழுதடைந்தால்
> என்னாசை தீர்ந்திடவே எவ்வாடை அளிப்பைகால் என்று
> இங்குற் றேனால்

என மகாவித்துவான் எழுதிக் கொடுத்த பாடலைத் தேசிகர் முன்னிலையில் பாடிப் பண்டாரம் ஒரு ஜோடி ஆடை பரிசு பெற்றார் குருவைச் சிவன்வடிவாகவே கருதி வழிபடும் பாவனையில், தன் வேண்டுகோளையும் சமத்காரமாகத் தெரிவிப்பதாக அமைந்தது இப்பாடல், பண்டாரம் பரிசு பெற்று வந்தது அறிந்தும் பலரும் அதுபோலவே மகாவித்துவானிடம் வந்து பாடல் புனைந்து தருமாறு கேட்டனர். அவ்வாறே பலருக்கும் பாடல்களை எழுதித் தந்து உதவினாராம் மகாவித்துவான். உ.வே.சா. அவர்களே நினைவில் உள்ள பாடல்கள் என்று எட்டுப்பாடல்களை எடுத்துக் காட்டுகிறார். அவற்றுள் இரண்டு:

> ஆசையிலார்க்கே ஒன்றளிப்பாய் எனத் தெரிந்தும்
> ஆசையுடை யாய் என் றறிந்து வந்தேன் - ஆசையுடை
> எங்கட்டு முன்று ஈ சுப்பிரமணிய எம்மானே
> வெங்கட் கலி நீங்க வே

இப்பாடலில் இயல்பான சிலேடை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. ஆசை-அவா; ஒன்று-முத்தி; ஆசை-பொன்னாடை. அவா அறுத்தவர்க்கு நீ முத்தியளிப்பாய் என அறிந்தும் என்னுடைய ஆசை உடைமேல் இருந்ததால் வந்தேன். நீ பொன்னாடை (ஆசை) உடையணிந்தவன் என மகிழ்ந்து வந்தேன். மிகுந்த அவா உடைய எங்கட்கு ஒன்று ஈவாயாக. பட்டாடை (ஆசைஉடை) ஒன்று எமக்குத் தருவாயாக என இயல்பாகச் சிலேடை அமையப் பாடியுள்ளார்.

இல்லேன் என்று ஆகும் இயம்ப இருப்பேனை
வல்லே உடையேனா வாழவருள் - நல்லோர்கள்
பேசும்புகழ்ச் சுப்பிரமணிய தேசிக நற்
தூசும் செம் பொன்னும் அளித்து.

என்னும் பாடலிலும் சிலேடை சிறப்புற அமைந்துள்ளதைக் காணலாம். மறுநாள் தேசிகர் சிலரைப் பார்த்ததும்

"என்ன பிள்ளையர்கள், இராத்திரி பெரு வேடிக்கை பண்ணிவிட்டீர்களே; மிகவும் சிரமமாக இருந்திருக்கும் என்றும் தூக்கம் கெட்டிருக்கும் என்றும் எண்ணுகிறோம்....

என்று கூறிவிட்டு அங்கேயிருந்தோரிடம்

இவர்கள் இருப்பது ஆதினத்திற்கு மிகவும் கௌரவமாகவே இருக்கின்றது. என்ன பாக்கியம் இருந்தாலும் இதற்கு ஈடாகாது. குறைந்த கல்வியுடையோரையும் கௌரவிக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிற இவர்கள் குணம் யாருக்கு வரும். ஆதினத்தின் அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்"

எனப்பலவாறு பாராட்டினார். மகாவித்துவானை அடையாளம் காட்டும் வார்த்தைகள் இவை.

மொழி பெயர்ப்புப் பாடல்

திருவாவாடுதுறை மடத்திற்கு வரும் வடமொழி வாணர்கள் மகாவித்துவானைச் சந்தித்து உரையாடுதல் வழக்கம். அவர்கள் வடமொழிச் சுலோகங்கள் சொல்லும் போது உடனே அவற்றைக் கவிதையாக்கித் தமிழ் மாலை தொகுப்பார் மகாவித்துவான். திருவாலங்காலங்காட்டு தியாகராஜ சாஸ்திரிகள் சொன்ன வடமொழி ஸ்லோகத்திற்கு இவர் உடனே பாடிய மொழிபெயர்ப்புப் பாடல்.

நெற்றியின் நிறு புனைந்திடப் பராகம்
நிமிர்ந்தெழுப் பல்செவி தோறும்
சுற்றிய வராக்கன் அடைவொழித்திடுவான்
துருத்திபோல் மூச்சினை எறியப்
பற்றிய நுதல் தீ எழ மதி உருக்கிப்
பாய் அமுது உகுத்திடப் புற்றோல்
வெற்றியார் உயிர் பெற்றெழ விடையோட
வெண்ணகைபுரி பிரான் புரக்க

சிவபிரான் தமது திருநெற்றியில் புனைந்த நீறு, அவர் செவிகளில் குண்டலங்களாக அணிந்திருந்த பாம்பின் கண்களில் விழுந்தது. அத்துகளை உதறப் பாம்புகள் பெரும் மூச்சு விட்டன. அக்காற்றால் நெற்றிக்கண் நெருப்பு எரிய திருமுடியில் இருந்த நிலவு உருகி அமுதம் வழிந்தது. இடையில் அணிந்த புலித்தோலில் அமுதம் பட்டதும் புலி உயிர் பெற்றது. அதைக் கண்ட இடபம் (காளை) மிரண்டு ஓடியது. இதனால் புன்னகை புரியும் சிவபெருமான் எமைக்காண்க என்பது இப்பாடலின் பொருள். என்ன அழகான செறிவான பாடல்.

திருவடிப்பாட்டு

மகாவித்துவான் தம் வாழ்நாளில் இறுதியாகப் பாடியதும் ஒரு வடமொழி ஸ்லோகத்தின் மொழி பெயர்ப்புப் பாடல்தான். இவ்வுலக வாழ்வை நிற்பதற்கு ஒரு நாள் முன்னர் இவரைப் பார்க்கவந்த அக்னிலிங்க சாஸ்திரிகள் கூறிய சிவானந்த லகரிக்கு உடல்தளர்வுற்ற நிலையிலும் இவர் பாடிய பாடல்

மோகமாம் அடவி திரிந்து அரிவையர்தம்
முலைக் குவட்டிடை நடமாடித்
தாகமார் ஆசைத் தருக்குலந் தோறும்
தாவும் என் புன்மனக் குரங்கைப்
பாகமார் பத்தி நாண்கொடு கட்டிப்
பலிக்கு நீ செல்க யான் கொடுத்தேன்
ஏக நாயகனே தில்லையில் ஆடும்
இறைவனே எம்பெருமானே.

உ.வே.சா எழுதிய நூல் இல்லையானால் இத்தகைய தனிப் பாடல்கள் காலவெள்ளத்தில் கரைந்து போயிருக்கும்.

6: சேக்கிழாரின் செல்வாக்கு

அன்னி தாமசு
சென்னை

கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் தமிழகத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கம், பக்திப் பனுவல்கள், சமய நூல்கள் எனப் பல சேர்க்கைகளைத் தமிழிலக்கியக் களஞ்சியத்திற்கு அளித்தது. சைவத்துக்குத் தொண்டு செய்த சமயக் குரவர், தமிழிலக்கியத்திற்கு அளித்த வளனும் வாழ்வும் காரணமாக, 12-ஆம் நூற்றாண்டில், சேக்கிழார், இவரை நாயன்மார்களை மையக் கருவாக்கிப் பெரியபுராணம் இயற்றி, தரவும் பதிவும் வழங்கினார் 12-ஆம் திருமுறையும் அதனால் உருவாயிற்று.

ஆண்டுகளும், நூற்றாண்டுகளும் கடந்த பின்பும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட (சேக்கிழார் பிள்ளைத் தமிழ், தால்.8) இவரியற்றிய புராண காவியம் சைவ இலக்கிய உலகில் தளராது தொடர்ந்து செல்வாக்குக் கொண்டது. 19-ஆம் நூற்றாண்டில், ஒரு சமய இலக்கியச் சுரங்கமாக வாழ்ந்த மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (6.4.1815-1.2.1876)யிடம் இச்செல்வாக்கு உச்சம் கண்டது.

செல்வாக்கு

முன்னிலக்கியத் தோய்வு, முன்னோர் மொழிகளின் பதிவும் பாதிப்பும், முந்தைய கால இலக்கியச் செயல்நெறிகளின் வழித்தடம்படுதல் என்பன இலக்கிய வரலாற்றுத் தொடர்க் கண்ணியில் பாவாகவும் ஊடாகவும் இழையாகவும் பொருந்துதல் என்பது இயல்பு. கல்வி, சுவை அதாவது ரசனை, பற்று என்பன இத்தகு எடுத்து மொழிதலுக்குக் களன் வழங்கும். முந்தைய காலத்தினது ஆயினும், எக்காலத்திற்கும் (இக் காலம் - தற்காலம்) ஏற்புடைமை என்பதும், எடுத்து மொழிந்தேயாக வேண்டும், எனும் தன்னார்வ உந்துதலும் கூட இத்தகு நிலைக்குத் தளம் அமைக்கலாம். வழங்கிய கருத்தை, உண்மையை, தகவலை இன்னும் வளர்க்க வேண்டும், விளக்க தெளிவுபடுத்த வேண்டும் எனும் வேணவாவும், பிறரோடு புதிய வாசகரோடு - அவையினருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் எனும் துடிப்பும் கூட இதற்கு வழி வகை செய்யும். ஊன்றுவதற்கும், பிடிப்புக் கொள்வதற்கும் இடன் சற்றும் இல்லா மிதவை போலன்றி கடந்ததன் நிஜத் தன்மையில் ஆழ வேரூன்றி நிற்றல், நிலைபேற்றை நிலைத்த தன்மையை வழங்கமுடியும் எனும் எழுதப்படா எதிர்பார்ப்பும் கூட காரணமாகும் எனக் கருதலாம்.

வகை

சேக்கிழாரின் செல்வாக்கு, மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் வெளிப்படும் மூன்று கோணங்களை மட்டும் இங்கே அணுகலாம்.

பீ.3.

ஒன்று, சேக்கிழாரே செல்வாக்குக் கரு ஆவது. மற்றொன்று அவர் படைப்புப் பொருண்மை செல்வாக்குப் பெறுவது, மூன்றாவது, அவரது கூறுமுறை, மொழி - கவிநடை செல்வாக்குப் புலப்படுத்துவது என்பன.

சேக்கிழார்

சேக்கிழார் ஒரு தனி மனிதர். அதிகாரி, அரசில் ஒரு மதி மந்திரி. முதலமைச்சர். அதே வேளை பக்திமான். இறையடியான். இறையனுபவம் பெற்றவர். இறையேற்பும் மீவியல்பும் உடையவராகப் பிறர்க்கு பலர்க்கு வெளிப்பட்டவர். இறையன்பினர் வரலாற்றைப் பிறபல மூலங்களினின்று (திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி) உணர்ந்து, உயிரும் உயிர்ப்பு முள்ள வரலாற்றைக் கதைக்காவியம் புனைந்தவர். இத்தகையவரைப் பாடுதல் என்பது மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்குக் கரும்புண்ணல், ஏற்கெனவே பாடியவர் பிறர் உளர். சேக்கிழார் புராணம்* முன்பே பாடப்பட்டுவிட்டதையும் இவர் தம் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் நூலில் குறிப்பர்.

> **வீங்கு புகழ் படைத்த அருண்மொழித் தேவன்**
> **புராணம் விரித்துரைத்தான் அவன் அடி தாழ்ந்து**
> **என் அறிவிற் கேற்ப மேய பிள்ளைத் தமிழென ஒன்றுரைப்பல்.**
> **(அவை,1)**

> **மெய்ஞ்ஞான அற்புத உமாபதி சிவ னேய மிக**
> **இம்மைக்கும் மறுமைக்கும் ஆதார நிலையது ஈதென்று உணர்ந்து**
> **நினது வரலாறருமை பாராட்டி அருள்செய (செங்கீரை:4)**

இந்தச் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் இறைத் தலைவர்க்கு அளிக்கும் மரியாதையை இறையடியவரைப் பாடியவர்க்கு வழங்கியது பெயர், நாடு, புலமை, வாழ்க்கை என்ற பல கூறுகளின் பதிவை இதில் கவிஞர் வழங்கக் காணலாம். வாழ்க்கை வரலாறாக அன்றி, இலக்கியப் புகழ்ச்சியாக, முன்னிலை வாழ்த்தாக, படர்க்கைப் பரவலாக வியந்து பாராட்டலாக, போற்றித் துதித்தலாக, பெருமை நவிலலாக இவை அமையும்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையைக் கவர்ந்தவர் பலர். நயந்த வரும் பலர் உளர். அதாவது சேக்கிழார் போல் செல்வாக்குக் கொண்டவர். பிறரும் உண்டு. வள்ளுவர், கம்பர், குமரகுருபரர் போன்று பலரை எடுத்து மொழியலாம். எனினும் தொன்முதன்மை பற்றி இது மட்டும் நோக்கப்படுகிறது.

பெயர் - வரலாறு

குடிப்பெயர், இயற்பெயர் ஆகிய இரண்டன் பதிவுகளும் காணப்படுகின்றன.

---

* பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் பராணத்தை பாடியருளிய சேக்கிழாரின் வரலாற்றோடு திருத்தொண்டர் புராண வரலாற்றையும் சேர்த்துக் கூறும் செய்யுள் நூல் இது. இதனைப் பாடியவர் மெய்கண்டத் தேவர் மாணாக்கருள் ஒருவராகிய உமாபதி தேவநாயனார். கொற்றவன் குடி ஊரினர். சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கில் எட்டு நூல்களைப் படைத்தவர் (வாழ்வியல் களஞ்சியம்)

சேக்கிழார் என்பது குடிப்பெயர், அருண்மொழித் தேவர் என்பது இயற்பெயர். வேளாண் மரபினர். தொண்டை மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தார். இரண்டாம் குலோத்துங்கனான (கி.பி.1133-1150) அனபாய சோழனிடம் முதலமைச்சராக ஆற்றிய பணிச் சிறப்பால் உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டப் பெயர் பெற்றார். சிந்தாமணிபால் அரசனுக்கிருந்த நாட்டத்தைத் திருப்ப, சைவ அடியார் வரலாறான பெரியபுராணத்தை, தில்லையில், இறைவன், உலகெல்லாம்... என அடியெடுத்துக் கொடுக்கப் பாடினார். தொண்டர் சீர் பரவுவார் எனும் சிறப்புப் பெயரை மன்னன் இதனால் அளித்தான். வாழ்வின் பிற்பகுதியில் அமைச்சர் பொறுப்பிலிருந்து நீங்கி, தில்லையிலேயிருந்து தொண்டாற்றினார் (வாழ்வியல் களஞ்சியம்) என்ற தகவல்களுள் பல மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் எடுத்து மொழியப்பெற்றுள்ளன.

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ப் பாயிரத்தின் கடவுள் வணக்கமும், அவையடக்கமும் பிறவும் சேக்கிழார் என்ற குடிப்பெயர்க் குறிப்புத் தருகின்றன.

நாமேவும் அம் முதலொடு ஒன்ற வினை உருபு தொக
நான்கன் அடி ஆதி செய்து
நாற் சீரின் நால்நெறி விளக்கி ஒளிர் <u>சேக்கிழார்</u>
நற்றமிழ்க் கவி தழையவே (கு.வா.1)

பரவு சேக்கிழான் எனும் பேர் பரித்தலின் (அவை.1)

வாடுதல் இல் <u>சேக்கிழான்</u> ஆதலால் (அம்புலி.1)

முன்சுட்டியவாறு, அவையடக்கம், அருண்மொழித் தேவன் என இயற்பெயரைத் தந்ததைத் தொடர்ந்து, செங்கீரைப் பருவப் பாடல்கள் (1-5), அருண்மொழித் தேவ என விளித்தும், அம்புலிப் பருவம் முழுமையும் (1-10), அருள் உருத் தேசு பொலி அருண்மொழித் தேவன் எனப் படர்க்கையிலும் குறிப்பிடுகின்றன. குடிப்பெயராகிய பட்டப் பெயரை முதலில் கூறினும், வாய்ப்பேற்பட்டவிடத்து இயற் பெயரைக் கூறியதாக இவை அமைகின்றன. தாய், தந்தை, இளவல் போன்றோர் சார்ந்த குறிப்புகள் இடம் பெறவில்லை.

நாடும் ஊரும்

சேக்கிழாரின் நாடு பற்றிய குறிப்புகள் வெவ்வேறு விதமாகத் தரப்படுகின்றன. முத்தப் பருவம், 'பாலாறு காலாறு பாய் தொண்டை நன்னாட' என நாட்டு வருணனையை, இயற்கை வருணனையைத் தொடர்ந்து தருவதில் (5-10), தொண்டை நாடு புலப்படுகிறது. திருத் தொண்டை நன்னாடு (செங்கீரை.1-5) என்ற நேர்ச் சுட்டுடன், சேரும் பொழிற் றண்டக நாடா (சிற்றில்.1-10), துண்டீர வளநாட (சிறுபறை.1-5) எனப் பிற பொதுப்பெயரால் நாடு சுட்டப்படலும் உண்டு.

சேக்கிழார் குன்றத்தூரினர் என்பதும் பலவாறு வெளிப்படுகின்றது.

திண்கொண்ட குன்றையம்பதி (செங்கீரை.1-5), தண்ணந் துறை சேர் குன்றத்தூர்த் தலைவ (தால்:1-5), சங்கம் மரீஇய குன்றைத் திருமுனி (தால்.6), வெண் சுதை தீற்றிய சுாமரு மாளிகை மேல் கொண்டல் உறங்கும் குன்றத்துாரான் (சப்பாணி:7), குடிகள் நெருங்கும் குன்றத்தூரான் (சப்பாணி:8-10), ஆடு கொடி மாளிகைக் குன்ற நகராளீ (அம்புலி:1-3), செல்வஞ்செருக்கு குன்றை யருட்செல்வா (சிற்றில்:1-10), குன்றைப்பிரான் (வாரானை:1-5), குன்றை முனி (சிறுபறை:1-5), என ஒவ்வொரு அடை, தொடர் வேறுபாட்டுடன் பரவலாக ஊர் வெளிப்படுகிறது. நகரின் நீர்த் துறை, சுதை தீற்றிய மாளிகை, குடிகள், கொடி, செல்வமுடைமை எனப் பல வருணனைக் கூறுகள் இதில் பொருந்துகின்றன.

குலம்

சேக்கிழாரின் குலம் பற்றியும் தகவல் கூறுகிறார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. வேளாளர் குல திலக (செங்கீரை:1-5), வேளாண்மையைக் கருத அமிதானங்கொள் குலமே (சப்பாணி:2), என வருவன உள. இவை தவிர, நீலி கதை வழி, வணிகனுக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றிய எழுபதின்மர் குலத்தவராகவும் காட்டப்படுகின்றார் 'எழுபதின்மர் குலத்தின் உதித்தார் அருண் மழை பெய் கொண்டல்' (வாரானை:6), 'சிறு கோல் கைக்கொள்ளுங் குலத்தில் உதித்த அருட் கொண்டல்' (வாரானை:9), போன்று இது அமையும்.

அன்றியும், 'சேவையர் குல திலகன்' என அரசசேவையில் ஈடுபட்ட பாங்கிலும் குலநிலை விளக்கம் பெறுகின்றது. யாரருளாகர சேவையர் காவல (செங்கீரை:6-10), கொற்றச் சேவையர் காவல நாவல (சப்பாணி:6-10), பரவுசீர் உலகெலாம் விரல சேவையர் பிரான் (முத்தம்:6-10)கரதலச் சேவையர் குல சிகாமணி (வாரானை:1-5), சேவையர் குலாதிபன் (சிறுதேர்:1), போன்றன சான்று.

சிறப்பியல்பு

இலக்கியப் படைப்பின் சிறப்புப் பற்றிச் சேக்கிழாரைப் பலவிதமாக வியந்து பாராட்டலும் செல்வாக்கின் வெளிப்பாடாகும். தமிழ் நாவலரேறு (செங்கீரை:7), சகலாகம பண்டித தெய்வச் சைவா (தால்:1-5), சைவப் பயிர் தழையத் தழையும் புயல் (தால்:6), பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ (தால்:7), தண் தமிழ்க் குன்று (சப்பாணி:1-5), நெஞ்சங் கனியக் கனியக் கண்ணீர் வாரக் கவி பாடிய இறைவ (சப்பாணி:8), சிவமணம் அகலாதே கமழ முதிரும் அருட்கவி பாடிய புலவன் (சிறுபறை:6), செந்தமிழ் மணக்கும் கனிவாய் (முத்தம்:2), கல்லும் கரையக் கவிபாடும் கனிவாய் (முத்தம்:3), கூடு செந்தமிழ் அருமை அறிந்தவன் (வாரானை:3), எனப் பலவாறு இது அமையும்.

வாழ்வியல்

சேக்கிழாரின் வாழ்வியல் எனக் காணும் போது, அதன் மூன்று கூறுகள் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் சிறப்பிக்கப்படுஂ செல்வாக்குக் கொள்வது தெரிகிறது.

ஒன்று அவரது இலக்கிய ஆக்கம்.
மற்றொன்று சிந்தாமணி பற்றிய தகவல்.
மூன்றாவது அமைச்சர் பணி நிலை.

இலக்கிய ஆக்கம்

பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் மாக்கதை இயற்றியது, சேக்கிழாரைத் தனித்துச் சிறப்பிக்கும் அடித்தளமாகும். அற்புத மேவிய தொண்டர் புராணமதருள் கருணைக் கடலே (தால்:6), என எளிய சுட்டாகவும், பிறபலவிடங்களில் (சப்பாணி:9, முத்தம்:1, சிறுபறை:4, 6-10) விரிவாகவும் இச்செய்தி அமையும் கவிஞரின், சொல், பொருள், உத்திச் சிறப்புப் பற்றி விதந்தோதுதல் அவற்றுள் ஒன்று.

சொல்லும் பொருளும் நனி சிறப்பச் சுருங்கச் சொல்லல் முதலாய
தோட்டி அமைய அமங்கலமாம் சொற்கள் புணராது அறக்களைந்து
வெல்லுந் தகைய முரண் காட்டி விலக்கு விலக விதி தழுவி
விரும்பும் மூல இலக்கியமே வேறாகாதென்று உலகு ஏத்த
அல்லும் பகலும் அம்பலவர் அருடற்காய அரும்பணி செய்து
அருள்பெற்று உய்ந்து அடியார்தம் அருமை பெருமை பாராட்டி...
(முத்தம்:3).

இலக்கியச் சிறப்புடன் நூல் அமைந்தது எனவும், சொல்லணி, பொருளணி, வனப்புகள் இயைந்தன எனவும், முப்பொருளும், பொருள்கோடும் அதில் இயன்றன எனவும் எடுத்து மொழிகின்றார்.

ஈற்றுத் தலை ஒரு மவுலி புனைந்தா லென்னச் சொல்லணி ஒன்று
எய்திப் பொலியப் பொருளணி ஆயின எவ்விடனும் வீற்று
வீற்றுக் கிடை இறைபட்டன அமைய விளம்பு வனப்பினொடு
மேய முதற்பொருள் ஆதிய மூன்றும் வேண்டும் இடத்து எய்த
ஆற்றுப் புனல் நாமப் பொருள்கோள் முதல் அறை மற்று உள்ளனவும்
அமையத் தொண்டர் புராணம் நவின்றவ... (தால்:9)

சிந்தாமணி

சேக்கிழார் பெரியபுராணம் இயற்ற அமைந்த சூழலில் சிந்தாமணியின் பங்கு பற்றிய செய்தி, வரலாறு போல் பதிவுபெறுகிறது. சிந்தாமணி படித்திருந்த மன்னனை நல்ல பயன் நூலுக்கு நேராகத் திருப்பும் முயற்சி இது

பயன் இலது ஆகும் சிந்தாமணி வழி படர்தல் எனப் போதித்து
உத்திச் சுமை ஒரு தோள் வைத்திடு புல்உயர்த்தோன் மனம் அடியார்
உறு செயல் நாடப் புரி மதி வலவ... (தால்:8).

எல் ஊரும் ஒண் சிவமணம் கமழ்தல் இல்லாது இயைந்த சிந்தாமணி முதல்
எந்நூற்கும் நெய்தலம் பறை முழக்கேயாக... (சிறுபறை:5)

அமைச்சுப்பணி

அரசத் தொடர்பும் அமைச்சர் பணியும் சேக்கிழார் வாழ்வியலின்

விலக்கவியலாக் கூறுகளாகும். வளவன் விருப்புறப் புராணம் பாடியதுடன் (சிறுபறை:9-10). அவனால் பட்டம் பெற்றதும் எடுத்துக் கூறப்படுகின்றன.

தாங்கும் வளவன் அனபாயன் தன் கண்மணியாய் அவன் அமைச்சர்
தங்கள் சூளாமணியாய் 'உத்தமச் சோழப் பல்லவன்' எனும் பேர்
ஓங்கும்படி கொள் விண்மணியாய் உவக்கும் அடியார் சரித்திரம்
முற்று
உரை செய்தருள் சிந்தாமணியாய் உயர்வு பூண்... (சிற்றில்:6)

என இது புலப்படுத்தப் பெறுகிறது சிந்தாமணி, சூளாமணி எனும் இலக்கியப் பெயர்களைச் சேக்கிழார்க்கே ஆக்கி ஏத்துகிறார் கவிஞர்.

சேக்கிழார் பிள்ளைத் தமிழில் இவ்வாறு பரவலாகவும் பலவகையாகவும் சேக்கிழாரின் செல்வாக்கை மீனாட்சி சுந்தரம் பிள்ளை புலப்படுத்துகின்றார். பாடுபொருள்பால் கொண்ட பற்றும், அவர் கவித்துவத்தின்பால் கொண்ட ஈர்ப்பும் இப்பிள்ளைத்தமிழில் மட்டுமன்றி, பிற பிரபந்த நூல்களிலும், இயலுமிடமெங்கும் அமைந்து காணப்பெறும். சேக்கிழாருக்கு அளித்த தலைமையும் பெருமையும் வேறு நூல்களில் பிரபந்தங்களில் வேறு பலருக்கு, பிறருக்கும் விரியக் கூடும்.

பாடுபொருள்

சேக்கிழார் பாடிய நாயன்மாரும், நாயன்மாரில் சிலரும் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கும் பாடுபொருளும் போற்றிடும் புகழ் மொழியும் ஆகுவது செல்வாக்கின் மற்றொரு பரிமாணமாகும். சேக்கிழார் தம் காப்பியத்தில் சுந்தரருக்கு முக்கியத்துவம் அளித்தது போல, மீனாட்சி சுந்தரம் பிள்ளை அடியவருள் ஞானசம்பந்தருக்கு முதன்மை அளித்ததாகக் கருதலாம். இவரது நூல்களான, மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி, மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆனந்தக் களிப்பு என்பன இந்நிலையின. இவற்றில் சம்பந்தரின் வரலாறு செயல்கள், அருள்விளையாடல் எடுத்து மொழியப்படுகின்றன. நேரடியாகத் தேவாரம் வழியும், தொண்டத் தொகை, அந்தாதி வழியும் இச்செல்வாக்கு மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு வந்திருக்கலாம் என வாதிடல் கூடுமெனினும் சேக்கிழாரின் நயமுறு கூறுமுறையும், எடுத்தாளலும், அடித் தளமும் தூண்டுதலும் வழங்கல் ஆழ் ஆய்வில் வெளிப்படும்.

ஞான சம்பந்தரைத் தனி நிலைத் தலைமையுடன் போற்றுதல் போன்று இல்லையெனினும், பிற பல நாயன்மாரையும் போற்றி மொழிகின்றார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. இதற்குத் தம் பிரபந்தங்களை நற்களனாகக் கொள்கின்றார். இது இவரது தனித்த உத்திமுறையாக அமைகின்றது. திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது, திருவிடை மருதூர் உலா, வாட்போக்கிக் கலம்பகம் போன்ற பல இதற்குத் தளம் வழங்குகின்றன.

வாட்போக்கிக் கலம்பக முதற்பாடலின் ஆசிரியச் சுரிதகம் சைவக் குரவர் நால்வரைக் கூறுவது ஒரு சான்றாம்.

பசித்தழூஉ ஞானப் பால் உண் மழவும்
ஏற்றொரு சூலம் ஏற்ற தோள் அரசும்
அவிர்தரு செம்பொன் ஆற்றிடை இட்டுக்
குளத்தில் எடுத்துக்கொண்ட கோவும்
கனவிலும் அமரர் காணரு நின்னைப்
பரிமா மிசை வரப்பண்ணிய முதலும்..

என இவரை மட்டுமின்றி, இன்னும் பலரை எல்லோரையும், அறுபத்துமுவரையும் கூறவேண்டும் எனும் ஆவல், ஆர்வம், மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு உண்டு. திருவிடை மருதூர் உலாவின் கண்ணிகளில் அங்கிங்காகப் பலரை நினைவுகூர்வார். போற்று புகழ் ஆற்றல் மிகு கண்ணப்பர் (165), தாதை இரு தான் தடிந்த.... ...... சான்றவனும் (207), வாசமுறத் தோய்ந்த புகழ் ஆரூரன் தொண்டத் தொகையுள் நிலைத்து ஆய்ந்த புகழ் மற்றை அடியாரும் (214), என வருவதுடன், அரிவை பற்றிய பகுதியில் இளையான்குடி மாறர், கண்ணப்பர், அப்பூதி, அதிபத்தர், தண்டீசர், ஆனாயர், மூலர், நாவரசு (534-549) எனப் பலரும் குறிக்கப்படுகின்றனர். தலைவனான இறைவனைப் பாடும் போது அவன் புகழ்பேச, அடியவர் புகழ் சேர்க்கப்படும், உத்திநிலையாக இப்பாங்கு பொருந்துகின்றது.

இதன் பெருக்கம் நெஞ்சுவிடு தூதில் அமைகின்றது. பல கண்ணிகள் நாயன்மாரை எடுத்துமொழிகின்றன. தில்லை வாழ் அந்தணர் முதல் வெள்யானைமேல் ஏறியவர் வரை (179-241) விரிவாக, விரைவாக நாயன்மார் செயல்கள் கோவையாக்கப்படுகின்றன.

நற் றில்லை வாழ் அந்தணர் மா தேவனொடும் கலவ
ஒல்லை உயர்ந்ததும்...

எனத் தொடங்கி, நீலகண்டர் (180), இயற்பகையார் (181), இளையான் குடி மாறர் (182), மெய்பொருளார் (183), விறன் மிண்டர் (184), அமர்நீதியார் (185), எறிபத்தர் (186), ஏனாதி நாதர் (187), கண்ணப்பர் (188), எனத் தொடர்ந்து,

திருநீல கண்டர் செழும்பலகை ஏற
ஒரு நீல கண்டர் உவப்பும் - பொருவில்
சடையர் இசை ஞானியார் தாவாப் பெரும்பேறு
அடைய அமைந்த அருளும் - விடையுடையார்
ஆணை மேல் தாங்கி அருள் நாவலூரர் வெள்ளைக்
கோணை மதமா மேற்கொண்டதுவும்..

எனப் பட்டியல் நிறைகின்றது. 'நெஞ்சே, மற்று அனைத்தும் உன்னாலே அன்றோ, மறா நின் சீர் யாவர் வகுப்பர்' என நெஞ்சின் ஆற்றல் விளக்கத்திற்கு மேற்கண்ட இவையனைத்தும் அடையாகின்றன. தலைவன் முடியடி வருணனையிலும் (145-162), அடியவருள இயற்பகையார் (150), கண்ணப்பர் (151), சிறுத்தொண்டர் (160), போன்றோர் செயற்குறிப்புகள்

காணப்படுகின்றன. இவை இயற்பகையார் என்பது போல் வெளிப்படப் பெயர் சுட்டியோ, மழவை அரிந்து ஊட்ட, வேடர் எச்சில் ஊன் அடங்க என்பன போல் பெயர் கூறாது செயல் தந்தோ அமைகின்றன. அடியார் வரலாறிலும் சிவன் அருளிச் செயலிலும் ஆசிரியருக்குள்ள ஈடுபாட்டின் நேர் புலப்பாடு எனவும் இதனை அணுகலாம்.

கவிநடை

சேக்கிழாரின் செல்வாக்கு, கவியாசிரியன், கவிப்பொருள் என அமைந்ததுடன், கவிப்பான்மை எனவும் வருவது புலப்படுத்தற்குரியது. பெரியபுராணத்தின் கவிதைத் தொடர்கள், சந்தம், யாப்பு, கூறுமுறை, உவமை, உத்தி போன்ற பல செல்வாக்குக் காட்டக்கூடும்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழைப் பாடும் போது, அங்கிருந்து ஒரு கை முகந்து கொள்கின்றார். இதன் காப்புப் பருவப் பாடல்கள் பதினொன்றும், பெரியபுராணச் சருக்கங்கள் 2முதல் 12 வரையிலானவற்றின் பெயரை ஒட்டி அமைகின்றன. இவை ஏற்கெனவே திருத்தொண்டத் தொகையின் முதற்குறிப்பாயினமையும் உண்டு. சான்றாக, 3-ஆவதாக இலை மலிந்த சருக்கம் என அமைவது, காப்பின் 2-ஆம் பாடலில் 'இலை மலி எனும் கவியுள்...' எனத் தொடங்கி, தொண்டத் தொகையின் 2-ஆவது பாடலான 'இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்' என்பதை மேற்கோள் ஆக்குகிறது.

திருநாட்டுச் சிறப்பில் சேக்கிழார் அளிக்கும் இயற்கை வள வருணனையின் சொல்லும் சந்தமும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் அவ்வாறே வெளிப்பட்டுச் செல்வாக்குக் காட்டுகின்றது.

> காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
> மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம்நெருங்குவளை
> (பெரிய, திருநாடு 17).

என்பது பெரியபுராணம், மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய குமரகுருபர ஸ்வாமிகள் சரித்திரம் கூறும் பாண்டி நாட்டு வளம் இதனை ஒத்தொலிக்கிறது.

> காலெல்லாம் கருங்குவளை காவெலாங் கனிச்சாறு
> பாலெலாம் கழைக் கரும்பு பாங்கெலாம் மிகத் திருந்தி.. (9)

சச்சிதானந்த தேசிகர் மாலையில் கவிஞர் தரும், 'இரும்பும் அழலும் என்கோ..' 'நீரும் நிழலும் என்கோ' சுவைப்பாலும் நன்னீரும் என்கோ... (88,89) என வரும் வினா அடுக்கு, சேக்கிழாரின், கற்பகத்தின் பூங்கொம்போ... மானிளம் பிணையோ... முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ... (தடுத்தாட்: 140,134,144) என வரும் வினா அடுக்குகளை ஒலிப்பில் நினைவூட்டிச் செல்வாக்குப் புலப்படுத்தும்.

இவ்வாறு, நபர், பாடுபொருள், கவிதை எனும் மூன்றிழையிலும் சேக்கிழாரின் செல்வாக்கு மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் வெளிப்படுகின்றது.

7. சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடுதூது

அனுராதா சீனிவாசன்
சென்னை

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருநாகைக் காரோண புராணம் அரங்கேற்றி வருங்காலம் - திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் சிவபரம் பொருளில் கலந்திட, பிள்ளையவர்கள் பால் பேரன்பு கொண்ட ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஆதீனத் தலைவரானார். அப்பொழுது பிள்ளையவர்கள் தம் அன்பிற்கு அறிகுறியாக இரு நூல்களைப் படைத்து அரங்கேற்றினார்கள். அவை 1, சுப்பிரமணிய தேசிகர் மாலை 2, சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது, இவ்விரண்டு நூல்களாலும் மடத்திலுள்ள பழக்க வழக்கங்களும், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய அருஞ் செயல்களும், கல்வி வளர்ச்சியும், ஞானாசிரியன் திருவருள் நோக்கும், பிறவும் விரிவாக விளங்குகின்றன.

தூது

பழமையான இருக்கு வேதத்தில் சரமா என்னும் நாய் தூது விடப் பட்டதாகக் கூறப்படுகிறது. குணமாலை சீவகனிடத்து கிளியைத் தூது விடுத்தாள். உதயணன் வாசவதத்தையிடம் மானைத் தூதனிப்பினான். நளன் தமயந்தியிடம் அன்னத்தைத் தூதனுப்பினார். அனுமனும், அங்கதனும் இராம தூதர்கள். கண்ணன் பாண்டவர்க்காக தூது சென்றான்.

கலம்பகம், அந்தாதிகளில் தூது ஓர் உறுப்பாக வருதலுண்டு. தேவார, திவ்யப் பிரபந்தங்களிலும் தூது இடம் பெற்றுள்ளது. வள்ளுவர் தூது என்ற தலைப்பில் ஓர் அதிகாரமே வகுத்துள்ளார்.

அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று (குறள் 682)

சங்க இலக்கியங்களில், காமம் மிக்க கழிபடர் கிளவி என்ற துறையில் தூது விடுவதைப் பொருளாகக் கொண்ட பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பின்னாளில் தூது இலக்கியம் 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்றாகித் தனிச்சிறப்புப் பெற்று மிளிர்கிறது. இந்நூல் கலிவெண்பாவினாலே பாடப் பெறும். உமாபதி சிவா சாரியார் தம் ஞானாசிரியர் மறைஞான சம்பந்தர்பால் தம் நெஞ்சினைத் தூது விட்டதாக அமைந்த நூலே இன்று காணைக்கிடைக்கும் தூது நூல்களில் பழமை மிக்கது என்பர்.

"பயில் தரும் கலிவெண்பாவினாலே உயர்திணைப் பொருளையும், அஃறிணைப் பொருளையும் சந்தியில் விடுத்தல் முந்துறு தூது" என இலக்கண விளக்கம், இந்நூலுக்கு இலக்கணம் வகுக்கிறது. தூது

விடப்பெறும் பொருள்களின் பெயர்களை ஒட்டியே இவ்விலக்கியம் பெயர் பெறும்.

இயம்புகின்ற காலத்து எகினம், மயில், கிள்ளை
பயன்பெறு மேகம், பூவை, பாங்கி - நயந்தகுயில்,
பேதைநெஞ்சம், தென்றல், பிரமரம், ஈரைந்தாம்
தூதுரைத்து வாங்குந் தொடை - இரத்தினச்சுருக்கம்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையின், தசவிடுதூதில் இப்பத்தும் அமைந்துள்ளன என்பர். சுப்பிரதீபக் கவிராயர் இயற்றிய விறலிவிடுதூது, அழகர் கிள்ளைவிடுதூது, தமிழ்விடுதூது போன்ற நூல்கள் ஒவ்வொன்றும் தனித்த தொரு சிறப்பினைக் கொண்டொளிர்வன. பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல ஆகவே பணம், துகில், சவ்வாது, நெல், புகையிலை, பழையது, பொன், கழுதை, காக்கை, ரயில், ராக்கெட் விடு தூதுகளும் தமிழுலகில் இடம் பெற்றுள்ளன.

இத்தகு தூது இலக்கியம் தமிழுக்கு மட்டுமா சொந்தம்? இந்திய மொழிகள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளது. வடமொழியில் மகாகவி காளிதாசன் இயற்றிய 'மேக சந்தேசம்' அனைவராலும் பாராட்டப்பெறும் ஒரு நூலாகும்.

உலா, கோவை போன்றவற்றில் நூலுக்கு நூல் செய்தி மாறுபடுமேயன்றி, அமைப்பில் மாற்றமிராது. ஆனால் தூது இலக்கியங்களிலோ தூதுப் பொருள்களுக்கு ஏற்ப செய்தியும், அமைப்பும் மாறும். ஆதலின் ஒவ்வொரு தூது நூலும் புதுமை பொலிய தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. அகப்பொருட்சுவை பொலிய முதற்கண் அமைந்த இவ்விலக்கிய வகை காலத்திற்குக் காலம், ஆசிரியர் கருத்துக்களுக்கு ஏற்ப வேறுவேறு வடிவங் கொண்டு உலாவி வருதல் கண்கூடு.

நூலமைப்பு

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடு தூது நூலமைப்பினைச் சிறிது காண்போம். இந்நூல் 311 கண்ணிகளை உடையது. கலிவெண்பாவால் பாடப்பட்டுள்ளது. பாட்டுடைத் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பெருமை முதற்கண் விரிவாகப் பேசப்படுகிறது. அடுத்து வரும் பகுதி தசாங்கம். பிறகு பாட்டுடைத் தலைவரின் தோற்றப் பொலிவு, அருளாட்சி, செயல்திறன், திருமடத்தில் இருப்போர்கள், அறுபத்து மூவர் அருமை, பெருமை, ஞானாசாரியர் மரபு, மற்றும் நெஞ்சிற்கு அறிவுரை, செங்கழுநீர் மாலை வாங்கி வர வேண்டுதல் முதலியன அணி வகுக்கின்றன.

நூல் தொடக்கம்

குமரகுருபர அடிகளார் திருச்செந்திலம்பதியில் குடிகொண்ட திருமுருகன் மீது பாடிய கந்தர் கலிவெண்பாவின் சொற்றொடரே இந்நூலிலும் முதற்கண் எடுத்தாளப்பட்டுள்ளது. பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறறிய எனத் தொடங்குவார் குமரகுருபரர். பிள்ளையவர்களோ பூமேவு செங்கமலப் பொற்றவிசின் மேயவனும் எனத் தொடங்குகிறார்.

பாட்டுடைத் தலைவர்

குமரகுருபரர் தமது ஞானாசிரியரைச் சிவ பரமாகத் துதித்தது போன்று, பிள்ளையவர்களும் தம் ஞானாசிரியரைச் சிவனாகவே பார்க்கிறார். கொன்றையும், மதியும், சடையும் விலக்கி திரு ஆவடுதுறை செய்தவப் பயனால் தோன்றியதைப் பாடுகிறார்.

ஒருமான் எமக்கொளிக்க ஓர்கை அமரும்
ஒருமான் ஒளித்த ஒருவன்.

மதிமறைத்த மாசு எமக்கு மாற்றியருள
மதிமறைத்த மாசு அடையா வள்ளல்

இருள்கண்ட யாம் அவ் இருள் காணா வண்ணம்
இருள் கண்டம் காட்டாது இருப்போன்

மான் இடனே என்ன மருவி இருந்தாலும்
மானிடனே என்ன வயங்குவான். (கண்ணி:8-11)

மறப்புக் குணத்தை மருவி உழல் எங்கள்
பிறப்புத் தபப் பிறந்த பெம்மான் (22)

சுரவடிவில் எங்கள் மனம் தோயாமை எண்ணி
நரவடிவங் கொண்டு வந்த நம்மான் (26)

திருத் தசாங்கம்

குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பாவும், பிள்ளையவர்களின் நெஞ்சுவிடு தூதும் காட்டும் தசாங்க அமைப்பினைச் சிறிது காண்போம்.

குமரகுருபரர்

1. மலை - இன்பப் பொருப்பு
2. ஆறு - பேரின்ப வெள்ளப் பெருக்காறு
3. நாடு - இன்பம் நல்கும் திருநாடு
4. நகர் - போக்குவரவு அல்லாது உயர்ந்த அணிநகர்
5. குதிரை - ஐந்தெழுந்தைக் கூறி நடாத்தும் குரகதம்
6. யானை- சிவ ஞான கடாக் களிறு
7. தொடை- பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடை
8. கொடி - ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்ந்த வான்கொடி
9. முரசு - நவ நாத மணிமுரசு
10. ஆணை-புவனம் ஆக்கி, அசைத்தருளும் ஆணை

நெஞ்சுவிடு தூது

1. மலை - பெருங்கருணை மாமலை
2. ஆறு - ஆனந்த நதி
3. நாடு - முப்பகுதி மாயை முழு நாடு
4. நகர் - மனமாம் திருநகர்

5. குதிரை - மறைப் பரிமா
6. யானை - ஞான மதவாரணம்
7. தொடை - பாமாலை
8. கொடி - காவிக்கொடி
9. முரசு - நாதமுரசு
10.ஆணை - ஐந்து தொழில் ஆற்றுவிக்கும் ஆணை.

தொண்டர் சீர் பரவுவார்

நம்பி ஆரூரர், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், திருவருட் பிரகாச வள்ளலார் போன்றே பிள்ளையவர்களும் சிவனடிக்கு ஆளாகிய அறுபத்து மூவர்தம் சிறப்பினைப் போற்றிப் பரவுகிறார்.

கோளாளர் நீலகண்டர் கோதை ஒருத்தி புகல்
சூளால் இளமை துறந்ததுவும்.

இளையான்குடி மாறன் . . . .
முளைவாரி அன்னமிட்ட மொய்ம்பும்.

மெய்ப்பொருளார் . . . .
தத்தா நமர் என்றிடை விலக்கு நண்பும்.

கலைமலிந்த கண்ணப்பர் கண்ணிடந்து அப்பியதும்

எறிபத்தர் சீறி இபமாதி மாய்த்ததுவும்

மூர்த்தி மும்மையால் உலகாண்ட சிறப்பும்

ருத்திர பசுபதியார் நீரில் விரவு தவம் செய்த விதமும்.

நமிநந்தியடிகள் நீர்மொண்டு விளக்கெரித்த மொய்வலியும்.

மூலர் மூவாயிர வருடம் அரசின் கீழ்க் குலாவியதும்

சோமாசி மாறர் வன் தொண்டர்க்கு ஆளாகி இன்பம் ததைந்ததுவும்

சாக்கியனார் கல்லால் எறிந்து களித்ததுவும்

சிறுத் தொண்டர் மகவரிந்து கறிசமைத்த தன்மையும்

வாயிலார் மனக்கோயில் பூசித்த மாண்பும்

. . . . .இப்படி அறுபத்து மூவர் வரலாற்றை நம் உள்ளம் கசிந்துருக பிள்ளையவர்கள் இந்நூலில் பாடிப் பரவுவது எண்ணி எண்ணி இன்புறத் தக்கது.

ஞானாசிரியர் திருமரபு

சீகண்ட ருத்திரன் முதலான ஞானாசிரியர் பரம்பரையைப் பிள்ளையவர்கள் போற்றித் துதித்துள்ளார்கள். நந்தியெம்பெருமான் - சனத் குமாரர்-சத்திய ஞான தரிசினிகள்-பரஞ்சோதியார் ஆகிய அகச்சந்தான குரவர்களையும், மெய்க்கண்டார் - அருள் நந்தியார் - மறைஞானசம்பந்தர்

- உமாபதிசிவம் ஆகிய புறச்சந்தான குரவர்களையும், அருள் நமச்சிவாயர் - சிவப்பிரகாசர் - குரு நமச்சிவாயர் - திரு அம்பலவா தேவர் - உருத்திர கோடியார் - வேலப்பர் - குமாரசாமி - மாசிலாமணி - இராமலிங்கம் - ஸ்ரீ சுப்பிரமணி தேவர் ஆகிய ஆதீன குரவர்களின் பொருள்சால் மரபு நிலைமினையும் போற்றிடும் பாங்கு அறிந்து இன்புறத்தக்கது. 'குரு பரம்பரை அகவல்" பாடி ஸ்ரீ மெய்கண்ட தேவர் முதல் வேளூர் சுப்பிரமணிய தேசிகர் இறுதியாக இருந்த ஞானாசிரியர்கள் சிவபதம் அடைந்த மாதம், திருநட்சத்திரம், சமாதித் தலம் முறையே அமைத்துப் பாடியவர் பிள்ளையவர்கள் ஆவார்.

நெஞ்சிற்கு அறிவுரை

நற்செய்தி கூறி ஞானாசிரியத் தலைவரின் செங்கழுநீர் மாலை பெற்று வரச் செல்லும் நன் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் பகுதி இது.

1. உலகாயதரைக் கூடாதே,
2 பவுத்தர் முகம் பாராதே,
3. தலை பறித்து பாயுடுத்தும் அமணரைக் கூடாதே,
4. தாம்பிரமம் ஆகாமை தன்செயலினால் உணரார் நாம்பிரமம் என்பாரை நாடாதே,
5. கள் குடிப்போர் அருகில் செல்லாதே.........

மாசு படுத்தும் தன்மை இவர்களால் உண்டாகும் என்பதால் இவ்வாறு நெஞ்சிற்கு அறிவுரை பகர்கிறார்.

இவ்வாறு செல்லும் தூதுப் பொருளாகிய நன்னெஞ்சம் திருஆவடுதுறையைச் சேர்ந்து, திருவீதியுற்று, குரு நமச்சிவாயர் பரவு கழல் போற்றிப் பணிந்து, குருசாமி கோயில் வலங்கொண்டு அன்பின் வணங்கி, ஞானாசிரியன் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அருகில் சென்று காலம் பார்த்து, இடமறிந்து, கருத்தினைப் பகரவேண்டும் என அறிவுறுத்துகிறார்.

கடனறிந்து காலங் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை. (குறள் 687)

என்னும் நெறியில்

சுருதிப் பொருள் புகல் நேரம் ஆகாது.

மறையோர் குறை தவிர்க்கும் நேரம் ஆகாது.

கற்கும் பாடம் வினாவத் துணியும் காலத்துச் செல்லாதே.

. . . . என்றெல்லாம் நெஞ்சிற்கு அறிவுறுத்தி, காலங்கனிந்தவுடன், படிமிசை விழ்ந்து வணங்கிப் பணிந்து, போற்றித் துதித்துக் கூற வேண்டிய செய்திகளைக் கூற வேண்டும் என்கிறார். போற்றித் துதிக்கும் பாங்கையும் அவரே வெளிப்படுத்துகிறார்.

"நெடிய குணக்குன்றே"- மெய்ஞ்ஞானக் கொழுந்தே! அருட்கடலே! - நன்றே உயிர்க்கு அருளும் நாயகமே!- பெருங்கருணை வாழ்வே!- கைம்மாறு வேண்டாக் கற்பகமே!- எம்பேறே! ஆனந்தப் பெருக்கே! ஞானக்

கருப்பஞ்சாறே!- மெய்யன்பர் தவப்பயனே! அருட்சிந்தாமணியே! - கெழுங்காம தேனுவே! நம் தாபம் தீர்க்கும் தளிச் சுடரே! - நந்தா வர மணியே! கோமுத்தி வாழ்வே! - அருட் சுப்பிரமணிய தேசிகப் பெம்மானே!

என்றெல்லாம் அவர் புகழ் போற்றித் துதித்து, "செங்கழுநீர் மாலை கொண்டு விரைந்து வா" என்று பணிக்கின்றார்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் காணப்படுபவர் யார் யார்?

1. சரியை, கிரியை, தவயோக ஞானம் முறையாய் விரியப் பயிலும் விருப்போர்.
2. மலர் தொடுப்போர்.
3. திரு விளக்கேற்றுவோர்.
4. தியானத்தில் ஆழ்ந்திருப்போர்.
5. சிவசிவ என்று ஆர்ப்போர்.
6. அரஹர என்று ஆனந்தம் போர்ப்போர்.

. . . . . . .பட்டியல் நீள்கிறது. ஞானகுருதேசிகர் ஆற்றலுக்குச் சான்று ஒன்று.

இல்லறத்தாரைத் துறவில் ஏற்றுவிப்பாய் மெய்த் துறவா
நல்லறத்தாரைக் கீழ் நணுகு விப்பாய்,

- தக்கார் துறவு கொள்ளவும், பக்குவம் பெறாதோர் இல்லறத்திலேயே வாழவும் செய்யும் ஆற்றல் கொண்டவர் குருநாதர் என்கிறார்.

"முப்புரம் அவியச் செற்ற சிரிப்பினைப் பாராட்டும் பிள்ளையவர்கள்", ''யோகம் இருநான்கு உன்னை வயப்படுத்துதற்காக முயலுவன அல்லவோ?", என்று கேட்கிறார். 'போகமுறும் தன்மைக்கும், செய்யுந் தவத்திற்கும், கற்றுணரும் நன்மைக்கும், கொள்ளும் ஒரு நட்பிற்கும், வன்மைக்கும், ஈகைக்கும். . . . . . .
நீயே உறுதுணைகாண்' எனப் போற்றுகிறார்.

ஞானாசிரியன் வரவைத் தெரிவிக்கும் திருச்சின்ன முழக்கம் கேளுங்கள்;
திருஆவடுதுறைச் செல்வன் வந்தான் - எம்முள்
ஒருவா ஒருவன் வந்தான் உற்றார் - மருவு
பிறப்பு முழுதொழிக்கும் பேராளன் வந்தான்
சிறப்பரும் செம்மல் வந்தான் திண்பார் - உறப்புகுந்த
துங்கமலி ஞான சூரியன் வந்தான்
பங்கம் அறுக்கும் பரன் வந்தான் - எங்கள்
குருசாமி வந்தான் குணக்குன்று வந்தான்
அருள் ஞானமூர்த்தி வந்தான் அன்பர் - பெருவாழ்வாம்
தம்பிரான் வந்தான் தழை சுப்பிரமணிய
நம்பிரான் வந்தான் நலமாகும் - எம்பிரான்
வந்தான் வந்தான் என்று மாண்பார் திருச்சின்ன
நந்தா வொலி எழும்பி நன்குவர.

311 கண்ணிகளை உடைய இந்நூல் சைவத்தின் மாண்பையும், துறவின்

சிறப்பையும், அடியவர் பெருமையையும், ஞானாசிரியர் திருவருள் நோக்கையும் மற்றும் பல கருத்துக்களையும் விளக்குவதோடு, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் கவித் திறனுக்கும் செய்ந்நன்றி மறவாப் பண்பிற்கும் அணிகலனாய் ஒளிர்கிறது.

<u>சிரபுரச் செம்மல் மாண்பு</u>

அமுதத் தமிழ்நிலவாய் அன்பு விரித்துக்
குமுத மலர்இதயம் கோடி - இமைதிறந்து
முடுமுன்னே வண்ண அணிவகுத்(து) இன்பளிக்கப்
பாடுமையன் சென்நெறியைப் பற்று

நோற்றார், தமிழ்க்காவிய நுண்கலைக் காவிரியை
ஏற்றார் குறுமுனிபோல், எண்ணிஎண்ணி - ஊற்றாய்ப்
பெருக்கியதை பார்க்களித்துப் பின்பற்றும் தொண்டர்
நெருக்கிவரச் செய்தார், நினை.

8. வீரவனப் புராணம் - ஒரு சிந்தனை

முத்து ஆபத்சகாயம்
கும்மிடிபூண்டி.

சைவமும், தமிழும் தழைத்தினிது வளர்க்கும் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் - சிற்றிலக்கியச் செல்வர் - பிரபந்த மாமணி - நாற்கவி வித்தகர் - பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையற்ற மாக்கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் வீரவனப் புராணம் பற்றிச் சிறிது காண்போம்.

பிள்ளைத் தமிழ், அந்தாதி, கலம்பகம், கோவை, உலா, குறவஞ்சி, மாலைகள், பதிகங்கள் எனப் பலப்பலவாம் எழுபதுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியச் செல்வங்கள் பிள்ளையவர்களால் தமிழ் உலகிற்கு அளிக்கப்பட்டுள்ளன. இவர் வடமொழித் தலவரலாற்றைத் தக்கார் வாய்க்கேட்டுத் தமிழாக்கி, கற்பனைச் சிறகுகளால் பறக்கவிட்டவர். தலபுராணங்களை இயற்றத் தொடங்குமுன் அவ்வவ்வூர்ப் பெருமக்களிடம் தல வரவாறுகளைத் தெளிவுபடக் கேட்டும், தலங்களை நேரிற் கண்டும், முந்தைய வடமொழிப் புராண வரலாற்றை அறிந்த பின்னரே நூல் இயற்றத் தொடங்குவது இவரது வழக்கம். பிள்ளை அவர்கள் இயற்றிய, மொழிபெயர்த்த தமிழ்த் தல புராணங்களில் நாட்டு வருணனை, நகர வருணனை முதலிய சிறப்புக்கள் சிறந்த முறையில் அமைந்திருக்கும்.

வெள்ளாறு, திருப் பெருந்துறை, கண்டதேவி, கோயிலூர் இவற்றின் இடையே அமைந்த சிவராஜதானியே வீரவனம் என்றும் திருப்பதி. வீரவனப் புராணம் பதினான்கு படலங்களில் 704 பாக்களால் அமைந்தது. புதுவயல் முருகப்பச் செட்டியார் முதலிய தனவணிகச் செல்வர்களின் ஆவலை நிறைவு செய்யும் பொருட்டுப் பிள்ளையவர்கள் வட மொழித் தல புராணத்தை ஒட்டி, விருத்தப்பாக்களால் பல்வகை அணி நலன்களும் மிளிர இக்குறுங்காவியத்தைப் படைத்துள்ளார்கள். கடவுள் வாழ்த்து, நாட்டுப் படலம், நகரப் படலம் பாடிய பின் வரலாற்றைத் தொடங்குகிறார்.

சூதமாமுனிவர் தம்மைச் சூழ்ந்த நைமிசாரண்ய முனிவர்களுக்குக் கூறுவதாகத் தொடங்குகிறது இந்நூல். வீரவன மகிமை கந்த புராணத்தில் சனத் குமார சங்கிதையில் இடம் பெற்றுள்ளதாக ஆசிரியர் அறிவிக்ககிறார்.

திருத்தலம்	- வீரவனம்
இறைவன் திருப்பெயர்	- வீரசேகரப் பெருமான்
இறைவி	- உமையம்மை
புனித நீர்	- சிவகங்கை
தல விருட்சம்	- வீரை மரம்

வழிபட்டோர்

1. வீரன் எனும் வேடனும், அவன் மனைவி சுமதியும்.
2. சோழமன்னன் கண்டன், மனைவி சுசீலை, மகன் வீரசேகரன்
3. சுகுண பாண்டியன்
4. திருமால்
5. இராமன்
6. குபேரன்
7. ஓர் ஆயனும், ஓர் அந்தணனும்
8. திருப்பெருந்துறை அந்தணர் முந்நூற்றுவர்.

நூல் அமைப்பு

கடவுள் வாழ்த்து

அழகுவிநாயகர், வீரசேகரர், உமையம்மை, சபாநாயகர், சிவகாமி, தென்முகக் கடவுள், வயிரவர், முருகன், நந்திதேவர், அகத்தியர், நால்வர், கண்டேசுரர், அறுபத்து மூவர், பஞ்சாக்கர தேசிகர், அம்பலவாண தேசிகர் மற்றைச் சிவநேசர் துதியுடன் தொடக்கம்.

அவையடக்கம்

ஒரு வேடுவனை ஆட்கொள்ள திருமுடித் தழும்பு பெற்ற இறைவன் சிறியனேன் செவி வெதுப்பும் புன் சொலும் ஏற்பான் - ஓர் அரசனையும், ஒருவேடனையும் முத்தி தர ஆட்கொண்ட தன்மையால் தகுதிசால் பெரியோர் செய்யுட்களோடு என் இழிகவியும் ஏற்பான் - வீரை மரத்தைப் பலாவாக்கிய இறைவன் சிறியேன் செய்யும் வழுக்கவி அனைத்தும் விழுக்கவி யாக்குதல் அருஞ் செயல் அல்லவே, என அவையடக்கம் பாடியுள்ளார்கள்.

உள்ளடக்கம்

நாட்டுப்படலத்தில் மழைவளம், ஐந்திணைவளம், திணைமயக்கமும் விரவிட "கம்பன் கவியோ" எனத் திகைத்திட அமைத்த பிள்ளையவர்கள், திருநகரப் படலத்தில் நகர அமைப்பும், சிறப்பும் விரிவாகப் பாடியுள்ளார்கள். மூன்றாவது நைமிசவனப் படலம்.

இன்பம் வந்து இயைந்த காலும்
அதன் எதிர் மறை என்று ஓதும்
துன்பம் வந்து இயைந்த காலும்
மகிழ்தரார்; துக்கம் மேவார் (பாடல் 13)

இத்தகு பண்புசால் அருந்தவ முனிவர் ஐம்பதின்மர் ஒருங்கு கூடினர் நைமிசாரண்ய வனத்திலே, விறவியை ஒழிக்கும் உபாயம் சிவபுராணங் கேட்டலே என்று ஓர்ந்து சூதமாமுனிவரிடம் உரையாடும் பகுதி:

தானம், யாகம், வாய்மை, துறவு இவ்ற்றுள் சிறந்ததை வினவுங்கால், புராணங் கேட்டலையும், மூர்த்தி, தல, தீர்த்த மகிமை உணர்ந்து சிவப்பதியில் வசிக்கும் மாண்பினையும், சிவப்பதிகளில் சிறந்த வீரவனச் சிறப்பையும் சூதமாமுனிவர் எடுத்துரைக்கிறார். கந்த புராணத்தில் சனத்குமார சங்கிதையின் வழியில் வீரவனம் புராணம் கூறத்

தொடங்குகிறார். எஞ்சிய 11 படலங்களும் வீரவன வரலாற்றை சூதமா முனிவர் கருத்தின்படி தமிழாற் பாடியதாகப் பிள்ளையவர்கள் வாக்கால் அறிகிறோம்.

திருமுடித் தழும்பர்

பல்வகை மரங்களும் செறிந்த வீரவனத்தில் வீரை மரம் ஒன்றின் அடியில் புற்று ஒன்று இருந்தது. புற்றிலே வள்ளிக் கொடி படர்ந்து மூடி இருந்தது. புற்றின் அடியில் சிவலிங்கம் ஒன்றும் இருந்தது. கிழங்குள்ள கொடிகளைத் தேடித் திரிந்து வந்த வீரன் என்னும் வேடன், கிழங்கினை எடுக்க புற்றினைத் தன் கரத்திருந்த இரும்புக் கருவியால் இடித்தான். இரும்புக் கருவி சிவலிங்கத்தின் திருமுடியில் தாக்க, குருதி பெருக்கெடுத்தெழுந்தது. அது கண்ட வீரன் மயங்கி வீழ்ந்தான்.

உடன் வந்த நாய் அவன் மனைவி சுமதியை அழைத்து வர, உண்மை உணர்ந்த அவள், தன் கணவன் உயிருக்காகவும், அவன் அறியாமல் செய்த செயலுக்காகவும் துடி துடித்தாள். அவள் அன்பிற்கு இரங்கிய இறைவன் திருவருளால் வேடன் மூர்ச்சை தெளிந்தெழுந்து, தன் செயலுக்கு வருந்தி வேதனையுற்றான்.

அந்தணர் வடிவில் தோன்றி வீரவன நாதர் பின்வருமாறு கூறுகிறார்:

பரம்பரன் முடியில் தழும்புறச் செய்தேம்
பாவியேம் என்று நீ கவலல்,
பிரம்படித் தழும்பும் வில்லடித் தழும்பும்
பெயர்த்தெறி கல்லடித் தழும்பும்
வரம்பறு சிறப்பில் செருப்படித் தழும்பும் (23)

பெற்றவன் நான். பாண்டியனும், அர்ச்சுனனும், சாக்கியனும், கண்ணப்பனுந் தந்த பிரம்படி வில்லடி, கல்லடி, செருப்படி மட்டுமா பெற்றவன் நான், ஆரிய அரசனால் வாள் வெட்டுத் தழும்பும், தென் திருமுல்லைவாயிலில் குதிரைக் குளம்படித் தழும்பும், குன்ற மருதூரில் பூனைவாய்த் தழும்பும் பெற்றுள்ளேன். இவை போல் பலவும் நமக்குத் திருவிளையாட்டே, எனப் புகன்று, இத்தலத்து இவ்விடத்து எமையும், வடகீழ்ப் புறத்து உமையையும் நித்தமும் வழிபட்டு வருக, 'திருமுடித் தழும்பர்' என்ற சிறப்புப் பெயர் உந்தனாற் பெற்றேன், கவலற்க என்று ஆறுதல் பகர்ந்தார்.

பூம்புகார்ச் சோழனை ஆட்கொள்ளுதல்

"தீராநோய் தீர்த்தருள வல்லான்" திருப்பதிகள் பலவும் பணிந்தேத்தி, வீரவனத் திருப்பதியின் மேற்பால் சோழமா மன்னன் தங்கிய நேரம் - வேட்டுவர் திலகம் வீரவன நாதரைத் தேவியோடு அன்பினால் பணிந்தேத்தி வருங்காலம் - ஆண்டவனுக்கு ஆலயம் இல்லையே என்று வீரன் கசிந்துருகிக் கண்ணுறங்க, வீரவன நாதர் மறையவர் வடிவில் வந்து அவன் கவலை அகற்றிட நினைத்தார். சோழ மன்னன் வருகை கூறி அவனைக் காணச் செய்தார். அவனும் அரசனைக் கண்டு இறைவன் திருவருட் செயலைச் செப்பினான். இறைவன் திருவருட் செயல்களைக்

கேட்ட அரசனது செவிகளில் படர்ந்த தொழுநோய் அகன்றது. வியந்தனர் அனைவரும்.

சிவலிங்கம் கண்டிட எழுந்தான் மன்னன். காலில் படர்ந்த குட்டமும் மறைந்தது. கைகுவித்து வணங்கினான். கையிலும் குட்ட நோய் மறைந்தது. விரைந்து சென்று இலிங்கத் திருமேனியை ஆரத் தழுவினான்; குட்ட நோய் முற்றும் ஒழிந்தது. அற்புதச் செயல் கண்டு மனம் உருகி, அத்தலத்திலே தங்கி அற்புத ஆலயம் அமைத்தான்

பிள்ளைவர்களின் திருவாக்கில் தெய்வத் திருத்தலங்கள்

பூம்புகார் வேந்தன் கண்டன், ஊழ்வினையால் வரப்பெற்ற வெண்குட்டத்தைப் போக்க மணி, மந்திர, ஔடதங்களால் முடியாமல் போன நிலையில் அமைச்சர்களின் அறிவுரைப்படி சிவப்பதிதோறும் சென்று சிவபெருமானை வழிபடுகிறான்.

காசி, கேதாரம், அநேகதங்காவதம், இந்திரநீல பருப்பதம், ஸ்ரீசைலம் ஆகிய வடநாட்டுத் திருப்பதிகளை வணங்கி, தென்னாடடைந்து தொண்டை நாடு, நடுநாடு, சோழவள நாடு, பாண்டி நன்னாடு, கொங்கு நாடு, மலை நாடு, துளு நாட்டுச் சிவாலயங்களைப் பக்தியுடன் பணிந்து வருகிறான்.

இத்தலங்களைச் சிறிதும் விடாமல் இருப்பத்தொன்பது பாடல்களில் பிள்ளையவர்கள் அடுக்கிக் கொண்டே செல்கிறார்கள். மூவர் பாடல் பெற்ற திருத்தலங்களின் பேரில் பிள்ளையவர்களுக்கு உள்ள பற்று பாடல்களாகப் பரிணமிக்கிறது. தேவார வைப்பு நிதியோ?

பதினெண் புராணம்

வட மொழியில் வியாசமாமுனிவரால் பாடப்பெற்ற புராணங்கள் பதினெட்டை வகைப்படுத்துகிறார் பிள்ளையவர்கள் (நைமிச வனப்படலம்).

மறைமுழுதுணர்ந்த தெய்வ வாதராயணன் எங்கோமான்
பொறைமலி .
நா நவின்ற புராணம் ஈரொன்பான்.
சிவ புராணம் பத்து, நெடியமால் புராணம் நான்கு, கமலயோனி புராணம் ஒரிரண்டு, கதிரவன் புராணம் ஒன்று, கடுந்தழற் புராணம் ஒன்று.

- இவை பிள்ளையவர்களின் திருவாக்கு.

நைமிச வனத்தில் சிவபுராணம் கேட்ட முனிவர்கள்

1. பரத்வாஜன் 2. கௌதமன் 3. ஆபஸ்தம்பன் 4. ஜாபாலி 5. துர்வாசன் 6. போதாயணன் 7. நாரதன் 8. மார்க்கண்டன் 9. வான்மீகி 10. அட்டவக்கிரன்

. . . . . ஐம்பதின்மரை ஐந்தே பாடல்களில் கண்முன் நிறுத்துகிறார்.
(நைமிசவனப் படலம்).

வீரை பலாவாகிய அற்புதம்

கண்ட சோழனால் வீரவனப் பெருமை உணர்ந்த சுகுண பாண்டியன்

சுற்றத்தோடு வீரவனம் சென்று, பெருமானை முறைப்படி வணங்கி, சோழன் திருப்பணி கண்டு வியப்பெய்தினான். ஆலயத்தை வலம் வரத் தொடங்கும்போது அவன் உள்ளத்தில் சிறியதொரு ஐயம். கண்ட சோழன் பகர்ந்தது உண்மை தானா? வீரை மரம் பலாவாகித் தனக்குமோர் அதிசயம் உணர்த்துமா? என நினைந்தான்.

ஒரு சுற்று முடிந்து வலம் வருமுன் வீரைமரம் பலாவாக மாறி, பழுத்துக் காய்த்து, நறுமணம் பரப்புவதை உணர்ந்தான். வெடித்துச் சிதறிய பலாச் சுளைகளை எடுக்கவும் துணியாமல் அனைவரும் அதிர்ச்சியால் திகைத்து நிற்கும் போது இறைவன் விண்ணொலி கேட்டு நறுங்கனிச் சுவையுண்டு நோய் நீங்கப்பெற்றான்.உடன் வந்தவர்களும் பலாச்சுளை தின்று தத்தம் நோய் நீங்கி நலம் பெற்றனர். மீண்டும் பலா வீரை மரமாகியது. சுகுணபாண்டியன் வீரவனநாதரைத் தேவியுடன் பணிந்தேத்தித் திருவாலவாய் அடைந்தான்.

குபேரன் தவம்

குபேரன் நான்முகனது கொள்ளுப் பேரன், 'விச்சிரவா' என்பவரின் திருக்குமாரன். தந்தையின் ஆணைப்படி, இவர் பரமனை எண்ணி ஆயிரம் ஆண்டுகள் மேருமலையில் அருந்தவம் இயற்றினான், உமையொரு பாகரைக் கண்குளிர தரிசித்தான். "நின் திருவடிக்கு அன்பும். பெருஞ்செல்வமும், நரவாகனமும், வடதிசை ஆளும் சிறப்பும், புஷ்பக விமானமும் அருள்க" என்று திருவடி பணிந்தான்.

இறைவன் வீரைவனப் பதியின் அடையாளங் கூறி, ஆங்குச் சென்று தவம் இயற்றப் பணித்தான். அவனும் வீரைவனத்தில் நூறு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து அளகாபுரி ஆளுமையும், பிறவும் பெற்றதோடு இறைவனின் தோழமையும் பெற்றான். மேருமலையினும் சிறந்த இடமாக இறைவன் தேர்ந்தெடுத்த புனித பூமி வீரைமரக்காடு எனின் இதன் பெருமை யாவரே உணர்வார்? பிள்ளையவர்களின் நூலின்படி ஆராயின் குபேரன் வட திசை ஆளும் சிறப்புப் பெறுவதற்கு முன்னரே சோழ, பாண்டியர் ஆட்சி தமிழகத்தில் விளங்கிய சிறப்பினை அறிய முடிகிறது.

மூர்த்தி - தலம் - தீர்த்தம்

வீரவன நாதரின் சிறப்பினை - தல மகிமையை - புனித நீர்ச் சிறப்பை பிள்ளையவர்களின் சொற் கருவூலங்கொண்டு விளக்குதற்கு காலமும், இடமும் போதாது.

மூர்த்தி

பூவினுட் கமலம் போலும் பொருப்பினுள் மேரு போலும்
ஆவினுட் காரான் போலும் அறத்துள் இல்லறமே போலும்
காவினுட் கற்பம் போலும் காசினி இலிங்க மாய
தேவினுட் சிறக்கும் வீரைத் திருநகர் இலிங்கத் தேவே,

பூக்களிலே தாமரை போல், மலைகளிலே மேருவைப் போல், இல்லறமே பசுக்களிலே காராம் பசுவைப் போல், அறத்தினிலே இல்லறமே போல்,

சோலைகளிலே கற்பகச் சோலை போல் உலகில் உள்ள இலிங்கங்களில் வீரைமாநகர்ச் சிவலிங்கம் சிறந்து விளங்குகின்றது.

தலம்

வீரைமான் மியம் விழைந்தோர் மேவுவர் சிவசாலோகம்;
வீரைமா தலத்தைக் கண்டோர் மேவுவர் சிவசாமீபம்;
வீரைமா தலம் வசித்தோர் மேவுவர் சிவசாரூபம்;
வீரைமா தலத்(து) இறந்தோர் மேவுவர் சிவக்கலப்பே

வீரைமா நகர் வரலாறு கேட்கும் விருப்பினர் சிவனுலகில் வாழ்வர். வீரைமா நகர் தரிசித்தோர் சிவனருகு செல்வர். வீரைமா நகர் வதிந்தோர் சிவனுருவு பெறுவர். வீரைமா நகர் இறந்தோர் இறைவன் திருமேனியிற் கலந்து அத்தீவைத முக்தி பெறுவர்.

தீர்த்தம்

சிவகங்கையைப் போன்ற புனிதம் மிக்கதால் "சிவ கங்கை" என்றும், சோழ மன்னன் கண்டனால் எடுக்கப் பெற்றதால் "சோழ தீர்த்தம்" என்றும், ஆ தானம் பெற்ற அந்தணனை ஏமாற்றி, பத்துப் பசுக்களைக் கவர்ந்து, பாண்டியன் முன் பொய்பேசி, சிவகங்கையில் மூழ்கி, இரு கண்களையும் இழந்து, அறிவு பெறக் காரணமாதலினால் "சத்திய புஷ்கரிணி" என்னும் மூன்று பெயர்களை உடையது.

இப்புனித நீரைப் பார்த்தாலும், பருகினாலும், தொட்டாலும், இதில் மூழ்கினாலும் தீவினை அனைத்தும் நசித்திடும். "மறையவர் செகுத்தபாவம், பசுக்களை வதைத்த பாவம், குறை தவிர் மகவை, மங்கைமார்களைக் கொன்ற பாவம் நிறையும் எப்பாவமேனும் இணைந்ததில் தோயும் முன்னே" தீயினிற்பட்ட பஞ்சாகம். (பாடல் - 21)

கருதுமத் தீர்த்தம் தோய்ந்த
காற்று மேற்பட்ட போதும்
பொருதுபல் பாவம் எல்லாம்
பொடிப்பொடி யாகும் என்னின்
. . . விதிப்படி வயங்க மூழ்கின்
வெருவுபல் பாவம் எல்லாம்
விளித்திடல் அரிய தாமோ?

- தல முதலிய விசேட படலம் (பாடல்-24)

மாலவன் அருச்சனை

பிருகு முனிவரின் சாபத்தால் மாலவனுக்குப் பத்துப் பிறவிகள் எடுக்க நேர்ந்தது. திருமால் வீரவன நாதரைப் பணிந்து திருவருள் பெற்றார். வீரவசந்தமால் என்றும் திருப்பெயர் சூடி வீரை வனத்திலே தென்மேற்குத் திசையில் கோயில் கொள்ளவும், பத்துப் பிறவியும் பாருக்கு உதவியாக இருக்கவுமான நல்வரம் பெற்றார்.

வீர ராகவன்

திருமால் தசரத குமாரனாய் அவதரித்து, இராவண வதம் முடித்த வரலாற்றைப் பிள்ளையவர்கள் அற்புதமாகச் சுருக்கமாகப் பதினான்கு பாக்களில் பாடியுள்ளார்கள். அகத்தியமாமுனி வீரைமான்மியம் கூறி வீரவனத்தை வழிபட்டுப் பெருவீரனாய் விளங்கத் திருவருள் புரிந்ததாக ஆசிரியர் இயம்புகிறார். இராமன் துதிப் பாடல்களில் ஒன்று.

உருவாகி அருவாகி உரைத்த உப யமும் ஆகி
மருவாகி மலராகி வான் முதற் பூ தமும் ஆகி
கருவாகிக் கண்ணாகிக் கண்ணுள்மணி யாகி நிறை
திருவாகி ஒளிர்வீர சேகர நின் பதம் போற்றி,

தமிழ் அர்ச்சனை

வீரராகவனும், பிறரும், இத்தலத்தில் இறைவனையும், இறைவியையும் போற்றி வழிபட்ட பாடல்கள் தமிழ் அர்ச்சனைக்கு வழிகாட்டியாம்.

சிவார்ச்சனை

1. அருட்பொலி கோவே போற்றி.
2. அமைந்த எட்டுருவாய் போற்றி.
3. அளிகொள் எண்குணத்தாய் போற்றி.
4. கலை பல விரித்தாய் போற்றி.
5. காலற் காய்ந்த காலனே போற்றி.

அம்பிகை திருநாமங்கள்

1. ஆதியே, இருப்பே போற்றி.
2. கலை, மறை முழுதானாய் போற்றி.
3. ஏழுலகு ஈன்ற செல்வியே போற்றி.
4. தெளிவளர் உள்ளத்து ஊற்றெழு அமுதே போற்றி.
5. வழுத்துநர் எய்ப்பினில் வைப்பே போற்றி.

வடநூற் பயிற்சி

பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் பழகிய காலை வட மொழி வல்லுநர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும், வடமொழி நுணுக்கமும் உணர்ந்தனர். பல தலபுராணங்களை வடமொழியிலிருந்து தமிழ்க் கவியாக்கி தமிழுலகில் உலவ விட்டவர் அல்லவா மகாவித்துவான் அவர்கள்.

சிற்சிலோர் நாம் பஞ்சாதி உரைப்போம் என்பார்.
தரமிகு சிற்சிலோர் யாம் சடை உரைத்திடுவேம் என்பார்
நாவறும் சிற்சிலோர்யாம் கணம் புகன்றிடுவேம் என்பார்
சிற்சிலர் கிரமம் எல்லாம் தெரிக்க நாம் வல்லேம் என்பார்
சிற்சிறுலர் கன மீமாஞ்சை செப்ப யாம் போதும் என்றார்
சிற்சிலர் கற்ப முற்றும் தெருட்டுதும் யாமே என்றார்
சிற்சிலர் மங்களானி பவந்து என்பாம் சென்றியாம் என்றார்

- பெருமான் பொதிசோறு நிவேதனம் செய்த படலம்.

ஏற்ற இறக்கத்துடன் - ஸ்வர சுத்தமாக வேதம் பயிலும் முறைகள் பஞ்சாதி, ஜடை, கணம், கிரமம் என்பன. கரும காண்டம் பூர்வ மீமாம்சை, ஞானகாண்டம் உத்தர மீமாம்சை.

சோழர் முடிசூடும் திருத்தலங்கள்

திருவளர் ஆரூர் தெய்வச் சேய்ஞ்ஞலூர் கருவூர் செம்பொற்
குருவளர் உறையூர் பொன்னி கூடு பூம்புகாரோ(டு) ஐந்து
மருவளர் அலங்கல் மோலி வளவர் சூடிடமா மேனும்
முருவளர் புகார் ஐந் துள்ளும் முதற்றென உரைப்பர் ஆன்றோர்.

உளங்கவர் அருஞ்சொற்கள் சில

1. அகர முதல் - சிவ பெருமான், 2. வெளிவாக்கு - அசரீரி, 3. மறைச்சிலம்பு - வேதாசலம் (திருக்கழுக் குன்றம்), 4. சொல் முளை - நெல்முளை, 5. பாதக்காப்பு - காலணி, 6. அரிமகன் - அநுமன், 7. அறக்கடை - பாவம், 8. வெதிர்ங்குழல் மகன் - ஆயன், 9. கண்டு - கற்கண்டு 10. எய்ப்பு - தளர்ச்சி, 11. பூசை - பூனை, அருச்சனை.

முத்தித் தலங்கள்

திருவாரூரில் பிறக்க முக்தி, காசியில் இறக்க முக்தி, காஞ்சியில் வசிக்க முக்தி, அண்ணாமலை நினைக்க முக்தி என்பர் பெரியோர். பிள்ளையவர்கள் இவற்றோடு சிதம்பர தரிசனமும், சேர்க்கிறார். மேலும் (என்றைக்கும்) பக்தி செய்யச் சிறந்தவர்களுக்கு உயர் காளத்தி என்று கூறுவது சிந்தனைக்கு விருந்து.

வள்ளுவரும், பிள்ளையவர்களும்

'அகரமுதல்' எனச் சிவபரம்பொருளைக் குறித்த பிள்ளையவர்கள், 'எண்ணிய எண்ணியாங்கு எய்தி இன்புற' என்றும், 'அன்பெனும் ஒரு தாய் ஈனும் அருள் எனும் ஒரு சேய்' என்றும், 'மானமே உயிரினும் மாண்டது' என்றும் இந்நூலில் குறிப்பிடுகின்றார்கள்.

"பொதுவினா வரும் இகழ்ச்சி எப்புவனத்தும் இல்லை" எனக் கூறி "வள்ளுவர் செய்யவாய் கான்ற மது" எனக் கூறும் போது வள்ளுவன் சொல்லைத் தேன் என இயல்புவது அறிந்து இன்புறத் தக்கது.

கம்பன் பாடலா?

ஆயபல் லறங்களும் அருளின் ஆக்கலால்
பாயபல் லுயிர்களும் பரிந்து காத்தலால்
தீயவெளி வறக்கடை தீரப் போக்கலான்
மேய மூ வரும் பொருஉம் வீரை மாநகர்.

போரெலாம் மஞ்சு துஞ்சும் பொழிலெலாம் மயில்கள் ஆடும்,
நீரெலாம் தீர்த்த மாகும் நிதியெலாம் எங்கும் போர்க்கும்,
தாரேலாம் சுரும்பு மொய்க்கும்; தடமெலாம் கழுநீர் மல்கும்
சீரெலாம் திருந்தக் கொண்ட செம்பியர் புரக்கும் நாடு.

- கம்பநாடன் சந்தக் கவி தானோ. உள்ளம்
கம்பனைத் தேடுகிறது.

சிந்தாந்த கருத்துக்கள்

வேத சாரம் என்று ஓத மேவிய போத ஐந்தெழுத்து
மதி விராவிய சைவமே பொருள்
அவன் அவள் அதுவெனும் அவை கொண்டாட்டுவான்

- எனப் பகர்வதோடு,

நாடு பன்னிரு சூத்திரந்து உட்பொருள் -

என சிவஞான மாமுனிவரின் பன்னிரு சூத்திரத்தைக் காட்டியுள்ளார்கள்.

முன்னவனே முன்னிற்மின் முடியாத தொன்றுண்டோ?

வீரசேகரப் பெருமான் குருந்தவனம் சென்று மறையவர் பிள்ளைகளுக்கு மறை கற்மித்து வரும் காலம் - ஆன்மநாதய்யர் என்னும் பெயருடன் மறையவர்க்கும், அவ்வூர் வேளாண் மக்களுக்கும் ஏற்பட்ட வழக்கில் மறையவர்க்குந் தலைமை தாங்கி, சுகுண பாண்டியன் முன் வழக்குரைக்கப் புறப்பட்டார். போகும்போது கட்டுச் சோறு கட்டிச் சென்று வீரைவன நாதருக்கு அர்ப்பணித்து மதுரை சென்றனர்.

நிலத்தின் அடையாளம் பாண்டியன் கேட்க, எங்குத் தோண்டிலும் நீர் வராது என்றனர் வேளாளர். ஆன்ம நாதய்யரோ தோண்டிய இடமெல்லாம் நீர் பெருக்கெடுக்கும் என்றுரைந்தார். அந்தணர்களுக்குக் கூட ஆன்ம நாதய்யர் பேச்சில் ஓர் ஐயம் தான். பாண்டியன் குருந்தவனம் சென்று இருசாராரோடும் வெட்டிப் பார்க்க வெட்டிய இடமெல்லாம் நீர்ப் பெருக்கு உண்டாக அனைவருமே வியப்புற்றனர். கண்ணுதற்பெருமான் கணத்தில் மறைந்தனர். இத்தகு நீர்ப் பெருக்கெடுத்த குருந்தவனமே மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொண்ட புனிதபூமி, திருப்பெருந்துறை என்ற திருப்பெயர் குருந்தவனத்திற்கு ஏற்பட்ட வரலாறும் இதுவே.

உமையம்பிகையை வழிப்படுவோர் பெறும் பேறு

மகப்பெற வேண்டினாலும், வையத்து நுகரும் போகம்
மிகப்பெற வேண்டினாலும், விண்ணவர் போகம் எல்லாம்
தகப்பெற வேண்டினாலும், தவலரும் பேரா னந்த
நகப்பெற வேண்டினாலும், உமையருள் நயக்க நல்கும்.

நூற்பயன்

இப்புராணத்தைப் படிப்போரும், கேட்போரும் மண்ணுலகும் விண்ணுலகும் போற்ற வாழ்வர். இந்நூல் இருக்கும் இல்லத்தில் செல்வமெலாம் சிறந்து விளங்கும். திருமகள் மனமகிழ்ந்து அமர்த்திருப்பாள் என்பர்.

பிள்ளையவர்களின் ஆழ்ந்தகன்ற தெய்வப் புலமை எக்கோணத்தில் நாம் சிந்திக்கப் புகினும் பரந்து விரிந்து கொண்டே செல்லும். ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்னும் நால்வகைக் கவிபுனை ஆற்றலும் இயற்கையிலேயே அமையப் பெற்றவர் பிள்ளையவர்கள். தமிழன்னைக்கு அவர் சூட்டி மகிழ்ந்த ஆரங்கள் பல. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையற்ற தெய்வ மாக்கவிஞருக்கு திருவாவாடுதுறை ஆதீனமும், உலகத் தமிழ் இயக்கமும் இணைந்து எடுக்கும் தெய்வந் திருவிழாவில் தமிழர்கள் அனைவரும் பங்கு பெற்றுப் பயன் பெறுவார்களாக!.

9. சொல்லாட்சித்திறன்

அ.ஆலிஸ்
திருச்சிராப்பள்ளி

சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் அப்பொழுது அருட்குரவராமிருந்த தவத்திரு சுப்பிரமணிய தேசிக மகா பரமாச்சாரிய மகா சந்நிதானத்தின் முன் அரங்கேற்றினார் என்பது வரலாறு. தமிழன்னையின் மகன் என்று போற்றப்படும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் தமிழ்ப் புலமையைக் காணும் நோக்கில் அவர்தம் சொல்லாட்சித்திறன் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. இதற்காகச் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூல் மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இலக்கியத்தைப் படைக்கின்ற கருவியாக மொழி அமைவதனால், இலக்கியச் சுவைப்பில் மொழியின் பங்கு இன்றியமையாததாகிறது. ஒரு படைப்பின் சிறப்புக்கு அதனுள் பயன்படுத்தப்படும் சொற்களும் இன்றியமையாத காரணங்களாகின்றன. சொற்களின் தேர்வு, பயன்படுத்தும் முறை, புதியனவற்றை ஆக்கும் திறமை, புதிய பொருட்களை ஏற்கும் திறமை முதலியவை இன்றியமையாத நடையியல் உத்திகளாகும் என்பர். (ஜெ. நீதிவாணன், நடையியல், ப.46), தகுந்த இடத்தில் தகுந்த சொற்களைப் பயன்படுத்தினால் இலக்கியப் படைப்பாளி சொல்ல வரும் கருத்து அவர் எண்ணியவாறே இலக்கியம் படிப்பவனைச் சென்றடையும். கருவும் உருவும் பின்னிப் பிணையும்போது ஏற்படும் நடைக் கூறுகளுள் ஒன்றான சொல் பேச எடுத்துக் கொண்ட கருவை நன்கு வெளிப்படுத்த உதவும். மனநிலையின் நெகிழ்ச்சியினை அவரவர் எடுத்தாளும் சொற்களே நன்கு வெளிப்படுத்துகின்றன என்பார் இ. சுந்தரமூர்த்தி. (நடையின் வகைகள், தமிழாய்வு, மு. வரதராசன் நினைவு மலர், ப.87), இவ்வடிப்படையில் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தாம் படைத்த சேக்கிழார் பிள்ளைத் தமிழில் கையாளும் சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கனவாய் அமைகின்றன.

1. தகுந்த அடைமொழிகளைப் பயன்படுத்தியோ அல்லது வேறு வகைகளிலோ ஒன்றனை விவரிக்கும் முறை இலக்கியச் சுவை பயப்பதாய் அமைகிறது.

சான்று.

பார்கொண்ட தொண்டர்வர லாறுசொல் புராணமம்அம்
　　பலவர்அரு ளால் அமைந்த
படிதெரித் திடஉலகெ லாம்எனும்

(காப்புப்பருவம்-பாடல்:1)

என்று சேக்கிழார் பெரியபுராணத்துள் குறிப்பிட்ட அருட் தொண்டர்களைக் குறிப்பிட 'பார்கொண்ட' என்ற அடைமொழியைப் பயன்படுத்துகிறார். சேக்கிழார் பெருமானைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும்பொழுது அவர் தம் வாய் அமிர்தத்தையும் வாய்ச்சொல்லையும் குறிக்கப் பயன்படுத்தும் சொற்கள் குறிப்பிடத்தக்கன. செங்கீரைப் பருவத்தில் உள்ள பாடல்களில் இவ்வருணனைகள் இலக்கிய இன்பம் பயப்பனவாய் அமைகின்றன.

சான்று:

. . . . ஒன்
வாய்கவிச் சுவையொழுக்கு அறிவிப்பது என அமுத
மாட்சிமை ஒழுக்கு எடுப்ப (செங்கீரைப்பருவம்-பாடல்:1)
வாழிய கனிவாய் ஊறல் தேறல்
மார்பின் வழிந்தோட (செங்கீரைப்பருவம்-பாடல்:8)
. . . . எங்கள்
கண்ணில் பொலிசெந் தமிழ்மணக்கும்
கினிவாய் முத்தம் தருகவே (முத்தப்பருவம்-பாடல்:2)

என்ற வருணனைகள் வாய்நீர் முறையே கவிச்சுவையொழுக்கு, தேறல், செந்தமிழ் மணம் ஆகிய இயல்புகளையுடையது என்று பேசுவது நோக்கத் தக்கது.

1.2. சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணத்தில் தொண்டர் தம் அருமை பெருமை இறைவன் அருள் பாலித்தமை, செந்தமிழ் நடை, அடை, பொருளணிச் சிறப்பு முதலியன அடங்கி இருக்க அவற்றை அனபாய சோழன் அகம் நயந்து பாராட்டி மகிழ மேன்மேல் விரித்த பிரானே!, அருண்மொழித் தேவ, செங்கீரையாடி யருளே! எனக் கூற வருமிடத்துச் சேக்கிழாரின் பெரியபுராணம் சைவத் திருமுறைகளில் அடங்கி இருக்கும் பல இரகசியப் பொருட்களை உள்ளடக்கியது என்பதையும் சுட்டிப் பேசுகிறார். இவ்விடத்து,

தமிழ்மறை அடங்குபல மந்தணமும் (செங்கீரைப்பருவம்-பாடல்:3)

என்று மந்தணம் என்ற சொல்லைப் பயன்படுத்திப் பொருளைச் சிறக்கச் செய்கிறார்.

1.3. சேக்கிழார் பெருமான் வேளாண் மரபில் வந்தவர் என்பதனால் சேவையர் காவல! என்ற அடைமொழியைத் திரும்பத் திரும்பப் பல இடங்களில் பயன்படுத்துகிறார்.

1.4. நிருவாண தீக்கை (செங்கீரைப் பருவம்-பாடல்:4). அம்போருகம் (அம்புலிப்பருவம்-பாடல்:2) போன்ற வடசொற்களும் தேவையான மிகச் சிலவிடத்துப் பயன்படுத்தப்படுகின்றன.

1.5. சிவபெருமான் ஞாயிறு போலத் தோன்றியவன் என்று சொல்லுமிடத்து ஞாயிற்றினைச் சிறப்பிக்கக் கங்காதேவியின் மரபிலே பொலியும் ஆயிரம் கதிர்களை வீசும் ஞாயிறு எனப் பேசுகிறார்.

இவ்விடத்து, கங்கையை ஆயிரம் முகக் கங்கை, என்று சிறப்பிப்பது பிள்ளையவர்களின் வருணனைத் திறனுக்குச் சான்றாகும். சேக்கிழாரை சைவப் பயிர் தழையத் தழையும் புயல், என்று வருணிப்பதும் இவ்வகையே (தாலப்பருவம்-பாடல்:6).

1.6. திரும்பத் திரும்ப வரும் சொற்கள்: திரும்பத் திரும்பச் சொற்கள் பயின்று வருமாறு அமைக்கும் இலக்கிய உத்தியை மீனாட்சிசுந்தரம் பிள்ளை கையாளுகிறார். எழு, மணக்கும், எல்லாம், ஆசிரியன், காரி, என்ற ஒட்டு முதலியன திரும்பத் திரும்ப வந்து அவ்வச் செய்யுளுக்கு மெருகூட்டுகின்றன. இவை தவிரவும் 'உம்', 'ஏ', 'ஏம்', 'அர்', 'ஆல்' போன்ற அசைப் பகுதிகள் திரும்பத் திரும்ப வருவதனால் இசைமை தந்து அழகுபடுத்துதலும் காணப்படுகின்றன. ஒரே வாய்பாட்டுச் சொல்லாக வினையெச்சம் அடுக்கி வரல், பெயரெச்சம் அடுக்கி வரல் என்ற அமைப்பும் காணப்படுகிறது.

சான்று:

கறைக்கண்டன் யாப்பின்அய்ந்து அதிகாரி மேல்ஓர்அதி
காரிமலை மங்கையொருபால்
கலந்துஇருக் கவும்நிருவி காரிநிர கங்காரி
காரிஆ காரிநாளும்
மறைக்குஅண்ட அருஞ்சோதி ஓங்காரி அருள்ஏய
ஆம்காரி . . . . . . (காப்புப்பருவம்-பாடல்:8)

என்ற பாடலில் 'காரி' என்ற பெயரொட்டு விகுதியாகத் திரும்பத் திரும்ப இடம்பெற்று சுவை பயக்கிறது.

1.7.பேச்சுவழக்குச் சொற்கள் ஆங்காங்கே சிற்சில செய்யுள்களில் அமைந்துகிடப்பது செய்யுளின் கருத்தோட்டத்தில் எளிமை தருவதாய் அமைகிறது.

அடல்சூழ்ந்த தொண்டர்வர லாற்றுவிரி உலகெலாம்
அறியத் தெருட்டு குரவிற்கு
அமையப் புனைந்ததுகொல் சாதிஅடை யாளங்கொல்
அமையும்எது சொலினும் என்ன (காப்புப்பருவம்-பாடல்:9)

ஓங்குபுலி யூர்க்கோட்டம் மேயகுன் றத்தார்
ஒருத்தரைக் காக்கஎன்றே (காப்புப்பருவம்-பாடல்:4)

கோமான் நீயருளும்
கூலிஎ வன்கொல் (செங்கீரைப்பருவம்-பாடல்:6)

முதலிய அடிகளுள் எது சொலினும் என்ன, 'ஒருத்தரை', 'கூலி', முதலிய சொற்கள் பேச்சு வழக்குச் சொற்களாய் அமைகின்றன.

1.8. வெவ்வேறு முரண்பட்ட சொற்களை அமைத்துப் பொருள் முரண் தந்து, பாடலைக் கவித்துவம் மிளிரச் செய்யும் முறையும் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் பாடல்களில் காணக் கிடைக்கின்ற ஒன்று.

பொய்யடிமை மெய்யடிமை (காப்புப்பருவம்-பாடல்:7) என்பது சான்று, சேக்கிழாரின் குன்றத்தூர் மாளிகைகள் நிறைந்த ஊர் என்பது பற்றிய பின்வரும் வருணனை முரண்சுவை உடையது.

முர்வுஇல் வயிரம் கால்யாத்த
 முழுமா ளிகைபாற் கடல்கடையா
முன்னம் திருமால் உருவொத்து
 முயங்கும் எனவும் அதற்கருகே
பிரிவுஇல் கருநீ லம்குயிற்றும்
 பெருமா ளிகையக் கடல்கடைந்த
பின்னர் அன்னான் உருவொத்துப்
 பிறங்கும் எனவும் அதற்குஅருகே
எரிவில் லிடுசெந் துகிர்மாடம்
 எயில்சூழ் காஞ்சி அடைந்தன்னான்
எய்தும் உருவொத்து (தாலப்பருவம்-பாடல்:4)

1.9. சொற்களை அடுக்கிப் புனையும் மரபும் பக்திச் சுவையை நல்குகிறது.

கனியக் கனியக் கண்ணீர் வாரக்
 கவிபாடிய இறைவ, (சப்பாணிப்பருவம்-பாடல்:8)

பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்
 பாடிய கவிவலவ (தாலப்பருவம்-பாடல்:8)

நெஞ்சம்எப் பொழுதும் நெக்கு
 நெக்கு உருகு வார்மதியும் (வாரானைப்பருவம்-பாடல்:2)

வெம்மையுடை யவர்களொடு மதிதொறும் மதிதொறும்
 விராய்உறவு கொள்ளுவோன்நீ (அம்புலிப்பருவம்-பாடல்:5)

முதலியன சான்றுகள்.

1.10. சைவத் தத்துவங்களை விளக்கும்பொருட்டு வைணவத்தையும் விளக்கிச் சொல்லும் இடங்கள் சில உள. அத்தகைய செய்யுட்களில் வைணவம் பற்றிய சொற்களும் திருமால் குறித்த சொற்களும் இடம்பெறுகின்றன. நாராயண உபநிடதம் (சப்பாணிப் பருவம்-பாடல்:4) கார்கோல மாலோன் (சப்பாணிப் பருவம்-பாடல்:2) போன்ற சொற்கள் சான்று.

இவ்வாறு மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பல்வேறு வகைகளில் சொற்களைக் கையாள்வதன் வாயிலாகச் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் செய்யுள்களில் இலக்கியச் செறிவும் கருத்தோட்ட எளிமையும் ஒருங்கே அமைத்து பக்திச் சுவையைப் பெருக்கி இலக்கிய இன்பம் பயக்கிறார்கள். இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்பன ஒரு சில சான்றுகளே. சேக்கிழார் பிள்ளைத்தமிழின் மாட்சிமைக்குப் பிள்ளையவர்களின் சொல்லாட்சித் திறமும் ஒரு முக்கியக் காரணம் எனில் சரியே.

10. கம்பரும் மகாவித்துவானும்

க. இந்திரசித்து, க. சக்கரபாணி
உடுமலைப்பேட்டை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பனுக்குப் பிறகு தோன்றிய மாபெரும் கவிஞர்களுள் ஒருவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. கம்பன் பத்தாயிரப் பாடல்களை எழுதினார். மீனாட்சி சுந்தரம் அவர்களோ ஏறத்தாழ ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளார். கவித்துவ ஆற்றலில் கம்பனுக்கு இணையாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் விளங்குகிறார். இராமன் பிறந்த அயோத்தியை கம்பன் பாடுவதற்கும் சேக்கிழார் பிறந்த குன்றத்தூரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பாடுவதற்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வதோடு, இவ்விருவரும் தத்தமது பாட்டுடைத்தலைவர்களாகிய கம்பனையும், சேக்கிழாரையும் எவ்வாறு சிறப்பித்துப் பாடுகிறார்கள் என்பதை இக்கட்டுரை ஆய்வு நோக்கில் எடுத்துரைக்கிறது.

அயோத்தி

அயோத்தி நகரத்தை கம்பன் எல்லாச் சிறப்புக்களோடும் படைத்துக்காட்டுகிறார். அயோத்தி நகரத்திற்கு இயல்பாக இல்லாத சிறப்புக்களையும் இருப்பதாக சேர்த்துப் பாடுகின்றார். கவிஞர்கள் எப்போதும் உயர்ந்த இலட்சியத்தை பின்பற்றுவார்கள். எப்போதும் கனவு காண்பார்கள். தாங்கள் காணும் கனவுகளையும் உன்னதமான கற்பனைகளையும் தங்கள் படைப்பில் புகுத்தி விடுவார்கள். இதனை மேலைநாட்டார் கற்பனாவாதம் (Utopia) என்று கூறுவர். கம்பர் நகரப் படலத்தில் அயோத்தி நகரத்தின் சிறப்புக்களையும் உயர்வுகளையும் எண்ணற்ற பாடல்களில் எடுத்துரைக்கின்றார். அவற்றுள் ஒரு பாடலே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அயோத்தியின் சிறப்பு, மதிலின் மாட்சி, அகழின் சிறப்பு, சோலையின் பெருமை, எழுநிலை மாடங்கள், மாளிகைகளின் அமைப்பு, கொடிகளின் காட்சி, மாளிகைகளின் ஒலிச் சிறப்பு, ஆடல் பாடல், விளையாட்டுகள், மகளிரின் அழகு, மாந்தரின் மகிழ்ச்சி, மாடங்களின் கொடி போன்ற அயோத்தியின் அனைத்து வகையான சிறப்புக்களையும் உயர்வுகளையும் கம்பர் நகரப் படலத்தில் மிக விரிவாக விளக்கிக் கூறியுள்ளார். அவற்றுள் கீழ்க்கண்ட ஒரு பாடலில் அயோத்தி நகரத்தை கம்பர் எவ்வாறு வர்ணித்துள்ளார் என்பதைக் காண்போம்.

நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ
　　நிறைநெடு மங்கல நாணோ
இலகு புண் முலைமேல் ஆரமோ உயிரின்
　　இருக்கையோ திருமகட்கு இனிய
மலர் கொலோ மாயோன் மார்பில் தன் மணிகள்
　　வைத்த பொற்பெட்டியோ மலரோன்
உலகின் மேல் உலகோ ஊழியின் இறுதி
　　உறையுளோ யாது என உரைப்பாம். (கம்ப. பால. நகரப்:95.)

என்னும் பாடலில் அயோத்தி நகரம் நிலமகளின் பெருமைகளோடும் திருமாலின் உயர்வுகளோடும் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. அயோத்தி நகரம் நிலமகளின் முகம், திலகம், கண், மங்கல அணி, மாலை, உயிர், தாமரை, ஆகியவைகளாக உருவகப்படுத்திக் கம்பர் கூறுகின்றார். அஃதே போல் திருமாலின் மார்பில் உள்ள பொற்பேழையாகவும் வைகுந்தமாகவும் உயிர்கள் தங்கும் வயிராகவும் அயோத்தி மாநகரம் வர்ணித்துக் கூறப்பட்டுள்ளது. நிலமகள், திருமால் என்னும் இரண்டு தெய்வங்கள் தங்கியுள்ள இடமாக அயோத்தி நகரத்தை கம்பர் குறிப்பிட்டுள்ளார். அயோத்தி நகரத்தின் பெருமையை விளக்குவதற்கு இல்லாததை இருப்பதாகப் படைத்துக் காட்டும் 'படைப்புக் கற்பனை(Creative Imagination) முறையை கம்பர் கையாண்டுள்ளார். நிலத்தை பெண்ணாக உருவகப்படுத்தி வழிபடுவது வளமை வழிபாட்டின் (Fertility cult)மரபாகும். இந்த அடிப்படையிலேயே கம்பர் அயோத்தி மண்ணை பூமாதேவியின் திருமுகமாக உருவகித்துக் கூறுகின்றார். நிலத்தை பெண்ணாக வழிபடுவது தொடக்கக்கால (Primitive stage)மக்களின் வழிபாட்டு முறையாகும். மனித உடலில் மிகவும் முதன்மையான உறுப்பாக விளங்குவது கண்களாகும். அயோத்தி நகரம் நிலமகளின் கண்ணைப் போல் திகழுகின்றது. ஒரு பெண்ணிற்கு தாலி என்னும் மங்கல அணி மிகவும் இன்றியமையாததாகும். அது அவருடைய உயிருக்கு நிகரானது. அதைப் போல அயோத்தி நகரமும் உள்ளது என்று கம்பர் கூறுகின்றார். அஃதன்றியும், திருமகள் மிகவும் விரும்பி உறையும் தாமரைப் பூவைப் போன்று விளங்குகின்றது அயோத்தி நகரம் என்றும் குறிப்பிடுவதோடு எல்லோரும் விரும்பும் "வைகுந்தரமாகவும்" இருக்கின்றது என்று கம்பர் சுட்டிக்காட்டுகின்றார்.

குன்றத்தூர்

கம்பர் எவ்வாறு அயோத்தி நகரத்தைப் பாடுகின்றோரோ அதைப்போலவே மகாவித்துவான் மீனாட்சி சுந்தரமும் சேக்கிழார் பிறந்த குன்றத்தூரை மிக உயர்வாகப் பாடுகின்றார். கம்பர் அயோத்திக்கு இறை இயல்புகளை ஏற்றிப்பாடுகிறார். ஆனால் மகாவித்துவான் சேக்கிழார் பிறந்த குன்றத்தூரை மிகவும் இயல்பாகப் பாடுகின்றார். சேக்கிழார் பிள்ளைத்தமிழில் மகாவித்துவான் அவர்கள் பின்வருமாறு பாடுகின்றார்.

சோறு மணக்கும் மடங்க ளெல்லாம்
தூய்மை மணக்கும் சிந்தை யெல்லாம்
சுவண மணக்கும் ஆடை யெல்லாம்
தொங்கல் மணக்கும் தோள்க ளெல்லாம்
சேறு மணக்கும் கழனி யெல்லாம்
செல்வம் மணக்கும் மாட மெல்லாம்
தென்றல் மணக்கும் மேடை யெல்லாம்
தெய்வம் மணக்கும் செய்யு ளெல்லாம்
நீறு மணக்கும் நெற்றி யெல்லாம்
நெய்யே மணக்கும் கறிக ளெல்லாம்

நெருப்பு மணக்கும் குண்ட மெல்லாம்
நேயம் மணக்கும் வீதி யெல்லாம்
சாறு மணக்கும் குன்றத்தூர்

மடத்தில் சோறும், மனதில் தூய்மையும், உடையில் பொன்னும், தோளில் மாலையும், கழனியில் சேறும், மாடங்களில் செல்வமும், மேடைகளில் தென்றலும், செயல்களில் தெய்வத்தன்மையும், நெற்றியில் நீறும், உணவில் நெய்யும், குண்டத்தில் நெருப்பும், வீதிகளில் நேயமும் நிறைந்திருக்கும் குன்றத்தூர் என்று மகாவித்துவான் குறிப்பிடுகின்றார்.

அன்றைக்கு இருந்த மடங்களில், ஏழைகள், வழிப்போக்கர்கள் மற்றும் வந்து தங்குவோர் அனைவருக்கும் இல்லையென்று கூறாது உணவு வழங்கப்பட்டது. இதை நேரில் இருந்து கண்ட அனுபவத்தால் மகாவித்துவான் இயல்பாக பாடுகின்றார். மடங்களுக்கும் அவருக்கும் இருந்த தொடர்பை,

“தமிழ்ப் புலமையும், வட மொழியறிவும் சித்தாந்தச் செம்மையும் பெற்றிருந்த அருளாளர்கள் ஆதீனப் பொறுப்பில் வீற்றிருந்ததை அறிந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தமது இளமைக் காலத்திலேயே, திருவாவடுதுறை ஆதீனத்துடன் தொடர்பு கொண்டார். அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர் ஆகிய ஆதீனகர்த்தாக்களுடன் நெருங்கியும், நெஞ்சார்ந்தும் தமிழுறவு கொண்டார் பிள்ளைவாள் பின்னே, ஆதீனப் புலவராகவே பிள்ளைவாள் நியமிக்கப் பெற்றார். திருவாவடுதுறை ஆதீனப் புலவராக விளங்கிய அத்தமிழ்ப் பெரியாரின் தமிழ்ப்புலமை, தமிழ்த் தொண்டு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மகாவித்துவான் எனும் விருதளித்துச் சிறப்புச் செய்தது திருவாவாடுதுறை ஆதீனம்” என்று கூறுவர் குன்றக்குடி பெரியபெருமாள், (தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள், பக் 39.) “சேறு மணக்கும் கழனியெல்லாம், செல்வம் மணக்கும் மாடமெல்லாம்” என்னும் வரிகள் மூலம் குன்றத்தூரிலிருந்த செல்வச் செழிப்பையும், தெய்வம் மணக்கும் செய்யுளெல்லாம், நீறு மணக்கும் நெற்றியெல்லாம், நெருப்பு மணக்கும் குண்டமெலாம் என்பன போன்ற வரிகள் மூலம் குன்றத்தூரில் நிலவிய பக்திச் சிறப்பையும் மகாவித்துவான் எடுத்துரைக்கின்றார்.

கம்பர் அயோத்தியை நிலமகள், திருமகள், திருமால் போன்ற தெய்வங்களின் தன்மைகளோடு இணைத்துக் காட்டுகிறார். மகாவித்துவான் குன்றத்தூரின் நிலவும் தெய்வத் தன்மை பொருந்திய செயல், திருநீறு, மணக்கும் நெற்றி, வேள்விக் குண்டத்தில் நிறைந்திருக்கும் நெருப்பு ஆகியவைகளை சுட்டிக்காட்டி அவ்வூரில் உள்ள பக்திச் சிறப்பை எடுத்துரைக்கின்றார். கம்பரும், மகாவித்துவானும் பாட்டுடைத் தலைவர்களின் ஊரைப்பாடும் போது பக்திச்சிறப்பை எடுத்துரைப்பதில் ஒன்றுபடுகிறார்கள். கம்பர் அயோத்தியை மிகையாக பாடுகின்றார். மகாவித்துவான் குன்றத்தூரை இயல்பாகப் பாடுகின்றார். மகாவித்துவானுடைய கவிதைகளில் கம்பனின் கவிதைத் தாக்கம்(Impact) மிக்கிருப்பதைக் காணலாம். கம்பன் கவிதைகளில் சந்தநயம்

மிகுந்திருப்பதைப் போலவே மகாவித்துவானுடைய கவிதைகளிலும் சந்த நயம் இருப்பதைக் காணலாம்.

இராமன்

மானிட அவதாரமாக வந்த தெய்வமாகிய இராமனை கம்பர் எண்ணற்ற பாடல்களில் புகழ்ந்து கூறியுள்ளார். இராமனின் வீரம், புகழ், கொடை, கருணை, பிறர்க்கு அடைக்கலம் தரும் பாங்கு ஆகிய பண்புகளை இராமாயணம் முழுவதும் கம்பர் வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக, கீழ்க்கண்ட ஒரு பாடலில் இராம அவதாரத்தின் நோக்கத்தையும் உயர்வையும், ஒருங்கே காணலாம்.

இவ்வண்ணம் நிகழ்ந்தவண்ணம் இனி இந்த உலகுக்கெல்லாம்
உய்வண்ணம் அன்றிமற்றோர் துயர்வண்ணம் உறுவதுண்டோ?
மைவண்ணத்து அரக்கிபோரில் மழைவண்ணத்து அண்ணலேயுண்
கைவண்ணம் அங்குக்கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்

(கம்ப. பால. அகலிகைப். 481)

இராமன் அவதரித்த பிறகு உலக உயிர்களெல்லாம் துன்பத்திலிருந்து விடுதலை பெறும். தீயவளாகிய தாடகையை கைஅம்பினால் கொன்றழித்தான். நல்லவளாகிய அகலிகையை பாதத்துகள்களின் மூலம் காப்பாற்றினான். அதாவது நல்லவர்களைக் காப்பதும் தீயவர்களை அழிப்பதுமே இராம அவதாரத்தின் நோக்கம் என்பதை மேற்கண்ட பாடல் எடுத்துரைக்கின்றது.

சேக்கிழார்

கம்பரின் பாட்டுடைத்தலைவனாகிய இராமன் கடவுள் அவதாரம். மகாவித்துவான் பாட்டுடைத்தலைவனாகிய சேக்கிழார் மனிதர். கம்பர் இராமனின் பெருமைகளை எடுத்தியம்புவதைப்போலவே மகாவித்துவானும் சேக்கிழாரின் பெருமையை மிகச்சிறப்பாக எடுத்துரைக்கின்றார். கீழ்க்கண்ட பாடலில் சேக்கிழாரின் பெருமையை மகாவித்துவான் சிறப்பாகக் கூறுகின்றார்.

ஒப்பரிய தொண்டர்தம் அருமையும் பெருமையும்,
உவக்கும்அவர் தம்செய்கையும்,
உவமையில் லாச்செய்கை நுட்பமுந் திட்பமும்
உம்பர்கோன் அருள்தட்பமும்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையும் அடையும்
தவாப்பொருள் அணிச்சிறப்பும்
தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும்வெற் பெனவிளங்க,
வெப்பரிய முழுமதிக் குறை நிழற்று அனபாயன்
மேயவவை யகநயந்து
வியந்துமெய்ப் பாட்டினொடு பாராட்டி மகிழமேன்
மேல்விரித் தருளியபிரான்

செப்பரிய குன்றையம் பதியருண்மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே!

சேக்கிழார் பெரிய புராணத்தில் ஆண்டவனை விட அடியாரையே மிகுதியாகப் பாடியுள்ளார். ஆடம்பரமற்ற எளிய வாழ்வு, வேண்டுதல் வேண்டாமை கடந்த நிலை, குறிக்கோள் வாழ்க்கை, இறையன்பு, தொண்டு மனப்பான்மை ஆகிய பண்புகள் ஒட்டு மொத்தமாகக் காணப்பெற்றமையின் சேக்கிழார் இவர்களிடம் ஈடுபட்டார்" என்று அ.ச.ஞானசம்பந்தன் (சேக்கிழார் தந்த செல்வம், ப.56) குறிப்பிடுகின்றார். சேக்கிழார் தமிழ் மொழியை நடை நயம், தொடை நயம், அணி நயம், பொருள் நயம் தோன்ற கையாளும் திறத்தையும் மகாவித்துவான் புகழ்ந்து கூறுகின்றார்.

"நவீன கம்பர் என்று புகழப்பெற்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பாடிய பாடல்களில் கம்பனின் கவிதைச் சாயலும் தாக்கமும் காணப்படுகின்றன. கம்பரைப் போலவே உணர்ச்சிக்கேற்ற யாப்பில், சந்த வடிவத்தில் கவிதைகளை மகாவித்துவான் பாடியுள்ளார். குறிப்பாக, பின்வரும் நான்கு நிலைகளில் இருவரிடமும் ஒற்றுமை காணப்படுகிறது.

1. இராமன் பிறந்த அயோத்தியைப் பாடும் போது,
2. சேக்கிழார் பிறந்த குன்றத்தூரைப்பாடும் போது,
3. இராமனின் பெருமையை சிறப்பித்துக் கூறும் போது,
4. சேக்கிழாரின் பெருமையை சிறப்பித்துக் கூறும் போது.

கம்பர் அயோத்தியை நிலமகள், திருமகள், திருமால் ஆகிய க்டவுளரின் தன்மையோடு இணைத்துக் கூறுகின்றார். மகாவித்துவான் குன்றத்தூரைக் குறிப்பிடும் போது அங்குள்ள பக்திச் சிறப்பை எடுத்துக் கூறுகின்றார். கம்பரிடம் மிகைக் கடற்பனைக் காணப்படுகின்றது. மகாவித்துவானிடம் இயல்பு நவிற்சி கற்பனைக் காணப்படுகின்றது. இராமனின் பெருமையை கம்பரும் சேக்கிழாரின் பெருமையை மகாவித்துவானும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளனர். எண்ணிக்கையிலும், பாடு பொருளிலும், கவித்துவ ஆற்றலிலும் கம்பரைப் போலவே மகாவித்துவான் மீனாட்சி சுந்தரமும் விளங்குவதால் இவரை 'இன்னொரு கம்பர்' என்று கூறுவது சாலப் பொருத்தமானதே ஆகும்.

11. கவிஞரின் கவித்திறன்

மொ. இரவிக்குமார்,அ.ஷோபனா
கோவை

பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப்பாடிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றில் தம் அடிச்சுவட்டை ஆழப்பதித்துச் சென்ற பெருமைக்குரிய புலவர் தான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். இவர் காவிய அமைப்பிற் கம்பராகவும், பக்திச்சுவை பாடுவதில் தெய்வச் சேக்கிழாராகவும், இலக்கணச் செறிவோடு கூடிய கவிதை ஓட்டத்தில் கச்சியப்ப முனிவராகவும் விளங்கியவர். 19-ஆம் நூற்றாண்டின் கம்பன், தமிழ்க்காளிதாசன், நிமிடகவி, புராணம் பாடும் புலவன், தமிழைக் காத்த பெருமான், புலவர் முதல்வன், கவிக்கார்மேகம், செந்தமிழ்குருநாதன், சிவநெறிச் செல்வன், விற்பன சிகாமணி, கருணை மூர்த்தி, இணையிலாப்புலவன், மெய்ஞ்ஞானக்கடல், புலவர் ஏறு என்றெல்லாம் புகழப்பட்டவர் மகாவித்துவான் சுந்தரம்பிள்ளையவர்கள்". கம்பனுக்குப் பிறகு ஒரு பெருங்கவியைச் சொல்லவேண்டுமானால் பல்லாயிரக்கணக்கான பாடல்களையும் பாடி தம் நாத்தினவைத் தீர்க்க முயன்ற இவரைத் தவிர வேறு யாரைக் கூறவியலும்" என்கிறார் உ.வே. சாமிநாதய்யர். (மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம். பா.11. ப.2781). இவர், மாணக்கருடைய அறிவாகிய நிலத்தில் அன்புநீர் பாய்ச்சி, கவிதை வித்திட்டு தமிழ்ப்பெரும் பயிரை வளர்த்த சொல்லேர் உழவராவார். அவர்தம் கவித்திறன் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகத் திகழ்கின்றது.

கவிஞன் என்போன் தான் நினைப்பதை நினைத்தபடியே வெளியிடுவதும், அதனைப் படிப்பவரையும், கேட்பவரையும் தான் உணர்ந்த வண்ணமே உணர வைப்பதும் மிக மிக இன்றியமையாத ஒன்றாகும். அவ்வாறு தமது கருத்துக்களை, எண்ண எழுச்சிகளை, உணர்ச்சிக் கூறுகளைத் தக்க வடிவங்கள் மூலம் வெளியிடுவதற்குக் கவிஞர்கள் பல உத்திகளைக் கையாளுகின்றனர். உவமை, உருவகம் முதலான அணிகள், வருணனை, கற்பனை முதலான உத்திகளைப் பயன்படுத்தி உணர்த்த முற்படுகின்றனர். மீனாட்சி சுந்தரனாரும் தம் பாடல்களில் அவற்றைக் கையாண்டுள்ள திறம் வியப்பிற்குரியதாய் அமைந்துள்ளது. "ஈற்றுத் தலையொரு மவுலி புனைந்தாலெனச் சொல்லணி ஒன்றெய்திட் பொலிய பொருளணியின் எவ்விடனும் வீற்று வீற்றுக் கிடை இறைபட்டன அமைய விளம்பு வனப்பினொடு மேய முதற்பொருள் மூன்றும் வேண்டுமிடத்தெய்த" (சேக்கிழார் பிள்ளைத்தமிழ், தால்:9). வேண்டும் எனச் செய்யுளுக்கு இலக்கணம் கூறும இவரின் பாடல்களே அதற்கு இலக்கியமாய் அமைகின்றன.

உவமை

. . . . . . கங்குலொரு
வனம்போல் வளைவுற்றது அம்புலி வெம்புலி மானுவதே (41).

என்று, சீர்காழிக்கோவையில் இருளை வனமாகவும், நிலவை அதில் திரியும் கொடிய புலியாகவும் கண்படை பெறாது கங்குல் நோதலை விளக்குகின்றார்.

இரும்பைச் சிதல் சென்றறிக்குமோர் (55).
எனும் உவமையில் உலகவழக்கையே உவமையாக்கியுள்ளார்.

நண்பா சென்றனுமன் இராகவன் சிந்தைதுயர்
கொன்றாலென என்மனத் துயர் யாவையும் கொல்லுவையே (57)

என்ற வரிகளில் கம்பஇராமாயணக் கதையையும்

வரியேல் மதர்விழிச் சங்கிலி காண மகிழடியில்
பிரியேனென் றோதிப் பிரிந்து வன்தொண்டர் முன்
பெற்றதையான் தெரியே னலேன் (30)

எனும் வரிகளில் பெரியபுராண வரலாற்றையும் உவமையாகக் கொண்டுள்ளார்.

“காவிரியில் புதுவெள்ளம் பெருக்கெடுத்து வருகின்றது. அதனைக் கண்ட உழவர்கள் உள்ளம் மகிழ்கின்றனர். அது எவ்வாறு இருந்தது என்றால் திருநாவுக்கரசரைக்கண்டு அப்பூதியடிகள் மகிழ்ந்ததைப் போலவும், மாணிக்கவாசகர் குருந்த மரத்தடியில் எழுந்தருளிய சிவபெருமானைக் கண்டு மகிழ்வுற்றதைப் போலவும் இருந்தது” (திருக்குறுக்கைப் புராணம், பா.46). எனச் சைவசமயக் குரவர் இருவருடைய வரலாற்றினை உவமையாகச் சுட்டுகின்றார்.

உருவகம்

தொண்டர் உளக்கோயிற் கமைந்த விளக்கே
(திருவெண்ணீற்றுப் பிள்ளைத்தமிழ், முத்-1.)

பூங்கா வனக் குயிலே (மி. சு. பிள்ளை சரித்திரம், ப. 208.)

என்பன போன்ற உருவகத் தொடர்களை அமைத்து நம் உள்ளத்தை உருக்குகின்றார்.

சொல்லணி

சொல்லணிக்கென்றே இவர் இயற்றிய புராணங்கள் அனைத்திலும் “நைமிசப் படலம்” என்ற ஒன்றையமைத்து அதில் சொற்சிலம்பம் ஆடுவதில் கைதேர்ந்தவர் பிள்ளை அவர்கள்.

மூவர்தானை முத்தானை (பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி, பா:34.)
ஆலடிவாழ் அரசடியை (அம்பர்ப் புராணம்)

எனும் இடங்களில் மடக்கணியை அற்புதமாய் அமைத்துள்ளார்.

மாலெச்சிலைச் சுற்று முனியெச்சில் தோன்றியொடு
மாகுனத்தெச்சிலனாய் (அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், முத்.1).
மால் எச்சில் - பூமி; முனிஎச்சல் - கடல்.

எனும் அடிகளில் சொற்பொருள் பின்வருநிலையணியை அஃமைத்து சிறப்புச் செய்கிறார்.

சொல்விளையாட்டாடுவதில் இவர் வல்லவர் என்பதை அவர்தம் பாடல்வரிகளே புலப்படுத்தி நிற்கின்றன.

அரிதகி வனத்தில் ஐய எம்வினையை
அரி தகி என்று வருவார்

என்ற திருக்குறுக்கைப் புராணவரிகள் இதற்கு தக்க சான்றாய் அமைகின்றன.

(அரிதகி - கடுமரம்; அரி - நீக்கு; தகி - எரித்துவிடு)

வருணனையும், கற்பனையும்

வருணனையை இவர் பலவாறாகக் கையாளுகின்றார். பலதிறன்கள் பொதிந்துள்ள இவரது பாடல்களில் வருணனையும், கற்பனையும், சிறப்பிடம் பெறுகின்றன.

சாலெலாம் றெண்டரளம் தளையெலாஞ் செஞ்சாலி
காலெலாம் கருங்குவளை காவெலாங் கனிச்சாறு
பாலெலாங் கழைக்கரும்பு பாங்கெலாம் மிகத்திருத்தி
நாலெலாம் நனிவிதந்து நுவல்வளத்த தந்நாடு
(ஆதிகுமரகுருபர சுவாமிகள் சரித்திரம் - நாட்டுவளம்)

எனப் பாண்டிநாட்டு வளத்தினை,

வரம்பெலாம் முத்தம் தந்தும் மடையெலாம் பணிலம்
(கம்ப.நாட்டுப்படலம்:2)

என்று கம்பனைப்போல் கூறும் கற்பனையழகு போற்றற்குரியது.

உவமைப்பட வருணித்தல்

"பளிங்கு போன்ற நீர்ப்பொய்கை அது. அதுவும் தாமரை பூத்த தடாகம். நீரிலிருந்த கயலொன்று துள்ளித் தாமரை மலரில் விழுகின்றது. மலரிலிருந்த மரகதப்பொடியில் கயல் புரண்டு தன் உடல் முழுக்கப் பொன்னிறமாகிக் கொள்கிறது. அண்மையிலிருந்த குருகு தனது அலகால் அக்கயலைப் பிடித்து அதன் மீதுள்ள மகரந்தத்தூள் நீங்குமாறு நீரினுள் தோய்த்து அலசுகின்றது. இது அழல்நடுவே இருந்த இரும்புத்துண்டினைக் குறடால் எடுத்து நீரில் தோய்த்தது போலிருந்தது (தியாகராச லீலை, பா:75) என்ற வருணனையில், உவமை, உடுருவி நின்று அழகு செய்கிறது.

பண்புகளை அடுக்கி வருணித்தல்

ஏலக் குழலியோர் பாதம் போற்றி
எனக்கு வெளிப்படும் பாதம் போற்றி
மாலைப்பிறைமுடி வேணி போற்றி
மான்மழு வைத்த கரங்கள் போற்றி
காலைக்கதிர்த்திரு மேனி போற்றி
காமனைக் காய்ந்தகண் போற்றி எனவும்,
(பூவாளூர் பதிற்றுப்பத்தந்தாதி)

நிலஞ்சார் தெய்வக் கற்பகமே, நிமல ஞான வாரிதியே
நீடுஞ் சைவப் பெருவாழ்வே, நிலாவா நின்ற குணக்குன்றே
(சேக்கிழார் பிள்ளைத்தமிழ், முத்.5)

எனவும் பண்புகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி வருணிப்பது செவிக்கும், சிந்தைக்கும் இதமாக உள்ளதன்றோ,

அடுக்கி வருணிப்பதை விடுத்து சொற்களை மட்டும் அடுக்கிக் கூறுதலும் இவரது திறனை வெளிக்காட்டுகிறது.

பிரம்படித் தழும்பும் வில்லடித் தழும்பும்
பெயர்த்தெறி கல்லடித் தழும்பும் (வீரவனப் புராணம்)

எனவும், ஆறு என முடியும் பதிகளை,

நள்ளாறு பழையாறு கஞ்சாறு போட்டாறு
நல்லாறு தருமையாறு
நாவலாறு. . . . . (திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், பா.2.)

எனவும் அடுக்கிச் சொல்லுதல் இவர் கையாளும் உத்திகளுள் ஒருவகையாகும்.

சுவைபடக் கூறும் பண்பு

சாதாரணமாகக் கூறும் செய்தியைக்கூட இவர் சுவைபடக் கூறுவதில் வல்லவர். சான்றாக,

முருகனுக்கு ஆறுதலை, பன்னிரு கரங்கள், ஆனால் திருவடி மட்டும் இரண்டே, காரணம் என்ன தெரியுமா? கவிஞரின் பதிலைக் காண்போம். சிற்றில் இழைத்துச் சிறுமியர்கள் விளையாடுகின்றனர், முருகன் அங்கு வந்து சிற்றிலைச் சிதைக்கின்றான். அந்தோபாவம் சிறுமியர்கள், இந்நிகழ்ச்சியைப் பாடும் பிள்ளையவர்கள், "இரு கால்களினாலேயே இவ்வாறு சிற்றிலைச் சிதைக்கின்றவன் ஆறுதலைக் கேற்பப் பன்னிரண்டு கால்களிருப்பின் என்ன செய்வான்? எனவே அச்சிறுமியர்கள் செய்த தவத்தின் பயனே முருகனுக்கு இருகால்கள் மட்டும் அமைந்தன" (திருவிடைக்கழிமுருகர் பிள்ளைத் தமிழ், காப்பு.9) எனக்கூறும் கவியின் கவித்திறன் படிப்போரை வியப்பில் ஆழ்த்துகிறது.

நினைத்தவற்றை நினைத்தவுடனே, நினைத்தபடியே பாடுவதற்குச் சொற்கள் வருத்தமின்றி இவரிடம் வந்து கொட்டின. இவர், "வளம் பெற்ற செய்யுட்களின் விளைநிலமாகவே இருந்திருக்கிறார் எனின் மிகையாகாது. விரைவாகப் பாடுவது இவரது தனித்தன்மையாகும். உவமைகளில் கூடச் சித்தாந்தக் கருத்துக்களையும், புராண, இதிகாசக் கூறுகளையும் எடுத்தியம்புவது இவரது கவித்திறனை நன்கே காட்டுகிறது. இம்மாபெரும் கவி, காவிரிக் கரையில் தோன்றி, காவிரிக் கரையிலேயே மறைந்தும் விட்டார். அவர் மறைந்தாலும், அவரது அரிய படைப்புக்களோ இன்றும் நம் கைகளில் தவழ்ந்து தமிழ் மணம் பரப்புகிறது.

12. பிள்ளை வழங்கிய பிள்ளைத் தமிழ்

மே.செ. இராசமாணிக்கம்
ஈரோடு

குழந்தையைத் தாய் தாலாட்டி மகிழ்ந்த காலந் தொடங்கிக் கலித்தொகை, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, பரிபாடல், புறநானூறு, அகநானூறு, போன்ற சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும், ஆண்டாள் நாச்சியார் திருமொழி, குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழி, பெரியாழ்வார் திருமொழி போன்ற திவ்வியப் பிரபந்தங்களிலும் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து கி.பி.12-ஆம் நூற்றாண்டில் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் என்ற நூலால் தமிழின் முழுமையான முதல் பிள்ளைத்தமிழ் நூல் உருவானது. அதன் பின்னர் அரசர்கள் மீதும், புகழ்பெற்ற மனிதர்கள்மீதும், கடவுளர்கள் மீதும் பிள்ளைத்தமிழ் நூல்கள் பல தோன்றின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் (1815-1876) 11 பிள்ளைத்தமிழ் நூல்களைத் தமிழன்னைக்கு அள்ளித் தந்தவர்.

அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், உறையூர்க் காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், திருக்குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், திருத்தவத்துறைப் பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ், திருப்பெருமண நல்லூர்த் திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முதலியன. இவற்றுள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் அவர் வழங்கிய இறுதிப்பிள்ளைத் தமிழாகும்.

இப்பிள்ளைத்தமிழ் நூல்களில் பிள்ளையவர்களின் சொல்லணி, கற்பனை நயங்கள், அருணகிரி நாதரின் திருப்புகழ் போன்ற சந்தங்களின் அழகு, தத்துவக் கருத்துகளின் திறன், அகத்துறைச் செய்திகள் போன்றவை அழகுடன் மிளிர்கின்றன.அவைகளை விரிக்கில் தனி நூலாகும். ஒருசிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்.

1. மகுடங்களின் சொல்லணி

சொல்லின்பம் நல்கும் பல மகுடங்களைச் சூட்டுகிறார்.

அ. அத்தி வனத்தமர் அத்தர் இடத்தவள் ஆடுக செங்கீரை

(அகிலா.பி.த)

ஆ. அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுடன் அம்புலீ யாடவாவே

(அகிலா.பி.த)

இ. பெருமானை வைத்தகைப் பெருமானை மருவுமான் பொன்னிநீ ராடியருளே

(அகிலா.பி.த.)

(பெரியமானைக் கையில் வைத்த சிவபெருமானைத் தழுவுகின்ற மான் போன்ற அகிலாண்டநாயகி)

ஈ. நாவிரி பாவிரி பூவிரி காவிரி
நன்னீ ராடுகவே. (அகிலா.பி.த.)

நாவினால் பெரிதும் விரித்துப் பாக்களால் பாராட்டப் பெறுகின்ற,மலர்கள் விரிந்து இருமருங்குமுள்ள காவிரியாறு - ("மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடையது போர்த்துக் கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி").

நாவினால் பெரிதும் விரித்துப் பாராட்டப் பெறுகின்ற பாக்களாகிய மலர்கள் நிறைந்த பெரிய சோலையில் பாக்களையே நீர்த்திவலைகளாகக் கொண்டு பாவினூடே ஆடிவருகிறாள் -("தொடுக்குங் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே!").

உ. செருவிடைக் குழகனருள் திருவிடைக்
சுழிமுருக செங்கீரை யாடியருளே. (முருகர்.பி.த.)

ஊ.ஆய விடைக்கழி நேய முடைக்குகன்
ஆடுக செங்கீரை. (முருகர்.பி.த.)

எ. கோல விடைக்கழி நீல மயிற்கு
கொட்டுக சப்பாணி. (முருகர்.பி.த.)

ஏ. செந்தமிழ் மணந்தழை நடைக்கழி
விடைக்கழித் தெய்வநா யகன்வருகவே. (முருகர்.பி.த.)

ஐ. கழியா வளங்கள் பொழியும் விடைக்
கழியாய் வருகவருகவே. (முருகர் பி.த.)

2. கற்பனை: பல பாடல்களில் கற்பனை நயங்கள் அழகு சேர்க்கின்றன.

அ. இராமாயணம் அறிந்தோர் சுவைத்து மகிழத்தக்க கற்பனையை உறையூர்க் காந்திமதி யம்மை பிள்ளைத் தமிழில் ஊட்டுகிறார்.

அங்கண் வருக்கைக் கனிவிரலால்
அகழ அகழக் குழிந்தாழ்ந்த
அதுகண் டுட்சென் றொருகடுவன்
அவிருஞ் சுளைகொண் டெழும்வேளை
தெங்கிற் கவியொன் றுகுத்த பழஞ்
செறிந்தவ் வழிமாற் றிடக்குருகுச்
சிலம்போ வெனவுட் டிகைத்ததனைத்
தெளிந்து நீக்கி வெளிவந்து
தங்கு பிலத்துள் நின்று வழி
தகைகற் சிதறி வந்திளைய
தம்பி யொடும்போர் பொருதான் போல்
தாயக் கடுவ னொடும் பொருஞ்சீர்ப்
பொங்கர் மலிந்த திருவுறந்தைப்
பொன்னே புதுநீ ராடுகவே
புனிதற் குடமுன் னான்கானாய்
பொன்னிப் புதுநீ ராடுகவே (காந்திமதி பி.த. நீராடற்-10)

ஒரு பலாப்பழத்தை ஒரு குரங்கு விரலால் தோண்டிப் பெரிய குழியாக்கியதோடு, அக்குழிக்குள் இறங்கிச் சுளைகளை எடுத்துக் கொண்டு வரும் வேளை, வேறொரு குரங்கொன்று தென்னை மரத்திலிருந்து தேங்காயைப் பிடுங்கிப் போட்டதாம். வாய்திறந்த பலாப்பழத்தின் மீது தேங்காய்விழப் பலாப்பழம் முடிக்கொண்டதால் உள்ளே குரங்கு அகப்பட்டுக் கொண்டது. பின் முயன்று தேங்காயை நீக்கி வெளியில் வந்து மற்ற குரங்கோடு சண்டையிட்டது.

இந்தக் கற்பனையை இராமாயணத்தோடு இணைத்து நமக்கு அளிக்கிறார். குகைக்குள் உள்ள பகைவனை அழிக்க வாலி குகைக்குள் சென்றான். அவன் தம்பி சுக்கிரீவன் குகை வாயிலில் காத்து நின்றான். அண்ணன் திரும்பவே இல்லை. ஒருவேளை பகைவன் அண்ணனைக் கொன்றுவிட்டு வெளியில் வந்தால் தனக்கும் ஆபத்து என்று குகைவாயிலைப் பெரிய கல்லால் முடி வைத்தான். பகைவனையும் கொன்று, மிகுந்த துன்பப்பட்டுக் கல்லை நகர்த்தி வெளிவந்த வாலி, வேண்டுமென்றே தன்னை குகைக்குள் அடைத்துவிட்டான் என்று தவறாகக் கருதித் தம்பியுடன் சண்டைக்குப் போகிறான். வாலி சுக்கிரீவன் சண்டையை வைத்து என்ன அருமையான கற்பனைக் காட்சியைப் படைத்திருக்கிறார்.

ஆ. குரும்பை அனைய பொம்மன்முலைக்
கொடிநுண் ணிடையார் கொழுநரொடுங்
கூடிக் கலவி யயர்ந்துவிரைக்
கொழுநாண் மலர்மென் மாலையொடும்

இரும்பை அரவம் உயிர்த்தசுடர்
எறியு மணிமா வையும் பெறுப்புற்(று)
எறியச் சிதறி மறுகினடை
இமைக்கு மணியைக் குரீஇயினங்கள்

கரும்பை அகலா மலர்த்தருவில்
தொடுத்த சிறுகூட் டுய்க்கவெழுஞ்
சுடர்போய்த் தூய்மா னதனாவி
துன்னுஞ் செழும்பா சடைக்கமல

அரும்பை மலர்த்தும் பெருஞ்சோணாட்
டரசா டுகபொன் னம்மனையே
அமுதப் பெருமா னொடுவரும்பெண்
அமுதா டுகபொன் னம்மனையே. (அகிலா பி.த. அம்மா.6.)

கணவனோடு கூடிக்கலந்து அயர்ந்த பெண் ஒருவள் மணம் பொருந்திய பூமாலையைக் கழற்றி எறியும்போது, அதோடு அவள் போட்டிருந்த ஒளிபொருந்திய மணிமாலையும் போய் விழுந்ததாம். அந்த மணிகளைப் பொறுக்கிய குருவி இனங்கள் தாம் கட்டிய சிறிய கூட்டில் வைத்தனவாம். அந்த மணிகளின் ஒளியைச் சூரிய ஒளி என்று நினைத்துத் தாமரை அரும்புகள் மலர்ந்தனவாம்.

3. சந்தங்கள்

அருணகிரி நாதசுவாமிகளின் திருப்புகழ் போன்ற சந்தங்கள் பல பிள்ளைத்தமிழ்ப் பாடல்களை மெருகூட்டுகின்றன.

அ. (தந்த தனன தந்த தனன
தந்த தனன தத்தனா)

நன்று கருது மன்ப ரிதய
கஞ்ச மருவு சத்தியே

நம்பு மறைமி னும்ப ரிலகு
தூங்க விமல தத்தையே- - - -
குன்று மகிழ வந்த கருணை
யம்பை தருக முத்தமே

கும்ப முதல்வர் பங்கி னமரு
மங்கை தருக முத்தமே (மங்களா.பி.த. முத்தம்:9)

ஆ. (தனன தனன தனன தனன
தனன தனன தத்தனா)

கரிய முகிலி னளக மிருள்செய்
கவுரி தருக முத்தமே
கருதி யுருகு மடிய ரிதய
கமலை தருக முத்தமே - - - -

துரிய முடிவில் வெளியின் மருவு
சுமுகி தருக முத்தமே
சுவைய வமுத கலச முதல்வர்
துணைவி தருக முத்தமே - - - - (மங்களா.பி.த.. முத்தம்:10)

(தானன தானன தானன தானன
தந்தா தந்தானான)

நாமலர் பாமொழி தூமொழி பாரிடை
நண்பா பண்பாளா
நான்மறை வேள்வியின் ஊடெழு மேடமு
வந்தே றுந்தேவே - - - -

தேமலர் மேயகு ராநிழல் வாழ்பவ
செங்கோ செங்கீரை
சேவலகு லாவுப தாகைம னோகர
செங்கோ செங்கீரை (முருகர் பி.த. செங்.10.)

ஈ. (தனதன தனதன தனதன தனதன
தத்தன தத்தனனா)

எழுதரும் வடிவழ குடையவ விடையவன்
இச்சைசெய் புத்திரனே
இமையவர் மடவியர் விழியளி குடையுமின்
நர்த்தக டப்பணிவோய்- - - -

முழுதுல கமுநவில் சரவண பவகுக
முத்தம ளித்தருளே
முனிவரர் தொழுகுர வடியமர் குருபர
முத்தம ளித்தருளே

4.தத்துவக்கருத்து

முருகப் பெருமானே! உன்மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் உன் அடியார்களின் ஆணவ, கன்ம, மாய மலங்களை முழுதும் சிதைந்துவிடு. அவர்களின் கடிய வினைகளைச் சிதை. அவர்களின் பிறவிக் கணக்கெழுதும் ஏட்டைச் சிதை. நீயே பரம்பொருள் என்று எண்ணாதவர்களின் எண்ணத்தைச் சிதை. இவைகளை எல்லாம் தவிர்ந்து உன்னையே சிந்தித்து உன் அமுதூறுகின்ற எங்களின் வீட்டைச் சிதைத்துவிடாதே என்ற உருக்கமான தத்துவப் பாடல் இதோ

கண்ணீர் பெருக உருகியுளங்
கசிநின் னடியார் மலமாயா
கன்ம முழுதுஞ் சிதையவர்முற்
கடிய வினையைச் சிதையவர்தம்

எண்ணீர் பிறவிக் கணக்கெழுதும்
ஏட்டைச் சிதைநீ யேபரமென்(று)
எண்ணா திழுதை உறுமுனகர்
எண்ணஞ் சிதைமற் றிவைதவிரிந்து

புண்ணீர் கவரும் வடிவேற்கைப்
புலவா புலவர் போரேறே
பொறியி லேஞ்சிற் றிலஞ்சிதைத்தல்
புகழோ வலது புண்ணியமோ

தெண்ணீர் வளங்கூர் விடைக்கழிவாழ்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத்
தெளிவா சிற்றில் சிதையேலே. (முருகர். பி.த.சிற்.6.)

5.அம்பிகை பாதாதி கேச வர்ணனை

திகழ்திரு மணிச்சிலம் பாதிபுனை பாதமும்
செம்பட் டுடுத்தவரையுஞ்
செய்யவற முழுதும்வள ரங்கையும் பரஞான
தேசுமலி தருகொங்கையும்

இகழ்தருதல் இல்லாத வேயையடு தோளுமழ
கியமங்க லக்கழுத்தும்
இண்டைமலர் வென்றதிரு முகமுமா ரருள் பொழியும்
இணைவிழியு முபமானமுற்(று)

அகழ்தருவி னுதலுமென் புன்றுதியு மேற்றுமகி
    ழஞ்செவியு முகில்விளர்க்கும்
ஆரளக பாரமு மிகப்பொலிய வண்டபகி
    ரண்டங்க ளுந்தழைக்கப்
புகழ்தருக னீர்நா டளிக்குமா ரருள்முதல்வி
    பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தகுட முக்கமிழ் திடத்தமிழ்து
    பொன்னூச லாடியருளே. (மங்களா.பி.த.பொன்னூ:10)

6.சிவபெருமான் வர்ணனை

வெள்ளிப் பொருப்பும் வெள்ளிடையும்
    வெள்ளை யிரண்டா யிரமருப்பு
வெள்ளைக் களிறும் வெண்பிறையும்
    வெள்ளே றுயர்த்த வெண்கொடியுந்
தள்ளித் தரளங் கொழித்துமறி
    தருவெண் புனலும் வெண்ணீறுஞ்
சங்கபிற் புரிந்த வெண்குழையுந்
    தருவெண் மனவு மணிவடமுந்
துள்ளிச் சுவைத்தே னுவட்டெடுக்குந்
    தும்பைப் புதுவெண் மலர்த்தொடையுந்
தொலையா உடைமை யாப்படைத்த
    தூய வடிகள் முடிவணங்கத்
தெள்ளிச் சிறுவெண் ணகையரும்புஞ்
    செவ்வாய் முத்தந் தருகவே
தேவா திபர்சூழ் தென்னளகைத்
    திருவே முத்தந் தருகவே. (பெருந்திரு. பி.த.முத்தம்:3)

இப்பாடலில் சிவபெருமானின் திருவுருவை வர்ணித்து அப்பேர்பட்ட பரமசிவன் முடிவணங்கப் புன்னகை பூத்து முத்தந்தரும் அம்பிகை என முடிக்கிறார். உம்மையும் மோனையும் கைகோர்த்துச் சொல்லணி சுவைக்கின்றது.

7.சேக்கிழார்

உமாபதி சிவாச்சாரியார் எழுதிய சேக்கிழார் புராணத்தை ஆதாரமாகக் கொண்டு பிள்ளையவர்கள் வழங்கிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் "முத்தி தரும் நூல்" என்று பெரிய புராணத்தை வியந்து கூறியதோடு, சேக்கிழார் சுவாமிகளுக்கு "அருட்கவி பாடியபுலவன், அருட்சிந்தாமணி, குணக்குன்று, குன்றைக் கோமான், சேவையர் குலாதிபன், சைவப்பயிர் வளர்க்கும் கொண்டல், சைவப் பெருவாழ்வு, ஞானவாரிதி, நாவலர் ஏறு, பத்திவிளைநிலம், பிறவிப்பிணி மருந்து, பெருநாவலன்" எனப் பல பட்டங்கள் வழங்கிப் புகழாரம் சூட்டி மகிழ்கிறார்.

பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ என்று போற்றுகிறார்.

தமிழ்க்கவிதை இப்படித்தான் இருக்க வேண்டும் என இலக்கணம் வகுத்து அதிலிருந்து சிறிதும் மாறுபடாத இலக்கியத்தைச் செய்ததாகப் பாராட்டுகின்றார். கவிதையில் சொல்லும் பொருளும் சிறப்பாக அமைய வேண்டும். சுருங்கச் சொல்லப்பட வேண்டும், அமங்கலமாஞ் சொற்கள் புணராது அறக்களையப் படவேண்டும். "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து" என்ற வள்ளுவன் வாய்மைக்கு ஏற்ப வெல்லுகின்ற சொற்களை விதிகளைத் தழுவிக் கையாள வேண்டும். விலக்கப்பட வேண்டியவைகளை விலக்கி எழுத வேண்டும். அப்படிப்பட்ட மிகச்சிறந்த உலகம் போற்றும் இலக்கியத்தில், அம்பலவாணர் அருள்பெற அல்லும் பகலும் அரும்பணி செய்து, அவர் அருள் பெற்றுய்ந்த அடியார் பெருமக்களின் அருமை பெருமைகளைக் கல்லுங்கரையக் கவிபாடிப் பாராட்டியுள்ளதாக வியந்து புகழ்கின்றார்.
பாடல் இதோ.

சொல்லும் பொருளு நனி சிறப்பச்
சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டி யமைய அமங்கலமாஞ்
சொற்கள் புணரா தறக்களைந்து

வெல்லுந் தகைய முரண்காட்டி
விலக்கு விலக விதிதழுவி
விரும்பு மூல இலக்கியமே
வேறா காதென் றுலகேத்த

அல்லும் பகலும் அம்பலவர்
அருடற் காய அரும்பணிசெய்
தரும்பெற் றுய்ந்த வடியார்தம்
அருமை பெருமை பாராட்டிக்

கல்லுங் கரையக் கவிபாடுங்
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே. (சேக்கிழார் பி.த.முத்தம்:3)

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வழங்கிய 11 பிள்ளைத் தமிழ் நூல்களில் இன்னும் பற் பல சிறப்புக்களைச் சொல்லலாம். கட்டுரையின் விரிவஞ்சி நிறைவு செய்கிறேன்.

13. சீகாழிக் கோவையில் பரத்தையிற் பிரிவு

சு. இராசாராம்
காரைக்குடி

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல்களுள் சீகாழிக்கோவை, குளத்தூர்க்கோவை, வியாசைக்கோவை என்பன கோவை இலக்கியங்களாகும். இவற்றுள் சீகாழிக்கோவையில் பரத்தையிற் பிரிவு அமைந்திருக்குமாற்றை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகப்பொருட்கோவை இலக்கணமும் சீகாழிக்கோவையும்

அகப்பொருளைப் பாடும் சிற்றிலக்கியங்களுள் ஒன்று அகப்பொருட்கோவை. இதன் இலக்கணத்தை "முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய முப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலமைந்த அன்புடைக்காமப் பகுதியவாம் களவொழுக்கத்தினையும் கற்பொழுக்கத்தினையும் கூறுதலை எல்லையாகக் கொண்டு கட்டளைக் கலித்துறை நானூறாகத் திணை முதலாகத் துறையீறாகிய பன்னிரண்டு அகப்பாட்டுறுப்பும் வழுவின்றி வரப்பாடுவது அகப்பொருட்கோவை எனப்படும் கோவையாகும்" என்பர் இரா.இளங்குமரன் (இலக்கிய வகை அகராதி, பக்.113,114). இவரது இவ்விளக்கம் பாட்டியல் இலக்கண நூல்களைத் தழுவியதாகும். சீகாழிக்கோவை இவ்விலக்கணத்தைத் தழுவியே அமைந்துள்ளது. ஆனால் பாடல் எண்ணிக்கையில் வேறுபடுகின்றது. சீகாழிக்கோவை மொத்தம் 531 கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் கொண்டமைந்துள்ளது.

சீகாழிக்கோவையில் பரத்தையிற் பிரிவு

சீகாழிக்கோவை இல்வாழ்க்கை என்னும் பகுதியில் பரத்தையிற் பிரிவு, கல்வியிற் பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு ஆகிய அறுவகைப் பிரிவுகளையும் 80 பாடல்களில் விளக்குகிறது. இதில் பரத்தையிற் பிரிவு 53 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

பரத்தையிற் பிரிவு என்னும் இப்பகுதி தலைவன் தலைவியை விடுத்துப் பிரிதல், தலைவியின் வருத்தம், செவ்வணி மயக்கம், வெள்ளணி மயக்கம், வாயில்கள் வேண்டுதலும் மறுத்தலும், தலைவன் விருந்து வாயிலாகப் புகுதல், பாங்கி புலவி தணிவித்தல், காமக்கிழத்தி வாயில் வேண்டல், பாங்கி வாயில் நேர்தல், தலைவி மகவைப் பழித்தல், தலைவி தலைவன் வரவை எதிர்கொள்ளுதல், தலைவி மைந்தனையும் தலைவனையும் புகழ்தல், பாங்கி தலைவியைப் புகழ்தல் என்ற நிலைகளில் பகுத்துக் காணுமாறு உள்ளது.

தலைவன் தலைவியை விடுத்துப் பிரிதல்

தலைவனும் தலைவியும் சங்கரனும் உமையும் போல வாழ்கின்றனர் (451). தலைவி தம் இல்லத்துக்கு வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று விருந்தோம்புகின்றாள். அவளது விருந்தோம்பல் பண்பை,

. . . . நின்மகள் தன் மனைவாய்
வந்தார் பசித்தறியார் (450)

என்னும் செவிலி கூற்று நன்குணர்த்தும். இத்தகைய தலைவியை விடுத்துத் தலைவன் சீகாழியில் உள்ள பரத்தையரிடம் செல்லுதலை மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் நயமாகப் பாடுவர்.

தலைவன் சீகாழியின் வீதியில் வருகின்றான். அவனைக் கண்ட பரத்தையர் அவன் முன் சென்று கைகளைக் குவித்து வணங்குகின்றனர். மலர் போன்ற கண்களால் நோக்குகின்றனர். தலைவனும் அவர்களை நோக்குகின்றான். இதனைக் கண்டோர் தலைவி ஊடல் கொள்வதற்குரிய நிகழ்வு நடந்துவிட்டது எனக் கூறுகின்றனர். சீகாழிக்கோவையில் பரத்தையிற் பிரிவின் தொடக்கம் இவ்வாறு அமைந்துள்ளது. இதனை,

ஒண்மலர் தோறும் நறவுண்டு வண்டு உழல் ஊரன் இன்று
தண்மலர் வீதி வந்தான் முன்புபோந்து கைதாம் குவித்துக்
கண்மலர் நோக்கம் செய்தார் பரண்காழிக் கண்ணார் இவனும்
மெண்மலர் நோக்கம் செய்தான் மனை ஊடுதற்கு ஏது இதே (452)

என்பது உணர்த்தும். இதில் ஒளி பொருந்திய மலர்கள்தோறும் தேனை உண்ணும் வண்டு என்பது தலைவனது பரத்தமையொழுக்கத்தை விளக்குவதாகும்.

தலைவியின் வருத்தம்

தலைவன் சீகாழியில் உள்ள பரத்தையரோடு தங்கியதை அறிந்த தலைவி, "தலைவன் குலமாதாகிய தன்னை விடுத்துப் பதியில் குலமகளிராகிய பரத்தையர் இல்லத்தில் தங்குதல் அவனுக்கு, சிவபெருமானின் சண்பைத் தலத்தில் வசிப்பது போன்ற இன்பத்தைத் தரும் போலும்" என எண்ணித் தனிமையில் வருந்துகின்றாள். (453).

தலைவி தலைவனைக் கனவிற் கண்டு நாணத்தோடு தழுவ முற்பட்டு விழித்தெழுகின்றாள். தலைவனை நனவிற் காணாது வருந்துகின்றாள். இதனை,

காண் நித்தில நகையாய் என ஊரர் கனவில் வந்தார்
நாணித் தழுவ விழித்தேன் மறைந்தனர் (454)

என்பது புலப்படுத்தும். தலைவன் பரத்தையிற் பிரிந்த நிலையிலும் தலைவி கனவில் தலைவன் தோன்றுதலும் தலைவி தழுவ முற்படுதலும் தலைவி தலைவன் பால் கொண்டுள்ள அன்பை உணர்த்தும்.

தலைவனுக்காக உணவு சமைத்து, அவனது வரவை எதிர்பார்த்திருக்கும்

தலைவி, தலைவன் வாராமைக்கான காரணத்தை எண்ணிப்பார்த்தல் நயமானதாகும். தலைவன் உணவு உண்ண வராத நிலையில் தலைவிக்கு,

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் (திருக்:412)

என்னும் திருவள்ளுவர் வாக்கு நினைவுக்கு வருகின்றது. தலைவனது செவிக்குப் பரத்தையர் நல்ல இசையாகிய உணவு கொடுத்தலால் அவனுக்கு வயிற்றுப் பசி தோன்றவில்லை போலும் என எண்ணுகிறாள். (457).

இவ்வாறு தலைவனது பிரிவை எண்ணிப் பலவாறு வருந்தும் தலைவியிடம் தோழி, அவளது வருத்தத்திற்கான காரணத்தை வினவுகின்றாள். அதற்கு தலைவி, "தலைவன் என்னை விடுத்து, சீகாழியில் வாழும் அழகிய பரத்தையரைச் சார்ந்து வாழுகின்றான்" எனக் கூறுகின்றாள். இதனை ஆசிரியர்,

நேரும் கரும்பும் பொழிசாறும் நீத்து நெடும்பகடு ஆங்கு
ஊரும் கலங்கல் புனல் கொளும் ஊரர் (460)

என்பதில் உள்ளுறையாகச் சுட்டுவர். மருத நிலத்தில் உள்ள எருமை அங்குள்ள கரும்பையும் அதன் சாறையும் நீத்து, சிறிதளவு ஊறிக் கலங்கலாக உள்ள புனலை விரும்பி உண்ணும் ஊரன் என்பது இதன் பொருள். இதில் கரும்பு தலைவிக்கும் அதன் சாறு தலைவி தரும் இன்பத்துக்கும் கலங்கற் புனல் பரத்தைக்கும் அதன் சுவை பரத்தையர் தரும் இன்பத்துக்கும் பகடு தலைவனுக்கும் உள்ளுறையாகும். பகடு கரும்பையும் அதன் சாறையும் நீத்து, கலங்கற் புனலை விரும்புதல் தலைவன் தலைவியை நீத்து, பரத்தையரை விரும்புதலுக்கு உள்ளுறையாக அமைந்துள்ளது. இவ்வாறு தலைவனது பரத்தமையொழுக்கம் மிக நயமாகக் கூறப்பட்டுள்ளது.

தலைவனது புறத்தொழுக்கை இயல்பானதாக ஏற்றுக் கொள்ளும் பாங்கி தலைவியிடம், "தலைவனது இத்தீய ஒழுக்கத்தை மறந்தும் குறையாகக் கூறுதல் கூடாது. அது குலமாதர்க்கு அழகல்ல" என அறிவுறுத்துகின்றாள் (461).

செவ்வணி மயக்கம்

பரத்தையரோடு தங்கியிருக்கும் தலைவனுக்குத் தலைவி பூப்பெய்தினாள் என்பதை உணர்த்தி, அவனைத் தம் இல்லத்துக்கு அழைப்பதற்காக, தலைவி சேடிக்குச் செவ்வணி அணிந்து, தலைவன் தங்கியிருக்கும் பரத்தையர் இல்லத்துக்கு அனுப்புதல் செவ்வணி மயக்கம் எனப்பெறும். இதனை,

பவளம் புனைந்து செம்பூமாலை சூட்டிச் செம்பட்டுடுத்தி
நவளம்படு குங்குமம் பூசி பாகிலை நல்கி நனி
துவள் அம்கொடி இடையாய் விடு சேடியை (462)

என்பது எடுத்துரைக்கும். இதனால் சேடிக்கு செம்பவளத்தால் ஆகிய

அணிகலன்களை அணிவித்து, சிவந்த மலர்களால் கட்டிய பூமாலை சூட்டி, சிவப்பு நிறப் பட்டாடை உடுத்தி, குங்குமம் பூசி, வெற்றிலை பாக்கைக் கொடுத்தனுப்பும் மரபு புலனாகும். செவ்வணி புனைந்து செல்லும் சேடிக்கு பசுங்கொடியில் இந்திரகோபம் (பட்டுப்பூச்சி) செறிந்திருத்தலையும் முள்ளு முருங்கை மரம் சிவந்த பூக்களுடன் திகழ்தலையும் ஆசிரியர் உவமை கூறுவது இன்புறத்தக்கதாகும்(463).

இவ்வாறு செவ்வணி புனைந்து சேடியை விடுத்தல் இகழ்ச்சிக்குரிய செயலாகக் கருதப்பட்டுள்ளது. இதனை உழையர் வருந்துவதும் பரத்தையர் பழிப்பதும் நன்குணர்த்தும்.

பரத்தையர் உலகியல் நோக்கி, "தலைவி வானத்திலிருந்து மழையைப் பெய்விக்கும் கற்புடையவள். ஒவ்வொரு நாளும் அறம் வெல்ல வேண்டும் என்ற எண்ணமுடையவள். அத்தகையவள் பூப்பெய்தினளாம். எனவே எம்மிடம் விடை பெற்றுச் செல்க, பன்னிரு நாளும் அவளைப் புல்லுக, பிறகு இங்கு வருக" (466) எனக் கூறித் தலைவனை விடுக்கின்றனர். இது,

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர் (தொல்:1133)

என்னும் இலக்கணத்தின் அடிப்படையில் கூறப்பட்டதாகும்.

தலைவனது வரவைக் கண்ட வாயில்கள் அவனை "சான்றோன்" எனப் போற்றுகின்றனர்(467). பாங்கி தலைவியிடம் தலைவனை எதிர் கொண்டழைக்குமாறு அறிவுறுத்துகிறாள். (468) தலைவி தலைவனை எதிர்கொண்டு பணிந்து வரவேற்கின்றாள். தலைவனும் தலைவியும் புணர்ச்சியில் மகிழ்கின்றனர். தலைவன் தான் பெற்ற இன்பத்தை,

காரார் குழலியும் நாமும் புணர் இன்பம் காப்புகலி
ஊரார் முதலும் உயிரும் புணர் இன்பம் ஒக்கும் எனில்
ஏரார் ஒருதலை இன்பே அது மற்று இருதலையும்
சேரா மருவின்பம் ஈதெனில் யாது இணை செப்புவதே (470)

என எண்ணி வியக்கின்றான். இதில் தலைவன் தான் பெற்ற புணர்ச்சி இன்பத்துக்கு இணை கூற இயலாது தடுமாறுவது நயமானதாகும். தலைவன் தான் பெற்ற இன்பத்தை சீகாழி இறைவனோடு உயிர் சேரும் முத்தியின்பத்துக்கு ஒப்புமையாகக் கூற எண்ணுகிறான். ஆனால் அம்முத்தியின்பத்தால் உயிர்கள் மட்டுமே இன்புறும் என்பதும் அதனை ஒருதலை இன்பம் என்றே கூற இயலும் என்பதும் விளங்குகிறது. தாம் பெற்ற புணர்ச்சியின்பத்தில் இருவரும் இன்பமடைந்ததால் அது இருதலை இன்பம் என்பது ஐயமறத் தோன்றுகிறது. அதனால் புணர்ச்சியின்பத்துக்கு இணையாக எதனைக் கூறுவது என்பதில் தடுமாற்றம் உண்டாகிறது. இவ்வாறு தலைவன் பெற்ற புணர்ச்சியின்பத்தை ஆசிரியர் விளக்கியிருக்கும் பாங்கு போற்றுதற்குரியதாகும்.

வெள்ளணி மயக்கம்

தலைவி கருவுற்ற நிலையில் தலைவன் தலைவியை விடுத்துப் பரத்தையரோடு ஒழுகுவான். தலைவி மகவு ஈன்று நெய்யாடியதும், அதனைத் தலைவனுக்கு உணர்த்தும் விதத்தில் இருளைக்கு வெண்மையான ஆடை அணிகலன்களை அணிவித்து, பரத்தையர் இல்லத்துக்கு விடுப்பாள். அவளைக் கண்ட தலைவன், தலைவி மகப்பேறு பெற்ற நிலையை உணர்ந்து திரும்புவான். இது வெள்ளணி மயக்கம் எனப்படும்.

தலைவி தனக்குக் குழந்தை பிறந்ததை உணர்த்தும் விதத்தில் இருளைக்கு வெள்ளணி அணிந்து விடுத்தலை,

தெருளுதயம் செய் வெண்பூ மணி தூசு செறித்து அடைந்தாள்
பொருளுதயஞ் செய்தது புகல்வான் ஒரு பூங்கொடியே' (471)

என்பது உணர்த்தும். இங்கு குழந்தையை 'பொருள்' என ஆசிரியர் சுட்டுவது,

தம்பொருள் என்பதம் மக்கள் (திருக்:63)

என்பதோடு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

தலைவன் தலைவி குழந்தை பெற்றதை அறிந்து உவகை அடைகின்றான். தலைவியின் நெய்யாடிய பசப்பு மேனியையும் மலர் முகத்தையும் பால் பொழியும் மார்பையும் மகவு ஏந்திய கையையும் காண விரும்பி வருகின்றான்(474). அவனது வருகையைப் பாங்கி தலைவிக்கு உணர்த்துகின்றாள். தலைவி தலைவனோடு ஊடல் கொண்டு புலக்கின்றாள். தலைவனுக்கும் தனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என மொழிகின்றாள். இது,

அவர்க்கு இம்மனைவாய் என் உண்டு பழந்தொடர்பு
கட்டார் மகவுண்டு நான் உண்டு காலங்கழிப்பன் நன்று (476)

என்பதால் விளங்கும். இதில் ஆசிரியர் ஒரு பெண்ணின் உணர்ச்சியை இயல்பாகப் புலப்படுத்தியுள்ளார்.

வாயில்கள் வேண்டுதலும் மறுத்தலும்

தலைவனோடு புலவி கொண்டு அவனை மறுத்த தலைவியிடம் பாணன், விறலி, கூத்தன், பாங்கி ஆகியோர் வாயிலாக வந்து புலவியைத் தீர்க்க முயற்சி செய்கின்றனர். தலைவி அவர்களது மொழியை ஏற்காது மறுத்து மொழிகின்றாள். தலைவி கூத்தனிடம், "பிறைசூடிய முதல்வன் மன்றுள் நடித்திடும் கூத்தன்றி நின்னுடைய கூத்தை நோக்கேன். நடிப்பதற்குத் துடித்திடும் கூத்தனே இவ்விடத்தை விட்டு அகன்று செல். தலைவனுக்கு இன்பம் தரும் பரத்தையரிடம் சென்று உன் கூத்தை நடித்துக் காட்டு. அவர்கள் நோக்குவர்"(480) எனக் கூறுகின்றாள். இது ஆசிரியரின் சமயப்பற்றுக்குச் சான்றாகும் பகுதியாகும்.

தலைவி பாங்கியிடமும், "இப்பொழுது வயிற்றிலிருந்து வெளிவந்துள்ள

இச்சேய் வயிற்றுள் இருந்தபொழுது இங்கிருந்து சென்று அச்சேய் வெளி வந்த பிறகு திரும்ப வந்தவர் நல்லவரோ?" எனக் கேட்டு வாயில் மறுக்கின்றாள் (481).

தலைவன் விருந்து வாயிலாகப் புகுதல்

தலைவன் விருந்தினரை வாயிலாகக் கொண்டு வந்தபொழுது தலைவி அவர்களை வரவேற்கின்றாள். அதனைக் கண்ட தலைவன்,

> விருந்தென்று கொண்டிலம் வீயாப் புலவியை வீப்பதற்கோர்
> மருந்தென்று கொண்டனம் (483)

என மகிழ்கின்றான். விருந்தொடு வந்தபொழுது வெளிக்காட்டாத ஊடலைத் தலைவி தலைவனோடு பள்ளியிடத்து இருந்தபொழுது வெளிப் படுத்துகின்றாள்(484). தலைவன் தலைவியின் மலரடி வீழ்ந்து எனக்கு வாய் முத்தம் நல்கி அருள வேண்டும் என வேண்டுகின்றான்(485). அதனைக் கண்ட தலைவி கண்ணீர் பெருக்கி இஃது எம் தங்கையர் காணின் அது நன்றன்று என்கின்றாள்(486). அதற்குத் தலைவன் உன்னைத் தவிர வேறு யாரையும் அறியேன் என்று கூறுகின்றான் (487). அவனிடம் தலைவி நம் மகவைக் கண்டு அன்புடன் தூக்கி மார்போடு அணைத்துக் கொஞ்சிய காமக்கிழத்தியைக் கண்டதைக் கூறுகிறாள் (488).

பாங்கி புலவி தணிவித்தல்

தலைவன் மேல் கொண்ட புலவி தணியாது இருந்த தலைவியிடம் பாங்கி, "முப்பிழை பொறுக்கும் புனல்போல் நீயும் தலைவனது பிழையைப் பொறுத்தல் வேண்டும்" என்று கூறி புலவி தணிவிக்கின்றாள் (489).

காமக்கிழத்தி வாயில் வேண்டல்

பாங்கி கூறியும் புலவி தணியாத தலைவியிடம் காமக்கிழத்தி வாயில் வேண்டுகின்றாள். அவள் தலைவியிடம்,

> பிழையே செயினும் நினக்கே பொறுத்தல் பெருங்கடன் (494).

எனக் கூறுகிறாள்.

பாங்கி வாயில் நேர்தல்

பாங்கி தலைவியிடம், "புலவியை நீளவிட்டுத் தலைவரை வாட்டுதல் தக்கதன்று. சீகாழியில் உள்ள ஆடவருள் மாயவித்தை காட்டும் பொதுமகளிர் தோள் தழுவாதவர் எவருளர்?" என்று கூறி வாயில் நேர்விக்கின்றாள் (497).

தலைவி மகவைப் பழித்தல்

பரத்தையரைத் தழுவி வந்த தலைவனை நீக்காமல் அவனைக்கண்டு அழுது, அழைத்து, அவனது மார்பில் பூசியிருந்த சந்தனத்தை அழித்து விளையாடிய பிள்ளையிடம் (498) தலைவி புலந்து, "தலைவன் சீகாழியில் உள்ள பொதுமகளிர் கொடுத்த தாம்பலத்தைத் தின்று அந்த வாயால் உன்னிடம் முத்தம் கொண்டான். நீ அந்த எச்சிலை என் வாயில் பூச வந்தாய், நான் உன்னைப் பெற்றதற்கு இது தான் பயனோ? இது உன்

குலத்தின் இயல்போ?" எனப் பழிக்கின்றாள். (500)

தலைவி தலைவன் வரவை எதிர்கொள்ளுதல்

தலைவன் மைந்தனையும் ஆற்றாமையையும் வாயிலாகக் கொண்டு வர, தலைவி,

சூது செய் கொங்கை பொருமடவாரிற் துறந்து இன்று செந்
தாதுசெய் பூண் இளஞ் சேயையும் தோளிற் தழுவி வந்தீர்
ஏது செய்தாலும் இயம்புநர் ஆர் எம் இறையவரே (501.)

என அவனை எதிர்கொள்கின்றாள்.

தலைவி மைந்தனையும் தலைவனையும் புகழ்தல்

தலைவன் தலைவியோடு இன்புற்றுச் சென்ற பின்பு தலைவி பாங்கியிடம் அதற்குக் காரணமாகய மகனை, "இவன் தன் தந்தையைக் கண்டதும் பொருமிப் பொருமி அழுது அழைத்தான் அதனால் இவனை, சிவபெருமானை அழுது அழைத்த திருஞான சம்பந்தன் எனலாமோ?" எனப்புகழ்கின்றாள்(502). இதனால் ஆசிரியர் சைவ சமயத்தின் மீது கொண்டுள்ள பற்று புலனாகும். தலைவி தலைவனையும்,

. . . . . . பொதுமாதர் கொங்கைக் கலப்புறினும்
உரியோர் நம் கொங்கைக் கலப்பு இன்றுகாறும் ஒழிந்திலரே (503)

என புகழ்கின்றாள்.

பாங்கி தலைவியைப் புகழ்தல்

தலைவன் சீகாழியில் உள்ள பரத்தையர்பால் ஒழுகிவரக் கண்டும் அவனை ஏற்றுக்கொண்ட தலைவியின் பண்பை வியந்து, "இவளைப் போல பெருங்கற்புடையார் இப்பூவுலகில் எவருளர்?" எனப் பாங்கி தலைவியைப் புகழ்ந்துரைக்கின்றாள்.

முடிவுரை

சீகாழிக்கோவையில் பரத்தையிற் பிரிவு நம்பியகப்பொருள் அடிப்படையில் பாடப்பட்டுள்ளது. தலைவனைத் தலைவி கனவிற்கண்டிரங்கல், செஞ்சுடர்க்குரைத்தல், வாரம் பகர்தல், அடிசிலமைத்த மடரலிரங்கல், தலைவன் பிரிந்தமைக்கு இரங்கல், பள்ளியிடத்துத் தலைவி புறங்காட்டக் கண்டு தலைமகன் கூறல், காமக்கிழத்தி வாயில் வேண்டல், தலைவி காமக்கிழத்தியொடு பகர்தல், பாங்கி வாயில் நேர்வித்தல், தலைவி மகவொடு புலத்தல், மகற்கறிவுறுத்தல், மகற்பழித்தல் என்பன நம்பியகப்பொருளில் இல்லாத புதிய கிளவிகளாகும்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் அகச் செய்திகளை உள்ளுறையாகக் கூறியிருப்பதும், எளிய உவமைகளைக் காட்டியிருப்பதும், திருக்குறள் கருத்துக்களை உட்கொண்டு பாடியிருப்பதும், தலைவியின் உணர்ச்சிகளை இயல்பாகக் காட்டி இருப்பதும், சமயச் செய்திகளை நயமாகக் கூறியிருப்பதும் அவரது புலமைக்குச் சான்றுகளாகும்.

14. சூரை மாநகர்ப் புராணம்

சீ. இலட்சுமணன்
தமிழூர்

தமிழ் கூறும் நல்லுலகில் "மகாவித்துவான் பிள்ளை அவர்கள்" என்று சொன்னால் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களைத்தான் குறிக்கும். கம்பரைப்போல மிகுதியான பாடல்களை இவர் இயற்றியதால் "இரண்டாவது கம்பர்" எனவும் அறிஞர் உலகு இவரைக் குறிப்பிடும். இப்பெருமகனார் பல சிற்றிலக்கியங்கள், புராணங்களியற்றித் தமிழன்னைக்குச் சூட்டியுள்ளார்.

தமிழகத்தில் தமிழையும், சைவத்தையும் போற்றிக் காத்து வளர்ப்பதில் செட்டிநாட்டவராய நாட்டுக்கோட்டை நகரத்தாருக்குப் பெரும்பங்குண்டு பழுதுபட்ட பல ஆலயங்களை இவர்கள் புதுப்பித்தனர். எண்ணற்றத் தமிழ்ப்புலவர்கள் நூல்களியற்ற பண உதவியும் புரிந்தனர். சத்திரங்களும் தங்கும் விடுதிகளும் கட்டி புனிதப் பயணிகளுக்கு உதவினர். அறவழியில் பொருளீட்டி அறவழியிலேயே செலவிட்டனர். சூரை நாட்டில் வாழ்ந்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பிள்ளை அவர்களுடன் பழகி தமிழ்விருந்துண்டு மகிழ்வர். அவர்களில் துறவு பூண்டவர் ஒருவர். மற்றொருவர் வேதாந்த சாஸ்திர நிபுணர். இவ்விருவரும் பிள்ளை அவர்களிடம் அடிக்கடிவந்து உரையாடி மகிழ்வர். தேவி கோட்டை நாராயண செட்டியார் என்பார் அறக்குடியில் தோன்றியவர். பிள்ளையவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர். இரு நேத்திரங்களு மில்லாதவர். வன்றொண்டர் என்றே அழைக்கப்பெற்றவர். அவருக்குப் பிள்ளைய்வர்களைக் கொண்டு பாண்டி நாட்டு நகரத் கோவில்களுக்குத் தலபுராணங்கள் எழுதவேண்டும் என்ற பேரவாமிக்கிருந்தது. தமது உள்ளக்கிடக்கையை மகாவித்துவான் அவர்களிடம் வேண்டுகோளாக விடுத்தார். பிள்ளை அவர்களும் இசைந்தார். கண்டதேவிபுராணம், கோவிலூர்புராணம், வீரவனப்புராணம், சூரைமாநகர்புராணம் ஆகிய நான்கு புராணங்களை யாத்தளித்தார். இவை முறையே 1875, 1900, 1903, 1904ஆம் ஆண்டுகளில் திரு உ.வே.சா அவர்களால் பதிப்பிக்கப்பெற்றன. கன்னபுரம் பாகம்பிரியாள் பிள்ளைத் தமிழையும், புலவர் பெருமான் எழுதியுதவினார். 1. காரைக்குடி அருகிலுள்ள கோவிலூர் வேதாந்த திருமடத்தின் தலைவர் ஸ்ரீ சிதம்பர ஐயாவின் விருப்பப்படி செட்டிநாடு சென்று கோவிலூர் திருமடத்தில் தங்கி கோவிலூர் புராணத்தை பிள்ளை அவர்கள் இயற்றினார். பாடல்கள் நான்கு அடிக்குக் குறைந்தால் தங்கள் வளம் குன்றுமென அஞ்சி பணிந்து நயமாக பிரமுகர்கள் வேண்ட அவ்வாறே சாக்கோட்டை எனும் வீரவன புராணத்தை இயற்றினார்.

சூரை மாநகர்ப்புராணம்

புராணம் எனும் சொற்கு பழமை என்பது பொருளாகும், தமிழில்

தலபுராணங்கள் உரைநடையில் 484ம் செய்யுளில் 392ம் உள. வடமொழியிலிருந்து 115 புராணங்கள் தமிழில் செய்யப்பெற்றுள்ளன. குப்தர் காலத்தில் முதன்முதல் புராணம் தோன்றியதாக ஆய்வாளர்கள் குறிப்பர். தமிழில் கி.பி 1508 சிதம்பர புராணத்தை திருமலை நாதர் இயற்றினார். இவர் புராணத்திருமலை நாதர் என அழைக்கப் பெற்றார். மறுமையில் வீடுபேறு அடையலாம் என்பது மட்டுமல்லாமல் இம்மையில் வளமையான இனிமையான வாழ்வு பெறலாம் என்பதை விளக்குவதே தமிழ்த்தல புராணங்களில் அடிப்படை நோக்கமாகும். (வே. இரா. மாதவன், தமிழில் தலபுராணங்கள், பக். 15,23,185-246).

சூரை மாநகர் புராணம் 1866இல் பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. இந்நூலை ஆக்குவித்தவர் காரைக்குடி முரு. இல. இலக்குமணஞ்செட்டியார் புத்திரர் கிருஷ்ணன் செட்டியார். இதனைப் பதிப்பிக்க காரைக்குடி அறுபத்திமூவர் மடம் திரு.இராம.சொ.சொக்கலிங்கஞ்செட்டியார் உதவி புரிந்துள்ளார். 1904இல் பிள்ளையவர்களின் மாணாக்கர் மகாம கோபாத்தியாய உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

சூரை மாநகர் என்னும் சிற்றூர் காரைக்குடிக்கு அருகில் உள்ளது. இன்று அதனை வ. சூரைக்குடி என்பர். அதாவது வன்னியர் சூரைக்குடி. இவ்வூர் கிழக்கே சாக்கோட்டை எனும் வீரவனத்தையும் தெற்கே கோயிலூரையும் மேற்கே மயூரகிரி எனும் குன்றக்குடியையும் வடக்கே திரு மெய்யத்தையும் எல்லைகளாகக் கொண்டது. புராணப்படி சூரியன் வழிப்பட்டதால் சூரை எனவும் வதரி மரங்களிலிருந்ததால் வதரிவனம் எனவும் விஜயாலயன் ஆலயம் அமைத்து வழிபட்டதால் விசயாலபுரம் எனவும் அழைக்கப்பெற்றது.

இந்நூல் கடவுள் வாழ்த்து (21), ஆக்குவித்தோர் (3), அவையடக்கம் (2), சிறப்புப்பாயிரம் (2), திருநாட்டுப்படலம் (60), திருநகரப்படலம் (65), நைமிசவனப் படலம் (38), சூரியன் பூசித்தபடலம் (71), சூரன்பூசித்தபடலம் (42), பொன்னான விசயாலயத்தேவன் திருப்பனிப்படலம் (49), பொன் விசயாலயத் தேவன் நிருத்த தரிசன படலம் (28), சங்கப் புலவர் பூசித்தப் படலம் (108), ஆகிய படலங்களையும் பாடல்களையுமுடையது.

இந்நூலில் குறிப்பிடப்பெறும் பொன்னான விசயாலயத்தேவன் வரலாற்றுச் சிறப்புமிக்க குறுநில மன்னன் இவ்விசயாலயத் தேவன் மரபினர். கி.பி. 1339 முதல் கி.பி. 1608 வரை இப்பகுதியை ஆண்டவர்களும் மேலாண்மை செய்தவர்களுமாவர் (புதுக்கோட்டைக் கல்வெட்டு, 865) முகமதியர் படையெடுப்பில் திருப்பத்தூர் சிவாலயம் அவர்களால் சிதைக்கப் பெற்றது. சீரழந்த அச்சிவப்பதியைச் செப்பனிட்டவர் இக்குல முதல்வராவார். (நீலகண்ட சாஸ்திரி, பாண்டியர் வரலாறு, பக்.185).

திருமால், சூரியன், சூரன் முதலியோர் இங்குள்ள இறைவனைத் தங்கள் குறை நீங்கப் பூசித்து வழிபட்டனர். விசயாலயத் தேவன் கனவில் இறைவன் தோன்றி வதரியும் கொன்றையும் நிறைந்த பகுதியில்

தாமிருப்பதாகக் கூறினார். நனவிலும் சூரிய தீர்த்தமும், அதன் கரையில் சூரியனைப் போல் ஒளிவீசும் இலிங்கத்திரு மேனியும் கண்டார் விசயாலயத்தேவர். அங்கு எம்பெருமானுக்கு ஆலயமும் எடுத்தார். "சீதளி எனும் தீர்த்தத்தையுடைய திருப்பதியில் நாம் திரு நடம்புரிவோம். தேவர்களும் முனிவர்களும் அங்குவந்து நம்மை வழிபடுவர். நீ அங்கு வந்து எம் நடனத்தைக் காண்பாயாக என இறைவன் விசயாலயன் கனவில் தோன்றி கட்டளையிட மன்னவனும் அவ்வாறே செய்து மகிழ்ந்தார்.

(விசயாலயத்தேவர் திருத்தரிசன படலம். பா.19.)

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் அனைவரும் சிவப் பதிகள் பலவற்றிற்குஞ் சென்று வழிபட்டுவிட்டு, திருப்பத்தூருக்கும் வருகை புரிந்தனர். புலவர் பெரு மக்களின் வருகையை அறிந்த மன்னவன் அவர்களை அழைத்து வர தக்கார் சிலரை அனுப்பி வைத்தான். புலவர்கள் மறுத்துவிட்டனர். பின்னர் அரசன் அருந்தமிழ்ப்பா ஒன்று எழுதி அனுப்பினான். அப்பாடலாவது.

பிறந்த பிறப்பாற் பெறும்பேறு பெற்றே
மறந்து மினிப்பிறக்க வாரோஞ் - சிறந்த மதி
சேர்த்தானைப் புத்தூர் திருத்தளியா னைப்புவனங்
காத்தானைக் கூத்தாடக் கண்டு.

(சங்கப்புலவர்கள் பூசித்த படலம். பா.30).

புலவர்கள் பாடலைப் படித்துப் பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்தனர். பாவடிவிலேயே விடையும் அனுப்பினர்.

கற்றவர் புகழ்விசயா லயத்தேவன் பாடிவிடு
கவியுள் யாதுங்
குற்றமிலை குற்றமிலை குற்றமிலை கருத்துணராக்
கூற்றுக் குற்றப்
பெற்றிநினை யற்க நினையற்க நினையற்க வென
பேசுநீ போய்
மற்றவனைக் காணும் விருப்புடைய நாமென்பதுவும்
வகுத்தி என்றார். (பா.35)

பிள்ளையர்களின் பாடல்களின் சுவையுணரச் சில பாக்கள்
தூரை மாநகரத்தின் சிறப்பு:

பூவினில் தாமரை போலும் புத்தொளிர்
காவினில் கற்பகம் போலும் கண்ணிய
தேவினில் சிவபிரான் போலும் ஊர்களில்
சோவினில் பொலிவளச் தூரை மாநகர்.

(திருநகரப்படலம். பா.2)

இறைத்தன்மை

ஒன்றாகிப் பலவாகி யுருவாகி யருவாகி
யன்றாகி யின்றாகி யருளாகி மருளாகி
நன்றாகி தீதாகி நான் மறைச் சென் னியுமறவாத்
தென்றாகி புதியதாய சுந்தரே சுர சதணம்

(சங்கப்புலவர்கள் பூசித்த படலம் பா.87)

நூற்பயன்.

தூரையை நினைத்தோ ரீற்றிற்று றுன்னுவர் சிவசாலோகஞ்
தூரையைக் கண்டோ ரீற்றிற்று றுன்னுவர் சிவசாமீபம்
தூரையைத் தொழுதோ ரீற்றிற்று றுன்னுவர் சிவசாருபம்
தூரையில் வசித்தோ ரீற்றிற்று றுன்னுவர் சிவக்கலப்பே.

(தலவிசேடப்படலம் பா.19.)

இத்தகு புராணந் தன்னை எழுதுவோர் எழுதிவிப்போர்
வித்தகம் பொருந்தக் கற்போர் கேட்பவர் பொருள் விரிப்போ
ரத்தனை பேரும்ண்மே லயவிலாப் போகந் துய்த்துச்
சித்தநன் குடையராகி சிவலோக மருவி வாழ்வர் (பா. 27)

15.திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி

இளங்கண்ணன்
உடுமலை

பாடல்கள் எழுந்த சூழல்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சைவவேளாளர் மரபில் உதித்த சமயப்பற்றுளர் ஆதலின் நண்பர்களுடன் தலங்களுக்குச் செல்கையில் அங்குள்ளோர் இவரது கவித்துவப் பெருமை அறிந்து அத்தலத்தின் மீது ஏதேனும் ஒரு பிரபந்தம் பாடக் கோரிக்கை வைப்பது வழக்கம். அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றுதற் பொருட்டு இப்பிரபந்தங்கள் எழுதப்பப்பட்டன. அவற்றில் ஒன்று திருவூறை பதிற்றுப்பத்தந்தாதி.

மரபின் வழிவந்த பாடல்கள்

இவர் விடுதலை பெற்ற இந்தியாவிற்கு முன் வெள்ளையர் காலத்தில் வாழ்ந்தவர். இவருடைய முதுமைப் பருவத்தில் இந்தியாவில் சிப்பாய்க்கலகம் என்னும் முதற் சுதந்திரப் போர் நடைபெற்றது. இது போன்ற அரசியல் சமூக தாக்கங்கள் அப்பொழுது சற்றே எழத் தொடங்கின ஆனால் அதன் பாதிப்புகள் எந்த இலக்கியத்திலும் பிரதி பலிக்கவில்லை. இதற்கு இவருடைய பாடல்களும் விதிவிலக்கல்ல.

இவ்வாறு சமூகப் பிரக்ஞை உள்ள பாடல்கள் பாரதி காலத்தில் தான் எழுந்தன. ஓரளவு வள்ளலார் இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் எனலாம்.

நமது இலக்கியத்தின் பெரும்பகுதி அகம் புறம் நீங்கலாக சங்கப் பாடல்களில் வரும் அக இலக்கியங்கள் நீங்கலாக சமயம் சார்ந்தவையாகவே இருந்து வந்திருக்கின்றன. திருமுருகாற்றுப்படை தொடங்கி பிள்ளையவர்களின் பாடல்கள் மற்றும் அவரது சம காலத்தவரின் பாடல்கள் வரையில் சமயச் சார்புடைய தெய்வீக பனுவல்கள் பிரபந்தங்கள், காப்பியங்களாகவே, அமைந்து வந்துள்ளன.

இம்மரபு வழியே பிள்ளையவர்களும் தன் திறமையெல்லாம் சைவச் சார்புடைய பிரபந்தங்கள் பலவும் இயற்றுவதில் காட்டியுள்ளார்.

முற்கால பிற்கால பாடல்கள் இடையே அமைந்த வேறுபாடுகள்

உ.வே.சா. அவர்கள் இவர் பாடிய பிரபந்தங்களை இரு கூறாகக் கொண்டு, இளமை காலத்தில் இயற்றியவை என்றும் முதுமைக் காலத்தில் இயற்றியவை என்றும் பாகுபடுத்தி சில வேறுபாடுகள் காண்கிறார். பிற்காலத்தில் கற்பனை நயங்களும் அணிகளும் சிறப்பான கருத்துக்களும் அங்கங்கே அமைந்திருக்கும். சைவ சித்தாந்த கருத்துக்களும் பழைய இலக்கியங்களில் உள்ள பொருள்களும் சொற்களும் விரவிக் காணப்படும். இளமைக் காலப்பாடல்கள் எளிய நடையில் அமைந்தவை. சிவபெருமான்

பால் இயல்பாக அமைந்த பக்தியினால் அச்சுவை மலிந்த செய்யுட்கள் இவற்றில் காணப்படும். தேவார திருவாசகங்களிலுள்ள கருத்துக்கள் அமைந்த பாடல்கள் நிரம்ப, உள்ளதாக அமையப்பெற்றுள்ளன எனக் கருத்துக்கூறியுள்ளார்.

ஆனால் ஆழ்ந்து காண்பார்க்கு பிற்காலத்தில் அமைந்த தன்மைகள் இளமைக்காலத்தில் மொட்டாக அமைந்தே பின் விரிந்து மலராயின என்பது விளங்கும். மேற்கூறிய வேறுபாடுகள் இரு காலத்திற்கும் இடையே அமைந்த முரண்பாடுகள் அல்ல. அவை இருகாலத்திற்கும் இடையே அமைந்த பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடுகளே.

இதற்கு எடுத்துக்காட்டாக திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதியைக் காப்புக் கொள்ளலாம்.

செய்யுள்

செய்ய முகிலின் மெய்யயைன் நெரிய வரிய பெரியானென்
ஐயன் வளர்தென் திருவூறை யந்தாதியை யன் பாலுரைக்க
நையன் பரைவிட்டகலாத நால்வாய் முக்க ணிரண்டினையோர்
தையன் மதத்த ழைகியாங் கயமாமுகத்த டிதொழுவாம்

எனக் காப்பு செய்யுள் அமைந்துள்ளது.

செவ்விய மேகம் போன்ற உடலுடைய வேதன் அறிதற்கு அரிய பெரியானாகிய தலைவன் பற்றிய திருவூறை அந்தாதியை அன்பினால் பாட நைந்து உருகும் அன்பர்களை விட்டு அகலாத, துதிக்கையும் மூக்கண்ணும், நாற்கரமும், மதம்மொழி கன்னமும் கொண்ட யானை முகத்தானை அடிபணிந்து தொழுகின்றேன் எனக் காப்பு செய்யுள் அமைகின்றது.

இறையின் பெருமை

பூமா திருக்கு மணிமார்பன் புயநா வினையன் புருகூதன்
நாமா நறவே வழுத்தூறை நகர்வாழ் நம்பா நாறிதழித்
தாமா நினது நாட்குமலர் சாத்திப் பிறவிக் கடனீந்த
ஆமா றிதுவென் றறியேனை யாண்டாய் காண்டற் கரியானே

என அந்தாதியின் முதற் செய்யுள் தொடங்குகிறது.

திருமகள் மார்பில் தாங்கிய திருமாலும் காண்பதற்கு அரியானாய் திருவூறை நகரில் கொன்றை மாலையுடன் உறையும் சிவபெருமானே எனது பிறவிக்கடல் நீந்த உனது திருவடிகளுக்கு மாலை சாற்றி உய்வதற்கு அறியாதவன் தன்னை நீ ஆட்கொண்டு ஆளுகின்றாய் எனப்பாடியுள்ளார்.

காப்பு செய்யுளில் பிரமனாற் கண்டு கொள்ள அரியான் என்று தொடங்கி முதற் செய்யுளில் திருமாலாற் கண்டுகொள்ள அரியான் என்று முடித்து அவன் அரியதன்மையும், அவன் அடியார்க்கு இரங்கியாளும் எளிய தன்மையும் ஒருங்கே இரு செய்யுள்களின் வாயிலாகத் தொடர்பு படுத்திப்பாடியுள்ளார்.

சிவன் சோதிவடிவமாக நின்றமின் அயனும் அரியும் அவன் அடிமுடி காணாத தொன்மம் தேவாரம் திருவாசகம் முதலியவற்றில் பரக்க காணக்கூடிய கருத்தைக் கொண்டு அவன் அரிய தன்மையும் ஒன்றுக்கும் பற்றாத அடியாருக்கு இரங்கி இறங்கி வரும் எளிமைத் தன்மையும் ஒருங்கே காட்டி அவன் பெருமையை நிலைநாட்டுகிறார்.

அயன் நாமகள் கேள்வன், அரி திருமகள் கேள்வன், கல்வி அறிவினாலும் செல்வச் செழுமையினாலும் இறையினை ஆய்ந்து அறியலாம் என்பது அறியாமையாகும் என்பதே தொன்மத்தின் உட்கருத்தாகும். செருக்கு கொண்டு இறையினை ஆய்ந்தறிய புகின் அவன் அதற்கு வசப்படான் என்பது கருத்தாகும்.

குறட்பா கருத்து

ஈண்டு இச்செய்யுளில் குறட்பா கருத்து மிளிர்கிறது

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேராதார்

இறைவன் திருவடியை நினைப்பவர் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடப்பர்.

நினையாதவர் கடக்க இயலாது என்ற குறட்பா கருத்தையும் இப்பாடலில் பிரதிபலித்துள்ளார்.

உயிரின் சிறுமை

இறையின் பெருமை பற்றிக் கூறியவர் உயிரின் சிறுமை பற்றியும் எடுத்துக் கூறுகிறார்.

பணிகின் றேனிலை நாத்தழும் புறதினை பலகவி யாற்பாடத்
துணிகின் றேனிலை தீவினை தொலைக்க நின் றெண்டரிற் றெண்டாகத்
தணிலின் றேனிலை யுள்ளநெக்கு ருகியுன் நன்களி றைம்பூக்கொண்
டணிகின் றேனிலை யெங்ஙன முய்குவே னரதன புரத்தானே

இறைவனின் தாள்களில் பணியாது இருக்கின்றேன். பலகவிபாடி நாக்குத் தழும்புறு மாறு உன்னை போற்றவில்லை, உன்னைப் போற்ற துணியவில்லை தீயவினையினைப் போக்கிக் கொள்ள உன்னடியாரின் அடியவந்தத் தாழ்ந்து தொண்டு புரியவில்லை. உள்ளம் நையிந்து உருகி உன் தாள்களில் மலர்கள் கொண்டு பணிந்ததில்லை. அரதன புரத்தானே நான் எப்படி உய்வினைப்பெறுவேன் எனப் பாடுகிறார்.

இப்பாடலுக்கு ஒப்பாக கந்தரலங்காரத்தின் எழுபத்தி ஐந்தாவது பாடல் அமைகின்றது.

படிக்கின்றிலை பழ நீத்திருநாமம் படிப்பவர்தான்
முடிக்கின்றிலை காலபன் கிலைமுகி யாமலிட்டு
மிடிக்கின்றபர மானந்த மேற்கொள் விம்மி விம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமேதஞ்ச மேது நமக்கினியே

என்பது பாடல்

படிக்கின்றிலை

பிடித்தல் என்பது பயிலுதல், பரமபதியின் திருப்பெயர்களை ஓயாது பயிலுதல் வேண்டும். ஞானப்பழமாகிய அவன் திருப்பெயர்களை இடையறாது பயிலுதல் வேண்டும், இக்கருத்தையே பிள்ளையவர்கள் பலகவிபாடி நாதழும்புற துணியாதிருக்கின்றேன் என்றார்.

படிப்பவர் தாள் முடிக்கின்றிலை

பழனிமேவுகின்ற பரமனை பரவி அவனுடைய திருப்பெயர்களை பயிலா விடினும் அவன் பெயரை இடையறாது பயிலும் அடியவர் பாதங்களை தலை மேல் சூடிக் கொள்ளுதல் வேண்டும். அடியவர் வணக்கம் சால சிறந்தது.

இதனையே பிள்ளையவர்கள் தீவினை தொலைக்க தொண்டரின் தொண்டுகளைத் தணிந்து பணிதல் வேண்டும் என்கிறார்

முருகா என் துதி

முருகா என்று ஒருமுறை கூறுவோர் முடிமேல் இருதாள்களும் இறைவன் வைத்தாள்வான் ஆதலால் அவன் பெரும்பெயர் முருகா என ஓதுதல் வேண்டும்.

முகியா மலிட்டு மிடிக்கின்றிலை

அறிஞர்க்கு சலியாது வழங்கி வறுமை யடைதல் வேண்டும் அடியவர்க்கு அன்னமளித்து தனக்கு தரித்திரமும் விரத மிருப்பதனால் உடல் இளைப்பும் இறைவன் எனக்கு தந்தருள வேண்டு மென்று சிவப்பிரகாசர் வேண்டுகிறார். ஏற்போர் சலிப்படையாது மகிழுமாறும் கொடுப்போர் சலிப்படையாது வழங்குதல் வேண்டும் உறப்பு நலமிலார்க்கு வெறுப்பிலாது ஈதல் வேண்டும்.

பரமானந்த மேற்கொள விம்மி விம்மி நடிக்கின்றிலை

மேற்கூறிய வகையில் வழிபாடுகளால் உள்ளம் நிறைந்து உவகை மிகுந்து வல்வினை கரைந்து திருவருள் உறைந்து நிற்ப அதனால் இன்பம் மேலிட விம்முதலால் பரவசமாகிய ஆனந்த கூத்தாடுதல் வேண்டும் இதனையே பிள்ளையவர்கள் உள்ளம் நெகிழ்ந்துருகி இருதாள்களில் மலர் இட்டு தொழுதல் வேண்டும் என்கிறார்.

நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே

ஏ உள்ளமே மேற்குறிப்பிட்ட நற்செயல்கள் புரியாதார்க்கு
அடைக்கலம் ஏது என்கிறார்.

இது போன்று பிள்ளையவர்கள் மேற்கூறிய நற்செயல்கள் செய்யாதார்க்கு உய்வு ஏது என வினவுகிறார்.

திருசதக கருத்துக்கள்

ஈண்டு திருசதகத்தின் முப்பத்தியோராம் பாட்டும் ஒப்பு நோக்கி உன்னத்தக்கது.

ஆடவல்லானினை ஆடல் கண்டு பரவசப்பட்டு ஆடுவது இல்லை. அவன் திருவடியில் அன்பு வைத்து என்பும் உருகுமாறு பாடுவதும் பதைப்பதும் இல்லை பணிந்து அவன் திருவடிகளை சென்னியில் சூடுவதுமில்லை எவ்வித உணர்வற்ற பிணம் போல் இருக்கும் நெஞ்சே அவனைத் துணையாகக் கொள்ள தேடுவதுமில்லை. தேடி தெருதோறும் அரற்றுவதுமில்லை இவ்வாறு இருக்கையில் இனிச் செய்வது யாது என்பது அறியேனே என மணிவாசகர் தன் நெஞ்சுக்கு கூறுவது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாம்.

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பினை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலிபிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருதோறலறிலை செய்வதொன்று அறியேனே

என்பது பாடல்

இல்லையுன்க ழற்கணன்றி யெற்கு வேறி நட்புடற்
கல்லையன் றெடுத்துவில் லெனக் குனித்த காவலா,
வல்லையம்பு யப் பொருட்டை மத்தகத்தை யேற்றியே
வெல்லைகொண்ட கொங்கை பங்க வேதவூறை நாதனே

மேருமலையினை வில்லாக வளைத்த காவலனே யானையை எற்றியே வெற்றிகொண்ட மாது ஒருபாகனே வேதங்கள் ஓதும் வூறை நாயகனே உன் பாதங்களன்றி வேறு இடம் எனக்குப் புகல்இல்லை என்று பாடுகிறார்.

இனி திருசதகம் 94ஆம் பாட்டு ஒப்பு காணலாம். எம்பிரானே நின் கருணைக்கு எல்லையில்லை. நான் ஏதும் கொண்டு ஏது செய்தாலும் வன்மையுடை எனக்கு இன்றும் உன் தாள் காட்டி மீட்கவும் மறுக்காத விரிந்த வெளியானே என்று மணிவாசகர் பாடுகிறார்.

எல்லை இல்லை நின்கருணை எம்பிரான் ஏது கொண்டு நான் ஏது செய்யினும்
வல்கி யே யெனக்கு இன்னும் உன் கழல் காட்டிமீட்கவும் மறுவில்வானனே

மேலும் பாடலின் முற்பகுதியில்,

இல்லை நின்கழற் கன்ப தென் கனே ஏலம் ஏலுதற்குழலி மங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சை கொண்டு என்னை நின் கழற் கன்பன் ஆக்கினாய்
என்கண் நின்கழல் பால் அன்பேது ஏலம் மணக்கு குழலியின் பங்கனே

கல்லொக்கும் நெஞ்சினை மென்மையான கனியாக்க நீ இச்சை கொண்டு நீ என்னை உன் கழற்குரிய அன்பன் ஆக்கினாய் என மணிவாசகர் இறையின் அளவற்ற கருணை பற்றி கூறுகிறார் மாணிக்கவாசகர்.

அம்பு சங்கரா வூறை சதாசிவ
அம்பு பம்பு நெடுஞ்சடையாயென
வெம்புகின்றிலன் வீரிட் டலறிலன்
நம்புகின்றிலன் னாறுய்யு மாறென்னே   என்று பாடுகிறார்

திருவூறையில் உறையும் சதாசிவன், சங்கரன், சம்பு, கங்கை தாங்கிய நெடுஞ்சடையன் என மனம் வெதும்பி வீரிட்டு அலறாத நான் உய்யு வழி உண்டு என நம்புதற்கில்லை என்று பாடுகிறார்.

ஆமாறுன் திருவடிக்கே சுகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைத்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே

நின் திருவடிக்கு ஆகுமாறு உளம் குழைந்து அன்பினால் உருகமாட்டேன். மலர்மாலை கட்டியிட்டு ஏத்துதல் செய்யேன். புகழ்ந்து பாடமாட்டேன். வானவர்க்கெல்லாம் அரசனான உன் திருக்கோயில் பெருக்கி மெழுகேன் ஆனந்த மேலீட்டால் கூத்தாட மாட்டேன். சாகுமாறு விரைகின்றேன் இறைவனே என உளம் உருகிப் பாடிய கருத்துக்களை நினைவு கொள்ளுமாறு பிள்ளையின் பாடலும் அமைந்துள்ளது.

சூட வேண்டு நின் னடிகள் போற்றியான்
    சுற்ற வேண்டு நின் னூறைப் போற்றிவாய்
பாட வேண்டு நின் சீர்கள் போற்றி கண்
    பார்க்க வேண்டு நின் வடிவம் போற்றியான்
கூட வேண்டும் நின் னடிகள் போற்றியுட்
    கொள்ள வேண்டு நின் னன்பு போற்றிமால்
தேட வேண்ட நண் மேகம் போற்றிநுண்
    சிற்றிடைக் குயில் பாகம் போற்றியே!

உனது திருவடிகளைப் போற்றி நான் தலையில் சூட வேண்டும் நீ கோயில் கொண்டுள்ள வூறையினை வலம் வர வேண்டும். நின் புகழினை வாயாறப் பாட வேண்டும். உன் திருவடிவைப் போற்றி என்கண் பார்க்க வேண்டும். உன்னைப் போற்றி உன்னடிகளிற் கலக்க வேண்டும். நின்னன்பினைப் போற்றி தான் மனதிற் கொள்ள வேண்டும் மலரால் தேடபட்ட அதன் மேகமே போற்றி நுண்ணிய சிறு இடை, நடை, குயில் போன்ற குரலுடையானே இடபாகமாக கொண்டவனே உன்னைப் போற்றுகின்றேன் எனப் பாடியுள்ளார்.

இதற்கு ஒப்பாக திருசதகம் 100 வது பாடல் உள்ளத்தக்க தாம்.
பாட வேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு
ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்து
ஆடும் நின்கழற் போது நாயினேன்

கூட வேண்டு நான் போற்றி இப்புழுக்
 கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடு தந்து
 அருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே

என மணிவாசகர் உச்சநிலையான வீடு பேற்றையே பெற இச்சித்தமையைக் காட்டுகிறார்.

பாட்டின் சொற்றொடர்கள் மற்றும் கருத்துக்கள் பிள்ளையவர்கள் பாடலிலும் காணலாம்.

இயற்கை வருணனை

இனி தேவாரப் பாடல்கள் போன்று நீர்வளம், நிலவளம் முதலியவற்றைப் பாடியுள்ளமை காணத்தக்கதாம்.

அளிக்கும் புறு பங் கயபொருட்டி லளிந்த தேமாங் கனியுடைந்து
துளிக்கும் பிரசம் பெருகிவய றேறும் பாய்த்து விளைசெந்நெல்
களிக்கும் கமுக மீப்பாய்ந்து காட்டு மூறை

தேன் போன்ற இனிய மாங்கனி உடைந்து, வண்டின் வட்டம் தேனை நுகரும் படியானத் தாமரையின் மீது வீழ தேன் துளிகள் பெருகி வயல் தோறும் பாய்ந்திட செந்நெல் தழைத்து வளர, பாக்கு மரத்திற்கும் பாய வளரும் செழுமையுடை வூறை எனப்பாடும் இடத்து பிள்ளையவர்களின் கற்பனைத் திறன் மிளிரக் காணலாம்.

. . . . . . தேமா
துளத்தின் மந்திபாய்ந் தக்கனி பறித்து விண்
 டொருகழங் கென வோச்ச
வளத்தின் விஞ்சிய வூறை

தேனினும் இனிய மாதுளங்கனி பறித்து அதன் பரல்கள் விண்ணோக்கி அம்மானை ஆடும் குரங்குகள் கொண்டு வளத்தில் விஞ்சிய வூறை என்றும்

குருகுழத்தியர் கண்ணிழன் மீனெனக்
கொத்துதண் பனைச் செந்நெல்
அருகு சென்றன மடையுறு மூறை

வயல்களில் உழத்தியர் கண்கள் நீரின் நிழலாகத் தோன்றுகின்றன. அவற்றை மீன்கள் என எண்ணி அங்கு திரியும் கொக்குகள் தன் மடமையால் கொத்தி தின்ன பார்க்கும் காட்சியுடை வூறை என்றும்

ஆலையிற் கழைகறொடைந்தசா றோடி
 யவர்தலை யரம்பையைச் சாய்த்து
சோலையிற் புகுந்து கமுகினை மாய்த்துத்
 துன்னு செற்நெல்வயற் பாய்ந்து
வேலையிற் பெருகு மூறை

ஆலையிற் இட்ட கரும்பு உடைந்து அதன் சாறு ஓடி வாழையை சாய்த்து சோலையிற் புகுந்து பாக்கு மரத்தினை மறைத்துக் கொண்டு செந்நெல்வயிலிற் பாய்ந்து கடலில் கலக்கும் வூறை என்றும்

கொண்டறவழ் பெருஞ்சோலைப் பலவீன்ற கனியுடைந்த
கொழுஞ்சாறோடி
ஞெண்டையுமிட முதலாப் பணைகாடாறும் புகுமுறை

மேகங்கள் தவழும் பெரிய சோலையிற் பழுத்த பலா உடைந்து அதன் சாறு நண்டுகள் இடையே செல்லும் வயல்களிற் பாயும் வூறை என்றும்

வூறை மாநகரின் மருதநிலத்தின் வளப்பத்தை கற்பனை நயத்துடன் பாடியுள்ளார். தேனும், கன்னலும், பலாவும் உடைந்து அதன் சாறு வயலுக்குப் பாயும் நீருடன் கலந்து செந்நெல்லை விளைவிக்கின்றது என நிலத்தின் வளத்தை கற்பனையுடன் மிகுவித்துக் காட்டுகிறார். உழத்தியர் கண்களின் நிழல் மீனென எண்ணிக் குருகுகள் கொத்துவது நயமான கற்பனையாகும்.

இப்படி இயற்கையின் வளத்தை எழில் கற்பனையுடன் வர்ணித்துப் பாடியுள்ளார்.

நடையியல்

பிற்காலத்தில் பிள்ளையவர்களின் அந்தாதிகள் யமகம், திரிபுடைய அந்தாதிகளாகப் பாட பெற்றன. அவற்றின் சிறு கூறுகள் இவ்வந்தாதி யிலும் காணலாம்.

புரம டங்கமுன் வென்றவ நூறைவாழ்
புண்ணியம் பெருஞ்செல்வன்
சிர மடங்கலுஞ் செஞ்சடைக் காட்டினன்
திரண்ட தூண் டனிற்றோன்றும்
நரம டங்கலை யுடல் வகிர்ந் தாண்டவ
நாயினுங் கடையேனை
உரம டங்கலைந் தாண்டு கொண்டானிதை
யொக்குமு திய மென்னே

திரிபுரம் அடங்க முன் வென்று வூறை வாழ் புண்ணியன் பெருஞ்செல்வன் தன் தலை அடங்க செஞ்சடையைக் காடு போன்று உடையான் திரண்ட தூணினின்று புறப்பட்ட நரசிங்கத்தை சரபேஸ்வரனாக வந்து வகிர்ந்து ஆண்டவன் ஆயினும் கடை நிலைக்குரியானின் மனமடங்கி ஆண்டு கொண்டதற்கு நிகரான ஊதியம் உண்டோ? என்று தன் மனம் அடங்கச் செய்தலின் பெருங்காரியம் மற்றவையல்ல வெனக் கூறுகிறார்.

அகத்திரா தெடுங்கோ ணென்னலிற் கழிந்த
தாகுமீ தெனப்பலர் கூடிச்
சகத்திரா வருமுன் னாலைக்குது மெனவே
சாற்றுதன் முன்ன மெய்டிரண்டு

முகுந்திரா வணன் வெற் படி விழுந்தலற
முன்னறின் நடர்த்திடு மலர்த்தான்
நகுந்திரா டரவப் பணியிடு றையினும்
நல்லடி காண நின்றேனே

உலகிருட்டுவதற்கு முன்னரே பத்து தலைகளும் நிலத்திற் யிற்றுவீழ மாலால் கணைபட்டழிந்த இராவணன் கையில் மலையினை கவ்வி எறிய முற்பட்ட பொழுது அடர்ந்த மலர்கள் சூழப்பெற்ற தாள், அரவமாகும் அணியாகக் கொண்ட தாள் நகத்தாள் மலையினை அழுந்த அடியிற் சிக்கி அலறிய இராவணனின் செருக்கு அழியப்பெறச் செய்த நற்றாள் காண நிற்கின்றேன் எனப் பாடுகிறார்.

இராவணன் செருக்கு அடக்கியாண்ட திருநாள் உடையவனே, அத்தாளை காண நின்றேன் என்றும் முகத்தான் தன் செருக்கு அடக்கியாண்டருள வேண்டும் என்று குறிப்புணர்த்திப் பாடுகிறார்

செங்குவளை கண்கள், தாமரை முகம், திரண்ட கொங்கை கைகளுக்கு வளை பொருந்திய உடலுக்கு வளைந்து பெண்கள் பால் திரிந்து உழலும் வீணனாக ஆகிவிட்டேன், உமையொரு பாகனாகிய தலைவனுக்கு அந்நாள் நல்லவன் ஆவது நெஞ்சே என்று தன் நெஞ்சே பார்த்துப் பாடுகிறார்.

செய்குவளை நயனம்மர விந்தமுகம் கோங்கரும்பு
திரண்ட கொங்கை
கைக்குவளை பொருந்தலின் மின் சுற்றியாழ் கூடிதடங்காக்
கணம்பூ வென்னா
மெய்க்குவனை வுறுமளவு மடவார் பாற் திரிந்துழலும்
வீணனானேன்
ஐக்குவளைச் செவிபாகற் கூறை கெஞ் ஞான்று நல்ல
னாவனெஞ்சே என்பது பாடல்,

மின்னர் பாடல்களில் தலத்தின் வேறு பெயரான அரதனபுரம் என்பதைக் குறிக்கின்றார். அங்குள்ள வெற்பு தேவவெற்பு என்றும் பாயும் நதி நந்தா நதி என்றும், இறைவன் பெயர் அத்தரத்தினேசுவரர் என்பதை தூய்ய மாமணியே என்றும் அம்மையின் நாமம் சீரவாணி என்றும் பாடுகிறார்.

காதும் பிறவிக் கடல் வீழ்த் திருவினையின்
தீதும் குறைத்து முத்தி சேர்க்குமே-போதம்
அடையூறை யந்தாதி யைக்கருது வாருக்
கிடையூறை நீக்குவதன்றி

என்ற பயனைப் பாடி நூல் நிறைவுறுகின்றது.

பிள்ளையவர்களின் பாடல்களில் முன்னோர் சொல் போற்றியாண்டு வருதலும், தேவாரம் திருவாசகம், மற்றும் திருமுறைகள், சைவ சித்தாந்த கருத்துக்கள் மிளிர வருதலும், நடையியலில் யமகம், திரிபு போன்றவை கையாளப்படுதலும், கற்பனை வளத்துடன் இயற்கை வர்ணனைகள் காணப்படுதலும் இயல்பாக அமைந்தமை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக திருவூறைப்பதிற்று பத்தந்தாதியைக் கொள்ளலாம் என்றளவில் நிறைவு செய்யப்படுகின்றது.

16. அய்யர் கண்ட ஆசிரியப் பிரான்

வீ. உண்ணாமலை

அண்ணாமலைநகர்

மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமிழகத்தில் சோழநாட்டில் திருச்சிக்கு அருகில் உள்ள எண்ணெய்க்கிராமத்தில் 6.4.1815-இல் பிறந்தார். தமிழ்த்தாத்தா என அழைக்கப்படும் உ.வே.சாமிநாதையர் 1855 பிப்ரவரி 19இல் பிறந்தார். இவ்விருவருக்கும் இடையே நாற்பது வயது வித்தியாசமிருந்தது. இக்கட்டுரை பிள்ளையவர்களிடம் சக பண்டிதர்கள் கொண்ட மதிப்பு, மரியாதை, உயரிய எண்ணம் உ.வே.சா தமது குருவின் மீது கொண்ட ஆர்வம், பற்று, பாசம், பிள்ளையவர்களிடம் உ.வே.சா கொண்ட குரு சிஷ்ய உறவு ஆகியவற்றை ஆய்கிறது. பிள்ளையவர்கள் எண்ணிறந்த நூல்கள் இயற்றியுள்ளார்.

இவர் தேவார, திருவாசகங்களில் தோய்ந்த நெஞ்சினர். சொற்பொழி வாற்றுவதிலும், பாடம் சொல்லுவதிலும், செய்யுளியற்றுவதிலும் அவருக்கு நிகர் அவரே என்பர்.

விருத்தாசல ரெட்டியார் பாடம் சொல்லும் காலத்தில் இடையிடையே தமக்குத் தெரிந்த வித்துவான்களைப் பற்றியும் சொல்வார். பிள்ளை அவர்களைப் பற்றியும் அடிக்கடி கூறுவார். திருக்குறள் முதலிய நூற் பதிப்புகளில் உள்ள அவருடைய சிறப்புப் பாயிரங்களின் நயங்களை எடுத்துச்சுட்டிப் பாராட்டுவார். மேலும் அவர்,

> .... *அந்த மகானை நான் பார்த்ததில்லை; ஆனால் அவர் பெருமையை நான் கேள்வியுற்றிருக்கிறேன், அவர் காவேரிப் பிரவாகம் போலக் கவிபாடுவாராம். எப்பொழுதும் மாணக்கர்கள் கூட்டத்தின் நடுவேயிருந்து விளங்குவாராம் அவருக்குத் தெரியாத தமிழ்ப் புத்தகங்களே இல்லையாம். எனக்குச் சில நூல்களிலும் உரைகளிலும் சந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றை அவரிடம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று தனியே குறித்து வைத்திருக்கிறேன். எப்பொழுது சந்தர்ப்பம் நேர்கிறதோதெரியவில்லை.* (என் சரித்திரம் ப.149)

எனக் கூறுவாராம்.

மேலும் அவர் குறிப்பிடும் போது,

> ....*நாங்களெல்லாம் மேட்டு நிலத்தில் மழையினால் ஊறுகின்ற கிணறுகள். என்றும் பெய்யாமல் ஓடுகின்ற காவிரி போன்றவர் அவர். அவரிடம் போய்ப் படிப்பதுதான் சிறந்தது* (என் சரித்திரம் ப.150)
> என்பாராம்.

இப்பகுதிகளால் ரெட்டியார் பிள்ளையவர்கள்பால் கொண்ட பெருமதிப்பை அறியலாம்.

உ.வே.சாவின் முதல் தமிழாசிரியராகிய சடகோபையர் பிள்ளையவர்களைப் பற்றி குறிப்பிடும்போது,

> ....*அவர் ஒரு மகாகவி, சிறந்த புலவர் மிகவும் பெரியவர் .... நீ எப்போது அவரிடம் போவதாக நிச்சயித்தாயோ அப்போதே உன் கஷ்டமெல்லாம் தீர்ந்ததென்றே சொல்வேன்* (என் சரித்திரம் ப.153)

என்கின்றார். இங்கு, சடகோபையர் பிள்ளையவர்பால் கொண்ட உயரிய மதிப்பினைக் காணலாம்.

பிள்ளையவர்களிடம் உ.வே.சா தமிழ்ப் படிக்க போகின்றார் என்பதனை அறிந்த கோபாலகிருஷ்ண பாரதியார், பிள்ளையவர்களைப் பற்றி குறிப்பிடுகையில்

> *அப்படியா? சந்தோஷம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நல்ல வித்துவான், நல்ல குணசாலி, உபகாரி, சிறந்த கவி, ஆனால் அவர் சங்கீத விரோதி, சங்கீத வித்துவானேன்றால் அவருக்குப் பிரியமிருப்பதில்லை* (என் சரித்திரம் ப.172) என்பார்.

இப்பகுதி பிள்ளையவர்களைப் பற்றிய சரியான கணிப்பாகும், தமிழ்க்கல்வி படிக்க வந்து சங்கீத நாட்டம் ஏற்படுத்திக்கொண்டால் நோக்கம் சிறப்பெய்தாது என்னும் பிள்ளையவர்கள் கருத்து ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இவற்றோடு மட்டுமல்லாமல் தர்மதானபுரம் கண்ணுபையர் என்ற வித்துவான் வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தைப் பிரசங்கம் செய்து சன்மானம் பெற்று ஜீவனம் செய்து வந்தார். சபாபதி என்னும் வித்துவான் இராமாயண பிரசங்கம் செய்பவர் இவர்களோடு பிள்ளையவர்களைப் பார்க்க பிரபுக்கள், வித்துவான்கள் வருவார்கள். இவர்கள் பேசும்போது பல்வேறு விஷயங்கள் உ.வே.சா.வுக்கும் மற்ற மாணவர்கட்கும் பயன்கிட்டும். இத்தகைய அறிவும், பெருமையும் மிக்க பிள்ளையவர்களைத் தமிழ் உலகே தலை வணங்குகையில் தம் ஆசிரியரை அவர் வணங்கி போற்றும் பாங்கினைக் காணலாம். இதனை,

> *...பிள்ளையவர்கள் தேசிகரைச் சாஷ்டாங்கமாக வணங்கினர். அவருடைய சரீர அமைப்பு அப்படி வணங்குவதற்கு எளிதாய் இடம் கொடாது. சிரமப்பட்டே வணங்க வேண்டும். ஆதலின் அவர் கீழ் விழுந்து நமஸ்காரம் செய்தகாட்சி எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. அவர் சிகாமணியாகிய அவர் புலமை நிலை மிக உயர்ந்தது. பிறரை வணங்காத பெருமையை உடைய அவர் அவ்வாறு பணிந்து வணங்கியபோது அவரது அடக்கத்தையும் குருபக்தியையும் உணர்ந்து பின்னும் வியப்புற்றேன்* (என் சரித்திரம் ப.212)

என்பதனால் அறியலாம்.

இனி பிள்ளையவர்க்கும் உ.வே.சாவுக்கும் இடையே உள்ள பிற செய்திகளைக் காண்போம்.

1870-71 இல் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நாகப்பட்டினபுராணம் அரங்கேற்றி நாகப்பட்டினத்திலிருந்து மாயூரம் சென்றார். சாமிநாதையர் முதல் செங்கணம் விருத்தாசல ரெட்டியார் வரையில் சொன்ன செய்திகள் கொண்டு மனதுக்குள் பிள்ளையவர்கள் உருவத்தை, உ.வே.சா. சிருஷ்டித்தார். தனக்கு அவர் பல நூல்களைப் பாடம் சொல்வது போலவும், பல நூல்களைப் பாடம் கேட்பது போலவும், அன்பு பாராட்டுவது போலவும் பாவனைச் செய்து கனவு காண்பாராம். தியாகராஜ முதலியார் பிள்ளையவர்களைக் கொண்டு திருத்துருத்திப் புராணம் தமிழில் இயற்றிவித்தார். அவ்வமயம் உ.வே.சா முதன்முறையாக பிள்ளை அவர்கள் தோற்றத்தைக் கண்டு வியந்தார். இதனை,

அப்புலவர் பெருமான் வரும்போதே அவருடைய தோற்றம் என் கண்ணைக் கவர்ந்தது. ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதை போல் அவர் வந்தார்.நல்ல வளர்ச்சியடைந்த தோற்றமும், இளந்தொந்தியும், முழங்கால் வரையில் நீண்ட கைகளும், பரந்த நெற்றியும், பின் புறத்துள்ள சிறிய குடுமியும், இடையில் உடுத்தியிருந்த தூய வெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வரென்று தோன்றச் செய்தன. ஆயினும்........... ....நடையில் ஓர் அமைதியும் வாழ்க்கையில் புண்பட்டுப் பண்பட்ட தளர்ச்சியும் இருந்தன. அவருடைய தோற்றத்தில் உற்சாகம் இல்லை, சோம்பலும் இல்லை, படபடப்பில்லை, சோர்வும் இல்லை. (என் சரித்திரம் ப. 159)

என்னும் பகுதியால் கண்டுகொள்ளலாம்.

உ.வே.சா. குடும்பச் சூழல் காரணமாக திருவிளையாடல் புராணம் வாசித்து வந்தார். இதனால் பிள்ளையவர்களை வெகுநாட்கள் பிரிந்திருக்க வேண்டிய சூழல் இருந்தது. பிரசங்கத்தை நூற்றுக்கணக்கானோர் ரசித்து அன்பு வைத்தாலும் குரு இல்லாத இடம் சொர்க்கமாக இருப்பினும் உண்மையான மாணவனுக்குப் பெரிதாக இருக்காது என்பதனை உ.வே.சா,

.... ஆசிரியர் அன்பு இல்லாத இடம் சொர்க்கலோக மாக இருந்தால் தான் என்ன? ஆசிரியர் பிரிவாகிய வெப்பம் அந்த இடத்தைப் பாலைவனமாக்கிவிட்டது. நூற்றுக்கணக்கானவர்கள் அன்பு வைத்துப் பழகினாலும் அந்த ஒருவர் இல்லாத குறையே பெரிதாக இருந்தது (என் சரித்திரம் ப.370) எனக் குறிப்பிடுவதால் அறியலாம்.

தனது உணவைக் காட்டிலும் மாணவர் உணவு விஷயத்தில் தாயைக் காட்டிலும் அன்புடையவராகப் பிள்ளைத் திகழ்ந்ததை உ.வே.சா,

"பெற்றதாயைவிட மிகவும் அன்பாக, நடத்துகிறார் என்று சொன்னேன். அந்த வார்த்தைகள் என் தாயார் காதில் விழுந்தன" என்ன அப்பா அப்படிச் சொல்கிறாய், தாயாரைக் காட்டிலும் ஒருவர் அதிக அன்பு காட்ட முடியுமா? என்று கேட்டார். என் வார்த்தைகளால் அவர்சிறிது வருத்தத்தையே அடைந்தார்

(என் சரித்திரம் ப. 273) எனக் குறிப்பிட்டுள்ளார்.

உ.வே.சாவுக்கு அம்மைத் தழும்பு ஏற்பட உடம்பு முழுவதும் விபூதி

கவசம் தரித்திருந்தார் தனது குரு வருந்தகூடாதே என்று ஆனாலும் பிள்ளையவர்கள் அதைக் கண்டு பிடித்துவிட்டார். உடல் நலன் பேணுமாறு கூறினாராம். திருவிளையாடல் புராணம் முடித்து விட்டு பிள்ளையவர்கள் கடிதம் காணமல் நேரில் காண உ.வே.சா வந்தார் உணவு கூட அருந்தாமல் பிள்ளை அவர்களைக் கண்டு உரையாடி மகிழ்ந்த அன்பு நிகழ்வை,

பிறகு இருவரும் பேசிக்கொண்டே இருந்தோம். பத்து மாதங்களாக அடக்கி வைத்திருந்த அன்பு கரை புரண்டு பொங்கி வழிந்தது. என் உள்ளத்தே இருந்த பசி ஒருவாறு அடங்கியது
(என் சரித்திரம் ப.376) என்னும் பகுதி கூறும்.

உ.வே.சா. அம்பரில் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்பதோடு வேலுப்பிள்ளையின் தம்பியாகிய குழந்தை வேலுப் பிள்ளைக்குச் சேக்கிழார் பிள்ளைத் தமிழும் திருவிடை மருதூருலாரும் பாடம் சொன்னார். இதனை கவனித்த ஆசிரியர்,

சாமிநாதையர் புராணம் பிரசவங்கள் செய்த பழக்கத்தால் நன்றாக விஷயங்களை விளக்குகிறார் என்று அருகிலிருந்தவர்களிடம் கூறினார் (என் சரித்திரம் ப. 374)
என்னும் பகுதியால் தெரியலாம்.

இப்பகுதி தனது மாணவர் மீது பிள்ளையவர்கள் கொண்ட நம்பிக்கையைச் சுட்டுகிறது. ஆசிரியர் மாணவனை மனமாறப் பாராட்டுவதை,

சாமிநாதையர் சுறுசுறுப்பாக இருக்கிறார். எல்லா வேலைகளும் தெரிந்து கொண்டுடிருக்கிறார் என்று பிள்ளையவர்கள் என்னைப் பாராட்டுவார். அப்பாராட்டு உண்மையன்போடு வெளிவருவதாதலின் உள்ளத்தைக் குளிர்விக்கும் (என் சரித்திரம் ப. 189)
என்பதனால் அறியலாம்.

பிள்ளையவர்கள் காலை, மாலை தோட்டத்திற்குச் சென்று செடி, கொடிகளைப் பார்வையிடுவார், பட்டுப்போயுள்ளதா, தளிர்விடுகிறதா எனப்பார்ப்பார். தளிர்கண்டால் பெரிதும் மகிழ்வார். இதனை அறிந்த உ.வே.சா குருவின் அன்பைப் பெற தளிரைப் பேணிக் காத்தார். இதனை,

அது முதல் தினந்தோறும் காலையில் தளிர் ஆராய்ச்சியை நான் நடத்திக் கொண்டே வந்தேன். சில நாட்களில் மாலையிலேயே பார்த்து வைத்துக் கொள்வேன். பிள்ளையவர்களும் அவற்றைக் கண்டு திருப்தியடைந்து வந்தார் (என் சரித்திரம் ப.180) என்பதனால் காணலாம்.

திருவாவடுதுறை ஆதினம் நமச்சிவாய மூர்த்திகள் 14-ஆம் ஆண்டில் இம் மடத்தை நிறுவினார். சைவசமயச் சாத்திரங்கள் பதினான்கும் இங்கு இயற்றப்பெற்றன. தமிழ்க்கல்விக் கூடமாக இம்மடம் த்கழ்ந்தது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இம்மடத்தலைவரால் பேணப்பெற்றார். 19-ஆம் நூற்றாண்டில்

இவரிடம் கற்ற மாணக்கர் மிகப் பலர் அவருள் ஒருவர் டாக்டர் உ.வே.சாமி நாதையர் என்பார் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் (தமிழ் இலக்கிய வரலாறு ப.260).

பிள்ளையவர்கள் உ.வே.சா வரலாற்றை அறிந்த பின்பு நைடதத்தில் ஏதாவது ஒரு பாடல் சொல்லச் சொன்னார் உ.வே.சா. "தழைவிர் சுடுங்கை மாலைத் தனிமுதற் சடையிற் சூடும்" என்று முதலடியைக் கூறியபோது பிள்ளையவர்கள் இடைமறித்து "தனி முதல் சடையிற் சூடும்" எனச் சொல்லித் திருத்தினாராம். மேலும் ஒரு பாடல் கூறுமாறு சொன்னபோது "நிலவு மொழி தனிக்கவிதை" என்னும் பாடலைப் பாடினார்.

பிள்ளையவர்கட்கு நிகண்டின் மீது மிகுந்த ஈடுபாடு உண்டு. எனவே நிகண்டை உ.வே.சா. கற்க விரும்பினார். அதுவே யன்றி அனைவரும் படிக்க வேண்டுமென்பது பிள்ளையவர்களது கருத்து.

> *.....நிகண்டை மனனம் செய்வது நல்லதே இக்காலத்தில் அதை நெட்டுருப் பண்ணும் வழக்கமே போய்விட்டது. சொன்னால் யாரும் கேட்பதில்லை என்றார்.* (என் சரித்திரம் ப. 162)

என்னும் வரிகளால் அறியலாம்.

பிள்ளையவர்கள் திருநாகைக் காரோணப் புராணத்தில் உள்ள ஒரு பாடலை உ.வே.சாவைப் படிக்கச் சொல்லி செய்யுளின் பொருளைத் தெளிவாகச் சொல்லி, பதம்பதமாகப் பிரித்துப் பொருள் கூறினார். பதசாரமும் சொல்லி விளக்கினார் பிள்ளையவர்கள் உ.வே.சா. வுக்கு நைடதம் பாடம் சொல்லித் தருமாறு கூறினார். பிள்ளையவர்கள் திருக்குடந்தைத் திரிபந்தாதி பாடம் உவமான உவமேயங்களோடு சொல்லி விளக்க வேண்டிய இடத்தில் விளக்கியும் வந்தார். அவசியமான விசேஷங்களையும் விளக்கினார். அதனையடுத்து பழமலைத் திரிபந்தாதியைத் துறைமங்கலம் சிவபிரகாச சுவாமிகள் இயற்றியது எனக் கூறி அவரது புகழையும் இடத்தையும் பிள்ளையவர்கள் உ.வே.சாவிடம் புகழ்ந்தார். சக கவிகளைப் புகழும் பிள்ளையின் பண்பை,

> *சிவப்பிரகாச சுவாமிகள் சிறந்த கவி கற்பனா சாமர்த்தியம் உடையவர் கவிதா சார்வபௌமர் என்று அவரைப் பெரியோர்கள் சொல்லுவார்கள்,* (என் சரித்திரம்.ப.184) என்னும் பகுதி விளக்கும்.

அதன் பின்னர் சுவாமிகளின் வெங்கைக் கோவையை மந்திரிக் கோவையென்றும், திருச்சிற்றம்பலக்கோவையை ராசுராக்கோவை என்னும் சொல்வார். சோணசைல மாலை என்னும் பிரபந்தம் மிக்க சுவையுடையது என்பார் பிள்ளையவர்கள். திருப்புகலூர்த் திருபந்தாதி நெற்குன்றவான முதலியாரால் பாடியது. இப்பிரபந்தம் நடத்தப்பட்டபின்னர் மறைசையந்தாதி ஒரே நாளில் நடத்தப்பட்டது.

பிள்ளையவர்கள் இயற்றிய தில்லையமக அந்தாதி, துறைசையமக அந்தாதி, திருவேரகத்துயமக அந்தாதியும் பிள்ளையவர்களால் உ.வேசா. வுக்கு நடத்தப்பட்டது. அந்தாதிகட்குப் பிறகு பிள்ளைத்தமிழ் வரிசையில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆகியவை நடத்தப்பட்டன. கோவை வரிசையில் சீகாழிக்கோவை பிள்ளையவர்களால் நடத்தப்பட்டது. ஆசிரியர் சொற்படி காசிக்கலம்பகத்தை உ.வே.சா.வே படிக்குமாறு கூறினார். சோழமண்டல சதகமும் பிள்ளையால் விளக்கப்பட்டது.

திருவானைக்காப் புராணம், சீகாளத்திப் புராணம் இரண்டும் பிள்ளையவர்களால் உ.வே.சா.வுக்கு நடத்தப்பட்டது.

உ.வே.சா. திருவாவடுதுறைக்கு வந்தபின் பாடங்கள் வழக்கம் போல் நடந்தன. பெரிய வகையில் சுந்தரபுராணம் நடந்தது. சிறிய வகையில் திருவிளையாடல், திருநாகைக்காரோணப் புராணம், மாயூரப் புராணம் முதலியன நடந்தன. பெரியபுராணம் தம்பிரான்களுடைய வேண்டுகோளின்படி ஆசிரியரால் நடத்தப்பட்டது. சிலருக்கு நன்னூல் விருத்தியுரை, காண்டிகையுரை பாடல் நடத்தினார் பிள்ளையவர்கள். உ.வே.சா.வும் அவர்களுடன் கலந்து கொண்டார். மருதபண்டார மென்பவருக்கும் உ.வே.சா.வுக்கும் ஆசிரியர் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடம் சொல்லி வந்தார்.

பிள்ளை திருவிடை மருதூர் ஸ்தல விஷயமாக ஒரு திரிபந்தாதியை இயற்றினார். ஆதினத்தார் விரும்பியபடி ஸ்ரீ சிவஞான யோகிகள் சரித்திரத்தை விரிவாகச் செய்யத் தொடங்கினார். 1.22.1876 பிள்ளையவர்கள் சிவலோக பதவி அடைந்தார்.

17. பிள்ளைத் தமிழில் காப்புப் பருவம்

மு.கண்ணன்
திருச்செந்தூர்

பிள்ளைத்தமிழ் இலக்கியம் சிற்றிலக்கியச் சோலையில் பூத்த புதிய வரவாகக் கருதினாலும் வரலாற்றாசிரியர்கள் இதன் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டாகக் கூறுகிறார்கள். ஆனால் "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்று ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் (பொருள்-82) குறிப்பிடுவதால் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றம் காலத்தால் முற்பட்டது எனக் கொள்ளத் தோன்றுகிறது. தன் சிந்தை கவர்ந்தவனால் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவர்தம் பண்பு நலன்களையும், சிறப்பியல்புகளையும், புகழினையும் தொகுத்துரைத்துக் கூறுவதோடு அவர் வாழ்ந்த நாட்டினையும், அவர் பிறந்த நகரத்தையும் சிறப்பாக எடுத்துரைப்பதே பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தனிப் பண்பாகும். பாட்டுடைத் தலைவனாக இறையடியார்களையோ அல்லது இறைவனையோ மட்டும் கொள்ளாமல் சமயச் சார்பு கடந்த பொதுமை நோக்கிலும் பிள்ளைத்தமிழ் இலக்கியம் படைக்கப்பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும். அவ்வகையில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் காப்புப்பருவம் பிற பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் காப்புப் பருவத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகிறது என்பதை ஒப்பாய்வு நோக்கில் விளக்கிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காப்புப் பருவம்

காப்பினைக்கூறும் இப்பருவம் குழந்தை பிறந்த இரண்டாவது மாதத்தில் கூறப்படுவது. பிள்ளைத்தமிழின் முதற்பருவம் இக்காப்புப்பருவம் ஆகும். இறைவன் பிறவா, இறவா, மூவா முதல்வன் ஆவான். அவனே அனைத்தையும் காப்பவன். எனவே பிள்ளைத்தமிழ் இலக்கியம் சிறப்புப் பெறவும் பாட்டுடைத்தலைவன் மேன்மையடையவும் கடவுளரை வேண்டிக் காக்குமாறு கூறுவதே காப்புப் பருவமாகும். இக்காப்புப்பருவத்தில் முதலில் யாரை வேண்ட வேண்டும் என்பதை,

அவன் தான்
காவல் கிழவன் ஆகலானும்
பூவின் கிழத்தியைப் புணர்தலானும்
முடியும் கடகமும் மொய் பூந்தாரும்
குழையும் நூலும் குருமணிப் பூணும்
அணியும் செம்மல் ஆகலானும்
முன்னுற மொழிதற்கு உரியன் என்ப

என்று பன்னிருபாட்டியல் விளக்கம் தருகிறது. காப்புக் கடவுளராக, திருமால், அரன், திசைமுகன், கரிமுகன், பொருவேல் முருகன், பரிதி, வடுகன், எழுவகை மங்கையர், இந்திரர், சாத்தன், நிதியவன், நீலி, முப்பத்து மூவர், திருமகள், நாமகள், திங்கள், ஆகியோர் விளங்கினாலும் திருமாலையே முதலாமவராகக் குறிப்பிடவேண்டும் என்பர். காரணம் திருமால் காத்தற் கடவுளாதலானும், பூவின் கிழத்தியைப் புணர்தலானும், முடியும் கடகமும் மொய்பூந்தாரும் குழையும் நூலும் குருமணிப்பூணும் அணியும் செம்மலாதலானும் உரியன் ஆகின்றான் என்பர்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ் காப்புப்பருவம்

குழந்தையைக் காக்கும் பொருட்டுக் காப்புப் பருவத்தில் திருமால் முதலிய கடவுளர்கள் காக்குமாறு கூறுதலே பிள்ளைத்தமிழின் முறையாகவும் வழக்கமாகவும் நூலாசிரியர்கள் கடைப்பிடித்து வந்துள்ளனர். ஆனால் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் அவர்கள் சேக்கிழார் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டாராதலின், அத்தெய்வங்களிற் பலரான் வழிபடும் பெற்றியாரன்றி வழிபடுபவரல்லர் என்னுமுண்மையைக் கொண்டு அம்முறையை ஒழித்து இவரால் நிரம்பவும் அன்போடு வணங்கப்படும் சமயச்சான்றோர்களாகிய திருத்தொண்டர்களையே காப்புக் கடவுளர்களாகக் கொண்டு இலக்கியம் படைத்துள்ளார்.

கார் கொண்ட சோலைத ழாரூர ரோரரைக்
  கானம்பி யாரூரர்முக்
காலரைக் காலாக முடிவு செய் தருண்மாக்
  கவித்திசையின் வீற்றிருக்கும்
ஏர்கொண்ட தில்லைமூ வாயிரர்முன் வ...ரு
  மெழுவருந் தழுவருமெம
. . . .
பேர் கொண்ட சைவபரி பாடையறி வரியசம்
  பிரதாய முதலியாவும்
பிறங்கத் தெரித்தெம்மை யாண்ட குன்றத்தூர்ப்
  பிரானைப் புரக்க வென்றே (2)

என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை காப்புப் கடவுளரை வேண்டுகிறார்.

திருத்தொண்டர்த் தொகையில் அடியார்கள் இடம் பெற்றுள்ள முறைப்படியே தில்லை வாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடி மாறனார், மெய்ப்பொருள் நாயனார், விறன்மிண்டர், அமர்நீதியார் என்னும் ஏழு அடியார்களையும் முதற்பாடலில் காப்புக் கடவுளராகக் குறிப்பிட்டுள்ளார்.

இலைமலி யெனுங்கவியு ளொழுபுன மும்பரகு
  மெழுமுனிவ ரேத்தவமர்வா
ரெழுபுரவி வையமிசை யெழுக திரும் வட்குமணி

....

மான்றபணி வெனுமொழிப் பொருடேற்று குன்றைநக
ராளியைக் காக்க வென்றே (2)

என்று குறிப்பிடுகிறார். இங்கு எறிபத்தர், ஏனாதிநாதர், கண்ணப்பர், குங்கிலியக்கலயர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், ஆனாயர் எனும் ஏழு அடியார்களையும் காப்புக் கடவுளராகக் கூறுகிறார்.

மும்மைமுறை யும்பரவ மும்மையுல கும்புகழு
மும்மையாப் பகரமாதி

....

மெய்ம்மையை விரித்துத் தெரிந்தருள்செய் குன்றையூர்
வேந்தைப் புரக்க வென்றோ (3)

என்ற பகுதியில் மூர்த்தி நாயனார், முருக நாயனார், உருத்திர பசுபதியார், திருநாளைப்போவோர், திருக்குறிப்புத் தொண்டர், சண்டேசுவரர் என்னும் ஆறு அடியார்களையும் காப்புக் கடவுளராக வேண்டுகிறார்.

தருநின்ற செங்கைத் தலங்குவித் திடுமுனந்
தையலொரு பாகர்தொண்டர்

....

மோங்குபுலி யூர்க்கோட்ட மேயகுன் றத்தூ
ரொருத்தரைக் காக்க வென்றே (4)

என்ற பாடலில் திருநாவுக்கரசர், குலச்சிறையார், மிழலைக்குறும்பர், காரைக் காலம்மையார், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தியடிகள் ஆகிய ஏழு அடியார்களையும் காப்புக் கடவுளராகக் குறிப்பிடுகிறார்.

வம்பறா யாப்புநவில் வம்பறா முலையொரு
மடக்கொடியை வேட்டலின்றி

....

நாவலர் பிரானைத் திருக்குன்றை யருண்மொழி
நலத்தனைக் காக்கவென்றே (5)

என்ற வரிகளில் திருஞானசம்பந்தர், சலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்கர் ஆகிய ஐந்து இறையடியார்களையும் காப்புக் கடவுளராகக் கூறியுள்ளார்.

வார்கொண்ட வனமுலை யெனுங்கவியு ளுயர்சைவ
மாண்பினர்க டலை வணக்கி

... .

பண்பென றெரித்தகுன் றத்தூ ருதித்தவெம்
பரமனைக் காக்க வென்றே (6)

என்ற பகுதியில் சிறப்புலி நாயனார், கழறிற்றறிவார் நாயனார், கூற்றுவ நாயனார், சாக்கிய நாயனார், சிறுத்தொண்ட நாயனார், கணநாத நாயனார் ஆகிய ஆறு அடியார்களையும் காப்புக் கடவுளராக வேண்டுகிறார்.

பொய்யடிமை யில்லாத செய்யுளி னிலக்கியம்
புகலிலக் கணமெய்ஞ்ஞான
... .
மேம்பட்ட வேளாண் குலக்கதி ரெனுங்குன்றை
விமலனைக் காக்க வென்றே (7)

என்ற பாடலில் பொய்யடிமையில்லாத புலவர், புகழ்ச்சோழர், நரசிங்க முனையரையர், அதிபத்தர், கலிக்கம்பர், கலியர், சத்தியார், ஐயடிகள் காடவர்கோன் என்ற எட்டு இறையடியார்களையும் காப்புக் கடவுளராக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் வேண்டுகிறார்.

கறைக்கண்டன் யாப்பினைந் ததிகாரி மேலொரதி
காரிமலை மங்கையொரு பாற்
... .
தொல்புகழ்க் குன்றைவரு பாலறா வாயர்முற்
றோன்றலைக் காக்க வென்றே (8)

என்ற பகுதியில் சேக்கிழாரைக் காக்கும் பொருட்டு கணம்புல்லர், காரியார், நெடுமாறர், வாயிலார், முனையடுவார் என்ற ஐந்து அடியார்களையும் குறிப்பிடுகிறார்.

கூடல்சூழ்ந்த யாப்பம றறஞ்சூழ்ந்த நெஞ்சக்
கழற்சிங்க மன்னன் மன்னிக்
... .
வாயார வாழ்த்துகுன் றத்தூ ருதித்தபெரு
வள்ளலைக் காக்க வென்றே (9)

என்ற பாடலில் கழற்சிங்கன் நாயனார், செருத்துணை நாயனார், புகழ்த்துணை நாயனார், இடங்கழி நாயனார், திருக்கோட்புலிநாயனார் என்ற ஐந்து அடியார்களையும் காப்புக் கடவுளராக வேண்டுகிறார் ஆசிரியர்.

பத்தரா யென்றெடுத் தருடிருக் கவியிலிரு
பைங்கோதை யாரைவேட்ட
... .
மளவா வளந்துன்று குன்றைநகர் மேயவரு
ளாளியைக் காக்க வென்றே (10)

என்னும் பகுதியில் தொகையடியார் ஏழு பேரைக் காக்கும் கடவுளராகக் குறிப்பிடுகிறார். பத்தராய்ப்பணிவார், பரமனையே பாடுவார், சித்தம் சிவன்பாலே சேர்த்தார், திருவாரூர்ப் பிறந்தார். முப்போதும் திருமேனி தீண்டுவார் முழு நீறுபூசிய முனிவர். அப்பாலு மடிச்சார்ந்தார் என்பார்.

மன்னிய திருப்பாட்டி லாகார முதலிய
மறந்திராப் பகன்முயன்று

தூவாய் மலர்ந்தவருண் மொழிவான வினையான்ற
தோன்றலைக் காக்க வென்றே (11)

என்ற பாடலில், ஞானமூர்த்தி, பூசலார், மானியார், நேசர், கோச்செங்கண்ணன், நீலகண்டப்பாணர், சடையர், இசைஞானியர் என்ற ஏழு நாயன்மார்களையும் காப்புக் கடவுளராகக் குறிப்பிடுகிறார்.

காப்புப்பருவத்தில் மாறுபாடுகள்

தமிழ் இலக்கியத்தில் இதுவரை சுமார் 140 பிள்ளைத்தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்அனைத்து இல்கியங்களுமே காப்புக் கடவுளாக திருமால், அரன், திசைமுகன், கரிமுகன், பொருவேல் முதல் நாமகள், திங்கள் முடிய உள்ளவரையே வேண்டி விளம்புகிறது. ஆனால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் மேலே கூறப்பட்ட தெய்வங்களைக் காப்புக் கடவுளராகக் குறிப்பிடாமல் 63 நாயன்மார்களைக் காப்புக் கடவுளராகக் கூறியிருக்கிறார். இது பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் புதிய மரபாகத் தோன்றுகிறது எனலாம்.

ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்கள் வீதமே அனைத்துப் பிள்ளைத் தமிழ் இலக்கியமும் பெற்றுத் திகழ்கிறது. மாறாக சேக்கிழார் பிள்ளைத்தமிழ் இலக்கியம் காப்புப் பருவத்தில் பதினோறு பாடல்களைக் கொண்டு திகழ்கிறது. காரணம் அறுபத்து மூன்று நாயன்மார்களையும் காப்புக் கடவுளராகக் குறிப்பிடவேண்டும் என்ற மீனாட்சி சுந்தரனாரின் மனவேட்கையே இதற்கு அடிப்படையாக அமைந்து பதினோரு பாடல்களைத் தந்ததோடு ஒரு புதிய வகையாகக் குறிக்கவும் தோன்றச் செய்கிறது எனலாம்.

கடவுளர் தான் மனிதனைக் காக்க முடியும் என்ற நிலையை மாற்றி அடியாருக்கு அடியாரும் காக்கும் தன்மை கொண்டவர்கள் தான் என்று ஆசிரியர் குறிப்பிடுவது வேறெந்த பிள்ளைத்தமிழிலும் இல்லாத புதிய செய்தியாகவும், புதிய பாதையாகவும் திகழ்கிறது எனலாம்.

இலக்கியம் என்பது படைப்பாசிரியனின் எண்ணத்தை வெளிப்படுத்தும் களமாகும் என்ற வழக்கிற்கு ஏற்ப, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தன்னுடைய உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் களமாக சேக்கிழார் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தைக் கையாண்டுள்ளார் என்பதையும் பிற பிள்ளைத்தமிழ் இலக்கியத்திலிருந்து மாறுபட்டு காப்புப் பருவத்தின் அமைப்பையும் வழிபாட்டுக் கடவுளரையும் மாற்றியமைத்து மனிதனும் தெய்வமாகலாம் என்பதை மெய்ப்பித்துள்ளார் என்றும் கூறலாம்.

18. பிள்ளைத்தமிழில் பெரிய புராணச் சிறப்புகள்

ச.கண்மணி
சிவகாசி

மகாவித்துவான், மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பெரியபுராணத்தின் சிறப்புகளாகக் கூறுவனவற்றை; அவரியற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூலின் துணை கொண்டு தொகுத்துத் தருகிறது இக்கட்டுரை. சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ச் செய்திகளுக்கு ஆதாரமாக அமையும் பெரியபுராணச் செய்திகளும் இடம் பெறுகின்றன.

பெரிய புராணத்தின் பயன்கள்

'அத்தி தரும் கவி'
'புத்தி தரும் கவி'
'சித்தி தரும் கவி'
'சுத்தி தரும் கவி'
'பத்தி தரும் கவி'
'முத்தி தரும் கவி'

என்று பெரியபுராணத்தால் கிடைக்கும் பயன்களை வரிசைப்படுத்துகிறார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. (சே.பி.த-சிறுபறைப்-பா.7) இறைவன் இருக்கிறான் என்பதை வலியுறுத்தும் கவியாகவும், இம்மையின்பம் தரும் கவியாகவும், எட்டுச் சித்திகளும் வழங்கவல்ல கவியாகவும், மனத்தூய்மை தரும் கவியாகவும், இறைப்பற்றை வளர்க்கும் கவியாகவும், வீடுபேறு தரும் கவியாகவும் பெரியபுராணம் திகழ்கிறது என்கிறார். பெரியபுராணம் பிறப்பறுக்கும் என்ற கொள்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (சே.பி.த-சிறு தேர்ப்- பா.1)

நயங்கள்

சொற்சிறப்புடையது, பொருட்சிறப்புடையது. சுருங்கச் சொல்லல் முதலிய அழகுகள் பொருந்தியது. அமங்கலச் சொல் ஏதும் இல்லாதது. இந்நூலுக்கு இணையாகக் கூறக்கூடிய நூல் வேறொன்றும் இல்லை.

சொல்லும் பொருளும் நனிசிறப்பச் சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டியமைய அமங்கலமாம் சொற்கள் புணராது அறக்களைந்து
வெல்லுந் தகைய முரண்காட்டி விலக்கு விலக விதிதழுவி
விடும்பு மூல இலக்கியமே வேறு ஆகாது என்று உலகுஏத்த

பெரியபுராணம் பெருமை பொருந்தியதாம். (சே.பி.த-முத்தப்-பா.3) பல பாடல்களின் இறுதியில் சொல் அலங்காரம் அமையப் பாடி உள்ளார் சேக்கிழார் என்பதை,

ஈற்றுத்தலை ஒருமவுலி புனைந்தாலென்னச் சொல்லணி ஒன்று
எய்திப் பொலிய என்கிறார் (சே.மி.த.-தாலப்-பா. 9)

மடக்கு என்னும் அணி அமைந்த பாடல்கள் பல உள. எடுத்துக்காட்டாக,

காலாறு வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர் (பெ.பு.-மானக்கஞ்சாற-நா.பு.பா:1) என்ற பாடலடியைக் கூறலாம். உவமை உருவகம் முதலிய பொருளணிகள் பலவும் நிறைந்துள்ளன என்கிறார்.

. . . . பொருளணியாயின எவ்விடமும் வீற்று
வீற்றுக் கிடை இறைபட்டன அமைய (சே.மி.த.-தாலப்-பா.9)

என்று புகழ்வதற்கேற்ப உவமை உருவக அணிநயங்கள் பெரியபுராணத்தில் அளவிறந்தனவாகவே உள்ளன. கண்ணப்ப நாயனார் வளர்ந்தமையை,

எண்ணிரண் டாண்டின் செவ்வி எய்தினார் எல்லையில்லாப்
புண்ணியம் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிபு போல்வர்

எனப் புனைந்துரைத்துள்ளமை நோக்குக. (பெ.பு.-கண்ணப்பநா.பு.-பா.42)

தொல்காப்பியர் சுட்டிய வனப்புகளும், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களும் வேண்டும் இடங்கட்கு ஏற்ப அமைந்துள்ளன.

விளம்பு வனப்பினோடு மேய முதற்பொருள் ஆதிய மூன்றும்
வேண்டுமிடத்து எய்த (சே.மி.த.-தாலப்.-பா.9.)

என்பதால் பெரியபுராணம் தொல்காப்பிய இலக்கணத்தை அடியொட்டி எழுந்தது என்பதே மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் கொள்கையாகும். சேக்கிழார் பிள்ளைத்தமிழுக்குக் குறிப்புரையெழுதிய சதாசிவச் செட்டியாரவர்கள் வனப்பு என்பதைச் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலிய பத்தாம்(நன்னூல்-பொதுப்பாயிரம்-பா.13) என்கிறார். இக்கருத்து ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனெனில் இத்துடன் இணைத்துக் கூறும் முதற்பொருள் முதலிய மூன்றும் நன்னூலில் சுட்டப்படாதவை. தொல்காப்பியமே பொருள் இலக்கணம் கூறுகிறது. அது மட்டுமின்றி,

துங்க மிகுந்த அருந்தவம் மேவிய தோலா நாத்திரண
தூமாக்கினியருள்
தொல்காப்பியமே தோன்று இலக்கணமாப்
பங்க மிலாச் சமயாதி அடைந்து (சே.மி.த.-தாலப்-பா.6)

என மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நேரடியாகவே பெரியபுராணம் தொல்காப்பிய இலக்கணத்தை அடியொட்டி எழுதப்பட்டது என்றும் கூறியுள்ளார். இவற்றுடன் பொருள்கோள் வகைகளும் பெரியபுராணச் செய்யுட்களுள் பொருந்த விரவி வந்துள்ளன என்கிறார்.

ஆற்றுப் புனனாம் அப்பொருள் கோள்முத லிறை மற்றுள்ளனவும்
அமையத் தொண்டர் புராணம் நவின்றவர் (சே.மி.த.-தாலப்-பா-9)

என்று பாடியுள்ளமை காண்க. பெரிய புராணச் செய்யுட்கள் எதிலும் கூன் இல்லை என்பதையும் பெருமைக்குரியதெனச் சுட்டிச் செல்கிறார். பொருளோடு அடி முதல் நிற்பது கூன் என்பது யாப்பருங்கலக் காரிகை. அத்தகு கூன் இன்றியே பெரிய புராணச் செய்யுட்கள் அனைத்தும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியே ஆகும்.

கூன் செய்யுளினும் உற வைத்திலான் (சே.மி.த.-அம்புலிப்.பா-8)

உள்ளடக்கம்

புகழ்பெற்ற சைவ பரிபாடைகளையும், அரிய சம்பிரதாயங்களையும், விளக்குகிறது பெரிய புராணம் என்பதை,

பேர்கொண்ட சைவபரிபாடை அறிவரிய சம்பிரதாய முதலியாவும்
பிறங்கத் தெரித்து (சே.மி.த.-காப்புப்-பா.1)

என்பதால் அறியலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய மார்க்கங்களில் வழிபாடாற்றும் உயிர்கட்கு எல்லாம் இறைவன் அருளும் திறங்களை எடுத்துக் கூறும் சேக்கிழார் எனப் புகழ்கிறார்.

நாநெறி விளக்கி ஒளிர் சேக்கிழார்- (சே.மி.த.-பாயிரம்)

என்றும்,

இவர் சரியையர் இவர் கிரியையர் யோகத்தினர் இவர் இவர்
ஞான இயல்பினர் இவர் இல்லறத்து வழாதவர் இவர் துறவற நின்றார்
சுவர்மன மொழியிவர் பிரமசரிய நிலைகைக் கொண்டோர் இவரே
கண்குளிர் வேடம் பொருளென நம்பினர் கருதரும் இவர் ஆதித்
தவர்நிலை உணரா அருளினன் இறைவன் தக்கன உலகறியச்
சாற்றினன் அலன்அவனே உலகறியச் சாற்றிய படியென்ன
அவரவர் செயன்முதல் அருளிய வல்லவ

என்றும்,

(சே.மி.த-செங்கீரைப்-பா.9) சைவ அடியார்களின் பக்தி முறை, வாழ்க்கைநிலை அருள் பெற்ற பாங்கு முதலியவற்றைச் சேக்கிழார் தெளிவாக விதந்து ஓதுகிறார் என்கிறார். தேவாரப் பாசுரங்களின் பொருளும் பெரியபுராணத்தில் உள்ளது. அவ்வாறு உரைவிளக்கம் தந்து பாடியமையால் சேக்கிழாரை உரையாசிரியர் என்றும் அழைக்கிறார் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. "நகு பாசுரம் முதல் உரை செய்தலினான் நவில் உரையாசிரியன்" (சே.மி.த-சப்பாணிப்-பா.9).

திருஞானசம்பந்தர் வைகையிலே ஏடிடும் பொருட்டுப் பாடிய "வாழ்க அந்தணர்" முதலிய பாடல்களுக்கு உரைவிளக்கம் தருவதாக அமைந்துள்ள பாடல்கள் சான்றுகளாக அமையத் தக்கன. (பெ.பு.-திருஞானசம்பந்த மூர்த்தி நா.பு.-பா.821-825) பக்திச்சுவை பொதுளிய நூலும் ஆகும். (சே.மி.த-தாலப்-பா.5-8).

வழிகாட்டி

சேக்கிழாருக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த புலவர்கள் தம் பாடல்களில் தெய்வங்களையும், திருத்தளிகளையும் பாடவில்லை. ஆனால் சேக்கிழார் சிவமணம் கமழ (சே.பி.த.-சிறுபறைப்-பா.6) அழகுபடக் கூறிப் பின் வருவார்க் கெல்லாம் முன்னோடியாக வழிகாட்டியுள்ளார்.

> படியிடை ஒரு பைதிர வருணனை புரிபாவலர் ஐந்திணையும் பகுத்து
> ஒரு முப்பொருளோடும் விரித்துப் பயனாகத் தெய்வம்
> குடிதலில் சினகரம் உள்ளனஓதக் கற்பித்து அவநெஞ்சம் கனியக்
> கனியக் கண்ணீர் வாரக் கவிபாடிய (சே.பி.த.-சப்பாணிப்-பா.8)

என்னும் பாடலடிகள் ஐந்திணைகளையும் மூன்று பொருள்களையும் பாடிய பழங்காலப் புலவோரிடமிருந்து வேறுபட்டுச் சேக்கிழார் பாடிய தன்மையைப் புகழ்கின்றன.

உலகெலா மெனும் சுருதி

திருத்தொண்டர் புராணத்தைப் பாடவிழைந்த சேக்கிழாருக்கு அம்பலத்து ஈசன் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்தான். அச்சொல் பெரியபுராணப் பாயிரத்தில் முதல் சொல்லாக அமைவதுடன், புராணத்தில் இடையிலும், ஈற்றிலும் அமைந்து அப்படைப்பிற்குப் பெருமை சேர்க்கிறது.

> வுலகெலா மெனும் சுருதிநாப் பண்ணு மீற்றும் பொருத்திப்
> (சே.பி.த.-காப்புப்-பா.1)

பாடினாரென்பதை மீனாட்சி சுந்தரம் பிள்ளை குறித்துச் சென்றுள்ளார்.

> உலகெலா முணர்ந் தோதற் கரியவன் (பெ.பு.-பாயிரம்.1)
>
> ஓதி எறினார் உய்ய உலகெலாம்
> (பெ.பு-திருஞானசம்பந்தமூர்த்தி நா.பு-பா.216)
>
> நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்
> (பெ.பு-வெள்ளானைச் சருக்கம்-பா.53)

என்னும் மூன்று பாடலடிகளும் காண்க. இறைவன் அடியெடுத்துக் கொடுத்த பெருமை சேக்கிழார் பிள்ளைத் தமிழில் பல இடங்களில் வலியுறுத்தப்படுகிறது. (சே.பி.த-செங்கீரைப்-பா.1 & தாலப்-பா.7).

பெரிய புராணப் பாயிரமும் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாயிரமும்

நாற்சீரான் இயன்ற நான்கடி (கலிவிருத்தம்) கொண்ட பெரியபுராணப் பாயிரத்திற்கு மீனாட்சி சுந்தரம் பிள்ளை கொள்ளும் பொருள் அவரது சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாயிரத்தில் இடம் பெறுகிறது.

> உலகெலாம் என்னுமறை ஆதியாக் கொண்டவர் உயிர்க்கருளும்
> இயல்பனைத்தும் தெரித்து
> நாமேவும் அம்முதலொடு ஒன்றவினை உருபுதொக நான்கன்
> அடி ஆதி செய்து (சே.பி.த.பாயிரம்)

என்ற அடிகளிலுள்ள 'நாமேவும் அம்முதல்' = 'உலகெலாம்'

'நான்கனடி ஆதி' = 'மலர்' என்பதாகும்.

எனவே நாமேவும் அம்முதலொடு நான்கனடி ஆதி ஒன்ற உருபுதொக வினை செய்து என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். பெரியபுராணப் பாயிரத்தின் நான்காம் அடி மலர் என்று தொடங்குகிறது. இரண்டு, மூன்றாம் அடிகளை விட்டுக் கொண்டு கூட்டுங்கால் 'உலகெலாம் மலர்' என்னும் தொடர் வாய்க்கிறது. அம்பலவாணரைப் பாடும் சேக்கிழார் உலகெலாம் சைவநெறி தழைத்தோங்க வேண்டுகிறார் என்பது மீனாட்சிச் சுந்தரம்பிள்ளை கொள்ளும் பொருள்மாட்சியாகும். பெரியபுராணப் பாயிரத்திற்கு கருப்பக்கிளர் திரு.சு.அ.இராமசாமிப்புலவர் எழுதிய விளக்கவுரையின்றும் இது மாறுபட்டதாகவும், ஆழமுடையதாகவும் அமைந்துள்ளது. பரசமயச் செல்வாக்கு அழிய எழுந்தது பெரியபுராணம்; ஆதலால் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தரும் புதுப்பொருள் மதிப்புடையதாகிறது.

இதுகாறும் கண்டவற்றான் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு சேக்கிழார் மீதும், அவரது படைப்பின் மீதும் இருந்த மதிப்பும், ஆழ்ந்த பயிற்சியும் புலனாகின்றன.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்.

சே.பி.த. - சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
பெ.பு. - பெரிய புராணம்
நா.பு. - நாயனார் புராணம்.

19. பிராட்டியும் பிள்ளையின் பிள்ளையும்

க.கதிரேசன்
குன்றக்குடி

பிராட்டி என்பது திருத்தவத்துறையாகிய இலால்குடியில் (திருச்சிராப்பள்ளி - சிதம்பரம் சாலை திருச்சிராப்பள்ளியிலிருந்து 20 கி.மீ) எழுந்தருளி அருள் வழங்கும் அன்னை பெருந்திருப்பிராட்டியாரையும், நடுவணதாகிய பிள்ளை என்பது தி.மீ.சு. பிள்ளையாகிய பிற்காலக் கம்பரையும் அடுத்துள்ள பிள்ளை என்பது அக்கம்மை மீது இவர் பாடிய பிள்ளைத்தமிழையும் குறிப்பதாகும். பல்வகை நயமும் பாங்குறப் பொலிவும் நூலிது.

திருக்கோயிலின் பழைமை

திருஞானசம்பந்தர் இங்கு எழுந்தருளிப் பெருமானைப் போற்றியதை

மன்னும் தவத்துறை வானவர்தாள்
எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே
இன்தமிழ் மாலைகொண்டு ஏத்திப் போந்து... (பெரியபுரா. . .2250)

என்று தெய்வச் சேக்கிழார் குறிப்பிட்டாலும் அவ்வின் தமிழ் மாலையை நழுவ விட்டுவிட்டோம். திருநாவுக்கரசர் இத்தலத்தை,

பண்டெழுவர் தவத்துறை (அடைவுத் திருத்தாண்டகம் :11)

என்று குறிக்கிறார். ஆயினும் இடைக்காலத்தில் இத் திருக்கோயில் திருக்கோபுரம் செங்காவி தீட்டப் பெற்றிருந்தமை பற்றி அமைந்த இலால்குடி என்னும் பெயரே வழக்கில் ஊர்ப் பெயராக நிலவுகிறது.

பிள்ளையின் பெருமை

பொங்கரிள் நுழைந்து. . . . . அறிவன்போல் இயங்குமன்றே

என்று பரஞ்சோதி முனிவரின் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்து 19ஆம் பாடலுக்கு ஏற்பப் பிள்ளையர்கள் அவ்வந் நூல்வல்லார் பால் அவ்வந் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். இவ்வகையில் திருவாவடுதுறை ஆதீனம் 14ஆம் பட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசியர் அவர்களிடம் ஐயம் தெளிந்தும், பிற்காலத்தில் சூரியனார் கோயில் ஆதீனகர்த்தராய் இருந்த திருவாவடுதுறை அம்பலவாண முனிவரிடமும் பலரிடத்தும் பாடம் கேட்டுத் தேர்ந்தார். (மீ.சு.பி.சரித்திரம் ப.37, பக்.80)

இப்பிற்காலக்கம்பர் இயற்றிய நூல்கள் 79. இவை தலபுராணம் முதல் குறவஞ்சி ஈரானவை. பிள்ளைத் தமிழ் மட்டும் 10 ஆதும் (மீ.சு.பி.சரித்திரம் 283-285).

இவர் நூல்களைப் போலவே இவர் மாணாக்கர்களும் புகழ்வாய்ந்த வித்துவான் தியாகராச செட்டியார், உ.வே.சா. முதலிய மிகப்பலர்.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாகிய இவர்க்குத் தருமபுரம், குன்றக்குடி, திருப்பனந்தாள் ஆதீனங்களிலும் சிறந்த மரியாதை உண்டு.

இவரது கவித்திறம் பற்றி,

எனைவைத்தி எனைவைத்தி எனப் பதங்கள் இடைஇடை நின்று
இரந்துவேண்ட
இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின் பொறுத்திடுமின்
என்று கூறி
நினைவுற்ற ஒரு கடிகைக்கு அளவில் கவித் தொடை தொடுத்து
நிமலர் பூணப்
புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள் ளலைப் போல்வார்
புவியில் யாரோ (மீ.சு.பி. சரித்திரம் ப:255)

என்கிற பாடல் விளக்கும். இந்நூலுள்,

.... தாழ் செவியில் அற்பனி யேன் மொழியும் வைத்தினது
உவப்பின் நாடற் குரிய தாயை - (பா. 13:14)

.... என் புன்மொழியையும் உவந்து இனிது கொளும்
இளங் கொடியை - (பா. 15:3)

என்பன இக்கவிஞர் பிரானின் அடக்கவுணர்வைப் புலப்படுத்தும்.

திருத்தவத்துறைப் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ், பாயிரம்-1, வணக்கம்-10, காப்பு-11, பிறபருவங்கள்-90 ஆக 112 பாடல்கள் கொண்டது. இந்நூல் 1952-இல் மூலம் மட்டுமாகவும், 11-1-66இல் இதனை வாரந் தோறுமாக ஈராண்டுகள் தொடர்ந்து விரிவுரையாற்றிய இலால்குடி சைவப் பெருநாவலர் பெரும்புலவர் அ. நடேசமுதலியார் அவர்களின் விளக்கவுரை போன்ற குறிப்புரையுடனும் வெளிவந்தது.

விளக்கவுரை

1. அம்மையும் அப்பனும்

அம்மை, பெருந்திருப்பிராட்டியார். இவரை, பெருந்திருப்பெருமாட்டி (4), கருணைப்பிராட்டி (24), ஞானச்செல்வி (14), பரை (20), உழுவல் அன்பர் உள்ளத்தடத்து அமுதமழை பொழி பசுத்த கருணைக்கொண்டல் (74), வான் தோய் குடுமி வரை முளைத்த மருந்து (68), போராழி சங்கு அங்கை ஏந்தும் பிராட்டி (108) முதலியனவாகக் குறிக்கும் பிள்ளையவர்கள் கேசாதிபாதமாகப் பாடிய பாடல், அம்மையை நம்முள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்க்க உதவும் ஓவியமாகும் அது:

மலர்நறு நிரைக்கருங் குழலும்ஒன் றுதலும் அருள்
மடைதிறந்து ஒழுகு கண்ணும்
வயங்குநா சியும் முத்த மூரலும் செம்பவள
வாயுங்கு ழைச்செ விகளும்
நலமருவு முகமும்மங் கலவயிலும் உத்தரிய
நற்றோளும் வளைக லிக்கும்

நளினச் செழுங்கையும் தாளவடம் வில்லிடு
நகில் துணையும் நவம ணி இழைத்து
இலகுமே கலையொடும் செம்பட் டணிந்ததிரு
இடையும்பல் உயிர்க ளையும் வைத்து
ஈன்ற சிற் றுதரமும் மறைமுடிக் கணியாகி
எம்முளத் தும்பு குந்த
பொலநிறத் தளிரடியும் அழகுபொலி தர (பா.111:1-4)

என்பதாகும்.

அப்பன், அம்மைபோவே அருள் வழங்கும் வள்ளல். "அழைத்து வாழ்வித்த பெருமான்" என்னும் இவரது பண்டைத் திருப்பெயரே இவரியல்பை உணர்த்தும். இதனை,

அழைத்துவாழ் வித்தபெரு மானைப் பழிச்சுறும் (பா.13:2)
அழைத்துவாழ் வித்தவர் திருப்புகழும் (பா.112:3)

என்பவற்றால் அறியலாம். ஆயினும் இன்று வழங்கும் திருப்பெயராகிய "சப்தரிசீசுவரர்" என்பதன் தமிழ் மூலமும் இவர் காலத்தில் வழங்கியது என்பதை,

ஏழிருரிடியர்க்கிறை (பா. 22.1) என்பது சுட்டும்.

அழைத்து வாழ்வித்த பெருமான் தூயஞான வடிவினராதலின் அவருக்குரிய வெண்ணிறப் பொருள்களை மட்டுமே சுட்டி அமைந்த பகுதி எண்ணத்தக்கது. வெள்ளிப் பொருப்பு, வெள்விடை, வெள்ளை இரண்டாயிரம் மருப்புடைய வெண்களிறு (அயிராவணம்), வெள்ளேற்று வெண்கொடி, வெண்கங்கை. வெண்ணீறு, சங்கவெண்குழை, சங்கவெ்ண்மனவு, தும்பைத் தொடையல் என்று (பா 55:1-3) அழகுற அடுக்கிணரைத்தல் சுவைதருவது.

2. தலமும் சிறப்பும்

வயிரவிவனம் (3:4), அமராவதிக்கு நிகரான அளகாபுரி (76:4), தெய்வத்தலம் (80:2), பஞ்சபுண்ணியத்தலம் நதி, வளம், புரம், தீர்த்தம், தலம் என்னும் ஐம்புண்ணியப் பேறுடையது (உ.வே.சா.) அன்னம், பொன், பசு, பூமி, மகள், என்னும் ஐந்தையும் ஒருசேரக் கொடுத்த கொடைப் புண்ணியம் தருவது (பெரும்புலவர் அ.ந.) அவத்துறை மாற்று தவத்துறை (28:4) முதலியன தலச் சிறப்புணர்த்துவன.

இத்தலம் வந்து பேறு பெற்றோர் கண்ணபிரான், இருநிதிக்கிழவன், இருடியர் எழுவர், வயிரவி, திருமகள் மற்றும் பலர் என்பதை பா.80. 1-2ம் தலபுராணமும் கூறும்.

தலவிநாயகர்

தலவிநாயகர் திருவாளப் பிள்ளையார். திரு+ஆள்+அ+பிள்ளையார். (அகரம் சாரியை) திரு=அழகு, திருமகள், செல்வம், தெய்விகம், மங்கலம், மேன்மை, காந்தி, பொலிவு, நல்வினை, கவர்ச்சி, விரும்பும் தன்மை முதலியன இவற்றையெல்லாம் ஆண்டு அருள்பவர் இவர்.

மருவிய கைலாயத்து ஐயனைப்போல் தனி
வருமொடு திருவாளப் பிள்ளை (பா.14:2)

என்று இவரைப் போற்றுகிறார்.

3. தீர்த்தமும் சிறப்பும்

தீர்த்தம் சிவகங்கை. இதனை

மலைவின் மெய்பொருள் தலைக் கொண்ட
மன்னுமா தீர்த்தம் ஆகிப்
பொங்கு சிவகங்கை - (பா. 73: 1-2)

என்பார். இது மழவ அரசனின் வெண்குட்ட நோய் தீர்த்ததுடன் அழைத்து வாழ்வித்த பெருமானிடம் ஆற்றுப்படுத்தியது என்பதையும் குறிக்கிறார்.

4. வரலாறு, புராணச் செய்திகள்

அம்மை, அப்பன், அடியார்பற்றிய பிள்ளைத் தமிழ்களில் அவர்களைப் பற்றிய புராணச் செய்திகள் மலிவு. இந்நூலுள்ளும் நால்வர் பெருமக்கள், சண்டீசர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் வணக்கப் பாடல்களான 7, 8, 9, 10, 11, இல் அமைந்துள்ளன. அப்பன் ஆலம் அயின்றது (32:3). முப்புரம் எரித்தது, விசயனுடன் விற்போர், கல்லால் நிழல் அறம் உரைத்தல் (பா.3:1-2) முதலியனவும்; அம்மை திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கியது (13:3), இருநாழியால் 32 அறம் புரிந்தது (16:3-4) முதலியனவும், முருகன் அயனைக்குட்டிச் சிறையிட்டது (33-1), அகத்தியர்க்குத் தமிழ் உணர்த்தியது (32:1) முதலியனவும், காரைக்கால் அம்மை வரலாறும் (66:2) பிற செய்திகளும் குறிக்கப்பெறுகின்றன.

5. சாத்திரக் கருத்துக்கள்

அ. ஒன்மு வகையாய் எண்ணிலவாய்
உணர்த்த உணர்சிற் றறிவினவாய்
உண்மை யினவாய்ச் சதசத்தாய்
உறுகண் இயல்பாய் உழல் பசுக்கள் (53:1)

என்று பசுக்கள் - உயிர்கள் பற்றியும்,

அருமா தவசன் மார்க்க நெறி
அடைத்து அநாதி யாய் அளவில்
ஆற்றல் உடைத்தாய் செம்புறுமாசு
ஆன மூல மலம் (பா.53:2)

என்று மூலமலமாம் ஆணவம் பற்றியும்,

உருவொடு அருவம் குணம் குறியற்று
ஒளியாய் நிறைந்த பதி (பா.53:3)

என்று பதி - இறை - பற்றியும்,

. . . . . உணர்ந்து
உணர்வான் உணரும் பொருள் ஒழியாது
ஒழிந்து கதிர்மீன் போற்கலந்து (பா.53:4)

என்று உயிர் பெற வேண்டிய இரண்டறக்கலப்பு நிலை பற்றியும்,

திருவார் இன்பம் - (பா.53:4)

என்று உயிர்பெறும் வற்றாமுற்றாப் பேரின்ப வீடு பற்றியும் ஆகிய சைவசாத்திரக் கருத்துகளைச் செறித்துக் கூறுகிறார்.

ஆ. உயிர்களை எடுத்தாளல்

உயிர்களைச் சிறுமைப்படுத்தும் - அணுத்தன்மைப்படுத்தும் ஆணவத்தில் அழுந்திக்கிடக்கும் உனிர்களை எடுத்தாள, இறை, அவற்றுக்கு உடல், உறுப்புகள், உலகு, நுகர்பொருள்களை மாயை மூலம் கூட்டுவித்து வினை நேராக்கி, தான் முதற்குருவுமாய் எழுந்தருளி சின்மொழிவிண்டு கரையேற்றுவார். இதனை,

பரவுஆண வத்திடை அழுநதக் கிடக்கும்
பசுக்களை எடுத்து உடல் முதல்
பகர்நான்கும் மாயையில் அளித்துவினை ஒப்புவரல்
பார்த்து அருட் குரவனாகி
விரவா இருக்கும் அப் பாசம்கெடச் சின்மொழி
விள்ளலால் - - - - (பா. 2:1-2) என்று குறிக்கிறார்.

இ.எடுத்தாளலில் அம்மையின் பங்கு

அப்பன் ஞானத்தின் குறியீடு. அம்மை ஆற்றலின் குறியீடு. ஞானம் - அறிவு- நினைப்பளவில் நிற்பது. ஆற்றல், அவ்வறிவின் செயற்பாட்டில் புலப்படுவது. எனவே இரண்டும் - அறிவும் ஆற்றலும் - அப்பனும் அம்மையும் - பிரிதலில்லை. அறிவு நிலையில் ஆற்றல் அதனுள் ஒடுங்கியும் (சிவத்துள் சக்தி ஒடுங்குதல்), ஆற்றல் வெளிப்பாட்டுநிலையில் அறிவு அதனுள் ஒடுங்கியும் (சத்தியுள் சிவம் ஒடுங்குதல்) நிற்கும். ஆற்றல் ஐவகைத் தொழில் நிகழ்த்தும். அவை ஆக்கல் முதலியன. ஆற்றல் தொழிற்படு நிலையிலும் அறிவு அதிற்பிரிதலில்லை என்பது மெய்ப்பொருளியல்.

இதனை,

ஐயன்எத் திறம்நிற்கும் ஆத்திறம் மணிஒளியும்
மலர்மணமும் உறழ நின்று
தளர்வறு படைப்பாதி ஐந்தொழிலும் ஆற்றிஒளிர
சன்மார்க்க நெறியின் நிறுவி (பா. 3:1-2)

என்று எடுத்துக்காட்டுடன் சுருங்கச் சுட்டுகிறார்.

7. அரிய சில சொல்லாட்சிகள்

பெரும்புலமையாளர்க்கு அரிய சொல்லாட்சிகள் கைவந்த கலை. ஸ்ரீ குமரகுருபர அடிகள் தென்றலை, தென்றல் இளங்கன்றும் உயிருகப் படரும் காலம் (மதுரைக்கல.56:3) என்பார். பிள்ளையவர்களும்,

மணங் கான்றுதண் ணென்று தென்றல்
கன்று வந்த துலவும் - (பா.7:4)

என்றே எடுத்தாள்கிறார்.

திநவேவடிவான பெருமானைத் திருவாளன், சிவத்திருவாளன் என்று குறிப்பதும் ஓர் அரிய வழக்கு. இதனை,

சிவத்திருவாளன் இடத்திலிருக்கும் இயற்றோகாய் - (பா. 51:2)

கம்பமத யானை உரி போர்த்ததிரு வாளார் - (பா. 84:1)
என்கிற பகுதிகளால் அறியலாம்.

8.திணைமயக்கம்

ஒரு திணைக்குரிய காலம், கரு, உரிப்பொருள்கள் பிற நிலங்களுக்குரிய வற்றுடன் கலந்து வரப்பாடுதல் திணைமயக்கம் ஆகும். கொள்ளிடப் பேராறு மூலம் திணைமயக்கம் கூறுகிறார் இவர்.

வட காவிரியாகிய கொள்ளிடம், காவிரி மூலம்தான் அடைந்த வளங்களை, அடைவதற்குக் காரணமான மேகவாகனனுக்கு-இந்திரனுக்கு-நன்றி பாராட்டும் முறையில் செயற்படுகிறதாம். குறிஞ்சி முல்லை வளங்களை அரித்து வரப்பெற்ற வடகாவிரி, அவற்றை இந்திரனுக்குரிய மருத நிலத்தில் மட்டுமன்றி, அவன் வாகனமாகிய மேகத்துக்கு நீருதவிய நெய்தலுக்கும் தந்து மகிழ்ந்தது என்கிறார் கவிஞர் பெருமான்.

வரைவளமும் நெடிபடு செழும்புறவின் வளமும்நனி
வாரிக் கொணர்ந் தன்னவன்
பயந்தரும் இருநிலம் நிரப்பி அவ் வூர்திபசி
ஆற்றுவ தறிந்து நெடிய
பரவைக்கும் அவ்வளம் அளித்துக் களித்து - (பா. 96:2-3)
என்று பொதுபடத் திணைமயக்கம் கூறுகிறார்.

9. முன்னோரைப் போற்றல்

தனி மனித வழிபாட்டினும், அன்னவர் கருத்து மேற்கொள்ளலே சால்பு, நால்வகைக் கவிவல்லவராகிய பிள்ளையவர்கள் முன்னோர் நற்கருத்துகளை ஆளத்தவறவில்லை.

அ. குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் (குறள்: 66) என்பது,

தாழ் செவியில் அற்ப எளி யேன்மொழியும் வைத்து இனிது
உவப்பின் நாடற்குரிய தாய் - (பா.13:4) என்றும்,

ஆ. காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதம் என்று இசையால் திசைபோ யதுண்டே
(சீவகசிந்தாமணி.31) என்பது

கன்னி கமுகின் மிடறொடியக்
கதலிக் குலைகள் சாய்ந்திடப்பா
கல்தீங் கனிகள் கிழிய விலாக்
கலிமும் புடைக்காய் விழமோதி
அன்ன பழனத்து ஓங்குதகட்டு
அகட்டுத் தகட்டு வாளைகள் பாய் (பா.20:3-4)
என்று வாளை பாயச் சொரிந்தனவாக விரிகிறது.

இ. ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் - (பெரியபுராணம் :143) என்பது

ஓட்டொடுபொன் ஒம்பக்கண்ட ஞானியார் - (பா. 35:3) என்றும்,

ஈ. . . . . . . பெண் பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே - (திருமந்திரம்.1178:2-3)

சிவம் சத்தி தன்னை ஈன்றும்
சத்திதான் சிவத்தை ஈன்றும் - (சித்தி-பிரமாண-2ஆம் சூத்.77)

என்பன

. . . . பிரானுக்கு
அனையாகி மகளாகி மனையாகி நின்றனுளொடு
அம்புலீ ஆடவானே - (பா. 79:4)

என்று பிள்ளைமூலம் வெளிப்படுகின்றது.

உ. "துரை" என்னும் சொல் வெள்ளையர் வரவால் அமைந்த சொல்.

இதனை முதன்முதலாக ஸ்ரீ குமரகுருபர அடிகள்,

புள்ளுறை பூம்பொழில் மதுரைத் துரைமகள்-(மீ.அ.பி.தமிழ்.நீரா.10) என்று ஆள்கிறார். பின்வந்த பிள்ளையவர்கள்,

அமலர்தம் இடமேவு பொற்புத் துரைப் பெண் - (பா.21:2) என்று ஆள்கிறார்.

ஊ. தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்
கிள்ளைபாடுவ கேட்பன பூவைகள்-(பெரியபுரா.93:3-4) என்பது,

முதிர்சுவை அமுதம் ஒழுக்கிய தேஎன மொய்த்த சிறைக்கிளிகள்
மூவர் திருப்பதிகம் பாட . . . கருங்குயில் வாசகம்
முழுதும் பொக்கம றப்புகல. . . கதிரும்பூவைகள்
சாமம்பாட. . . . (பா. 40:1-3)

என்று விரிவு பெறுகிறது.

எ. மண்கொள வரிந்த வைந்நுதி மடுப்பின்
அண்ணல் நல்ஏறு இரண்டுடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போத்த
திண்மின் முரசம் ... (புறம்-288:1-4) என்பதும்,
ஏற்றுரி முரசம் நாண - (சீவகசிந்தாமணி-2142) என்பதும்,
ஏற்றுரின் உரிமங் கலமுரசும் - (பா.37:1) என்று அமைகிறது.

10.மெய்ப்பாடு

உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றால் வெளிப்படுதல் - தொல். உரை

பசியடங்காமை காரணமாக மேலும் உண்ண விரும்புதலின் மெய்ப்பாட்டினை முருகனது வேல்மேல் ஏற்றி,

. . . . தாரகப் பெயரின் அவுணன்
கார்செய்த உடலம் பிளந்தொழுகு குருதியங்
கடல்வாய் மடுத்து மாந்திக்
கருந்தடி குதட்டியும் பசியடங் காதுகடை
வாயைநாக் கொண்டு நக்கும்
கூர்செய்த கொலைபழுத்து ஒழுகுவெள் வேல் - (பா.110:1-2)

என்று மெய்ப்பாடு காட்டுகிறார்.

11.கற்பனை

இப் பிற்காலக் கம்பரின் நூல்களில் கற்பனைக் காட்சிகள் கொடிகட்டிப் பறக்கும். இரண்டுமட்டும் காண்போம்.

வேந்தன் மேயது தீம்புனல் உலகு. இதன் கருப்பொருள்களாகிய செந்தாமரையும் வெண்டாமரையும் இந்நிலமெங்கும் பூத்துள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டது இக்கற்பனை.

"தன்தாதையாகிய திருமாலுக்கு நிழல் தந்த மலையினத்தின் சிறகரிந்த இந்திரன் மேல் சினங்கொண்டான் நான்முகன்; இந்திரனுக்குரிய மருதத்தில் அவனிருக்க இடமின்றி ஆக்குவேன் என்று; தனக்கும், தன்தாய் திருமகளுக்கும் மனைவி கலைமகளுக்கும், ஊர்தி அன்னங்கட்கும் செந்தாமரை வெண்டாமரைகளை ஒதுக்கி அமரச் செய்து தன் இளவல் மன்மதனுக்குப் படைக்கலக் கொட்டிலாகவும் ஆக்கினான். இதனால் தன் நிலம் பகுதியிலே தானிருக்க இடமில்லாதவனானான் இந்திரன். பிரமன் மகிழ்ந்தான். (பா.16:1-2)

பிரமன் இருப்பால் பொருள்களைப் படைக்கும் தொழில் வளமும், திருமகள் இருப்பால் செவ்வவளமும், கலைமகள் இருப்பால் அறிவு வளமும், அன்னங்களின் இருப்பால் நீர்வளமும், மன்மதன் இருப்பால் இன்பவளமும் கொண்டது திருத்தவத்துறை என்பது குறிப்பு.

ஆ. பெருமாட்டி, பெருமானின் உருப்பாதி கொண்டதேன்? சுவையாகக் கற்பனை செய்கிறார் பிற்காலக் கவிச்சக்கரவர்த்தி.

"அம்மைக்குத் தனயன் திருமால். இவன் அப்பன் ஊரும் எருதானான். இவ்வூர்திமேல் தானும் ஏறின், தமயன் மீது அமர்ந்த நாணமும், அப்பனுடன் அமராவிட்டால் பிரிவாலான நாணமும் ஏற்படாதிருக்க அம்மை செய்த விறகுதந்திரம்-தான் பிரியா உருப்பாதி கொண்டது. இதனால் நாணமோ பழியோ எழ வழியில்லை (பா.25:2-3)

12. அறிவியல் செய்தி இரண்டு

"விண்வெளியில் எங்கும் எத்தடையுமின்றி ஞாயிற்றொளி பரவியுள்ளது. எனினும் அவ்வொளியைப் பிரதிபலிக்கும் தூசுகளும் தூசுகளைக் கொண்ட காற்றுமண்டலமும் அங்கு இன்மையால் விண்வெளி அங்கு சென்று காண் பார்க்குப் புகை மடிந்ததுபோல் தோன்றும்" என்பது இன்றைய அறிவியல்.

விண்வெளி புகைநிறம் என்பது மெய்ப்பொருளியலார்க்கும் உடன்பாடே.

இதனைப் பிள்ளையவர்கள்,

தங்கும் அறி ஞோர்நபம் புகைநிறம் எனக்கரைதர - (பா.6:3)
என்பார்.

ஆ. நிலவு தன்னொளியற்றது. ஞாயிற்றொளியின் பிரதிபலிப்பே நிலவொளி என்பது அறிவியல். இதனை,

பொற்புற விளங்கும் பனிக்கலைகண் ஒவ்வொன்று
புதையிருள் சவட்டும் கதிர்ப்
புத்தே ளிடத்துநா டொறும் அடைய (பா.81:1)
என்று கூறுகிறார்.

13.சொல்நுட்பம்

பெருந்திருப்பிராட்டியாரை,

வெங்காதல்
போயற அற்பின்உள் வார்தம் உளத்தில்
வதிந்தூ றும்தேனே - (பா.32:2)
என்று கவிஞர்பிரான் போற்றுகிறார்.

தூய இறைஅன்பு தவிர மண், பொன், பெண் காதல்கள் பின்னும் பின்னும் பிறவி வெம்மையும் வினைவெம்மையும் தருவனவாதலின் இவற்றை "வெம்மையடைதந்து பிரித்துக்காட்டி இவற்றின் இயல்புணர்த்தினார். இவை தற்காலிகமாகப் போனால் மட்டும் போதாது; போனது போனதாகவே வேண்டும் என்பதுணர்த்தப் ஆதல் "போய் அற" என்றார். அன்பு, இங்கு அற்பு ஆனதேன்? அம்மைமீது கொண்ட அன்பு மென்மையானதன்று வன்மையானது என்பது குறிக்க 'அற்பு' என்று வலிக்கும் வழி வலித்தார். எங்கெங்கு நோக்கினும் சத்தியின் இருப்பேயாயினும் உள்குவார் உள்ளமே சிறப்பு என்பதால் "உள்வார்தம் உள்ளம்" என்றார். அத்தகு உள்ளமே அன்னையின் புக்கில்-நிலையான முகவரி-என்பது சுட்ட "வதிந்து" என்றார். தேன், உண்டவர் உடல்நோய் தீர்ப்பதுடன், உடல் உரமும் அளிப்பதாகும். அன்னையோ உயிர்நோய் (மலம்) தீர்ப்பதுடன் உயிர்க்கு ஆக்கமும் அளிப்பவளாதலின் அன்னையைத் "தேனாக உருவகித்தார்" பழந்தேனினும் புதுத்தேனே ஆற்றல் மிக்கதாகலின் "ஊறும் தேனே" என்றார்.

இங்ஙனம் தொட்ட இடமெல்லாம் நுட்பம் காட்டுவது இந்நூல்.

பிள்ளையவர்களின் இந்நூல் மட்டுமன்றிப் பிறநூல்களும் பீடுபெற்றவை என்பதை நான் சொல்வதைவிட வேதநாயகரே கூறுவது மிகப்பொருத்தம்.

....
....நூலுள் ஒருபாவில் ஓரடியில் ஒருசீரை
ஆய்வீ ராயின்
எந்நாலும் கற்றவராய் இகபரமும் பெற்றவராய்
இலகுவீரே

குளத்தூர் ச. வேதநாயகர் (மீசு. பி. சரித்திரம் பாகம்-2.ப.333)

20. பிள்ளையின் பண்பும், பங்களிப்பும்

கு.கதிரேசன்
திருச்செந்தூர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் (1815-1876) வாழ்வாங்கு வாழ்ந்து, இலக்கியங்கள் பல படைத்து இணையற்ற கவிஞராகத் திகழ்ந்து, மகாவித்துவான் என்று அழைக்கப்பட்டவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. அவர் இருபத்தெட்டு காப்பியங்களையும் நாற்பத்தைந்து பிரபந்தங்களையும் பல்வேறு தனிப்பாடல்களையும் எழுதியுள்ளார். அவரளவுக்கு மிகுதியான நூல்களை இயற்றியவர்கள் தமிழ்ப்புலவர்களில் வேறு யாருமில்லை. அவர் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரால் மதிக்கப்பட்டு வளர்ந்தவர். அவரிடம் டாக்டர் உ.வே.சாமிநாதைய்யர் தமிழ் கற்று சிறந்த மாணாக்கராகத் திகழ்ந்தார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கென தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பல்வேறு வகையில் அர்ப்பணித்த மகாவித்துவானின் பண்பையும் பங்களிப்பையும் இனம் காண்பது அவசியமானதாகும். இத்தேவை கருதி மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ் உலகிற்கு அளித்த கொடையையும் அவர் வாழ்ந்த வாழ்க்கை முறையையும் பண்பையும் மிகச் சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

மகாவித்துவானின் பண்பும் பழக்கவழக்கங்களும்

பண்புடையார் பட்டுண்டுலகம் (குறள்:996)

என்னும் குறள் மொழிக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. அவர் வாழ்ந்த சமகாலத்து அறிஞர் பெருமக்களின் கருத்துகள் மூலமே ஒருவருடைய பண்பையும் பழக்கவழக்கங்களையும் இனம் காணமுடியும். அவ்வாறு பெறப்பட்ட செய்திகள் கூட விருப்பு வெறுப்புக்கு உட்படாமல் உண்மையானவைகளாக இருத்தல் வேண்டும். எனவே பலரும் கூறிய கருத்துகளை ஒட்டியே முடிவு கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பாரபட்சமற்ற செய்திகளைப் பெற முடியும். அந்த வகையில் டாக்டர் உ.வே.சாமிநாதைய்யர் தம் ஆசிரியராக விளங்கிய மகாவித்துவானைப் பற்றி பல செய்திகளைத் தம் நூலிலும் முன்னுரைகளிலும் குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகள் அவரது பண்பையும் பழக்கவழக்கங்களையும் அறிவிக்கும் களங்களாக அமைகின்றன.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல், இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (குறள்:992)

என்னும் வள்ளுவர் கூற்றிற்கேற்ப வாழ்ந்து, சிறந்த பண்பாளராகத்

திகழ்ந்தவர் மகாவித்துவான். 'அன்பு' என்ற பண்பே அனைத்திற்கும் அடிப்படை. அன்பையே அனைத்து சமயங்களும் எடுத்துக் கூறி பரப்பி வருகின்றன. அன்பை அடிப்படையாகக் கொண்டே உலகம் இயங்கி வருகிறது. இத்தகைய அன்பையே அவர் தம் வாழ்வின் தலையாய பண்பாகக் கொண்டிருந்தார். தம்முடன் தொடர்பில்லாதவர்களிடத்தும் தமக்குத் துன்பம் செய்பவர்களிடத்தும் முரண்படுபவர்களிடத்தும் கூட அன்பு செலுத்தும் பண்பு மகாவித்துவானுக்கு இருந்தது. இதனை, "தம் கொள்கைக்கு மாறுபாடுடையவர்களானாலும் தமக்குப் பல இடையூறுகளைச் செய்தவர்களானாலும் அவர்களோடு பழக நேர்ந்தால் எல்லாவற்றையும் மறந்து அன்புடன் பழகுவார்; அவர்களுக்கு உதவியும் செய்வார்" என்னும் உ.வே.சாமிநாதையரின் கூற்றின் மூலம் (1965:தொ.2.91) விளங்கிக் கொள்ள முடிகிறது. தம்மிடம் கல்வி பயிலும் மாணவர்களிடத்து அளவற்ற அன்பு செலுத்தியர் மகாவித்துவான். கல்வியைத் தேடி அலைந்து அல்லல்பட்ட அனுபவமும் துன்பமும் அவருக்குத் தெரிந்திருந்ததால், தாம் பட்டஅல்லலைத் தமக்குப் பின்வரும் மாணவர்கள் அடையக்கூடாது என முடிவு செய்திருந்தார். அதனால், "தம்பால் வந்த மாணாக்கர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக் கூடாதென்று கருதி அவர்கள் பால் அளவற்ற அன்பு பூண்டு பாடஞ் சொல்லிக் கொடுக்கும் இயல்புடையவரானார். மாணாக்கர்களிடம் இவர் தாயைப் போன்ற அன்புடையவராக இருந்தார். அவர்களோ தந்தையாகவே எண்ணி இவரிடம் பயபக்தியோடு ஒழுகினர். அவர்களுடைய குற்றங்களை இவர் மறந்துவிடுவார். அவர்களுக்கு எந்த எந்த வகையில் குறைகள் உண்டோ அவற்றை நீக்குவதற்காக முயல்வார். அவர்கள். தெரிந்து கொள்ளாதபடி அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வார். (உ.வே.சாமிநாதையர். 1965,தொ.2:95). இத்தகைய செய்திகள் மூலம் மகாவித்துவான் அன்பின் பிறப்பிடமாகவே திகழ்ந்த தன்மை புரியலாகிறது. இப்பண்பு, அவரை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள்:72)

என்னும் குறளுக்கு இலக்கணமாக விளங்கச் செய்தது.

மகாவித்துவான் காட்சிக்கு எளியராய் கடுஞ்சொல் அல்லராய், எளிமை, பணிவு, சாந்தம், இரக்கம், பொறுமை, போதுமென்ற மனம் முதலிய நற்பண்புகளைப் பெற்றிருந்தார். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழி இவருக்குப் பொருந்துவதாயிருந்தது.

அமைதியான தோற்றத்துடன் முதிர்ந்த ஞானத்தைப் பெற்றிருந்தார். கண்டவுடன் கையெடுத்து வணங்கத் தக்க தெய்வீகம், முதிர்ச்சி அவரிடம் இருந்தமை புலனாகிறது. இவரது ஆடை அணிகலன்கள் மூலம் எளிமையான தோற்றத்தை இனம் காண முடியும். "இடையில் ஆறுமுழ நீளமும் மூன்று முழ அகலமும் உள்ள தூய வெள்ளை உடை, ஆறுமுழ நீளமுள்ள மேலாடை, உதர பந்தனமாக ஒரு சிறிய சவுக்கம் ஆகிய இவ்வளவே இவர் எக்காலத்தும் அணியும் ஆடைகள். உடையை

மூலகச்சமாக உடுத்துக்கொள்ளுவார். முன்னும் பின்னும் கௌரிசங்கரமுள்ள ருத்திராட்ச கண்டியைத் தரித்திருப்பார் (உ.வே.சா;1965;தொ.2:89) என்னும் செய்தி மகாவித்துவானின் எளிமையை உயர்த்தி நிற்கிறது.

பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல் (குறள்:979)

என்னும் வள்ளுவர் வழியில் பணிவு என்னும் பண்பை வாழ்வின் இயல்பாகப் பின்பற்றியவர் மகாவித்துவான். அவர் தமது மாணவர்களுக்கு மடத்திலிருந்து பாடம் கற்பிக்கும்பொழுது கைகளை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டே போதித்த பாங்கு அவரது உள்ளத்திலிருந்த பணிவுணர்வின் வெளிப்பாடு ஆகும். தற்காலத்தில் கூட பணிவுடையவர்களே பட்டங்களையும், பதவிகளையும், புகழையும் பெற முடிகிறது. எனவே பணிவு என்னும் இயல்பு ஒரு மனிதனை பெருமைப்படுத்தும் உணர்வே ஆகும். சான்றாகப் பல நிகழ்வுகளைக் கூறலாம். ஒன்றே ஒன்று. பாஸ்கர சேதுபதி விவேகானந்தரைப் பணிந்து நிற்க, விவேகானந்தர் பாஸ்கர சேதுபதியைப் பணிந்து நிற்க, அந்தப் பணிவே அவர்களிருவருக்கும் மிகப்பெரும் புகழைப் பெற்றுத்தந்தன. அவ்வண்ணமே மகாவித்துவானும் தம் வாழ்வில் பணிவை மிகச் சிறந்த அணியாகப் பூட்டி மகிழ்ந்தார்.

நிறைகுடம் தளும்பாது, குறைகுடம் கூத்தாடும்
(ஆ.கந்தசாமி;முதுமொத்தன்மொழி)

என்னும் பழமொழிக் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் வாழ்ந்து காட்டியவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. அமைதியாக இருந்து பல அரிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர். "காட்சிக்கு எளிமையும் பணிவும் சாந்தமும் இவர் பாலுள்ளன வென்பதை இவரைக் கண்டவுடன் அறியலாம். ஆழ்ந்த அறிவும் இணையற்ற கவித்துவமும் வாய்க்கப் பெற்றிருந்தும் அலைகளெல்லாம் அடங்கி ஒலியற்றிருக்கும் ஆழ்ந்த கடலைப் போல் அறிவின் விசித்திர சக்தியெல்லாம் கண்டவுடன் அறிய முடியா வண்ணம் அடங்கியிருக்கும் தோற்றமுடையவராக இவர் இருந்தார் (உ.வே.சா;1965;தொ-2:88) என்னும் கூற்றின் மூலம் மகாவித்துவான் சாந்தமான குணம் கொண்டவர் என்பது புலனாகிறது. மனிதனைத் தெய்வமாக மாற்றுவது அவனிடமுள்ள இரக்க குணமும் கருணை உள்ளமுமே ஆகும்". இத்தகைய இரக்க குணம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் மிக இருந்தது என்பதை அவரது மாணக்கரான உ.வே.சா. குறிப்பிட்டுச் செல்கிறார். பிறர் துயரைக் கண்டபோது அதற்காக மனம் இரங்கி அனுதாபம் கொள்ளும் உள்ளம் அவருக்கிருந்தது. தமது இன்பத்தைவிட பிறருடைய இன்பத்தையே விரும்பும் பொது நல நோக்கம் கொண்டவர் தம் வாழ்வில் இன்னல் வந்தாலும் பிறருக்கு இன்னல் வரக்கூடாது என்னும் கருத்துடையவர். எனவே தான் அவரை உ.வே.சா. "தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்கு நுஉம் வெங்குறை தீர்ப்பிக்கும் விழுமியோர்" இவர் என்று சான்றளிக்கிறார். (1965;தொ.2:93)

ஒரு மனிதனின் வெற்றிக்கு அடிப்படையாக இருக்கும் பண்புகளில் ஒன்று பொறுமை. பொறுமையுடனிருந்து பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்பவனே மிகப்பெரும் வெற்றியைப் பெறுவான். "பொறுமை கடலினும் பெரியது" என்னும் பழமொழி பொறுமையின் இயல்பை உணர்த்தும். "பொறுத்தவர் பூமி ஆழ்வார்;பொங்கியவர் காடாழ்வார்" என்பது மகாபாரதம் உணர்த்தும் பாடம்.

நிறையுடைமை நீங்காமை வேண்டின், பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும் (குறள்:154)

என்பது குறள்மொழி. இச்சிறப்பு வாய்ந்த பொறுமைக்குணத்தை வாழ்வின் அத்தியாவசிய பண்பாடாகக் கருதிப் பின்பற்றி வந்தார் மகாவித்துவான். இதிலிருந்து ஒருபோதும் அவர் தவறியதில்லை. இவரிடமிருந்த சாந்தமான குணமே இவரை அனைவரிடமும் மரியாதை கொள்ள வைத்தது. இவரது மாணவர்களிடமும், பிறரிடமும் இவர் நற்பெயர் பெற்று மரியாதை பெறுவதற்கு இவரது சாந்த குணமே காரணமாக அமைந்தது. "பிறர் தம்மை அவமதித்தாலும் பிறரால் தமக்கு இடையூறுகள் நேர்ந்தாலும் பொறுத்துக்கொண்டிருக்கும் இவருடைய இயல்பை அறிந்து வியந்தவர்கள் பலர். தியாகராச செட்டியார் முதலியோர் சில சமயங்களில் இவர் மேற்கொண்ட பொறுமைக்காக இவரைக் குறை கூறியதுமுண்டு. யாரேனும் கடுமையாகப் பேசினால் எதிர்த்து ஒன்றும் கூறாமல் உடனே எழுந்து சென்று விடுவார். யாரிடத்தும் விரோதம் பாராட்டக் கூடாதென்பது இவர் கொள்கை. இவருடைய வாழ்க்கையில் வறுமையினாலும் பிறருடைய அழுக்காற்றாலும் இவருக்கு நேர்ந்த இடையூறுகள் பல. அவற்றை யெல்லாம் பொறுமையால் வென்று புகழோடு விளங்கினார்" (உ.வே.சா;1965;தொ.க.2:91). எனவே மகாவித்துவான் தம் வாழ்க்கையில் பொறுமையை மிகச்சிறந்த பண்பாகக் கடைபிடித்து வந்தமையையும் அதன் மூலம் அவர் உருவாக்கிக் கொண்ட பழக்க வழக்கங்களையும் இனம் காண முடிகிறது.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

இப்பழமொழி வாய்மொழியாகவே இன்றும் இருந்து வருகிறது. இதைப் பின்பற்றுபவரைக் காண முடியவில்லை. இப்பண்புடையவர் நிச்சயமாக மனிதனாக இருக்க முடியாது, மனிதனுக்கு அப்பாற்பட்ட ஆற்றலுடையவராகவே இருக்க வேண்டும். இவ்வுலகில் பணமே எல்லாம், அதுவே பிரதானமானது என்னும் நிலையிலிருக்கும் காலச் சூழலில் சற்று வேறுபட்டு வாழ்ந்து காட்டியவர் மகாவித்துவான். கல்விச் செல்வத்தைத் தவிர பிற செல்வத்தை அவர் மதிக்கவே இல்லை. பணத்தைப் பொறுத்தவரையில் இருப்பது போதுமென்று திருப்திபட்டுக்கொள்ளும் இயல்புடையவர் அவர். பணம் சம்பாதிக்கும் பல வழிகளுடன் பலரும் அவரை அணுகியபோது அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் வறுமையை விரும்பி ஏற்றுக்கொண்டார். தம் கொள்கைக்கு விரோதமான எதையும் எந்நிலையிலும் செய்வதில்லை என்று வீர உணர்வுடன் கொள்கைப் பிடிப்பு

கொண்டிருந்தார். அதனால் தான் இவரது மாணவர்கள் "பணத்திற்கு அடிமையாக இராமல் பணத்தை இவர் அடிமையாக்கினார்" என்று புகழ்மாலை சூட்டுகின்றனர். இத்தன்மை அவரது மிகச்சிறந்த பண்பாட்டுச் சின்னமாக அமைந்திருப்பதை அறிய முடியும். மேற்குறிப்பிட்ட பல்வேறு செய்திகள், சான்றுகள் மூலம் மகாவித்துவானின் பழக்கவழக்கங்களையும், பண்பாட்டையும் விளங்கிக் கொள்ள முடியும்.

மகாவித்துவானின் மாண்பும் மதிப்பும்

மகாவித்துவான் தம் இயல்பான வாழ்வியற் செயற்பாடுகளினால் மாண்பையும் மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தார். அவரிடமிருந்த நற்பண்புகளும் பழக்க வழக்கங்களும் அவர் மாண்புடனும் மதிப்புடனும் வாழ்ந்தார் என்பதை வெளிப்படுத்துவனவாக உள்ளன. அவற்றைச் சில சான்றுகளுடன் விளக்குவது மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் வாழ்வியற் பற்றிய தெளிவிற்கு வழிவகுக்கும்.

மகாவித்துவான் மிகுந்த பக்தியும் தற்பெருமையற்ற அடக்கமும் பிறரைக் குறைகூறி வாழாத சகிப்புத் தன்மையும் மற்றவர்களைப் பாராட்டி மகிழும் பரந்த சிந்தனையும் நன்றி மறவாத மனித நேயமும் ஒருங்கே பெற்றிருந்தார். இப்பண்புகள் அவரை மாண்புடனும் மதிப்புடனும் மிளிரச் செய்தன.

மனிதன் தன் உள்ளத்தில் இறைவனைக் குடிகொள்ள வைத்தால் தீய அழுக்குகள் அனைத்தும் அகன்றுவிடும். இவ்வுண்மையை வாழ்வில் கடைபிடித்தவர் மகாவித்துவான். பக்திமார்க்கத்தில் மனதைச் செலுத்தினால் எத்தகைய துன்பமும் விலகிச் சென்றுவிடும். இந்நியதியினாலேயே மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் தம் உள்ளத்தில் சிவபெருமானை குடிகொள்ள வைத்தார். சிவபக்தியில் தம்மை முழுமையாக ஐக்கியப்படுத்திக்கொண்டார். "நீரில்லா நெற்றி பாழ்" என்னும் பொன்மொழிக்கேற்ப வாழ்ந்து மனப்பக்குவம் பெற்றவர் அவர். சிவவழிபாட்டையும் சிவபக்தியையும் முழுமையாகப் பின்பற்றியவர் அவர். அவரது நூல்கள் மூலம் பிள்ளையவர்களின் சிவபக்தியையும் அதில் அவருக்கிருந்த முதிர்ச்சியையும் விளங்கிக் கொள்ளலாம். இவர் இறுதிகாலத்தில் சிவபதம் அடைவதற்கு இருதினங்கள் முன், ஒரு சுலோகத்தை மொழிபெயர்த்து அதன் ஈற்றடியில், ஏக நாயகனே தில்லையிலாடும் இறைவனே எம் பெருமானே" என்று எழுதினார் (உ.வே.சா.1965;தொ.2:94). இச்செய்தி அவரது வழுவிய சிவபக்தியையும் இறையுணர்வையும் எடுத்துக் காட்டுவதுடன் அவரது மாண்பையும் பறைசாற்றி நிற்கிறது.

தற்பெருமை என்னும் பண்பு ஒரு மனிதனிடம் இருந்தால் அது அவனைச் சீர்குலைத்துவிடும். அது ஆணவத்தின் அடிப்படையாகும். இதனைப் பல புராணங்கள், கதைகள் வழி அறியலாம்."நான் என்பது ஆணவத்தின் அறிகுறியாகும். எனவேதான் இலக்கியங்கள் நான் என்று சொன்னவன் அழிவான்" என்று இடித்துரைக்கின்றன. அதனால்தான் மகாவித்துவான் தம்மை ஒருபோதும் வியந்து பெருமைபட்டுப் பேசியதும்

இல்லை. செயல்பட்டதும் இல்லை. "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் கூற்றிற்கேற்ப அவர் வாழ்ந்து காட்டியமையால்தான் இன்றும் மதிப்புடன் போற்றப்படுகிறார்.

பிறர் குற்றங்களை பொருட்டாக மதிப்பதில்லை. அதை விளம்பரப்படுத்தி அவருக்கு இழுக்கு தேடும் இழிவான செயலை அவர் மேற்கொள்ளாத மாண்புடையவராக இருந்தார். இப்பண்பை அவரது நூலாக்கப் பணி மூலம் அறியலாம். பொதுவாக நூலாசிரியர்களிடமோ உரையாசிரியர்களிடமோ புலவர்களிடமோ ஏதாவது குற்றங்களோ குறைகளோ தென்பட்டால் அவற்றை வெளியிடாமல் தவிர்த்துவிடுவார். அவற்றை விளம்பரப்படுத்தி அவர்களுக்கு இழிவு தேடித்தருவதில்லை. வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவர் மனம் புண்படாதவாறு பிறருக்குத் தெரியாதவாறு அறிவுறுத்தி அதனைக் களையும் பணியை மேற்கொள்வார். பிறர் யாராவது குற்றம் கூறினாலும் அவரைச் சமாதானப்படுத்தி அவரும் தவிர்த்துவிடும் வகையில் பக்குவமாக எடுத்துரைத்துச் செயல்படுவார். இத்தன்மை அவரது சீரிய மாண்பைக் காட்டுவதுடன் அதனால் அவருக்கு உருவான மதிப்பையும் கோடிட்டுக் காட்டுகிறது.

ஊரான் பிள்ளை ஊட்டி வளர்த்தால்
தம் பிள்ளை தானே வளரும்

என்பது பழமொழி. இதற்கேற்ப ஒருவர் பிறரைப் பாராட்டக் கற்றுக்கொண்டால், அவரை மற்றவர்கள் அனைவரும் தம்மையறி யாமலேயே பாராட்ட முன்வருவர். இவ்வுண்மையை வாழ்வின் நெறிமுறையாகக் கையாண்டு வெற்றி பெற்றவர் மகாவித்துவான். பிறரைப் பாராட்டுதல், பிற புலவர்களின் பாடல்களைப் போற்றுதல், தம்மை நாடிவரும் மனிதர்களை அவர்கள் கல்வி, கேள்விகளில் குறைந்திருந்தாலும் பாராட்டி ஊக்குவித்து அனுப்பும் பண்பு முதலிய நற்பண்புகள் அவரைப் பிறர் நெஞ்சில் குடி கொள்ளச் செய்தன. அவரது மாண்பை அறிந்த பலரும் அவர்பால் தனிமதிப்பு கொள்ளத் தொடங்கினர்.

பிறர் செய்த உதவியை மறவாமல் நன்றி பாராட்டும் தன்மை மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாண்பினை உலகிற்கு உயர்த்திக் காட்டியது. இப்பண்பு அவரது குணங்களில் தலைசிறந்ததாக அமைந்திருந்தது.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக
கொள்வர் பயன்தெரி வார் (குறள்:104)

என்னும் திருக்குறள் உணர்த்தும் செய்ந்நன்றியறிதல் பண்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார் அவர். "பிறருடைய உதவியைப் பெற்றவுடன் நன்றியறிவினால் மனங்கசிவதில் இவரை ஒப்பார் யாரும் இல்லையென்றே சொல்லலாம்" என்பார் மகாவித்துவானின் மாணாக்கரான உ.வே.சா. (1965;தொ.2:93). தற்புகழ்ச்சியையும் வீண்புகழ்ச்சியையும் எதையோ எதிர்பார்த்து முகத்துதி செய்யும் செயற்கைப் புகழ்ச்சியையும் இவர் விரும்பவில்லை. முற்றிலுமாக வெறுத்தார். "ஒவ்வொரு மனிதனும்

பிறருடைய உதவிகளால் வாழ்க்கையை நடத்த வேண்டியவனாக இருக்கிறான். பிறருதவியின்றி ஒருவன் தனது ஆற்றலொன்றனையே கொண்டு வாழ்வது உலகத்தில் இயலுவதன்று. ஒருவருக்கொருவர் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து இன்புற்று வாழ்வதே அறம். அங்ஙனம் ஒருவர் ஒருவருக்கு உதவிபுரியும் பொழுது அதனை மறவாமல் நினைத்தலும் வாயாரப் புகழ்தலும் இயன்றவரையில் உதவி செய்தவருக்குத் தம்மால் ஆன உதவிகளைப் புரிதலும் வேண்டும். அந்த முறையில் புலமையுடையவர்கள் தமக்கு உதவி செய்தவர்களை மறவாமல் வாயாரப் புகழ்தல் ஒரு கடமையாகும். நாவன்மையை அவ்வகையில் உபயோகிப்பது செய்ந்நன்றியறிவின் பயனாகுமேயன்றிப் பிழையாக எண்ணக் கூடியதன்று. சங்கப் புலவர்களும் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, வில்லிபுத்தூரார் முதலிய புலவர் பெருமக்களும் செய்ந்நன்றியறிவு காரணமாகவே தம்மை ஆதரித்த உபகாரிகளின் புகழைப் பாராட்டி உரிய இடங்களில் பல செய்யுட்களில் அமைத்துள்ளார்கள்" என்று மகாவித்துவான் அடிக்கடி கூறுவதாக அவரது மாணாக்கர் உ.வே.சா. தமது நூலில் குறிப்பிட்டுச் செல்கிறார். (1965;94, 95) இத்தகைய பண்புகள் பிள்ளையவர்களின் மாண்பையும் அதன் மூலம் அவர் பெற்ற மதிப்பையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

கல்வித்துறையும் மகாவித்துவானின் பங்களிப்பும்

> **தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
> **காமுறுவர் கற்றறிந் தவர்** **(குறள்:399)**

என்னும் குறள் வழிவாழ்ந்தவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. அவரது கல்வித்திறன் மிகவும் ஆழமும் அகலமும் உடையதாக இருந்தது. "அளக்கலாகா அளவும் பொருளும்" உடைய இவரது அறிவின் திறம் ஒவ்வொரு நாளும் புதியதாகவே தோன்றியது; இளமை தொடங்கியே தமிழ் நூல்களை முறையாகப் பயின்று பயின்று உரம் பெற்றதாக இருந்தது. படித்தவர்களாக எண்ணிய யாவரிடமும் பழகி அவரவர்களுக்குத் தெரிந்தவற்றை இவர் இளமை தொடங்கியே கற்றனர். பிற்காலத்தில் இவர் பாடஞ்சொல்லும் போது நன்றாகத் தெளிந்த அறிவோடு கருத்துக்களை எடுத்துக்கூறும் வன்மையும் பாடஞ்சொல்லும் நூல்களிலுள்ள பொருள்களைத் தம்முடையனவாகக் கொண்டுவிட்ட நிலையும் இவர் இளமை தொடங்கிச் செய்து வந்த முயற்சிகளின் பயனென்றே கூறவேண்டும். சிலரைப் போலக் கல்வி விஷயத்தில் இவருக்குத் திருப்தி பிறக்கவில்லை. என்னும் செய்திகள் (உ.வே.சா.1965;தொ.க.99) மூலம் பிள்ளையவர்களின் கல்வித் துறை பற்றிய அறிவைப் பெறலாம்.

கல்வி தொடர்பான ஐயங்கள் எதுவாயினும் தெரிந்த பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தயங்காத அறிவு வேட்கை உடையராகத் திகழ்ந்தமை அறியலாகிறது. அழகிய கையெழுத்தும் ஓலைச்சுவடிகளில் எழுதும் திறமும் வேகமாகவும் அதிகமாகவும் நூல்களை வாசிக்கும் பாங்கும் பெற்றிருந்தார். தம் மாணக்கர்களுக்கு ஏட்டில் எழுதும் பயிற்சியை

வழங்கியமையும் கடினமான சொற்களுக்குப் பொருள் கூறி மனதிலிருத்த வேண்டியதைக் குறிப்பிட்டுக் கூறும் தன்மையும் செய்யுள் இயற்றும் திறனைக் கற்று கொடுத்தமையும் பிறமொழிச் சொற்களைக் கையாளும் முறையை எடுத்துரைக்கும் பாங்கும் இத்தனை நூல்களை எவ்வாறு மனத்திலிருத்திக் கொண்டார் என வியப்பை ஏற்படுத்தியமையும் சாதி சமய பேதமற்ற பலரையும் மாணவராக ஏற்றுக் கொண்டு போதித்த நற்பண்பும் கல்வித்துறையில் இவருக்கென தனித்தன்மையை உருவாக்கிவிட்டது எனலாம். "இவரிடம் படித்தவர்கள் நல்லறிவையும் நன்மதிப்பையும் உயர் நிலையையும் அடைந்தார்கள். சிலர் ஸமஸ்தான வித்துவான்களாகவும் கலாசாலைப் பண்டிதர்களாகவும் இருக்கும் பேறு பெற்றனர். தம்பிரான்களிற் சிலர் நல்ல அதிகாரத்தையும் உயர்ந்த நிலையையும் அடைந்தனர். சிலர் ஆதீனத் தலைவர்களாகவும் ஆயினர். இவரிடம் ஒருவர் சிலகாலம் படித்தாலும் சிறந்த அறிவுடையவராகி விடுவார். இவர்களுடைய மாணக்கர்களென்றாலே அவர்களுக்குத் தனியாக ஒரு மதிப்புண்டு. (1965;தொ.2:96) என்னும் உ.வே.சா.வின் கூற்று மகாவித்துவானின் கல்விப்பணியைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைகிறது. இதிலிருந்து அவர் சிறந்த கல்விமான் மட்டுமல்ல. கல்விமான்களை உருவாக்குபவராகவும் திகழ்ந்தார் என்பது பொருத்தமாகும்.

மகாவித்துவானின் தமிழ்ப்பற்றும் திறனும்

தமிழ் நூலாக எது கிடைப்பினும் அதனைப் படித்து மெய்பொருள் அறியும் தமிழ்ப்பற்று பிள்ளையவர்களுக்கு இருந்தது. அவர் பல இடங்களில் பல வகையில் சேகரித்தத் தம் அறிவை மாணவர்களுக்கு வழங்கியமையால்தான் சிற்றிலக்கியங்கள் உயிர்பெற்று வளர்ந்தன எனலாம். குமரகுருபரர், சிவபிரகாசர், சிவஞானமுனிவர் முதலியோர் இயற்றிய சிற்றிலக்கியங்களும் பிறவும் தமிழ் உலகிற்குக் கிடைத்தன. அவர் கற்பித்தமையாலேயே பல சிற்றிலக்கியங்கள் பலராலும் படிக்கப்பட்டன. கம்பரந்தாதி, மும்லையந்தாதி முதலிய நூல்களுக்கு உரையெழுதினார். இதனைப் பின்னாளில் இராமசாமிப் பிள்ளை என்பார் பதிப்பித்து வெளியிட்டார். காஞ்சிபுராணம், தணிகைப்புராணம், திருவானைக்காபுராணம் முதலியவற்றை எடுத்துக்கூறி தமிழ் உலகில் நிலைபெறச் செய்தார். மேலும் செவ்வந்திப்புராணம், காஞ்சிப்புராணத்தின் முதற்பாகம், திருவானைக்காப்புராணம், கல்லாட மூலம் முதலிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்.

"இலக்கண அறிவு ஒருவனுக்கு இன்றியமையாததே. ஆயினும் இலக்கிய பாடங்களை வாசித்த பின்பே இலக்கண நூல்களைக் கற்றல் பயன்விளைவிக்கும்" என்று கூறுவது (உ.வே.சா.1965;98), அவரது மொழிப்புலனை வெளிப்படுத்துவதாக உள்ளது. தமிழ் நூல்களில் மகாவித்துவானுக்கு இருந்த அன்பும் ஆர்வமும் அளவிட முடியாதது. ஒரு நூலைப் படிக்கும் பொழுது உணவு, உறக்கம், அனைத்தையும் மறந்துவிடும் இயற்புடையவராகத் திகழ்ந்தார். தமிழ் நூல் சில சமயங்களில் அவரது நோய்க்கு மருந்தாகவும் உதவியிருப்பதை அறிய

முடிகிறது. நல்ல நூல்களின் சிறந்த பகுதிகளைப் படிக்கும்பொழுதும் பாடம் கூறும்பொழுதும் மனமுருகிக் கண்ணீர் விடும் இயல்புடையவர். கச்சியப்ப முனிவர் என்னும் தமிழ்ப்புலவரை பக்தியுடன் வழிபட்டுப் பாராட்டும் பாங்கினை அறிய முடிகிறது. "செய்யுள் செய்து வரும்பொழுது தடைப்பட்டால் கச்சியப்ப முனிவரைத் தியானிப்பேன். உடனே விரைவாகக் கருத்துக்களும், சொற்களும் தடையின்றி எழும் என்று இவர் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன்" என்னும் உ.வே.சாவின் கூற்று மகாவித்துவானின் தமிழ்ப் பற்றையும், திறனையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைகிறது. சேக்கிழார், கம்பர், நெற்குன்றவான முதலியார், அம்பிகாபதி, கவி வீரராகவ முதலியார், வரதுங்கராமபாண்டியர், அதிவீரராமபாண்டியர், திருவாரூர் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர், துறைமங்கலம் சிவப்பிரகாசர், சிவஞானமுனிவர் முதலியோரின் நூல்களில் மிக விருப்பமுடையவராகத் திகழ்ந்தார்.

கம்பருடைய செய்யுட்களைப் படித்து மனமுருகுவார். திருப்புகலூரந்தாதியிலுள்ள திரிபை வியந்து நிற்பார். திருச்சிற்றம்பலக் கோவையாரின் பாடல்களைப் பாடுவார். கல்லாடப்பகுதிகளை அடிக்கடி நினைவுபடுத்துவார். தேவாரப்பகுதிகளை எடுத்துரைப்பார். இலக்கண விளக்கத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அதனை வியந்து நிற்பார். சிவஞானமுனிவரின் இலக்கிய நடையில் ஈடுபாடு கொண்டிருந்தார். கச்சியப்ப முனிவர் நூல்கள், சங்க இலக்கியங்கள் முதலியவற்றை அதிகமாகப் பயன்படுத்துவார்.

மகாவித்துவான் பாடல் புனையும் ஆற்றல் பெற்றிருந்தமை அவரது தமிழ்ப்பற்றிற்கும் திறனுக்கும் தகுந்த சான்றாக விளங்குகிறது. பாடல் புனையும் ஆற்றல் சாதாரணமானதல்ல. நினைத்ததை நினைத்தவாறு கூறும் அரிய பாடல் புனையும் திறத்தை அவர் பெற்றிருந்தார். அவர் பிறப்பிலேயே கவித்துவ சக்தியுடன் பிறந்தார் என்பது உ.வே.சா.வின் கருத்து. அவர் மனம் வளம் பெற்ற செய்யுட்களின் விளைநிலமாகவே இருந்தது. செய்யுளியற்றுவது அவருக்குக் கைவந்த கலை. ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றியபோதும் திருப்தியடையாத மனம் கொண்டிருந்தார். இத்தன்மை பிள்ளையவர்களின் தமிழ்ப்பற்றையும், திறனையும் எடுத்தியம்புவதாய் அமைகிறது.

மகாவித்துவானின் படைப்பும் பங்களிப்பும்

மீனாட்சி சுந்தரம்பிள்ளை தம் தமிழ்ப்புலமையினாலும், ஈடுபாட்டினாலும் பலவகையான நூல்களைப் படைத்தும் பதிப்பித்தும் வெளியிட்டார். இவரது படைப்புகள் புராணங்கள், பிரபந்தங்கள், தனிப்பாடல்கள், சிறப்புப்பாயிரங்களென நான்கு வகைகளில் அடங்குகின்றன. ஆயினும் புராணங்களே அதிகமாக இடம் பெறுகின்றன. இவரால் புராணம் முதலிய இலக்கியங்கள் பாடப்பட்ட ஆலயங்கள் பல. அவ்விற்றிற்குப் பழைய புராணங்களும் உண்டு. இருந்த போதிலும் பலரது விருப்பதிற்கேற்ப புதிய புராணம் இயற்றி வெளியிட்ட தன்மையைக் காண

முடிகிறது. தாம் இயற்றிய புராணங்களில் இலக்கிய நயம், உத்தி முறைகளைப் பின்பற்றி நற்பெயர் பெற்றமை கண்கூடு.

புராணங்களின் காப்புச் செய்யுட்களில் அமைந்த சிவபெருமான் வணக்கத்தில் 'மடக்கு' அமைத்திருக்கிறார். திருநாகைக் காரோணப்புராணம், அம்பர்ப்புராணம் முதலியவற்றில் சித்திரக்கவிகளை அமைத்துள்ளார். விருத்தப்பாக்களைப் பயன்படுத்துவதும் சைவசித்தாந்த சாத்திரங்களை எடுத்துரைப்பதும் அவரிடம் பெருவழக்காக அமைந்துள்ளன. அவர் இயற்றிய திருவிடை மருதூருலாவுக்கு இணை எதுவுமில்லை. தனிப்பாடல்கள் புனைவதும் மடல் எழுதும்பொழுது தொடக்கத்தில் பாடல்கள் எழுதுவதும் அவருடைய வழக்கமாக விளங்குகிறது. வடமொழி வித்துவான் கூறும் சுலோகங்களை மொழிபெயர்த்துக் கூறும் திறம் பெற்றிருந்தார். அவரால் இயற்றப்பெற்ற சிறப்புப் பாயிரங்கள் நூலாசிரிய்ரின் தகுதிக்கேற்ப அமைந்துள்ளன. அவரிடம் சிறப்புப்பாயிரம் பெறுவதனால் நூலாசிரியர்களுக்கு மிகுந்த மரியாதை கிடைத்தது. நூலுக்கு சிறப்புப் பாயிரம் செய்யும் வழக்காறு மகாவித்துவான் காலத்திற்குப் பின்பே மிக வேகமாக வளர்ந்தது.

அவர் தமிழ் இலக்கிய - இலக்கண உலகிற்குத் தந்த பங்களிப்புகள் பல. பல நூல்களை இயற்றினார். பல தனிப்பாடல்களைப் புனைந்தார். இயற்றிய நூல்களில் தெரியாமல் போய்விட்டவை சில உள்ளன. தெரிந்தவற்றுள் புராணங்கள் 22, பிற காப்பியங்கள் 6 சிற்றிலக்கியங்கள் 45 மற்றும் எண்ணற்ற தனிப்பாடல்களும் உண்டு. இச்செய்திகள் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தமிழ்ப்பற்றையும் திறனையும் எடுத்துரைப்பதாய் உள்ளன.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பண்பும் பங்களிப்பும் மேற்குறிப்பிட்ட சான்றுகள் வழி எளிதில் புலனாகும். இக்கட்டுரை மூலம் பிள்ளையவர்களின் பண்பு, பழக்கவழக்கங்கள், மாண்பு, மதிப்பு, கல்விப்பணி, தமிழ்ப்பற்றும் திறனும், படைப்புகள் மற்றும் பங்களிப்புகள் உள்ளிட்ட பல்வேறு கூறுகளை இனம் காண முடிகிறது. இக்கூறுகளில் அடங்கிய செய்திகள் மகாவித்துவானின் பண்பையும் பழகும் பாங்கு மற்றும் புலமைத் திறனையும் வெளிப்படுத்துவதுடன் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரின் இயல்பையும், பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

21. பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் – ஒப்பீடு

பொ.நா.கமலா
சிவகாசி

வழிபடும் கடவுள், வளம் தந்த வள்ளல், அருட்செல்வர், ஆன்றோர் ஆகிய இவர்களுள் ஒருவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு காப்பு முதல் பத்துப் பருவங்களாகப் பாடப்பெறும் சிற்றிலக்கியம் பிள்ளைத்தமிழ் ஆகும். ஆண்பாற் பிள்ளைத்தமிழாயின் சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனவும், பெண்பாற் பிள்ளைத் தமிழாயின் அம்மானை, கழங்கு, ஊசல், எனவும் இறுதி மூன்று பருவங்கள் அமைதல் மரபு.

இக்கட்டுரையின்கண் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815-1876) அவர்கள் இயற்றிய திருத்தவத்துறைப் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழும், குமரகுருபரர் (1640-1688) இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

பிள்ளையவர்களும், குமரகுருபரரும்

திரிசிரபுரம் சிதம்பரம்பிள்ளையின் திருமகனாகத் தோன்றிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதீனத்துப் பெரும்புலவராகத் திகழ்ந்தவர்; உ.வே.சாமிநாத ஐயரின் ஆசிரியர்; பிள்ளைத்தமிழ் நூல்கள் எட்டு இயற்றியவர். அந்தாதி, ஆனந்தக்களிப்பு, உலா, மாலை, லீலை, கலம்பகம், கோவை எனச் சிற்றியலக்கிய வகைகள் பலவற்றைப் படைத்தவர். குமரகுருபரரின் வரலாற்றை எழுதியவர். எனவே அவரது பாடல்களில் ஆழ்ந்து, தோய்ந்த உணர்ந்தவராதல் வேண்டும். சைவத்தின்பால் பற்றும், சைவ அடியார்கள் பால் ஈடுபாடும், அம்மையின்பால் பக்தியும் கொண்டவர்.

குமரகுருபரர் ஸ்ரீவைகுண்டத்தில் சண்முகசிகாமணிக கவிராயருக்கும், சிவகாமசுந்தரியம்மைக்கும் தவமைந்தராகத் தோன்றியவர். தருமபுர ஆதீனத் திருக்கூட்டத்து அடியாரான அவர் காசிமடத்தை நிறுவினார். சைவமும், தமிழும் அடிகளாரின் இருகண்கள். மதுரை மீனாட்சியம்மை மீது பிள்ளைத்தமிழ் பாடியதோடு மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை ஆகியனவும் பாடியுள்ளார்; கலம்பகம், கோவை, மாலை என இலக்கியங்கள் பலவும் படைத்தவர்.

இரு பிள்ளைத்தமிழ் நூல்கள் எழுந்த சூழல்

அத்திரி, வசிட்டர், கச்சியப்பர், கௌதமர், பரத்வாசர், விசுவாமித்திரர், ஜமதக்கினி ஆகிய ஏழு முனிவர்கள் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து நற்பேறு அடைந்த திருத்தலம் திருத்தவத்துறை (லால்குடி) என்பர். அங்கு எழுந்தருளியுள்ள இறைவன் (சப்தரிஷ்சுவரர்) எனும் எழுமுனிவர்க்கிறைவன். இறைவி பெருந்திருப்பிராட்டியார். தன் மாணாக்கரான தியாகராசச் செட்டியாரின் அழைப்பிற்கிணங்கித் திருத்தவத்துறையில் சிறிது காலம் தங்கியிருந்த பிள்ளையவர்கள், அன்பர்கள் வேண்டுகோளின் படி பெருந்திருப்பிராட்டியார் மீது பிள்ளைத்தமிழ் பாடினார். குடந்தைப் பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசனார் திருத்தவத்துறையில் தோற்றுவித்த 'நாடுகாண் குழு' என்ற நிறுவனம் இப்பிள்ளைத்தமிழினைத் திருத்தவத்துறைத் திருக்கோவிலில் கல்லெழுத்தில் பொறிக்குமாறு செய்தது. ஏழு முனிவர்கள் பெற்ற பேரருளை இத்திருத்தலத்து இறைவியை வழிபடுவோர் அனைவரும் பெறுதல் வேண்டும் என்ற நோக்கில் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ் படைக்கப்பெற்று, இவ்வாறு பரப்பப் பெற்றது.

குமரகுருபரர் காலத்தில் மதுரையில் ஆட்சி செலுத்தியவர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட திருமலைநாயக்க மன்னராவார். அவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். கன்னடம், வடமொழி, அரபு, பாரசீகம், உருது போன்ற வேற்று மொழிகளும், கிறித்தவம், இஸ்லாம் போன்ற வேற்றுச் சமயங்களும் தமிழகத்தில் பரவி இருந்த அக்காலத்தில் தமிழையும், சைவத்தையும் மீட்க வேண்டிய பெரும்பொறுப்பு குமரகுருபரர்க்கு இருந்தது. தமிழையும், சைவத்தையும் மீண்டும் அரியாசனத்தில் அமர்த்த விழைந்த அடிகளார் நாயக்கமன்னர் அவையில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைப்பாடி அரங்கேற்றினார்.

விரிவஞ்சி இருபிள்ளைத்தமிழ் நூல்களிலும் வருகைப் பருவத்துப்பாடல்கள் மட்டுமே ஒப்புநோக்கப் பெறுகின்றன.

1.0 பிராட்டி, அம்மை-ஒற்றுமைக்கூறுகள்

பிராட்டி, அம்மை பற்றிய பாடல்களில் பல ஒற்றுமைச் சிறப்புகள் காணப்பெறுகின்றன. உறுப்பு நலன்களை விதந்துரைத்தல், கற்பனை நயம்படப் புனைந்துரைத்தல், நடைநலம் சான்ற கல்விச் சிறப்பு, பேரின்பம் பெறவிழையும் திறம் ஆகியன அமைந்துள்ளன.

1.1 உறுப்பு நலன்களை விதந்துரைத்தல்

பெருந்திருப்பிராட்டியாரின் குழலாகிய கொண்டலிடையே அவர் சூடியுள்ள மணிகள் பதிக்கப்பெற்ற பிறை நிலவொளி வீசுகிறது. முகமாகிய தாமரை மலர்க்கு இருபுறமும் அணிந்த குழைகள் ஞாயிற்றின் உதயத்தை ஒப்ப விளங்குகின்றன. இந்திரவில் லினிடையே மின்னொளி கலந்தாற்போன்று பிராட்டியின் நெற்றிச் சுட்டி ஒளிர்கிறது. கழுத்தணியும் கைவளையும் இலகுகின்றன. இடையில் மேகலை ஒலிக்க, இதழில் புன்னகை அரும்ப, சாயலும் மடநடையும் கண்டு மயிலும் அன்னமும்

பின் தொடர்ந்துவர, கருதி மொய்த்திடும் சிற்றடியில் கிண்கிணிகள் ஒலிக்க சிவபெருமானோடு அளவளாவி வருகிறாள்; உறுப்புநலன்கள் சிறக்கப் பெற்ற அம்மை-அவர் வீற்றிருக்கும் தலத்தோடு ஏழு முனிவர்க்கு அருளிய திருத்தலத்தோடு இணைத்துக் கூறப்பெறுகிறாள். காட்சிப் படிமமாக அமைந்த இப்பாடல்(1) தன்னை வணங்குவார்க்குப் பெருந்தவப்பிராட்டி காட்சி அளித்து அருளுவாள் என்ற குறிப்பைக் கொண்டுள்ளது.

மீனாட்சியம்மை அஞ்சிலம்பு ஒலிடவும், அரிக்குரற்கிண்கிணி அரற்றும் சீறடி பெயர்த்து அடியிடுந்தோறும் செம்பஞ்சுக்குழம்பு தோய்ந்த அடிச்சுவடு அரம்பையர்தம் குழலில் சூடியுள்ள இளம்பிறையிலும், சிவபிரான் முடிவளர் இளம்பிறையிலும் தோன்றிடவும் வருகிறாள். அம்மை நூபுரத்தின் மென்குரலுக்கோ, மடநடைக்கோ, தெய்வமகளிரும் அன்னமும் பின் தொடர்ந்து செல்லுகின்றனர். சிற்றிடைக்கு ஒல்கி மணிமேகலை வருந்தி இரங்குகிறது. இங்ஙனம் வருகை புரியும் அம்மை குமரகுருபரர் நெஞ்சக்கோயிலையும், தமிழ்க்கடலையும் இடமாகக்கொண்டவர். வருகைப்பருவத்தின் இப்பாடல்(1) வழிக் குமரகுருபரர், தமிழ்க்கடலில் தனியாட்சி செலுத்தியவர் மீனாட்சியம்மை என்பதை மன்னனுக்கு உணர்த்தி அவனைச் சைவத்தின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்கிறார் என்பது குறிப்பால் பெறப்படுகிறது.

1.2 கற்பனைச் சிறப்பு

ஊடற்காலத்து எம்பிரானின் முடியிலுள்ள பிறையின் சுவடு பிராட்டியின் பொன்னடிகளில் படிதலால், அவர் மலர்கள் பரந்து விரிந்து கிடக்கும் நிலத்தில் தன் அடிகளைப் பெயர்த்து இடுந்தோறும் அவன் பிறைச்சுவடுகள் பல தோன்றலாயின. தம் குழலில் பிறையணிந்த மாதர் மூன்றுலகும் தொழும் எம்பிரானின் திருவடிகளைப் பணிய விழைந்து பிறைச்சுவடல்லாத முழுச்சுவடு எது என நிலம் நோக்கி ஆராய்ந்து வருகையில் அன்னார் சூடிய பிறைகள் சுவடுகளில் பிரதிபலிக்கின்றன. சிவபெருமான் மொய்த்துக் கிடக்கும் பெருந்திருப்பிராட்டியின் பிறைச்சுவடுகள், மாதராரின் பிறைச்சுவடுகள் இவற்றுக்கிடையே தன் முழுச்சுவடுகள் எவை என ஆராய்ந்து வர, அவர்பின்னே ஆயிரம் மறைகளும் தொடர்ந்து வருகின்றன(3). பிறைச்சுவடோடு வருகையுரியும் பெருமாட்டி, தொழவேண்டி முழுச்சுவடு தேடும் மாதரார், தன் சுவடு தேடும் எம்பிரான் எனக் கற்பனையின் எல்லையைத் தொடும் இக்கவிதையின் மூலம் மறைகள் யாவும் சிவன் பின்னே என்று கூறிச் சைவத்தை உயர்த்துகிறார் பிள்ளையவர்கள்.

மீனாட்சியம்மையை வருகை புரியுமாறு வேண்டும் குமரகுருபரர் வற்றாத வையை ஆற்றின் வளத்தினைக் கற்பனை நயம்படக் கூறுகிறார். வண்டலிழைத்து விளையாடும் மகளிர் மணலை வாரிக்குவித்த குப்பையானது ஆகாயகங்கையை அளாவி அது செல்லும் வழியை அடைத்தது. அதனால் வழி தவறிய கதிரவன் பொற்பரிசிலாகவும், வெண்பிறை கைத்தோணியாகவும், விண்மீன்கள் சிறு மிதப்பாகவும் ஆகாயகங்கையில் மிதந்தன. அத்துடன் விண்ணுலகின் ஐராவதமும்

மதம்பொழிய அம்மதமாகிய நதியும் ஆகாய கங்கையோடு சேர்ந்து பெருக்கெடுத்து வர வையை ஆறு பெருவெள்ளத்தை எதிர் கொண்டது. ஆகாய வெளிகடந்து, கற்பகப்பூஞ்சோலையைக் கடந்து கடலும் குறையுமாறு பெருக்கெடுத்து ஓடியது வையை(6).மலையத்துவச பாண்டியன் மகளரன மீனாட்சியம்மையை வையை ஆற்றோடு இணைத்துக்கூறும் குமரகுருபரரின் கற்பனை வளம் விண்ணளாவ விரிந்து நிற்கிறது.

1.3. நடை நயம்

பிள்ளையவர்களின் பாடல்கள் சந்தநயம், சிறந்து செவிக்கின்பம் பயப்பன; நடைநலம் சான்றன.

செந்தா மரைமேல் லிதழ்மருட்டித்
    தேமா நறுத்தண் டளிர்வருத்திச்
செயலை மலர்நன் நலங்கவற்றிச்
    செம்பஞ் சினையும் விளரியற்றி
....
பைந்தாள் பெயர்த்து மேகலையும்
    பாதசாலங் களுமொலிப்ப (7)

அம்மை வருகிறாள் என்ற கவிதையில் பிராட்டியின் சிற்றடிகளின் மென்மை, தண்மை, நன்மை, வண்ணம், ஆகிய அனைத்தையும் ஒலிநயத்தின் மூலம், நடைச் சிறப்பின் மூலம் கொண்டுவருகிறார். மண அம்மியிடத்துப் பயின்ற அத்தன்மையால் அடியார்களின் நெஞ்சக்கனக்கல்லிலும் குடியிருப்பவள் அம்மை என்ற கருத்தையும் பெறச் செய்கிறார்.

குமரகுருபரரின் வருகைப்பருவத்துப் பாடல் (9) அடிகளாரது சைவப்பற்று, தமிழ்ப்பற்று, அம்மையின் அருட்டிறம், வீரச்சிறப்பு ஆகிய செய்திகளைக் கூறுவதோடு நடைநலம் சிறந்த் பாடலாகும். பிள்ளைத்தமிழ் நூல்களுள் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் தலைமை சான்றது என்பர் (குமரகுருபரர் ஆய்வு மாலை, ப.....) அதில் அடிகளார் முத்திரை பதித்த பாடல் இப்பாடல்,

நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே,
உடுக்கும் புவனங் கடந்துநின்ற ஒருவன்
திருவுள் ளத்திலழ கொழுக எழுதிப்
பார்த்திருக்கும் உயிரோ வியமே

என அமைந்த தொடர்கள் தமிழின் இனிமைக்கும் செஞ்சொற் கவி இன்பத்துக்கும் சான்றாவதோடு நடைநயமும் சிறந்து விளங்குகின்றன.

1.4 பேரின்பம் நல்குபவள் இறைவி

இறைவி மும்மலம் அகற்றி, இருவினை நீக்கிக் கருணை புரிபவள் என்றும், சந்நிதிபாதம் அருளிச் சிவானந்தத்துத் திளைக்கச் செய்பவள்

என்றும், உயிர்க்குத் துணையாகிப் பேரின்பம் அளிப்பவள் என்றும் பிள்ளையவர்கள் குறிப்பிடுகிறார் (8,9,10).

குமரகுருபரர் மீனாட்சியம்மை மும்முதற் பொருட்கும் வித்தாக இருப்பவள் என்றும், வித்தின்றி விளைவிப்பவள் என்றும், பரமானந்தத்தின் விளைவு என்றும், பிறவிப் பிணிக்கோர் மருந்து என்றும், திருக்கடைக்கண் கொழித்த கருணைப் பெருவெள்ளம் என்றும் கூறுகிறார்: (10).

இவ்வாறாக இருபிள்ளைத்தமிழ் நூல்களும் அம்மையைத் தொழுதெழுவார் பேரின்பம் பெறுவார் எனக் குறிப்பிடுகின்றன.

2.0 பிராட்டி, அம்மை-வேற்றுமைக் கூறுகள்

இருநூலாசிரியர்களின் வேறுபட்ட நோக்கிற்கு ஏற்ப இரு பிள்ளைத்தமிழ் நூல்களிலும் வேற்றுமைக்கூறுகளும் காணப்பெறுகின்றன. விரிக்கின் பெருகும் என்பதால் இவண் சுருக்கமாகக் கூறப் பெறுகின்றன.

2.1 கலைமகளும், திருமகளும் பெருந்திருப்பிராட்டியை விடத் தாழ்ந்தவர்கள் என்றும்(2,4) இருவரையும் தொழுதலைவிடப் பிராட்டியைத் தொழுதாலே கல்வி, செல்வம் அனைத்தையும் பெறலாம் (2) என்றும் வேற்றுமைப்படுத்திக் கூறுவார் பிள்ளையவர்கள். சக்தியின் வடிவத்தில் கலைமகளும், திருமகளும் அடக்கம் என்ற எண்ணத்தில் அவர் அவ்வாறு கூறியிருத்தல் வேண்டும்.

குமரகுருபரரோ கலைமகளையும், திருமகளையும் மருதத்தச்சன் செய்த தாமரை மலர்களில் குடிபுகுத்தி அவரவர் தனித்தன்மையை வெளிப்படுத்துவதோடு, மீனாட்சியம்மையை மருதவளம் சிறந்த மதுரைக்கு அரசியாக்குகிறார் (7,8).

2.2 புராணிகத்தோடு இணைத்துப் பெருமாட்டியின் புகழைப் பிள்ளையவர்கள் பாட(2). குருபரர் சைவத்தைப் பெண்ணாக்கித் தானைத் தலைவியாக்கித் திக்குவிசயம் செய்யச் செய்து மலைகளைப் பொடியாக்கி அவளைப் பாண்டியனின் மகளாக்கி அரியாசனத்தில் அமரச் செய்து புரட்சி செய்தார்(3). அடிகளின் நோக்கில் தமிழே மீனாட்சி; மீனாட்சியே தமிழ்; மீனாட்சியே சைவம்.

2.3 இல்லறத்தாராகிய பிள்ளையவர்கள் சிவனடியார்களின் சிறப்பை நேரில் கண்டவர், துறவின் மேன்மை, தவத்தின் சிறப்பு ஆகியவற்றை உணர்த்த விழைந்தவர் எழுமுனிவர்க்கருளிய இறைவியைப் பாடினார்.

துறவியாகிய குமரகுருபரர் தமிழையும் சைவத்தையும் காக்க விழைந்தவர், அதனால் அவர் தமிழ் வளர்த்த மதுரைக்கு இறைவியை, சைவம் வளர்த்த மதுரைக்கு இறைவியை-மீனாட்சியம்மையைப் பாடினார்.

தமிழ் தழைக்க வேண்டும். சைவம் செழிக்க வேண்டும் என்பது குமரகுருபரர் அவா. துறவும், தவமும் அதன்மூலம் சைவமும் மேன்மையுற வேண்டும் என்பது பிள்ளையவர்களின் விழைவு. இருவர் உள்ள விழைவுகளும் இரு பிள்ளைத்தமிழ் நூல்களாக மலர்ந்தன.

22.பிள்ளையவர்கள் நோக்கில் கும்பகோணம்

தி.கமலி
சென்னை

சைவ சமயத்தின் ஆச்சாரிய பீடமாகத் திகழ்ந்த திருவாவடுதுறையின் ஆதீன வித்துவானாகப் பணிபுரிந்தவர் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள். சிற்றிலக்கியங்கள் எனும் இலக்கிய வகைகளில் அவர் இயற்றிய நூல்கள் எண்ணற்றவை. 'தல புராணம்' எனும் இலக்கிய வகையில் கோலோச்சிய பெருந்தகை அன்னார் எனலாம். அவர் இயற்றிய 'திருக்குடந்தை புராணம், குடந்தை அந்தாதி மற்றும் மங்களாம்பிகைப் பிள்ளைத்தமிழ்' ஆகிய நூல்கள் வழி இக்கட்டுரை அவரது நோக்கில் 'கும்பகோணம்' பற்றி பரிசீலிக்க முற்படுகிறது.

காவிரியாற்றிலே இருப்பது கும்பகோணம் எனும் பகுதியாகும். 'திருஞானசம்பந்தர்' 'திருக்குடமூக்குப் பதிகம்' என்றொரு பதிகம் இயற்றியுள்ளார். திருஞானசம்பந்தர் அருளிய, 'திருக்குடந்தைக் காரோணப் பதிகமும்' மாடவீதிசூழ் கும்பகோணத்திலுறை இறைவனை விதந்து போற்றுவதே ஆகும்.

இத்தலத்தின் உயர்ந்த மான்மியத்தினை எவரும்
பத்தியோடு உணர்ந்து அருள் நலம் பருகி வாழ்வெய்த
வித்தகம் பெறு தமிழினால் செய்க என விரும்பிச்
சுத்தம் மேவிய சைவர்கள் அன்போடு சொல்ல

திருக்குடந்தைப் புராணத்தைப் பிள்ளையவர்கள் இயற்றியதாகப் பாயிரம் கூறுகிறது. ஆணுருவும், பெண்ணுருவும் ஆய உலகம் தோற்றும் அறிவன் என்றற்கு ஆணுருவும், பெண்ணுருவும் ஒரு மருப்பு முகத்தே ஆய்ந்தமையா வண்ணம் ஆணுருவும் பெண்ணுருவுமுள்ளார் என்று உயர்தரற்கு ஓர் ஆரணங்கு ஓர்பால் கொண்டு ஆணுருவும், பெண்ணுருவும் தொழுது எழ வீற்றிருக்கும் வல்லபை விநாயகருக்கு அன்பு செய்வோம் என்று பாயிர வாழ்த்துப் பாவிலேயே, 'ஆண்-பெண் இணைந்த உலக இயற்கை' விதந்தோதப்படுகிறது. ஆதிகும்பேசர், கரும்பாயிரங் கொண்ட விநாயகர் என்று தெய்வங்களை நினைவு கூர்ந்து, அப்பர், சுந்தரர் எனச் சைவக் குரவர் நால்வரோடு, அறுபத்து மூன்று நாயனாரையும் வேதியரையும், மற்றைச் சிவநேசர்களையும் கும்பகோண முதுவடமொழிப் புராணம் முழுமையும் மொழிபெயர்த்த தம்பிரானுட்பட யாவரையும் நினைவு கூர்வது; அத்தலத்தில் வதிந்து சேவை செய்த பெரியோரை நினைவு கூர்தலைப் புலப்படுத்துகிறது. கும்பலிங்கேசனார் மங்களநாயகியைத் தழுவி வாழ் குடமூக்கு சோழநாட்டின் பகுதியாகச்

சிறந்திருந்தது என்பது வரலாறு ஆகும்.

தொன்மை சான்றது: பல பகை வளைப்பினுந் தோலா
வன்மை சான்றது: மாற்றரும் பல வளம் மலியும்
தன்மை சான்றது சதுமறை ஒழுக்கமே தழுவும்
நன்மை சான்றது நாம் புகழ் சோழ நன்னாடு
(திருக்குடந்தைப் புராணம்,2:1-4)

என்று பழம் சிறப்பு கூறப்படுகிறது. குறிஞ்சி, மருதம். பாலை, திணை மயக்கம் என்ற உட்தலைப்புகளில் நிலவமைப்பு பற்றிச் சொல்லப்படுகிறது

எண்ணருஞ் செல்வத்தோடு போகமும் எய்தி நாளும்
நண்ணரும் ஒழுக்கம் வாய்ந்த நன்மையினள் நனையூறும்
விண்ணரும் மருந்தில் தோன்றும் நகரமும் விராயதொக்கும்
பண்ணரும் பொருள்களெல்லாம் பரவிய கும்பகோணம்
(திருக்குடந்தைப் புராணம்,123:1-4)

என்று பண்ணரும் பொருளும் நிரம்பி காணப்படும் பொருள் வளமும், செல்வ நலமும் விரித்துரைக்கப்படுகின்றன. அதன் புறநகர்ப் பகுதிகளெல்லாம் பாதுகாப்பு மிக்கதாக உள்ளன. பொன் மாடங்கள் அமைந்து ஒளிர்கிறது இடைநகர்ப் பகுதிகள்.

கோதகல் கும்பகோணம்
திருகுதீர் கும்பகோணம்

என்று அழுக்கற்ற அந்நகரது தூய தன்மையும், மரபு மேன்மையும் எடுத்துக்காட்டப்படுகின்றது

கணவரோடு ஊடும் மாதர் கழற்றி வீசிய முத்தாரம்
மணவிய வீதிச் செல்வார் அடிகளைத் தகைப்பதோர்ந்தோ
இணர்படு நறும்பூமாலை எந்தெழில் தோளாரென்றும்
தணவரும் ஊர்தியன்றிச் சார்கிலார் குடமுக்குள்ளால்
(திருக்குடந்தைப் புராணம்,69:1-4)

ஒரு மகள் உடன்று எறிந்த முத்துமாலை மறுகில் செல்லும் ஆடவன் தோளில் விழப் பெருகவும் மகிழ்ந்த அவன் தன் இல்லப் பெய்வளை முனிவளே என்று உருகி உள் கவன்று அதை ஒழித்துவிடாமலும், உடன் கொண்டுஞ் செல்லாமலும் தடுமாறி நிற்கும் வீதி காட்சி சித்திரிக்கப் பட்டுள்ளது.

அந்த தெருக்களில் குப்பை உள்ளதா? எதில் உள்ளது? எத்தகையது?

கொழி நலம் கனிந்த மாதர் கொங்கையும் மைந்தர் மார்பும்
பழியறத் தாக்குந்தோரும் பரிந்து வீழ் தாரும் சாந்தும்
கழிசுடர் மணியும் முத்தும் வைரமும் கனகனும் கைச்
செழி வளைக்குலமும் மற்றும் தெருத்தொறும் செறிந்த குப்பை
(திருக்குடந்தைப் புராணம்,51:1-4)

என்று உள்நகர் கூறப்படுகிறது. பரத்தையர் வீதி, வேளாளர் வீதி, வைசியர் வீதி, அரசர் வீதி, மறையவர் வீதி என்று திருநகரத்தின் வீதிகள் விவரிக்கப்படுகின்றன.

ஒருவருக்கே பயன்படுதல் உடையவரில் பற்பலருக்கும்
பொருவரிய பயன்படுதல் பூண்டாரே சிறந்தவர் என்று
இருநிலஞ் சொல்வது குறிக்கொண்டு எல்லோர்க்கும் பயன்படுதல்
பெருமை அறம் எனத்துணிந்தார் பெய்வளைத்தோள் விலைமாதர்
(திருக்குடந்தைப் புராணம்,2:1-4)

பரத்தையர் வீதியில் வாழ்வோர் தம் தொழில் அறத்தின் பாற்பட்டது என்று எண்ணி பெருமையுடன் வாழ்வது சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆடலால், பாடலால், அழிநயத்தால், ஊடுதல் போல் ஊடலால், ஊடல் உணர்ந்து ஒங்கமளி யிடைத்தழுவிக் கூடலால், மைந்தர் பொருள் கொள்ளை புரிவார் கிரக நீடலால் குடமூக்கு நெடுவானை வென்றது, (ப.29) என்று குறிப்பிடுகிறார்.

- விருந்து புறத்தலில் சிறந்த வைசியர்
- விற்று பணம் ஈட்டலில் சிறந்த வைசியர்
- பகைவரை வெல்லும் வீரஞ் செறிந்த அரசர்
- பூசை நெறிகளில் சிறந்த மறையவர்

என்று அன்னோர் இயல்பு பாக்களில் விதந்தோதப்படுகிறது.

ஊபொருள் வெளியில் வைப்பார் ஒரு கடத்துள் சேமிப்பார்
வளமுறக் கடஞ்சேமித்து மண்ணினுள் புதைப்பார் மான
வளவின் முந்திரிகைக்காடும் அடர் பெரு விளவின் காடும்
பிளவகல் தென்னங் காடும் பிறங்கும் தம் பயன்கள் கொண்டே
(திருக்குடந்தைப் புராணம்,13:1-4)

என்று அரும்பாடுபட்டுத் தான் ஈட்டிய பொருளைத் துய்க்காமல், கடத்துள் சேமித்து. மண்ணுக்குள் புதைத்து வைத்து முந்திரிக் காடும், விளவின் காடும், தென்னங்காடும் தன் பயன்களைக் கொள்ளும் வண்ணம் பயனிற்றி வாழ்வோர் பற்றி கூறப்படுவது கருதத்தக்கது.

கும்பகோணம், கஞ்சனூர் திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சுவாமிமலை, பாடலவனம் என்று தலங்களது குறிப்பு பற்றி படலங்கள் விவரிக்கின்றன.

அறம் பொருள் இன்பம்
வீடடைதல் சிறந்த நூற் பயனே

என்பதில், வீடுபேற்றை நல்கும் நோக்கு தலையாயதாக அமைய, கும்பேசுரர், மங்களநாயகி, பிரமன் பூசை புரிதல், பிரமன் துதி புரிதலும், வரம் பெறுதலும், விசுவநாதர் வரவுப் படலம், நவகன்னியர் படலம், சண்டி முத்தியடைந்தமை, மங்களநாயகி மகிமை, கும்பேசர் பணிவிடை

செய்வோர் பேறுரைத்தல், பொற்றாமரைப் படலம், நாகேச்சுரப் படலம், குடவாயில் படலம், கரும் பயிர விநாயகிப் படலம், கைலாச நாதப் படலம், சாரங்கபாணி, சக்கரபாணி மகிமைகள் என்று யாவும் எடுத்தியம்பப்படுகின்றன. கும்பகோண தலத்தின் கோயில்களை வைத்து ஒரு வரைபடம் தயாரித்து, திருக்குடந்தைப் புராணத்தைப் படித்தால் அத்தனை கோயில், எழுந்தருளி இருக்கும் தெய்வங்கள், புராணக் கதைகள் விளங்கும் வண்ணம் கூறப்பட்டதை அறியலாம்.

கடல் வளையுலகில் புரிந்த பாகங்கள் கருதொரு சிவத்தலத் தொழியும்
விடலரும் அனைய சிவத்தரத் தியன்ற வெய்ய பாதகமெலாம் நாளும்
படலரும் காசிப் பதிவயிற் றீரும், பகர்ந்த காசியில் செய் பாதகங்கள்
அடல் கெழு கும்பகோணத்தில் தீரும், அங்கியற்றினுமதே தீர்க்கும்
(திருக்குடந்தைப் புராணம்,48:1-4)

என்று பாவம் புரியும் மனித உள்ளங்களது சஞ்சலம் நீக்கி, பாவங் களைந்து பரிசுத்தமாகும் நிலை கூறப்பட்டுள்ளது.

சமகால அரசியல் நிலையோ, நிகழ்வுகளோ,
மக்களின் யதார்த்த வாழ்வுச் சிக்கல்களோ,

முன்னிறுத்தப்படவில்லை. பழமைவாய்ந்த இலக்கிய புனைவும், ஆன்மீகத் தேடலும், புராணக் கூறுகளும் செறிந்து காணப்படுவது, 'புராணம்' என்ற இலக்கிய வகைக்கு நிலைத்த வடிவமாக விளங்குகிறதே அல்லால், மக்களது வாழ்வியலுக்கோ, சமகாலச் சமூக நடப்புகளுக்கோ சற்றும் தொடர்பிருப்பதாக அமையாதது சற்றே நெருடலாக உள்ளது.

23. பிள்ளையவர்களின் கவிதை மொழி

ச.கவிதா
மதுரை

தலைவன் தலைவியரின் காதல் வாழ்வில் நிகழும் பிரிவுகளுள் பரத்தையின் பொருட்டு மேற்கொள்ளும் பிரிவே மிகக் கீழான ஒன்றாகும். கற்புக்காலத்தில் பரத்தையின் பொருட்டுப் பிரிந்து செல்லும் தலைவன் மீண்டு வரும்பொழுது தலைவி கோபங்கொண்டு ஊடி நிற்கிறாள். அந்நிலையில் தலைவியினுடைய ஊடலைத் தணித்துக் கூட விரும்பும் தலைவன் பாணன், பாங்கன், விறலி, விருந்தினர் போன்றோரை வாயில்களாக அனுப்புகின்றான். முதலில் வாயில் மறுக்கும் தலைவி பின்னர்ப் பாங்கியின் தலையீட்டால் வாயில் நேர்கிறாள். இதுவே பரத்தையிற் பிரிவில் நிகழ்வதாகும்.

குளத்தூர்க்கோவையில் தலைவி தனித்து அழுதிரங்கும் பொழுது தோழி, 'விழியை இமைபோலத் தலைவன் உன்னைப்பிரியாது இருக்கும் பொழுது வருந்துவது ஏனோ?' என வினவுகின்றாள். அப்பொழுது தலைவனின் புறத்தொழுக்கத்தைத் தலைவி அவளுக்கு உணர்த்துகிறாள். அதைக்கேட்ட தோழி, 'மக்களைப் பெற்று மனையறத்துடன் திகழ்ந்து விருந்தினரை உபசரிக்கும் சிந்தையுடன் இருத்தல் அல்லாது தலைவனின் குற்றத்தை உரைத்தல் குலமாதர்க்குக் கற்பாகாது' என இடித்துரைக்கிறாள்.

.. .. அன்பன் ஆசுரைத்தல்
கற்பாகுமோ குலமாதர்க்கு மேதகு காரிகையே (கு.கோ. 4996)

தோழி, தலைவன் குற்றமற்றவன் அவன்மேல் பழிகூறல் கற்பாகாது எனக் கூறினால் தலைவனின் புறத்தொழுக்கத்தை அறியாமலேயே தோழி இவ்வாறு கூறுகிறாள் எனலாம். ஆனால் தலைவனின் குற்றத்தை உரைத்தலே கற்பாகாது எனும்போது அவனுடைய புறத்தொழுக்கத்தை அறிந்தபோதும் அதைப்பெரிதுபடுத்திக் குற்றமாகக் கொள்ளாதே தோழியே அது கற்பன்று எனக்கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

தலைவி பூப்பிற்குப் பிறகு பன்னிரண்டு நாளும் தலைவன் அவளைவிட்டுப் பிரிதல் அறமன்று. இதையே தொல்காப்பியரும் வலியுறுத்துகிறார்.

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன்று உறையான் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான (தொல்.பொரு:185)

தலைவி பூப்பெய்திய நிலையைப் பரத்தையிற் பிரிந்திருக்கும்

தலைவனுக்குத் தெரிவிப்பதற்காகச் செவ்வணி அணிந்து சேடியை விடுத்தல் என்பது மரபாக உள்ளது. அப்பொழுது அருகில் உள்ளோரும், ஏவலாளர்களும் அவள்நிலையைக் கண்டு இரங்குவதாகப் பாடல் அமைந்துள்ளது. தலைவன் எத்தகைய கீழான ஒழுக்கத்தில் இருந்தபோதும் அதைப் பெரிதுபடுத்தாது பன்னிருநாள் மட்டும் என்னுடன் இருந்துவிட்டுபோ எனும் நோக்குடன் செவ்வணி அணிவதாகக் கூறுவதே தலைவியைத் திறமற்ற நிலைக்குக் கீழே தள்ளுகிறது.

குளத்தூர்க்கோவையில் மற்றொரு பாடலில் செவ்வணியணிந்த சேடியைக் கண்ட பரத்தை உலகியல் நோக்கி, 'பன்னிரு நாளும் உனக்கு விடைகொடுத்தேம்' (கு.கோ:4999) எனத் தலைவனை நோக்கிக் கூறுவதாக உள்ளது. பன்னிருநாள் மட்டும் தலைவனுக்கு விடைகொடுத்து அனுப்புபவளாக மற்ற நாட்கள் தலைவனைக் கையகப்படுத்துபவளாக உள்ளாள் பரத்தை. ஆசிரியரவர்கள் பரத்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவள் விடைகொடுத்தால்தான் தலைவிக்கு வாழ்வு, மகப்பேறு என்பதுபோல அதிக உரிமையுடையவளாகப் பரத்தையைப் படைத்துள்ளார்.

தலைவனது வரவைப் பாங்கி தலைவிக்கு உணர்த்தும் பொழுது தலைவனின் பிழையைக் கருதாது எதிர்சென்று பேணிப்பணிந்து அழைத்து சினந்தீர்ந்து அவனுடைய அடியின்கீழ் வாழ்ந்திடுக என்கிறாள்.

பிழையுட் கருதுவ தன்றால் எதிர்சென்று பேணிப்பணிந்து
அழையுட் கருது சினந்தீ ரடித்தொழி லாற்றுகவே (கு.கோ:50001)

அங்ஙனம் தலைவி தலைவனை எதிர்கொண்டு பணியும்பொழுது, பரத்தையரும் உம்மை இங்கு அனுப்ப உள்ளம் இயைந்தனரோ? இங்கு வருவதற்கு உமக்கு மனம் வந்ததுவோ என வியப்பாகக் கேட்டு, 'இது என் பாக்கியமே' என்கிறாள் தலைவி.

.. ..பொதுமா தரும் உள்ளியைந்தனரோ
மாமரு வும்பதம் இங்குற வும்மனம் வந்ததுவோ (கு.கோ:5002)

போதும் மகப்பேற்றிற்காகத் தலைவி தன்மானத்தை விடுத்து அவனை அடிபணிந்து, தொழுது, அவன் இங்கு வருவதையே பாக்கியமாகக் கருதி, அவனை அனுப்பிய பரத்தையரை வாழ்த்திச் சினமின்றி அவனுடன் கூடுவதாகப் படைத்துள்ளார்.

குளத்தூர்க்கோவையில் வெள்ளணியணிந்து தலைவி விடுத்ததைக் கண்டு தலைவனும் பாணனும் வாயில் வேண்டி நிற்கின்றனர். ஆனால் பாங்கியால் வாயில் மறுக்கப்படுகின்றனர். இந்நிலையில் தலைவன் விருந்தொடு வருகின்றான். அப்பொழுது தலைவி பொறுத்தல் கண்டு மகிழ்கிறான். அவன் மகிழ்ந்து உரைப்பதாக ஆசிரியர்.

.. ..விலைக் காரிகையர்

அரும்போது கொங்கை யவாய்ப்பல நாளமர்ந் தாலுமனை
வரும்போது ஒருவிருந் தோடுவந் தால்செம்மை மாறிடுமே
(கு.கோ:5013).

எனப்பாடுகிறார்.அத்தனைநாள் பரத்தையோடு இருந்தாலும் மீண்டு வரும்போது ஒரு விருந்தோடு வந்தால்போதும் தலைவியை சமாதானப்படுத்தி விடலாம் என்ற மனப்பான்மை உடையவனாகத் தலைவனைப் படைத்துள்ளார். அதாவது இப்பிரிவு முடிந்த முடிவன்று. இனிமேலும் பரத்தையின் பொருட்டுப் பிரிந்தாலும், எத்தனை நாள் தங்கினாலும் ஒரு விருந்தொடு மட்டும் வந்து தலைவியின் ஊடல்நீக்கிக் கூடலாம். அவளும் ஏற்றுக் கொள்வாள் என அவளைப் படைத்துள்ளார். இங்கும் தலைவி முதலில் வாயில் மறுக்கிறாள். பின்னர் தலைவிக்காகப் பாங்கி, விறலி ஆகியோர் மறுக்கின்றனர். ஆனால் விருந்தொடு வந்தபோது ஏற்றுக் கொள்கிறாள். விருந்தைக் கொண்டு தலைவியின் ஏசலை, கோபத்தைச் சரிக்கட்டிக்கொள்கிறான் தலைவன். விருந்தினரும் ஊடலைத் தணிக்கும் வாயிலாதல் மரபெனினும் அவ்விருந்தினருடன் வரும் தலைவன் விருந்தினர் முன் தலைவியின் மன்னித்து ஏற்கும் குணத்தைப் பாராட்டுவதாக மட்டுமே ஆசிரியர் பாடியிருக்கலாம்.

இங்ஙனம் விருந்தைக்கொண்டு சரிக்கட்டிக் கொள்ளலாம் எனத் துணியும் தலைவன் பள்ளியிடத்தில் தலைவியிடம், 'யான் இனிமேற் பிழை புரியேன்' எனப் பொய்யாமொழி கூறுகிறான். மேலும் 'உன் கால்மேற் பணிவேன் பொறுத்தாள வேண்டிய கடன் உனக்குள்ளது' என்கிறான்.

கால்மேற் பணிவங் பொறுத்தாள வேண்டும் கடனுனக்கே (கு.கோ:5015)

பாங்கி தலைவியின் ஊடலைத் தணிக்கும்பொழுது,

பாதார விந்தம் பணிந்தார் வெருளுதல் பண்பல்லவே (கு.கோ:1519)

தலைவன் பொதுமாதரை விரும்பியபோதும் உன்னுடைய பாதம் பணிந்தார். அதனால் இனியும் கோபங்கொண்டிருத்தல் பண்பல்ல என்கிறார். தலைவன் அவளின் பாதம் பணிந்ததால் அவன் மிகக்கீழான ஒழுக்கம் மேற்கொண்ட போதிலும் கோபங்கொள்ளக் கூடாது. அது பண்பல்ல என்கிறார் ஆசிரியர்.

தலைமகள் புலவி தணியாதிருப்பதைக் கண்டு தலைவன் ஊடி, 'பாலை நிலத்தில் வெப்பத்திலும் பெய்நிழல்போல் நம்மைப் பின் தொடர்ந்தவள் இன்று ஊடல் தணியாதிருத்தல் பெறுவஞ்சனையே' என்கிறான். அன்று என்சொல் கேட்டு பாலைநிலத்திலும் பின்தொடர்ந்தவள் இன்று நான் சொல்வதைக் கேட்டு, எனை ஏற்காது வஞ்சனை செய்கின்றாள் என்கிறான். என எளிதாகப் பெண்ணைச் சாடுபவர் எங்கும் தலைவனது கீழான ஒழுக்கத்தைத் தன்மொழியில் வஞ்சனை எனக் கூறவில்லை.

இறுதியில் தலைவி தலைவனுடைய தீயசெயல்களையெல்லாம் மறந்து ஏற்றுக் கொள்வதோடு விடாது, ஒவ்வொரு பரத்தையிற் பிரிவின்

இறுதியிலும் அவனை அவள் புகழ்வதாகக் கூறி முடிக்கின்றனர். தலைவி தலைவனைப் புகழும்போது, 'பரத்தையரிடத்து அன்பொழிந்து பழங்கேண்மை மறக்காது இங்கு வந்தார்' என்றாள் (கு.கோ:5021). பரத்தமை ஒழுக்கம் கொண்டவராயினும் பழைய உறவை மறக்காது அவ்வப்போது வந்து செல்கின்றாரே என அதிலேயே மகிழ்பவளாக, புகழ்ந்துரைப்பவளாகத் தலைவியின் மொழியைப் படைத்துள்ளார் ஆசிரியர்.

தலைவியின் செயலைப் பாங்கி புகழும்போது தலைவனின் பிழைக்கு வெகுளாது அன்பே உருக்கொண்ட சிந்தையினால் அதைப் பொறுத்து இருத்தலால் கற்பின் உருவான பெருமையுடையவள் இக்காரிகை எனப் புகழ்கிறாள்.

.. .. பிழைக்கு வெகுளவின்றி
அன்பே உருக்கொண்ட சிந்தையி னாற்பொறுத் தாளுதலாற்
கற்பே யுருக்கொண்ட பெற்றியள் போலுமிக் காரிகையே

(கு.கோ:5025)

வியாசைக் கோவையில் தலைவனின் புறத்தொழுக்கத்தைத் தலைவி உணர்த்தியதைக் கேட்டுக் கொழுநன் குறைகூறலும், கோபங்கொள்ளலும் அழகல்ல. அது மனையறமாகாது எனப் பாங்கியின் வாயிலாக மொழிகின்றார் ஆசிரியர்.

மனையறம் பூண்ட நீ கொழு நன்குறை கூறல் அழகல்லவே

(வி.கோ:4551)

தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுத்ததைக் கண்ட தலைவன் மீண்டு வருவதைக் கண்ட வாயில்கள் 'வந்தான் மிக உத்தமனே' (வி.கோ:4555) என்கின்றனர். பரத்தையிடமிருந்துவிட்டு மாதணியைக் கண்டு வந்தவனின் பரத்தமை ஒழுக்கத்தை இகழாது அவனை 'உத்தமனே' என ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது ஆசிரியரின் கவிதை மொழி. தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணியும்பொழுது;

நினை விடுத்தார் அம்மாதரும் பல்லூழி வாழ்க இம்மேதினிக்கே

(வி.கோ:4557)

என வாழ்த்துகிறாள்.

தலைவி வெள்ளணியணிந்து விடுத்தலைக் கண்ட தலைவன் வாயில் வேண்டும்பொழுது, 'ஊடலை நீத்து எனது உள்சேர்த்தல் உன்கடன்' (வி.கோ:4560) என்கிறான். தலைவியுடனிருந்து இல்லறம் நடத்தி அவளைக் காத்தல் இவனது கடன் என்பதை விடுத்து பரத்தையிடமிருந்துவிட்டு பிழை செய்தமையை மறந்து ஏற்றல் தலைவியின் கடன் என்று ஒருதலைப் பட்சமாகக் கூறுகிறான்.

அடியேன் செய் பெரும்பிழை முற்றும் பொறுத்தருள் ஏந்திழையே

(வி.கோ:4572)

தலைவன் தலைவியின் சீரடியைத் தொழுது பகைவரும் வந்து அடிவீழின் அவரை மறுப்பதில்லை. அதுபோல அடியேன் செய்த பெரும்பிழையை முற்றும் பொறுத்தருள்வாய் என்கிறான்.

மணந்தவன் புதல்வனையும் வாயிலாகக் கொண்டு புகுகின்றார். இதனால் ஊடல் நீக்கிய தலைவி,

பொன்தேர் என்இல்லிற் திருப்பிய காதற்பொலி மகவே

(வி.கோ:4581)

எனப் புகழ்கிறாள். இங்குத் தலைவியிடம் இயல்பாகக் காணப்படும் சினத்தைக் கவிதை வடிவில் தராது. அவனது தீயஒழுக்கத்தை மறந்து அவனது வரவிற்காகக் காத்திருப்பவளாக, உண்மையான கோபமின்றிப் பொய்யாக ஊடியவளாகத் தலைவியைப் படைத்துள்ளார் ஆசிரியர்.

இறுதியில் ஊடல்தணிந்து தலைவி தலைவனைப் புகழும்பொழுது 'அன்பரைத் தெய்வமென்றே கற்றமே லவர்தாம் சொன்னார்' (வி.கோ.4582) என்கிறாள். முன்னுள்ளோர் அன்பரைத் தெய்வமென்று கூறியதால் அவனது பிழையைக் கருதாது தலைவி ஏற்றாள். இதையே தாமும் கூறிச்செல்வதால் பின்வரும் பெண்டிரும் தலைவன் கீழான ஒழுக்கம் கொண்டிருந்தாலும் அதற்காகக் கோபம் கொண்டிராது அவனைத் தெய்வமாகக் கருதி ஏற்றுக் கொண்டாடுவர் என்ற நோக்குடனேயே ஆசிரியர் இதைத் தாமும் கூறிச் செல்கிறார்.

பாங்கி இறுதியில் இங்ஙனம் தலைவனின் பிழையைப் பொறுத்ததால் கற்பிற்சிறந்த பெயர்பெற்றாய் என வாழ்த்துகிறாள். சீகாழிக் கோவையிலும் இறுதியில் முடிக்கும்பொழுது பாங்கி, தலைவனை ஏற்றருளும் பண்பினால் பெருங்கற்புடையவளாயினாள் என வாழ்த்துகிறாள்.

தலைவி செவ்வணியணிந்து விடுத்தலைக் கண்ட பரத்தை 'பன்னிருநாளும் புணர்ச்சியை மேற்கொண்டு அதற்குப்பின் இங்குவருக' (வி.கோ:1619) என்கின்றாள். தலைவனைக் கைப்பாவையாகக் கொண்டு ஆட்டுவிப்பவராக, பரத்தையர்க்கு மிகுந்த உரிமைகொடுத்துப் படைத்துள்ளார் ஆசிரியர்.

"புல்லுக பன்னிருநாளும் அப்பால் இங்குப் போதுகவே" (சீ.கோ:1619) அதே நேரத்தில் தலைவியை தனித்து அழுதிரங்குபவளாகவும், தலைவனிடத்தில் அதிக உரிமையற்றவளாகவும் படைத்துள்ளார். தனக்கே உரித்தான தலைவனுடன் கூடுவதற்குக் கூட சேடியை விடுத்துப் பரத்தையிடம் அனுமதிபெற்று அவனைப் பெறவேண்டியுள்ளது.

தலைவன் தான் யாரையும் அறியேன் எனத் தலைவியிடம் உரைக்கும் பொழுது, 'கொல்லாது கொல்லுதல் குற்றமன்றோ' (சீ.கோ:1640) என்கிறான். பரத்தையின் பொருட்டுப் பிரிந்து தலைவியைத் தனிமையில் கொன்றது அவன் மனதை உறுத்துவதுபோல் ஆசிரியர் எங்கும் கவிதையை அமைக்காது, தலைவி அவனை ஊடலில் கொல்வதாகக் கூறுகிறார்.

ஊடலால் வரும் துன்பம் சிறிதுநேரமே. ஆனால் தனிமைத் துன்பம் நீண்டநாள் நீடிக்கக் கூடியது. ஆனால் ஆணின் ஊடல் துன்பமே பெரிதென்று எண்ணி இவ்வரிகளை அமைத்துள்ளார் ஆசிரியர்.

மற்றோரிடத்தில் தலைவி ஊடல் தணியாளாகத் தலைவன் ஊடும்பொழுது, மேல்விழுந்து தழுவி நமக்கு இன்பம்தரும் அமுதம், நாம் அதன் கால்மேல் விழுந்து கரைந்து இரந்தாலும் கனியாது வருத்தும் விஷமாயிற்று. இது நம்முடைய விதிவசமே ஆகும் எனப் புலம்புகின்றான்.

தான் மேல்விழுந்து தழீஇ நமக்கு இன்பந்தரும் அமுதம்
கால்மேல் விழுந்து கரைந்து இரந்தாலும் கரைதலின்றி
மேன்மேல் வருத்தும் விடமாயிற்றா நம் விதிவசமே (சீ.கோ:1644)

தலைவியைக் கூடவிரும்பும் அவனது நினைத்தகாரியம் ஈடேறவில்லை என அதற்காகப் புலம்புகின்றான் தலைவன். சிறிது பொழுதில் நீங்கக் கூடிய துன்பத்திற்கே பெரிதாகப் புலம்புகின்றான்.

சீகாழிக்கோவையில் காமக்கிழத்தியும் வாயில் வேண்டுவதாகப் படைத்துள்ளார் ஆசிரியர். அதுவும்.

பிழையே செயினும் நினக்கே பொறுத்தல் பெருங்கடன் (சீ.கோ:1649)
என்கிறாள்.

.. .. தலைவரை வாட்டுதல் தக்கதன்றா நல்ஆடவரும்
சாலம் பொலியும் பொதுமாதர் தோள் தழுவாரெவரே (சீ.கோ:1650)

என்கிறாள். தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை நியாப்படுத்த வேண்டும் என்பதற்காகப் 'பிறமாதரைச் சேராது எவரும் ஒழுக்கத்துடன் இல்லை எனவே ஒழுக்கமுடையவராகக் கருதி பிறருடன் ஒப்பிட்டு ஊடல் கொண்டு தலைவரை வாட்டாதே. இவ்வொழுக்கத்தை மேற்கொண்டாலும் தலைவன் நல்லவனே. உனை நாடிவந்துள்ளானே!' எனப்பாடுகின்றார் ஆசிரியர்.

பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்பவனாயினும் தலைவனை இறைவன், உத்தமன், சான்றோன், மறையோன் என எந்நிலையிலும் தாழாது ஆண்வர்க்கத்தை உயர்த்திப் பிடிக்கின்றார் ஆசிரியர். ஆனால் மனையில் தனித்துப்புலம்பும் தலைவியை இவ்வாறு எங்கும் புகழ்ந்துரைக்கவில்லை.

24. கவிஞர் காண விழைந்த சமுதாயம்

கஸ்தூரி ராஜா
சென்னை

"சேக்கிழார் பிள்ளைத்தமிழ்" இலக்கியத்தின் வழி திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 'காண விழையும் சமுதாயம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பண்டை இலக்கியத்தில் பிள்ளைத்தமிழ்

பண்டைய இலக்கியங்களில் பிள்ளைத்தமிழ் இலக்கியக்கூறுகள் மலிந்துள்ளன. இதனை ஒரு சில எடுத்துக்காட்டுக்களின் மூலம் அறியலாம். காப்புப் பருவ பாடல் சாயலாக,

> கடவுட் கடிநகர்தோறும் இவனை
> வலம் கொளீஇ வா என

என்ற அடிகளால் அறியலாம் (கலி.84:6-7).

செங்கீரை (அகம் 16.4) தாலப்பருவம் (பரி.6.52.53) சப்பாணி - மதுரைக் காஞ்சி (416-420) முத்தம்-புறம் (41:14-15) வருகை-நற்றிணை- (221:7-13) அம்புலி(கலி.80:18-19) சிற்றில்-(அகம்.90:1-3) சிறுபறை-(திரு.முரு.ஆ.ப 196-197) சிறுதேர் (ஐங்.66:2-3) என்றும்;

வண்டலயர்தல்-(பரி.7:25-26) சிற்றிலிழைத்தல்-அகம் (110:7) கழங்காடல்-(அகம்.17:2) நீராடல்- (பொரு.ஆ.ப.240-241) ஊசல்- (அகம்.20:5-6) என்ற பாடல்களில் பிள்ளைத்தமிழின் சாயல் அமைந்திருப்பது எண்ணி மகிழத்தக்கது.

எடுத்துக்காட்டாக, சிறுதேர் உருட்டல் என்ற பருவத்தைச் சார்ந்த பாடல் குறுந்தொகையில் காணலாம், இதனை.

> தச்சன் செய்த சிறுமா வையம்,
> ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும், கையின்,
> ஈர்ந்து இன்புறும் இளையோர் போல (61:1-3)

என்ற அடிகளால் அறியலாம்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

இந்நூல் விநாயகர் வணக்கமும், அவை அடக்கமும் முதலில் அமைந்திருப்பினும், காப்புப் பருவத்தில் 11 பாடல்களும், ஏனைய ஒன்பது பருவங்களிலும் உள்ள பாடல்கள் சேர்ந்து மொத்தம் 101 பாடல்கள் அமைந்துள்ளன.

பொதுவாக, இறைவனை நோக்கிப பாட்டுடைத் தலைவனைக்

காக்குமாறு கூறுவது மரபு. ஆனால் இங்கு திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்ட திருத்தொண்டர்களையே காப்புக் கடவுளர்களாகக் கூறுவது மாற்றமாகவும், புதுமையாகவும் அமைந்துள்ளது.

இந்நூலில் கூறியுள்ள தனிமனித நெறி, குடும்ப நெறி, சமூக நெறி, அரசியல் நெறி, போன்ற தலைப்புகளின் வழி நூலாசிரியர் காண விழையும் சமுதாயத்தை இனிக் காண்போம்

தனிமனிதன்

ஆண், பெண் இணைந்த அன்பு இல்லத்தில், ஒவ்வொரு தனிமனிதனுடைய ஒழுக்கமும், வலியுறுத்தப்பட்டால் வீடு விளக்கமுறும். தனி மனிதனுடைய அகப்பகையாகிய, காமம், வெகுளி, மயக்கம் போன்ற மூன்றினையும் அழிக்கத் தனிமனிதன் உயர்ந்த நிலையை அடைய முடியும். இதனை,

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றின்
நாமம் கெடக் கெடும் நோய் **(360)**

என்ற குறட்பாவால் அறியலாம். இதனையே ஆசிரியர்.

சோறு மணக்கு மடங்களெலாந்
தூய்மை மணக்குஞ் சிந்தையெலாஞ்
. . . .
நேய மணக்கும் வீதியெலாம் **(3:5)**

என்ற அடிகளின் மூலம் மனதிலுள்ள அக அழுக்கினைப் போக்கி உயிருக்கு உறுதி பயக்கும் அன்பினை வளர்க்குமாறு கூறுவதை அறியலாம்.

இல்லறம்

இல்லத்தை ஆளும் இல்லாளும், தூணாகத் தாங்கும் தலைவனும், சரிநிகர் என்பதை இருவரும் உணர, இல்லறம் சீராகும். இதை விடுத்து, ஆண் தன்முனைப்பின் காரணமாக, வேறொரு பெண்ணிடம் தொடர்பு கொள்வது போன்ற தீ நெறியின் காரணமாக அக்குடும்பம் சிதைந்து சமூக பாதிப்பு ஏற்படும் என்பதனை (ச:6.6) பாடல் நன்குணர்த்துகிறது.

இல்லறத்தில் பூத்த மென்மலர் மழலையென்பதாம். மேகம் பொழிந்து நெற்பயிர் வளர்ந்து போகம் தருவது போல, சேக்கிழார் எனும் அருட்குழந்தை வளர்ந்து சைவப்பயிர் வளர்த்துச் சிவபோகம் கொள்ள செய்யும் என்று சொல்ல வந்தவர், துன்பம் வந்த காலத்துத் துன்பம் துடைக்கின்ற, சேர்த்து வைத்த நிதியமே என்று மழலையை விளிக்கிறார். திருக்குறள் தம் மக்களை (குறள்:63,70) செல்வமாகவே கருதுவதை அறியலாம். அதே பொருளில் ஆசிரியர்,

வுள்ள மவருக் கெய்ப்பிடை வெப்
பொத்துள் ளொழுமொள் ளொளி வருக **(6:10)**

என்று விளிக்கும் நிலையைக் காணலாம்.

சமுதாயம்

பல குடும்பங்கள் இணைந்த சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் தம் கடமை தவறாது வாழ நாடு குறையில்லாத வளமுறும். தம்மிடம் அடைக்கலமாக வந்தவரைக் காப்பது தலை சிறந்த கடமையாகும். அப்படிப்பட்ட நல்ல குடும்பத்தில் பிறந்தவர் சேக்கிழார் என்று கூறி, எல்லா மக்களும் அவ்வாறு வாழ நாடு மாண்புறும் என்று கூறுகிறார். இதனை.

விண்ட கலகத் திறந்தெரிந்து
மேய தத்த மிடம் புக்கு
விதமுள் ளுணர்ந்து தஞ்சரணா
மேவி யிருந்த மடக்கொடியை
மண்ட வழைத்துக் கொடு சென்றிம்
மடமா தினைக்கொள் ளுதிரென்ன
மயங்கல் கண்டு தங்கை யெனும்
வாய்மை கொடுமைத் துனக் கேண்மை
கொண்ட குலத்தி லுதித்தருள் பெய்
கொண்டல் வருக வருகவே (6:7)

என்ற பாடலால் அறியலாம்.

ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு (215)

என்ற குறட்பாவிற்கேற்ப மக்கள் தம்மைச் சார்ந்தவருக்கு தன்னால் ஆன உதவி செய்து வாழ்தல் நன்று என்பதனை

.... நிறை புனல்
வயங்குமு ருணிநீ கர்த்த
திருவப் பெருக்கின்மை சேவையர் குலாதிபன் (10:3)

என்ற பாடலால் அறியலாம்.

அரசு

ஒரு நாட்டின் உயிராகக் கருதப்படுபவன் அரசன். மக்களாட்சியெனின் அந்நாட்டு அரசாகும். இன்று எங்கு பார்த்தாலும் போரும் பூசலும் நிறைந்து, நாடு அமைதியிழந்து தவிக்கிறது. இவை நீங்க, அரசனும் அவனைச் சார்ந்த அமைச்சர்களும் வாழ வேண்டிய முறையை வள்ளுவர் 'அமைச்சியலில்' கூறியிருப்பது போலவே, சே.பி. தமிழிலும் காணலாம். இதனை;

எண்ணி யிதுசெய் திடினி (5:4)

என்று தொடங்கும் பாடலால் அறியலாம்.

மன்னன் தன் அரசை, தன் நாட்டை, கண்ணென மதித்தல் வேண்டும் என்ற புறநானூறு கம்ப இராமாயணம் போன்ற இலக்கியங்களின் வழி, சேக்கிழார் பிள்ளைத் தமிழும் நவில்கிறது. இதனை,

துத்திச் சுமையொரு தோள்வைத் திருபு
லுயர்த்தோன் மனமடியா (3:8)

என்ற பாடலால் அறியலாம்.

அரசனுக்கு அந்நாட்டு மொழிப்பற்று மிகமிக அவசியமாகும். அப்பொழுது தான் நாட்டில் காவியங்கள் உருவாகும். செந்தமிழின் பெருமைகளை ஆசிரியர் (5:2) (5:3) (5:9) (7:8,9) எனப் பல பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாக,

செறிதமிழ்ச் சங்கத்து முதன்மையோ னன்பினைந்
திணையென நவின்ற நூலிற் (7.7:1-2)

என்ற பாடலடிகள் தமிழின் மாண்பினை உணர்த்தும்.

பதவி-வாழும் முறை

அரசப் பதவிகளில் இருப்பவர்கள் வாழ வேண்டிய முறைகளை ஒருபாடல் (8:9) தெற்றென உணர்த்துகிறது.

இலக்கியம்

இலக்கியம் ஒரு நாட்டினைக் காட்டும் காலக் கண்ணாடியெனலாம். நாடு நலமுற இலக்கியங்கள் பெருகும். அரசாட்சிச் செய்யும் அரசனும் தகுதியறிந்து, வரவேற்க இலக்கியங்கள் பெருகும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கவிதைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதனை இவர் விளக்குகிறார். இதனை,

கல்லுங் கரையக் கவிபாடுங் (5:3)

என்ற அடிகளால் அறியலாம். இலக்கியத்தின் மேன்மையை (7:7) (9:9) பல பாடல்கள் விளக்குகின்றன.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம்தரும் நாடு (739)

என்பதற்கேற்ப, ஒரு நாடு நீர்வளம் நிறைந்த நாடாக இருப்பின், அனைத்து வளங்களும், பெருகும் என்பதனை ஒரு பாடல் (2:10) விளக்குகிறது.

ஒவ்வொருவரும் வாழ வேண்டிய முறைகளை (10:3) பிள்ளையவர்கள் மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

தனிமனிதன் புலனடக்கத்தோடு வாழ, வீடு விளக்கமுற்று, சமுதாயம் சீருற்று, அரசு மேன்மையுற்று, நாடு பொலிவுற்று, உலகம் உயரும் என்பதனைக் குறிப்பாக அனைத்துப் பாடல்களிலும், பரக்கக் காணலாம். நாம் இந்நூலை இந்நோக்கத்தோடு பயில, நம்நாடு உலக அரங்கில் உயரும் என்பது வெள்ளிடைமலை.

25. வாட்போக்கிக் கலம்பகத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகள்

இரா. காஞ்சனா
மதுரை

திருவாவடுதுறை ஆதீனத்துத் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 'கவிஞர், நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், வித்யாவீரர்; பாடஞ்சொல்லுவதையே விரதமாகக் கொண்டவர்; மாணாக்கர்பால் தாயினும் அன்புடையவர், வடமொழி வித்வான்களிடமும் மிக்க மதிப்புடையவர்" (உ.வே.சா. ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம் - முகவுரை ப.xviii)

பிள்ளையவர்கள் இயற்றிய நூல்கள் பல. "திரிபந்தாதிகளில் தளிர்த்துத் திரிசிபுர யமக அந்தாதியில் அரும்பி, அகிலாண்ட நாயகி மாலையில் போதாகிய இப்புலவர் சிகாமணியின் கவித்திறனும் புகழும் அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழில் மலர்ந்து நின்றன" என்பார் உ.வே.சா (மேலது ப.54) இவர் இயற்றிய கலம்பகங்கள் இரண்டு. ஒன்று வாட்போக்கிக் கலம்பகம், மற்றது அம்பலவாண தேசிகர் கலம்பகம். இவர் பாடிய முதல் கலம்பக நூல் வாட்போக்கிக் கலம்பகமாகும். கலம்பகத்தின் உறுப்புகள் யாவும் செம்மையுற அமையப் பெற்றது இந்நூல்.

கனிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல் - என்பதற்கு ஏற்ப,

பலவகை மலர்களை இணைத்துக் கட்டியது போலப் பலவகைச் செய்யுட்களையும், அகம், புறம் எனும் பொருட்பகுதிகளில் உள்ள பலவகைத் துறைகளையும் அமைத்துப் பாடப்பட்ட இக்கலம்பக நூல், 'வாட்போக்கி' எனும் திருத்தலத்தைச் சிறப்பித்துப் பாடியது.

வாட்போக்கி என்பது திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற தலம் இன்று இரத்தின கிரி என்று வழங்கப்படுகிறது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் இரத்தின கிரீசர். வாட்போக்கி நாதன், இராசலிங்கம் முடித்தழும்பர், மலைக் கொழுந்தர், சொக்கர் முதலிய திரு நாமங்களும் வழங்கப்படுகின்றன.

வாட்போக்கி நாதரின் பெருமைகளையும் திருவிளையாடல் குறிப்புகளையும், புராணக் குறிப்புகளையும், தலபுராணச் செய்திகளையும், தேவையான இடங்களில் கற்பனை நயத்துடன் இணைத்துப் பாடிய பிள்ளையவர்கள், தங்க ஆபரணத்தில் வைரத்தைப் பொதித்து மேன்மையும் அழகும் படைத்தது போல நூலினூடே ஆங்காங்கே சைவ சித்தாந்தக் கருத்துகளையும் பொதிந்து வைத்துள்ளார். அவற்றை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. அருமருந்து

ஒப்பற்று விளங்கும் வாட்போக்கித் தடங்கிரி மேல் பேரருளால், இனிய சுரும்பார் குழலியுடன் இணைந்துறையும் இறைவனை 'அருமருந்தே' என விளிக்கிறார். இவ்வுலக உயிர்களின் பிணியாகிய, உயிர்களைப் பிணித்து, இன்ப துன்பங்களில் ஆழ்த்தும் கட்டாகிய இரு வினைகளை ஒழிப்பது அவன் அருட்தன்மையே என்பதால் இறைவனை 'அருமருந்தே' என்கிறார். உயிர்கள் தாமே தேடிக் கண்டடைய வேண்டிய மருந்தாதலின் அரு மருந்தாயிற்று. அவ்வரு மருந்து, 'மன்னும் பிறப்பறுக்கும் மா மருந்து' பிறவிப் பெரு பிணிக்கோர் மருந்தாம் அது அடியார்தம் அல்லல் தீர்க்கும் மருந்து.

2. இறையருள் இன்பம்

பெருங்கருணைப் பேராளனாகிய பெம்மானின் திருவருளைப் பெற்றவர்களுக்கு என்றும் இன்பமே. அவர்கள் பெறும் துன்பம் கூட இன்பமாகவே அவர்களுக்குத் தோன்றும். இக்கருத்தை வாட்போக்கித் தலபுராணம் ஒன்றுடன் இணைத்து எளிதாகப் புரிந்து கொள்ளும் படி எடுத்தியம்புகிறார் பிள்ளையவர்கள். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை இங்கே இடி பூசிப்பதாக ஓர் நம்பிக்கை உண்டு. 'இடி முழங்கப் புரி பூசை எஞ்ஞான்றும் இனிது உவக்கும் இறைவனை அடைந்தார், பயம் அகன்று இன்புறுவர்' என்பதனை உலகுக்கு எடுத்தியம்பும் சாட்சியாக விளங்குகிறது சிவபெருமான் அணிந்துள்ள பாம்பு' இடியைக் கண்டு நடுங்கும் தன்மை உடைய அது, இறைவனை வழிபட வந்த இடியைக் கண்டு களித்துறைகிறது" என்கிறார். (வா.க.ப.4;தாழிசை.6).

3. அன்பரின் ஆற்றல்

'இறைவனை முழுமனதுடன் நம்பி வணங்கும் அடியவர் பலருள் ஒருவரே ஒரு கோடி மன்மதர்களை அழிக்கப்போதுமானவராக இருக்க, நீ உன் நெற்றிக் கண்ணால் அவனை எரித்தது ஏன்?" என வினவுகிறார் (வா.க.ப.5;தாழிசை.3).

4. திருநாமச் சிறப்பு

'உன் ஆயிரம் திருநாமங்களுள் ஒன்றை சிறந்த ஒன்றை நமச்சிவாய எனும் உன் திருப்பெயரை-உச்சரிப்பதே கூற்றுவனைச் சுட வல்லது. அவனை அடியவர் அருகே அணுக ஒட்டாது. அப்படியிருக்க, நீ உன் காலால் கூற்றுவனை உதைத்தது மிகையான செயலே' என்று கூறுகிறார். அப்பரது தேவாரப் பாடல் ஒன்றும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமன் சிவன் என்று அரற்றுவார்
ஆர்களாகிலும் ஆக அவர்களை
நீங்கள் சாரப் பெறீர் இங்கு நீங்குமே - என்று

எம தூதர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாம்.

தகாத என்பைக் கலமாக்கிக் கொண்ட வாட்போக்கி நாதரை

உமையம்மையுடன் சேர்த்து வழிபட்டுத் துதி பாடின், 'அந்தகா புகல்' எனலாம் என்றும் கூறுகிறார் பிள்ளையவர்கள் (ப.61,பாடல்:98).

வாட்போக்கிக் கலம்பகத்தில் பெரும்பான்மையும் பதியின் இயல்புகள், தன்மைகள், செயல்கள் சுட்டப்பட்டுள்ளன.

5. பதி உண்மையும் அருமையும்

அவன், அவள், அது எனச் சுட்டி உணரப்படும் இவ்வுலகமானது தோற்றம், நிலை, இறுதி எனும் முந்நிலைகளை உடையது. இதன் நிமித்த காரணன் இறைவன்.

ஒருவனோ டொருத்தி ஒன்றென்று ரைத்திடும் உலகமெலாம்
வருமுறை வந்து நின்றும் போவதும் ஆதலாலே
தருபவன் வேண்டும்" - என்று அருள் நந்தி சிவாசாரியார் 'பதி ஒன்று' என்ற உண்மையைக் கூறுவார்.

இக்கருத்தை ஒட்டியே, பிள்ளையவர்கள், "அவன் அவள் அது வென அறைதரு வகைமையுள் இவன் இவள் இதுவென வியைதரலருமையை" -என்கிறார். இங்கு பதியின் உண்மை சுட்டப்படுவதுடன் இறைவனை 'இவன்' என்றோ, 'இவள்' என்றோ, 'இது' என்றோ பொருத்திக் கூறுதல் அரிது என்கிறார். இதன் மூலம் இறைவன்

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்காது ணர்வரிய தன்மையான் (கொடிக்கவி:3)

என்பதைப் புலப்படுத்துகிறார்.

உரை உணர்வுக் கெட்டா ஒருவனான இறைவன் உணர்வார்க்கு உணரும் வடிவில் விளங்குவான் என்பதும் பெறப்படுகிறது. 'இறைவன் இதுவன்று, அதுவன்று, உதுவன்று என்று மறுத்து எதுவென்று அறிய முதுமறைகள் வினாக்களை எழுப்பி விடைதேட முயல, வேதங்களின் முடிவாகிய உபநிடதங்கள் உரைக்கும் உண்மைப் பொருளாக, முடிந்த முடிபாக இருப்பவன் நீ' - என்று கூறவந்த பிள்ளையவர்கள்

இதுவலை யதுவலை யுதுவலை யெதுவென
முதுமறை கதறவும் அதன்முடி மருவுவை என்கிறார்
(வா.க.ப.4; அராகம்.3)

6. இறைவனின் உருவத்திரு மேனிகள்

மெய்யுணர்ந்தவர்க்கு ஞான உருவக் காட்சியளிக்கும் இறைவன், அந்நிலை அடையாதாருக்காக, அருவம், உருவம் அருவுருவம் எனும் முத்திருமேனிகளைக் கொண்டு காட்சியளிப்பான் என்பார் உமாபதிசிவம் (திருவருட்பயன்:5)

அருவமும் உருவாருபம் ஆனதுமன்றி நின்ற
உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக்குள்ளவாமே

என்பார் அருணந்தி சிவாசார்யார் (சிவஞானசித்தியார்,சுபக்கம்:63)

அம்மையப்பராகவும், அர்த்த நாரீசரராகவும், சோமசுந்தரராகவும்,

தட்சிணாமூர்த்தியாகவும், பிட்சாடனராகவும், திரிபுர சம்ஹாரராகவும் உருவத் திருமேனிகள் கொண்டு இறைவன் உலக உயிர்களுக்கு அருள் புரியவும், ஆன்ம மலங்களைப் போக்கவும், ஞானம் அருளவும் காட்சியால் அறியப்படும்படி வந்து அருளுவார்.

சோதியாய், சுடராய், அனலுருவாய், இலிங்க வடிவாய் இருக்கும் இறைவடிவங்களை அருவுருவ வடிவங்கள் என்பர்.

காட்சி அளவையால் அறியப்படாது, கருதலளவையால் அறியப்படும் அருவ வடிவ நிலையில் ஞான ரூபியாக மெய்யுணர்ந்த அடியவர்களுக்குத் தோன்றுவான். ஞானப் பொருளாக இறைவனைக்காணும் போது, எண்குணத்தான இறைவனின் 'தூய உடம்பினன் ஆகும் குணம் சுட்டப்படுகிறது எனலாம்.

இம்மூவகைத் திருமேனிகளைக் கொண்டிலங்கும் இறைவனின் தன்மையைப் பிள்ளையவர்கள்,

அருவமும் உருவமும் அருவமோடுருவமும்
ஒருவற வுளையெனில் இலை என ஒளிருவை - என்று பாடுகிறார்.

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
  சிவமெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் என நினையு மவர்க்கும்
  ஊன் எங்கும் இலன் இங்கும் ஊன் என்பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல் . . . வெளிப்பட்டு
  அருளுவன் அன்பர்க்கே-என்பது சித்தியார் சுபக்கம் (சூத்.12:325)

இறைவன் அடியார் விரும்பிய வடிவில், அவர்களது பக்குவ நிலைகளுக்கு ஏற்ப அருவமாய், உருவமாய், அருவுருவமாய்த் தோன்றி அருளுபவன்.

சகலர், பிரளயகலர், விஞ்ஞானகலர் என்று இறையடியார்களை, அவர்களது பரிபக்குவத் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்துவர். ஆணவம், கன்மம், மாயை, எனும் மும்மலங்களாலும் பிணிக்கப்பட்டவர்களைச் சகலர் என்பர். ஆணவத்தால் வலிமையாகக் கட்டப்பட்ட இவர்களுக்கு, அருள்புரிந்து ஆட்கொள்ள இறைவன் குருவடிவாய் வந்து ஞானம் வழங்குவான். பிரளய கலர் என்போர் ஆணவம், கன்மம் எனும் இரு மலங்களால் மட்டும் கட்டப்பட்டவர்கள். ஆணவம் இவர்களை இடைப்பட்ட நிலையில் பிணித்திருக்கும் இவர்களுக்கு அருள் புரிய இறைவன் தெய்வ வடிவில் வந்து ஞானம் வழங்குவான். விஞ்ஞான கலர் ஆணவ மலத்தால் மட்டுமே கட்டப்பட்டவர்கள். இவர்களுக்கு இறைவன் உள் நின்று உணர்த்தி ஞானம் வழங்குவான். இத்தன்மை பற்றி வாட்போக்கிக் கலம்பகம்,

உள்ளொளி யாகி நின்று உணர்த்துந் தன்மையை - என்று சுட்டுகிறது.

மூவகை உயிரின் முறைமையும் அவர்களுக்குக் காவலன் அருள்புரிக் கடனும் சிவப்பிரகாசம் கூறும் (பாயிரம்.8;ப.736).

அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்
உருவம் உடையான் உளன்
என்பார் உமாபதிசிவம் (திருவருட் பயன்:5).

7. சித்தாகாச வடிவம்

இறைவன் சித்தாகாசமே தனது வடிவாக உடையவன் என்பதைச் சுட்ட,

வெறுவெளியே இவர்க்குளது மெய்ம்மையிது மகளே
என்கிறார் பிள்ளையவர்கள் (ப.17; பா:20)

8. அர்த்தநாரி வடிவம்

உமையொரு பாகனாகக் காட்சியளிப்பதை

பெண்பாலுகந்த வாட்போக்கி (பா:75)

மங்கையொரு பங்குடையார் மாணிக்கமலை (பா:61)

மாலாய பச்சை மயிலை இடம் வைத்தானை (பா:62)

என்றும், "நெடுங்கண் உமையாள் அவாவு ஒருபால் அளித்தார்" (பா:79) என்றும் "சுரும்பார் குழல் பாகர்" (பா:102) என்றும் பல இடங்களில் போற்றுகிறார் வாம பாகத்தை இறைவிக்கு அளித்த தன்மையைச் சுட்டி, அப்படித் தன் பாதி உடலைப் பார்வதிக்கு நல்கியும் இறைவன் கூறுபடாதவர், முழுமையானவர் என்பதையும் சுட்டுகிறார்.

பெண்ணொரு பாலுறு பெற்றி மேவியும்
எண்ணொரு விகாரமும் இலாத காட்சியை (பக்கம்:6)

இறைவன் திரிபுரம் எரித்தது யானைத் தோல் உரித்துப் பூண்டது, காலனை உணர்த்தது என்று கூறப்படும் வீரச்செயல்கள் சிவஞானசித்தியாரில் கூறப்படும் வேக வடிவத்திற்கு அடிப்படை என்பர். (கோமதி சூரிய மூர்த்தி, திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகள். ப.101) பிள்ளையவர்களும் இத்திருவிளையாடல்களைப் பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்கிறார். (திரிபுரம் எரித்தது: ப.6; தாழிசை:5, ப.49, பா.68; காமனை விழியால் எரித்தது: ப.5; தாழிசை:3,ப.44. பா.69; எமனை உதைத்து:ப.5, தாழிசை:1; எதிரிலா உவா உரித்தது: ப.32, பாடல்:48, ப.19,பா:24)

9. அட்ட மூர்த்தங்கள்

இறைவன் ஐம்பூதங்களிலும் எட்டுப்பொருட்களிலும் நிறைந்து நிற்பவன் ஐம்பூதங்களோடு சூரியன், சந்திரன், உயிர் இம்மூன்றையும் சேர்த்து எட்டுப் பொருட்களிலும் இறைவன் நிறைந்து நிற்கும் ஆற்றலை அட்டமூர்த்தம் என்பர். இவ்வட்ட மூர்த்தங்களை

முறிதலின் முடியேற்றதும் ஒரு வெட்டே
மூர்த்தமும் தோம் ஒருவு எட்டே எனச் சுட்டுகிறார் (ப.32, பாடல்:48)

10. இறைவன் அநாதி

ஆதியும் அந்தமுமில்லா இறைவன் நித்திய புருடன், அநாதி என்பது சைவ சித்தாந்தம் கூறும் கருத்து. முன்னைப் பிறப்பிறப்பில்லா இறைவன் தோற்றமும் கேடும் இலான், அவனது நித்தியத் தன்மையைத் திருக்கழுத்திலுள்ள நஞ்சு சுட்டி நிற்கிறது. திருநீலகண்டன் திருமணி மிடற்றன் ஆனதுடன், திருமாலின் என்பையும் பிரம்ம கபாலத்தையும் தரித்திருப்பவன். திருமாலும் பிரம்மாவும் உடலழிந்த பின் அவர்களது எலும்பினைத் தான் அணிந்து, அவர்களைப் போலன்றித் தான் பிறப்பும் இறப்பும் அற்ற நித்தியப் பொருள் என்பதைப் புலப்படுத்துகிறான்.

"நீ நித்தியப் பொருள் என்று காட்டுவதற்கு உன் திருமிடற்று நஞ்சு ஒன்றே சாட்சியாகப் போதும் அப்படி இருக்க நீ உன் திருத்தோள்கள் வருந்தும்படி கங்காளம் முதலியவற்றைச் சுமப்பது ஏன்? என்று வினவுகிறார் (ப.5; தாழிசை:4).

இறைவன் பிறப்பிலி என்பதைக், "கரு வறந்தனை" எனும் சொல்லாட்சியால் குறிப்பிடுகிறார்.(ப.7) 'மூலமும் ஈறும் இலா உவா (இளமை) அவனுக்கு உரியது' என்கிறார் (ப.32;பா:48).

11. இறை எங்கும் நிறைந்தவன்

உலகப் பொருட்கள் அனைத்திலும் ஒன்றாய், உடனாய், வேறாய், நிற்பவன் இறைவன். எங்கும் நீக்கமற நிறைந்தவன். உலகப் பொருட்களில் நிறைந்த இறைவனை 'உலகரூபி' என்பர். உலகப் பொருட்களில் எல்லாம் நிற்பவனானாலும் அவன் உலகப் பொருட்களில் ஒருவனாக இல்லாது வேறுபட்டவன். அதனால் அவனை 'உலகாதிகன்' (உலகைக் கடந்தவன்) என்றும் சுட்டுவர்.

பிள்ளையவர்கள் இறைவனை, 'எங்கும் நீடினை' என்று போற்றுவதோடு, இறைவன் உலகப் பொருட்களுள் எல்லாம் நிறைந்து நிற்பவன் என்பதை அவன் பிரம்படி பட்ட நிகழ்ச்சி விளக்குகிறது என்றும் எடுத்துரைக்கிறார்.

"பிரம்ம நீ என வழுதி பிரம்படியே புணர்த்தியது" என்று கூறி, வழுதியின் பிரம்படி மண்ணுலக உயிர்கள் அனைத்தின் மீதும் பட்டமையே, இறைவன் உலக உயிர்கள் அனைத்திலும் ஒன்றியிருப்பதை விளக்குகிறது என்கிறார்.

"கோ அவன் முன் ஆகி அல்லாக் கோமான்" எனக் குறிப்பிடும்பொழுது, இறைவன் அவன், அவள், அது ஆகிய உலகப் பொருட்கள் ஆகி, இருப்பவன்; அவற்றோடு கலந்தும் கலவாமல் நிற்பவன் என்பது சுட்டப்படுகிறது. (ப.40; பா:63).

இவ்வாறு உலகப் பொருட்கள் அனைத்திலும் ஒன்றாயும் வேறாயும் இருக்கும் இறைவன் மாணிக்கமலை போன்றவன். தன்முன் வரும் ஆன்மாவின் உள்ளத்தில் நுழைவதன்றி, அவ்வான்மா தனக்குள் நுழைய இடம் கொடாதவன் என்று கூறுகிறார் (ப.38; பா:58).

12. இறைவனின் தன்னேரிலாத் தலைமை

இறைவன் மூல முதல்வன். மேல் ஒருவன் இலாத பரம் பொருளே சிவம்; "தானே தனக்கொத்த வாட்போக்கி நாதன்" என்றும் அவர்

மேதகவுரியார்; போதகவுரியார்; விண்ணம் பணிவார்;
மாதலம் மிசையார்; கோது அலம் இசையார்;
வரதன ஏற்பு ஆரும் அரதன வெற்பார் உலகோது பதியார்-

என்றும் போற்று மிடங்களில் இறைவனின் தலைமையும், விண்ணவரும் மண்ணவரும் போற்றும் தன்மையும் சுட்டப்படுகின்றன.

13. பிரணவருபம்

இறை சக்தி பாசம் எழில் மாயை ஆவி
உற நிற்கும் ஓங்காரத்துள்

எனும் திருவருட்பயன் இறைவன் பிரணவத்தை விட்டு நீங்காத ஐந்தெழுத்திலேயும் பொருந்தி நிற்பவன் என்று கூறுகிறது.

ஓம்காரமே நல்திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம்- ஆங்காரம்
அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார்

என்று உண்மை விளக்கம் சுட்டுகிறது. இங்கு திருவம்பலத்தான் ஆடும் திருக்கூத்தைக் கண்ட, யான், எனது எனும் செருக்கற்ற அடியார்கள் பிரணவமே நல்ல திருவாசியாகவும், அப்பிரணவத்தை விட்டு நீங்காத பஞ்சாக்கரம் நிறைந்த உள்ளொளியாகவும் உணர்ந்து இன்புறுவர் என்பது விளக்கப்படுகிறது. இறைவன் பிரணவ மந்திரத்தின் பொருளாய் ஓம் கார ரூபியாய் இருப்பவன் எனும் உண்மையை அவன் அணிந்த கொன்றை மலரே சுட்டும் என்கிறார். பிள்ளையவர்கள் கொன்றை மலருக்குப் பிரணவ "புஷ்பம்" என்ற பெயருண்டு.

14. இறைவனின் திருநடனம்

இறைவனின் திருநடனத் தினைத்திருக்கூத்து என்பர். நாத முடியிலே சிவபெருமான் பஞ்சாக்கரமே திரு மேனியாக் கொண்டு நிருத்தம் செய்கிறார் எனக் கூறும் உண்மை விளக்கம், திருப்பாதங்களில் 'ந' காரமாகவும், திருவுந்தியிலே 'ம' காரமாகவும், திருத்தோளிலே 'சி' காரமாகவும், திரு முகத்திலே 'வ' காரமாகவும் திருமுடியிலே 'ய' காரமாகவும் கொண்டருளித் திருநடம் புரிகிறார் என்கிறது (உண்மை விளக்கம்:31,32,33). மேலும் இத்திருநடனம் ஐந்தொழில் ஆற்றலையும் விளக்குவது. இறைவனின் டமருகம் ஏந்திய திருக்கை ஆக்கும் தொழிலையும், அபய கரம் ஆன்மா பொருந்தும் இரஷையாக விளங்கிக் காக்கும் தொழிலையும், கையில் ஏந்திய அக்கினி மல சம்ஹாரமாகிய அழித்தல் தொழிலையும், ஊன்றிய மலர்ப்பாதம் பிரபஞ்சத்தை மறைக்கும் தொழிலையும், தூக்கிய திருவடி அநுக்கிரக முக்தியாகி அருளல் தொழிலையும் சுட்டுவன பிரணவ மந்திரத்தையும், பஞ்சாக்கிர மேன்மையையும், ஐந்தொழிலாற்றலையும் விளக்குவதால் இதனைச் சிறப்பித்துப் பிள்ளையவர்கள் "அம்பல நடுப்புகுந்

நாடுங் கூத்தினை" என்று இறைவனை விளிக்கிறார்.

15.முத்தொழிலாற்றல்

"தோற்றுவித்து,அளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்" உடைய ஈசன் தன் தொழில்களைப் பிரமன், திருமால், உருத்திரன் இவர்களைக் கொண்டு செய்விப்பவன் என்பதை, "அயன், அரியும் அவனதுயர் அதிகாரத்து வந்தமுறை தன் தொழிலே மன்னுவிப்பன் எல்லாம் என்பது சிவப்பிரகாசம். இவ்வாறு மற்றைய மூவருக்கும் முத்தொழிலையும் அதிகார சக்தியையும் ஏவலாய்த் தந்து விட்டதால் மூல முதல்வனுக்கு வேலையே இல்லையாம்.

"நுருவு ஒரு தயையின் ஐந்தொழிலியற்றியும் மருவு ஒரு தொழிலும் இல்லாத மாட்சியை" என்று நயம்பட இறைவனின் மேன்மையைச் சுட்டுகிறார் பிள்ளையவர்கள். இதனையே, "தன்வலிஆணை தாங்கி, மூவண்ணல் தன் சந்நிதி முத்தொழில் இயற்ற வாளா மேவண்ணல்" என்று திருவிளையாடல் புராணமும் சுட்டுகிறது.

ஒக்க வனைத்தும் ஆக்கிடுவாரும் ஒருநீரே
தக்க சிறப்பிற் காத்திடுவாரும் ஒரு நீரே
புக்கவை முற்றப் போக்கிடு வாரும் ஒரு நீரே
மிக்க முடிக்கட் கீற்றுடையாரும் ஒரு நீரே

என்று,வாட்போக்கி நாதரைப் போற்று மிடத்து (ப.27; பா:39) இறைவன் ஒருவனே இம்முத்தொழில்களையும் ஆற்றுபவன் என்பதைச் சுட்டுகிறார்.

16. இறைவனின் அருட்தன்மை

ஆன்மாக்களின் அறியாமையாகிய இருளைக் கெடுத்து அருள்புரிபவன் இறைவன். அவன் ஆலம் மாந்தியது, மதியணிந்தது, அரவு சூடியது அனைத்துமே அவனது அருட்தன்மையைச் சுட்டுவன. பாற்கடல் கடைந்து, அமுதம் வெளிவர, அதைவிடுத்துப் பிறரைக்காக்க விடத்தை அமுதமாகக் குடித்தமை, குற்றத்தையும் குணமாகக் கொள்ளும் அவன் தன்மையே சுட்டும் என்று பல இடங்களில் இறைவனின் அருட்தன்மையை எடுத்துரைக்கும் பிள்ளையவர்கள், விரைகமழ் பூங்கொன்றையை முடியிற் சூடி, வாட்போக்கி வரை கமழ வீற்றிருக்கும் வள்ளலின் பொற்பாத கமலங்கள் தம் தலையில் படுமாறு வீழ்ந்து பணியும் அன்பர் தம் பாதக மலம் அழியும் என்கிறார்.

தன்னை அடைந்தவர்களுக்கு, அவர் இன்னார் இனியார் எனக் கருதாது, தன்னைச் சரண் அடைந்தமையை மட்டுமே கருத்திற் கொண்டுஅவர்களுக்கு அருள்புரிபவன் இறைவன் என்பதை வாட்போக்கிக் கலம்பகம்,ஆனவன் ஆகாதவன் என்று அன்புடையார் பாலாயான்" (ப.40;பா:63) என்று சுட்டுகிறது.

நலமிலன் நண்ணார்க்கு; நண்ணினார்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்

எனும் திருவருட் பயன் தன்னைச் சரணடைந்தவர்களுக்கு இறைவன் வெறுப்பு விருப்பிறி இன்பத்தைத் தருபவன் என்கிறது.

17. தண்ணளியும் வெம்மையும்

இறைவன் அடியவர்களுக்கு அருள்புரியும் தன்மையால் தண்ணளியுடையவன் என்றும், அவர்களுடைய வினைகளை எரிக்கும் தன்மையால் வெய்யன் என்றும் கூறுவர். (கோமதி சூரியமூர்த்தி, ப:117) இக்கருத்தையே ''வெம்மையொடு தண்மை விரவித்தரு முலக மும்மையுடையான்" என்று போற்றுகிறார் பிள்ளையவர்கள்.

18. அடியவர்க்கு எளியன், தேவர்க்கு அரியன்

அடியவர்களுக்கு எளியவனாக வந்து அருள்புரியும் இறைவன், மற்றையோர்க்கும் தேவர்க்கும் அடைதற்கு அரியவன் ஆவான் என்பதை,

கனவினு மமரர் காணரு நின்னை
. . . .
எவ்வகைப் பற்றும் இரித்தவர்க்கின்றி
மற்றையர்க்கு ஒல்லா வயங்கருள் பெறுவான்

என்று பாடுகிறார். ஆணவம் மிக்கவர்களுக்கு உணர்தற்கு அரியவன். ஆனால் ஆணவம் நீங்கி அன்புடன் அகம் குழையும் அன்பர்க்கு மிக எளியன் என்பதை இது சுட்டுகிறது.

19.விடையேறி வருதல்

அன்பர்க்கு அருள்புரிய விடையேறி வருவான் கருணைவள்ளல் என்பது சைவ சித்தாந்திகள் கருத்து. அறக்கடவுளே விடையாக வந்ததாகவும் கருதுவர். அத்துவித முத்திபெற யோகம் செய்யும் அன்பர்க்கு முன் அழகிய திருமகளை உடைய திருமாலாகிய இடபத்தின் மேல் வருவார் வாட்போக்கி நாதர் எனும் பிள்ளையவர்கள் இக்கலம்பகத்தில் பல இடங்களில் திருமாலே இடப உருவெடுத்து வருவதாகச் சுட்டுகிறார்.

மறைபுகலும் வாட்போக்கி வள்ளலுக்கு
விடையுருவாய் மாலே செங்கை
உறையொரு கோடொழித்து இரு கோடுற்று வருகிறார்

என்கிறார். இக்கருத்து மேலும் ஆராயத்தக்கது.

20. அடியார் தம் பாசங்களை அழித்தல்

இறைவன் தன்னைச் சரண் அடைந்தாரின் இருவினைகளையும், மும்மலங்களையும் அகற்றி அவர்கள் ஆன்ம சுத்தம் பெற்று ஈடேற அருளுபவன்.

அது, இது என நெஞ்சம் அலைதல் அற்று, இறையுடன் மன மொன்றித் தஞ்சம் அடைபவர்களின் மலங்களை அட்டுக் களைந்தன இரத்னகிரியாகிய வாட்போக்கி மலையின் முடியில் அமர்ந்த முடித்தழும் பேரிய இராசலிங்கரின் வெற்றிப் புயங்கள்" எனப் போற்றுகிறார் பிள்ளையவர்கள். (ப.12; 11:4).

எப்பொருளும் தமக்கு ஒப்பாகாத எம்பெருமானுடைய அழகிய திருக்கையில் உள்ள அம்பு வெம்மையாகிய, மகத் தத்துவமாகிய புத்தியின் உள்ளே உள்ள மயக்கத்தை அழித்து உயர்த்துவது என்று எடுத்துரைக்கிறார். (ப.42;பா:28).

'மீளா மயக்கமாகிய மிலக்குழியில் விழுந்த அடியவரின் மனமாகிய தேரை, அருளாகிய அம்பைக் கொண்டு மேலே எடுத்து, அத்தேரின் கண் நீ ஏறினால் மும்மலங்களும் அறும்' என்கிறார் (ப. 34-35;பா:51) (பாதாளத்தில் அழுந்திய தேராகிய பூமியை அம்பாக வந்த திருமாலாகிய வராகத்தைக் கொண்டு மேலே எடுத்து ஏறி முப்புரம் அட்டவன் ஆகையால், மாற்குழி விழுந்த மனத்தேரை அருளாகிய அம்பைக் கொண்டு எடுத்து நீ ஏறினால் மும்மலமும் கெடும் என்றார்).

வேதங்களையே தான் ஏறும் குதிரையாகக் கொண்ட வாட்போக்கி நாதனே உம்பால் மாறாத பற்று கொண்ட அன்பர்களின் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதனம் என்ற ஐவகை மலங்களும் அற அருள்புரிவாய்" - என வேண்டுகிறார் (ப.49; பா:80).

21. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள அத்துவிதத் தொடர்பு

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றிக் குறிப்பிடும்போது, இரண்டும் (இறை, உயிர்) இராண்டாகப் பிரிந்து நில்லாது இருக்கும் தன்மையை அத்து விதம் என்ற சொல்லால் குறிப்பர்.

அ+துவைதம் என்ற வடசொல் இரண்டற்ற நிலை என்று பொருள்படும். இதனை,

ஒன்றாகாமல் இரண்டாகாமல்
ஒன்று மிரண்டுமின்றாகாமல் **(இருபா இருபது:10)**

என்று விளக்குவார் அருணந்தி சிவாசாரியார்

''ஆன்மாவும் சிவமும் ஒரு பொருளாகில் ஒருவரும் கூட வேண்டுவதில்லை. பெறுவானும் பேறும் இல்லை. இரண்டாய் நிற்கும் என்று கூறினால் அங்கே சாயுச்சியம் என்று சொல்லவேண்டுவது இல்லை ஒன்றுமல்ல இரண்டுமல்ல என்று வேதாகமங்கள் சொல்லுவதால் அத்துவிதமாய் இருக்கும்" என்கிறது திருவருட் பயன்(75).

இக்கருத்தை வாட்போக்கிக் கலம்பகத்தில்நான் அவன் ஆகாது, அவனே நான் ஆக உட்குறிக்கும் கோன் அவன்" என்ற இடத்தில் சுட்டுகிறார் பிள்ளையவர்கள். முக்திபெற்ற சிவன் பதி காணங்களைப் பெற்று சிவனைப் போல விபுவாக இராமல், அவனோடு இரண்டறக் கலக்கும் நிலையை இப்பாடலடி சுட்டுகிறது எனலாம்.

இவ்வாறு வாட்போக்கிக் கலம்பகத்தில் பதியின் இயல்புகள், பதியுண்மை, பதி அருமை, உருவத்திருமேனிகள், ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கு ஏற்ற உருவத்திருமேனி எடுத்து அருளல், அர்த்த நாரீசுவரர் தோற்றம், அட்ட மூர்த்தங்கள் ஆகியவற்றைக் குறிப்பாகச் சுட்டுவதுடன் இறைவனின் அநாதி நிலை, நித்தியத் தன்மை, எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஆற்றல், தன்னேரிலாத் தன்மை, முதன்மை, முத்தொழிலாற்றல், அருட்தன்மை, அடியார்தம் பாசங்களைக் கட்டறுத்தல், அத்துவிதமாய் ஆன்மாவோடு ஒன்றியிருத்தல், பிரணவ வடிவாய் இறைவனைக் காணல் இறைவனது திருக்கூத்தின் சிறப்பு போன்ற கருத்துகள் சைவ சித்தாந்தக் கருத்துகளுடன் பொருத்திக் காண்பதற்கு ஏற்ப அமைந்துள்ளன.

26. பிள்ளையவர்களின் தமிழ்ப்பணிகள்

க. கிருஷ்ணமூர்த்தி
பழனி

மகாவித்துவான் அவர்களின் தமிழ்ப்பணி

மகாவித்துவான் அவர்கள் திருவாவடுதுறையில் அமைந்துள்ள சைவமடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எண்ணற்ற தமிழ்ப்பணிபுரிந்துள்ளார்.மகாவித்துவான் அவர்கள் சைவமடத்தின் 'தலைசிறந்த ஆதீன' வித்துவானாகவும் விளங்கினார். மகாவித்துவான் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சைவத்துக்கும் எனத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்.

தமிழ் அறிஞர் மு.வ. அவர்களின் கருத்து

மகாவித்துவான் அவர்களின் தமிழ்ப்பணி பற்றி தமிழ் அறிஞர் முனைவர் மு.வ. அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"அவர் நூல்கள் எல்லாம் சைவ சமயத் தொடர்பானவை. பக்திச் சுவை உள்ளவை. மிக வேகமாகச் செய்யுள் நூல்கள் இயற்றுவதில் வல்லவர் எனப் புகழ்பெற்றவர் அவர். தமிழில் மிகப்பல செய்யுள் நூல்கள் எழுதிய புலவர் அவரே. ஆயினும் அவருடைய புகழை இன்று காப்பாற்றி வருவது ஒரு சிறிய நூல். சேக்கிழார் என்ற நூலாசிரியரைப் பற்றி அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்பது அது. அவருடைய இந்நூல்களில் பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ள வருணனைகளும் க்றபனைகளும் கருத்துகளும் கலந்து அமைந்து இருக்கும்" (தமிழ் இலக்கிய வரலாறு. பக்.226,227) எனத் தமிழ் அறிஞர் மு.வ. அவர்கள் கூறும் கருத்து மகாவித்துவான் அவர்களின் தமிழ் இலக்கியப் பணியை தமிழ் உலகிற்கு எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

மகாவித்துவான் அவர்களைப் பற்றிய பாராட்டுமொழிகள்

தமிழ் இலக்கிய வரலாற்றுடன் தம்மை இணைத்துக் கொண்டவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. அவரது படைப்புப்பணி மிகவும் உன்னதமானது. உயர்வானது. அவரது படைப்பாற்றலை வியந்து பாராட்டித் தமிழ்கூறும் நல்லுலகம் அவருக்குப் பல்வேறு அடைமொழிகளை வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

1)19-ம் நூற்றாண்டின் கம்பன், 2)தமிழ்காளிதாசன், 3)நிமிடகவி, 4)புராணம்பாடும் புலவன், 5)தமிழைக்காத்த பெருமான், 6)புலவர் முதல்வன், 7)கவிக்கார்மேகம், 8)செந்தமிழ்க்குருநாதன், 9)சிவநெறிச் செல்வன், 10)கற்பன சிகாமணி, 11)கருணை மூர்த்தி, 12)இணையிலாப் புலவன், 13)மெய்ஞ்ஞானக்கடல், 14)புலவர் ஏறு எனப் பல பொன் மொழிகள் (யோகி

சுத்தானந்த பாரதி, புலவர் பெருமாள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பக்.9) வழக்கில் வழங்கி வருகின்றன. இவையாவும் வெறும் கற்பனையான பாராட்டுரைகள் அல்ல. அனைத்தும் உண்மையானவையே ஆகும். 19-ஆம் நூற்றாண்டின் இலக்கிய உலகில் விடிவெள்ளியாகவும் எழுஞாயிறாகவும் விளங்கியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்பதை இலக்கிய அறிஞர்கள் நன்கு அறிவார்கள். அவர்தம் தமிழ்ப்பணியும் அளவிடற்கரியதாகும்.

மகாவித்துவான் அவர்களின் படைப்புக்கள்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கதாகும். இவரது படைப்புக்களில் தல புராணங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன எனலாம். 'புராணம்' என்னும் வடமொழிச் சொல்லிற்குப் பழமை, பழங்கதை, புனித நூல்கள் எனத் தமிழில் விளக்கம் சொல்லப்பட்டு வருகின்றது. பழைய மரபினை, பழைய வரலாற்றினைத் தெய்வங்களோடு இணைத்துக் கதைகள் வாயிலாக உரைப்பது புராணம். அவ்வகையில்தான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் புராணங்களும் அமைந்துள்ளன. பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் மகாவித்துவான் அவர்கள் தமிழில் எழுபது தல புராணங்கள் இயற்றியுள்ளதாகக் குறிப்பிடுகிறார் (சேக்கிழார் பிள்ளைத்தமிழ், ப.64) மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் 22 தல புராணங்கள் இயற்றியுள்ளார் என்றும் இவற்றுள் 4 தல புராணங்கள் முற்றுப் பெறவில்லை என்றும் ஆ.கந்தசாமி அவர்கள் குறிப்பிடுகிறார். (தமிழ் இலக்கியக் கொள்கை-3, ப:185) இனி, மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் தல புராணங்களின் பெயர்களை கீழே காண்போம்.

1. அம்பர்ப்புராணம்	2. ஆற்றூர்ப் புராணம்
3. உறையூர்ப் புராணம்	4. கண்டதேவிப்புராணம்
5. ஸ்ரீ காசிரகசியம்	6. தியாகராச லீலை
7. திருக்குடந்தைப் புராணம்	8. திருத்துருத்திப்புராணம்
9. திருநாகைக் காரோணப்புராணம்	10. திருப்பெருந்துறைப் புராணம்
11. திருமயிலைப் புராணம்	12. குறுக்கைப் புராணம்
13. கோயிலூர்ப் புராணம்	14. சூரைமாநகர்ப்புராணம்
15. தனியூர்ப் புராணம்	16. பட்டீச்சுரப்புராணம்
17. திருவரன்குளப்புராணம்	18. மாயூரப் புராணம்
19. மண்ணிப்படிக்கரைப் புராணம்	20. விளத்தொட்டிப் புராணம்
21. வாளொளிபுற்றூர்ப்புராணம்	22. வீரவனப் புராணம்

என்பனவாகும். இப்புராணங்கள் அனைத்தும் சைவசமய நெறிகளை மையமாகக் கொண்டு விளங்குகின்றது. தமிழ்ப்பணியோடு சைவசமயப்பணிகளையும் மகாவித்துவான் அவர்கள் மேற்கொண்டார் என்ற உண்மையை ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

பிள்ளைத்தமிழ் நூல்கள்

மகாவித்துவான் அவர்களின் தல புராணங்களை அடுத்து, அவரது

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. 'பத்து' பிள்ளைத்தமிழ் இலக்கியங்களைப் படைத்துள்ளார். 'பிள்ளைத்தமிழ் இலக்கியம்' பாடுவது மிகவும் கடினமானது ஆகும். 10-பருவங்களை அமைத்துப் பாடுவது என்பது எளிதான காரியம் அல்ல. மகாவித்துவான் அவர்களின் 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' ஒப்பற்ற உயரிய படைப்பாகும். மகாவித்துவான் அவர்களின் பிள்ளைத்தமிழ் நூல்கள் பின்வருமாறு.

1. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
2. காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்
3. அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்
4. திருவிடைக்கழி பிள்ளைத்தமிழ்
5. திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்
6. அம்பலவாண தேசிகர் பிள்ளைத்மிழ்
7. மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்
8. பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ்
9. பிரம்மவித்யா நாயகி பிள்ளைத்தமிழ்
10. பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ் - என்பதாகும். இவற்றுள் கடைசி இரண்டு பிள்ளைத்தமிழ் நூல்களும் கிடைக்கப்பெறவில்லை.

கலம்பக நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கிய வகைகளுள் 'கலம்பகம்' சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. 'கலம்' என்றால் 12-என்றும், 'பகம்' என்றால் 6-என்றும், மொத்தம் 18-உறுப்புக்களால் பாடப்படுவது 'கலம்பகம்' என்பர். அவ்வகையில் மகாவித்துவான் அவர்கள் இரண்டு கலம்பக இலக்கியங்கள் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

அ. வாட்போக்கிக் கலம்பகம்
ஆ. அம்பலவாண தேசிகர் கலம்பகம்-என்பதாகும்.

தூது இலக்கிய நூல்கள்

'தூது இலக்கியம்' தமிழில் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகிறது. மகாவித்துவான் அவர்கள் இரண்டு தூது இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

அ. சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது
ஆ. தானப்பாசாரியார் தசவிடுதூது - என்பனவாகும். இவற்றுள் தானப்பாசாரியார் தசவிடுதூது கிடைக்கப் பெறவில்லை.

கோவை நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் 'கோவை' நூல்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. கோவை என்னும் சொல் முறையாகக் கோக்கப்பட்டது என்னும் பொருளைத் தருகிறது. மகாவித்துவான் அவர்கள் மூன்று கோவை நூல்களைப் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

அ. சீகாழிக்கோவை

ஆ. குளத்தூர்க்கோவை

இ. வியாசைக் கோவை - என்பனவாகும். இந்நூல்கள் அனைத்தும் இன்று புகழ்பெற்று விளங்குகின்றன.

"மாலை" நூல்கள்

மகாவித்துவான் அவர்களின் தமிழ்ப்பணிகளில் 'மாலை' இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. ஏழு மாலை இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

1. அகிலாண்ட நாயகி மாலை,
2. சிதம்பரேசர் மாலை
3. சுப்பிரமணிய தேசிகர் மாலை
4. சவராயலு நாயகர் மாலை
5. கற்குடி மாலை
6. சச்சிதானந்த தேசிகர் மாலை
7. சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை - என்பனவாகும்.

உலா நூல்கள்

உலா இலக்கிய நூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. 'உலா இலக்கியம்' சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது ஆகும். உலாவரும் நாயகர்களைப் 'பேதை' முதலான ஏழு வகையான பருவப்பெண்கள் கண்டு இன்பம் அடைவார்கள். அவ்வகையில் மகாவித்துவான் அவர்கள் ஒரு உலா இலக்கியம் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

அ. திருவிடைமருதூ ருலா - என்பதாகும்

பதிற்றுப்பத்தந்தாதி நூல்கள்

மகாவித்துவான் அவர்களின் பதிற்றுப்பத்தந்தாதி இலக்கியங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. பாடல் எண்ணிக்கையால் பெயர் பெற்று விளங்குவது பதிற்றுப்பத்தந்தாதி ஆகும். அவ்வகையில் மகாவித்துவான் அவர்கள் தமிழில் 'ஆறு' பதிற்றுப்பத்தந்தாதி நூல்கள் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

1. பூவாளூர் பதிற்றுப்பத்தந்தாதி,
2. பாலைவனப் பதிற்றுப் பத்தந்தாதி,
3. பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி
4. திருவூறைப் பதிற்றுப் பத்தந்தாதி,
5. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் பதிற்றுப் பத்தந்தாதி,
6. தண்டபாணி பதிற்றுப் பத்தந்தாதி - என்பனவாகும். இவற்றுள் தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி நூல் கிடைக்கப்பெறவில்லை.

பதிக நூல்கள்

பதிகம் என்பது பத்துப்பாடல்களைக் கொண்டு பாடப்படும் சிற்றிலக்கிய இலக்கிய வகையாகும். அவ்வகையில் மகாவித்துவான் அவர்கள் நான்கு

பதிக நூல்களைப் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

1. கச்சி விநாயகர் பதிகம்
2. சுப்பிரமணிய சுவாமிகள் பதிகம்
3. திட்டக்குடிப் பதிகம்
4. மருதவாணர் பதிகம் - என்பனவாகும். இவற்றுள் திட்டக்குடிப் பதிகம் கிடைக்கப்பெறவில்லை.

"திரிபந்தாதி" நூல்கள்

மகாவித்துவான் அவர்கள் யாப்பை அடிப்படையாகக் கொண்டு செய்யுள் இயற்றுவதில் வல்லவர். அவ்வகையில் திரிபந்தாதி நூல்கள் பல இயற்றியுள்ளார். மூன்று திரிபந்தாதி நூல்களைப் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

1. குடந்தைத் திரிபந்தாதி
2. திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி
3. திருவிடைமருதூர்த் திரிபந்தாதி - என்பனவாகும்.

"யமகவந்தாதி" நூல்கள்

மகாவித்துவான் அவர்கள் யமகவந்தாதி பாடுவதில் வல்லவர். அவ்வகையில் மூன்று யமகவந்தாதி இலக்கியம் பாடியுள்ளார். அவை பின்வருமாறு

1. திருச்சிராமலை யமக அந்தாதி
2. திருவாவடுதுறை யமக அந்தாதி
3. தில்லை யமக அந்தாதி - என்பனவாகும்.

வெண்பா அந்தாதி

மகாவித்துவான் அவர்கள் வெண்பா அந்தாதியில் இலக்கியம் படைப்பதில் வல்லவர் ஆவார். இவ்வகையில் ஒரு இலக்கியம் படைத்துள்ளார். இந்நூலும் கிடைக்கப்பெறவில்லை என்பர்.

1. எறும்பீச்சரம் வெண்பா அந்தாதி என்பதாகும்

சிலேடை நூல்

மகாவித்துவான் அவர்களின் செய்யுள் திறனுக்குச் சான்றாக அமைவது அவரது சிலேடை நூல் ஆகும். சிலேடையை மையமாகக் கொண்டு ஒரு நூல் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

1. திருவாவடுதுறை சிலேடை வெண்பா - என்பதாகும்.

மான்மிய நூல்

இலக்கிய உலகில் எண்ணற்ற வகையில் செய்யுட்கள் இயற்றுவதில் வல்லவரான மகாவித்துவான் அவர்கள் "மான்மியம்" என்னும் இலக்கிய வகையையும் படைத்துள்ளார். அவை பின்வருமாறு

1.குருபூசை மான்மியம் - என்ற நூல் சிறப்புக்குரிய படைப்பாகும்.

சரித்திர நூல்கள்

மகாவித்துவான் அவர்கள் மூன்று சரித்திர நூல்களையும் படைத்து உள்ளார். அவை பின்வருமாறு

1. ஆதி குமர குருபர சுவாமிகள் சரித்திரம்
2. சிவஞான யோகிகள் சரித்திரம்
3. மயில் ராவணன் சரித்திரம் - என்பதாகும்.

பிற படைப்புக்கள்

மகாவித்துவான் அவர்கள் பல்வேறு வகையான நிலைகளில் பாடல்கள் இயற்றியுள்ளார். அவற்றைப் பின்வருமாறு பகுத்துக்காட்டலாம்.

1. வாழ்த்து
2. லாலி
3. மங்களம்
4. பொன்னூசல்
5. ஆனந்தக்களிப்பு
6. குருபரம்பரை அகவல்
7. கப்பற்பாட்டு - என்பனவாகப் பகுத்துக் காட்டலாம்.

மேலும், இவையன்றி எண்ணற்ற தனிப்பாடல்களையும் படைத்துள்ளார். இன்னும் அவர்கள் இயற்றிய பல நூல்களின் பெயர்கள் நமக்குத் தெரியவில்லை.

மகாவித்துவான் அவர்கள் தமிழ் மொழியைப் பற்றி உரைத்தவை

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ்மொழியைப் பற்றி பல்வேறு நிலைகளில் புகழ்ந்து கூறியுள்ளார். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

'மூவரும் புகலும் வேதத்தமிழ்'

'முக்கனி அருந்தமிழ்ச் சுவை'

'அமுதத் தீஞ்சொல்'

'இருந்துமுன் சங்கத் தமிழாய்ந்த'

"வானளவும் தோன்ற நின்ற தமிழ்வேதம்"

எனப் பலவாறு புகழ்ந்துள்ளார்.

மகாவித்துவான் அவர்களின் இலக்கியப் பணியும் பாடுபொருளும்

மகாவித்துவான் அவர்களின் தமிழ் இலக்கியப் பணியை நான்கு வகையாகப் பகுத்துக்கூறலாம். அவை பின்வருமாறு

1. மகாவித்துவானின் புராணங்கள்
2. மகாவித்துவானின் சிற்றிலக்கியங்கள்
3. மகாவித்துவானின் தனிப்பாடல்கள்
4. மகாவித்துவானின் சிறப்புப்பாயிரங்கள் - என்பனவாகும்.

மேலும், மகாவித்துவான் அவர்களின் படைப்பிலக்கியங்களில் பாடுபொருளாக அமைந்துள்ளவை பின்வருமாறு

அ. உலகைப்படைத்து இயக்கும் இறைவனைப்பற்றிப் பாடுவது

ஆ. இறைவன் இருக்கும் இடத்திற்குச் சென்று அவன் சிறப்பைப்பாடுவது

இ. சிற்றிலக்கியங்களைப்படைப்பது

ஈ. தமிழில் சைவசமய உண்மைகளைப் பாடலாக்கிக் காட்டுவதும்

தமிழின் சிறப்பை வெள்ளிப்படுத்துவதும் மகாவித்துவான் அவர்களின் பாடுபொருளாக அமைந்துள்ளன எனலாம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் செய்யுட்களை விரைவாகப் பாடும் தனித்தன்மை கொண்டவர் ஆவார். தமிழ் இலக்கிய வரலாற்றில் எண்ணற்ற பாக்களைப் பாடியவரும் இவரே. பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடியவரும் இவரே. "காவிய அமைப்பிற் கம்பராகவும், பக்திச் சுவை பாடுவதில் தெய்வச் சேக்கிழாராகவும், இலக்கணச் செறிவும் சைவாகமக் கருத்துகளும் அமையப்பாடுவதில் மாதவச் சிவஞான சுவாமிகளாகவும், கச்சியப்ப முனிவராகவும், கவிதை ஓட்டத்திலும் எங்கும் தெய்வச்சிந்தனை குறையாமல் அழைத்துச் செல்வதிலும் கச்சியப்ப சிவாசாரியராகவும் விளங்கியவர்" மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என ச. தண்டபாணி தேசிகர் கூறும் கருத்து முற்றிலும் உண்மையேயாகும்.

27. முத்தி தரும் கவி பாடிய புலவர்

பி. கிருஷ்ண மூர்த்தி
மீன்சுருட்டி

தெய்வத் தீந்தமிழில் சிற்றிலக்கியங்கள் பல புனைந்து பெருமை சேர்த்தோருள், பைந்தமிழ் உலகம் பாராட்டும் சீர்மை பெற்றவர் நம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களே. "சேக்கிழார் பிள்ளைத் தமிழ்" என்னும் செவ்விய நூலில் பிள்ளையவர்களின் உளப்பாங்கும், கவிப் புலமையும் சேக்கிழாரின் செந்தமிழ்ச் சிறப்பையும், கவித் திறனையும் பெரிய புராணத்தின் கருத்துப் பிழிவாக இந்நூல் அமைந்தவாற்றையும் உற்று நோக்கி ஆய்வதே இக்கட்டுரையில் நோக்கமாகும்.

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

இந்நூலின் கண் அமைந்த கற்பனையின் அளவு வான்; கவிச்சுவை இன்பத் தேன்; துள்ளும் சந்த நயம் நம் நெஞ்சை அள்ளும் கருத்துக் கருவூலங்கள் செறிந்து நிற்கும்; இடையே பாய்வதோ பக்தி வெள்ளம்; தோன்றி மிளிர்வன சைவ சிந்தாந்த சாத்திர நுண்பொருள்; பண்டைச் சமூக மரபுகள், வரலாறுகள் வெளிப்படும்; திருக்குறள் கருத்துக்களும் பொலிந்து நிற்கும் திருத்தொண்டர் புராண நூலில் உள்ள நயம் யாவும் எடுத்தாளப் பெறும்; சொன்னயம், பொருள் நயம், அணி நயம், இன்ன பிறவும் சான்ற நன்னூல் இச்சேக்கிழார் பிள்ளைத் தமிழ் எனலாம்.

தெய்வச் சேக்கிழார்

காப்புப் பருவத்தில் புதுமையைக் கையாண்டு சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடிய பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இந்நூலில் சேக்கிழார் அவதாரம் செய்த குன்றத்தூரின் சிறப்பு, அவர் தோன்றிய வேளாண் குடிப்பெருமை, அவராற்றிய அமைச்சுப் பணியின் ஆற்றல், தொண்டர் புராணம் பாடிய பான்மை, சேக்கிழாரின் கவிப் பெருமை, புலமை ஆகியவற்றைத் தெள்ளத் தெளிந்த நடையில் துள்ளும் சந்த நயத்துடன் அழகு தமிழில் நமக்கு அளித்துள்ளார்கள்.

சேக்கிழாரைப் பற்றிய சொல்லோவியங்கள்

சேக்கிழார் தம் குலத்துக்குரிய சிறு கோல் (தாற்றுக்கோல்) எடுத்துச் சோழனின் செங்கோலைச் செலுத்திய செம்மாள். சைவப் பயிர் வளர வந்த மேகம். திருத்தொண்டர் சரிதம் என்னும் மழை பெய்த மேகமும் அவரே.

அநபாயச் சோழனுக்குக் கண்மணி, அமைச்சர்களில் தலை சிறந்த சூளாமணி, உத்தமச் சோழப் பல்லவன் என்னும் பட்டம் பெற்ற வானிற் சிறந்த விண்மணி, அடியார் வரலாற்றை விரித்துரை செய்த ஒப்பற்ற சிந்தாமணி

பிற சமயத்தவர் அஞ்சும் ஏறுபோல்வார் தெளிவு முழுமை பெறாதார்க்குக் கொம்புத் தேன், தெளிவு பெற்றமதியினார்க்கு அவர் காமதேனு சீவக சிந்தாமணி என்னும் நூலைப் பொருட்படுத்தாத சிந்தாமணி. அன்பால் நினைவார்க்கு தளரும் போது உதவும் சேமநலநிதி; (எய்ப்பிடை வைப்பு) வற்றாத பக்திக்கடல் கவி வல்லவன் பெரு நாவலன் சகல ஆகம பண்டித தெய்வச் சைவர் அன்பர் அகத்து விரும்பி அமரும் செஞ்சுடர் என்றும் பக்தி ரசம் கனியும் கனி; இவையாவும்

பெரும்புலவர் பிள்ளையவர்கள் தெய்வச் சேக்கிழாரைப் பற்றி நமக்கு வடித்துத் தந்த சொல்லோவியங்களாம்.

இனிப் பிள்ளையவர்களின் கவி நடையில் சேக்கிழாரின் புலமை நலம் எவ்வாறு போற்றப்படுகிறது என்பதைச் சிந்திப்போம்.

நால்வகை ஆசான்

நம்பியாரூரன் நமக்களித்த 'திருத்தொண்டத் தொகை'யினை முதல் நூலாகக் கொண்டும் நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த 'திருத்தொண்டர் திருவந்தாதி' நூலினை வழிநூலாகவும் கொண்டு சேக்கிழார் பெருமான் நமக்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்னும் தீந்தமிழ் நூலினை அருளினார்கள். அதனால் அவர் சிறந்த நூலாசிரியர் என்பதை,

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால்
நன்னூலாசிரியன் (சப்பாணிப்பருவம், பாடல்:9)

என்கிறார். ஞானசம்பந்தர் அருளிய 'வாழ்க அந்தணர்' என்னும் திருப்பாசுரம் 12 பாடல்களுக்குப் பெரிய புராணத்துள் 23 பாடல்களால் விளக்கம் திருஞான தந்துள்ளமையால் நல்ல உரையசிரியர் என்பதை,

நகு பாசுரம் முல் உரை செய்தமையால்
நவில் உரையாசிரியன் (சப். பாடல் -9) என்கிறார்.

பிற சமயத்தில் சார்ந்தவர் அதனின் நீங்கிச் சைவ நெறி சார்ந்து ஒழுகுமாறு, அப்பரடிகள், சம்பந்தர், தண்டியடிகள் புராணங்களில் விரிவாகப் பேசுகின்றார் சேக்கிழார். ஆதலின் அவர் நல்ல போதக ஆசிரியர் ஆகின்றார். மேலும்,

பயனிலதாகும் சிந்தாமணி வழிப் படர்தல்
எனப் போதித்து (தாலப் பருவம்-8)

அநபாயச் சோழனை சிவநெறியில் செம்மைப்படுத்தினார் ஆதலானும் உயர்ந்த போதக ஆசிரியராகிறார் என்னும் கருத்தை,

நீடிய பரசமயக் குழியில் வீழ்ந்தவர்
நீப்பப் போதனை செய் நிலையால்
போதகாசிரியன் என்று சுட்டுகிறார். (சப். பாடல்:9)

சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை என்பதையும் அச்சிவன்பால் சேர்ப்பிக்கும்

திருவைந்தெழுத்தின் சிறப்பையும் சேக்கிழார் பெரிய புராணத்துள்,

அஞ்செழுத்தால் தமைப் பரவும் இசை விரும்பும் கூத்தனார்
(பெ.பு.ஆனாயர்:39)

சித்தம் தெளியச் சிவன் அஞ்செழுத் தோதும்
நித்தம் நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றார்
(பெ.பு.சோமாசி:3)

கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்
வேதப் பயனாம் சைவமும் போல் (பெ.பு.சண்டேசர்:9)

என்பன போன்ற விடங்களில் எடுத்துரைக்கிறார்.

ஆதலால் மேலான ஞானாசிரியன் ஆகிறார் என்று

ஆடிய ஞானத்திறன் உறலால் ஞானாசிரியனும் நீ (சப்:9)

என்று குறிப்பிட்டுச் சேக்கிழாரை நால்வகை ஆசானாக ஆன்றோர் பலராலும் புகழப் படுவதாகப் பராட்டி மகிழ்கின்றார்.

நூலாசிரியனாக விளங்கும் நுண்மான் நுழைபுலம்

திருத்தொண்டர் புராணமானது தொல்காப்பியரின் (திரண தூமாக்னினி) தொல்காப்பியத்தை இலக்கணமாகவும் பக்குவம் அடைந்த அன்பர்கள் நூலைக் கேட்கும் அதிகாரிகளாகவும் பேரின்ப வீடு அடைவதையே பயனாகவும் கொண்டு அருளிச் செய்யப்பட்டது என்று பிள்ளையவர்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றார். (தாலப். பாடல்:6)

இதே கருத்தை, சேக்கிழார் அவதாரம் செய்யாவிடின் உலகில் அன்பு நெறியை அறிதலும் அதனை இன்பத் தமிழில் இயம்புதலும், இயமனை வெல்லுதலும் கைலையில் கணங்களுடன் கூடுதலும் பேரின்பப் பெருவாழ்வை அடைதலும் யாரும் பெற்றிருக்க இயலாது என்றும் கூறுகின்றார். (தாலப். பாடல்:10)

முத்தியாம் சிவமடையச் செய்யும் வழிகாட்டு நூலாகினும் பெரியபுராணம் சிறந்த நூலுக்கான இலக்கணங்களும், நயங்களும் மிளிர்ந்தே விளங்குகிறது என்பது வெள்ளிடைமலை. இதனைப் பெரும் புலவர் பிள்ளையவர்கள்.

'இறுதியடிகளில் முடிபுனைந்தாற்போல மடக்கணியாம் சொல்லணி அமையவும், பொருள் அணிகள் நூல் முழுவதும் பரவிக் கிடக்கவும் சுருங்கச் சொல்லல் முதலான பத்து அழகுகள் பொருந்தவும் அறம், பொருள் இன்பம் என்னும் முதற் பொருள் இன்பம் மூன்றும் மிளிரவும், பொருள் கோள் முதலான இலக்கணங்கள் பொருத்தவும் தொண்டர் புராணம் நவின்றார் சேக்கிழார்' என்று பாடியுள்ளார். (தாலப்.பாடல்:9)

இக்கருத்து யாவும் மெய்ம்மை எப்பதை நாம் பெரிய புராணத்துட்கண்டு மகிழலாம். சான்றாக சில காண்போம். "தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருவாரூர் திருவாரூர்" (மடக்கணி-பெ.பு. திருநாவுக்-பாடல்:12)

அன்பர் தத்தமில் கூடினார்கள் தலையினால்
வணங்கு மா போல் **(தன்மை-உவமை-பெ. பு. திருநாடு-22)**

தட்பர் அருளாமையினால் - அமண் சமயம் குறுகினார்
(ஏது-பெ.பு.திருநாவுக்-37)

முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ
(வேற்றுப் பொருள் வைப்பு-பெ.பு. திருநகர்:47)

கற்பகத்தின் பூப் கொம்போ காமன் தன் பெரு வாழ்வோ
(அதிசயம்-பெ.பு. தடுத்:140)

மேலும் சொன்னயம். பொருள் நயம் தோன்றவும். நூலழகு பொருந்தவும், அமங்கல வார்த்தைகளைக் கூறாமல் பிற நூல்களை வெல்லும் திறனைக்காட்டி விலக்க வேண்டியனவற்றை விலக்கியும், மூல நூலுக்கு (திருத்தொண்டத் தொகை) முரணாகாமலும், அடியார் பெருமையை கல்லும் கரையுமாறு கவி பாடினார் என்றும் சிறப்பிக்கின்றார் (முத்.பாடல்:3).

பெரியபுராணத்தில்,

மாதர் மேல் மனம் போக்கிடக் காதல் மாதனாம்
காட்சியில் கண்ணினார் - கருங்கச் சொல்லல்.

இப்போ திங்கவன் உதவான் **(இறப்பு)**

தான் நினைத்த அப்பரிசே செய்தான் **(கொலை)**

இன்பத்துறையில் எளியர் ஆயினார் **(பரத்தையர் கூட்டம்)**

போன்ற இடங்களில் அமங்கலம் மறைக்கப்பட்டமை படித்துணரலாம்.

வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
என சுந்தரர் கூறிய மூல வரிகளை மாற்றாது

மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது
வென்றார்" என்று சுட்டக் காணலாம்

பக்திக்கவி பாடிய வலவன்

சேக்கிழார் அடியார் வரலாற்றைப் பக்திச்சுவை மிகவும் சொட்டச் சொட்டப் பாடியவர்.

தூய வெண்ணீறு **(பெ.பு.திருநாவுக்:140)**
என வரும் திருநாவுக்கரசர் தோற்றத்திலும்,

ஐந்து பேர் அறிவும் **(பெ.பு.தடுத்:106)**
என வரும் பாடலிலும்,

மன்னிய பக்தி அன்புருவான வாகீசர் **(திருநாவுக்:425)**
என்றவிடத்தில் பிறவிடத்தும் பக்தியின் பரவசத்தைப் பாடியுள்ளார்.

இதையுணர்ந்த பிள்ளையவர்கள்,

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்
பாடிய கவி வலவ (தாலப். 8) என்றும்

பக்தி தரும் கவி
என்று ஆன்றோர் பலரும் பாராட்டுகின்றனர் (சிறு பறை:7) என்றும்

புலஞ்சார் பக்தி விளை நிலமே (முத்:5) என்றும்

ஒழியாப் பக்திக்கடல் வருக (வரு:10) என்றும்

தெய்வம் மணக்கும் செய்யுள் எலாம் (தாலப்:3) என்றும்

நெஞ்சம் கனியக் கனியக் கண்ணீர் வாரக்
கவிபாடிய இறைவ (சப்:8) என்றும்
சேக்கிழாரைப் பிள்ளையவர்கள் பாராட்டி மகிழ்கின்றார்.

முதிரும் அருட்கவி பாடிய புலவன்

திருத்தொண்டர் புராணம் முழுவதும் இறைவனின் அருள் திற வெளிப்பாடே பேசப்படுவதை உணரலாம். அடியார்க்கு எளியனாகிய சிற்றம்பலவன் "உலகெலாம்" என்று அடி எடுத்துருளிச் செய்தார். ஆயினும் அடியார் வரலாற்றை முற்றக் கூறினார் அல்லர். அந்த அம்பலவரே அருளிச் செய்தாற்போல சேக்கிழார் அடியார்தம் வரலாற்றைத் தீட்டினார் என்பதனை,

அவனே உலகறியச் சாற்றியபடியென்ன
அவரவர் செயல்முதல் அருளிய வல்லவ (செங்கீரை:9)
என்று பாராட்டுகின்றார்.

பெரியபுராணம் முழுவதும் சிவமணம் கமழ்வது. இதனை

சிவம் பெருக்கும் திருவாமூர்

முடிவிலாத சிவபோகம் முதிர்ந்து முறுதி விளைந்தது (வெள்:2)

எத்திசையாயினும் அர என்னும் ஓசை போல் (திருநாவுக்.182)

அடியார்க்கு நஞ்சமுதம் ஆவது தான் அற்புதமோ? (திருநா:105)

திருநீற்றை அஞ்செழுத்து ஓதிக் கொடுத்தார் (திருநா:66)

எனவரும் அடிகளால் நாம் அறியலாம்.
எனவே சேக்கிழார் பெருமானை,

சிவமணம் அகலாதே கமழ் முதிரும் அருட்கவி
பாடிய புலவன் (சிறு பறை:6)

என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

மேலும் அடிஎடுத்துத் தந்த அம்பலவாணன், அநபாயச் சோழனும் அவனது பரிவாரங்களும் உடனிருந்தோரும் கேட்குமாறு

"யான் அடி எடுத்தருள சேக்கிழார் பெருமான் எமது அடியார் வரலாறு

முழுமையும் இனிக்கப் பாடியுள்ளார். ஆதலின் யாவரும் விரும்பிக் கேட்பீராக" என்று அசரீரியாக ஒலி தந்து காற்சிலம்பின் ஒலியையும் காட்டியருளினான் என்பர். இதனையே பெரும்புலவர் பிள்ளையவர்கள் இத்தகு இறையருளில் திளைத்த தமிழ்க்கவியினை.

பொங்கு விருப்பில் கேட்குக என்னாப்
பொன் அம்பலவாணர்
பொலி திரு வாக்கூடி ஞெசிழியின் ஒலியோடு
பொற்ப எழுப்ப அருள்
முங்கு தமிழ்க் கவி பாடிய புலவன் (சிறு பறை:10)

என்று எடுத்தாண்டுள்ளார்.

முந்து தமிழ்க்கவி பாடிய புலவன்

இறைவனைக் காண்டற்கு ஏனைய மொழிகளிலும் தமிழே முன்னிற்கும். தூமறை பாடும் வாயால் நம் சுந்தரனை "சொற்றமிழ் பாடுக" என்றார் பரமன்; தண்டமிழின் சுவையைக் கூடிப் பருகும் வேட்கையால் சிவனும், உமையும், முருகனும் மதுரையில் வந்து அவதாரம் செய்தனர் என்பார் குமரகுருபரர். அத்தகைய தமிழில் விருப்பம் கொண்ட அம்பலவன் அடியார் வரலாற்றை அழகு தமிழில் கேட்கும் வேட்கையால் அன்றோ அடியெடுத்து அருளினான்?

கடல் சூழ் புவியிடையிப்
படியார் பெற்றார்? தமிழ் மாண்மியம் எப்
பாடைகளுக்குளது இப்
பாக்கியம் நம் தவம் (தாலப்:7)

என்று பாராட்டி உவகையும் பெருமிதமும் கொள்ளச் செய்கின்றார் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.

கண்ணிற் பொலி செந்தமிழ் மணக்கும் கனிவாய் (முத்தம்:2)

என்றும்

வளம் கூடு செந்தமிழ் அறி சேவையர்
குல சிகாமணி (வருகை:3) என்றும் போற்றிக் களிக்கின்றார்.

சேக்கிழாரின் செந்தமிழ் இறைவனைக் காண்பதற்கு மற்றைய மொழி களினும் முன்னிற்கும் என்பதை,

நிலை பெற யார்க்கும் பெட்கும் விருப்பம் எழ
முந்து தமிழ்க்கவி பாடிய புலவன் என்கின்றார்.

இதே கருத்தினை அருணகிரியாரும் "முந்து தமிழ்மாலை கோடிக் கோடி" என்று கூறுவதால் உணரலாம்.

முத்திதரும் கவி பாடிய புலவன்

திருத்தொண்டர் புராணம் சைவ நெறிச் சாரமாகும். உயிர்கள் இருவினைகளில் இருந்து விடுபட்டு, மும்மலங்களும் (ஆணவம், கன்மம், மாயை) நீங்கப் பெற்று, மீண்டும் பிறவாத சிவனடியாம் செந்நெறி சேர்தல்

வேண்டும் என்பது சைவ சித்தாந்தம் கூறும் உண்மையாம்.

திருத்தொண்டர் புராணத்தினை நன்கு பொருளுணர்ந்து படிப்பவர் இந்நெறி அடைவர் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு முத்தி நெறியடைதற்கான வழிவகைகள் யாவும் சேக்கிழாரால் பலவிடங்களிலும் கூறப்பட்டுள்ளன.

தீவினை என்னும் பாவம் அடியோடு (வேர்) பறிக்கப்பட வேண்டும் என்பதை இளையான்குடி மாற நாயனார் புராணத்துள் கீரை பறித்தார் என்று கூறும் போது,

குழி நிரம்பாத புன்செய்க் குறும் பயிர் தடவிப் பாசப்
பழி முதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்கினார்

என்று குறிக்கின்றார். (பெ.பு.இளை:21)

பிறவிக் கடலில் மும்மலங்களும் அழுத்த உயிர்கள் நல்வினை தீவினை என்னும் இருவினைப் பாசத்தால் (கயிறு) கட்டுண்டு கிடக்கின்றன. அவற்றைக் கரை சேர்ப்பது திருவைந்தெழுத்தாகும். நமசிவாய என்னும் இஃது அப்பரைக் கரைசேர்த்தல் அதிசயமோ? என்று வினவும் வகையில்

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளும் மெய் அஞ்செழுத்தரசை இக்கடல்
ஒருகல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ? (பெ.பு.திருநாவுக்:12)

என்பார். மேலும் சம்பந்தர் புராணத்துள்,

இருவினைப் பொய்ம்மையாம் வல்லிருள் போக்குவர் (பாடல்:830)

பேதித்த பந்தப் பிறப்பின் நெறி பேர்மின் (பாடல்:836)

எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் (பாடல்:847)

என்றும் சேக்கிழார் பேசுவார். பிறவியாற்றில் தொடர்ந்து செல்லாமல் மீண்டும் பிறவா நெறி அடைய முயல வேண்டும். முனிவர்கள் மாதவம் செய்து அதனின்று எதிர்த்து இறைவனடி நோக்கிச் செல்லுமா போல சம்பந்தர் ஏடு எதிர்த்துச் சென்றது என்ற கருத்தை

பிறவி யாற்றில் மாதவர் மனம் சென்றாற் போல் (பாடல்:845)

என்றும் குறிப்பிடுகின்றார்.

இவையாவற்றையும் மனத்துட்கொண்ட பிள்ளையவர்கள் சேக்கிழாரை

முற்றிச் சிவமடைய முயல் வல்லவ (தாலப்.பாடல்:8)

என்று பாராட்டுகின்றார்.

சேக்கிழாரின் வாயிலிருந்து வந்த முழக்கங்கள் யாவும்

ஆன்ற சிவ புண்ணிய முழக்கம் என்றும்,

இனிய திருவருள் முழக்கம் என்றும்,

சிவானு போகப் பேரிரும் பெரு முழக்கம் (சிறுபறை:4)
என்றும் பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்.

உயர் சைவ நிலை எங்கும் திகழ வருகை தந்த சேக்கிழார் நமக்கெல்லாம் ஞானாசிரியன் ஆதலின் அப்பெருமானின் திருவடி, நம்மைச் சிவனடி பால் சேர்ப்பிக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெற்றென விளங்கும். திருநாவுக்கரசு என்னும் பெயரையே சொல்லியும். எழுதியும் அப்பூதியடிகள் முத்தி நெறி பெற்றார் என்பதை நாம் அறிவோம்.

சேக்கிழாரின் திருவடி மும்மலங்களும் அகன்று வலிமை கெட திருவருள் பதியுமாறு வந்து பதியக்கூடிய திருவடி என்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளையும் விளக்கும் திருவடி என்றும் (வருகை:5) போற்றுகின்றார்.

சேக்கிழாரின் கவிதையைப் பலர் பலவாறு பாராட்டுகின்றனர். கடவுளும் மறுபிறப்பும் இல்லை என்று மறுத்து வாதம் செய்பவர்களையும் "உண்டு" என்று சொல்லும்படியாகக் கூறச் செய்யும் "அத்தி தரும் கவி" என்பார் சிலர்.

அணிமா முதலிய எண்வகைச் சித்திகளையும் கைகூடச் செய்யும் "சித்தி தரும் கவி" என்பார் சிலர்.

தீர்த்தங்களில் நீராடினாலும் பெற இயலாத நன்மைகளை நமக்குத் தரக்கூடிய சுத்தி தரும் கவி" என்பார் சிலர். "பக்தி தரும் கவி" என்று பாராட்டுவோர் பலர்.

இவ்வாறு அமைதலினும் மேலாக, கதியடைய வேண்டும் என்று நினைப்பார்க்கு "முத்தி தரும் கவி" என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை கூறிப் பெருமையடைகின்றார்.

கதி பற்றிய பல்லோர்க்கும்
முத்தி தரும் கவி பாடிய புலவன் (சிறு பறை:7)
என்பது அவரது அருள் வாக்காகும்.

பிள்ளையவர்கள் குறித்தவாறு,

செந்தமிழ் மணக்கும் கனிவாயால், நெஞ்சம் கரையக் கண்ணீர் வாரப், பக்திச் சுவை சொட்டப் பாடிய சேக்கிழாரின் செந்தமிழ்ப்பாக்கள் நம்மைச் சிவமடைய அழைத்துச் செல்லும் பான்மையன என்பதை உணர்ந்து பயில்வோம். மீண்டும் பிறவாத பேரின்ப வாழ்வு பெற மொழிந்த முத்தி தரும் கவி பாடிய புலவனின் மொழிகளைப் பொருணர்ந்து படிப்போம். முத்தி நெறி அடைவோம்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (தமிழ் மறை).

28. அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழின் சிறப்புக்கள்

என். கிருஷ்ணன்
நாகர்கோவில்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பல புலவர்களை உருவாக்கித் தந்தது போல பல நூற்களையும் இயற்றியுள்ளார். தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை, போன்ற அனைத்திலும் இலக்கியங்களைப் படைத்துள்ளார். இவர் எழுதிய நூற்களில் 'ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடு தூது', 'ஸ்ரீ அம்பலவாண தேசிகர் கலம்பகம்', 'திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ்', 'சேக்கிழார் பிள்ளைத்தமிழ்', 'திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்' போன்றன முக்கியத்துவம் வாய்ந்தன ஆகும்.

மனிதப் பருவத்தில் குழந்தைப் பருவமே சிறந்தது. குழந்தையின் உள்ளத்தை 'கள்ளங்கொள்ளாப் பிள்ளையுள்ளம்' என்று கூறுவதிலிருந்து குழந்தையின் பெருமையை அறியலாம். "குழந்தையும் கடவுளும் ஒன்றே" என்றும் கூறுவர். எனவே குழந்தைத் தன்மை கடவுளின் தன்மையை ஒத்ததாகும். மக்கள் முருகனையும், கண்ணனையும் குழந்தை உருவத்தில் வைத்து வழிபடுகின்றனர். கோவண ஆண்டியாகக் காட்சி தரும் குழந்தை முருகனும், ஆலிலையின்கண் வளரும் குழந்தை கண்ணனும் எல்லாச் சமயத்தவராலும் போற்றப்படுகின்றது. எனவே மனிதப் பிறவியாயினும், கடவுளாயினும், அவர்களது குழந்தைப் பருவமே சிறப்புடையது.

குழந்தைப் பருவமே மனிதனைப் பண்புடையவனாக்கும் கண்ணாடியாகின்றது. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்ற பழமொழி குழந்தைப் பருவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

உயர்திணையில் குழந்தைப் பருவம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது போன்று அஃறிணையிலும் குழந்தைப் பருவமே சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. இளந்தென்னங்கன்றினைத் 'தென்னம் பிள்ளை' என்றே அழைக்கின்றனர். அது போன்று 'கீரிப்பிள்ளை', 'அணில் பிள்ளை' என்று அழைப்பதையும் காணலாம். எனவே உயர்திணையாயினும், அஃறிணையாயினும் குழந்தைப் பருவமே சிறப்பும், பொலிவும், செம்மையும், செழுமையும் உடையது.

குழந்தைப் பருவம் சிறப்புடையதால் கடவுளைக் குழந்தையாகக் காணும் தன்மை தாய் உள்ளம், அன்புள்ளம் கொண்ட கடவுள் அடியவர்களுக்கு ஏற்பட்டது.

அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே

என்று அடியவர் கடவுளை அன்புருவமாகவே கண்டார்கள். அந்த அன்பிலே கல்லாதார் மனத்து அணுகாக் கடவுள், தேவரும், மறையும் இன்னமும் காணா அந்தத் தேவதேவன் குழவியாக வந்து காட்சி அளிக்கிறான். அந்தக் காட்சியைக் காணும் அன்பர்கள் உள்ளம் உருகிடத் தம்மை மறந்து பாட்டுப் பாடுகின்றார்கள். அத்தகைய பாட்டுக்களே சிற்றிலக்கிய வகையாக உருப்பெற்றுள்ளன.

சைவ சமயத்தார் சிவபெருமானையும், வைணவ சமயத்தார் திருமாலையும் போற்றி வழிபடுகின்றனர். உலகங் கடந்து நிற்கும் கடவுள் மக்களுக்கு எளிமையாகக் காட்சியளித்து பலவித அற்புதங்களைச் செய்துள்ளார். சிவனுடைய விளையாடல்களும், திருமாலின் அவதாரங்களும் அத்தகைய அற்புதங்களே ஆகும். சக்தியாகிய உமாதேவியும், அவளுக்குப் பிள்ளைகளாக உள்ள விநாயகரும், முருகனும் இறைவனுடைய அருள் தோற்றக் கூறுகள் என்று கூறுவர். சிவபெருமானுடன் ஒன்றிக்காணப்படும் சக்தியைப் பிரிக்க முடியாது என்றாலும் அடியவர் அச்சக்தியை அன்னையாகக் கொண்டு போற்றி வழிபடுவர். இவ்வாறு போற்றப்படும் தெய்வ நெறிகளுள்ளே குழந்தையாகப் போற்றும் நெறி ஒரு வகை. அந்த வகையில் அம்மையும், விநாயகரும், முருகனும் குழந்தைப் பருவத்தில் போற்றப் பெறுகின்றனர்.

கடவுள்களேயன்றி, கடவுள் நெறிகாட்டிக் கடவுள் நிலையுற்ற சேக்கிழார் போன்ற மெய்யடியார்களும், கடல் சூழ்ந்த உலகத்தைத் திருமாலெனக் காத்து அருளாட்சி புரியும் குலோத்துங்கன் போன்ற அரசர்களும் கூடக் குழந்தைகளாகப் போற்றப் பெற்றனர். இவ்வாறு கடவுளர்களும் கடவுள் அருள் வழி ஒழுகும் நல்லவர்களும் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களால் போற்றப் பெற்றனர். மக்கள் தம் குழந்தைகளைப் பெருஞ் செல்வமாகப் போற்றி வந்தார்கள்.

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் (குறள்:66)

மனைமாட்சி இல்லாள்கண் இல்ஆயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல் (குறள்:52)

என்று வள்ளுவர் குழந்தைகள் வாழ்வின் செல்வங்களாக உள்ளதாக எடுத்துக்காட்டியுள்ளார்.

ஒருவர் எவ்வளவு செல்வம் பெற்ற போதிலும், உலகத்தை ஆளுகின்ற பலனைப் பெற்ற போதிலும் அவர் குழந்தைகளைப் பெறாவிட்டால் அவரது வாழ்வு சிறக்காது. இதனைப் பாண்டியன் அறிவுடைநம்பி பாடிய புறநானூற்றுப் பாடலாலும் அறிந்து கொள்ளலாம்.

பு.12.

படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கௌவியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழுநாளே (புறம்:188)

மக்கள் வாழ்வில் இன்பம் பயப்பது பிள்ளைச் செல்வமே. இப்பிள்ளைப் பாசத்தின் அடிப்படையில் எழுந்தது பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள், கடவுளைப் பிள்ளையாகக் கருதிப் போற்றும் நெறியில் பல பிள்ளைத்தமிழ் நூல்கள் எழுதப்பட்டன. இப்பாடல்கள் பெரும்பாலும் ஆண் தெய்வங்களையும், பெண் தெய்வங்களையும் அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டன. பெண் தெய்வமான அகிலாண்ட நாயகியை குழந்தையாகச் சிறப்பித்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடியுள்ள 'திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழின்' சிறப்புக்கள் குறித்து இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

2. வாழ்த்துப்பாடல்கள்

பிள்ளைத் தமிழுக்குரிய இலக்கணத்தில் அடங்காத பிற பிள்ளைத்தமிழில் கூறப்படாத பதின்மூன்று பாடல்கள் "திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழில்" முதலில் கூறப்பட்டுள்ளன. சந்தானசாரியர், சமயாசாரியார், சண்டீசர், திருத்தொண்டர்கள் ஆகியோர்களை வாழ்த்தி வணங்கும் நோக்கமாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. காப்புப் பருவத்தில் மற்ற பிள்ளைத்தமிழைப் போலவே, திருமால் முதல் முப்பத்து முக்கோடி தேவர்கள் வரை வாழ்த்தப் பெறுகிறார்கள்.

3. பொருட்சிறப்பு

திருஞான சம்பந்தப் பிள்ளையார் வணக்கத்தில் இடம் பெற்றுள்ள பாடல்கள் பொருட்சிறப்பை உணர்த்துகின்றன.

தீயேறு கைத்தலத் தையரரு ளாற்பொருலில்
  சிரபுர மறைச் செல்வரிற்
சிவபாத விருதயர்த மதலையாய் ஞானந்
  தெலிட்டவுண் டாண் பனையெலாங்
காயேற வரவின்வாய் முள்ளெயிற் றிழிகொடுங்
  கடுவேற விந்த வொருவன்
கடத்திலுயி ரேறவள வன்றிரு மகட்குட்
  களிப்பேற மதுரை நகர்வாய்ப்
பாயேறு மிடையுடை முடைப்பறி தலைச்சமணர்,
  பதறவிடு மேரு கனலிற்,
பைம்பசப் பேறவொடு குடிஞையெதி ரேறலப்
  பதகர்வலி யக்கழுவினிற்
போயேற வினியபதி கம்பாடு மையனடி
  போற்றுவாம் வெண்ணாவலெம்

புண்ணிய விடப்பாக நண்ணிய பிராட்டியைப்
புகழுமெங் கவி தழையவே.

4. கற்பனை

காப்புப் பருவத்தில், அம்மை, இறைவன் செய்த சில தவறுகளை எண்ணி, அவரை மனதில் சிறைப்படுத்தி வைக்கிறாள். இறைவன் செய்த தவறுகளை ஆசிரியர் கூறியிருப்பது கற்பனை நயம் மிக்கது.

(எ.டு):1. இயற்பகை நாயனாருடைய வீட்டிற்கு விட சங்கமத் திருமேனி தாங்கிச் சென்று மனைவியைக் கொடு என்று இரந்து பெற்றது.

2. தென்முகக் கடவுளாக இருந்து மணிவாசகப் பெருமானக்கு அருள் உபதேசம் வழங்கிட குருந்த மரத்தடியில் எழுந்தருளியிருந்த போது இராவணன் மனைவி மண்டோதரி மகப்பேறு வேண்டி பூசை செய்ய அவளுக்கு இறைவன் இன்பம் அளித்தது.

5. இசை இன்பம்

செங்கீரைப் பருவத்தில் தாதியர் குழந்தையை முகமசைத்து ஆடுக என்று பாடும் பாடல்கள் இசை நயம் மிக்கதாக அமைகின்றன.

(எ.டு):பாத சதங்கை புலம்பு சிலம்பு
பதிந்து பொதிந்தாடப்
பால்வளையிரு சுடராகை குயிற்றிய
பல்சுடர் மணியாடக்
காதள வுங்கயல் மோது நறுங்குமிழ்
கதுவிய முத்தாடக்
ககனத்திடை பொலி மின்னலின் மின்னிய
கனவிரி சிகையாடத் . . . . . .
அத்தி வனத்தமர் அர்த்தர் இடத்தவள்
ஆடுக செங்கீரை

6. இயற்கை வர்ணனை

திருவானைக்காவைச் சுற்றி வளம் பொருந்திய வயல்கள் காணப்படுகின்றன. இந்த வயல்களில் காணப்படும் நிகழ்ச்சிகளை ஆசிரியர் வர்ணனையுடன் கூறியிருப்பது பாராட்டுக்குரியது.

(எ.டு): சேற்றில் உள்ள சலஞ்சலம் என்னும் உயர்ந்த சாதிச் சங்குகள், முத்துக்களைச் சொரிகின்றன. அங்கு ஞிமிறு என்னும் வண்டுகள் சப்தத்தை எழுப்புகின்றன. செந்தாமரைப் பூவிலுள்ள வெண்மையான முளைகள் சிந்தித் தெறிக்கின்றன. கருவுற்ற வாளை மீன்கள் நாற்று நட்ட வயலில் குதிக்கின்றன. அதனால் அஞ்சிய கயல்மீன்கள் சேற்றில் சென்று ஒளிக்கின்றன. ஆமைகள் ஆரவாரத்திற்கு அஞ்சி, கால்களையும் வாலையும் தலையையும் ஓட்டிற்குள் மறைத்துக் கொள்கின்றன. வரால் மீன்கள் தண்ணீரில் புரள்கின்றன. செவ்வல்லிப் பூக்கள் உழுபடைச் சாலின் வாயில் அரைபட்டன. உழவர்கள் உழவு மாட்டை ஓட்டுகின்ற பேரொலியைக் கேட்க முடியாமல் தேவர்கள் காதைப் பொத்திக் கொள்கிறார்கள்.

7. அம்மை அம்புலி ஒப்பீடு

அம்புலிப் பருவத்தில் அம்மைக்கும் அம்புலிக்கும் ஒப்புமைக்

கூறப்பட்டுள்ளது சிறப்புக்குரியது.

7.1 அம்மையும் அம்புலியும் கடலில் உதித்தவர்கள். அம்மை, புன்னைப் பூக்கள் நிறைந்த நீண்ட கிளையிலே வந்து மோதிப் பொருகின்ற கடலிலே வலைமகளாக அவதரித்தவள். அம்புலியும் அத்தகைய கடலில் தோன்றியவன்.

7.2 இருவரும் தக்கனுக்கு உறவாய் இருந்து பின் அவரைப் பகைத்தவர்கள். அம்மை, மிக அற்பமான அறிவு படைத்த தக்கனக்கு மகளாய்ப் பிறந்து பின்னர் பகைமை பூண்டவள். அம்புலி மிக அற்பமான இளமதியாய்த் தக்கன் மகள் இருபத்து எழுவரை மணந்து மருமகனாய் உறவு கொண்டு, பின்னர் பகைமை கொண்டான்.

7.3 இருவரும் செந்தாமரை வாட முகங் காட்டுபவர்கள். அம்மை, திருமகளாகிய நப்பின்னைப் பிராட்டியார் வாழ்கின்ற செந்தாமரைக் கோயிலானது தன் ஒளி கெடத் தனது ஒளி பொருந்திய திருமுகத்தைக் காட்டுபவள். அம்புலி செந்தாமரை குவியும்படித் தோன்றுபவன்.

7.4 இருவரும் மாதிரந் தவழ வருபவர்கள். அம்மை இமயமலையில் தவழ்ந்து வருபவள். அம்புலி மேருமலையைச் சுற்றி வருபவன்.

7.5 இருவரும் கங்கையை கலக்குபவர்கள். அம்மை இறைவன் திருமுடிக்கண் உள்ள கங்காதேவி அஞ்சும்படிக் கலக்குபவள். அம்புலியும் கங்காதேவி அஞ்சும்படிச் செய்பவன்.

7.6 இருவரும் பாண்டியர் குலம் செழிக்க வருபவர்கள். அம்மை, பாண்டிய குலத்து தடாதகைப் பிராட்டியராய்த் தோன்றி அனைவரும் புகழ வருபவள். அம்புலியும் பாண்டியர் குல முதல்வனாய்ப் புகழ வருபவன்.

8. முடிவுரை

பிள்ளைப் பாசத்தின் அடிப்படையில் தோன்றியதே பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 'திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழ்', 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்', 'திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்' போன்ற பிள்ளைத்தமிழ் நூற்களைப் படைத்துள்ளார். 'திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்' பிற பிள்ளைத்தமிழ் நூற்களை விட வேறுபாடு மிகுந்தது. நூலின் தொடக்கத்தில் சந்தானாசாரியர், சமயாசாரியார், சண்டீசர், திருத்தொண்டர்கள் ஆகியோர்களை வாழ்த்தி வணங்கும் பதின்மூன்று பாடல்கள் அமைந்துள்ளன. கற்பனை நயம்மிக்கப் பாடல்கள் மிகுதியாக உள்ளன. பாடல்கள் ஓசை நயம் உடையவை. திருவானைக்காவைச் சுற்றிக் காணப்படும் வயல் வெளிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் இயற்கை வர்ணனையோடு எழுதப்பட்டுள்ளன. அகிலாண்ட நாயகி அம்மையையும், அம்புலியையும், சிறப்பாக ஒப்புமைப்படுத்திப் பாடியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

29.திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
கோவை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையற்ற சைவப்பெருங்கவிஞர், தமிழ்த் தாத்தாவை உருவாக்கி வழங்கிய பெருவள்ளல் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மீது சிரவையாதீனம் இரண்டாவது குருமுதல்வர் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் பேரீடுபாடு கொண்டவர். அவர்களை வாழ்த்தி ஒரு பதிகம் இயற்றியுள்ளார். அதில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல் மிகச் சுவையானது.

இசைகொள்மீ னாட்சி, சுந்தரம், பிள்ளை
　　என்பவர் மூவரும் மகிமை
திசைகொள்சீர்ப் பாண்டி ஒன்றினை ஆட்சி
　　செய்தனர் ஒருவன் நீ முப்பேர்
நசைகொளத் தாங்கி ஆங்கதற் கேற்ப
　　நாடொரு மூன்றிலும் என்றும்
மிசைகொள்சீர் பெற்று வேந்தரில் புலவர்
　　மேல்எனல் விளக்கினை மாதோ.

மீனாட்சி என்னும் அங்கயற்கண்ணி. சுந்தரம் என்னும் சோமசுந்தரர், இவர்களின் பிள்ளை ஆகிய உக்ரகுமாரபாண்டியன் ஆகிய மூவரும் ஒரு பாண்டிநாட்டை ஒருவர்பின் ஒருவராக ஆண்டனர். அந்த மூன்று திருநாமங்களையும் ஒருசேரப்பெற்ற நீர் சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றிலும் ஒரே சமயத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கி மன்னவர்களைவிடக் கவிஞர்கள் உயர்ந்தவர்கள் என்பதை மெய்ப்பித்துவிட்டீர்கள் என்பது இதன் கருத்து. இவ்வாறு எம் பரமகுருநாதரால் போற்றபெற்ற கவிஞர்பெருமானைப் பற்றிச் சிந்திப்பதில் பேருவகை கொள்கிறோம்.

மகாவித்துவான் அவர்களின் வாக்காக இன்று கிடைப்பன மொத்தம் எட்டு பிள்ளைத்தமிழ்கள் அவற்றில் ஐந்து அம்மையைப் போற்றுகின்ற பெண்பால் பிள்ளைத்தமிழ் இரண்டு குருநாதரைப் புகழ்பவை ஒன்று முருகப்பெருமான்மேல் அமைந்தது. அந்த திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்ப்பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மகாவித்துவான் அவர்களால் முதன்முதலாக இயற்றப்பெற்ற பிள்ளைத்தமிழ் கோவை அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ். பெரும்பாலும் இது அவருடைய இருபத்தேழாவது வயதில் இயற்றப்பட்டிருக்கலாம். இதைச் சுவைத்த மழவை மகாலிங்கையரே,

தருமைவளர் குமரகுரு முனிவன் கல்வி
சார்பகழிக் கூத்தன்எனத் தரணி யோர்சொல்
இருவருமே நன்குபிள்ளைத் தமிழைச் செய்தற்கு
எற்றவர்என் றிடும் உரைவெந் நிட்ட தம்மா

எனப் பாராட்டினார். இதற்குப்பிறகு பல பிள்ளைத்தமிழ், கோவை, கலம்பகம், தலபுராணங்களைப் பாடி மெருகேறிய பிறகு 1860ஆம் ஆண்டில் - கவிஞர்பெருமானின் 45ஆம் வயதில் - இயற்றப்பெற்றது திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்.

இந்தப் பிரபந்தத்தைப் பற்றி டாக்டர். அய்யர் அவர்கள், "ரௌத்திரி வருஷம் திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழை இவர் இயற்றினார். அதனை ஆக்குவித்தோர் அந்த "ஸ்தலத்திலிருந்த கார்காத்த வேளாளப் பிரபுவாகிய சுப்பராய பிள்ளை என்பவர்" எனச் சொல்லிவிட்டு, இதன் அரங்கேற்றத் தொடக்கத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலின் காப்புப் பருவத்திற்குமுன் விநாயகர் வணக்கமாக ஒரு பாடல் உள்ளது. அதில் அருமையான கற்பனை ஒன்று இடம்பெற்றுள்ளது. சிவபெருமான் வில்லாக வளைக்க மேருமலையைப் பெயர்த்தெடுத்தார். பக்கத்திலிருந்த விநாயகரின் பார்வைக்கு அம்மலை ஒரு மாம்பழம் போலக் காட்சியளித்ததாம். அதனை உண்ணலாம் எனக் கருதித் தந்தையின் கையிலிருந்து பறித்து நோக்கினாராம். அதன் ஒரு பக்கத்தில் அம்மையின் பச்சை நிறமும், மறுபுறம் அத்தனின் செம்மை நிறமும் பிரதிபலித்ததாம். அதனால் அந்த மாம்பழம் முற்றிலும் பழுக்காத காய் வெட்டானது எனக் கருதித் தூர எறிந்துவிட்டாராம். மேருமலையை மாம்பழமாகச் சிறுகச் செய்யும் சிவபெருமானின் பேருருவம், அவர் கையிலிருந்த அநாயாசமாக மலையைப் பறிக்கும் விநாயகரின் பேராற்றல், மேருமலையில் பிரதிபலிக்கும் மாதொருபாகனின் உருவம் அதனைப் பசுமையும் செம்மையுமாக காட்டும் விந்தை என இவ்வளவு கருத்துக்களும் இந்த ஒரு கற்பனையில் அடங்கியிருப்பதைப் பார்த்து வியக்கிறோம். இத்தகைய விநாயகரின் திருவடிகளை இப்பிள்ளைத்தமிழ் இலக்கியம் இனிது நிறைவேறும் பொருட்டு வணங்குவாம் எனச் செய்யுள் முற்றுப்பெறுகிறது.

நீர்கொண்ட செஞ்சடைப் பெருமான் வளைக்க ஒரு
　　நெடியமால் வரைஎடுக்க
நிறைசுவைப் பழையமாங் கனிபோல்வ தென்றுளம்
　　நினைந்தது பறித்துநோக்கிச்
சீர்கொண்ட ஒருபால் கறுத்தும் மற்றொருபால்
　　சிவத்தலால் முற்றும்பழாச்
செங்காய்என எப்புறத் தெறியும்ஒரு குஞ்சரச்
　　செம்சரணை அஞ்சலிப்பாம்.

மகாவித்துவான் அவர்கள் இந்த முதல் பாட்டிலேயே துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளை நினைவூட்டுகிறார் அல்லவா காப்புப் பருவத்தின்

நான்முகன் காப்பில், "மும்முகத் தொருவன் அருள் நான்முகக் கடவுள் ஐம்முகத்தொருவன் அருள் அறுமுகக்கடவுளைக் காக்க" என்பது சிறப்பாக உள்ளது.

ஆறு சமயங்களுக்கும், மூலாதாரம் முதலிய ஆதாரங்கள் ஆறினுக்கும், மந்திரம் வர்ணம் பதம் தத்துவம் புவனம் கலை என்னும் அத்துவாக்கள் ஆறற்கும் முருகப்பெருமானே முதலானவர் எனத் தெளிவாகக் கூறிக் கௌமார பரத்துவத்தை நிலைநாட்டுகிறார்.

ஆட்டும் சமயம் ஆறினுக்கும் ஆதா ரங்கள் ஆறினுக்கும்
அத்து வாஒர் ஆறினுக்கும் அமையும் தானே முதல் என்று
தீட்டும் படியா வரும்தெளியத் தெளித்தர்ங் காறு முகம்திகழச்
செல்வம் மலியும் இடைக்கழிவாழ் சேய் (காப்பு: 9)

தாலப் பருவத்தில் மருதநில வளத்தைப் பாடும்போது மகாவித்துவானுக்குக் கவிச்சக்ரவர்த்தி கம்பநாடனின் நினைவு வந்து விடுகிறது. கம்ப சூத்திரம் விரிவான ஒவியமாகிறது.

கால்பாய் தடத்தின் அகம்படிந்த கயவாய்ச் செங்கட் கருமேதி
கறித்துப் பலவூக் குதட்டிஇளம் கன்றை நினைந்து பொழிதருதீம்
பால்பாய் கழனிப் பரப்பெங்கும் பாட்டுச் சுரும்பு விரும்புநெடும்
பைந்தாட் செந்தா மரையாதிப் பன்மா மலரும் படுசுவைச் சாறு
ஒல்பாய் கரும்பும் அரும்புசெறி ஒண்பூங் கொடியும் மாங்குயிலும்
ஓங்கும் மருதப் பூங்கிளியும் உறுதற் கேற்ப எழுந்துபல
சேல்பாய் வளமை இடைக்கழிவாழ் செல்வா தாலோ தாலேலோ
செழுநான் மறைஒ லிடும்கருணைத் தேவா தாலோ தாலேலோ
(தால்:3)

தீவிர தர சத்திநிபாதம் பெற்றவர்களின் மலங்களாகிய பேரிருளை இறைவன் நீக்குவான் என்னும் சைவ சித்தாந்தக் கருத்தை, "எண்ணிய சத்தி பதிந்தவர் மும்மல இருள்அற எழுகதிரே" (தால்:6) என முருகப் பெருமான் மேலேற்றிக் கூறி ஐந்துமுகச் சிவனுக்கும் ஆறுமுகப்பெம்மானுக்கும் பேதம் இல்லை என நிறுவுகிறார்.

சிவபெருமான் கல்லால மரத்தடியில் அமர்ந்து சனகாதி நால்வருக்கு மட்டுமே பிறவிப்பிணியைத் தீர்த்தருளினார். ஆனால் முருகக்கடவுளோ திருவிடைக்கழியில் குரா மரத்தடியில் அமர்ந்து மூவுலகவாசிகள் எல்லோருடைய பிறவியையும் தொலைத்துப் பெரும்புகழ் படைத்து விளங்குகிறார் எனக் காவியச்சுவைபடச் சப்பாணிப் பருவத்தில்(1) கூறுகிறார்.

சூரனை அட்ட போர்க்களத்தை வருணிக்கும்போது நமக்கு ஒரு பரணிப் பிரபந்தத்தைப் பயில்வதுபோலத் தோன்றுகிறது. பிள்ளைத்தமிழிற்குள் பரணி இதோ

மால்வரை மறைக்கும் வெங் கேடகப் பரிகலம்
மறித்துத் திருத்திவிண்ட
மண்டை முழையின்மொண்டு மூளைப் பெரும் சோறு
வாரிப் படைத்து, மீது
பால்படு நிணப்பருப் பிட்டிழுது சொட்டும்
பசும்தடிக் கறிபடைத்து,
பாவுநெய்த் தோர்நெய்யும் வாக்கிப்பல் பெண்பேய்
பரிந்துப சரிப்ப, ஆண்பேய்
எல்வகை அருந்தி, "உடல்முற்றும் வயிறாகமுன்
இயற்றிலன் இயற்றினான்" என்று
எள்ளிவையக் கருந் தருவர்செறி போர்க்களத்து
இளவேறெ னப்பொலிந்து
சால்புடைய வெஞ்சிலை வளைத்தகை முகிழ்த்தைய
சப்பாணி கொட்டியருளே. (4)

(கேடகம்-எதிரிகளின் அடிகளைத் தாங்கும் தடுப்புக்கருவி, கேடயம். பரிகலம்-சமையல் பாத்திரம், மண்டை-கபாலம், முழை-அகப்பை, நிண பருப்பு இட்டு-கொழுப்பாகிய பருப்பைப் போட்டு. இழுது-நிணநீர். தடிக்கறி-மாமிசமாகிய கறியமுது. நெய்த்தோர்-இரத்தம். இயற்றினான்-பிரமன். கரும் தருவர்-கருநிறமுடைய அரக்கராகிய பகைவர். இள ஏறு. சிலை-வில். முகிழ்த்து-குவித்து).

முருகப் பெருமானாகிய குழந்தைக்குத் தலைமுதல் கால்வரை பற்பல அணிகலன்களை அணிவித்து, தளர்நடை நடந்து. வருமாறு வருத்தியழைத்து, அழகுபார்த்து, அகம் மகிழ்கிறார் மகாவித்துவான் அவர்கள்.

ஏர்கொண்ட நெற்றியில் சுட்டியும் பட்டமும்
எழில் காட்ட இட்டபொட்டும்
எட்டுத் திசைக்கும் ஒளி விட்டுப் பரப்பும்விலை
இல்லா மணிக்குழைகளும்
தார்கொண்ட ஐம்படையும் மொய்ம்படையும் வலயமும்
சாற்றும்முன் கைக்கடகமும்
தாவாம தாணியும் இளங்கதிர் விளங்கஒளி
தழைமுரல் நிலவெறிப்பப்
பார்கொண்ட சிற்றடி புலம்பும் சிலம்பும்
பருஉமணிப் பொற்றண்டையும்
பரவும் சதங்கையும் கிண்கிணியும் மண்குளிர்
படைப்பக் கலின்கலின்எனச்
சீர்கொண்ட மறைமுழுமையும் தொடர்ந்தோலிடச்
சிவபிரான் மகன்வருகவே
செந்தமிழ் மணம்தழை நடைக்கழி இடைக்கழித்
தெய்வநாயகன் வருகவே (வாரானை:1)

(குழை-காதணி. மொய்ம்பு அடையும்-மார்பில் பொருத்தும். தாவா-அசைகின்ற. மதாணி-பதக்கம். மூரல்-பல். பரூஉ-பெரிய. ஒலிட-ஒலிக்க).

பரம்பொருளின் குருத்துவமே கௌமாரம் என வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தெளிவாக அருளியுள்ளார். திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழின் அம்புலிப்பருவத்தில் மகாவித்வான் முருகப்பெருமானின் ஞானாசாரியத்தன்மையை,

பாராய் தரப்பொலியும் வேதாக மங்கள் நனி
பகர்குறி குணம்கடந்து
பரநாத பரவிந்துவும் கடந்தோங்கொளி
பரப்பி ஒளிர் பரமயோகி
சீராய் முடித்தலை வணங்காமெய்ஞ் ஞானோப
தேசம்முன்செய்தசைவத்
தெய்வ ஞானாசாரியன் காண் இவன் (5)

என விரிவாக விளக்குகிறார்.

பெண்கள் சிறுவீடு கட்டி விளையாடுகின்றனர். குறும்புக்கார முருகன் அவற்றையெல்லாம் தன் கால்களால் சிதைத்து அழித்துவிடுகிறான். அதனால் அவர்கள் அவனிடம் தம் சிற்றிலைச் சிதைக்கவேண்டாம் எனப் பற்பல விதமாக மன்றாடிக் கேட்டுக் கொள்கிறார்கள். "உமாதேவி உன்னைக் குளிப்பாட்டி அலங்கரித்துத் தெருவில் உலவ விட்டது எங்கள் சிற்றிலைச் சிதைப்பதற்கோ? உன் திருவடிகளில் புழுதிபட்டால் அவளால் தாங்க முடியுமோ? எற்றுபுனலிற் கழுவு புவனப்பழங்கலம் எடுத்தடுக்கிப் புதுக்கூழ் இன்னமுதம் சமைத்து பன்முறை இழைத்த அம்மையின் மைந்தனாகிய நீ எம் சிற்றிலைச் சிதைத்தல் அறமோ?" என்றெல்லாம் கெஞ்சுகின்றனர். ஆனால் பயன் இல்லை.

இதனால் மனம்உடைந்த அச்சிறுமிகள் முருகனை நோக்கி, "சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாக இருந்த உன்னைப் பார்வதி எடுத்து ஓர் உருவமாகச் செய்தபோது ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் அமைந்தன. நல்ல காலமாகப் பன்னிரண்டு கால்கள் அமையவில்லை. இரண்டு கால்கள் இருக்கும்போதே இவ்வளவு தொல்லை கொடுக்கிறாயே?" என்கின்றனர்.

நையா நின்ற சிறுமருங்குல் நங்கை உமையாள் பரமனொடும்
நறுநீர்ப் பொய்கைத் தடங்கரைவாய் நண்ணி முகமா றினுக்கேற்பக்
கையா றிரண்டு புரிந்ததுபோல் கால்ஆ றிரண்டு செய்யாது
கருதி இரண்டே செய்தனள்முற் கடையேம் செய்த நல்வினையால்
மெய்யா யிரண்டாய் இருந்தும்அவை விளைக்கும் குறும்பு பொறுக்கரிதா
விளைந்த தினியாம் செயல்என்னே? (சிற்றில்:9)

இத்தகைய பாடல்கள் இலக்கியச் சுவை மிகுந்து விளங்குகின்றன.

முருகப் பெருமானாகிய சிறு குழந்தையைச் சிவபிரான்

எடுத்துக்கொண்டுள்ளார். அவர் கையில் உள்ள உடுக்கையைச் சிறு தடி கொண்டு அடித்து ஒலி எழுப்ப வேண்டும் எனக் கருதிய முருகன் ஒரு தடியைத் தேடுகிறார். அவர் கண்களில் தந்தையின் சடையிலுள்ள பிறைச்சந்திரன் படுகிறது. அதனைப் பறை அடிக்கும் கோலாகிய குணில் என எண்ணிப் பற்றி இழுத்து உடுக்கையை அடிக்கிறாராம், இதனைப் பார்த்த எல்லோருடைய நெஞ்சும் திடுக்கிடுகிறதாம். இவ்வாறு திருவிளையாட்டியற்றிய பெருமானே; சிறுபறை முழக்குவாயாக என வேண்டுகிறார் கவிஞர்பெருமான்.

எந்தை பிரான்ஒரு கைக்கண் தமருகம்
இதுபறை; குணில்மேயது
எவ்விடம் என்று சடாடவி தேடி,
இலங்கும் இளம்பிறையை
நிந்தை இலாக்குணில் என்றுகை கொண்டு
நெடும்புவ னம்பலவும்
நெஞ்சு துணுக்கென, வெற்றி முழக்கம்
நிகழ்ந்து நிகழ்ச்சியனே! (சிறுபறை.6)

(தமருகம்-உடுக்கை. குணில்-பறையடிக்கும் கோல்) எவ்வளவு பொருத்தமான கற்பனை!).

இந்தக் கற்பனை சிறுதேர்ப் பருவத்தில் வேறோரு வடிவம் பெறுகிறது. குணிலைத் தேடும் முருகப்பெருமான் அருகே விளையாடிக்கொண்டிருக்கும் விநாயகரின் கையிலுள்ள ஒற்றைக் கொம்பைப் பார்க்கிறார். இது சரியாக இருக்கும் எனக் கருதி அந்தக் கொம்பைப் பிடுங்குகிறார். விநாயகர் விட்டு விடுவாரா? அவரும் எதிரே இழுக்கிறார். கலகம் மூள்கிறது. அன்னை பார்வதி வந்து சடையிலுள்ள பிறையை எடுத்த முருகனிடம் கொடுத்துச் சமாதானம் செய்கிறார். இந்த அழகான கற்பனை நமக்குச் சிவப்பிரகாசரை மீண்டும் நினைவூட்டுகிறதன்றோ?

ஆக்கும் பெருந்தொழில் அமைந்தஒரு தமருகம்
அவாவுபறை என்றுளம்கொண்டு,
அன்னதை அடித்திடக் கைக்கொளும் குணில்தேடி,
அருகுவிளை யாடிநின்ற
தாக்கும் திறல்களிற் றொருகர தலக்கோடு
தனைஉறப் பற்றி, ஈர்க்கத்
தவாவலி கொள்அக்களிறும் எதிர்பற்றி ஈர்க்கத்
தழைத்திடு கலாம்உணர்ந்து,
வாக்கும் சுவைத்தேறல் மாலைக் குழல்த்தாய்
வயங்குற நடுப்புகுந்து
மறைஓதி மம்தேடு வேணிப் பிறைக்குணில்
வயங்கக் கொடுக்கஉவ்கை
தேக்கும் திறல்க்குக! விடைக்கழி யுடைக்குழக!
சிறுதேர் உருட்டியருளே! (சிறுதேர்.4)

இத்தகைய இலக்கியச்சுவை மிக்க கற்பனைகளும், கற்போருக்குக் களிப்பூட்டும் கனிதமிழ்ச் சொல்லாட்சிகளும், இன்பம் தரும் இயற்கை வர்ணனைகளும், பல புராண வரலாற்றுச் செய்திகளும் நிறைந்து, திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ் தமிழில் உள்ள மிகச் சிறந்த ஒரு சில பிள்ளைத்தமிழ் நூல்களில் முன்வரிசையில் இடம்பெற்றுத் திகழ்கிறது.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் அமுத வாக்காக முருகப் பெருமான் பற்றி இன்று கிடைக்கும் சிற்றிலக்கியங்கள் இரண்டு மட்டுமே. இப்பிள்ளைத் தமிழும் திருத்துருத்திச் சுப்பிரமணியர் பதிகமும் அவை. அது பத்து இரட்டையாசிரிய விருத்தங்களானியன்றதொரு சிறுநூல்; எனினும் பக்திச்சுவையும் தமிழ்ச்சுவையும் மிக்க சிற்றிலக்கியம்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு மிக நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ள திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்மிழ் இறையன்பர்களுக்கு மட்டும் அல்லாமல் தமிழ்ச் சுவைஞர்களுக்கும் தலைசிறந்த இலக்கிய விருந்தாக அமைந்துள்ளது என்பது ஒருதலை.

தேனாட்சிக் கொன்றைச் சிவபெருமான் தாள்மறவா
மீனாட்சி சுந்தரனாம் மேன்மைஉளான்-வேனாட்சி
திண்டமிழே எய்தச்செய் சாமிநா தற்றந்தோன்
விண்டகவி சுற்க விழை.

30. அகிலாண்ட நாயகி மாலையில் மெய்ம்மயக்கம்

ச.குமார்
திருவனந்தபுரம்

'திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை' நூலில் பயின்று வரும் மெய்ம்மயக்கத்தைப் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

மெய்கள் ஒன்றோடொன்று தம்முள் இணைவது மெய்ம்மயக்கம் ஆகும். இது வேற்றுநிலை மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம்மயக்கம் என இருவகைப்படும். மெய்கள் சொல் முதலில் இணைந்து வருவதை மொழிமுதல் மெய்ம்மயக்கம் என்றும், சொல்லிறுதியில் இணைந்து வருவதனை மொழியிறுதி மெய்ம்மயக்கம் என்றும் சொல்லிடையில் வருவன இடைநிலை மெய்ம்மயக்கம் என்றும் கூறுவர். திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலையில் முற்சுட்டிய இருகூறுகளும் அமையவில்லை.

இங்கு ஒலிகளின் வருகை முறையை அடிப்படையாகக் கொண்டு சொற்களின் இடையே இருமெய்களும், மூன்று மெய்களும் இணைந்து வரும் கூறுகள் தரப்படுகின்றன. இரு மெய்கள் இணைந்து வரும் (ஒத்த, வேறுபட்ட) தன்மை இங்கு நான்காக வகை செய்யப்பட்டுள்ளது.

1. இரட்டிப்பு மெய்களின் வருகை (C1C1)
2. வேறுபட்ட இருமெய்களின் வருகை (C1C2)
3. வேறுபட்ட மெய்யுடன் ஒத்த இரு மெய்களின் வருகை (C1C2C2)
4. வேறுபட்ட மும்மெய்யிணைகளின் வருகை (C1C2C3)

1. இரட்டிப்பு மெய்களின் வருகை (C1 C1)

இரு ஒத்த மெய்களின் வருகையை இரட்டிப்பு மெய்யிணைகள் என்பர். இவை வெடிப்பொலி, மூக்கொலி, மருங்கொலி, அரையுயிர் ஆகியவற்றுடன் வரும் தன்மைகள் தரப்படுகின்றன.

வெடிப்பொலிகள்

வெடிப்பொலிகளை அடைப்பொலிகள் என்றும் கூறுவர். இங்கு வெடிப்பொலிகளின் இரட்டிப்பு வருகை நிலை தரப்படுகிறது.

எ.டு: அடக்கம்(க்க்), அருச்சனை(ச்ச்), ஊட்டி(ட்ட்), அமைத்து(த்த்), ஒப்பு(ப்ப்), அகற்றி(ற்றி)

மூக்கொலிகள்

ஒரு மொழியில் அடைப்பான்களின் எண்ணிக்கைக்கும் குறைவாகவே மூக்கொலிகள் காணப்படுகின்றன. இங்கு மூக்கொலிகளின் இரட்டித்த வருகை நிலை தரப்படுகிறது.

எ.டு: அங்ஙனம்(ங்ங்), அண்ணல்(ண்ண்), அம்ம(ம்ம்), அன்னம்(ன்ன்).

மருங்கொலிகள்

மருங்கொலிகளான ல,ள என்பனவற்றைப் பரிவளியொலிகள் என்றும் கூறுவர். இங்கு மருங்கொலிகளின் இரட்டிப்பு வருகை நிலை தரப்படுகிறது.

எ-டு: அல்லன்(ல்ல்), எள்ளி(ள்ள்)

அரையுயிர்கள்

தமிழ் மொழியில் யகரத்தையும் வகரத்தையும் அரையுயிர்கள் என்பர். இங்கு அரையுயிர்களின் இரட்டிப்பு வருகை நிலை தரப்படுகிறது.

எ-டு: செய்ய(ய்ய்), அவ்வாறு(வ்வ்)

2. வேறுபட்ட இருமெய்யிணைகளின் வருகை (C1C2)

இப்பிரிவில் இரு வேறுபட்ட மெய்கள் இணைந்து வருகின்றன. இவை வெடிப்பொலி, மூக்கொலி, மருங்கொலி, அரையுயிர், வருடொலி ஆகியவற்றுடன் வரும் நிலைகள் தரப்பட்டுள்ளன.

வெடிப்பொலிகள்

எ-டு: கேட்க(ட்க்), ஏற்ப(ற்ப்)

மூக்கொலிகள்

எ-டு: அங்குச(ங்க்), அஞ்சு(ஞ்ச்) அகிலாண்ட(ண்ட்), காண்பான்(ண்ப்), உண்மை(ண்ம்), அடைந்த(ந்த்), அம்பலம்(ம்ப்), நன்கு(ன்க்), அன்பு(ன்ப்), தன்மை(ன்ம்), அன்றி(ன்ற்).

மருங்கொலிகள்

எ-டு: அல்குல்(ல்க்), கல்வி(ல்வ்),வாழ்பவர்(ழ்ப்), புகழ்வேன்(ழ்வ்).

அரையுயிர்

எ-டு: செய்தனன்(ய்த்), மெய்மை(ய்ம்)உய்வேன் (ய்வ்)

வருடொலி

எ-டு: உணர்குவன் (ர்க்), அமிர்த (ர்த்), மார்பன் (ர்ப்), அதிர்வு (ர்வ்)

வேறுபட்ட இரு மெய்யிணைகளின் வருகையில் 'க்', 'ப்' என்ற இரண்டாவது மெய்யிணைகளே அதிகமாக வந்துள்ளன.

3. வேறுபட்ட மெய்யுடன் ஒத்த இரு மெய்களின் வருகை (C1C2C2)

இப்பிரிவில் ஒரு மெய்யுடன் மாறுபட்ட ஒத்த இரு மெய்யொலிகளின் வருகை தரப்படுகிறது. இவை அரையுயிர், வருடொலி ஆகியவற்றுடன் மட்டுமே வருகின்றன.

அரையுயிர்

எ-டு: காய்க்க (ய்க்க்).

வருடொலி

எ-டு: மலர்ச்சி (ர்ச்ச்), உணர்த்த (ர்த்த்), வளர்ப் (ர்ப்ப்)

4. வேறுபட்ட மும்மெய்யிணைகளின் வருகை (C1C2C3)

இப்பிரிவில் மூன்று வேறுபட்ட மெய்கள் இணைந்து வருகின்ற தன்மை தரப்படுகிறது. இவை மருங்கொலி, அரையுயிர், வருடொலி ஆகியவற்றுடன் வரும் தன்மைகள் தரப்பட்டுள்ளன.

மருங்கொலி
எ-டு: அகழ்ந்த (ழ்ந்த்)

அரையுயிர்
எ-டு: வாய்ந்து (ய்ந்த்)

வருடொலி
எ-டு: அடர்ந்து (ர்ந்த்).

இரட்டிப்பு மெய்களின் வருகையில் வருடொலி இடம்பெறவில்லை. வேறுபட்ட இரு மெய்களின் வருகையில் அனைத்து ஒலிகளும் இடம்பெற்றுள்ளன. வேறுபட்ட மெய்யுடன் ஒத்த இருமெய்களின் வருகையமைப்பில் வெடிப்பொலி, மூக்கொலி, மருங்கொலியும், வேறுபட்ட இரு மெய்யிணைகளின் வருகையில் 'க்', 'ப்' என்ற இரண்டாவது மெய்யிணைகளே அதிகமாக வந்துள்ளன. வடமொழி மெய்யிணைகள் இடம்பெறவில்லை.

31. பிள்ளையவர்கள் வாழ்வும் வாக்கும்

க.கொன்றையாண்டி
ஸ்ரீவில்லிபுத்தூர்

தமிழ்நாட்டில் பண்டைக்காலத்தில் தமிழ் நூல்களைக் கற்றும், வேறு மொழிகளில் உள்ள நூற்கருத்துக்களை அறிந்தும், அந்த நூல்களில், உள்ள பல்வகை நயங்களை உணர்ந்தும் பிறருக்குப் பாடஞ் சொல்லியும், பெருந்தொண்டாற்றிய தமிழ்ப்புலவர்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தத்தம் புகழை நிலைநாட்டினார்கள். அப்புலவர் பெருமார்களின் பேருதவியினால் நம் தமிழ்மொழி அடைந்த பெருமைகள் பல.

அப்புலவர் பெருமக்கள் ஒன்றாக் கூடியும், தனித்தனியே இருந்தும், அரசர்களாலும், ஆதீனங்களாலும், செல்வந்தர்களாலும் ஆதரிக்கப்பட்டுச் செல்வத்தில், செல்வாக்கில் சிறந்தும், வறுமையில் வாடியும், இன்பத்தில் மூழ்கியும், துன்பத்தில் துவண்டும், தமிழை மறவாமல் "இருந் தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்ற பெருமையோடு விளங்கிய புலவர்கள் பலர் - இன்று பலதுறைகளிலும் உழைத்து ஆய்வு செய்து பயனடைவோர்க்கெல்லாம் அப்புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்களே துணையாக உள்ளன. ஆனால் அப்புலவர்களின் உண்மை வரலாறுகளை உள்ளவாறு அறிய முடியவில்லை.

பண்டைக்காலத்தில் முறையாகப் பாடம் சொல்லி வந்த புலவர்கள் நூலாசிரியருடைய வரலாற்றை மாணாக்கர்கட்கு முதலில் சொல்லி விட்டு அப்பால் அந்நூலைக் கற்பித்து வந்ததால் அவர்களுடைய வரலாற்றை எழுதி வைக்கவில்லை. ஒரு புலவரோடு பலகாலும் பழகினாலும் அவர்களுடைய வரலாற்றை எழுதி வைக்கும் பழக்கம் இல்லாமல் போயிற்று. புலவர்களும், அறிஞர்களும் தத்தம் வரலாற்றைத் தாமே எழுதும் (சுயசரித்திரம்) வழக்கமும் இல்லை. அந்த வகையில் தமிழ்நாட்டில் உள்ள குறையைப் போக்கும் வண்ணம் தமிழ் மூதறிஞரும், தமிழ்த் தாத்தாவுமாகிய உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் தம் சரித்திரத்தை தாமே எழுதி வைத்துச் சென்றதோடு தமக்குத் தமிழ் கற்பித்த தமிழ் மேதை கவிஞர் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் சரித்திரத்தை ஓரளவுக்கு எழுதி வைத்தார்கள். அதைப் பின்பற்றி திருவாவடுதுறை ஆதீனம் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை வாலாற்றையும் அவர்கள் எழுதிய சிற்றிலக்கியங்கள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னோர்கள்

பாண்டிநாடே பழம்பதி என்ற பெருமையும், சிவலோக சிவராசதானியாக விளங்கியதும், பார்வதி தேவி, தடாதகைப் பிராட்டியாகவும், சிவபெருமான் சுந்தரபாண்டியனாகவும் அவதரித்து அரசாட்சி செய்த பெருமையும் முருகக் கடவுள் உக்கிரபாண்டினாகத் தோன்றிய சிறப்பும் உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியர் போன்ற புலவர் பெருமக்கள் இருந்து தமிழ் வளர்த்த சிறப்பு வாய்ந்ததுமாகத் திகழ்வது மதுரை மாநகரமாகும், அம் மதுரை மாநகரில் சைவ வேளாளர் குலத்தில் ஒரு குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சோமசுந்தரக் கடவுள் கோயிலில் பணியாற்றி வந்தனர். அக்கடும்பத்தினர் தமிழ் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். அக்குடும்பத்தில் சிதம்பரம் பிள்ளை என்னும் ஒருவர் தம் மனைவியாகிய அன்னத்தாச்சி என்பவரோடு இல்லறம் நடத்தி வந்தார். அவர்கள் தம் முன்னோர்களைப் போலவே தேவார திருவாசகங்களில் நிரம்பப் பயிற்சியும் பெற்றவர். பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் முதலிய பெருநூல்களில் பயிற்சியும், பாடஞ் சொல்லும் ஆற்றலும் செய்யுள் செய்வதில் சிறந்தும் சைவ ஒழுக்கங்களில் சிறந்தும் விளங்கினர்.

பின்பு இவர் தம் மனைவியாரோடு மதுரையை விட்டு நீங்கி திரிசிரபுரத்திற்கு (திருச்சிராப்பள்ளி) மேற்கே காவிரியின் தென்கரையில் உள்ள எண்ணெய்க்கிராமம் என்னும் ஊரையடைந்தார். அவ்வூராரின் ஆதரவையும், பேரன்பையும் பெற்றார். பின்பு அவ்வூராரிடம் விடைபெற்று ஆதவத்தூர் என்னும் ஊரையடைந்தார். அவ்வூரார் தாம் பாடம் கேட்டு மகிழ்ந்ததோடு தம் பிள்ளைகளையும் இவரிடம் படிக்கச் செய்ய வேண்டுமென்று கருதி அங்கேயே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் அமைத்து இவரைக் கணக்காயராகக் கொண்டு தம் பிள்ளைகளையும் தமிழ் பயிலச் செய்தனர். சிதம்பர வாத்தியார் என்ற பெயரைப் பெற்றார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிறப்பும், கல்வியும்

சிதம்பரம்பிள்ளை கணக்காயராக இருந்து வருகையில் தமிழ்நாடு செய்த தவத்தால் 6-4-1815 அன்று ஒரு புண்ணிய குமாரன் பிறந்தான். அவருக்குத் தம் குல தெய்வத்தின் பெயராகிய மீனாட்சி சுந்தரம் என்று பெயர் சூட்டினார். இப்பிள்ளை பிறந்த சில மாதங்களுக்குப் பின் ஆதவத்தூருக்குப் பக்கத்தில் உள்ள சோமரசம்பேட்டை என்னும் ஊரில் உள்ளவர்களின் வேண்டுகோளுக்கேற்ப அவ்வூரில் குடியேறி அங்குள்ள பெரியோர்கட்கு பாடஞ் சொல்லியதுடன் அங்கும் ஒரு பாடசாலை அமைத்துப் பிள்ளைகட்குக் கல்வி கற்பித்தும் வந்தார். அப்போது அவருக்குச் சொக்கலிங்கம் என்ற ஓர் ஆண்டு பிள்ளையும், மீனாட்சி என்ற பெண் குழந்தையும் பிறந்தது. அப்போது மீனாட்சிசுந்தரத்திற்கு ஐந்து வயதானமையால் அவரை தம் பள்ளியிலேயே சேர்த்து கல்வி பயிற்றத் தொடங்கினார். இளமையிலேயே நெடுங்கணக்கு, ஆத்திசூடி, அந்தாதிகள், கலம்பகங்கள், பிள்ளைத்தமிழ், நிகண்டு, கண்சுவடி போன்றவற்றைத் தம் பிள்ளைக்குக் கற்பித்தார். ‘குலவித்தை கல்லாமல் பாகம்படும்’

என்பதற்கேற்ப பாடசாலையில் உள்ள ஏனைய பிள்ளைகளை விட சிறந்து விளங்கினார். அவருடைய அறிவின் வளர்ச்சியைக் கண்டு தந்தையார் மகிழ்ந்தார். இவரை வீட்டில் ஓய்வாக இருக்கும்போது சதகங்கள், மாலைகள், நன்னூல் போன்ற இலக்கண மூல பாடங்களை மனப்பாடம் செய்யுமாறு பயிற்றுவித்தார். இவர் தந்தையார் கற்பித்தவற்றை எல்லாம் விரைவில் கற்றுத் தேர்ந்தார்.

முதற்செய்யுள்

தந்தையாருடைய பழக்கத்தால் செய்யுள் செய்யும் திறமை பெற்றார். இவர் பாடசாலையில் பயிலுங்கால் உடன் பயிலும் மாணாக்கர்களுடன் வீட்டுக்கு வேண்டிய பொருட்களை விலைக்கு வாங்குவதற்குத் திரிசிரபுரம் கடைத்தெருவிற்குச் செல்வார். அவ்வாறு செல்லும்போது மனப்பாடம் செய்தவற்றைச் சொல்லிக் கொண்டும், பொருள் கூறிக்கொண்டும் செல்வார்கள். ஒருவர் செய்யுளின் முதல் அல்லது இறுதிச் சொல்லைக் கூற, மற்றவர் அப்பாடலை முழுமையாகக் கூறுவர். ஒருநாள் சிதம்பரம் பிள்ளை அவர்களை அறிந்தவரும், தமிழ்நூல் பயிற்சியும் உடைய சுங்க வரி வாங்கும் அதிகாரி ரங்கப் பிள்ளை என்பவர் இவர்களைக் கண்டு "உங்கள் ஆசிரியர் உங்களுக்குச் செய்யுள் செய்யும் பழக்கத்தை உண்டாக்கியிருப்பாரே, கணபதி மேல் ஒரு செய்யுள் பாடுங்கள்" என்று கூறியபோது மற்ற மாணவர்கள் செய்யுள் இயற்றச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, மீனாட்சி சுந்தரம்

பாரதத்தை மேருப் பருப்பதத்திலே யெழுதி
மாரதத்தை தந்தையிவர் வண்ணஞ் செய்-சீருடையோய்
நற்றமிழையாங்கணந்து கற்றுத் தேற மனத்
துற்றருளை யெங்கட் குதவு

என்னும் வெண்பாவை உடனே பாடி முடித்தார். இப்பாடல் இவரின் வாயினின்று வந்த மூத்த செய்யுளாகும். இவர் இனிப் பாட இருக்கும் நூற்றுக்கணக்கான நூல்கட்கும் பல்லாயிரக்கணக்கான பாடல்கட்கும் காப்பாக அமைந்தது போன்று விநாயகர் வணக்கமாயிற்று என்பதை அறியலாம், இவருடைய செய்யுள் இயற்றும் ஆற்றலையும், தமிழ் ஞானத்தையும் எல்லோரும் அறியுமாறு செய்ய ஏதாவது உதவி செய்விக்க நினைத்தார். ஒருநாள் இவரை ஒரு மிராசுதாரிடம் அழைத்துச் சென்று இவருடைய ஆற்றலை அவரிடம் எடுத்துக் கூறினார். அப்பொழுது பக்கத்தில் இருந்த ஒருவர் ஒரு பாடலைக் கூறி இப்பாட்டிற்கு "அர்த்தஞ் சொல்" என்றார். உடனே அப்பாடலுக்குப் பொருள் கூறினார். உடனே அக்கனவான் "இப்பாட்டுக்கருத்தஞ் சொல்" என்பதை ஈற்றடியாக வைத்து ஒரு வெண்பா பாடு" என்றார். உடனே திரிமூர்த்திகட்கும் நெல்லுக்கும் சிலேடையாக அமையுமாறு

ஒண்கமலம் வாழ்ந்தன்னமாகி யுரலணைந்து
தண்கயநீர்த் தூக்கித் தகுமேறூர்ந் - தெண்கதிரின்
மேயவிதத்தான் மூவராகும் விளம்பியதென
தூ யவிப்பாட்டுக் கருத்தஞ் சொல்

ம.13.

என்ற சிலேடை வெண்பாவைப் பாடி முடித்தார்.

சிலேடைப் பொருள்

கமலம்-தாமரை, நீரில் அன்னமாகி-அன்னப்பறவை, அன்னத்திற்குரிய (நெல்) நெல் உரல் அணைந்து-கண்ணன் உரலில் கட்டுண்டது உரலில் இட்டு உலக்கையால் குத்தப்படும் நெல், தருமேறூர்ந்து-விடை(காளை) வாகனத்தில் ஊர்ந்த சிவன் - காளை மாடு ஏரில் பூட்டி உழுது பயிரிட்டு விளைந்த நெல், கதிர்-சூரியன்-நெல்கதிர்.

இப்பாடலைக் கேட்ட அக்கனவான் ஒரு வண்டி நெல் அனுப்பினார். இவ்வாறு மீனாட்சிசுந்தரம் கல்வி கேள்விகளிலும் செய்யுள் இயற்றுவதிலும் சிறந்து விளங்கி வருங்காலத்தில் இவருடைய 15ஆவது வயதில் விரோதி ஆண்டில் இவருடைய தந்தையார் சிவபதம் அடைந்தார். அப்பொழுது இவர் வருந்தி,

முந்தை யறிஞர் மொழிநூல் பலநவிற்றும்
தந்தை யெனைப்பிரியத் தான்செய்த-நிந்தைமிகும்
ஆண்டே விரோதியெனும் அப்பெயர் நிற்கே தகுமால்
ஈண்டேது செய்யாய் இனி

என்னும் பாடலைப் பாடினார். இச்செய்யுளில் தம் தந்தையார் விரோதி ஆண்டில் இறந்தார் என்றும், எனக்கு விரோதியாக (பகையாக) அமைந்தது என்றும் இருபொருள்பட சிலேடை அமைந்திருப்பதைக் காணலாம். அதன் பிறகு மேலும் சில காலம் சோமரசம் பேட்டையிலேயே வாழ்ந்தார். அவ்வூரார் இவருக்கு வீட்டுக் கவலையில்லாதபடி வேண்டியவற்றைக் கொடுத்து உதவி வந்தார்கள். இவருக்கு காவேரியாச்சி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார்கள்.

இவர் தமிழ் பயிற்சியை மென்மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்பினார். அதற்கேற்ற நூல்கள் சோமரசம்பேட்டையில் கிடைக்கவில்லை. கிடைத்த நூல்களைப் பாடங் கேட்பதற்கும் ஐயங்களைப் போக்கிக் கொள்வதற்கும் சிறந்த தமிழ்ப் புலவர்கள் அங்கில்லை. எனவே திரிசிரபுரம் வந்து சேர்ந்தார். அங்கு மலைக்கோட்டை க்ழவீதியில் உள்ள ஒரு ஓட்டு வீட்டை வாடகைக்கு அமர்த்தினார். அங்குள்ள வித்துவான்களோடு பழகினார். பாடங் கேட்டர். பலருக்குப் பாடஞ் சொன்னார். பல பிரபுக்கள் இவரை ஆதரித்தார்கள். அப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்தில் முறையாகப் பாடங் கேட்ட வேலாயுத முனிவர் பிள்ளை என்பவர் மலைக்கோட்டையில் உள்ள மௌனசாமி மடத்தில் வந்து தங்கினார். அவர்கள் அவரிடம் பாடம் கேட்டார். இவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு என்ற நான்கு இலக்கணங்களையும் நன்கு பயின்றார். அங்குள்ள ஒரு பரதேசியிடம் தண்டியலங்காரம் கற்றார். இவ்வாறு ஐந்து இலக்கணங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்) செய்தல்

இவர் ஊற்றத்தூர், பூவாளூர், திருத்தவத்துறை, (லால்குடி) முதலிய

சிவ ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டு திட்டக்குடிக்குச் சென்றார். அக்கோவில் தர்மகர்த்தாவின் வேண்டுகோளுக்கேற்ப அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் வசிஷ்டேசுவரர் மீது அன்னேரிக் கோவிலிலே இருந்து ஒரு பதிகம் பாடினார். ஊற்றத்தூர் சென்றபோது திருவூரையூர் பதிற்றுப்பந்தாதி என்னும் பிரபந்தம் பாடினார். இப்பிரபந்தத்தில் திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்களின் கருத்துக்களும், சொற்றொடர்களும் அமைந்துள்ளன. திரிபுயமகங்களையும் இந்நூலில் அமைத்துப் பாடியுள்ளார். பூவாளுக்குச் சென்றபோது கீர்த்தனங்களில் அமைந்திருந்த மயில்ராவணன் சரித்திரத்தை நாறு பாடல்களில் பாடி முடித்தார். அப்போது இவருக்கு தல தரிசனங்களிலும், சிவபூசையிலும் விருப்பம் ஏற்பட்டமையால் அப்பொழுது திரிசிரபுரம் கீழைச் சிந்தாமணியில் இருந்த செட்டி பண்டாரத்தையா என்பவரிடம் சிவதீட்சை பெற்றார்.

திருவாவடுதுறையை அடைந்தது

இவர் திருவாவடுதுறை செல்ல நினைத்தார். வழியில் உள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டும், ஆங்காங்கேயுள்ள தமிழ் அபிமானிகளையும், வித்துவான்களையும் சந்தித்து அளவளாவியும் மகிழ்ந்தார். பட்டீச்சரம் வந்தார். அங்குள்ள தமிழறிஞர்பால் மிக்க அன்புடைய நமசிவாய பிள்ளை அவர்களையும், பசுபதி பண்டாரத்தையும் சந்தித்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்று பட்டீச்சரம் அருள்மிகு தேனுபுரேசர் மீது ஒரு பதிற்றுப்பத்தந்தாதி இயற்றினார். அது பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி என வழங்கப்படுகிறது. அதன் பிறகு தாம் எண்ணிப் புறப்பட்ட திருவாவடுதுறையை அடைந்து திருமடத்திற்குச் சென்றார். அங்குள்ள காட்சிகளைக் கண்டார். சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் அங்குள்ள காட்சிகளைக் கண்டார். சிவஞானமுனிவர், கச்சியப்ப முனிவர் போன்றோர் இங்கு இருந்ததால் தான் சிறந்த நூல்களை இயற்றி ஞானிகளாயினர் என்பதை எண்ணி வியந்தார்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடர்பு

அப்பொழுது நமசிவாய முனிவருக்குப் பின் 14ஆம் பட்டத்தில் வேளூடையர் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் ஆதீன கர்த்தராக வீற்றிருந்தார். அவர் வடமொழி, தென்மொழி நூல்களிலும், சிவாகமங்களிலும், மெய்கண்ட சாத்திரம், பண்டார சாத்திரம், சித்த நூல்கள் முதலியவற்றிலும் பயிற்சி மிக்கவர். முறையாகப் பாடங் கேட்டவர். பாடஞ் சொல்வதில் மிக்க ஆற்றலுடையவர். இப்படிப்பட்ட ஆதீனகர்த்தரை ஞானியைத் தரிசிக்க வேண்டுமென்னும் பேரவா பிள்ளையவர்கட்கு உண்டாயிற்று. தக்கவர் மூலம்தக்க சமயமறிந்து இவர் கையுறையுடன் சென்று கண்டு நெடிது வணங்கித் திருநீறு பெற்றுத் தாம் இயற்றிக் கொண்டு வந்த செய்யுட்களைக் கண்களில் நீர்வர, நாத்தழும்ப விண்ணப்பித்தார். இவர் அச்செய்யுட்களைச் சொல்லுகையில் அவற்றின் இனிய கருத்தை அறிந்தும், இவருடைய பயபக்தியைக் கண்டும், மகாசந்நிதானம் இவருடைய கல்வியறிவை அறிந்தார். இவருடைய வரலாற்றைக்

கேட்டறிந்தார். மகாசந்நிதானம் இவருடன் அன்புடன் அளவளாவி ஆதரித்துச் சில நாட்கள் தங்கச் செய்தார். அப்போது அங்கிருந்த ஆதீன வித்துவான்களோடும், தமிழ் கற்கும் மாணவர்களோடும் பழகினார். நாடோறும் ஆதீன கர்த்தரைச் சந்தித்து வணங்கியும், பல அரிய பாடல்கட்கு விளக்கம் கேட்டும், கூறியும், ஆதீன கர்த்தரின் நன்மதிப்பை பெற்றார். ஆதீனத்தில் அடங்கியிருக்கும் தமிழின் பரப்பும், பெருமையும் இவருக்கு விளங்கின. இந்த மடத்தின் தொடர்பைப் பெற்றது பெரும் பாக்கியம் என்று கருதினார். அப்பால் திரிசிரபுரம் வந்தடைந்தார். அடிக்கடி திருவாடுதுறை சென்று சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்து மகிழ்ந்தார்.

பல பிரபந்தங்களை இயற்றியது

பிள்ளை அவர்கள் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் அவர்களிடம் பல திரியுயமகப் பாடல்களின் உரையையும், போக்கையும் அறிந்து கொண்டமையால் திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி பாடினார். இதில் பல நூல்களின் கருத்துரைகளையும், தொடர்புகளையும் எடுத்தாண்டார். இவர் தம் 21ஆம் வயதில் திருவானைக்காத் திரிபந்தாதி என்ற நூலை இயற்றினார். திரிபந்தாதிகள் சில இயற்றிய பின் தாம் வாழ்ந்த திரிசிரமலையமக அந்தாதியை இயற்றினார். இந்நூலில் உள்ள

கலக்கந்தர மடவார் மயில் வாரி கலந்தவென்முன்
கலக்கந்தர வெஞ்சமன்வரும் காலங்கடுக்கைதப்ப
கலக்கந்தர நதிசூடும் சிராமலையாய் கன்னிபா
கலக்கந்தர திளைவேண்டிக் கொண்டேன் எனைக் கண்டு கொன்றே

என்ற செய்யுளில் "கலக்கந்தர" என்ற தொடரை நான்கு இடத்தில் அமைத்து

1. கலம் கந்தரம் - ஆபரணத்தைப் பூண்ட கழுத்தையுடைய

2. கலக்கந்தர - மனக்குழப்பத்தை தருவதற்கு முன்

3. தப்பகலக்கந்தர - தப்பு அகல அக்கு அந்தர நதிசூடும் - குற்றமற்ற ருத்ராட்சத்தையும், ஆகாய கங்கையையும் அணிந்த

4. கன்னிபாக கலக்கந்தர - கன்னி பாக! லக்கம் தரம் - உமைபாகனே!

இலட்சம் தரம் உன்னை வேண்டினேன் என்ற நான்கு வகையாகப் பிரித்து பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ள சிறப்புப் படித்து இன்புறத்தக்கது.

இவர் திருவானைக்காவிற்குச் சென்று சாமி தரிசனம் செய்தபோது அங்குள்ள அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ அகிலாண்ட நாயகி மாலை என்னும் பிரபந்தம் பாடினார். பின்பு அங்கேயே லட்சுமண பிள்ளை கேட்டுக்கொண்டபடி "அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்" இயற்றினார். இதனால் இவர் புகழ் பெருகியது. இவ்வாறு இவர் அறிவு வளர்ந்தது போல பல புலவர்களோடு பழக வேண்டுமென்ற ஆர்வமும் வளர்ந்தது. இவர் சென்னையில் பல புலவர்கள் இருப்பதை அறிந்தார். அங்குச் சென்று

அவர்களோடு அளவளாவ எண்ணிச் சென்னைக்குப் புறப்பட்டார்.

சென்னை கல்விச் சங்கம்

அக்காலத்தில் சென்னையில் அரசு கல்விச் சங்கத்தை அமைத்துப் பல புலவர்களை வரவழைத்து அவர்கள் வாயிலாக மாணாக்கர்கட்கு பாடஞ் சொல்லுதல், பிரசங்கம் செய்தல், பழைய நூல்களை ஆராய்ந்து புதுப்பித்தல், செய்யுள் நூல்களை வசனமாக எழுதுவித்தல், பாடசாலைகட்கு பயன்படுமாறு இலக்கண நுல்களை வசன நடையில் எழுதுவித்தல், வேறுமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தல் முதலியவற்றை நடத்தி வந்தது. இதை அறிந்த பிள்ளை அவர்கள் சென்னை சென்று பல புலவர்களோடு பழகினால் நல்ல பயிற்சியை அடையலாம். நூல்களில் தமக்கிருந்த ஐயங்களை நீக்கிக் கொள்ளலாம் என்று கருதினார். லட்சுமண பிள்ளை அவர்களின் உயர்நீதிமன்றப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு பொருள் கொடுத்து அனுப்பப்பட்டார். சென்னை சென்று பல புலவர்களை சந்தித்துப் பழகி பல ஐயங்களைப் போக்கிக் கொண்டார். பல நூல்களைப் பாடங் கேட்டார். அவர்களிடம் இருந்த பல அரிய நூல்களைப் பிரதி செய்து கொண்டார். அப்பொழுது மழவை மகாலிங்கையர் அவர்களைச் சந்தித்துத் தம் ஐயங்களைப் போக்கிக் கொண்டதோடு அதுவரை இவருக்கு கிடைக்காமல் இருந்த இலக்கண கொத்துரையைப் பாடங் கேட்டார். பின்பு திரிசிரபுரம் மீண்டார்.

திரிசிரபுரத்தில் இருக்கும்போது பலருக்குப் பாடஞ்சொல்லியும், பாடல் இயற்றச் செய்தும் வந்தார்.அப்போது இவரது 21ஆம் வயதில் ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு சிதம்பரம் என்று பெயரிட்டார். பிறகு இவர் பட்டீச்சரம் சென்று தங்கியிருந்து பலருக்குப் பாடஞ் சொன்னார். பின்பு அவர் துறையூர் அருணாசல முதலியார் அவர்களின் ஆதரவில் அவருடைய வீட்டிலேயே தங்கியிருந்தார். அப்போது அவருக்கு வயது 30.

மீண்டும் திருவாவடுதுறை சென்றது

இவ்வாறிருக்கையில் இவர் திருவாவடுதுறை சென்று ஆதீனத் தலைவராகிய வேளூர் சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்து வர வேண்டுமென்று விரும்பிச் சென்றார். அவர் பரிபூரணமடைந்ததை அறிந்து வருந்தினார். அவருக்குப் பின்பு 15வது பட்டத்தில் ஆதீனத் தலைவராக விளங்கிய ஸ்ரீ அம்பலவாண தேசிகரைச் சந்தித்தார். அவரிடம் பாடங் கேட்டு மகிழ்ந்து திரிசிரபுரம் மீண்டார். தியாகராச செட்டியார் போன்றவர்கட்குப் பாடஞ் சொன்னார். தியாகராச செட்டியார் வேண்டுகோளுக்கிணங்கி பூவாளூர் பதிற்றுப்பத்தந்தாதி என்ற பிரபந்தத்தை இயற்றினார். இவர் ஒருமுறை திருத்தவத்துறை (லால்குடி) சென்றபோது அங்குள்ளவர்களின் விருப்பப்படி அவ்வூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமதி அம்பாள் மீது பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ் இயற்றினார். திருவாரூர் பங்குனிப் பெருவிழாவிற்குச் சென்றிருந்தார். தியாகராச லீலை என்ற பெருங்காப்பியத்தை இயற்றினார். இவர் வாடகை வீட்டில் குடியிருப்பதை அறிந்த அருணாசல முதலியார் என்பவர் தம் சொந்தப்

பொருள் கொடுத்து திரிசிரபுரம் மலைக்கோட்டைத் தெற்கு வீதியில் சைவத் தெருவில் மெத்தை வீடு ஒன்றை இவர் பெயருக்கு வாங்கி அதில் குடியிருக்கச் செய்தார். அங்கே இருந்து கொண்டு பலருக்குப் பாடஞ் சொல்லி வந்தார். அப்பொழுது உறையூரில் உள்ள அன்பர்களின் விருப்பப்படி உறையூர்ப் புராணத்தை இயற்றினார்.

பங்களூர் சென்றது

அக்காலத்தில் இவருடைய புகழ் எங்கும் பரவிற்று. பெங்களூரில் இருந்த தேவராசப் பிள்ளை என்னும் கனவான் விருப்பத்திற்கிணங்கப் பெங்களூர் சென்றார். தேவராசப் பிள்ளை அவர்கட்கு பாடஞ் சொன்னார். தேவராசப் பிள்ளை அவர்கள் இவரிடம் ஐந்திலக்கணங்களையும் முறையாகப் பாடம் கேட்டார். பெங்களூரில் இருந்து கொண்டே "உறையூர்ப் புராணம்" பாடி முடித்தார். தேவராசப் பிள்ளை எழுதத் தொடங்கிய குசேலோபாக்கியானம் என்னும் நூலைப் பாடிக் கொடுத்தார். இதேபோல் தேவராச பிள்ளை அவர்கள் ஆவலோடு இயற்ற விரும்பிய சூதசங்கிதை என்னும் நூலையும் இவரே இயற்றி முடித்தார். இவர் பெங்களூரை விட்டுப் புறப்படும்போது தேவராச பிள்ளை தமக்குச் செய்த உதவிக்கும் உபசாரங்கட்கும் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் என்று கருதி இந்த இரண்டு நூல்களையும் அவரிடம் கொடுத்து, உங்கள் பெயரிலேயே இவற்றைப் பதிப்பித்து வெளியிட்டுக் கொள்ளுங்கள் என்று கொடுத்துவிட்டு வந்தார். இன்றும் அந்த இரண்டு நூல்களும் தேவராசப் பிள்ளை அவர்கள் பெயராலேயே வெளியிடப்படுவதை அறியலாம்.

திரிசிரபுரம் மீண்டது

இவ்வாறு பல பாராட்டுக்களுடன் பரிசில்களுடன் பெருமையோடு பிள்ளை அவர்கள் திரிசிரபுரம் மீண்டார்கள். தாம் பெங்களூரில் பாடி முடித்த உறையூர்ப் புராணம் அரங்கேற்றப்பட்டது. பெருந்திருப்பிராட்டி பிள்ளைத் தமிழ் பாடியதுபோல உறையூர் காந்திமதியம்மை மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடுமாறு உறையூர் அன்பர்கள் வேண்டினார்கள். அதன்படி காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் பாடி அம்மையின் சந்நிதியிலேயே அரங்கேற்றப்பட்டது. இவருக்குத் தக்க சன்மானங்களும் விலையுயர்ந்த கடுக்கன்களும், மோதிரமும் பரிசாக வழங்கப்பட்டன. சிலருடைய வேண்டுகோளுக்கிணங்கி "ஏறும்பீச்சுரம் வெண்பா அந்தாதி, தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கற்குடிமாலை முதலிய பிரபந்தங்கள் இயற்றப்பட்டு அரங்கேற்றப்பட்டன. இவர் ஒருமுறை இரத்தினகிரி என வழங்கும் வாட்போக்கி என்னும் தலத்திற்குச் சென்று தரிசனம் செய்தார். அங்குள்ளோரின் விருப்பப்படி "வாட்போக்கிக் கலம்பகம்" இவரால் பாடப்பட்டது. இவர் இவ்வாறு பல மாணாக்கர்கட்கு பாடஞ் சொல்லியும், பல பிரபந்தங்கள் பாடியும் பேரும், புகழும் பரிசுகளும், சன்மானங்களும் பெற்றாலும், மேலும் படிக்காத நூல்கள் இருப்பின் அவற்றைத் தக்கவார் வாயிலாக பாடங்கேட்க வேண்டுமென்ற ஆர்வமுடையவராய் இருந்தார். ஐந்திலக்கணங்களும் ஒருங்கே அமைந்ததும் குட்டித் தொல்காப்பியம் என வழங்கப்படுவதும், திருவாரூரில் வைத்தியநாத தேசிகர் என்பவரால்

இயற்றப் பெற்றதுமாகிய "இலக்கண விளக்கத்தை" அதன் உரையுடன் பாடம் கேட்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். அப்பொழுது வைத்தியநாத தேசிகரிடம் கற்றுத் தேர்ந்த மாணாக்கர் பரம்பரையைச் சேர்ந்த கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகர் என்பவர் அதற்குத் தக்கவர் என்பதை அறிந்தார். அவருக்கு சன்மானமாகக் கொடுக்கப் பணம் இல்லாமையால், காந்திமதி பிள்ளைத் தமிழை அரங்கேற்றிய போது, தமக்குச் சன்மானமாகக் கிடைத்த இரண்டு கடுக்கன்களையும் விற்றுச் சன்மானம் கொடுத்து பயின்றார். பிள்ளையவர்களே பாடம் கேட்டமையால் சுப்பிரமணிய தேசிகரிடத்தில் பலருக்கு மதிப்பு உண்டாயிற்று. பின்பு தருமபுர ஆதீனத்திற்குச் சென்று மகா சந்நிதானம் ஸ்ரீசச்சிதானந்த தேசிகரைத் தரிசித்தார். பின்பு இவர் பல மாணாக்கர்கட்கு பாடஞ் சொன்னார். இவரிடம் பாடம் கேட்டவர்கள் அனைவரும் சிறந்த வித்துவான்களாகப் பிற்காலத்தில் விளங்கினார்கள். இவரிடத்தில் பாடங் கேட்ட ஒருவரைக் கூட இன்று காண இயலவில்லை என்பது வருந்தத் தக்கது. பிள்ளை அவர்களையும், அவரிடத்தில் நேரடியாகப் பாடங் கேட்டவர்களையும் இன்று நாம் கண்டு வணங்கும் பேறு பெற்றோமில்லையாயினும் அப்புலவர் பெருமகன் இயற்றிய நூல்களைப் புதிதாகப் பதிப்பித்துப் பார்த்து படிக்கும் வாய்ப்பினையேனும் தந்திடத் தமிழ் சான்றோர்களையும், மகா சந்நிதானங்களையும், தமிழக அரசையும் வேண்டிக் கொள்வோமாக.

பிள்ளையவர்கள் மேலும் பல காலம் வாழ்ந்தார். பல நூல்கள் இயற்றித் தம் வாழ்விடத்தை மாயூரத்தில் அமைத்துக் கொண்டு முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களோடும், மற்றும் பல புலவர்களோடும் அளவளாவினார். அதன் பிறகு இவர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஆனார். மகாவித்துவான் என்ற பட்டத்தைப் பெற்றார். அன்று முதல் இன்று வரை "திருவாவடுதுறை மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை" என்று அழைக்கப்படுகிறார். அதே பெயரில் இன்று நாம் மாநாடு எடுப்பது மிகவும் போற்றிப் பாராட்டத்தக்கது. இதற்கு ஆவன செய்த அத்துணைப் பெருமக்களையும் வணங்கிப் பாராட்டி அமைகின்றேன்.

32. பிள்ளையவர்கள் பாடிய புராணங்களின் அவையடக்கம்

தி.வே.கோபாலையர்
புதுச்சேரி

மகாவித்துவான் பிள்ளையவர்கள் தாம் இந்நில உலகில் வாழ்ந்த அறுபது ஆண்டுகளில் தமிழைத் தாமே பயின்றும், தம் மாணாக்கர் பலருக்கும் பயிற்றியும் செலவிட்ட காலம் போக எஞ்சிய காலங்களில் தமிழ்த்தாய்க்கு அணிகலன்களாக இயற்றிய நூல்கள் பலவற்றுள் தெரியாதவை சில; தெரிந்தவற்றுள் புராணங்கள் இருபத்திரண்டு; பிற காப்பியங்கள் ஆறு; அந்தாதிகள் பதினான்கு; பிள்ளைத் தமிழ்நூல்கள் பத்து; அகப்பொருள் கோவைகள் மூன்று; தூது இரண்டு; கலம்பகம் இரண்டு; குறவஞ்சி ஒன்று; சிலேடை வெண்பா ஒன்று; ஏனைய பிரபந்தங்கள் பதினொன்று தனிப்பாடல்கள் அளவிறந்தன. இவற்றுள் இந்த அளவுக்குப் புராணங்களோ பிள்ளைத்தமிழ்களோ அந்தாதிகளோ கோவைகளோ பாடிய புலவர்கள் வேறு எங்கும் எவரும் இருந்ததாக அறியக் கூடவில்லை.

இப்புலவர் பெருமான் அருளிய தலபுராணங்களில் இவர் வழங்கியுள்ள அவையடக்கச் செய்திகளைப் பற்றி இக்கட்டுரை அமைகிறது. இவர் இயற்றிய தலபுராணங்கள் பலவும் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அச்சிடப்பெற்று, இரண்டாம் பதிப்புக் காணாமல் வழக்கிறந்து விட்டன. பிள்ளையவர்கள் பாடிய தலபுராணங்களை எல்லாம் எஞ்சாமல் காணும் வாய்ப்பு, கி.பி.2000-இல் அவர் பாடிய அவையடக்கச் செய்திகளை எல்லாம் தொகுத்து நோக்கும் விருப்புக் கொண்ட எமக்கு முழுமையாகக் கிட்டவில்லை. எனினும், முயன்ற அளவில், அவர் பாடிய 12 புராணங்களிலுள்ள அவையடக்கச் செய்யுட்களைக் காணும் வாய்ப்பே கிட்டியது.

அவையடக்கச் செய்தி என்பது, நூல்செய்த புலவன் அரங்கேற்றத்தின் போது தன்னைக் குறைத்துக்கொண்டு, அவையோரை உயர்த்திக் குறிப்பிட்டுக் கூறுவதாம், அஃதாவது குறையறிவுடையேன் செய்துள்ள குற்றம் களைந்து, குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன் என்ற செய்தியையே புராணந்தோறும் வேறுவேறு வாய்பாட்டால் விளக்கிக் கூறுதலாகும், அவையத்தார் அடங்குமாற்றான் இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல்.

புராணங்களுக்கு அரங்கேற்று அவைக்களத் தலைவர் சிவபெருமானே. அவர் ஏற்றால் அவையோர் எதிர்மொழி கூறார் என்பது இவர் கூறும் அவையடக்கப் பொதுச்செய்தி. அத்தகைய இடங்களில் இப்பெருமகனார்க்கு

அவருடைய புராணநூல் அறிவும், கற்பனை வளமும் உதவியுள்ள ஆற்றை எல்லாம் நிரலே காண்போம்

அரியகற்றுஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு (குறள்-503)

குணம்நாடி குற்றமும்நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் (குறள்-504)

என்பது உலகில் காணப்படும் இயல்பாகும். எனினும்

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ் (குறள்-1079)

என்னும் குறட்செய்திக்கு இணங்க, அழுக்காற்றினான் பிறரை யாண்டும் குறை கூறும் கீழ்மக்களும் நம்மிடையே இன்றும் இருப்பதைக் காண்கிறோம், இத்தகையவர் பிள்ளையவர்கள் காலத்திலும் இல்லாமல் இல்லை. இதனையும் அவர் தம் அவையடக்கப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தொகுக்கப்பட்ட அவையடக்கப் பாடல்கள் 50-இல், இலக்கணத் தொடர்பானவை சில; தலபுராணத் தொடர்பானவை பல; உலகியற் செய்திகள் தொடர்பானவை பல, சிவபெருமானுடைய செயல்கள் அணிகலன்கள் தொடர்பானவை சில; சாத்திரக் கருத்துக்களை உள்ளடக்கியவை சில; உபநிடதக் கருத்துக்களை உள்ளடக்கியவை சில என்று பகுத்து நிரலே காண்போம்

இலக்கணத் தொடர்பானவை

(1) தொல்காப்பியத்துள் மருஉ மொழியின் ஒரு கூறாக விளங்கியது நன்னூலார் காலத்தில் இலக்கணப்போலி என்னும் பெயரால் வழங்கப்படுவதாயிற்று. இது நிலைமொழியும் வருமொழியும் இடம் மாறி அமைவது. 'இல்முன்' என்பது 'முன்றில்' எனவும், 'கண்மீ' என்பது 'மீகண்' எனவும் 'வாய்க்கால்' என்பது 'கால்வாய்' எனவும் வருவன போல்வன இலக்கணப்போலிகளாம். இவ்விலக்கணப்போலிச் சொற்களையும் சான்றோர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதுபோல இலக்கணம் ஆய்ந்த சான்றோர் என்போலியர் செய்யுளின் இலக்கண வழுக்களையும் வழுவமைத்துக் கொள்வர் என்ற எண்ணத்தேன்.

(2) தமிழ் எழுத்துக்கள் 'உயிர்' எனவும் 'மெய்' எனவும் இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன. 'ஆய்தம்' இரு பகுப்பினுள்ளும் சேராதது. அதனால் எவ்விடத்தும் தனித்து இயங்கல் இயலாது. ஆனால் தனக்கு முன்னே ஒரு குறிலையும், தனக்குப் பின்னே ஒரு வல்லெழுத்தையும் பெற்று வர அஃது எழுத்தாய் ஒலிக்கும், அதுபோல உலகவழக்கிற்கும், செய்யுள் வழக்கிற்கும் ஏலாத என் கவிகளும் தமக்கு ஒரு பக்கம் இறைவனுடைய பெருமையும், மறுபக்கம் சான்றோர்களுடைய அன்பும் துணையாக நிற்க இயங்குதலால் தேவர்களும் மதிக்கும் பாவாகும் (க).

(3) தமிழின் நெடுங்கணக்கில் குறிலோடு இணைந்த நெட்டெழுத்துக்கள் ஐந்து, தனியே இருக்கும் நெட்டெழுத்துக்கள் 'ஐ' 'ஔ' என்ற இரண்டு. அவையும் மாத்திரை நோக்கி நெட்டெழுத்தாகக் கொள்ளப்பட்டன. அதுபோலச் சான்றோர் பாடலோடு இயலும் தகுதியில்லாத அடியேன் பாட்டும் எம்பெருமான் சரிதையைக் குறிப்பிடும் மாத்திரையை - (அளவினை) நோக்கிச் சான்றோர் பாவோடு எண்ணப்படும்.(அ)

(4)தனித்து நோக்கின் மக்கள் உயிரும் அஃறிணை; மக்கள் உடம்பும் அஃறிணை. இறைவன் அருளால் அவ் உயிரும் உடம்பும் இயைந்து உயர்திணையாகின்றன. அதுபோல இழிதகவுடைய என் சொல்லும் பொருளும் இறைவனின் சரிதத்தோடு இயைந்து இழிவு ஒழித்து, உயர்வு பூணும் என்பதற்கு ஐயம் இல்லை.

(5)இலக்கணத் தலைமை வாய்ந்தவர் பலவகைக் குறைகளையும், விகாரங்களையும், வேற்றுமைகளையும், அல்வழிகளையும், அன்மொழிகளையும் குறிப்பிடுதலைக் காண்கிறோம், என் பாடல்களில் பல குறைகளும், விகாரங்களும், வேறுபட்ட செய்திகளும், தேவைக்கு அல்லாத பலவும், உரிய சொற்கள் அல்லாத சொற்களும் விரவி இருப்பனவற்றைக் குறை என்று கொள்வதற்கு இல்லை. இவற்றை எல்லாம் தாமே ஏற்றுக்கொண்டிருக்கும் அப்பெரியவர் எக்காரணம் பற்றி என்னை அவர்களுக்குப் புறத்தன் ஆக்குதல் கூடும்? (நா)

(6)தனித்து மொழி முதலில் வரமுடியாத மெய்யெழுத்து உயிருடன் கலந்து மொழி முதலாகும், என் புன்சொல்லும் 'துருத்தி வாழ் பரமன்' மான்மியத்துள் இணைவதால் உலகில் இறவாது இயங்கும்.(து)

(7) விதி இலக்கணம் வகுத்தவர் அவ்விதிக்கு விலக்க இலக்கணமும் வகுத்துள்ளனர். எனவே, இறைவன் துதியின் சிறப்பில், பாடிய பாடல்களில் சொற்குற்றம் இருப்பினும் துதியின் சிறப்பால் அக்குற்றம் விலக்கிச் செய்தியைக் கொள்வர் என்பதில் ஐயமில்லை (து)

(8)அன்மொழி, அல்வழி, போலி, வேற்றுமை இவற்றை விரும்பிப் போற்றும் தமிழியல்பு உணர்ந்த சான்றோர் எம் பாடல் அன்மொழி ஆவதேனும், அல்வழி ஆவதேனும், புன்மொழிப் போலியேனும், வேற்றுமை பொருந்திற்றேனும் அதனைத் தள்ளுவதொரு வழக்கு உண்டோ!(மா)

தலபுராணச் செய்திகள்

உறையூர் எம்பெருமான் பண்ணோடு இயன்ற பாடல் ஒலிகளைச் சுவையாகத் தம் செவிகளில் கேட்பதோடு தம் கையில் உள்ள மான் ஒலிக்கும் கடிய ஒலியையும் விருப்போடு ஏற்பவன் ஆதலின், நுண்ணறிவு உடையோர் நுவன்ற இன்கவிகளோடு ஞானம் இல்லேன் புன்கவிகளையும் ஏற்கும். (உ)

சத்துவ குணத்தின் நிறம் வெண்மை. அவ்வெண்ணிறத்தோடு

இரஜோகுண தமோகுணங்களின் நிறங்களாகிய செம்மையும், கருமையும், ஏனைய நீலமும், பச்சையும் ஆகிய நிறங்களைத் தம் திருமேனியில் கொண்ட பஞ்சவர்ணேசுவரர், சத்துவகுணம் போன்ற சான்றோர் பாடல்களையும் தமோகுணம் போன்ற அடியேன் பாடல்களையும் இணைத்துத் தம் திருச்செவியில் ஏற்றுக்கொள்வர். (உ)

வேதம் முழுதுணர்ந்த பிரமன் கழுகுவடிவு எடுத்தும் காணமுடியாத பெருமானுடைய பிறைவளர் முடிமேல் சிறகுகளை இழந்த கழுகாகிய சம்பாதி பெய்த பூக்களை அவன் நிறைவாக ஏற்றுக்கொண்டான். அவ்விறையவன் செவிகள் கற்றுணர்ந்தோர் மொழிந்த பாக்களை ஏற்பதோடு அவை குறிப்பிடும் செய்தியைக் கொண்டு குறையுடையேன் பாடிய பாக்களையும் ஏற்கும் என்பதில் ஐயம் இல்லை.(க)

1008 அண்டங்களையும் பாதுகாத்த சூரன் செய்த மிகப் பெரிய பூசனையை ஏற்றுக்கொண்ட சூரைப்பெம்மான் 'விசயாலயன்' என்ற சிற்றரசன் செய்த பூசனையையும் ஏற்றுக்கொண்டதால் சான்றோர் பாடல்களைச் சுவைக்கும் அப்பெருமான் எளியேன் பாடல்களையும் ஏற்பன் என்பது உறுதியாகிறது (சூ)

'வீரன்' என்ற வேடன் கடப்பாரையால் தன்தலையில் 'வடு' உண்டாக்க, அவன் மனைவி சுமதி வேண்டுகோளுக்கு இணங்க அவர்களை ஆட்கொண்ட பெருமான் வழுவமைந்த என் பாடல்களையும் ஏற்றுக்கொள்வான் என்பது உறுதி (வீ).

'வீரை' மரத்தை மேம்பட்ட பலாவாகச் செய்து உகந்த பெருமான் இழிந்த என் புன்கவிகளையும் சிறந்த கவிகளாக மாற்றிவிடுவான் என்பதில் ஐயம் உண்டோ?(வீ)

'கண்டன்' என்ற சோழகுல மன்னனை ஆட்கொண்ட பெருமான் கீழ்மகனாகிய 'வீரன்' என்ற வேடனையும் ஆட்கொண்டது போல, சான்றோர்களுடைய நல்லிசைப் பாடல்களில் திளைத்த அவன் செவிகள் அடியேனுடைய புன்கவிகளையும் ஏற்கும் என்பதில் ஐயமில்லை (வீ)

தன்னிடத்து அன்பு செய்யும் உயிரை ஆட்கொள்வதோடு அவ்வுயிர் தங்கிய புன்புலால் உடலையும் மேல் உலகுக்கு ஏற்றுக்கொண்டதால் 'காரோணர்' என்ற பெயர்கொண்ட நாகைப் பெருமான் தம் சரிதத்தோடு இயைந்த எம் புன்கவிளை இழித்துக் கூற மனம்கொள்வரோ?.(நா)

பிரமன் முதலிய தேவர்களின் அறியாமையை மாற்றுதலில் உகந்த பெருமான் அடியேன் புன்கவிகளின் வழுக்களை மாற்றி அமைத்து மகிழ்வான் என்னும் உறுதியால் அவன் பெருமையைப் பாடத் துணிந்தேன். (வீ)

தன்னிடம் பக்திகொண்ட பசுவின் முன்னம் விடை உருவம் கொண்டு தோன்றிய பெருமான் அவ்வுருவில் புல் உணவும் கொண்டனன் ஆதலின் அத்துருத்திப் பெருமான் என் புன்சொலும் கொள்வான் என்று கருதுவது

இயல்பேயாகும். (து)

திருத்துருத்தியை அடைந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உடல்நோயைப் போக்கி அவருக்கு நல்லவடிவினை நல்கிய பெருமான் என் பாடல்களின் வழுக்களைப் போக்கி, அவற்றிற்கு உயர்நிலை வழங்குவான். (து)

பார்வதி தேவியார் மயில் வடிவு எடுத்துச் செய்த பூசனையை மகிழ்ந்த மயூரநாதர் ஒரு காகம் செய்த பூசனையையும் விரும்பி ஏற்றக்கொண்டதனால் சான்றோர் பாக்களோடு அடியேன் பாக்களையும் விரும்பி ஏற்பர் என்பது உண்மை.(மா)

பாரிஜாத மரத்தின் அடியில் விழைந்து தங்கும் பெருமான் புன்கமரத்தின் அடியிலும் விரும்பித் தங்குவதால் உயர்வு இழிவு கருதாது பெரியோர் பாடல்களைப் போல அடியேன் பாடல்களையும் உள்ளத்தில் கொள்வான்.(வி)

கருப்பங்காட்டினில் இருக்கும் பெருமான் வேப்பந்தோப்பிலும் விரும்பி உறைவான் ஆதலின் அடியவர் பாடல்களை உயர்வு தாழ்வு கருதாது ஏற்பான். (அர)

உலகியற் செய்திகள்

இறைவன் பேரருள் புராணத்தை யானும் பாடும் செயல், திருமால் மண் முழுதும் உண்ட செயலை மனம்கொண்டு ஓர் எறும்பும், அகத்தியன் கடல் முழுதும் குடித்த செய்தியை உட்கொண்டு ஒரு சொட்டுத் தேனுக்காகப் பூக்களில் அலைந்து தேடும் ஈயும் முறையே உலகம் முழுதும் விழுங்குவதனையும், கடல் முழுதும் குடிப்பதைனையும் மேற்கொண்ட செயல்கள் போலும்!.(அ)

நாகைப்புராணம் இயற்றும் என்செயல் பேரொளிப் பிழம்பாகிய சூரியனுக்குப் பொங்கல் நன்னாளில் கற்பூர ஆலத்தி எடுத்து வழிபாடு செய்தல் போலும், சூரியன் ஒளிமுன் கற்பூர ஒளி, ஒளியே ஆகாது எனினும் பக்திச் செயலால் அது நிகழ்த்தப்படுவதால் அவ்விறைவனால் அஃது ஏற்கப்படுகிறது.(நா)

நாகை தியாகர் யாம் உயர்ந்தவர் பாடல் அன்றிக் கீழோர் பாடலைச் செவிமடுக்க மாட்டோம் என்று கூறின், மேம்பட்ட தேவர்கள் பூசனையை உகக்கும் நீர் இம்மண்ணுலகத்தோர் செய்யும் பூசனையையும் ஏற்கவில்லையா? என்று யான் வினவுவேன்.(நா)

பெருங்கடல் தன்னிடத்தில் பெரு நதிகளன்றி, சிறு கால்வாய்கள் கலத்தல் கூடாது என்று விலக்குமாயின், அருட்கடலாகிய பெருமானும் மேலோர் மொழியேயன்றிக் கீழேன் பிதற்றும் புன்சொல்லையும் ஏற்றுக்கொள்ளாது நீக்கும். (நா)

முழுமதியம் களங்கத்தோடு பொருந்தியிருந்தாலும் அதன் ஒளி கருதி மக்கள் அதனை இகழார். அதுபோலக் காரோணத்தார் ஒளியோடு

கலந்துள்ள என் செய்யுளுள் குற்றம் குறைகள் இருப்பினும் நன்மக்கள் என் செய்யுளை இகழார்.(நா)

விலங்குகளும் இறைவன் பக்தியினால் மேம்பட்ட நிலையை அடைந்ததை உணர்ந்தும் இறைவனிடத்துப் பக்தி செலுத்தி முத்தியை அணுகுவதில் விருப்பு இல்லாத கீழ்மக்கள் இப்புராணம் குற்றம் உடையது என்று கூறுவார்கள். அவர்கள் கூறவது இதுமட்டுமோ! (நா)

சான்றோர் கூடிய மாயூரத்து யான் என் புன்மொழி கொண்டு சேரல் சாதி மல்லிகை முதலிய நறுமணமலர்கள் செறிந்த இடத்து ஒருவன் எருக்கு முதலிய மலர்களைக் கொண்டு அணைதல் போலும்!(மா)

இது இறைவனைப் பற்றிய புராணம் என்னும் பக்தி சற்றும் இல்லாத புன்மக்கள் யார் பாடினாலும் அப்பாடலில் குற்றம் உண்டு என்று பேசுவது வழக்கம், பாம்பைத் தரித்த சிவபிரான் மீதும் அவர் குற்றம் கூறுதலைத் தவிரார். அவர்கள் என் கவியில் குற்றம் காண்பதில் வியப்பில்லை(மா)

கடலுள் கலந்த மாசுடைய நீர் கடல்நீராக மாறிவிடும். பாலொடு கலந்த நீரும் பாலாந்தன்மையை எய்திவிடும். இறைவன் பெருமை தம்முள் கலப்பதால் என் புன் சொல்லும் புனிதமாக்கப்படும்.(மா)

உண்மை அறிவு ஆனந்த வடிவனாகி, சனகாதி முனிவர்க்கு உண்மையைப் போதிக்கும் சிவபெருமான். தமிழ் நெடுங்கணக்கினை அறியாதவரும் 'குரவர்' என்று பெயர் பூண்டு இந்நிலத்தில் உலாவுதலை வெறுக்கவில்லை ஆதலால் மேன்மக்கள் ஒருநாளும் என் பாடல்களைப் புன்கவி என்று கைவிடுதல் செய்யார் (மா).

என் பாடல்களில் மறுக்கள் வந்து எய்துமேனும் மெய்யறிவுடையார் அவற்றை மதியின் மறுவாக ஏற்றுக்கொள்வர். (மா)

கங்கையைச் சூடிய பெம்மான், அடியார்கள் அபிடேகிக்கும் மணலில் ஊறிய நீரையும் விரும்பி ஏற்றுக்கொள்வர். (அர)

பெருந்தேவர் இருவரும் காணமுடியாத அரியவராகிய பெருமான் தம் அன்பர்பால் அருவருப்பு இல்லாது எளியராய் வந்து அருள் செய்வார் என்ற அவ்வெண்ணங்களே எனக்குக் கைகொடுக்கும்.(அர)

சாத்திரப் பெரும்புலமையும், நடையறாப் பெருந்துறவும் கொண்ட குமாரசாமி முனிவர் சிவஞானமுனிவரின் சரித்தைப் பாடுமாறு குறிப்பிடப் பாடுதற்கும் இசையேனாய் மறுத்தற்கும் இசையேனாய் ஒருவாறு துணிந்தேன். என் செயலைப் பெரும்புலவர் நகைப்பர் என்ற வருத்தமும் என் மனத்தில் உள்ளது. இச்சரித்தை இயற்ற அறிவிலீர்! முற்படாதீர்! என்பாரும் இல்லை. நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர் பலரும் சேர்ந்து ஒரு வடிவு எடுத்தாற் போன்றுள்ள சிவஞானமுனிவர் சரித்தை அவர் மாணாக்கர் கச்சியப்ப முனிவர் பாடலாம். மற்ற யாராலும் இயலாது. அதனை அகத்தியரும் மகத்துவமாப் பாலிப்பார். அவ்வாறு ஆக இச்

சரித்தை இயற்ற முற்பட்ட என் செயல் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை வழிபட மூன்று இழை, நான்கு இழைத் திரியையுடைய தீபத்தைப் பயன்படுத்தும் செயலை ஒக்கும். (சிவ)

சிவபெருமானுடைய செயல்கள் அணிகலன்கள்

சூரைப் பெருமான் அமுது நல்கும் வெண்பிறை, மணியும் விடமும் நல்கும் அரவு, கொலையே புரியும் விடம் இவற்றைத் தரித்துள்ளார். எனவே, குணம், குணமும், குற்றமும், முழுதும் குற்றம் ஆகும்படி பொருந்தும் என் பாடல்களும் அவருக்கு விதிவிலக்கு ஆகா.(கு)

சிறந்த மதியையும், கொடிய பாம்பையும் தரித்த பெம்மானுடைய செயல் ஞானசம்பந்தர் பாக்களோடு அடியேன் பாக்களையும் எற்றற்காகவேயாம். (அ)

பெருமான் நறுமலர்க் கொன்றையோடு மணம் இலா எருக்கம்பூவும் சூடியுள்ள செயல் சான்றோர் செய்யவாய் மலரும் திருப்பாக்களோடு கடையேன் செய்யும் பாடலையும் விரும்பற்காகவேயாம். (நா)

சான்றோர்கள் 'சிவபெருமான் பெருமைக்கு ஏற்ற பாடல்களோ நீ பாடும் பாக்கள்'! என்று வினவின் 'முடைநாற்றம் கமழும தோலும் பாம்பும் தலைமாலையும் அப்பெருமானுக்கு ஏற்ற ஆடையும் அணிகலுமாமோ? சொல்லுங்கள்' என்பேன். (மா).

சாத்திரக் கருத்துக்கள்

'மருது அமர் வனப்பெருங்கோயில் உறைபவர் பெருமைக்கு எற்ப உன்னால் புராணம் பாடமுடியுமோ?' என்னின் இறைவன் அருளிய அறிவு முதற்காரணமாம்; சான்றோர்களுடைய அருள் ஆசிகள் துணைக்காரணமாம்; இறைவன் நிமித்த காரணமாம். 'மண்' என்னும் முதற்காரணத்தையும், தண்டசக்கரம் முதலிய துணைக்காரணத்தையும் கொண்டு பாண்டம் அமைக்கும் நிமித்தகாரணனாகிய குயவன் போன்றவன் சிவபெருமான். அவன் விரும்பினால் இப்புராணம் மிகச் சிறப்புடையதாகவும் செய்யலாம். அவன் திருவருள் இன்றேல் நம் செயல் ஆவது இல்லை. (க)

இறைவன் உள்ளிருந்து உரைக்கச் செய்ய உரைப்பவர் அடியார். எம்முடைய அறிவு தானே அறியும் அறிவு அன்று. அவன் அறிவித்தால் அன்றி அறியமுடியாதது. ஆதலின் இப்புராணத்து எவ்வழுவரினும் அஃது என்செயல் மட்டுமன்று. எம்பெருமான் என்னை வெறுக்காமல் என் பாடலில் வழு வந்துறாமல் நயந்து கொள்வர். (து).

உபநிடதக் கருத்துக்கள்

பேராற்றல் பொருந்திய தேவர்களை எல்லாம் ஓர் அற்பமான துரும்பு ஆற்றல் இலராகச் செய்து அவர்களை வெல்ல இறைவன் திருவருள் அதனிடம் சிறிது சேர்ந்தது. அத்திருவருள் சேரின் இப்புராணம் பாடும் ஆற்றல் எளியேனுக்கு எளிதில் வந்து சேரும்.(அ)

இறைவன் அருள்பெற்ற ஒரு துரும்பு தேவர் பலரையும் வென்று

நின்றது. பெருமான் திருவருள் சிறிது ஏற்பட்டால் அடியேன் இந்நாகைப் புராணத்தைச் சிறப்பாகப் பாடி முடித்தலில் வியப்பில்லை.(நா)

பெரியபுராணம்.

நல்ல சொற்களாலே இறைவனைப் போற்றி வாழ்தல் வேண்டும், அஃது இயலாது போயின் புல்லிய சொற்களைக் கொண்டும் இறைவனைப் போற்றலாம்.

இறைவனுக்கு நாளும் சந்தனம் தேய்த்து அளித்த மூர்த்தியார் சந்தனம் முட்டுற்ற அன்று தம் முழங்கையைத் தேய்க்கத் தொடங்கினர் அல்லரோ. (அ)

'தேவார முதலிகள் போன்ற சான்றோர் பாடல்கள் நிரம்பிய என் செவியில் நீ பாடும் பாச் சுவையாய் வந்து சேருமோ?' என்று படிக்கரைநாதர் கேட்பின் கங்கை தங்கும் உன் சடைமிலே மண்ணோடு பொருந்திய வையைநீரும் வந்து சேரவில்லையா? நீ அதனையும் உகந்து ஏற்கவில்லையா? என்று வினவின் அவர் என் சொல்லுவார்?. (ம)

திருப்பெருந்தறைப் புராண அவையடக்கச் செய்தியோடு இக்கட்டுரையை நிறைவுசெய்கின்றாம்

> **வென்றசீர் ஆன்ம நாதர் எனும்பெயர் விழைந்தார் ஞானம்**
> **நன்றிலா எனைவி லக்கார்; நாவலூ ரருக்கு வெண்ணெய்**
> **அன்றுஅருள் செய்தார்; என்னும் அருச்சனை பாட்டே என்றார்;**
> **ஒன்றநின் பாட்டே என்னார்; உறுதியென் இதன்மேல் வேண்டும்?**

பெருமான் தம்மை எல்லா ஆன்மாக்களுக்கும் தலைவர் என்று கூறிக் கொள்வதால் அடியேனுக்கும் தலைவர் என்பதில் ஐயம் இல்லை; சுந்தரருடைய பாட்டே தமக்கு அருச்சனை ஆகும் என்னாது பொதுவாகத் தம்மைப் பற்றிய பாட்டே தமக்கு அருச்சனை ஆகும் என்றார்; ஆதலின் அடியானுக்கும் அவர் தலைவர் ஆதலிலும் அடியேன் தம்மைப் போற்றிப் பாடும் பாடல்களை அவர் தமக்கு அருச்சனையாகக் கொள்ளுதலிலும் தடை ஒன்றும் இல்லை.

பிள்ளையவர்களின் பரந்த நூல் அறிவினையும் கற்பனை வளத்தையும் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்பார்க்கும் அளவையான் அவையடக்கம் என்ற தலைப்பில் அமைந்த சில பாடல்களைச் சுவைத்து, அறிந்து, மகிழ்கின்றோம்.

புராணங்களின் பெயர்கள்

1.அ-அம்பர்ப் புராணம்	8.து-திருத்துருத்திப்புராணம்
2.அர-அரங்குளப்புராணம்	9.நா-நாகைக்காரோணப்புராணம்
3.உ-உறையூர்ப் புராணம்	10.பெ-திருப்பெருந்துறைப் புராணம்
4.க-கண்டதேவிப் புராணம்	11.ம-மண்ணிப்படிக்கரைப் புராணம்
5.சிவ-சிவஞானமுனிவர் சரித்திரம்	12.மா-மாயூரப் புராணம்
6.கு-குளத்தூர் நகர்ப் புராணம்	13.வி-விளத்தொட்டிப் புராணம்
7.த-தனியூர்ப் புராணம்	14.வீ-வீரவனப் புராணம்

33. பத்தில் ஒன்றும் பன்னிரண்டில் பத்தும்

பொதிகைக் கோமதி முத்துக்குமரன்

திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வாழ்வும் வாக்கும் திருமூலரின் வாழ்வும் வாக்கும் எங்கு எவ்வாறு அமைந்துள்ளன? அவை புத்தாயிரத்தாண்டு உலகச் சமூக முன்னேற்றத்திற்கும் சமூகச் சீர்கேடுகளைக் களைவதற்கும் உதவுமா? உதவ அவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கடைப்பிடித்து, உயர்வடையலாம் என்பதை ஒப்பீட்டாய்வின் மூலம் கண்டறிந்து உலகச் சமுதாயம் மேம்பட வழி காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பத்தில் ஒன்று

பதினெண் புராணங்களுள் உலகுறும் உயிர்கள் சித்த மாசறுத்துக் குருபரன் உறையும் வாஹுறை பதி முத்தி தரும் சிவ புராணங்கள் பத்தைப் பத்து என்பது குறிக்கும். அப்பத்துள்ளும் உயர்ந்த அளவிலாப் புகழ் பெறும் காந்தம் என்னும் புராணத்தை ஒன்று என்பது குறிக்கும் ஈண்டு ஒன்று என்பது பன்னிரு கையனின் ஆறுமுகம் போன்று அமைந்துள்ள ஆறு சங்கிதை கொண்ட ஒதரும்புகழ்சால் சூத சங்கிதை என்னும் நூலைக் குறிக்கும்.

பன்னிரண்டில் பத்து

சதாசிவ தத்துவத்தையும் முத்தமிழ் வேதத்தையும், ஒன்பது திருமுறைகளின் சைவ சித்தாந்தக் கருத்துகளையும், நவ ஆகமப் பொருளையும், பாயிரப் பொருளையும், ஆகப்பத்துப் பொருள்களைப் பிரணவத்தின் உட்பொருளையும் கூறும் திருமந்திர நூலை இரண்டாவது குறிப்பிட்ட பத்து என்பது குறிக்கும். பத்தாம் திருமுறையான நூலைக் குறிக்கும்.

பிள்ளையவர்கள் வாழ்வும் வாக்கும்
வாழ்வு (6.4.1815-1.2.1876)

பிள்ளையவர்களின் வாழ்வு பற்றிய முழு விவரத்தைப் பிள்ளையவர்களின் தலைமாணாக்கர், உ.வே. சாமிநாத ஐயர் எழுதியுள்ள மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் முதற்பாகம்-இரண்டாம் பாகம் என்ற நூல்களில் விரிவாகக் காணலாம். பிள்ளையவர்களின் வாழ்வு, கவிஞர், நூலாசிரியர், உரையாசிரியர், போதக ஆசிரியர், இருபத்திரண்டு தலபுராண ஆசிரியர், ஆறு காப்பிய ஆசிரியர், வாழ்க்கை வரலாற்று ஆசிரியர், சிவ மான்மியம் ஆசிரியர், பதிக ஆசிரியர், பிற காப்பிய மொழி பெயர்ப்பாசிரியர், திரிபந்தாதி, யமக அந்தாதி ஆசிரியர், பிள்ளைத் தமிழாசிரியர், கோவை, தூது, உலா, கலம்பகம், குறவஞ்சி, சிலேடை, வெண்பா. (45 சிறுநூல் பிரபந்தங்கள்), சுருங்கக் கூறின் பிரபந்த நூற்றிரட்டு ஆசிரியர் என அவர் வாழ்வு தமிழ் ஆசான் வாழ்வாகவே அமைந்துள்ளது. அவர் வாழ்வு எத்தகையது என்பதைப் பின்வரும் பாடல் வரிகள்

தெளிவுபட விளக்கும்.

திரிசிர கிரி யெனும் திருநகராளி
கலையுணர்ந்திடலால் கற்பவர் உளத்தில்
நிலைமுக்குற்ற நிசியைத் துரத்தலால்
சைவசமயத் தாமரை மலர்த்தலால்
புறமதத் துகினம் புறமிடக் கடிதலால்
மதிஞரிற் சிலரிவன் மார்த்தாண் டனென்றும்
புலவருக் குக்கலை பொலிதரத் தரலால்
கலாநிதி யாகலின் கவினளி செயலால்
அறிஞரிற் சிலரிவன் அம்புலி யென்றும்
செந்தமிழ் பரப்பலால் சிவன்புகழ் பாடலால்
ஆகமம் அனைத்தும் அறிந்து உயர்ந்திடலால்
ஆய்ந்தவர் சிலரிவன் அகத்தியன் என்றும்
....மீனாட்சி சுந்தரப் பெயர்ச் செல்வேளே -வல்லூர் தேவராசப் பிள்ளை

வாக்கு:

பிள்ளையவர்களின் வாக்கு அவர்கள் இயற்றியருளிய நூல்கள் அனைத்திலும் காணலாம். சிறப்பாகச் சூத சங்கிதை, காசிரகசியம் என்னும் நூல்களில் காணலாம். இங்கு ஒப்பீட்டாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை இவ்விரண்டு நூல் கருத்துகள்.

திருமூலர் வாழ்வும் வாக்கும்

வாழ்வு (கி.மு.3000-கி.மு.100)

திருமூலரின் வாழ்வு பற்றிய முழு விவரத்தைத் திருவாவடுதுறை ஆதீனம் 1994இல் வெளியிட்ட திருமூலர் திருமந்திர நூலில் காணலாம். நவ ஆகமங்கள் வடிவில் இறைவன் இருப்பதால், அவனிடம் உறைந்து ஆங்கு கற்று வந்த கருத்துக்களை இங்கு நூலாக ஆக்கும் பணியினைத் திருமூலர் மேற்கொண்டார். "தேவர் குறளும் திருநான்மறை முடிவும் மூவர் தமிழும், முனிமொழியும், திருவாசகமும் திருமூலர் சொல்லும், ஒருவாசகம் என்று உணர்" என்ற ஔவையின் பொன்மொழி அவர் வாழ்வின் பயனாகத் தோன்றிய நூலின் பெருமையை விளக்கும். வேறு அண்டத்திலுள்ள தமிழ்ச் சைவச்சித்தாந்தப் பெருநூலைப் படித்து வந்து இங்கு நூல் உருவாக்கினார் என்பர்.

வாக்கு

திருமூலர் வாக்கு 12000 வரிகளையுடைய 3000 பாடல்களில் முப்பது வகை உபதேசத்தில் 300 மந்திரங்களில் காணலாம். இங்கு ஒப்புமைக்கு எடுக்கப்பட்டது மூன்றாம் தந்திரமான வீராகமமும், முதல் தந்திரமான காரணாகமமும் ஆகும். அவற்றில் காணக்கிடக்கும் வாக்குகள். இறைவன் திருவடியிலுள்ள தண்டைக்கால் காரண ஆகமமாகும். மூன்றாம் மந்திரம் இறைவனது கழுத்து ஆகும். கழுத்திலிருந்து வாக்கு பிறக்கும் பிற திருமுறைகள் அதன்பின்பு தோன்றின. பத்தாம் திருமுறையே முதன் முதலில் தோன்றிய சாத்திர நூலாகும்.

இருவர் வாழ்வும் வாக்கும் ஒப்புமை

இருவரும் திருவாவடுதுறை ஆதீனத்துப் பெரும்புலவர்கள். பேராசிரியப் பெருந்தகைகள். இருவரும் அகத்தியரை வழிபட்டவர்கள். இருவரும் 3000 பாடல்களைக் கொண்ட நூற்களை இயற்றியவர்கள். இருவரும் இறைவன் அருளைப் பெற்றவர்கள். இருவரும் உலக உயிர்களின் சித்தமாசறுத்து பரன் உறையும் பதிமுத்திக்கு வழி காட்டியவர்கள். இருவரும் அட்டாங்க யோகத்திற்கு, இக்காலத்தார் போற்றும் யோக அறிவியலுக்கு வித்திட்டவர், விரிவுரை கூறியவர்கள். இருவரும் தமிழ் மந்திர எழுத்துகள் மிகுதியாகக் கொண்ட சொற்களையுடைய செய்யுள் வடிவநூற்களை இயற்றியவர்கள், இருவரும் சைவப்பயிர் தழைய, மழைபொழி புயலாக வாழ்ந்தவர். இருவரும் முற்பிறப்பில் அகத்தியர் மாணாக்கராக, அகத்தியக்கூறாக வாழ்ந்தவர்கள். இப்பிறப்பிலும் தங்கள் குருவினை மறவாது போற்றியவர்கள். இருவரும் தமிழ் வாழ வாழ்ந்தவர்கள் என்பன ஒப்பாய்வால் விளங்குகின்ற உண்மைகளாம்.

புத்தாயிரத்தாண்டு சமூக முன்னேற்றத்திற்குச் சமயப் பொதுமை, தத்துவப் பொதுமை, மொழிப்பொதுமை, சமுதாய உடல் நல வாழ்வுப் பொதுமை, சமுதாயக்கலை இலக்கியப் பொதுமை (பொழுதுபோக்கு, உணவு, உடை, உறைவிடம், மருத்துவம்) வாயிலாகச் சமூக ஒற்றுமை எற்பட வேண்டும் என்றும், சமுதாயச் சீர்கேடுகளான எழுத்தறிவின்மை, எண் அறிவின்மை, வறுமை, மதுமாது பழக்கம், அறம் செய்யாமை, பகுத்துண்ணாமை போன்றவை களையப்பட வேண்டும் என்றும் சமூக அறிவியல் அறிஞர்கள் ஆய்ந்துரைத்துள்ளனர். இவைகளைப் பிள்ளையும், திருமூலரும் தம் நூலில் முற்காலத்தே கூறியுள்ளனர். சமுதாயச் சீர்கேடுகளை எவ்வாறு நீக்க வேண்டும், சமுதாய முன்னேற்றத்திற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் அவ்விருவரும் தத்தம் நூல்களில் கூறியுள்ளனர். அவற்றை ஒப்பாய்வால் இங்கு சிறிது விளக்க முற்படுகிறேன்.

சமயப் பொதுமையும் பொறமையும்

'பூமேவு சமயங்கள் ஒராறினுக்கும் புலங்கொளும் காட்சி நல்கி பொலிந்தன எனச் சொலும் திருமுகம் ஓராறும்' (திருத்துருத்தி-11 சுப்பிரமணிய சுவாமி பதிகத்தில்) 'முழுதுலகமும் நவில் சரவண பல குக முத்தமருளே' என்று பிள்ளையவர்கள் சமயப் பொதுமறை கூற, திருமூலரோ ஒருவனே தேவன் (2104) ஒன்றது பேரூர் வழியாறு அதற்குள என்றது போல இருமுச்சமயமும்' என்று சமயப் பொதுமை கூறுகின்றனர். சமயச் சின்னங்களின் பொதுமை காண ஓங்காரத்துள்ளே ஒரு மொழியா இருந்த இறைவன் வானிடை ஒன்றாய் ஓமெனும் வெளியிடை இரண்டாய், வயங்குறு கனலிடை மூன்றாய் மீனிடையறாத புனலிடை நான்காய் மேதினியிடை ஐந்தாய் விரிந்தாய் ஊனிடை உயிருக்கயிருமாய் உறைந்தும் உற்ற நீர் நிழலெனத் தோன்றினாய் என்றும் தரைபுனல் அனல் காலம் பரம் பரிதிதண் சுடரொடு பல்லுயிர் என்று உரைதரு எண்மூர்த்தங் கொடு நின்றாய் என்று பிள்ளையவர்கள் சமயப் பொதுமை காட்டுகிறார். திருமூலர்

ஒன்றவன்தானே இரண்டவன் இன்னருள் நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து வென்றனன் ஆறுவிரிந்தனன் ஏழும்பர்ச் சென்றனன் தானிருந்தான் உணர்ந்து எட்டே என்று அதாவது அட்டமூர்த்தனே அகரமே, ஒடுக்கப் பிரணவனே என்று கூறுகிறார். உலகச் சமயச் சின்னங்களை ஒன்றுபடுத்தின் தமிழ் ஓம் வடிவில் அடக்கி உலகச் சமயப்பொதுமைகண்டு சமயப் பொதுமையை உலகில் ஏற்படுத்திட இருவர் வாக்குகளும் வழிகாட்டுகின்றன.

தத்துவப் பொதுமை

ஆறாறினுக்கும் அப்பாலாம் பரமே பரவுவார் வரமே, எண்ணே, எண்ணி எழுதற்கரிய புகழேறே, ஆறாறு தத்துவமும் வேதாந்தமும் கடந்து அவிர்வன விண்முழுதும் ஆளி ஆதி என்று பிள்ளையவர்கள் இறை தத்துவத்தைக் கூறுகிறார். 'தத்துவமாவது அகார எழுத்தே' (2180)'தத்துவம் ஆறாறு' (2184) என்று திருமூலர் முன்னமே கூறியுள்ளதை தம்மனதில் வைத்துப் பிள்ளையவர்கள் கூறியுள்ளார். இவ்வாக்குகள், வானியல் அகரத்தை விளக்கி ஒடுக்கப் பிரணவத்தை விளக்கி உலகத் தத்துவப் பொதுமை காண உதவுகின்றன.

மொழிப்பொதுமை

மொழி முதலிய ஒருமித்தவர்க்கருள் முத்தி கொடுப்பாயே- பிள்ளையவர்கள்

ஓங்காரத்துள்ளே ஒரு மொழி - (திருமந். 2676)

ஓங்காரத்தினுள்ளே அமைந்துள்ள தமிழ் மொழியைத் திருமூலர் குறிப்பிடுகிறார். இதன் உட்பொருள் வானறிவியல் தமிழ்மொழி மூலம் ஓம் மூலம் தமிழ் எழுத்து 30ஐ அறிந்து அதன் மூலம் உலக மொழிப் புதுமையைப் பொதுமையைப் பொருள் ஒலி ஒத்த சொற்களைத் தமிழுக்கு இணையான சொற்களைக் கண்டறிந்து உலக மொழிப் பொதுமை காண அவ்விருவர் கருத்துகள் பெரிதும் உதவும்.

ஏனையப் பொதுமை சமுதாயச் சீர்கேடுகளை நீக்கினால் ஏற்படும் என்க. சமுதாய உடல்நல வாழ்வுப் பொதுமை. சூதசங்கிதையில் இயமம் முதல் சமாதி முடிய எட்டு உறுப்புகள் கொண்ட அட்டாங்க யோக ஞான நெறியை 159 பாடல்கள் மூலம் சமுதாய உடல்நல வாழ்வுப் பொதுமைக் காண உதவும் கருத்து வாக்குகளைப் பிள்ளையவர்கள் குறிக்கிறார்கள். திருமூலர் 79 மந்திரப்பாக்களால் அட்டாங்க யோக நெறியை விளக்குகிறார்கள். இவற்றைத் தனித்தமிழ் இயக்கமாக இக்கால யோக அறிவியல் கருத்துகளோடு ஒப்பிட்டுவிளக்கினால் உலகச் சமுதாய உன்னத உடல்நல வாழ்வுப் பொதுமை ஏற்படும்.

சமுதாயச்சீர்கேடுகள்

எண் எழுத்தறியாமை எழுதப்படிக்கத் தெரியாமை என்ற சீர்கேட்டை நீக்க இருவர் வாக்குகளும் வழிகாட்டுகின்றன.

எண்ணே எண்ணின் மறைக்கொழுந்தே - 670 பிள்ளை

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் - 3041 (திருமந்.)

துணையது வாய்வரும் தூயநற்கல்வியே - 294 (திருமந்.)

என்று இருவர் கூறுவது தற்காலத்து அறிவொளி இயக்கத்துக்கு உதவும். தமிழ் என் ஐந்து எழுத்து, ஆறு, மந்திரமொழி மூலம் சைவ சமய வழியில் பாடநூலின்றியே எண் எழுத்து அனைத்தையும் கற்பிக்க இருவரும் வழிகாட்டுகிறார்கள்.

வறுமையும் பிச்சையெடுத்தலும் என்ற சமுதாயச் சீர்கேட்டை நீக்க இருவரும் வழிகாட்டுகிறார்கள்.

கொலை களவுகட் காமமுதற் கொடிய பாதங்கள்
நிலையழியப் போக்குவது நேர்தானஞ் சிறிதெனினும்
மலையினும் மாணப்பெரிதாம் -பிள்ளையவர்கள் வாக்கு
ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின் - (250)

பார்த்திருந் துண்மின்............
யாவர்க்கு மாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி என்று கூறுவதன் வாயிலாகத் திருமூலரும் சமுதாயச் சீர் கேடான வறுமையை நீக்க வழிகாட்டுகிறார்- (252)

முப்பத்திரண்டு சைவ அறங்கள் மூலம் அச்சீர்கேட்டை நீக்க இயலும் என்பதை இருவரும் கூறுகின்றனர்.

சமுதாயச் சீர்கேடுகளுள் ஒன்று மதுமாது பழக்கம் ஆகும். அது நீங்கும் வழியை மானநீக்கிடும். வருந்தி தேடிய,ஞானமும் கெடும், நன்மை சற்றிலை, ஈனம் என்பன யாவும் நல்கிடும், ஊனமா மது வுண்டல் தீமையே" (24-காசிரகசியம்-பிள்ளையவர்கள்.)

காமமே பிறவி வித்தாகம் கண்ணிலாக்
காமமே சிவனடிக் கலப்பு நீக்கிடும்
. . . .
காமமே நரகெலங் காணியாக்குமே - (24.2 காசிரகசியம்)

என்ற பிள்ளையவர்கள் கூற, திருமூலரோ,

காமமும் கள்ளுங்கலதிகட்கேயாகம் - (326 திருமந்)
உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வு உறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே - (328திருமந்.)
ஆர்த் தமனையாள். அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங்காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே - (201 திருமந்.)

கோழை ஒழுக்கம் இது. இவற்றை நீக்க வேண்டும் என்று திருமூலர் கூறுகிறார். பிள்ளையவர்கள் இம்மை மறமைப் பயனைக்கூறி அவ்வொழுக்கத் தீங்கை விரிவாக எடுத்துரைக்கிறார். சூதசங்கிதையிலும் காசிரகசியத்திலும் விரிவாகக் கண்டுரைலாம்.

அறஞ்செய்யாமையும் பகுத்துண்ணாமையும் மற்றொரு சமுதாயச் சீர்கேடு ஆகும். இவற்றைக் களைய இருவர் வாக்குகளும் வழிகாட்டுகின்றன.

நீர்பூத்த முப்பத்திரண்டறமும் ஓம்பும் - திருவெண்ணீற்றுப் பிள்ளைத்தமிழில் பிள்ளையவர்கள் கூற (2 செங்கீரைப் பருவம்) திருமூலரோ,

அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும் திறம் அறியார் (திருமந்:262)
இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமஞ் செய் யாதவர் தம்பாலதாகும்
உருமிடி நாகம் உரோணி கழலை
தருமஞ் செய்வார் பக்கல் தாழகிலாவே - (திருமந்:263)
ஈவது யோக இயம நியமங்கள் - (திருமந்:505. திருமூலர்)

என்று தம் நூலில் அறம் பற்றிக் கூறுகிறார்.

இருவரும் முப்பத்திரண்டு அறங்களைச் செய்ய வேண்டும் என்றும், இறைவனே அறவாழி அந்தணனாக உள்ளான் என்றும் கூறி அறம் செய்யும் உணர்வை, உயர் உயிர்க்கு உணவாக உட்டுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட கருத்துகளையும், அட்டாங்க யோக ஞான நெறிக்கருத்துக்களையும், விரிவான கருத்துகளையும் பரப்பிட, கடைப்பிடித்திட, பயன்படுத்திட, நடமாடும் கண்காட்சிக் கூடங்களையும், நிலையான கண்காட்சிக் கூடங்களையும், கல்வித் தொழில் நுணுக்கங்களையும் கணினி இணையங்களையும், பயன்படுத்திட வேண்டும். கருத்தரங்கு மாநாடுவழியும் பங்கு பெறுவோர்க்கப் பரிசளிப்பு விழா, கடைப்பிடிப்போர்க்கு, அறக்கட்டளை (32 துறைகளுக்கும்) அமைப்போருக்குப் பாராட்டு விழா வழியும் பிள்ளையவர்கள் வாக்குகளையும், திருமூலர் வாக்குகளையும் சிற்றூர் முதல் பேரூர் வரை, சிறுவர் முதல் பெரியோர்க்கும் பயன்படும் வகையில் பரப்பிடத் தமிழக அரசு பண்பாட்டுத் துறையும், திருவாவடுதுறை போன்ற பெரிய ஆதீனங்களின் மடங்களின் தலைவர்களும் செயல் திட்டம் வரைந்து செயல்படுத்துவார்களாக, செயல்படுத்திட, குருவருளும், பொருள் அருளும் நந்தியெயம்பெருமான் நல்கிட அவர்களின் இருதாளிணைகளை வணங்கி அமர்கிறேன். இக்கட்டுரையாசிரியர் பத்தாந்திருமுறையும் உலக மேம்பாடும் என்ற ஆய்வுக்கட்டுரையில் கூறப்பட்ட செயல் திட்டங்களைச் செயல்படுத்திச் சமுதாயத்தில் புது சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம்.

செய்யும் அறத்தினால் சித்த சுத்தியாம்
உய்யு மெய்ஞ்ஞானமும் உதிக்கும் அன்னதால்
நையுமிப் பிறவி நோய் நாசமெய்திடும்
மெய்யு மானந்தமிக் கெழுந்து பொங்குமே - (10:காசிரகசியம்)

தாயினு மினியதாத் தருமமொன்றனை
வாயினு மனத்திகும் மதிக்கு மெய்யினும்
காயினும் 'இயற்றுதல் கடமையாகும்
பரமசிவன் பார்வதி தேவியர்க்கு உபதேசித்தல். (7.5-காசிரகசியம்)

34. கவியின் கவிதை வாழ்வு

குரு.கோவிந்தராசன்
பூண்டி

பண்டைத்தமிழர்தம் நாகரிகத்தையும் பண்பாட்டினையும் வெளிப்படுத்திய சங்க விலக்கியங்களுக்குப் பின் தோன்றிய பக்தி இலக்கியங்கள், தமிழ் மக்களின் சமயவாழ்விற்கு உரமும் ஊக்கமும் நல்குவனவாயின. தமிழகத்தே தோன்றிய சமயங்களும், குடிபுகுந்து தழைத்த சமயங்களும் தத்தம் வேறுபாடுகளை உணர்த்தும் நூல் பல யாத்து மொழிக்கு வளமூட்டின. காலப்போக்கில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களின் விளைவாகத் தமிழர்களின் கல்வி நிலையிலும், சமய வாழ்விலும் மாற்றங்கள் தோன்றின. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தோன்றிய பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழகம் பழைய மாட்சிமைகளை இழந்தும், அந்நியராட்சியின் விளைவான புது நிலையை உவந்தும் நிற்கும் நிலை எய்தியது. மகாவித்துவான் பழமை, புதுமை ஆகிய இருமையையும் இணைக்கும் பண்பாட்டுப் பாலமாகத் திகழ்ந்தார். பேரிலக்கியங்கள் உருவாகும் நிலைமாறிச் சமயச் சிற்றிலக்கியங்கள் பெருமளவில் தோன்றும் நிலை ஏற்பட்டது. காலச் சூழலுக்கு ஆட்பட்ட மகாவித்துவான்,புராணங்களையும் சிற்றிலக்கியங்களையும் படைக்கலானார்.

பிள்ளையவர்கள் செல்லுமிடமெல்லாம் பலர் வேண்டுகோளுக்கு இசைந்து நூல்பல யாத்தார். பிற்காலக் கம்பர் எனப் போற்றப்பட்ட பிள்ளையவர்கள் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடினார். தலபுராணங்கள், பிள்ளைத்தமிழ், அந்தாதி வகைகள், சரித்திரம், கலம்பகம், குறவஞ்சி, வெண்பா வகை எனச் சிற்றிலக்கியங்கள் பல படைத்தார். இவர் பாடிய தலபுராணங்கள் இருபத்திரண்டும் பிள்ளைத்தமிழ் பத்தும் இவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்தன. திரிசிரபுரத்தில் பெரிய புராணச் சொற்பொழிவு செய்தார். பண்டைய நூல்களைச் சேர்ந்து மாணாக்கர்கட்குக் கற்பித்தமையால் குமரகுருபரர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் ஆகியோர் நூல்கள் தமிழகத்தேப் போற்றப்பட்டன. 1851-ல் சைவ எல்லப்பரின் செவ்வந்திப் புராணத்தைப் பதிப்பித்தார். இதுபோன்று காஞ்சி புராணம், திருவானைக்கா புராணம், கல்லாடம் முதலிய நூல்களைப் பதிப்பித்தார். திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக அமர்த்தப் பெற்று துறவியர்கட்கும், பிற மாணாக்கர்கட்கும் தமிழ் கற்பிக்கும்போது, ஆதீனச்சிறப்புக்களை வைத்து அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம் பாடினார். ஆதீனம் மகிழ்ந்து மகாவித்துவான் எனும் பட்டம் தந்து சிறப்புற்றது. தமிழகத்தே இருந்த பல்வேறு ஆதீனங்களுடன் பிள்ளையவர்கள் கொண்ட தொடர்பால் பல புதிய நூல்கள் கிடைத்தன. இவர் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள் இவரைப் பெரிதும் போற்றினர். கோபால கிருஷ்ண பாரதியார், ஆறுமுக நாவலர் போன்றோர் தம்

நூல்களுக்குச் சிறப்புப் பாயிரம் பெற்றனர். இவரிடம் கற்றோர் பிற்காலத்தில் பெரும் புலவர்களாக விளங்கினர்.

பிள்ளையவர்கள் முன்னோர் மரபினை வழுவாமல் பழந்தமிழ் கவிஞராக விளங்கினார். எனினும் புதிய சிந்தனை, சமயப் பொதுமை நாட்டம் கொண்டு விளங்கினார். காலச் சூழலுக்கு ஏற்ப பல்வேறு சிற்றிலக்கியங்களைப் படைக்க வேண்டியவரானார். அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி பல சிவத் தலங்களுக்குச் சென்று புராணங்கள் பாடினார். இவர்தம் புராணங்கள் அக்காலத்து வரலாற்றினையும், மக்களின் பண்பாட்டினையும் உணர்த்துவன.

இவர்தம் பாடல் இயற்றும் திறம், விரைவு, இலக்கண, இலக்கிய வரலாற்றுக் கருத்துக்கள் ஆகியவற்றை இவர் நூல்களில் காணலாம். சமய வேறுபாடு கருதாது பிற சமயத் தமிழ்க் காப்பியங்களைப் பயின்றும், பாடம் சொல்லியும் வாழ்ந்தார். ஆதீன முதல்வர் மீது பிள்ளைத்தமிழும், கலம்பகமும் பாடியது போன்று தம்மிடம் கற்ற மாணாக்கர் மீதும் சிறப்புக் கருதிச் சிற்றிலக்கியம் படைத்த பெருமையும், பண்பும் உடையவராய்த் திகழ்ந்தார்.

மகாவித்துவான் தாம் இயற்றிய பத்துப் பிள்ளைத்தமிழ் நூல்களுள் மானுடர் பற்றி அமைந்த சேக்கிழார் பிள்ளைத்தமிழ், அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் ஆகிய இரண்டிலும், திருவாவடுதுறை ஆதீன முதல்வராய்த் திகழ்ந்த மாசிலாமணி தேசிகரைப் பின்பற்றிக் காப்புக்கடவுளர்களாகத் திருத்தொண்டர், சந்தான குரவர்கள் ஆகியோரைக் காட்டி உள்ளார்.

பிள்ளையவர்கள் குமரகுருபரர். பகழிக்கூத்தர், சிவஞான யோகிகள் ஆகியோர் பாடிய சைவம் சார்ந்த பிள்ளைத்தமிழ் நூல்களைப் போற்றிப் பின்பற்றினார். 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய குமர குருபரர், திருச்செந்தூர் முருகன் அருள் பெற்று இளமையிலேயே பாடத்தொடங்கினார். பிள்ளை அவர்கள் குமரகுருபரரின் சரித்திரத்தை 345 பாடல்களில் விரிவாகப் பாடியமையால் இவர் கொண்ட ஈடுபாட்டினை அறியலாம். குமரகுருபரர் மதுரை மீனாட்சியம்மை மீதும், வைத்தீஸ்வரன் கோயில் முத்து குமாரசுவாமி மீதும் தனித்தனியே பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்.

குமரகுருபரர், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் அம்மையைப் பெயரிட்டழைக்கும் இடங்களில் உருவக நிலையில் தம் கற்பனையை வெளிப்படுத்தியுள்ளார்.

மகரக் கருங்கண் செங்கனி வாய் மடமான் கன்று (வருகை-8)

மதுரையில் வளர் கிளி (முத்தம் -9)

தமிழொடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்த கொடி (சப்பாணி:1-5)
வைகைத் துறை சிறை அனப்பேடை (அம்மானை-4)

என அம்மையை மான், கிளி, கொடி, அன்னம் ஆகியனவாக உருவகம் செய்துள்ளார்.

மகாவித்துவான் தமது திருவெண்ணிற்றுமை பிள்ளைத்தமிழில், அம்மையை விளிக்கும் போது,

மணவையி லமர் குயில் (சப்பாணி-9)

மணவை மடப் பிடி (முத்தம்-10)

நல்லூர் அரும்புமயில் (முத்தம்-8)

வில்லார் மேனியினே
ராகிய பாதியில் வாழ்குயில் (நீராடல்-9)

எனவும், அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவியை

சினமுடை மதகரி வனம்வரு மொரு மயில் (செங்கீரை-9)
செங்கம லத்தைந கைக்குழ தக்குயில் (செங்கீரை-10)
கூன்முளை ஒன்றருள் பைங்கிளி (தால்-9)

எனவும், காந்திமதியம்மை பிள்ளைத் தமிழில்,

செல்வத் திருவுறை யூரில் விளங்கு செழுங் குயில் (தால்-6)

எனவும், குமரகுருபரரைப் போன்றே அம்மையை உருவகப்படுத்திக் கூறியுள்ளார்.

குமரகுருபரர் இயற்றிய சிதம்பரச் செய்யுட் கோவையில்

கனக மார் கவின்செய் மன்றில் அனக நாட கற்கெம் மன்னை
மனைவிதாய் தங்கை மகள் (பா:33)

எனச் சுட்டியுள்ளார்.

மணத்தலால் அம்மை சிவனுக்கு மனைவி என்றும், சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலால் தாய் என்றும்,சக்திக்கு முன்னதாகவே சிவம் தோன்றி இருப்பதால் அம்மை தங்கையென்றும், சக்தியின் பிறப்பிடம் சிவமாதலின் அம்மை மகள் என்றும் கூறும் மரபுக்கு எற்றவாறு

மகாவித்துவானும் தாம் பாடிய மங்களாம்பிகை பிள்ளைத்தமிழில்,

கும்பேசர்க்கு
மேவு தாய் தங்கை
விழை மனைவி யாகி. . . . (காப்பு-பா:6)

விளங்குதலைச் சுட்டிப் போற்றியுள்ளார்.

குமரகுருபரர் தலங்களைக் குறிப்பிடும் போது அவற்றைத் தமிழோடு இணைத்து பாடியுள்ளமை போன்று மகாவித்துவானும் பாடியுள்ளமையைக் காணலாம்.

அன்னம் பொலியுந் தமிழ் மதுரை (மீ.பி.தால்:1)
தெய்வத் தமிழ்க்கூடல் (மீ.பி.முத்:6)

மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி (மு.பி.முத்:1-5)
எனக் குமரகுருபரர் பாடியுள்ளதையும்,

செந்தமிழ் உறந்தை (காந்திமதி தால்:-9)
தமிழ் கெழிய குக்குட நகர் (காந்திமதி தால்:10)
தண்டமிழ் வளம்பொலி குடந்தை (மங்க. சப்:3)
தண்டமிழ்க் குன்றை (சேக். சப்:1)
என மகாவித்துவான் பாடியுள்ளமையையும் அறியலாம்.

சிவஞான முனிவர் மீது கொண்ட பற்றால் இவர் 'திருவாவடுதுறைச் சிவஞான யோகிகள் சரித்திரம்' என்ற நூலைப் பாடியுள்ளார்.

விநாயகர் குறுநடை நடந்து தம் தந்தையார் திருமேனியைப் பற்றியேறித் தம் கொம்பினைச் சடைத் தொகுதிக்குள் நுழைத்தும், சடையில் உள்ள கங்கை நீரைப் புழைக் கரத்தால் எடுத்துத் தந்தையார் கையிலுள்ள நெருப்பில் தெளித்தும், பிளைக் கோட்டினைப் பன்றிக் கோட்டொடு பொருத்தி முழுமதியாக்கி வானில் செலுத்தியும், அக்கோடுகளைக் கொண்டு தந்தையார் கரத்துள்ள துடியினைக் கொட்டியும் விளையாடும் காட்சியினைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழில் காணலாம் (சிறுபறை,பா:1).

மகாவித்துவான் பாடிய திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழில், இப்பிள்ளைச் சிறுகுறும்பு செய்யும் முருகனைக் காண முடிகிறது (வாராணை,பா:3).

பகழிக் கூத்தர் அருளிய பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தில், பாசடை கறிக்கும் புனிற்றெருமை தன் கன்றுள்ளி, ஓடை கடந்து, வாழைத் தோட்டத்தை மிதித்துப் பாலாக்கனிகளை இடறிச் சங்கீன்ற முத்துக்கள் உராயப் பால் சுரக்கம் காட்சி,

கந்தமலி நெட்டிதழ்க் குறமுகைப் பாசடைக்
கமலமல ரைக்க றித்துக்
கடைவாய் குதட்டும் புனிற் றெருமை தன்குழக்
கன்றுக் கிரங்கி யோடிக்
கொந்தவிழ் கருங்குவளை ஓடைத் தடாகக்
குரம்பைக் கடந்து செந்நெற்
குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக்
குருத்தற மிதித்து மீளப்
பந்தரிடு தூலடிப் பலவுதரு முட்குடப்
பழமெலாம் இடறி வெள்ளைப்
பனிலஞ் சொரிந்த நித் திலமுறுத் தப்பதை
பதைத்துமுலை பாலு டைந்து
சிந்த மக ராழியலை யொடுபொருத செந்தூர
செங்கீரை யாடி யருளே......
என நயம்படக் கூறியுள்ளார். (திருச்சிசெந்தூர் பி.த. செங்கீரை பா:4)
மகாவித்துவான் இயற்றிய அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழில் மலர்

மேய்ந்து வாய் குதட்டும் புனிற்றெருமை, மடுவை உழக்கி தென்னை மரத்தில் உடற்றினவு மாற்ற, அதனால் உதிர்ந்த பழங்கள் கதிரவன் தேரோட்டும் அருணனது தலையினை மோதியவன் விழக்கதலி தலை சாய்க்கும் சோணாடு என வருணித்துள்ளார். இதனை,

> .... மலர் மேய்ந்து கடைவாய் குதட்டும் புனிற்றெருமை
> வள்ள மனைய வாய்க்குமுத மடுவை யுழக்கி நெடுங் கோட்டு
> வளர்ந்தென் னருகுற் றுடற்றினவு மாற்ற புரிஞ்ச வுதிர் - பழமாத்
> துள்ள வுரு ளொன் றுடைக்கவரி துளங்க வருணன் தலைமோதித
> துடித்து விழக்கூன் குலை சாய்த்துத் தோட்டுக் கதலி
> தலைசாய்க்கும்..... (அம்மானை பா.7)

எனக் கற்பனை வளம் விளங்கக் காட்டியுள்ளார்.

பிள்ளையவர்கள் தோற்றம் இயல்பிலேயே வணங்கத் தக்கதாக இருந்தது. தமிழ்ப் பண்பாட்டின் இருப்பிடமாகத் திகழ்ந்த பிள்ளையவர்கள், தம் இறுதிக் காலத்தை ஆதீனச் சூழலிலேயே கழித்து மறைந்தார். வாழ்ந்த 61 ஆண்டுகளும் தமிழோடு இணைந்து வாழ்ந்தனர்.

35. பிள்ளைத் தமிழ் மாண்பு

மு. கோவிந்தராசன்
சென்னை

இங்கு, திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய, சேக்கிழார் பிள்ளைத்தமிழ் ஆய்வுக் கருப்பொருளாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றது.

பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ்மொழியில் காணப்பெறும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத்தமிழில் வைத்துக் கூறப்பெறும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் என்னும் பத்துப்பருவங்கள் பெண்பாற் பிள்ளைத்தமிழில் கூறப்பெறும்.

இப்பிரபந்தம் தெய்வத்தை அன்றி, ஒரு பெரியோரைப் பிள்ளையாகப் பாவித்துத் தம் அன்புடைமை தோன்றுமாறு பாராட்டிப் பாடுவதாகும். இதன் இலக்கணத்தைப் 'பன்னிருபாட்டியல்' என்னும் நூல் விரிவாகக் கூறுகின்றது. இந்நூலிலுள்ள 'குருவணக்கமும் அவையடக்கமும்' என ஒருறுப்பு சிறப்புறக் கூறப்பெற்றுள்ளது. இதனுள் தமது ஆதீனச் சிறப்பையும், குருமூர்த்தியாய் வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மகா சந்நிதானத்தின் பெருமையையும், திருக்கைலாய சந்தானத்தையும் அதனுள் அச்சந்தானத்தையும் தமது ஆதீனத்தையும் சேர்த்து இணைக்கும் உமாபதி சிவாசாரியார் சுவாமிகளது பெருமையையும் எடுத்துக் கூறியிருப்பது இவ்வாதீனத்து மீது இவருக்கிருந்த பற்றினை வெளிக்காட்டுகிறது.

இச்செய்யுளில் சேக்கிழாரை முருகவேளுக்கும், மூத்த பிள்ளையாருக்கும் சிவபெருமானுக்கும் ஒப்புமை கூறும் சிலேடை பாராட்டிற்குரியது. காப்புப் பருவத்தில் பிற ஆசிரியர்கள் கூறிய முறையையும் இலக்கண முறையையும் அடியோடு மாற்றினார் பிள்ளையவர்கள். தம் பாட்டுடைத் தலைவராகிய சேக்கிழார் இயற்றியருளிய திருத்தொண்டர் புராணத்துப் பாட்டுடைத் தலைவர்களாகிய உண்மை நாயன்மார்களையே காப்புக் கடவுளர்களாக வைத்துப் பாடிய முறை மிகவும் போற்றத்தக்கதாகும்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

சேக்கிழார் பிறந்த ஊர் குன்றத்தூர் ஆகும். இது தொண்டை நாட்டில் உள்ளது. இதைச் சேர்ந்த நத்தத் திருமலையில் முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பர். எனவே இது,

குன்றுதோறாடலில் ஒன்றாகும். இங்கு நாயனார் திருக்கோயில் ஒன்று தனியே உண்டு. இதனை அடுத்து வடக்கே நாயனாரது வழிபடுதலமாகிய 'திருநாகேச்சுரம்' உள்ளது. பல்லாவரத்தினின்றும் ஆவடியிலிருந்தும் இத்தலங்கட்குச் செல்லலாகும்.

இப்பிள்ளைத்தமிழில் சேக்கிழாரின் குலம், குணம், அதிகாரம், கல்வி, பக்தி, ஞானம் முதலியவற்றின் பெருமைகளைப் பிள்ளையவர்கள் பலவாறாகப் பாராட்டியுள்ளார். சேக்கிழாரை ஓர் 'அவதார புருஷராகவே' கருதினார். இந்நூலுள் காப்புப்பருவம் புது முறையில் பொருத்தமுற அமைக்கப் பெற்றிருப்பது போற்றத்தக்கது.

இப்பிள்ளைத்தமிழில் பலவகைச் சொல்லணிகள், பொருளணிகள் சொற்சித்திரங்கள், வருணனைகள், புராண வரலாறுகள், நாயன்மார்களின் பெருமைகள், தேவாரத்திலுள்ள மந்தணப் பொருள்களுக்கு விளக்கங்கள், சைவ சித்தாந்தப் பேருண்மைகள், வேளாளர் சிறப்பு, தொண்டை நாட்டின் வளச் சிறப்பு ஆகியவை சிறப்புற்று விளங்குகின்றன.

'மகாவித்துவான் பிள்ளையவர்களே மீண்டும் மீண்டும் இதனைப் படிப்பித்துக் கேட்டு இன்புறுவார்' என்கிறார் 'தமிழ்த்தாத்தா' டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் அவர்கள்.

பாயிரம் - விநாயகர் வணக்கம்

எந்த நூலுக்கும் மங்கலமொழி முதலில் வகுத்துக்கூற வேண்டும் என்பது இலக்கணமாதலின் 'மா' என்று பாடலைத் தொடங்கினார் பிள்ளையவர்கள். மா என்றால் பெருமை என்பது பொருளாகும்.

விநாயகக் கடவுள் பேருருக் கொண்டு மேலோங்கி வளரும் போது வானத்துள்ள பிறைச் சந்திரன் தோன்றிய முறைகள் கூறப்பெற்றுள்ளன. கயமுகாசுரனைக் கொல்ல அவர் ஒரு கோட்டினைப் பறித்துக் கையிற் கொண்டார் என்பர். இக்கோட்டினையே எழுத்தாணியாகக் கொண்டு பாரதம் எழுதினார் என்பதும் நினைக்கத்தக்கது. கலி விருத்தத்தாலானது. இங்கு இடம் பெற்றிருக்கும் 'மலரடி' என்பது ஞானத்தையும், 'சிலம்படி' என்பது யோகத்தையும் 'அடி வாழ்த்தல்' என்பது கிரியையும் 'அடி வணங்குவாம்' என்பது சரியையையும் குறிக்கும். 'உலகெலாம்' என்னும் தேவவாக்கை வேதவாக்காகக் கொண்டு என்றமையால், பெரியபுராணம் மறைபோல் போற்றத்தக்கது ஒன்றாயிற்று.

குரு வணக்கமும் அவையடக்கமும்

குரு என்ற சொல் அஞ்ஞான இருளை ஒழிப்பவன் என்பது பொருளாகும். இங்கு, உமாபதி சிவாசாரியாரைக் 'குரு' என்கிறார் ஆசிரியர். இறைவனிடம் ஞானநூல் கேட்ட சைவ முதல் குருநாதன் நந்திதேவர் என்பர். இந்நந்தி தேவருக்குப்பின் எட்டாவது குருமூர்த்தி உமாபதி சிவம் ஆவர். இந்த உமாபதி சிவாசாரியாரே நமது பிள்ளையவர்கள் காலத்துக் குரு மூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக குரவற்குப் பத்தொன்பதாவது முன் தோன்றல் ஆவர்.

சிவஞானபோதம், சிவஞான சித்தியார் இவைகளைப் பின்பற்றிச் சித்தாந்த நுணுக்கங்களை எல்லாம் விளக்குவது சிவப்பிரகாசமாகும். 'முதலிய' என்றதனால், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை விளக்கம், சங்கற்பநிராகரணம் முதலான நூல்களை உமாபதி சிவாசாரியார் இயற்றினார் என்பர். குன்றை மேவுதல், ஏர்வளம் கொள்ளல், பெருமையின் மேலோங்கிச் சிறத்தல் இம்மூன்றிலும் சேக்கிழாருக்கும் முருகனுக்கும் ஒப்புமைக் கூறப்பெற்றுள்ளது. முருகன் மட்டுமின்றி, விநாயகர். சிவபிரான் மூவருக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது.

காப்புப் பருவம்

பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையைக் கடவுள் பாதுகாக்க வேண்டும் என்று கூறப்படும் பருவத்தைத் தெரிவிக்கும் பாடல் தொகுதி காப்புப்பருவமாகும். இது இரண்டாம் மாதத்தில் கூறப்படும். இந்தக்காப்புப் பருவத்தில் திருமால், சிவன், பார்வதி முதலியோர் கூறப்படுவர். இந்த மரபை அறவே மாற்றிப் பிள்ளையவர்கள் தமது நூலுக்குப் பாட்டுடைத் தலைவராகச் சேக்கிழார் பெருமானையே கொண்டார்.

ஆருரர்-திருவாரூர்த் தியாகராசப் பெருமான். இவர் 'தில்லை வாழந்தணர் தம் மடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகை செய்தமை குறிக்கப்பெற்றது. தில்லை வாழந்தணர், திருநீல கண்டர், இயற்பகையார், இளையான் குடி மாறனார், மெய்ப்பொருள் நாயனார், விறன் மிண்டர், அமர் நீதியார் என வரும் ஏழு நாயன்மாருள் தில்லை வாழந்தணர் குறித்து இங்கு கூறப்பெற்றுள்ளது.

'இலை மலிந்த வேனம்பா' என்ற பாடலில், மரீசி, அங்கிரசன், புலகன், வசிஷ்டன், அத்திரி, புலஸ்தியன், கிருது என்னும் ஏழு முனிவரின் அருளைப் பெற்றவர் சேக்கிழார் என்பர். ஏழு குதிரைகள் பூட்டிய தேரின் மீது சூரியன் வருதல் மரபாகும். 'சப்தா' என்றும் பெயருடைய ஒற்றைக் குதிரை இங்குக் கூறப்பெற்றுள்ளது. தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் ஏழு பிறவிகளுள், 'வெண்டாமரை மயில் சேக்கிழார் திருநாவிற் குடி கொண்டாள்' எனப் பாராட்டுகிறார் உமாபதி சிவாச்சாரியார்.

'மும்மையாலுலகாண்ட' என்ற பாடலில், சேக்கிழாரைத் தேவாரம் பாடிய மூவர்களுக்குச் சமமாக, நயம்பட ஒப்புமையாகக் குறிக்கப் பெறுகின்றது. சூரபன்மனால் வருத்தமடைந்த விண்ணோர் தம் தேவியருடன் சீகாழியில் தங்கியதாகக் கூறுவர். தேவாரம் 'தமிழ் மறை' என்று போற்றப் பெறுகின்றது.

திருநாவுக்கரசரைக் கடலிற் கட்டிக் கடமலிற் பாய்ச்சவும் அக்கல் மிதந்தது. அவரையிட்டவன் மறக்கல்லொடு துயர்க்கடலில் ஆழ்ந்தனர் என்பர். தம்மையிட்டவர் மனம் புழுங்கவும். தாம் ஆழாது, அற்புதம் பல நிகழ்த்திச் சிவனருளை உலகறிய வைத்தார். சேக்கிழார் கைத்தலம் குவித்திடு

முன்னர் தாம் அவர் மனவறைக் குவித்திடுவதற்குப் புலியூர்க் கோட்டம் மேவினார் என்பதை நயமாகக் கூறியுள்ளார். புலியூர்க் கோட்டம் - சிதம்பரக் கோயில் வியாக்கிரபாத முனிவரால் பூசிக்கப்பெற்ற தலமாதலின், 'புலியூர்' என்று சிதம்பரத்துக்கு ஓர் பெயரும் உண்டு.

என்பைப் பெண்ணாக்கிய அதிசயம் திருமயிலையில் நிகழ்ந்தது. இதனை நிகழ்த்தியவர் திருஞானசம்பந்தர். பிரமசாரியாய் இருக்கும் போதே ஒரு பெண்ணைப் பிறப்பித்தது அதிசயமே என்பதை நயமாகக் கூறப்பெற்றுள்ளது. சேக்கிழார் தமது பெரியபுராணத்துப் பலவகைச் சாதியினரின் குறி, குணம், செயல், வாழ்க்கை, மொழி, உணவு முதலிய பலவற்றையும் கூறியுள்ள திறமை போற்றுதற்குரியது.

அதிகாரி, நிருவிகாரி, நிரகங்காரி, காலியாகாரி, சோதியோங்காரி, அருளேயவாங்காரி, இவையனைத்தும் ஒரு பொருள்மேல் வந்த பல பெயர்கள்; சிவனைக் குறிப்பன. பாலாற்றின் அலை சங்குப் பூச்சியை வீசியெறிய அது நீர்த்துறைக்குச் சமீபமாக ஓங்கி வளர்ந்துள்ள கமுக (பாக்கு) மரங்களின் மேல் தவழ்ந்து செல்வது. முகிலினூடே நுழைந்து பிறைச்சந்திரன் செல்வது ஒக்கும் என்றார். பிறைச் சந்திரன் சங்குப் பூச்சிக்கும் முகில் கமுக மரத்தின் செறிவுக்கும் உவமையாகும்.

கழற் சிங்கன், இடங்கழியார், செருத்துணையார், புகழ்த் துணையார் கோட்புலியார், என்னும் ஐந்து நாயன்மார்களின் பெருமையும், வேளாளரின் பெருமையும் இங்குக் குறிக்கப் பெற்றுள்ளது. வேளாளர்க்குக் குவளை அடையாள மாலையாகும். சுந்தரர் நாட்டில் குடிக்கெழுந்து அருளிய போது கோட்புலியார், சிங்கடியார், வனப்பகையார் என்னும் தம் இரு மக்களையும் அடிமையாகக் கொண்டருளிய வேண்டியபோது அன்னார் அவர்களை முதன்மையாகக் கொண்டார். கொண்டதற்கோர் சுந்தரர் தம் பதிகத்துத்தம்மைச் 'சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூரன்' என்றும், 'நாவலூரான் வனப்பகையப்பன்' என்றும் கூறுவது நினைக்கத்தக்கது.

செங்கீரைப் பருவம்

பிரபந்தத் தலைவனாகிய குழந்தை செங்கீரையாடுதலைப் பற்றிய பருவமாகும். குழந்தைகள் சாய்ந்தாடும் ஒருவகை ஆட்டமாகும். ஒரு காலைப் பதித்து ஒரு காலைத் தூக்கி இருபுறத்தும் தலையசைத்துக் கிளி சாய்ந்தாடுவது போலக் குழந்தை ஆடுவதாகும். இப்பருவத்தில் குழந்தை தவழும் போது ஒரு முழந்தாளையூன்றி ஒரு முழந்தாளை மடித்துத் தூக்கி இரு தோளிலும் மாறிமாறித் தலையொன்றும்படி சாய்ந்தாடுதலாகும். இது ஐந்தாம் மாதத்திற் கூறப்படும்

குழந்தையின் பொருள் நிரம்பாத மென் சொற்களுக்கும் யாவரும் பொருள் கொள்வர். அது போல, என் உரை சிறியதாயினும் பொருளின் பெருமை கருதி மெய்யறிஞர்கள் ஏற்பர். எனவே இனி, ஒத வேண்டுவது ஒன்றுமில்லை என்கிறார் பிள்ளையவர்கள். அநபாயன் அவையிலுள்ளோர் நயந்து வியந்து மெய்ப்பாட்டினொடு பாராட்டி மகிழச் சேக்கிழார் புராணம்

விரித்தருளினார் என்பதை உணர வேண்டும். சேக்கிழார் புராணம் உமாபதி சிவன் உணர்ந்து, பாராட்டி, அருள் செய அடைந்தாய்.

பெரிய புராணம் தில்லை ஆயிரங்கால் மண்டபத்தில், ஆயிரம் சிவனடியார்கள், நாயன்மார்கள் முன்னிலையில் அரங்கேறியது. வடிவத் தோற்றம், அனைவர்க்கும் நல்வாழ்வளிக்கும் போற்றி, தூய்மை, செவ்வை மொழிகள் நற்பயன் விளைத்தல், வீரநடை, பழுமரம் பழுத்தது போன்ற பயன்படல், மும்மலங்களும் அறவே தலைகாட்டாதவாறு ஒழிக்கும் வீரம், ஞான மூட்டல் முதலானவை இங்குக் கூறப்பெற்றுள்ளன. சேக்கிழார் குழந்தை அழகும் வருணிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானே உலகறியச் சொல்லியபடி யென்னுமாறு சேக்கிழார் அவதரித்து, அவரவர் செயல் முதலியவற்றை உணர்ந்து விரித்தருளினார்.

தாலப்பருவம்

குழந்தையைத் தொட்டிலில் இட்டு, நாவையசைத்துப் பாடும் பருவத்தைக் கூறும் பகுதி இதுவாகும். எட்டாம் மாதத்தில் கூறப்படுவதாகும். சங்கீன்ற முத்துகளைத் தாம் குவித்திருப்பவும், அக்குவியலின் மேல் அன்னம் ஏறி இளவெயில் காயவே, கள்ளுண்ட செருக்கும் அதிகப்படக் களமர் தாம் குவித்தவை இன்னவென்பதுந் தெரியாது அறிவு மயங்கி நாணினர்.

வெள்ளொளி பரவல், பேரொலியெழல், புலவர் அமுது கொள நெருங்குதல், அரம்பை எழுதல், நாகேசன் வைகுதல், திருமடந்தை காமுறல், இத்தன்மைகளால் குன்றத்தூர் பாற்கடலையொத்திருக்கிறது எனச் சிலேடை நயம் பெறக் கூறப்பெற்றுள்ளது. வெண்ணிறமுடையவராய் இருந்த விஷ்ணு, அக்கடல் கடைந்த பின்னர் ஆலகாலவிட வேகத்தால் கரிய நிறமுடைய பச்சைவண்ணராயினார் என்பர். பின்னர், காஞ்சியில் இறைவனை வழிபட்டுச் சிவப்பு நிறம் பெற்றுப் பவள வண்ண ராயினார் என்னும் செய்தியை இங்கு அறிய முடிகின்றது. 'மணக்கும்' என்ற சொல் பல முறை வர, சந்தர்ப்பத்திற்கேற்பப் பொருள்கொள்ளப் பெற்றது. தீர்கை புரிந்து மலநீக்கஞ்செய்து நன்ஞானத்தையும் பதிப்பித்துத் திருவருட் பேரின்பத்தை அடையச் செய்யும் முறை சைவசமயத்தின் தனிச் சிறப்பாகும் என்பர். ஆதிசேடன் இப்பூவுலகைத் தன் தலைகளால் தாங்குகிறான் என்பது மரபாகும். அவன் தலையால் தாங்கும் பூவுலகைத் தன் ஒற்றைத் தோளில் வைத்துப் பரப்புபவன் அநபாயன், அவன் வெற்றிச் சிறப்பும் காத்தல் எளிமையும் இங்குக் கூறப்படுகின்றது.

சப்பாணிப்பருவம்

பிரபந்தத் தலைவனாகிய குழந்தை கையுடனே கையைச் சேர்த்துக் கொட்டும் பருவத்தைக் கூறும் பகுதி இதுவாகும். ஒன்பதாம் மாதத்தில் கூறப்படுவதாகும். உதயகிரியில் எழுகின்ற சூரியன் உலகிற்பரந்துள்ள இருளைப் போக்கித் தன்னொளியைப் பரப்புதல் போன்று சேக்கிழார் குன்றை யாங்குன்றுதித்து மக்களது உளத்துப் பரந்திருந்த அஞ்ஞான இருளைப் போக்கி ஞான வொளியைப் பரப்பினார் என்பர்.

சேக்கிழாரின் திருவாயினின்று எழுந்த பிரதாபம் சூரியனைப் போலே சூடேற்றி உள்ளத் தாமரைகளை எல்லாம் மலர்த்தியது. அவர் திருக்கையினின்று எழுந்த புகழ் சந்திரனைப்போலே குளிரச் செய்து உள்ளத் தாமரைகளை எல்லாம் குவித்து ஒன்றுபடச் செய்தது. பிரதாபத்தைச் சிவப்பு நிறமுடையதாகவும் புகழை வெண்மை நிறமுடையதாகவும் வருணித்தல் கவி சமயமாதலின், அதற்கேற்பச் சூரியனையும் சந்திரனையும் முறையே உவமையாக நயம் பாராட்டத்தக்கது. சேக்கிழார் ஈன சமயத் தொடக்கெல்லாம் ஒழித்தவர் என்பதும், மலச் செருக்கு ஒழித்து வாதை தீர்த்தவர் என்பதும் பிரமவிஷ்ணு இந்திராதி பதவிகள் அடையும் விருப்பத்தையும் தவிர்த்து அவைகளினும் மேலான சிவகதி பெற வழிகாட்டியவர் என்பதும் பெற வைக்கப் பெற்றவையாகும்.

நடராசப் பெருமானின் திருமாலையும் திருநீறும் திருப்பரிவட்டமும் அளிக்கப்பட்டுச் சேக்கிழார் பெருமை செய்யப்பெற்றதை உமாபதி சிவன் வாக்கினால் அறிந்துணர்க. இருபத்து நான்கு கோட்டங்களின் பெயர்கள் இப்பிள்ளைத் தமிழில் தரப்பெற்றுள்ளன. அவற்றினுள் ஒன்று புலியூர்க் கோட்டமாகும். அதன் சிறப்பும் கூறப்பெற்றுள்ளது. சேக்கிழார் நல்நூல் ஆசிரியன், உரையாசிரியன், போதகாசிரியன், ஞானாசிரியன் என்ற நான்கு பெருமையையும் பெற்றுள்ளார் என்பதும் இங்குக் குறிக்கப் பெற்றுள்ளது. திருநாகேச்சுரம், திருவிந்திர நீல பருப்பதம், இரத்தினகிரி, திருவீங்கோய் மலை, திருக்கைலாயம் முதலான சிவதலங்களுடன் குன்றத்தூர் ஒப்புமைப்படுத்தப் பெற்றுள்ளது.

முத்தப் பருவம்

வாய் முத்தம் தருமாறு குழந்தையைக் கூவியழைக்கும் பருவத்தைப் பற்றிய பகுதி இதுவாகும். இது, பதினோராம் மாதத்திற் கூறப்படும். இறைவன் சங்கத்திருந்து ஆராய்ந்தமை, கயிலாயம் இவர்ந்து மாதேவனையும் உள்ளுருக்கியமை, எலும்பைப் பெண்ணாக்கியமை, முலையுண்ட பாலனை அழைத்தமை முதலான செய்திகள் இங்குக் கூறப்பெற்றுள்ளன. இப்பருவத்தில் சேக்கிழார் பெருமை, தேவர்க்குக் கொடுக்கும் உணவு, தொண்டை நாட்டில் கால்வாய் வழியாக ஓடும் காலாறு நாட்டுவளம் ஆகியவற்றின் சிறப்பு முதலியன விளக்கப்பெற்றுள்ளன.

வாரானைப்பருவம்

பிரபந்தத் தலைவனாகிய குழந்தையை அருகில் வருமாறு அழைக்கும் பருவத்தைக் கூறும் பகுதியாகும். 'வருகைப் பருவம்' என்றும் இது அழைக்கப்பெறும். இது பன்னிரண்டாம் மாதத்தில் நிகழும். சேக்கிழார் மரபு சேவையார் குலமாகும். 'சேக்கிழார் திரு மரபு சிறந்ததன்றே' என்கிறார் உமாபதி சிவம். சேவை (இடபத்தை) வைத்துக் கொண்டு உழவுத் தொழில் புரிவபவராதலால், சேவையார் எனப்படுவர். அந்த மரபில் தோன்றிச் சேக்கிழார் சிறப்புற்றதால், 'சேவையார் குலசிகாமணி' என அழைத்தனர். சாதாரண தாமரை மலர்கள் மதிக்கும் பனிக்கும் உதவாது குவியும் தன்மையுடையன. சேக்கிழாருடைய பாதகமலங்களோ அடியவரின்

மதிக்கும் அவர்களுடைய கண்களிலிருந்து பெருகும் பனிக்கும் (மகிழ்ச்சிக் கண்ணீருக்கும்)உவப்பன. மதி என்பது சிலேடையால், சந்திரன், அறிவு என்ற இருபொருள் உடையது. இவ்விரண்டுக்கும் வேற்றுமை இருப்பினும், சொல்லொப்புமை பற்றி ஒன்றாகக் கொண்டது.

உமாபதி சிவாசாரியார் அருளிய சிவப்பிரகாசத்தில் முத்தி பேதங்கள் இயல்பு கூறும் திருப்பாட்டின் பொருளை அடியொற்றிய கருத்துகள் இங்கு இடம் பெற்றுள்ளன. கன்னல், கந்தி, சாலி, கதலி முதலான இடங்களில் முத்துத் தோன்றும் இடங்களாகும். அவற்றின் சிறப்பும், சேக்கிழாரின் திருத்தாள்களின் சிறப்பும், அவரது குணமும் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன. திருவாலங்காட்டு வரலாறும் (பழையனூர்), வேளாளர் வரலாறும் இடம் பெற்றுள்ளன.

விளர்ப்புறுதல், வான்வழியியங்குதல், வெப்பம் ஒழியக் கடலிற் படிந்துண்ணல், எங்கனும் தோற்றி மின்னுதல், கருநிறங்கொள்ளல், இடிமுழக்கம் செய்தல், அழகுற வள மழை பொழிதல் ஆகிய மேகத்தின் செயல்கள் சேக்கிழாருக்கு ஏற்றிக் கூறப்பெற்ற திறன் சுவைத்தற்குரியது. மேகம் நீரைப் பொழிந்து நெற்பயிர் வளர்த்து நெற்போகம் கொள்ளச் செய்வது போன்று, சேக்கிழார் அருளைப்பொழிந்து சைவப்பயிர் வளர்த்துச்சிவபோகம் கொள்ளச் செய்தார் 'என்பர்.

அம்புலிப் பருவம்

பிரபந்தத் தலைவனாகிய குழந்தையோடு விளையாட வரும்படி சந்திரனை அழைக்கும் பருவத்தைக் கூறும் பகுதி இதுவாகும். இது பதினெட்டாம் மாதத்திற் கூறப்படும். இங்கு சேக்கிழாருக்கும் சந்திரனுக்கும் ஒப்புமை வேற்றுமை கூறப்பட்டுள்ளது. சேக்கிழாரின் செய் நன்றி மறவாமை குறிக்கப் பெற்றுள்ளது. தேவலோகத்தில் வாழ்பவரும் மேன்மை பெறுதற்காகப் பூவுலகத்துக் குன்றை நகரை (குன்றத்தூர்) விழைகின்றனர். சேக்கிழார் பிறந்தமையால் குன்றைநகர்க்கு இத்தகைய சிறப்பேற்பட்டது.

சிற்றிற்பருவம்

சிறுவீடு கட்டும் சிறுபெண்கள் தாம் வருந்திக் கட்டிய சிற்றிலைச் சிதைக்க வரும் குழந்தையை அவ்வாறு செய்ய வேண்டாம் என்று சொல்லும் பருவத்தைக் கூறும் பகுதியாகும். சிறுமை+இல்=சிற்றில், 'சிறுமை' என்னும் பண்புப் பெயர் ஈறுபோய்த் தன்னொற்று இரட்டிற்று 'சிற்றில்' இரண்டாமாண்டிலும் 'சிறுபறை' மூன்றாம் ஆண்டிலும் நிகழும். இந்திரன், நூறு அசுவமேத யாகங்களைச் செய்து தேவ ராஜபதவி பெற்றார். என்பார் செய்தியும் வையத்துள்ள கரும்பும் வாழையும் கமுகும் வானிலுள்ள தேவருலகு வரை உயர்ந்து அணி செய்கின்றன என்ற செய்தியும் இங்குக் கூறப்பட்டுள்ளன. தண்டக நாட்டு வளம் அழகுற வருணிக்கப்பட்டுள்ளன. உத்தமச் சோழப்பல்லவன் என்பது சேக்கிழாருக்கு அநபாயன் வழங்கிய பட்டப் பெயராகும். அச்சிறப்பினை உமாபதி சிவமும் போற்றியுள்ளார். கரிகாலன் வரலாறு, பிள்ளையவர்களின் சமயப்பற்றின் உச்ச நிலை, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழில் புரியும் தில்லையம்பலவன் செயல் முதலியன விவரிக்கப்பட்டுள்ளன.

சிறுபறைப்பருவம்

பிரபந்தத் தலைவனான குழந்தையைச் சிறுபறை கொட்டும்படி வேண்டிக் கொள்ளும் பருவத்தைக் கூறும் பகுதியாகும். இது மூன்றாம் ஆண்டில் நிகழும் சேக்கிழார் கொட்டு சிறுபறை முழக்கினால் ஆகும் பிற முழக்கங்கள் கூறப்பெறுகின்றன. விடியற் காலையில் திருக்கோயில்களில் மங்கலச் சங்கு ஊதுதல் மரபாகும். சரியை, கிரியையை அனுட்டித்து வருவார்க்கு அவ்வழியில் அனுட்டான காலத் தொடக்கத்தை முற்கூட்டி அறிவிப்பது இச்சங்கொலியாகும். பாலாற்றின் அலை மிக்கெழுந்து கற்பகத் தருவை அடித்து ஓடிவர, அதனடியிற் பொருந்தி நின்று கொண்டிருந்த காமதேனுவைப் பார்த்து அக்கற்பகத்தரு 'நின்னாற்றான் எனக்கு இந்தத் துன்பம் உண்டானது' என்று கூறும்படி திகழ்கின்ற நாடு துண்டீர நாடு எனப் பிள்ளையவர் குறித்துள்ளார். கஜாசுரன் கதையும் இங்குக் கூறப் பெற்றுள்ளது.

சேக்கிழாரின் கவிச்சுவை இங்குப் போற்றப் பெறுகின்றது. பால், தேன் சர்க்கரை, கற்கண்டு இவற்றின் சுவையொடு முக்கனி திராட்சை ரசங்களையும் ஒன்று சேர்த்துத் தேவாமுதத்தை உள்ளே பதித்துக் குழல் வீணையிசையொலி இன்பத்தைப் புக வைத்தாலும் சிவமணமாறாத கமழச் சொற் பொருட்சுவைகள் முதிர அருட்கவிப் பாடிய புலவர் சேக்கிழாராவார் எனப் பாராட்டுகிறார் பிள்ளையவர்கள். இக்கவிதைகள் கற்போருக்கு நற்பயன் கிட்டும் என்பர். தில்லை ஆயிரங்கான் மண்டபத்து எழுதப்பெற்ற பாடலின் சிறப்பும், பிள்ளையவர்களின் பக்தி உச்ச நிலையும் இங்குக் கூறப்பெற்றுள்ளன.

சிறுதேர்ப் பருவம்

பிரபந்தத் தலைவனாகிய குழந்தையைச் சிறுதேருருட்டி விளையாடும்படி வேண்டும் பருவத்தைக் கூறும் பகுதியாகும். இது நான்காம் ஆண்டில் கூறப்பெறும். இங்குப் பெரிய புராணத்தைப் பாராட்டிய செய்தியை அறிய முடிகின்றது. சேக்கிழாரின் குடிப்பெருமையும் கூறப் பெற்றுள்ளது. சேக்கிழார் பெருமான் நம்பியாரூரர், ஞானசம்பந்தர், இறைவன் ஆகிய மூவரையும் ஊருணியையும் நிகர்ப்பவர்.

சேக்கிழார் அநபாயனின் போர் வெற்றிச் சிறப்புக்குக் காரணம், பிறவி நோய்க்குத் திருத்தொண்டர் புராணம் மருந்தாகும் செய்தி, குன்றைநகரில் மறையோர் எழுப்பும் வேள்விப்புகை செய்யும் அற்புதங்கள், குன்றையம்பதியில் மதுமழை பொழிதற் சிறப்பு, சேக்கிழாரை 'மண்ணகத்துச் சூரியன்' என்று சொல்லும்படி தேருருட்டி வரும்படி வேண்டுவது, விநாயகருக்குப் பிடித்த உணவு வகைகள், முதலியன விளக்கப் பெற்றுள்ளன.

மங்கலமாக வாழ்த்துச் சொல்லோடு சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முடிவடைகிறது. சேக்கிழார் பிறந்த குன்றத்தூரில் ஓர் ஆலயப் பிரதிஷ்டை செய்து அதற்குத் 'திருநாகேச்சுரம்' என்று பெயரிட்டு அதில் உற்சவங்களைத் தவறாமல் நடத்திக் கொண்டு வருகின்றனர் என்பதும் நினைக்கத்தக்க ஒன்றாகும்.

36. குருபரம்பரை அகவல்

மோ.கோ. கோவைமணி
தஞ்சாவூர்

சைவம், வைணவம் இவ்விரண்டும் இந்து மதத்தின் இருகண்கள். சைவ சமயச் சார்புடையனவும் வைணவ சமயச் சார்புடையனவும் எனப் பல ஆதீனங்களும் மடங்களும் தோன்றின. இவ்வாதீனங்கள் மற்றும் மடங்களின் வரலாற்றையே குருபரம்பரை என்று கூறுகின்றோம். ஒவ்வொரு ஆதீனத்திற்கும் மடத்திற்கும் எனக் குருபரம்பரை தனித்தனியே உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய ஆதீனங்களில் துறைசையாதீனம் என்று கூறப்படும் திருவாவடுதுறை ஆதீனமும் ஒன்று. இவ்வாதீனத்துக் குருபரம்பரையை அகவற்பாவில் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் அவர்களும் பாடியிருக்கிறார்கள். இவ்விரு அகவல்களும் பெயரால் ஒன்றுபட்டது என்றாலும் சொல்லும் பொருளால் வேறுபட்டது. இதனையே இக்கட்டுரை ஆய்கின்றது.

குருபரம்பரை - ஓர் விளக்கம்

திருக்கயிலாயத்தில் சிவஞானச் செங்கோல் ஒச்சிக் கொண்டிருக்கும் ஸ்ரீ கண்ட பரமசிவத்திடம் அணுக்கத் தொண்டராய் இருந்தவர் திருநந்தித்தேவர். அவர் வேதங்களையும் சிவாகமங்களையும் கல்லாலின் கீழ் தட்சிணாமூர்த்தி வடிவாயிருந்த பரமசிவத்திடமிருந்து தெரிந்துகொண்டு சனத்குமாரர், சனதர், சனாதனர், சனகர் ஆகிய நால்வருக்கும் உபதேசித்தார். இந்நால்வரும் தனித்தனியே மடங்களை நிறுவி சைவ சமயத் தொண்டாற்றி வரலாயினர்.

சனத்குமாரர் ஆமர்த்தக மடத்தையும், சனதர் ரணபத்திர மடத்தையும், சனாதனர் கோளகி மடத்தையும், சனகர் புஷ்பகிரி மடத்தையும் நிறுவி அம்மடங்களின் முதல் தலைவராக முறையே இருந்தனர். இவர்கள் காலத்திற்குப் பிறகு இவ்விருவர்களின் சந்ததியினர் மடத்தின் தலைவராக இருந்து வந்தனர். இம்மடங்கள் வடக்கே கோதாவரி தீரத்தில் சைவர்கள் வாழ்ந்துகொண்டிருந்த மந்திரகாளி என்னும் பட்டணத்தைச் சூழ்ந்திருந்தன.

குருபரம்பரையை திருநந்தி(சயிலாதி)த் தேவரைக் குருவாகக் கொண்டு, அவர் மரபுவழி வந்ததால் சயிலாதி மரபுடையது எனவும், திருக்கயிலாயத்திலிருந்து தொடங்கிப் பரம்பரையாக இன்றுவரை செங்கோலாட்சி புரிந்து வருவதால் 'திருக்கயிலாயப் பரம்பரை' எனவும் போற்றப்படுகின்றது. ஆமர்த்தக மடத்தை நிறுவிய சனத்குமாரரால் விஞ்ஞான தேவர் சந்தானம் என்றும், மெய்கண்டதேவர் சந்தானம் என்றும் இரண்டாகிப் பின் பலவாயின. சந்தானக் குரவர்களை அகச்சந்தானக் குரவர்கள் என்றும், புறச்சந்தானக் குரவர்கள் என்றும் இரண்டாகப் பிரிப்பர். அதாவது, தேவபரம்பரையைச் சேர்ந்த திருநந்தித்தேவர், சனத்குமாரர்,

சத்திய ஞானதரிசினி, பரஞ்சோதிமுனிவர் ஆகிய நால்வரும் அகச்சந்தானக் குரவர்கள் பூத பரம்பரையைச் சேர்ந்த மெய்கண்டார். அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரும் புறச்சந்தானக் குரவர்கள் என்பர். புறச்சந்தானக் குரவரான உமாபதிசிவத்தின் மாணவர் அருள்நமச்சிவாயர் அவருடைய மாணவர் சித்தர் சிவப்பிரகாசர் அவரது மாணவர் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள். இவரே திருவாவடுதுறை ஆதீனத்தை கி.பி. 1360 ஆம் ஆண்டு தோற்றுவித்தவர். இவரைத் தொடர்ந்து ஞானபீடத்தில் எழுந்தருளும் குருமூர்த்திகளே 'அபிடேக பரம்பரையினர்' இன்று 23வது குருமூர்த்தியான சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகப் பரமாசாரியார் அவர்கள் இவ்வாதீனத்தை செங்கோலாட்சிச் செய்துவருகின்றார்.

குருபரம்பரை அகவல்

இந்நூல் திருவாவடுதுறை ஆதீன வரலாற்றை அறிவிப்பனவாகும். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் அவர்களும் தனித்தனியே இவ்வாதீன வரலாற்றைப் பாடி இருக்கிறார்கள். வரலாறு ஒன்று என்றாலும் செய்திகள் வேறுவேறானவை.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை யாதீனத்துக் குருபரம்பரை அகவல் எனும் நூலில் புறச்சந்தானக் குரவர்கள் நால்வர்க்கும் அபிடேக குருமூர்த்திகள் முதல் பதினான்கு பேர்களுக்கும் குருபூஜை தினத்தையும் மாதம் மற்றும் நட்சத்திரங்களையும் நிரல்படுத்திக் குறிப்பிடுகின்றார் (காண்க: பின்னிணைப்பு இதில் அண்மைக்கால குருமூர்த்திகள் வரை நிரல்படுத்தி இருக்கிறேன்) இந்நூல் 53 அகவல் வரிகளைக் கொண்டது. உ.வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்த 'மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் பிரபந்தத்திரட்டு' எனும் நூலில் 1049ஆம் பாடலாக இவ்வகவல் இடம் பெற்றுள்ளது. கி.பி. 1910 மற்றும் 1926 ஆகிய ஆண்டுகளில் இப்பிரபந்தத்திரட்டு பதிப்பாகியுள்ளது. அதற்குப்பிறகு இந்நூல் இன்னும் அச்சாகாமல்-மறுபதிப்பு காணாமல் இருக்கின்றது. இருப்பினும் இவரது நூல்களைப் பல இலக்கியப் பருவ இதழ்கள் வெளியிட்டுள்ளன. அந்த வகையில் 'குருபரம்பரை அகவல்' எனும் நூல் செந்தமிழ்ச் செல்வி என்னும் இலக்கியத் திங்கள் இதழில் (சிலம்பு:3,பரல்:1,1925,பக்:47-48) வெளிவந்துள்ளது. இதனைத் திருவாவடுதுறையாதீனத்துச் சீடன் வாங்கல் மு.அப்பாவுபிள்ளையவர்கள் பதிபித்திருக்கின்றார். பிரபந்தத்திரட்டில் உள்ளதை உள்ளவாறே பதிப்பித்திருக்கிறார். இவரின் பதிப்புரையோ குறிப்புரையோ ஏதுமின்றி இந்நூல் செந்தமிழில் வெளிவந்துள்ளது.

பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் அவர்கள் 'துறைசை மடத்துத் தம்பிரான்களின் பரம்பரை' எனும் பெயரோடு திருவாவடுதுறை ஆதீனத்துக் குருபரம்பரையை எழுதி உள்ளார். இந்நூல் 151 அகவல் வரிகளைக்

கொண்டது. பிள்ளையவர்களின் குருபரம்பரை அகவலிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. என்றாலும் இரண்டும் திருவாவடுதுறையாதீனக் குருபரம்பரையையே குறிப்பிடுகின்றன. பிள்ளையவர்கள் குறிப்பிடாத செய்திகளை பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் அவர்கள் குறிப்பிடுகின்றார். அதாவது, இவர் முதலில் மடங்களின் வரலாற்றையும் அம்மடங்கள் நிறுவியவர்களின் வரலாற்றையும், திருக்கயிலாயப் பரம்பரையின் தொடக்கத்தையும் கூறி தேவ பரம்பரையைச் (அகச்சந்தானக் குரவர்கள், புறச்சந்தானக் குரவர்கள்) சேர்ந்தவர்களின் அருட்பணிகளையும் ஆக்கச் செயல்களையும் எடுத்தியம்புவதோடு அபிடேகப் பரம்பரையைச் சேர்ந்தவர்களின் செயல்களையும் எடுத்தியம்புகின்றார். இந்நூல் 'சித்தாந்தம்' என்னும் சைவசமயத் திங்கள் இதழில் (மலர் 12, இதழ் 7, ஜூலை 1939, பக்.328-336) வெளிவந்துள்ளது. இதில் "திருவாவடுதுறையாதீன வரலாற்றை அறிவிக்கும் இவ்வகவல் அரசினர் கையெழுத்து நூனிலயத்திலுள்ள ஒரு சுவடியில் 'துறைசை மடத்துத் தம்பிரான்களின் பரம்பரை' என்னும் பெயரோடு காணப்படுகிறது. பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் இயற்றிக் குரோதன வருடம் (1926) மகரரவியில் அச்சான திருவாவடுதுறை ஆதீனக் குருபரம்பரை விளக்கம் வெளிவராமலே இருக்கிறது" என்னும் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை அவர்களின் குறிப்புடன் இந்நூல் வெளிவந்துள்ளது. 1926இல் அச்சான இந்நூல் 1939 வரை (சித்தாந்தத்தில் வெளிவந்த காலம்) ஏன் வெளியாகவில்லை என்ற காரணத்தையும், இதற்குப் பிறகாவது இந்நூல் வெளிவந்ததா என்றும் ஆராயவேண்டும்.

மகாவித்துவான் அவர்கள் குறிப்பிடும் செய்திகளையும் பூஜை -சுப்பிரமணியத் தம்பிரான் அவர்கள் குறிப்பிடும் செய்திகளையும் ஒவ்வொரு குருமூர்த்திக்கும் எனத் தனித்தனியே பிரித்து ஒன்றாக இணைத்தால் கவிதையோட்டத்தில் தடை ஏற்படுவதில்லை. மகாவித்துவான் அவர்கள் எழுதாத செய்திகளை இவர் இடம் நிரப்பியிருக்கின்றார் என்றே சொல்ல வேண்டும்.

திக்கொத் திறைஞ்சத் திகழுமா பதியார்
மெய்க்கொற் றவன்குடி மேடமதியத்தம் (வரி 18-19)

என்னும் வரிகளை மகாவித்துவான் அவர்கள் உமாபதியாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவரையே பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் அவர்கள்,

திருவருள் செய்திடப் பெற்றவத் தேசிகர்
மருவல ரெட்டரும் மருவலர்ப் பொழில்சூழ்
தில்லையம் பலத்திற் றிருநடம் புரிதரும்
நல்லவ குருவமாய் மல்குமு வாயிரர்
மறையவ ரும்புகழ் நிறையருட் டேசிகர் (வரி:48-52)

என்னும் வரிகளால் குறிப்பிடுகின்றார். பூஜையாரின் வரிகளை முன்னதாகவும் மகாவித்துவானின் வரிகளைப் பின்னதாகவும் வைத்துப் படித்தால் செய்தி ஒன்று போலவே இருக்கக்காணலாம். இதுபோல் பதினான்கு அபிடேக குருமூர்த்திகளுக்கும் பொருத்திப் பார்க்கலாம்.

குருபரம்பரை அகவல்களின் காலம்

பிள்ளையவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் (6.4.1815-1.2.1876) வாழ்ந்தவர். திருவாவடுதுறை ஆதீனத்துப் பதினைந்தாவது குருமூர்த்தியான சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் (கி.பி.1845-1869) காலத்தில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கி.பி. 1860ஆம் ஆண்டு ஆதீன வித்துவானாக அமர்த்தப்பட்டார். பிள்ளையவர்கள் தம்முடைய குருபரம்பரை அகவலில் முதல் பதினான்கு குருமூர்த்திகள் வரைப் பாடியிருக்கின்றார். 15வது குருமூர்த்திகளின் காலமான 1869க்குப் பிறகும் மகாவித்துவான் அவர்கள் ஏழு ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். ஆயின் குருபரம்பரை அகவலில் முதல் பதினான்கு குருமூர்த்திகள் மட்டுமே இடம்பெற்றிருப்பதால் ஆதீனத்துப் பதினைந்தாவது குருமூர்த்தியான சீர்வளர்சீர் அம்பலவாணதேசிகர் வாழ்ந்த காலத்திற்குள்ளும், மகாவித்துவான் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவானாக அமர்த்தப்பட்டதற்குப் பிறகுமான காலத்தில் (கி.பி.1860- 1869) தான் இந்நூல் இயற்றப்பெற்றிருக்கிறது என்பது உறுதி. மகாவித்துவான் அவர்களின் நூலைப் பின்பற்றியே தம்பிரான் அவர்களும் முதல் பதினான்கு குருமூர்த்திகள் வரை திருக்கயிலாய குருபரம்பரையை எழுதியிருக்கிறார். இவரது காலம் தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும், மகாவித்துவான் அவர்களின் காலமாகவோ அல்லது அவருக்குப் பிந்திய காலமாகவோ இருந்திடல் வேண்டும் என்று துணியலாம்.

பிள்ளையவர்களின் தமிழ்ப் பற்று

மகாவித்துவான் அவர்கள் தம்முடைய செய்யுட்களில் பெரும்பான்மை தமிழ்ச் சொற்களையே கையாள்வதில் வல்லவராக இருந்துள்ளார். சிறுபான்மை வடமொழிச் சொல்லாயினும் அதற்குத் தமிழ் எழுத்தையே பயன்படுத்துகின்றார். குறிப்பாக, அஸ்தம் - அத்தம் என்றும், அனுஷம் -அனுடம் என்றும் நட்சத்திரப் பெயர்களைப் பயன்படுத்துவதைப் பார்க்கலாம். இதேபோல் மாதப் பெயர்களையும் தமிழிலேயே குறிப்பிடுவதைப் பார்க்கமுடிகிறது. குருபரம்பரை அகவலில் மாதப்பெயர்களை

தை	- சுறவம்	ஆடி	- கடகம்
மாசி	- கும்பம்	ஆவணி	- மடங்கல்
பங்குனி	- மீனம்	புரட்டாசி	-கன்னி
சித்திரை	- மேடம்	ஐப்பசி	- துலை
வைகாசி	- விடை	கார்த்திகை	- நளி
ஆனி	- மிதுனம்(ஆடவை)	மார்கழி	- சிலை

எனக் குறிப்பிடுகின்றார். இவற்றைக் காணும் போது பிள்ளையவர்களின் தமிழ்ப் பற்று நன்கு வெளிப்படுகிறது.

முடிபு

1. மகாவித்துவான் அவர்களின் குருபரம்பரை அகவலில் பெயர். மற்றும் அவரவரின் குருபூஜைக் குறிப்பு (மாதம், நட்சத்திரம்)கள் மட்டும்

இடம்பெற்றிருக்கின்றன. தம்பிரான் அவர்களின் அகவலில் இவை தவிர குருமூர்த்திகளின் ஏனைய குறிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன.

2. குருமூர்த்திகளின் குருபூஜையை நினைவு கொள்ளும் பொருட்டே மகாவித்துவான் அவர்களால் இவ்வகவல் இயற்றப்பெற்றிருக்கவேண்டும். இவர்விடுத்த குறிப்புகளைத் தம்பிரான் அவர்கள் தனியே ஓரகவல் பாடி நிறைவு செய்திருக்கின்றார் என்றே எண்ண வேண்டும்.

3. இவ்விரு அகவலையும் பிரித்து-இணைத்து வேறுபாடு காணாதவாறு ஒரு நூலாகவும் ஆக்கலாம். தம்பிரான் அவர்கள்,

இத்திருச் சிற்றம் பலகுரு விறைவர்
மெய்த்தவர்க் கெளிதாய் வீணருக் கரிதாய்ச்
சுத்தசிற் குணமாய்த் தொன்மறைப் பொருளாய்க்
கல்விக் கடலாய்க் கருணைமக மேருவாய்ச்
செல்வமுங் கல்வியுஞ் சிவமுந் தவமும்
நல்லறி வுண்மைமெய்ஞ் ஞானமும் பொருளும்
சொல்லவல் லபங்கொடு தோன்றியிச் சைவமாஞ்
சந்தா னத்தொரு சந்தான மாய்வளர் (வரி 120- 127) என்பதையும்

யாய்புகழ்த் திருச்சிற் றம்பல தேசிகர்
வேய்புகழ்த் துறைசை மிதுனமதி பரணி (வரி:46-47)

எனும் பிள்ளை அவர்களின் வரிகளையும் இணைத்துப்படிப்பின் விளங்கும்.

பின்னிணைப்பு

துறைசையாதீன குருபரம்பரை - காலநிரல்

குருமூர்த்திகளின் பெயரும் பட்டமும்	குருபூஜை மாதம்	குருபூஜை நட்சத்திரம்	ஆட்சிக் காலம்
ஸ்ரீலஸ்ரீ மெய்கண்டார்	ஐப்பசி	சுவாதி	
ஸ்ரீலஸ்ரீ அருணந்திசிவம்	புரட்டாசி	பூரம்	
ஸ்ரீலஸ்ரீ மறைஞானசம்பந்தர்	ஆவணி		
ஸ்ரீலஸ்ரீ உமாபதிசிவம்	சித்திரை	அஸ்தம்	
ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள்(1)			
ஸ்ரீலஸ்ரீ மறைஞானதேசிகர்(2)	தை	சுவாதி	
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்(3)	சித்திரை	அவிட்டம்	கி.பி.1360-1621
ஸ்ரீலஸ்ரீ உருத்திரகோடிதேசிகர்(4)	கார்த்திகை	அனுடம்	
ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்(5)	கார்த்திகை	உத்திராடம்	
ஸ்ரீலஸ்ரீ குமாரசாமிதேசிகர்(6)	கார்த்திகை	உத்திராடம்	கி.பி.1621-1625
ஸ்ரீலஸ்ரீ பின் குமாரசாமிதேசிகர்(7)	ஆவணி	உத்திரட்டாதி	
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிகர்(8)	சித்திரை	ரோகிணி	கி.பி.1625-1658
ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க தேசிகர்(9)	கார்த்திகை	அனுடம்	கி.பி.1658-1678

ஸ்ரீலஸ்ரீ	வேலப்பதேசிகர்(10)	புரட்டாசி	மூலம்	கி.பி.1678-1700
ஸ்ரீலஸ்ரீ	பின்வேலப்பதேசிகர்(11)	வைகாசி	பூரட்டாதி	கி..பி.1700-1730
ஸ்ரீலஸ்ரீ	திருச்சிற்றம்பலதேசிகர்(12)	ஆனி	பரணி	கி.பி.1730-1770
ஸ்ரீலஸ்ரீ	அம்பலவாணதேசிகர்(13)	மார்கழி	கேட்டை	கி.பி.1770-1789
ஸ்ரீலஸ்ரீ	வேளூர்			
	சுப்பிரமணியதேசிகர்(14)	கார்த்திகை	கார்த்திகை	கி.பி.1789-1845
ஸ்ரீலஸ்ரீ	அம்பலவாணதேசிகர்(15)	ஆனி	பூரம்	கி.பி.1845-1869
ஸ்ரீலஸ்ரீ	மேலகரம்			
	சுப்பிரமணிதேசிகர்(16)	மார்கழி	சுவாதி	கி.பி.1869-1888
ஸ்ரீலஸ்ரீ	அம்பலவாணதேசிகர்(17)	சித்திரை	சதயம்	கி.பி.1888-1920
ஸ்ரீலஸ்ரீ	சுப்பிரமணியதேசிகர்(18)	தை	பரணி	கி.பி.1920-1922
ஸ்ரீலஸ்ரீ	வைத்தியலிங்கதேசிகர்(19)	ஐப்பசி	அவிட்டம்	கி.பி.1922-1937
ஸ்ரீலஸ்ரீ	அம்பலவாணதேசிகர்(20)	பங்குனி	திருவாதிரை	கி.பி.1937-1951
ஸ்ரீலஸ்ரீ	சுப்பிரமணியதேசிகர்(21)	புரட்டாசி	பரணி	கி.பி.1951-1967
ஸ்ரீலஸ்ரீ	அம்பலவாணதேசிகர்(22)	பங்குனி		கி.பி.1967-1983

பின்னிணைப்பு 2

திருக்கைலாய பரம்பரை
திருவாவாடுதுறை ஆதீனத்துக்

குருபரம்பரை யகவல்

டி ஆதீனத்து மஉஹாவித்துவான் திரிசிரபுரம்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களியற்றியது.

திருவளர் கைலைச் சிலம்பில் வீற் றிருக்கு
மருவளர் கடுக்கை மாலிகைப் பெருமா
உருள்பெறு நந்தி டிகடம் பான்மெய்ப்
பொருள்பெறு கருணைப் புகழ்சனற் குமாரர்
மற்றவ ரருளூறிஇ வையகத் தியங்கிய
கற்றவர் சத்திய ஞானதரி சனிக
ளவந்செறு வாய்மைப் பரஞ்சோதி யடிக
ளத்தகு குரவ ரருளடைந் துயர்ந்த
வித்தகர் வெண்ணெய் மெய்கண்ட தேவ
வேர்முதற் குரவ ரியைந்திரு நாமந்
தவர்புகழ் சமாதித் தலமடை மதிநா
ளிவைமுறை 'புரைப்பா மிசைத்த மெய்கண்டர்
சுவையமை வெண்ணெய் தூலாமதி சோதி
தவலருள் கருணை தழையரு ணந்தியார்
கவலருந் துறையூர் கன்னிமதி பூரம்
படர்மறை ஞானசம் பந்தர்வண் டில்லை
வடகரைச் சேரி மடங்கன்மதி யுத்தரந்
திக்கொத் திறைஞ்சத் திகழுமா பதியார்
மெய்க்கொற் றவன்குடி மேடமதி யத்தம்

வாய்ந்தவரு ணமச்சி வாயதே சிகர்மேல்
வேய்ந்த கொற்றவன்குடி வின்மதி யாதிசை
திண்ணிய சித்தர் சிவப்பிர காசர்
நண்ணிய தலமதி நாளவர்க் கில்லை
யளவா வருளுற் றவிர்நமச் சிவாயர்
வளவாவடுதுறை மகரமதி முதனா
ளைலமலி தருமறை ஞானர்மே லுறைத்த
வலமலி துறைசை மகரமதி சோதி
வளம்பயி லம்பல வாணர் மேலெடுத்து
விளம்பிய துறைசை மேடமதி யவிட்ட
மொருவா வருண்மலி யுருத்திர கோடிக
டிருவால வாய்விருச் சிகமதி யனுட
மணவிய வருள்வே லப்பர் திருப்பூ
வணநகர் விருச்சிகமதியுத் தராடந்
தரமலி குமார சாமிகள் சுசீந்திரம்
வரமலி விருச்சிக மதியுத்தராடந்
தரைசொல்பிற் குமார சாமிகள் சுசீந்திர
முரைமடங் கன்மதி யுத்தரட் டாதி
மருவு மெஞ்ஞான மாசிலா மணியார்
வெருவில் வெண்காடு மேடமதி யுரோகிணி
யிராம லிங்கர்மு னிசைத்தகோ முத்தி
பராவு விருச்சிகம் படர்மதியனுடந்
தாவில் வேலப்பர் சங்கர நயினார்
கோவில் வான்கன்னி குலாமதி மூலம்
மின்வே லப்பர் பெருந்துறை கோட்டிற்
பொன்வேய் சேமதி பூராட்டாதி
யாய்புகழ்த் திருச்சிற் றம்பல தேசிகர்
வேய்புகழ்த் துறைசை மிதுனமதி பரணி
யம்பல வாண ராவடு துறையே
நம்பலர் கொடுஞ்சிலை நகுமதி கேட்டை
வளமலி சுப்பிரமணிய மணிய தேசிக
ரளவரும் புகழ்த்திரு வாவடு துறையே
தெளிதர வொளிர்விருச் சிகமதி கார்த்திகை
தெளிதர வுரைத்தேன் வேணவா வானே.

பின்னிணைப்பு: 3

திருவாவடுதுறைக் குருபரம்பரை

திருவாவடுதுறைக் குருபரம்பரை
நீர்க்கடல் சூழ்ந்த பார்க்கணெண் டிசையினும்
மேம்படு தென்றிசைப் பாற்படு கயிலையில்
அழகுறு புட்ப கிரியா மாந்தரு

கிரிமகா கோள கிரிமிட் சாகிரி
யென்னுநாற் கிரியினு முன்னவ னுயிர்கட்
கன்னையு மத்தனு மாகிவீற் றிருக்கும்
நித்திய சுத்த நிராமய நிர்க்குண
சத்தி சமேத தற்பர சிற்பர
தயாபர வியாபக சச்சிதா னந்த
பராபர முதலாஞ் சதாசிவக் கடவுள்
கருணைமெய்ஞ் ஞான குருவடி வெடுத்து
மலைமக ணந்தி மால்நான் முனிவருக்
காமக மருளிப் பாகமிக் குறுதலிற்
றிருவுள மகிழ்ந்து பெருகபி டேகமுஞ்
செய்துபொன் மகுடங் குண்டலங் கண்டிகை
முத்தணி சத்திரஞ் சாமரஞ் சிவிகைகைப்
பற்று பவுத்திரம் பாதுகை வாசிகை
மற்றவும் விருதாய்ச் சற்றிநித் தியம்பெற
ஐநான் குடனெட் டனியா கமங்களின்
ஞானபா தங்களை நவையற வுணர்ந்தருள்
அந்தமில் பெருமைசேர் நந்தியெங் குரவர்க்
கருளுடை நீல கண்டர்தந் தருளினர்
அன்னவர் மலவலி யகற்றியைந் தடக்கி
முன்னவ னடிசினை முனி சனற் குமரர்க்
களித்தன ரனையோ ரருளோ டகலா
தித்தியப் பொருளுணர் சத்திய ஞான
தெரிகனை கட்கருள் செய்தன ரவரும்
பரஞ்சோ தித்துணர் ஞானமார்த் தாண்டப்
பரஞ்சோ திக்கருள் செய்தனர் பரிவுரு
இத்திரு நால்வரு நித்திய முனிவராம்
இவர்களி னவையற வுயர்பரஞ் சோதிச்
சற்குரு மன்னரு மிப்புவித் தளர்வறப்
பொற்புறு பெண்ணையம் புனல்சூழ் வெண்ணையின்
மைகண்டங் கொண்ட வரன்றிரு வருளாற்
பொய்கண்டு நீங்குபு மெய்கண் டோங்கிய
மெய்கண்ட தேசிக மேலவர்க் கருளினர்
மேலவர் தமிழறி ஞாலமுற் றுய்ந்திடச்
சைவ (ா கமத்) திற் சரியைமுதன் மூன்றையும்
மூவர்பால் வைத்தபின் றேவிதே வன்மொழி
நூல்பல வுணர்ந்து மேலுற விளங்கிய
கருத்துறை நீக்குந் திருத்துறை யூருறை
திருவருள் பெருகிய குருஅரு ணந்தியெம்
பண்ணவர்க் குண்மை பகர்ந்து கண்ணெனும்
ஞானபா தந்தனை நல்கினன் கருளினர்
ஊனமி லவ்வரு ணந்தியெங் குரவர்பின்

மோனமுத் திரைதரு முதறி வான்மிகுந்
திருமறை ஞானசம் பந்ததே சிகர்க்குத்
திருவருள் செய்திடப் பெற்றவத் தேசிகர்
மருவல ரெட்டரும் மருவலர்ப் பொழில்சூழ்
தில்லையம் பலத்திற் றிருநடம் புரிதரும்
நல்லவ ருருவமாய் மல்குமு வாயிரா
மறையவ ரும்புகழ் நிறையருட் டேசிகர்
உமாபதி சிவனுக் குதவின ரவைகளைத்
தமோமய மலமறச் சற்குரு வன்னவர்
மன்றவ ருருவமாம் வன்னமுற் றுணரா
நின்ற வருணமச் சிவாய நின் மலருக்
கருளின ரந்தப் பெரியமெய்த் தேசிகர்
அணிமா முதலவா மட்டமா சித்தியு
கனிவா கியபல தொன்னூல் வழியுணர்
சித்துறு சிவப்பிர காசதே சிகர்பெற
வைத்தருள் செய்தன ரித்தரை யேழ்புகழ்
அத்தகு மாவடு தண்டுறை யம்பதி
தன்னிலென் னுடைய முன்னைய மலந்தப
மெய்கண்ட சந்ததி விளங்கிமிக் கோங்கிடக்
கைகண்ட கெல்லிக் கனியினெப் பொருளையுஞ்
சிவனடி யவருணர்ந் தவனடி மருவுற
வந்தருள் நமச்சி வாயதே சிகர்க்குப்
பாலித் தருளினர் பரம்பரை யிதின்மற்
றவயோ கங்கெடச் சிவயோ கம்பயில்
மறைஞான தேவன் மகிழக் கொடுத்தனர்
அம்மறை ஞானா சாரிய ரருள்பெறும்
மும்மலந் தெறவருண் ஞானமுழு துணர்த்திடச்
சத்திசேர் அம்பல வாண சற் குரவரும்
உய்த்துணர்ந் தவ்வரு ளோங்கக் கொடுத்தனர்
பெற்றபி னற்றவம் பேணிமெய்ப் பெருநூல்
உற்றுணர் வுணர்ந்த உருத்திர கோடிக்
கொற்றவர்க் கவர்முன் னுணர்த்திக் கொடுத்தனர்
அடுத்தவிவ் வுருத்திர கோடியா சிரியர்பின்
கடுத்தழை கண்டக் கடவுளெம் பெருமான்
றிடத்தவெட் டெட்டுத் திருவிளை யாடல்செய்
தென்றிரு மதுரையி லொன்று வே லப்பநற்
றேசிகர் பெறும்படி யாசற வளித்தனர்
அளித்தலு மன்னவ ருளக்கரு ணையினால்
ஞாலமெல் லாம்புகழ் வாலறி வான்மிகுங்
கோலமெல் லாந்திகழ் குமாரசா மிகளெனும்
ஞானதே சிகர்பெற் மேன்மையி னுதவினர்
உதவலும் பத்தியின் விதமுநல் வித்தையுஞ்

சநசத் தறியுஞ் சதசத் துணர்ச்சியும்
சாபமு மருளும் மேவுநற் றன்மையு
மற்றவுந் தந்திரு நாமமுற் றதனாற்
பெற்ற அப் பெரியோ குற்றிடக் கொடுத்தனர்
ஆசிலா கமங்களு மான்றதொல் கலைகளும்
மாசற வுணர்ந்துபொன் மன்றினி னடநவில்
ஈசனார் திருவரு ளெய்தியிவ் வுயிரெலாம்
நேசமார் திருவடி நிழலி னுறவருண்
மாசிலா மணிக்குரு மன்னவர்க் கருளினர்
மன்னவர் வைதிக சைவமாம் வான்பயி
ரிந்நிலத் தோங்கிமிக் கினிதாய் வளருற
நன்மொழி யுரைத்துச் சின்மயப் பொருளை
மறைத்த வம்மல மாமலஞ் சிறியென்பா
லிராமலிங் ககலக் கரமலர் தலைதரும்
இராமலிங் கப்பெய ரிறைவர்க் கருளினர்
இந்தநற் றேசிகர் வந்தமெற் ககற்றப்
பண்ணிய வினைதீர் புண்ணியம் பயிற்றித்
திருவருள் கொழித்து மருவுயிர்க் கருள்புரி
அறிவரு ளுருவமே யாகி வே லப்பனாங்
குறிபெறு குரவர்க் கருளிக் கொடுத்தனர்
கொடுத்திடப் பெற்றவ ரடுத்தசொற் பொருள்களை
யெம்மதங் கட்குஞ் சம்மதம் பெறவருள்
உணர்த்தியா ருயிர்க்குச் சிவமணம் புணர்த்தும்
வல்லபம் படைத்த நல்ல வே லப்பமெய்
யாசா ரியருக் கருளின ரவர்பின்
மாசான் மறைபடு மன்னுயி ரனைத்துநற்
சுத்தாத் துவிதத் தொடர்ச்சிநன் குணர்ந்து
சித்தாந் தப்பெருஞ் செல்வமுற் றேங்கிடச்
சைவசந் தானந் தழைத்தீ.... றப்
பொய்யகன் றேடப் புகழ்மிக நீட
வருட்சிற் றம்பலப் பொருட்சிற் றுயிர்க்கருள்
திருச்சிற் றம்பல தேசிகர்க் கருளினர்
இத்திருச் சிற்றம பலகுரு விறையவர்
மெய்த்தவர்க் கெளிதாய் வீணருக் கரிதாய்ச்
சுத்தசிற் குணமாய்த் தொன்மறைப் பொருளாய்க்
கல்விக் கடலாய்க் கருணைமக மேருவாய்ச்
செல்வமுங் கல்வியுஞ் சிவமுந் தவமும்
நல்லறி வுண்மைமெய்ஞ் ஞானமும் பொருளும்
சொல்லவல் லபங்கொடு தோன்றியிச் சைவமாஞ்
சந்தா னத்தொரு சந்தான மாய்வளர்
சிந்தா மணியாஞ் சிவஞான பானுவென்
அம்பல வாண மெய்த் தேசிகர்க் கருளினர்

நம்பினர்க் குயிர்த்துணை யாகிமுன் னின்றருள்
அம்பல வாணமெய்த் தேசிக ரவர்தாம்
உமையாள் கணவனை யமையாக் காதலி
னிமையா தெப்பொழு தும்புகழ்ந் தேத்திய
சமயா சாரியர் நால்வர்தந் தகுதியும்
திருப்பணி யருட்பணி யெனப்புரி விருப்புடை
மாணிக்க வாசகர் பேணுமுட் கரணமும்
நந்தியெங் குரவர் சந்தா னந்தனில்
வந்தமெய்க் குரவர்க டந்திரு வருளும்
புண்ணிய நன்னெறி புகழறி வன்பு
கல்வி கவிகொடை கருணையிவ் வனைத்தும்
ஒருருக் கொடெனச் சீரிய றுறைசைவாழ்
மெய்ப்பொருட் சுப்பிரமணியதே சிகர்க்குக்
கொடுத்தனர் தொடுத்த விதற்குதர கரணம்
இரட்டிய வொன்பான் கணக்குறு புராணத்
தீரைந் தாகு மிறைசிவ புராணத்
தியாருமுன் மகிழுஞ் சீருறு காந்தச்
சிவசங் கிதையிற் செப்புப தேசமாங்
காண்டத் தருளிய காதைச் சுலோகமும்
நீண்டவார்க் கரியவ ருரைத்தநீ டாகமத்
தசிந்திய விசுவசா தாக்கியத் துள்ளவும்
சுசிந்தநெஞ் சினர்கொளக் கவின்பெற வறைகுதும்.

37. ஆறும் ஊரும் நாடும்

சிவ.சண்முகசுந்தரம்
காஞ்சிபுரம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும்புலவராய் விளங்கியவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். அவர் சிற்றிலக்கிய நூல்கள் பல படைத்துள்ளார். அவற்றுள் அவர் பாடிய பத்துப் பிள்ளைத்தமிழ் நூல்களுள் மிகச் சிறப்புடையது சேக்கிழார் பிள்ளைத்தமிழ். இந்நூல் வாயிலாக 'ஆறும் ஊரும் நாடும்' என்னும் தலைப்பில் அவர் கூறும் பாலாற்றின் சிறப்பும் குன்றத்தூரின் மேன்மையும் தொண்டை நாட்டின் வளமும் இங்கு நோக்கப்படுகின்றன. இவற்றால் அவரது புலமைத் திறமும் கற்பனை வளமும் எண்ணி வியக்கத் தக்கதாகவும் போற்றிப் புகழ்வதற்குரியதாகவும் விளங்குவதைக் காணலாம்.

பாலாற்றின் சிறப்பு

சைவம் தழைக்க தொண்டர் சீர் பரவ சேக்கிழார் அவதரித்த குன்றையம்பதி உடைய தொண்டை நாட்டில் பாயும் ஆறுகளுள் பெரியது பாலாறு. இவ்வாறு கருநாடக மாநிலத்தில் உள்ள நந்தி மலையில் தோன்றுகிறது. அம்மலையில் வசிட்ட முனிவரின் பசுவாகிய காமதேனு பொழிந்த பால் பாலாறு எனும் பெயருடையதாய்ப் பெருகி ஆங்காங்குள்ள கிணறு, ஏரி, குளம், கால்வாய், ஓடை, தடாகம் முதலிய நீர் நிலைகளை நிரப்பி அவற்றைச் சுவையுடைய பாலாக்கிப் பின் கடலுள் சென்று கலக்கறது. இதனை,

நந்தி வரைத்தலை யொருமுனி சுரமி நயக்கப் பொழி தீம்பால்
நதியாய் அங்கங்கு ஓடுபு கூபம் நயம்கிளர் ஏரிகுளம்
முந்தி எழும்கால் ஓடை தடாகம் முதல்பல வும்நிறையா
முழுத்த சுவைப்பால் ஆக்கபு பின்னும் மூரிக் கடல்புக்கும்(செங்கீரை:10)

எனும் பாடலடிகளில் மகாவித்துவான் அவர்கள் தெளிவாக விளக்குவதை அறியலாம்.

பாலாற்றினைப் பற்றி:

துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
அங்கண் நித்திலம் சந்தனம் அகிலொரு மணிகள்
பங்க யத்தடம் நிறைப்பலந் திழிவது பாில (திருக்குறிப்புத் தொண்டர்:22)

என்கிறது பெரியபுராணம்.

இதனால், மகாவித்துவான் அவர்கள் வரலாறு பற்றிச் சேக்கிழார் கூறியுள்ளதன் அடியொற்றியே பாடியுள்ளார் என்பது அறியலாகிறது.

வாலி தாகிய குணத்தினன் வசிட்டனென் றுரைக்குஞ்
சீல மாமுனி படைத்ததோர் தேனுவின் தீம்பால்

சால நீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப்

பாலி மாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ (ஆற்றுப்படலம் :11)

என்கிறது கந்தபுராணம். கந்தபுராண ஆசிரியர், கச்சியப்ப சிவாச்சாரியார் பாலாற்றின் சிறப்பைப் பகர்வது எளிதோ? என்று வினவியதற்கு விடையாகப் பாலாற்றின் பெருமையைக் கூறப்போந்த மகாவித்துவான் அவர்கள் தொண்டை நாட்டில் உள்ள நீர் நிலைகளில் பாலாற்றுச் சுவைநீர் நிரம்பியுள்ளமையால் திருமால் தான் விரும்பி அறிதுயில் கொள்வதற்குரிய இடமாக விளங்குவது இத்தொண்டை நாடா, திருப்பாற்கடலா என ஆய வேண்டியுள்ளது என்று கூறுவது பாலாற்றின் நீர்வளச் சிறப்பைக் குறிப்பதாகக் கொள்ளலாம்

புந்தி அவாவ நிரம்பலின் மாயோன் புரிகண் துயிலுமிடம்

புகல்இது வோஅது வோஎன ஆய (செங்கீரை:10)

நீர்பெருக்கெடுத்து ஓடுகின்ற காலத்தில் நிலத்தினை அகழ்ந்து கொண்டு அங்குள்ள அனைத்தையும் அடித்துச் செல்லும்படியான பாலாற்று வெள்ளநீரில் அலைகள் எழுந்து விண்ணுலகில் உள்ள கற்பக மரத்தின்மீது மோதி மீண்டும் ஓடலாயிற்று. அப்பொழுது அம்மரத்தின் அடியில் பாலாற்றின் விளையாட்டைக் காண விரும்பி நின்ற காமதேனுவைப் பார்த்து அக்கற்பகமரம், 'உன்னால்தான் எனக்கு இத்துன்பம் நேர்ந்தது' என்று கூறுவது பாலாற்றின் வளத்தை இயம்புவதேயாகும்,

இதனை,

அகழ்கின்ற பாலியாற்று அலைஎழீஇக் கற்பகம் அலைத்து ஓட
அதன் அடிக்கண்

அவாய்நின்ற காமதே னுவைநோக்கி நின்னால் அமைந்ததுஇப்
படர்என (சிறுபறை:3)

என்னும் பாடலடிகளால் அறியலாம்,

நீளைநேர் மாதரொடு காளைநேர் மைந்தர்கள் நெருங்கிவிளை யாடுபாலி
(முத்தம்:10)

இவ்வடியில், பாலி என்பது பாலாற்றைக் குறிக்கும், பாலாற்றில் நீலாதேவி போன்ற பெண்களுடன் காளைக்கு ஒப்பாக விளங்கும் மைந்தர்கள் நெருங்கி விளையாடுதலைச் சுட்டுகிறார் ஆசிரியர். பாலாற்றின் கரையில் பெருமாள் கோவில்கள் (காஞ்சிபுரம், திருப்பாற்கடல், பள்ளிகொண்டா, பழைய சீலரம்) மிக்கிருத்தலின் திருமாலின் மனைவியான நீளாதேவியை மகளிர்க்கும், மைந்தர்களுக்குச் சிவபெருமானின் வாகனமாகிய காளையையும் ஒப்புமையாகக் கூறி நீராடுதலைக் குறிப்பிடுதலால் பாலாற்றின் நீர்வளத்தையும் அப்பகுதியில் சைவ வைணவ மக்கள் கலந்து வாழ்தலையும் தெரிவிக்கின்றார்.

குன்றத்தூரின் மேன்மை

சேக்கிழார் பெருமாள் எழுந்தருளிய குன்றத்தூர், திருப்பாற்கடலுக்கு நிகரானது என்பதை இரட்டுற மொழிதல் அணியாக விளக்குகிறார்.

திருநீற்றின் வெண்மையாகிய ஒளி எங்கும் பரவியிருத்தல், எவரும் அரனின் நாமத்தை நாளும் ஓதும் பேரொளியுடைமை, கல்வியிற் சிறந்த புலமையாளர் மெய்ஞ்ஞான அமுதைப் பருக எவ்விடத்தும் நெருங்கியிருத்தல், வாழை மரங்கள் எங்கும் பொலிவு பெற்று விளங்குதல், திருநாகேச்சுரப் பெருமான் கோவில் இருத்தல், திருமகள் விருப்பத்துடன் தங்கியிருத்தல் (செல்வ வளம் மிக்கமை), மாளிகைகள் மேல் கார்மேகங்கள் அசையாது படிந்திருத்தல் ஆகியன உடையது குன்றத்தூர்.

திருநீற்றினைப் போன்ற வெண்மையொலி பரவியிருத்தல், யாவரும் அஞ்சும்படி ஆதிசேடன் தன் நாவால் எக்காலத்தும் சீறுகின்ற பேரொலி அலைகளுக்கிடையே உடைமை, தேவர்கள் அமுதுபெற எவ்விடத்தும் நெருங்கியிருத்தல், அழகுமிக்க அரம்பை முதலான தேவ கன்னியர்கள் தோன்றுதல், பாம்புகட்கு அரசனான ஆதிசேடன் இருத்தல், திருமாலின் வலமார்பிடத்தே திருமகள் விருப்பமுறப் பொருத்தியிருத்தல், பரந்துகிடக்கும் பாற்கடல் மேல் கரியமாலவன் அறிதுயில் கொண்டிருத்தல் ஆகிய காட்சிகளை உடையது திருப்பாற்கடல்.

இத்தகு காட்சித் திறன்களால் திருப்பாற்கடல் போன்றதாகிறது குன்றத்தூர், இதனை,

> **நண்பால் எவரும் உறத்தரிக்கும் நல்கூர் நீற்றின் வெள்ளொலியால்**
> **நாவால் எவரும் அரமுழக்கம் நாளும் செயஆம் பேரொலியால்**
> **எண்பால் புலவர் அமுது கொளற்கு எந்த இடத்தும் நெருங்குதலால்**
> **ஏர்சால் அரம்பை எழுதலினால் இயல்நா கேசன் வைகுதலால்**
> **கண்பால் கரிதோய் திருமடந்தை காமுற் றிடலால் மாளிகைமேல்**
> **கருமால் கிடந்து கண்துயிலும் காட்சித் தறினால் பொங்கியெழும்**
> **தண்பாற் கடல்நேர் குன்றத்தூர் (தால்:2)**

என்னும் பாடலடிகள் வாயிலாக அறியலாம்.

குன்றத்தூரைத் தேவ உலகத்தினும் சிறந்ததாகக் கூறுகிறார். முதன்மையாய்த் தோன்றும் மாற்றுயர்ந்த பொன்னாலும் முழுத்தன்மை வாய்ந்த மாணிக்கத்தாலும் மாளிகைகளும் நிலா முற்றங்களும் திண்ணைகளும் முன்கூடங்களும் பிறவும் அமைந்திருத்தலால் குன்றத்தூர் தேவர் உலகத்தினும் மிகுதியான ஒளி உடையதாக விளங்குகிறது என எண்ணி, திருஞானசம்பந்தர் திருமணத்திற்குச் சென்ற யாவரும் முத்திப் பேறு பெற்றதுபோல் குன்றத்தூரில் வாழும் ஆண், பெண் ஆகிய எல்லா உயிர்களும் இப்பூமியில் கண்ணிமைத்தல் இயலாது காணும் எல்லா நலன்களும் செய்தனன் என்று உயர்வு நவிற்சி அணியும் உவமை அணியும் ஒரு பாடலிலேயே அமையுமாறு குன்றத்தூரின் மேன்மையை (தால்:3) விளக்குகிறார்.

குன்றத்தூரில், வயிரக்கால் யாத்த மாளிகை வெண்ணிறமுடைய திருமால்போல் உள்ளது; நீலக்கற்கள் பதித்த மாளிகை நீலநிறமுடைய திருமால்போல் உள்ளது; பவளம் போன்ற மாளிகை காஞ்சிநகர்

இறைவனை வழிபட்ட திருமால்போல் உள்ளது. அஃதாவது, வயிரம், நீலம், பவளம் ஆகியவற்றால் ஆகிய மாளிகைகள் வெண்மை, கருமை, செம்மை ஆகிய நிறங்களை வெவ்வேறு காலங்களில் பெற்றிருந்த திருமாலின் திறங்களைப் போல விளங்குகின்றன என உவமையணி தோன்றக் கூறியுள்ளார். திருப்பாற்கடலைக் கடையாத முன்னர் இருந்த வெண்ணிறத் திருமால் வெண்ணிறமுடைய வயிரக் கற்களால் கட்டப்பட்ட மாளிகைக்கு உவமை; பாற்கடலைக் கடைந்த பின்னர் நஞ்சினால் கருத்துப்போன நிலவண்ணத் திருமால் நீலக்கற்கள் பதித்த மாளிகைகளுக்கு உவமை; காஞ்சிமா நகரில் சிவபெருமானை வழிபட்டு அதனால் செந்நிற மேனியைப் பெற்ற திருமால் பவள மாளிகைகளுக்கு உவமை

இந்த அருமையான கற்பனை வளம் அமைந்த பாடல் வருமாறு:

முரிவுஇல் வயிரம் கால்யாத்த முழுமா ளிகைபாற் கடல்கடையா
முன்னம் திருமால் உருவொத்து முயங்கும் எனவும் அதற்கருகே
பிரிவுஇல் கருநீ லம்குயிற்றும் பெருமா ளிகையக் கடல்கடைந்த
பின்னர் அன்னான் உருவொத்துப் பிறங்கும் எனவும் அதற்கருகே
எரிவில் விடுசெந் துகிர்மாடம் எயில்சூழ் காஞ்சி அடைந்தன்னான்
எய்தும் உருவொத்து அஃதென்றும் எந்நா வலரும் கொண்டாட
(தால்:4)

திருவிழாக்கள் மிகுதியாக நடைபெறும் குன்றத்தூரில் திருமடங்களில் எல்லாம் மெய்ஞ்ஞானமாகிய சோற்றின் மணம் வீசும்; மக்கள் மனங்களில் அவாவின்மையால் தூய்மையின் மணம் வீசும்; ஆடைகளில் பொன்னிழைகளின் ஒளி வீசும்; தோள்களில் மாலைகளின் நறுமணம் வீசும்; வயல்களில் தாமரை போன்ற அழகிய மலர்கள் மலர்ந்திருத்தலினால் தேன் மணக்கும்; இல்லங்களில் செல்வ வளம் கமழும்; மாளிகைகளின் மேல் தென்றல்காற்று தவழும்; பாடல்களில் தெய்வ மணம் கமழும்; நெற்றியில் திருநீறு பொலிந்து விளங்கும்; உணவுப் பொருள்களில் நெய்மணம் வீசும்; யாகக்குண்டங்களில் நெருப்பு நின்று இயங்கும்; தெருவில் மக்களிடையே அன்பு நிறைந்து காணும். இத்தகைய பெருமை உடைய குன்றத்தூரின் சிறப்பை, 'மணக்கும்' என்ற சொல் பன்முறை வந்து ஒரே பொருள் தரும் முறையில் 'சொற்பொருட் பின்வருநிலையணியமையப் பாடிய பாடல் (தால்:5) படித்தின்புறத்தக்கது.

தாழைகள் செறிந்த கரிய கடல் என விளங்கும் திருமால், ஆரவாரம் பொருந்திய திருப்பாற்கடலின்கண் துயிலுதல் போன்று வெள்ளையடிக்கப்பட்ட மாளிகைகள் மேல் கார் மேகங்கள் தங்கும்படியான குன்றத்தூர் என்பதால் அவ்வூர் மாளிகைகள் மிகுதியான உயரமுடையன எனத் தெரிவிக்கின்றார் என்பதையும், திருப்பாற்கடல் மாளிகைகளுக்கும் திருமால் கருமேகங்களுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளதையும் காணலாம் (சப்பாணி:7).

குன்றத்தூரில் சேக்கிழாரால் உருவாக்கப்பட்ட திருநாகேசசுரம் என்னும்

ஆ.16.

கோவில் இருத்தலால் குன்றத்தூர், சோழநாட்டிலுள்ள திருநாகேச்சரம் என்னும் சிவத்தலமாகவும் நீலமணி பதிக்கப்பட்ட மாடங்கள் உள்ளமையால் திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட இமயமலைச் சாரலில் உள்ள இந்திரநீலப் பருப்பதம் (விடியலில் நீல நிறமாகத் தோன்றும்; பகலில் வெண்ணிறமாகத் தோன்றும்) என்னும் சிவத்தலமாகவும், சிவந்த இரத்தினக் கற்கள் பதித்த மாடங்களின் ஒளியால் சோழநாட்டில் தற்பொழுது ஐயர்மலை எனப்படும் இரத்தினகிரி (திருவாட்போக்கி) என்னும் சிவத்தலமாகவும், கரும்பச்சை நிறமுடைய மரகதக் கற்கள் பதித்த மாளிகைகள் உடைமையால் தற்பொழுது திருலிங்கநாதமலை என வழங்கப்படும் மரகதமலை என்னும் சிவத்தலமாகவும், பரவிய வெண்ணீற்றுச் சுதை பூசப்பட்ட மாடங்கள் உடைமையால் ஒப்பற்று உயர்ந்த கயிலாயமலை என்னும் சிவத்தலமாகவும் விளங்குகிறது என அதன் மேன்மையினை விளக்குகிறார்.

நிலவிய நாகே சுரனி தமர்தலின் நிகழ்நா கேசுரமாய்
நீல்மணி மாடம் நிலாவனின் இந்திர நீல பருப்பதமாய்க்
கலவிய செம்மணி மாடத் தால்ஒளி கால்அர த்னக்கிரியாய்க்
கருடப் பச்சையில் ஆவியா வோரும் காண்மர கதமலையாய்
உலவிய வெண்சுதை தீற்றும் இலால்ஒங் கொருகை வைக்கிரியாய்
(சப்பாணி:10)

குன்றுகள் என உயர்ந்த மாளிகைகள் உடையது, (வருகை:6), ஏழு நிலைகள் உடைய மாடங்கள் கொண்டமையால் ஏழுலகங்களே இவை எனக் கற்றோர் புகழக்கூடிய மணிகள் பதித்த மாளிகைகள் உடையது (அம்புலி:2), எப்பொழுதும் தாய் போன்று அன்பினைச் செலுத்துகின்ற சான்றோர்கள் வாழும் குன்றத்தூர் (அம்புலி:5) செப்பரிய குன்றையம்பதி (செங்கீரை:3) அளவா வளம்துன்று குன்றை நகர் (காப்பு:10) என்று கூறப்படும் கருத்துகளில் குன்றத்தூரின் சிறப்பையும் மேன்மையையும் வளத்தையும் அணிநயம் தோன்ற எடுத்துரைப்பதைக் காணலாம்

தொண்டை நாட்டின் வளம்

தொண்டை நன்னாட்டு	- காப்பு:8
தொண்டை நன்னாட	- முத்தம் 6,7
தண்டக நாட	- செங்கீரை:10, சிற்றில்:1 மு10
துண்டீர வளநாடா	- சிறுபறை:1 மு5

தொண்டை நாடு, சேக்கிழார் பிள்ளைத் தமிழில் தண்டக நாடு எனவும் துண்டீர வளநாடு எனவும் சொல்லப்படுகிறது. கரிகாற்சோழன் வாரிசாக வந்த தொண்டைமான் என்னும் அரசன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தமையால் அப்பகுதிக்குத் தொண்டைநாடு என்னும் பெயர் வழங்கலாயிற்று. துண்டீரன் என்னும் அரசன் இப்பகுதியை ஆண்ட காலத்தில் இருந்து துண்டீரநாடு எனவும் வழங்கப்படலாயிற்று, மலைவையாவூர் என்னும் பகுதி தொண்டை நாட்டின் ஒரு பகுதி. அப்பகுதியைத் தண்டகன் என்னும் வேந்தன் ஆண்டமையால் தண்டக

நாடு எனவும் அழைக்கப்படலாயிற்று.

தொண்டை நாட்டில் பாலாறு கால்வாய் வழியாகப் பாய்கிறது என்பதனை மகாவித்துவான், "பாலாறு காலாறு பாய்தொண்டை"(முத்தம்:6) என்று சொல்நயமுடன் கூறுகிறார்.

எருமை தடாகத்திறுள் இறங்கியமையினால் தடாகம் அசுத்தம் அடைந்தது எனக் கருதி அதில் உள்ள வாளைமீன் அல்ல சுத்தம் நீங்க ஆகாய கங்கையில் நீராடி மீண்டது. இந்நீராடல் தனக்கே அசுத்தம் போக்கும்; தடாகத்தின் அசுத்தத்தைப் போக்காது என எண்ணிய வாளைமீன் திங்கள் உள்ள ஒளிமண்டலத்தைப் பிளந்து அதிலுள்ள அமுத தாரைகளுடன் கீழே இறங்கியது. அவ்வாறு வருவதற்கு இடமான பரந்த தடாகங்கள் நிறைந்து விளங்கும் தொண்டை நாடு எனச் சிறந்த உயர்வு நவிற்சி அணிநலம் அமையுமாறு பாடிய பாடல் வருமாறு:

அம்மேதி கரையேற அதுகண்ட அல்வாளை ஆயவா லாமைதீரத்
தூயநெடு வான்நீர் துளைந்தாடி மீனில் தொடக்குநீங் காமைஎண்ணிச்
சோதிமதி மண்டலங் கீண்டுஅமுத தாரையொடு துணயக்
கிழக்கிறங்கும்
பாயதடம் மலியும் திருத்தொண்டை நன்னாட -(முத்தம்:7)

இதில் வாளைமீன் தான் மட்டும் தூய்மையடைந்தால் போதாது, தான்வாழும் தடாகமும் தூய்மையுடையதாக்க எடுத்த முயற்சியைக் கூறும் அவரது கருத்தும் கற்பனை நலமும் எண்ணி மகிழத்தக்கது.

பாலாற்றில் மிகுந்து வரும் வெள்ளப் பெருக்கின்கண், அப்பெருக்கை எதிர்த்துச் செல்லும் பருத்த வரால்மீன் ஒன்று நீர்ப் பெருக்கின் வேகத்தால் கீழ்மேலோய் உருண்டு வரும் யானையை முட்டி அதனால் கோபம் கொண்டு மேலே தாவி விண்ணினைத் துளைக்க, மகிழ்தலுக்குரிய இளங்கன்று துள்ளி எழுந்து எங்கு ஓடியது என்று எண்ணிக் கொண்டிருக்கும் காமதேனுவின் மடியை விரைவாகச் சென்று முட்ட, காமநேனு தன் கன்றுதான் முட்டியது எனக்கருதி வரால்மீன் முட்டியதனால் ஏற்பட்ட துளைவழியே பாலைச் சொரிய அது பாலாற்றில் கலந்து கரையை உடைத்துக் கொண்டு வரும்படியான வளத்தை உடையது எனக் கவிஞர்கள் பாராட்டும் இயல்புடையது தொண்டைநாடு. இப்பாடலில் (முத்தம்:8) பாலாற்றின் பெயர்க் காரணத்தை உயர்வு நவிற்சி அணியும் தற்குறிப்பேற்ற அணியும் தோன்ற புதுப்பித்துக்கூறும் கற்பனைத் திறத்தைக் காணலாம்.

பருத்த கரிய எருமைகள் சொரசொரப்புடைய பெரிய கொம்புகளால் எளிதில் நீக்க முடியாத காவல்மிக்க வேலியை வழிவிடும்படி நீக்கி வயலுள் புகுந்து மென்மையான கரும்புகளைத் தின்றன. அதனால் அவ்வெருமைகளின் வாய் வழியே வந்த கருப்பஞ்சாறு அக்கரும்புத் தோட்டத்தை நிரப்பியது; அருகில் இருந்த வாழைத் தோட்டத்தை அடித்துச் செல்லும்படியாக ஆறுபோல் பெருகியது; நிலத்திலிருந்த நெற்போர் முழுவதையும் தூக்கிச் சென்று கடலில் சேர்த்தது; அதனால் கடலின் ஆழம்

குறைந்தது; கருப்பஞ்சாற்றால் கடல்நீரின் உவர்ப்புத் தன்மை மாறியது; இவ்வாறு தொண்டை நாட்டின் நீர்வளத்தையும் மருதநில வளத்தையும் உயர்ந்த கற்பனை வளத்துடன் கூறியுள்ளார் மகாவித்துவான். அக்கடலில் மூழ்கி விளையாடுபவர்கள் இந்நீர் தமிழ்நாட்டில் பாய்ந்து வருவதால் இனிமையுடையதாய் உள்ளது என்று பருகி மகிழ்கின்றனர் என்பது அவர் தமிழ்-நாட்டின் பால் கொண்ட பற்றாக அறிவிக்க அதனை நாம் உணர்தலுக்குரிய இடமாக (முத்தம்:9) அமைகிறது எனலாம்.

. . . . பாலி
நெடு வெள்ளம் உலராழி உட்புக அனார்குழிஇ நிறைமலர்கொய் பொழில்வாலிவாய்
வாளைதாய் எழுவிடபம் வைகுதேத்து அடைகிற மடைஉடைந் தெள்ளவழியும்
மதுவெள்ள மும்புகக் களமர்கள் கருப்பாலை வழிசாற்று வெள்ளமும் எழிஇ
ஆளைமோ தும்படி புகக்கண்ட அறிஞர்ஏழ் ஆழியும் இதன்கண்ஆய (முத்தம்:10)

பாலாற்று வெள்ளமும் தேனாற்று வெள்ளமும் கருப்பஞ்சாற்று வெள்ளமும் கடலில் கலத்தலைக் கண்ட அறிஞர்கள், இவ்வுவர்க் கடலுள் ஏழுகடலும் (உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்) உளவாயின என்று பாராட்டும்படியான அளவில் நீர்வளமும் நிலவளமும் ஒருங்குடையது தொண்டைநாடு. தொண்டை நாட்டுச் சோலைவளம் விண்ணுலகச் சோலை வளம்போன்று உள்ளது என உயர்வுநவிற்சி அணி தோன்றக் கூறுகின்றார். அஃதாவது, புகழ்மிக்க கற்பக மரத்தில் வண்டுகள் ஒரு சேர மொய்ப்பதற்குக் காரணம் என்ன என அஞ்சி தேவர்கள் மனவுறுதி குலையும்படியான நிலையில், அக்கற்பகச் சோலையுடன் எவ்வித வேற்றுமையும் உணர இயலாதவாறு அதற்கு ஒப்பான சோலையுடன் விளங்குவது தொண்டைநாடு

ஒரும் புகழ்க்கற் பகந்தளிகள் ஒருங்கு மொய்ப்பது எவன்என்றே
உம்பர் நடுங்கி நிலைகுலைய ஒருவேற் றுமையும் உணர்வரிதாச்
சேரும் பொழில் தண்டக நாடா (சிற்றில்:1)

சுழி தோன்றும் படியாகப் பாலாற்றில் வெள்ளம் பாய்தலினால் பெரிய யானை உயர்த்திய தும்பிக்கையும் மறையும்படியாக நெருங்கி விளைக்கிற செந்நெல்கள் செழித்து வளரும்படியான வயல்வளம் உடையது தொண்டைநாடு.

சுழிக்கும் செவிலில் பாலிநதி சுரந்து பாய மாலியாளைத்
தொண்டை எடுப்பு மறையும்விதம் துவன்றி வளர்ந்து விளைசெந்நெல்
செழிக்கும் வயல் (சிற்றில்:2)

உலகம் வியப்படையும் விளைந்த செழித்த கரும்புகள், குலைகள் உடைய வாழை மரங்கள் பசுமையான பாக்குமரங்கள், இளநீர்க் காய்கள்

உடைய தென்னை மரங்கள் முதலியன இந்திரன் அவைக்கு அழகு செய்யும்படியான அளவில் வானளாவ உயர்ந்து வளரும் சிறப்புடையது தொண்டைநாடு (சிற்றில்:3)

'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்னும் ஔவையின் கூற்றுக்கு இணங்க, தொண்டை நாட்டில் கண்ணென விளங்கும் கல்வியைக் கற்றவர்களும் அரியபல நூல்களை இயற்றியவர்களும் உயர்ந்த நூல்களுக்கு உரை தந்தவர்களும், உலகப் பற்றை நீக்கிச் சிவபெருமான் இணையடிகளில் இரண்டறக் கலந்தவர்களும் வேற்றுச் சமயங்களைக் கடிந்து அடக்கியவர்களும் ஆகப் பல்வகைச் சான்றோர்கள் செறிந்தது தொண்டை நாடு (சிற்றில்:5).

வாழை மரத்தின் குருத்தானது திங்களின் நடுவிடம் வரை வளர்ந்து சென்று, மன்மதனது வெண்கொற்றக் குடைக்கு ஒரு காம்பாகப் பொலிந்து விளங்கும் வண்ணம் வயல்வளச் செல்வம் மிக்கது தொண்டைநாடு (சிற்றில்:6).

பாலியாறு தன் அலைகளாகிய கைகளால் வாரி எடுத்து எறியும் செந்நிற மாணிக்கக் கற்களும் வெண்மையான வயிரக் கற்களும் இரு கரைகளிலும் கலந்து வீழ, ஆற்றோரத்தில் புல்மேயும் வளைந்த கொம்புகளுடைய எருமைகள் அவற்றைக் கண்டு அஞ்சி இரைச்சலிட்டுக் கொண்டு ஓடும்படியான செல்வ வளம் கொழிப்பது தொண்டைநாடு (சிறுபறை:2).

பசுமையான பாக்குமரச் சோலையிடத்தே தொங்கும் தேன் நிரம்பிய அடையை பிறைச் சந்திரனது கோடு தீண்டுகிறது. சந்திரன் தேன் கூட்டைச் (அது சிவந்து காணப்படுதலால்) சூரியன் என்று மயங்கி அச்சூரியன் தன்னைக் கவர வருகிறான் என்று எண்ணி அதனைப் பிளக்க, கிணறு, குளம், ஓடை ஆகிய எவ்விடத்தும் தேன் பாயுமாறு வீழும் வளமுடையது தொண்டைநாடு (சிறுபறை:4). ஈண்டு மயக்க அணியும், ஏது தற்குறிப்பேற்ற அணியும் அமைந்திருத்தல் காணலாம்.

சேக்கிழார் பெருமான்பால் கொண்ட பத்திச் சிறப்பால் மகாவித்துவான் அவர்கள் அருளிய 'சேக்கிழார் பிள்ளைத் தமிழில் பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுதல், குன்றத்தூர் மாளிகைகளின் மாண்பு, தொண்டை நாட்டின் செழுமை ஆகியவற்றை அழகிய உவமையணிகள் வாயிலாகவும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிறந்த உயர்வுநவிற்சி அணிகள் வாயிலாகவும் தற்குறிப்பேற்ற அணியுடனும் கூறியுள்ளமையினால் அவரது சீரிய கற்பனை வளத்தை உணரலாம்.

38. மாலை இலக்கியம்

சு. சண்முகசுந்தரம்
மதுரை

கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தலபுராணங்களாலும் பிரபந்தங்களாலும் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய புலவர்களுள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சிறப்பான பெயர் பெறுகின்றார்.

மாலை நூல்கள்

சொல்லாலேனும் பூவாலேனும் பொன்னாலேனும் மணியாலேனும் தொகுத்த தொடைமாலை எனப்படும்.

மாலை என்னும் சிறுநூல் ஒரு பொருளைக் குறித்துப் பல செய்யுள்கள் கூறுவதாகும். பன்மணிமாலை, இளைசைமணிமாலை போன்றவை அவ்வகையின.

ஒருவிதமான பூக்களைக் கொண்டும் பல்வேறு பூக்களையும் தழைகளையும் கொண்டும் மாலை தொடுக்கலாம். அதேபோன்று ஒரு பொருளை முன்விட்டு, அப்பொருளைப் பற்றிய பல்வேறு அம்சங்களைக் குறித்து ஒரேவகைப் பாவை கொண்டும் இந்நூலைப் பாடலாம். பல்வேறு வகைப்பாக்களைக் கொண்டும் பாவினங்களை கொண்டும் இம்மாலையைப் பாடலாம். (கலைக்களஞ்சியம்-8, ப.251).

ஆசிரியர் மாலை நூல்கள் ஏழினை இயற்றியுள்ளார். ஒவ்வொரு மாலையும் நூறு பாடல்களைக் கொண்டுள்ளது.

1. அகிலாண்டநாயகிமாலை

அகிலாண்டநாயகிமாலை செல்வவிநாயகர் காப்புடன் தொடங்குகின்றது. இந்நூல் திருவானைக்கா என்னும் தலத்தில் கோயில்கொண்டுள்ள அகிலாண்டநாயகிமீது பாடப்பெற்றுள்ளது. இத்தலம் சக்தி விசேடத்தலம் என்று கூறப்படும். அகிலாண்டநாயகிமாலையில் 'திருவானைக்காவகிலாண்ட நாயகியே' என்ற தொடர் கொண்டு 100 பாடல்களும் முடிக்கின்றார். நூல் முழுவதும் எழுசீர்க்கழிநெடிலடி.

2. கற்குடிமாலை (திருக்கற்குடி மாமலைமாலை)

கற்குடிமாலை கற்குடியில் உள்ள சிவபெருமான் மீது பாடப்பெற்றதாகும். நிருத்தவிநாயகர், அஞ்சனக்களம்மை, சைவசமயாசாரியர் நமச்சிவாயதேசிகர் ஆகியவரைப் பற்றிய துதிப்பாடல்கள் பெற்று நூல் தொடங்குகின்றது.

"கற்குடிமாமலைப்பரனே" என்ற தொடரால் 100 பாடல்களும் முடிகின்றார். நாயன்மார்களின் அருஞ்செயல்கள் நூலில் கூறப்பட்டுள்ளன.

3. சச்சிதானந்ததேசிகர் மாலை (தருமபுர ஆதினத்து)

சச்சிதானந்ததேசிகர் மாலையின் பாட்டுடைத் தலைவர் தருமபுர மடத்து தலைவராக இருந்த சச்சிதானந்ததேசிகராவார். இம்மாலை சிவஞான விநாயகர் காப்பு ஒன்று நீங்கலாக 100 பாடல்களைக் கொண்டுள்ளது.

சச்சிதானந்த தேசிகர் மாலையில் "தருமைச்சச்சிதானந்த தேசிகனே" என்ற தொடர் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அமைந்துள்ளது.

4. சவராயலுநாயகர் மாலை

சவராயலுநாயகர் மாலையின் பாட்டுடைத்தலைவர் ஆசிரியரின் மாணவராகிய புதுவை வித்துவான் சவராயலுநாயகராவார். இம்மாலை காப்பு நீங்கலாக 30 பாடல்களைக் கொண்டுள்ளது. குறள்வெண்பா ஒன்றும் ஆசிரியர் உடைய மாணக்கர் சவேரிநாதபிள்ளை இயற்றிய பாடல் ஒன்றும் இந்நூலின் இறுதியில் உள்ளது.

சவராயலுநாயகர் மாலையில் "புதுவைச்சவராயலு மன்னவனே" என்று ஒவ்வொரு பாடலும் முடிகின்றது.

5. சிதம்பரேசர் மாலை (கலைசைச்சிதம்பரேசுவரர் மாலை)

இச்சிதம்பரேசர் மாலை கலைசைச்சிதம்பரேசர் மாலை என்று வழங்கப்பெறும். கலைசையென்பது தொண்டைநாட்டில் உள்ள தொட்டிக்கலை என்னும் ஊர் ஆகும். அத்தலத்து வீற்றிருக்கும் சிதம்பரேசர் மீது சிதம்பரேசர் மாலை பாடப்பெற்றது.

சிதம்பரேசர் மாலை விநாயகர் துதி ஒன்று நீங்கலாக 100 பாடல்களைக் கொண்டுள்ளது. இம்மாலையில் "கலைசைவாழ் சிதம்பரேசச் சுரனே" என்று பாடல்கள் முடிகின்றது.

6. சித்திரச்சத்திரப்புகழ்ச்சிமாலை

இம்மாலையில் பாட்டுடைத் தலைவர் வியாசர்பாடி விநாயகமுதலியார் ஆவார்.

சென்னைத் திருமயிலைக்குளத்தின் தென்கரையில் உள்ளதும் இப்பொழுது சித்திரச்சத்திரமென்று வழங்கப்பெறுவதுமாகிய இடம்.அதனைக் கட்டுவித்தவர் விநாயகமுதலியார் ஆவார்.

சித்திரச்சத்திரமாலை காப்புச் செய்யுள் நீங்கலாக 100 பாடல்களைக் கொண்டுள்ளது. இதற்குமேல் திரிபு விருத்தம் அமைந்த அகத்துறைப்பாடல்கள் 29 உள்ளன.

சித்திரச்சத்திரப்புகழ்ச்சி மாலைக்குக் காஞ்சிபுரம் வித்துவான் உமாபதி முதலியார் வல்லூர் தேவராசப்பிள்ளை முதலிய பலர் சிறப்புப்பாயிரம் இயற்றியுள்ளனர்.

7. சுப்புரமணியதேசிகர்மாலை (திருவாவடுதுறை ஆதீனத்து)

சுப்பிரமணியதேசிகர் மாலையின் பாட்டுடைத் தலைவர் துறைசை சுப்பிரமணியதேசிக மூர்த்திகளாவார். இவரை ஆசிரியர் தமது ஞானாசிரியராகக் கொண்டிருந்தார்.

திருவாவடுதுறை ஆதினத்து ஆறுமுகசுவாமிகள் இயற்றிய சிறப்புப்பாயிரம் ஒன்று சுப்பிரமணியதேசிகர் மாலையில் இறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளது. காப்புடன் இதன் செய்யுள் தொகை 10 ஆகும். "துறைசைச்சுப்பிரமணிய தேசிகனே" என்ற தொடர் ஒவ்வொரு பாடலின் இறுதியில் அமைந்துள்ளது.

39. சிற்றிலக்கியச் செல்வர்

மா. சத்தியபாமா
தஞ்சாவூர்

'கல்விச் செல்வத்தை' வழங்கும் பெரியோர்கள் எக்காலத்தும் போற்றப்படுகின்றனர். அவர்கள் இயற்றிய நூல்கள் மக்களைப் பண்படுத்தும் கலைச் செல்வங்களாக விளங்கி வருகின்றன. காலம் மாறினாலும் இச்சான்றோரின் புகழ் மாறாது மேன் மேலும் வளர்ச்சியுற்று வருகின்றது. இத்தகைய புகழாளார்களுள் ஒருவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழகம் கண்ட பெரும் புலவருள் ஒருவர். இளம்வயது முதலே விரைவாகவும். இனிமையாகவும், பாடும் ஆற்றல் உடையவர்.

தமிழார்வம் காரணமாக, "மனைதொறும் ஐயமேற்று வந்த ஒரு பரதேசியுடன் தெருத்தெருவாகச் சென்று பிற்றை நிலை முனியாது நின்று தண்டியலங்காரம் பாடம் கேட்டார்" என்பதை சி. ஜெகந்நாதாசார்யர் தம் ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பதிப்பு நூலின் முகவுரையில் எழுதியுள்ளார். நினைவாற்றல் மிக்கவரான இவன் பிற்காலக் கம்பர் என்று போற்றப்பட்டவர். கல்வி போதித்ததோடு புராணச் சொற்பொழிவும் நிகழ்த்தியவர். 1854-ல் மகாவித்துவான் பட்டம் பெற்றவர். உ.வே.சா.போன்ற சிறந்த மாணவர்களைப் பெற்றவர். சுமார் 8' 'ற்றிலக்கியங்களை இயற்றி, தமிழன்னைக்குத் தொண்டாற்றியவர்.

பிள்ளையவர்களும் மாணவர்களும்

பிள்ளையவர்களிடம் பலரும் வந்து விருப்பத்துடன் பாடம் கேட்டனர். அவருடைய மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் டாக்டர் உ.வே. சாமிநாதையர், பூவாளூர்த் தியாகராசச் செட்டியார், அரண்வாயில் வேங்கடசுப்புப் பிள்ளை, திருவிழி மிழலைச் சாமிநாதக் கவிராயர், சவரிராயலு பிள்ளை, தேவராசபிள்ளை, வேதநாயகம் பிள்ளை, குலாம்காதிறு நாவலர் போன்றோர்.

பிள்ளையவர்கள் தம்மிடம் கல்வி கற்க வருபவர்களிடம் சாதி சமய வேறுபாடு பாராட்டுவதில்லை. குலாம்காதிறு நாவலர் என்னும் முகமதியர் சிறாப்புராணம் கற்றார். சவரிராயலு நாயகர் என்னும் கிறித்துவர் தேம்பாவணி, திருக்காவலூர், கலம்பகம் முதலிய நூல்களைக் கற்றார். வேதநாயகம் பிள்ளை என்னும் கிறித்துவர் இவரிடம் பல நூல்களைக் கற்றார் என்பதை சேக்கிழார் பிள்ளைத்தமிழைப் பதிப்பித்த கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளையவர்களின் மாணவர்களில் 5 ஆண்டுகள் உடன் இருந்து பழகிப் பாடம் கேட்ட உ.வே.சா. அவர்கள் பிள்ளையவர்களின் வரலாற்றை 800 பக்கங்களில் இரண்டு பாகங்களில் எழுதியுள்ளார். பிள்ளையவர்களின் பல பழந்தமிழ் நூல்களை அச்சில் பதிப்பித்துத் தமிழ் உலகிற்குப் பெருந் தொண்டாற்றினார். அவர் தம் ஆசிரியரைப் பற்றி 'என் சரிதம்' என்னும் தனது நூலில் ஆசிரியருள் சிறந்தவர். கவிகளுக்குச் சிகாமணி, குணக்கடல் என்று யாவரும் அவரைப் போற்றுவர் (ப. 81) என்று போற்றுகின்றார். மேலும் பிள்ளையவர்களின் ஆற்றலைக் குறித்து, ''அவருடைய கவித்துவத்தைக் குறித்து நான் வியந்ததுண்டு" (ப.173) என்றும், "பிறரோடு உரையாடியும் அதே சமயத்தில் கற்பனை செறிந்த செய்யுட்கள் பலவற்றை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து இயற்றிக் கொண்டும் இருந்த அவருடைய பேராற்றலை நான் மனத்துள் வியந்து எழுதி வந்தேன் (ப.219)என்றும் குறிப்பிடுகின்றார்.

பிள்ளையவர்கள் மாணவர்கள் மீது பேரன்பு உடையவராக விளங்கினார். ஒரு முறை உ.வே.சா. ஐயர் அவர்களுக்கு உடல் நலம் குன்றியதைக் கண்டு துன்புற்று வருந்திப் புலம்பியதை, ". . . . இடையே எனக்கு உண்டான நோய் அவருடைய அமைதியான மனநிலையைக் கலக்கிவிட்டது. நான் என் துரதிருஷ்டம் இப்படி நேர்ந்தது என நினைத்தேன். அவரோ அரசமரத்தைப் பிடித்த பேய் பிள்ளையாரையும் பிடித்தது போல என்னைப் பிடித்த சனியன் என்னைச் சேர்ந்தவர்களையும் துன்புறுத்துகிறதே என்று சொல்லி வருத்தமுற்றார் (ப. 221) என்று 'என் சரிதத்தில்' எழுதுகின்றார்.

பிள்ளையவர்களின் மறைவு குறித்து வருந்திய குமாரசாமித் தம்பிரான், ''பிள்ளையவர்கள் மடத்தில் இருந்ததனால் வெளியூர்களிலிருந்து எவ்வளவோ பேர்கள் வந்து அவர்களிடம் பாடம் கேட்டார்கள். மடத்தில் எப்பொழுதும் மாணாக்கர்கள் கூட்டம் இருந்தது. இனிமேல் அப்படி இருக்க இடம் இல்லை. அவரவர் அவரவர் ஊருக்குச் சென்று இருக்க வேண்டியதுதான். விசேஷ காலங்களில் இங்கே வந்து போகலாம்'' (ப.216)என்று கூறியதாக உ.வே.சா.அவர்கள் கூறுவது சுட்டத்தக்கது.

பிள்ளையவர்களும் சிற்றிலக்கிய படைப்புகளும்

பிள்ளையவர்கள் தம் வாழ்வில் பல்வேறு சூழ்நிலைகளில் 40-க்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். திரிசிரபுரத்தில் வாழத் தொடங்கிய தம் இளமைக் காலத்தில, திருவூறைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி, அகிலாண்டநாயகி மாலை, பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலான சிற்றிலக்கியங்களை இயற்றினார். வன்றொடைச் செட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க சேக்கிழார் பிள்ளைத் தமிழைப் பாடினார்.

திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை பாடப்பட்ட சூழலை உ.வே.சா. அவர்கள்,

சிதம்பரம் பிள்ளை யென்னும் கனவான் இவரை நோக்கி, அகிலாண்டேசுவரியின் மீது ஒரு மாலை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்பொழுத உடன் சென்றவருடன் ஒருவர், முன்னமே திருவண்ணாமலையை வலம்வரத் தொடங்கிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு முறை வருவதற்குத் தரிசனம் செய்து திரும்புவதற்குள் அம்மாலையைச் செய்தற்கியலுமா! என்று கேட்டார். இவர் நேருமானால் செய்யலாம் என்று சொல்லி முடித்தார் என்று, அந்நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளையவர்கள் தம் மாணவர் குறித்து சிற்றிலக்கியம் ஒன்றை இயற்றியுள்ளார். தம் மாணவரான கிறித்தவ சமயத்தைச் சார்ந்த வேதநாயகம் பிள்ளை மீது, 'குளத்தூர் கோவை' என்ற நூலை எழுதினார்.

தம் மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சில சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். பூவாளூருக்குச் சென்றபோது தியாகராசச் செட்டியாருடைய விருப்பப்படி பூவாளூர் பதிற்றுப்பத்தந்தாதி பாடினார்.

சிற்றிலக்கியப் பதிப்புகள்

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய பிரபந்தங்களை முதலில் பதிப்பித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சி.தியாகராச செட்டியார் அவர்கள். இதனை,

> *"கவிஞர் பெருமானாக விளங்கிய திருவாவடுதுறையாதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய தமிழ் நூல்களுட் பிரபந்தங்கள் பல. அவற்றுட் சில கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்த ஸ்ரீ.சி.தியாகராச செட்டியாரவர்கள் முதலியவர்களால் முன் அச்சிற் பதிப்பிக்கப் பெற்று வழங்கி வந்தன"*

என்று உ.வே.சா அவர்கள் எழுதியிருப்பது கொண்டு உணரலாம். இச்சிற்றிலக்கியங்களும் 1910-ஆம் ஆண்டுக்கு முன்னரே கிடைப்பது அரிதாக இருந்துள்ளன. ஆகவே அவற்றோடு மற்ற சிற்றிலக்கியங்களும் சொல்லினிமை, பொருளினிமை போன்றவற்றில் சிறந்து விளங்கியனவும் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டனவுமாகிய சிறப்புப் பாயிரங்களும், ஒருங்கே சேர்த்து 'ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு' என்ற நூலாக வெளிவந்தது. உ.வே.சாமிநாத ஐயர் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட இந்நூலின் முதல் பதிப்பு 1910-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

1926-ஆம் ஆண்டு இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. இப்பதிப்பின் முகவுரையில் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள்,

"முற்பதிப்பில் அபூர்த்தியாக இருந்த பழைசை பதிற்றுப்பத்தந்தாதி பட்டீச்சரம் ஸ்ரீ ஆறுமுகம் பிள்ளையவர்களால் சில வருடங்களுக்கு முன் முற்றுங் கிடைத்தமையின் அது பூர்த்தியாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறி இருப்பதில் இருந்தும்,

''பிள்ளையவர்கள் பாடி அரங்கேற்றிய சில பூர்த்தியான பிரபந்தங்களையும் அபூர்த்தியான சிலவற்றையும் இயன்றமட்டில் பல இடங்களில் தேடிப் பார்த்தும் அவைகள் கிடைக்கவில்லை.

என்று கூறி இருப்பதில் இருந்தும், பிள்ளையவர்கள் மறைந்து சுமார் 40 ஆண்டுகளுக்குள்ளேயே அவர் இயற்றிய பல நூல்கள் கிடைக்காமல் மறைந்துவிட்டன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

1910-ல் வெளிவந்த பிரபந்தத்திரட்டு நூலின் முதல் பதிப்பில் இல்லாத சீகாழிக்கோவை, வியாசைக் கோவை, திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி, பொன்னூசல் முதலியன உ.வே.சாமிநாத ஐயர் அவர்களின் அயராத உழைப்பால் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டாவது பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரபந்தத்திரட்டில் 8 பிள்ளைத்தமிழ் நூல்கள் கூறப்பட்டுள்ளன. சேக்கிழார் பெருமான் பிள்ளைத்தமிழ் நூலின், கழக வெளியீட்டில் 9 பிள்ளைத்தமிழ் நூல்கள் கூறப்பட்டுள்ளன. பிரபந்தத்திரட்டில் குறிப்பிடப்படாத பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழ், பிரம வித்தியாநாயகி பிள்ளைத்தமிழ் ஆகியவை கழக வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. கழக வெளியீட்டில் கூறப்படாத, திருவாவடுதுறை ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் பிரபந்தத்திரட்டில் அமைந்துள்ளது.

பிள்ளையவர்களின் பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழ், சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடான 7 பிள்ளைத்தமிழ் நூல்கள் அடங்கிய பிள்ளைத்தமிழ்க் கொத்தில் குறிப்புரையுடன் அமைந்துள்ளது. இந்நூல் 1956-ஆம் ஆண்டில் டி.சந்திரசேகரன் அவர்களால் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. இந்நூலின் முன்னுரையில் எட்டையபுரம் மகாராசாவிடத்தில் உள்ள சுவடியில் இருந்து 1924-25-இல் படியெடுத்து வைக்கப்பட்ட தாள் சுவடியில் இருந்து தூத்துக்குடி பாகம் பிரியா அம்மை பிள்ளைத்தமிழைப் பதிப்பித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அந்நூலின் அணிந்துரையில் பாகம் பிரியாள் பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார் என்பது விளங்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பிரபந்தத்திரட்டில் கூறப்படாத எறும்பீச்சரம் வெண்பாவந்தாதி, தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி முதலானவை கழக வெளியீட்டில் கூறப்பட்டுள்ளன.

சிற்றிலக்கியங்களில் புதுமைகள்

பிள்ளையவர்கள் தாம் இயற்றியுள்ள சிற்றிலக்கியங்களில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தியுள்ளார். சான்றாக தொண்டை மண்டலத்தில் குன்றத்தூரில் திரு அவதாரம் செய்த சேக்கிழார் பெருமானைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் ஏனைய பிள்ளைத் தமிழ் ஆசிரியர்கள் கூறியுள்ள உறுப்புகளோடு அமையாது "குருவணக்கமும் அவையடக்கமும்" என ஓர் உறுப்பைச் சிறப்புறக் கூறியுள்ளார். இப்பகுதியில் திருவாவடுதுறை ஆதீனச் சிறப்பையும், தம் குருவின் சிறப்பையும் கூறியுள்ளார். மேலும் சேக்கிழாரை

சிவபெருமானுக்கும், கணபதிக்கும், முருகவேளுக்கும் ஒப்புமை கூறுவது சிறப்பிற்குரியது. இந்நூலின் காப்புப்பருவத்தில் மற்ற பிள்ளைத்தமிழ் ஆசிரியர்கள் கூறிய முறையையும், இலக்கண முறையையும் அடியோடு மாற்றித் தம் பாட்டுடைத் தலைவராகிய சேக்கிழார் பெருமான் இயற்றியருளிய திருத்தொண்டர் புராணத்துப் பாட்டுடைத் தலைவர்களாகிய நாயன்மார்களையே காப்புக் கடவுளர்களாக வைத்துப் பாடிய முறை குறிப்பிடத்தக்கதாகும்.

திருவாவடுதுறை ஆதீனத்தாரால் மகாவித்துவான் பட்டம் பெற்ற பிள்ளையவர்களின் பூத உடல் இப்புவியை விட்டு மறைந்தாலும் காலத்தால் அழியாத அவர்தம் புகழுடல் இன்றும் நிலைத்து வருவது தமிழ் உலகிற்கு அவர் ஆற்றிய அரும்பெருந் தொண்டினைப் புலப்படுத்துவதாகும்.

40. பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் பெரும்பாவலர்

மு.சதாசிவம்
ஈரோடு

நூறாயிரம் பாடல்களுக்கு மேல் கவிமழை பொழிந்த பெரும்பாவலர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பழைமையைப் பெரிதும் மதித்துப் போற்றிய பழைமைவாதி என்றே பலரும் கருதுகின்றனர். ஆனால் ஆங்காங்கே சிற்சில புரட்சிக் கருத்துக்களையும் இவர் கூறியுள்ளார் என்பது வியப்பிற்குரியது. குறிப்பாகத் தம் காலத்தில் மக்கள் பெண்களைத் தாழ்வாகவும், ஆண்களை உயர்வாகவும் கருதிக்கொண்டிருந்தபோது பெண்ணிற்கே ஏற்றம் தந்து போற்றிய இவரது பான்மை போற்றற்குரியதாயுள்ளது.

1. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
   மக்கட்பே றல்ல பிற

என்னும் திருக்குறளின் உரையின்கண் பரிமேலழகர்

" 'அறிவறிந்த' என்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது" என்று எழுதியுள்ளார்.

பெரும்பாவலரின் காலத்திலும் பெண்களிற்பலர் கல்வியறிவு பெறாதவர்களாகவே இருந்தனர். மகனைச் 'சான்றோனாக்கும்' கடமை தந்தைக்கே உரியதாயிருந்தது.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

என்ற குறட்பாவின் உரையிலும் தாய் தானாக அறியும் அறிவு படைக்காதவளாதலின் 'கேட்டதாய்' என்று வள்ளுவர் கூறினார் என்று விளக்கம் தந்தார் பரிமேலழகர். மேற்கண்ட இரு குறட்பாக்களுக்கும் உரைவரைந்த பரிமேலழகரின் கருத்தை நயமாக மறுக்க வேண்டும் என்று விரும்பினார் நம் பெரும்பாவலர் அவர்கள். பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தில் இவ்வாறு பாடியுள்ளார்.

பேசு புகழ்சால் பெரும்புவனத்தில் ஆண்மகப்
    பெறல் சிறப்பென்று மற்றைப்
பெண்மகப் பெறல்அத் துணைச்சிறப் பன்றுதுயர்
    பெற்றதொப் பாகுமென்றும்
மாசுபடு துன்பமே பெண்ணுருவமாய் எந்த
    வைப்பினும் வருவ தென்று

மதிக்கினொரு மகவுமக வாவென்றும் இங்ஙனம்
வகுத்துரைப் பார்க ளோடு
கூசுத விலாதக மலர்ந்தாள் மகப்பெறுதி
குறைவுதப என்றாசிமுற்
கூறுநரும் உள்ளும் நாண்கொள்ள வெள்ளப்படாக்
குவடுவா னணவ வோங்குந்
தேசுமலி பனிமலைக் கொரு புதல்வியாய உமை
செங்கீரை ஆடி யருளே
திருப்பெரு மணத்தமர் அருட்பெரு மணச்செல்வி
செங்கீரை யடியருளே

இதன் பொருள்

"புகழ்மிக்க இந்த உலகத்தில் எல்லோரும் ஆண் குழந்தை பெறுதலே மிகவும் சிறப்பானது என்றும், பெண் குழந்தை பெறுதல் அவ்வளவு சிறப்பானதன்று என்றும் கூறுகின்றனர். மேலும் பெண்ணைப் பெறுவது பெருந்துயர் அடைவதற்கு ஒப்பாகும் என்றும் கூறுகின்றனர். துன்பமே பெண்ணுருவமாகப் பிறப்பெடுத்து வருகிறது என்று எல்லோரும் அஞ்சுகின்றனர். பெண் குழந்தை பிறந்ததைக் கேட்டவுடனே எல்லோரும் 'ஓ பிறந்தது பொட்டையா?' என்று ஏளனமாகப் பேசுகின்றனர்.

ஒரு பெண் முழுகாமலிருக்கிறாள் என்பதையறிந்தபோதும், வளைகாப்பின் போதும் பெரியோர்களும் உற்றோர்களும் 'நல்ல ஆண்குழந்தை பிறக்கட்டும்' என்று வாழ்த்துக்கூறுவர். ஆனால் இவர்கள் எல்லாம் வெட்கப்படும்படியாக எந்த ஆண் குழந்தையையும் விடப் பன்மடங்கு உயர்ந்த பெண் குழந்தையாக உமாதேவியே இமவான் மகளாகப் பிறந்தாய் பெண் குழந்தையே வேண்டாம் என்று கூறுவோரின் வாயை அடைத்துவிட்டாய் நீ பிறந்ததால் பெண்குலத்துக்கே பெரிய பெருமை எற்பட்டுள்ளது" என்று பெரும்புலவர் பெண்மையை இங்கே உயர்த்திப் பாடியுள்ளார்.

2. உலகியலில் மணமகனாகிய ஆணுக்குச் சிறப்புத் தருவதே மரபாக இருந்து வந்துள்ளது.

. . . . என்ற பெயருள்ள மணமகனுக்கும்,
. . . . என்ற பெயருள்ள மணமகளுக்கும்

ஆன்றோர் உறுதிசெய்த வண்ணம் திருமணம் நிகழ்வுறும் என்றோ, அல்லது

. . . . . என்ற மணமகன். . . . . . என்ற மணமகளை இன்றுமுதல் தன் வாழ்க்கைத் துணைவியாக்கி இல்லறம் என்னும் நல்லறத்தை ஏற்கும் திருமண விழாவுக்குத் தாங்கள் சுற்றம்சூழ வந்து மணமக்களை வாழ்த்துமாறு வேண்டுகிறோம் என்றோ திருமண அழைப்பை அச்சிடுவதே மரபாக உள்ளது. 'பெண்ணழைப்பு' என்பதைக் காட்டிலும், 'மாப்பிள்ளையழைப்பே' பெருமையாகப் பேசப்படுகிறது. அதுபோலவே,

'இறைவனை வேண்டி இடப்பாகம் பெற்றாள் தேவி' என்றே பலரும் பேசி வந்தனர்.

பெண்மைக்கு ஏற்றம்தர விரும்பிய பெரும்பாவலர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், 'இறைவனிடம் உமாதேவி வந்து இடப்பாகம் அமர்ந்தாள்' என்று கூறுவதைவிட 'உமாதேவியிடம் சென்று ஒருபாகத்தைப் பெற்றான் இறைவன்' என்று கூறுவதே பொருத்தமாயிருக்கும் என்கிறார். ஏனெனில் இறைவன் ஆடல் செய்யும்போது ஒப்பற்ற முறையில் பால்பொழிந்ததால் 'ஒப்பிலா முலையாள்' என்ற பெருஞ்சிறப்பைப் பெற்றவள் தேவியே" என்று கூறுகிறார்.

'சிறையிருந்த சீதையின் ஏற்றங் கூறுவதே இராமாயணம்' என்று கூறுவர். அதுபோலவே 'இறைவன் தேவியிடம் சென்று ஒரு பாகம் பெற்றான்' என்று கூறுவதே பொருத்தம் என்று மகாவித்துவான் அவர்கள் பெண்மைக்கு ஓர் ஏற்றம் தந்துபேசுகிறார். அப்பாடல் இதோ:

இறைவன்பால் உவந்தாள் இறைவிஎன்று எவரும்
எடுத்தியம் பிடுவது மிருக்க
இறைவிபால் உவந்தான் இறைவன்என்று எவரும்
எடுத்தியம் பிடுவதும் எழுந்தது
இறைவன்அன்று ஆடப் பால்பொழிவ திலோர்
இணையிலா தமைகுறித் தன்றோ
இறைவியை இன்னும் ஒப்பிலா முலையாள்
என்றிசைத்து உய்யுமால் உலகம்,

(திருத்துருத்திப் புராணம், கோமுத்திப் படலம்.9.)

இவ்வாறு பெண்மைக்குப் பெருமை சேர்த்த பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பெரும்புகழ் வாழ்க என்று வாழ்த்துவோம்.

41. பிள்ளைத் தமிழ் எனும் பெருந்தமிழ்

கு. சாரதாம்பாள்
கோவை

சேக்கிழார் பிள்ளைத்தமிழில் இடம் பெறும் காப்புப் பருவம்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தில்லை வாழ், அந்தணர் என்னும் திருத்தொண்டத் தொகைப் பாட்டில் கூறப்பட்ட முதல் ஏழு அடியவர்களும், ஏழு திருத்தொண்டர்களும், மூர்த்தி நாயனார் முதலான ஆறு நாயன்மார்களும், திருநாவுக்கரசர் முதலான ஏழு நாயன்மார்களும், திருஞானசம்பந்தர் முதலான ஆறுநாயன்மார்களும், சாக்கியர் முதல் ஆறு நாயன்மார்களும், சங்கப்புலவர் முதலான எட்டு நாயன்மார்களும், கழற்சிங்கன் முதலான ஐந்து நாயன்மார்களும், தொகையடியாராகிய ஏழு வகையறாரும் ஆகிய திருத்தொண்டர்கள் குன்றத்தூர் உதித்த எம்பரமனைக் காக்க வேண்டுமெனக் கூறுகிறார்.

செங்கீரைப் பருவம்

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் இரண்டாவது பருவமாக அமைவது 'செங்கீரைப்பருவம்' குழந்தையின் ஐந்தாம் திங்களின் நிகழ்வதாகும். 'கீர்' என்பது சொல் என்னும் பொருளுடையது. குழந்தையின் மொழியாதலின்அது செம்மை என்னும் அடைமொழி பெற்று ஐகாரச்சாரியையோடு 'செங்கீரை' ஆயிற்று. ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி தலைநிமிர்த்தி முகம் அசைய ஆடும் பிள்ளையின் சிறப்பை பாடுவது செங்கீரைப் பருவமாகும்.

செங்கீரைப்பருவத்தில் சேக்கிழார் பெருமானின் சிறப்புகள், அணிந்துள்ள அணிகலன் பற்றி கற்பனை நயப்பட கூறுகிறார். அழகுமிக்க திரு வாயிலிருந்து பாக்களின் சொற்களின் சுவையும், பொருட்சுவையும், ஒழுகுதலைத் தெரிவிப்பது போல திருவாய் நீராகிய அமிழ்தம் மாட்சிமையாய் ஒழுகித் தோன்ற திருநெற்றியிலே அணிந்துள்ள திருநீரானது இளமையான நிலவின் ஒளியையும், அழகிய காதுகளிலே அணிந்துள்ள பொன்மயமான காதணிகள் இளவெளிலையும் ஒளிவிட்டு விசின என்றும், குளிர்ந்த முழுநிலவு போன்ற வெண்கொற்றக் குடையின் கீழ் அருளாட்சி புரியும் அனபாய சோழனின் பேரவையில் திருத்தொண்டர் புராண அரங்கேற்றத்தைக் கேட்டு மனமகிழ்ந்து பாராட்டும்படியாக மேலும் மேலும் விவரித்துக்கூறிய பெருமான் என்றும், திருக்கயிலாய பரம்பரையில் அவதரித்த கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியரால் புராணம் பாடப்பெற்ற அருண்மொழித்தேவன், கங்கை மரபில் தோன்றி இறைவன் அருள் பெற்றத் தில்லையம்படியில் இறைவன் திருக்கோயிலில் இருக்கும் ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்து கொண்டு திருத்தொண்டர் வரலாற்றினைப் பாடியவன் என்றும் செயற்கை அழகும், இயற்கை அழகும், பொருந்த சூழ்ந்த அன்பரின் மனத்தில் விளங்கும் செஞ்சுடரே, பாலாற்று நீரால் பொலிந்து விளங்கும் தொண்டை நாட்டவனே,

சிவபெருமானுக்கு இனியவனே ஆடுக செங்கீரையாடி அருளுவதாகப் போற்றுகின்றார்.

தாலப்பருவம்

தால் என்பது நாக்கு, குழந்தையைத் தொட்டிலிட்டு நாக்கை அசைத்துத் தாலாட்டுப் (தால்+ஆட்டு)பாடி குழந்தையைத் தூங்க வைப்பது தாலப்பருவமாகும். தாலப்பருவம் செங்கீரைப்பருவம் முறைமாறியும் வரும். பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் ஒரு பருவமாக விளங்கும். இத்தாலாட்டுப் பாடல் நாளடைவில் தனியொரு சிற்றிலக்கியமாக உருப்பெற்றுள்ளது. இப்பருவம் ஏழாம் மாதத்தில் நிகழ்வது ஆகும்.

பிள்ளையவர்கள் குன்றத்தூரின் வளத்தை கற்பனை நயப்பட கூறுகிறார். உழவர்கள் நீர்நிலையிலிருந்து முத்தினை அரித்து எடுத்துக்கரையிலே குவிக்க, நீரில் படிந்திருந்த அன்னம் அம்முத்துக் குவியலின் மேலிருந்து வெயில் காய, அதனைக்கண்ட கள்ளுண்டு மயங்கிய களமர், அன்னத்தின் முட்டையை முத்தென்றும் குவித்து விட்டோமே என நாணுதற்கு இடமான நீர்துறை சார்ந்தது' என்றும், திருப்பாற்கடலைப் போன்று விளங்குகின்றது குன்றத்தூர். நிலம், பவளம் ஆகிய நிறங்களையுடைய திருமாலைப்போல வயிரம், நீலம், பவளம் என்னும் இவற்றால் ஆகிய மாளிகைகள் நிறைந்துள்ள ஊர் குன்றத்தூர் என்றும், பல்வேறு வகையான உயர்ந்த மணங்கள் வீசும் புகழ் மிக்கது என்றெல்லாம் குன்றத்தூரை சிறப்பிக்கின்றார்.

சப்பாணிப் பருவம்

நான்காவது பருவமாக விளங்குவது 'சப்பாணிப்பருவம்' ஒன்பதாந்திங்களில் நிகழ்வது சப்பாணி என்பதைச் சக + பாணி எனப் பிரித்து 'சக' என்பது உடல் 'பாணி' என்பது கை இரண்டு கைகளையும் உடன் சேர்த்துக் கொட்டுதலாலே சப்பாணி ஆயிற்று.

சேக்கிழார் பெருமானின் பெருமைகளை இப்பருவத்தில் குறிப்பிடுகின்றார். குன்றத்தாராகிய உதயமலையில் உதித்து உலகமெல்லாம் அருள் ஒளிவீசி வரும் சூரியன் போன்ற பெருமான் என்றும், அரசன் புனைந்து கொள்ள மாணிக்கக்கற்களோடு தழைத்து விளங்கும் மகுடத்தைத் தொட்டு வாழ்த்திக் கொடுத்தருளுபவனே, சமண சமயமாகிய பாழுங்குழியில் வீழ்ந்தவர்களை முன்கண்டனம் பேசி அவர்களை அச்சமயத்தினின்று விடுவித்தவனே சான்றோர்கள் பலரால் நூலாசிரியன், உரையாசிரியன், போதகாசிரியர், ஞானசிரியர் எனப் புகழப்படுபவனே, சப்பாணி கொட்டுக என்று குறிப்பிடுகின்றார்.

முத்தப் பருவம்

"குழந்தையை முத்தம் தருமாறு தாய், தந்தையர் வேண்டுவது முத்தப்பவரும் ஆகும்." ஐந்தாம் பருவமாக அமைவது. குழந்தையின் பதினோராந்திங்களின் நிகழ்வது. குழந்தையைப் பாராட்டி மடியில் தூக்கி வைத்துக் கொண்டு அதன் மலரினும் மெல்லிய இதழ்களால் முத்தம் பெற்று மகிழ்தலே முத்தப்பருவமாகும். தொண்டைநாட்டு நீர்வளத்தை

இப்பருவத்தில் குறிப்பிடுகின்றார். வளங்கள் நிறைந்த பாலாறு வாய்க்கால் வழியாகப் பாயும் தொண்டை நாட்டுத் தலைவனே, பாலாற்று வெள்ளமும், கொழும்புத் தேன் வெள்ளமும், கரும்பின் சாற்று வெள்ளமும், உலர்கடலில் புகுதலைக் கண்ட அறிஞர்கள் இவ்வுலர்க்கடலுள் ஏழு கடலும் உள்ளன என்று போற்றும் மருதநிலங்களையுடைய தலைவனே நின் பவளம் போன்ற வாயினால் முத்தம் தருக என்று, உலகமானது மூல இலக்கியம் என்று அடியார்களின் அருமை பெருமைகளைப் பாராட்டிக் கல்லும் கரையக் கவிபாடிய நின் கனிவாயினால் முத்தம் தருக என்று சேக்கிழார் பெருமானை புகழ்கின்றார்.

வருகைப் பருவம்

வருகைப்பருவம் வாரானைப்பருவம் என்று கூறுப்படுகின்றது. தத்தித் தத்தித் தார் நடையிட்டு வரும் குழந்தையை அருகில் வருமாறு அழைப்பது வாரானைப் பருவம் ஆகும். ஆறாது ஆகிய இப்பருவம் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வதாகும். வருகைப் பருவத்தில் சேக்கிழார் பெருமாள் எத்தகையோர்க்கு இனிதருள் புரிவான் என்பதைக் குறிப்பிடுகின்றார். எல்லாச் சமயங்களிலும் உயர்ந்ததான சைவச்சமயம் எல்லா இடங்களிலிலும் பெருகியவனே, அடியார்களாகிய எங்கள் உள்ளத்தில் அன்புதோன்றவும் வேற்றுச் சமயத்தவருக்கு அச்சம் உண்டாகியவனே, புறசமயம், அகசமயம் என்னும் பல சமயவாதிகளின் வாதங்களை எல்லாம் நீக்கி சமயகுரவர் அருளச்செய்த திருநெறிச் செந்தமிழ்ச் செல்வம் பெருக செய்தவனே, உலகத்தில் உள்ளவரையெல்லாம் வருக என அழைத்து காக்கும் பண்பினைப் பெற்றவனே, தம் மனைவி அல்லாத மற்ற மகளிர்களை உடன்பிறந்த சகோதரியாக நினைக்கும் வேளாண்மைக்குலத்தின் தலைவனே, உழுதல் தொழிலைச் செய்தற்குரிய தாற்றுக்கோலைக் கையின்கண் கொண்டவனே வருக எனக் கூறுகின்றார்.

அம்புலிப்பருவம்

ஏழாவது பருவமாக அமைவது அம்புலிப்பருவம். குழந்தையின் பதினெட்டாம் மாதத்தில் நிகழ்வது. அம்புலியை அம்புல்லி எனப்பிரிக்கலாம். புல்லி என்பது நிலவைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அம்புலி என்று நிலவைக் கூறினும் பொருந்தும். வெள்ளி நிலவைக் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பருவமே அம்புலி பருவமாகும்.

சேக்கிழார் பெருமானின் பெருமைகள் கூறி அம்புலியை அழைக்கின்றார். ஐயனுடன் நீ ஒத்திருத்தலை நன்கு அறிந்து கொண்டு அவனுடன் விளையாட வருக, என் ஐயன் சில காரணங்களால் நின்னிலும் உயர்ந்தவன். எனவே ஐயன் உன்னிடத்திற்கு வரமாட்டான். நீ இவனிடம் வந்து இங்கு விளையாடவா, பெருமானுக்கும், உனக்கும் ஒப்புமை இருந்தாலும் அஃது பொன்னோடு இருப்பினை ஒப்புமை கூறுதல் போன்றதாகும். அம்புலியே நினைக்கும் எங்கள் சேக்கிழானுக்கும் மதியிலும், உறவிலும், தன்மையிலும் வேறுபாடு உண்டு. அப்படி இருக்கவும் நின்னை அழைத்தது முழுக்கருணையே, உன்னைக்காட்டிலும் எங்கள் தலைவன் வல்லபம் உடையவன். அதனை நீ உணரவில்லை போலும், அம்புலியே நீ வாராமலிருந்தால் அவன் கோபித்து உன் மேல் வசைபாடிடுவான். பாடினால் இறைவனும் உன்னை அணிந்து கொள்ளாமல் வெறுப்பான். ஆதலின் விளையாட வருக என்று சேக்கிழாரின் பெருமையைச் சிறப்பித்துப்

பேசுகின்றார்.

சிற்றில் பருவம்

சிறுமியர் சிறு வீடு கட்டி விளையாடுகின்ற காலை, அதனைச் சிறுவர் காலால் அழித்துச் சிதைக்கின்ற பருவம் சிற்றில் பருவம் ஆகும். இது குழந்தையின் பதினேழாம் மாதத்தில் பாடப் பெறுவதாகும். சிற்றில் பருவம் மட்டும் சிறுமியர் பாடுவதாக அமையும். தொண்டை நாட்டின் வளமும், சேக்கிழாரின் திருவடிப் பெருமையும் பற்றி இப்பருவத்தில் குறிப்பிடுகின்றார்.

ஐந்தொழில் சிறப்பு பற்றி

ஆடும் பெருமான் அருள் பெற்றால்
அவன் செய் தொழில் ஓர் ஐந்துண்டு
அமைந்த தொழிலோ மேற்கோடல்
நிலைக்கும் கடை என்று ஒழித்தனையோ (சிற்.ப.பா.10)

இறைவன் திருவருளைப் பெற்றால் அவன் செய்யும் ஐந்தொழில்களில் நடுத்தொழிலாகிய அழித்தல் தொழிலைத்தான் மேற்கொள்ள வேண்டுமா? கடைசி தொழிலாகிய அருளையே மேற்கொள்ளுதல் கூடாதா என்று சிறுமியர் வேண்டுவத்ாக இப்பாடல் அடியால் காணலாம்.

சிறுபறைப்பருவம்

குழந்தையிடம் சிறிய இசைக்கருவிகளைக் கொடுத்து முழுக்குமாறு செய்வது சிறுபறைப் பருவமாகும். ஒன்பதாம் பருவமாகிய இது குழந்தையின் பத்தொன்பதாம் திங்களில் நிகழ்வதாகும். இப்பருவத்தில் கற்பனை, தத்துவம், மேலோங்கி இருப்பதை குறிப்பிடுகின்றார். சேக்கிழார் பெருமானின் சிறுபறை முழுக்கம். புறச் சமயங்கள் என்னும் கரிய ஆண் யானைகளுக்கு எதிராக முழங்குகின்ற சிங்கக் குட்டியின் முழக்கம் ஆகவும், நடராசப்பெருமான், திருமால் முழுக்கும் மத்தள ஓசையைக் காட்டிலும் மேலாக முழக்கம் ஆகவம், சரியை, கிரியை என்னும் நெறிகளைப் பயில்பவர்கக்குத் திருக்கோயில்களில் எழும் சங்கு முழக்கங்கள் போலவும், யோகிகட்கு உள்ளத்தின் உள்ளே எழும். பலவகை நாத ஒலிகளை போலவும் சிறுபறையை முழுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

சிறுத்தேர்ப்பருவம்

மரத்தாலான சிறிய தேரினை உருட்டி மகிழும்படி குழந்தையை வேண்டிப் பாடுவது இப்பருவமாகும். சிறுதேர்ப்பருவம் பத்தாவது பருவமாகும். இது குழந்தையின் இருபத்தோராம் திங்களில் நிகழும்.

பெருமானின் பெருமைகளை சிறப்பித்து பேசுகின்றார். திருத்தொண்டர் புராணத்தைப்பாடி அரங்கேற்றியபின் தில்லையம்பதி வீதியில் பட்டத்து யானைமேல் திரு உலாப் போந்தவனே, நீ சுந்தரரையும், சம்பந்தரையும் ஒப்பானாய் மேலும் சிவபெருமானையும் ஒப்பாக விளங்குகின்றாய். அத்தகைய பெருமை உடைய பெருமானே, பெருநாவலனே நீ சிறுதேர் உருட்டத் தொடங்குவதற்கு முன் நாங்கள் விநாயகப்பெருமானுக்கு அப்பம், கொழுக்கட்டை, பழங்கள் பலவற்றையும் படைத்தற்குரிய மற்றைய பொருள்களையும் படைத்து அதனுடைய அருளினைப் பெற்று விட்டோம். அதனால் எந்தவித இடையூறும் நிகழாது மேலும் நின் தேரில் அச்சு வலிமையாக உள்ளது. ஆதலின் சிறுதேர் உருட்டி அருள்க என்றெல்லாம் சேக்கிழார் பெருமானைப் புகழ்கின்றார்.

42. திரு அம்பர்ப் புராணம்

ச. சிவகாமி
சென்னை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முப்பெருங்கவிஞருள் ஒருவராகப் புகழ்பெற்றவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. புராணப்புலவர், பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கம்பர் எனத் தமிழறிஞரால் போற்றப்படுபவர். இருபத்திரண்டு தலபுராணங்களைப் பாடிய ஒரே பெரும்புலவர் என்பது இவரின் தனிச்சிறப்புகளுள் ஒன்று. அத்தல புராணங்களுள் ஒன்றான திரு அம்பர்ப்புராணம் ஆய்வுக்களனாக இங்கமைகிறது.

தலபுராணம்

சொல்லளவில் தலபுராணம் என்றால், இறைவன் உறையும் இடங்களுள் முதன்மைச் சிறப்புடைய தலம் பற்றி வழிவழியாக வழங்கப்படும் பழங்கதை எனலாம். தலபுராணங்களை நோக்கும் பொழுது இவ்விளக்கம் மேலும் விரிவடைகிறது. குறிப்பிட்ட தலத்தின் பெருமை, அங்கு வீற்றிருக்கும் இறைவன் தன்னை வந்து அடைக்கலம் புகும் தேவர், மானிடர், மாக்கள், பறவைகள் முதலானோர்க்கு அருள் புரிதல் வழி சிறப்பிக்கப்படுகிறது. இத்துடன் அங்கு விளங்கும் புனிதநீர்த் துறையின் பெருமையும் பேசப்படுகிறது. ஆகவே இலக்கிய நிலையில் தலபுராணம் என்பது தலம், இறைவன், புனிதநீர் இவற்றின் சிறப்பினை அங்கு வந்து வழிபட்டுக் குறை தீர்ந்தோர் வழி உணர்த்துதல் என விளக்கலாம். தலம், இறைவன், புனிதநீர், இம்மூன்றும் தலம் என்பதனுள் அடங்கிய நிலையில் தலபுராணம் எனப் பெயர் பொருந்துகிறது.

தலச்சிறப்பு

அம்பர் என்னும் இத்தலம் சோழ வளநாட்டில் நன்னிலம் கூற்றத்தில் பூந்தோட்டத்திற்கு நேர்கிழக்கே இரண்டு கல் தொலைவில் அரிசிலாற்றின் வடகரையில் உள்ளது. இப்பொழுது 'அம்பல்' எனும் பெயரால் இவ்வூர் அழைக்கப்படுகிறது. அம்பர் கிழான் அருவந்தையைப் போற்றப் புகுந்த கல்லாடனார் 'காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை, நெல்விளை கழனி அம்பர்' எனப் புறநானூற்றுள் (385)நவின்றுள்ளார். இதில்பாயும் அரிசில் ஆற்றினை நற்றிணை(141) 'ஏந்து கோட்டி யானை இசைவெங்கிள்ளி, வம்பணி உயர் கொடி அம்பர் சூழ்ந்த, அரிசிலந் தெள் அறல்' எனப் பேசுகிறது. இங்ஙனம் பழமைச் சிறப்புடைய இவ்வூரினைத் தனிப் பாடலொன்றும் 'அம்பர்ச் சிலம்பி' அரவிந்தத் தாளணியும் செம்பொற் சிலம்பே சிலம்பு' எனத் தருகின்றது. மற்றும் திருஞான சம்பந்தப் பெருமான் 'அரிசிலம் பெரும்புனல் அம்பர்' 'அங்கணி விழவமர் அம்பர்' என்பன போன்றும் தேவாரம் இசைத்துள்ளார்.

இவ்வூர் அரசன் சேந்தன் என்பவனால் ஆதரிக்கப் பட்டவர் 'திவாகர

நிகண்டு' தந்த திவாகர முனிவர்; அம்பர் கனபுரத்தேவன் என்பார் கனாநூல் படைத்துள்ளார்; சுந்தரந் போற்றிய சோமாசி மாற நாயனாரின் உறைவிடம் எனப் பிறச் சிறப்புகளையும் கொண்டுள்ளது. இத்தல புராணம் இத்தலச் சிறப்பினை,

பொருளுதவும் மனையுதவும் புத்திரப்பேறு
உதவும் மற்றைப் போகத்தோடு
தெருளுதவும் ஞானகலைச் சிறப்புதவும்
முக்தியும் நல்சிறப்பின் மேவும்
அருளுதவும் எண்ணியவை எண்ணியாங்கே
உதவும் அனைத்தும் உய்ய
இருளுதவும் கண்டத்தார் இனிதமரும்
பிரமபுரி என்னும் தானம் (343)

என உரைக்கின்றது.

இத்தலத்திற்கு மாகாளிபுரம், மாகாளபுரம், புன்னாக வனம், பிரமபுரி, நந்தராசபுரம், மாறபுரி, சண்பகாரணியம், எனும் வேறு பெயர்களும் உண்டு என்பதுடன் அவற்றிற்கான காரணங்களையும் இத்தலபுராணம் (354, 355) கூறுகிறது.

தலபுராணத் தோற்ற வரலாறு

தம்மாசிரியர் பேரில் 'ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களின் சரித்திரம்' என்று வரலாறு படைத்த தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் அதனுள் இத்தலபுராணம் எழுந்த வரலாற்றையும் தந்துள்ளார். அதனின்றும், அம்பர் நகர் வாழ் வேளாளப் பிரபுவாகிய வேலுப்பிள்ளை முதலியார் என்பார் இத்தலத்திற்குரிய வடமொழிப்புராணத்தைத் தமிழில் பாட வேண்டியதன் பேரில், இத்தலபுராணம் பாடும் முயற்சியை மீனாட்சி சுந்தரம் பிள்ளை மேற்கொண்டார்; தஞ்சை சரசுவதி மகால் சென்று அங்கிருந்த வடமொழிச் சுவடியைத் தேடி, படியெடுத்துத் தந்தவர் திருமங்கலங்குடி சேஷையங்கார்; 1869-இல் அவரிடமிருந்து பெற்ற அவ்வடமொழிச் சுவடியைப் பிறர் தமிழில் உரைநடைப் படுத்தி அளித்தனர்; பின் அதை இவர் செய்யுட் படுத்தினார், இதன் முற்பகுதியை ஆசிரியர் பாட, ஏட்டில் எழுதியவர் பிரகாசையரெனும் மாணாக்கர். பிற்பகுதி உ.வே.சாமிநாதையரால் ஆசிரியருடன் திருவாவாடுதுறை செல்லும் வழியில் அவர் கூற எழுதப்பட்டது. நூல் நிறைவடைந்து வெகுநாட்களுக்குப் பின்பே சுமார் ஓராண்டு திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் வேண்ட, இயற்றுவித்த வேலுப்பிள்ளை அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்தார். நல்ல நாள் பார்த்து தொடங்கப்பட்ட அரங்கேற்றம் பல ஊர்களிலிருந்தும் வந்த அறிஞர், ஆர்வலப் பெருமக்கள் முன்னிலையில் பழைய மாணாக்கர் சொக்கலிங்கம் பிள்ளை உதவியுடன் நிறைவேறியது. அரங்கேற்றம் நிறைவேறிய நாளில் புராணச் சுவடி சிறப்புடன் ஊர்வலம் செய்யப் பெற்றது பிள்ளையவர்களுக்கு வேலாயுதம் (வேலு) பிள்ளை தம்முடைய குடும்பத்தாருடன் சேர்ந்து தக்க சன்மானம் செய்தார், அப்போது

உடனிருந்த மாணாக்கரும் பிறரும் நூலை இயற்றிய மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கும், இயற்றுவித்த வேலாயுதம் பிள்ளைக்கும் சாற்றுக்கவிகள் பாடிச் சிறப்பித்தனர். இத்தலபுராணம் ஆசிரியரின் 21 ஆவது தலபுராணமாகும் என்பனவாகிய செய்திகள் அறியவருகின்றன.

நூலமைப்பு

பிள்ளையவர்களுடைய பழுத்த புலமைக்காலத்து எழுந்த ஞானக் குழந்தையாகப் பாராட்டப்படும் 'திருஅம்பர்ப் புராணம்' 15 படலங்களையும், 1007 செய்யுட்களையும் கொண்டது. பாயிரமும் தனிப்படலமாக எண்ணப்பட்டுள்ளது. அதனுள், காப்புச் செய்யுள் இத்தலத்தில் அருள்பெற்ற வைரவர், சோமாசிமாற நாயனார், கோச்செங்கணார் ஆகியோர் மீதும் பாடப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்தது. 'காண்ட மலிசுனை வளம் சால் திரிசிரா மலை வளரும் கருணையாளன் மாண்ட கலை முழுதுணர்ந்த மீனாட்சிசுந்தர நாவலவலரேறே' என ஆக்கியோன் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. எனினும் நூல் வரலாறு தரும் பாடலுள் அதன் வடமொழி மூலம் பற்றிய குறிப்பில்லை என்பது சுட்டத்தக்கது. நூலின் இறுதிப் படலமான நந்தன் வழிபடு படலத்துள் நூற்பயன் மற்றும் வாழ்த்து ஆகியன இணைந்துள்ளன.

தலபுராணங்களைக் காப்பிய வகையுள் இணைத்து நோக்குதற்கு ஏற்ப, பாயிரத்தைத் தொடர்ந்து திருநாட்டுப் படலம், திருநகரப்படலம் ஆகியன அமைகின்றன. தலபுராணங்களின் தனிப்பண்பான நைமிசாரணியப்படலம், புராண வரலாற்றுப் படலம் ஆகியன தொடர்கின்றன. அடுத்து அமையும் தல முதலிய விசேடப்படலம் பொதுநிலையில் அம்பரின் புகழ் பாடுகிறது.

தொடர்ந்து வரும் படலங்கள் தலத்திற்கு வந்து அருள் பெற்றோரின் அருமை பெருமைகளைப் புனைந்துரைக்கின்றன. இவற்றின் வழி சமய உண்மைகளை, கருத்துகளை ஒவ்வொன்றாகப் புலப்படுத்துவதும் கூறத்தக்கது. பிரமன் சாபம் பெற்ற படலம்-எத்தகையோர்க்கும் ஆணவம் அழிவைத் தரும்; பிரமபுரிப்படலம் - உயர்ந்தோர் தம் தவறை உணர்ந்து கொள்வர். அதனின்றும் தம்மைத் திருத்திக் கொள்வர், அம்பர்ப்படலம்-இழிந்தோர் எத்தகு உயர்வு பெறினும் தம்முடைய இழிந்த குணத்தை ஒழியார். வைரவப்படலம் - இறையருள் அவன் அடியவர் வழியும் கிட்டும்; விமலன் முக்தியடைந்த படலம் - இறைவழிபாடு செய்ம்முறை, காமனருச்சனைப் படலம் - எவ்வகைப் பழியும் இறையருளால் நீங்கும், மாறநாயனார் வழிபடு படலம் - உண்மை அன்பர் இறைவனை எவ்வடிவிலும் காண்பர். எந்நிலையிலும் உணர்வர். கோச்செங்கட் சோழ நாயனார் வழிபடுபடலம் - தவறிழைப்போர் யாவராயினும் நடுநோக்குடன் தண்டிக்கப்படுவர், எவ்வுயிருக்கும் உய்தி உண்டு, நந்தன் வழிபடு படலம் - இறைவனால் மட்டுமே விடுதலை என்பனவாக அவை அமைகின்றன.

கதைப்போக்கு ஒன்றிலிருந்து பிறிதொன்றிற்கு மாறும் பொழுது தலம் இதுவரை கூறியது இது, இனிக் கூறப்போவது இது என இயைபு படுத்திச்

செல்லுதல் நூல் முழுமையும் அமைந்து ஆசிரியரின் கதைகூறு உத்தி காட்டுகிறது.

நைமிசாரணிய படலத்தின் முதலும் இறுதியும் ஒழிந்த எனைய 39 செய்யுட்களும் திரிபு, யமகம், கூட சதுக்கம் முரசபந்தம், சுழிகுளம், அட்டநாகபந்தம், இரதபந்தம், நான்காரைச் சருக்கம், பிறிதுபடுபாட்டு, திரிபங்கி, அகரவுயிரால் வந்த செய்யுள் என ஒவ்வொன்றும் தனித்தனிச் சொல்லணிகளால் உருவாக்கப்பட்டிருப்பது குறிக்கத்தக்கதாம்.

நூற்சிறப்பு

தன்னாசிரியர் பாடப்பாட அவற்றை ஏட்டில் ஏற்றிய உ.வே.சாமிநாதையர் அது குறித்து, 'கவிஞர்களுடைய பேராற்றல் இத்தகையதென்பதைச் சரித்திரங்களின் மூலமாக அறிந்தவனே அன்றி அன்றுபோல் நான் நேரில் பார்த்ததில்லை. ஆதலின் ஒரு மகா கவியின் வாக்கிலிருந்து ஆற்றொழுக்கைப் போலக் கவிதாப் பிரவாகம் பெருகிக் கொண்டிருப்ப, அதனைக் காதினாற் கேட்கும், கையினாலெழுதியும், மனத்தினாலறிந்தும் இன்புற்ற எனது நிலை இங்கே எழுதற்கரியது' எனத் தம் கருத்தைப் பதிவு செய்துள்ளார். கவிஞரின் கவி இயற்றும் ஆற்றலை இதனால் உணரலாம். தண்டபாணி தேசிகர் 'இப்புராணம், காவிய அமைப்பிற் கம்பராகவும், பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடுவதில் தெய்வச் சேக்கிழார் பெருமானாகவும் இலக்கணச் செறிவும், சைவ ஆகமக் கருத்துக்களும் அமையப் பாடுவதில் மாதவச் சிவஞான சுவாமிகளாகவும், கச்சியப்ப முனிவராகவும், கவிதை யோட்டத்திலும் எங்கும் தெய்வச்சிந்தனை குறையாமல் அழைத்துச் செல்வதில் கச்சியப்பச் சிவாசாரியர்ாகவும் விளங்கிய திருவாவடுதுறையாதீன மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது' என ஆசிரியரைப் புகழுமுகத்தான் நூலையும் போற்றியுள்ளார். (ஆராய்ச்சி முகவுரை-xxii)

நூல் தன் பாடுபொருளுக்கேற்ப எங்கும் சைவ மணம் பெருக யாக்கப்பட்டுள்ளது. இறைவனின் இயல்பு(399-405), அடியவர் இயல்பு (785,802).

சித்தாந்த கருத்துகள்(125, 260) ஆகியவற்றுடன் புராணச் செய்திகள் பலவும் (இராமன் சரயூநதியில் உயிர்விட்டது 17, கடல் சுவற வேல் விட்டது 208) பரவலாக இடம் பெற்றுள்ளன. சைவ மடங்களின் சிறப்பை,

புண்ணியம் பயக்கும் ஆகமம் புகலும்
    பொதுச் சிறப்பு என்னும் ஈரியல்பின்
கண்ணிய ஒரு முப்பொருளும் நன்குணர்ந்து
    கரிசறத் தெளிந்தவர் ஒன்றும்
எண்ணிய இரண்டும் இல்லையாம் கலப்பின்
    இயைந்து பேரின்பத்துள் துளையும்
தண்ணிய சுத்த சைவ சித்தாந்தத்
    தாபதர் மடங்கள் (241)

என நவில்கின்றது.

பொருள் வெளியீட்டிற்குத் துணையாகும் உவமை, வருணனை போல்வனவும் சமயச் சார்புடனே நிற்றலும் (51,52,90) குறிக்கத்தக்கது. 'ஒரு பசுப்புரக்கும் மாண்பில் கலகம் எண்ணில மேவல் கண்டும் அதற்கஞ்சாது பல பசுப் புரந்த ஐயன்' எனும் முரணைச் சான்றாக்கலாம்.

அம்பரனை அழிக்கக் கன்னி உரு எடுத்த தேவியைக் கேசாதி பாதமாக (583, 601) நீண்ட வருணனை செய்திருப்பதும் சுட்டத்தக்கது. தன் பிணி தீர்க்க நந்தன் பலப்பல ஊர்களுக்கும் தலயாத்திரை சென்று இறுதியில் அம்பரெல்லையில் நலம் பெற்றதை விரிவாகக் காட்டுவது (898-922) திருஅம்பர் சென்றடைவதற்கான வழியில் உள்ள திருத்தலங்களைப் பட்டியலிடுதல் என்பது ஒன்று, பிறதலங்கள் அனைத்திலும் இதுவே உயர்வானது என்பதை உணர்த்துதல் என்பது பிறிதொன்று எனும் இரட்டைப் பயனுடையதாய் அமைகிறது. மற்றும் தூதிலக்கிய உத்தியான, பிற தூதுப் பொருட்களினும் குறிப்பிட்ட ஒன்றே தகுதிவாய்ந்தது. தூதினைச் சிறப்புடன் நிறைவேற்றித் தரும் பெருமையுடையது என நவில்வது போன்றும் இப்பகுதி அமையக் காணலாம்.

எவ்வகை இலக்கியமாயினும் அதில் சமுதாயப் பிரதிபலிப்பு தவாறது இடம் பெறலுண்டு, அதற்குப் புராணங்களும் விதிவிலக்கல்ல என்பதை இத்தலபுராணம் காட்டுகிறது. நந்தன் வேட்டையாடுவதை,

நடைதளர் குழவைக் கொல்லான் சூலுடைப் பிணவை நாடான்
அடைமழவு உண முலைப்பால் அருத்திடு மாவை மாயான்
உடைவெயில் வெப்பதால் நீர் உண்டிடும் அவையும் சாயான்
மிடைவலியுடன் எதிர்க்கும் வெய்ய மா[illegible]தொலைக்கும் வேந்தன்(889)

எனக் காட்டுவதன் வழி வேட்டைச் சமுதாயத்தின் தொழில் மரபினைத் தருவதை இதற்குச் சான்றாக்கலாம்.

திருக்குறள் (8,63,486) நல்வழி (78)திருவாசகம் (211),பெரியபுராணம்(313) எனப் பிறநூற் கருத்துகளையும் ஆங்காங்கே காணமுடிகிறது. இறைவனை நோக்கி விமலன் 'அரிபிரமர் தனி முயன்றும் அளப்பரிய நின்னுருவம் தெரிதல் அல்லால் பிறவுருவம் தெரியாது என் விழிகளுக்கு என்பது முதலாகத் தொடர்ந்து (736, 738) இறைஞ்சுவது சிலம்பில் கவுந்தியடிகள் 'ஒரு மூன்று அவித்தோன் ஓதிய ஞானத் திரு மொழிக்கு அல்லது என் செவியகம் திறவா.........' (10,194-207)

என நவில்வதை எதிரொலிக்கக் காணலாம்

தேவார, திருவாசகம் போன்ற, பக்தி பனுவலாக இறைவனின் நாள் வழிபாட்டிற்குரியனாவாக எண்ணற்ற பாடல்களை இத்தலபுராணம் தந்துள்ளமையும் சிறப்பாகச் சுட்டற்கரியதாம். இறைவன் அருள் பெற்றோர் அல்லது விழைவோர் அவனைத் துதிப்பதாக அவை நூலுள் இடங் கொண்டுள்ளன. சான்றாக,

எங்கணும் தலையாய் போற்றி எங்கணும் கண்ணாய் போற்றி
எங்கணும் வாயாய் போற்றி எங்கணும் செவியாய் போற்றி
எங்கணும் கையாய் போற்றி எங்கணும் காலாய் போற்றி
எங்கணும் வடிவாய் போற்றி எங்கணும் ஆளாய் போற்றி (482)

என்பதைச் சுட்டலாம். இதுபோன்ற துதிப்பாடல்கள் மாணிக்கவாசகரின் வாசகத்தை நினைவூட்டுவதும் குறித்தற்பாலது.

தலபுராணங்களின் பொது நோக்கங்களும், பயன்பாடும் இத்தலபுராணத்துள்ளும் சிறப்பாக நிறைவேறியுள்ளன. இறைவழிபாட்டில் நம்பிக்கையைத் தூண்டுதல், பரப்புதல், இறைவழிடு என்பது அவரவர் விருப்பபடி பலவிதங்களில் அமையினும் இறைவன் அதனை ஏற்று அனைவர்க்கும் அவரவர் விருப்பத்தை நிறைவேற்றுதல், தேவர், அரக்கர், மானிடர், விலங்குகள் என யாராயினும் இறைவன் முன் அனைவரும் சமம். உயர்வு தாழ்வு இல்லை என்பதனவற்றை இதனுள் இடம் பெறும்.

கதைகள் சிறப்பாக, தெளிவாக வலியுறுத்தியுள்ளன.

சிவனடியார் தமைக்காணில் சிவனென்றே வழிபடுவார்
சிவனமரும் தானமெலாம் சென்று சென்று போற்றுவார்
சிவனருமைப் புராணமே செவியேற்க விடுத்திடுவார்
சிவன் வடிவமாம் பலவும் தரிசிக்கும் சிலத்தார் (782)

என்பது போன்று மிக எளிய நடையில் இவை வெளிப்படுவதுடன் கூறத்தக்கது.

ஆசிரியர் மாண்புகள்

திருஅம்பர்த் தலபுராணம் வெளிப்படுத்தும் ஆசிரியர் மாண்புகளை இவண் கருதலாம்.

1. இத்தல புராணம் மற்றும் ஆசிரியரின் பிற படைப்புகளைக் கொண்டு இவருக்குப் புராணங்களில் மிகுந்த நம்பிக்கையும் ஈடுபாடும் உள்ளதை அறியமுடிகிறது.

2. மிக்க இறைநம்பிக்கையுடைய இவர், குருமார்களையும் தெய்வமாகப் போற்றும் பெற்றியினைத் என்பதைப் பாயிரத்துள் நமச்சிவாய தேசிகர், அம்பலவாண தேசிகர், குருபரம்பரை (25,26,27) முதலானோர் மீது அமையும் காப்புப் பாடல்கள் காட்டுகின்றன. நன்றியுணர்வில் சிறந்தோர் என்பதையும் இவை சுட்டுகின்றன.

3. இயன்றவிடந்தோறும் நாயன்மாரை,

திங்களூர் அவதரித்த திருமறையவர் தம் உள்ளத்து
எங்கள் நாவரசைக் காண்டற்கு எழு நகை பரந்த தென்னப்
பொங்கு காவேரி வெள்ளம் (92)

என்பது போன்று பயன் கொள்வதுடன் (90,93,136,222) இவர்களுக்கும் பாயிரத்துள் வணக்கம் (20) செலுத்தியிருப்பது, தேவார மூவர், மணிவாசகர்,

சண்டீசர், ஆகியோரைத் தனித்தும் துதித்திருப்பது (15,16,17,18,19) என்பன இவர்களிடத்து உள்ள பற்றினைக் காட்டுகின்றன. சேக்கிழார் பெரியபுராணம் பாடி இவர்களைச் சிறப்பித்தமை, அவரைப் போற்றியுள்ளமைக்கு (23) காரணமாகலாம்.

4. செந்தமிழ் முனி (14) பூமேவு தமிழரும்பும் பொதியவரை (777) இருதிணை உயிர் முயற்சிக்கு இத்திணை தரும் இலாபத்து ஒரு திணைக்கு இஃதாம் என்றே ஒதுக்கினர் பலாலம் (119) என்பன போன்றவை இவரின் மொழிப்பற்று மற்றும் மொழியாட்சித் திறனைக் காட்டுகின்றன.

5. மகாவித்துவான் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் பல்துறையறிவும், பலநூற்பயிற்சியம் தேர்ச்சியும் இதனுள் காணக்கிடக்கின்றன. திருவாசகம் (428), கம்பன் (315-319), பெரியபுராணம் என்பன இவரில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

6. நூலாசிரியரின் கருத்துகள் முழுமையும், தெளிவாகவும் மாறுபடாமலும் கற்பாரைச் சென்றடைய வேண்டும் என்று கருதினர் என்பதை, நைமிசாரணியப் படலத்துள் பாடியுள்ள சொல்லணியாலமைந்த பாடல்களுக்கு ஆசிரியரே உரை வரைந்துள்ளமை உணர்த்துகிறது

7. மரபிலிருந்து சற்றும் மாறுபடல் கூடாது; அப்படியே போற்றல் வேண்டும் என்பது இவரின் இலக்கியக் கொள்கையாகத் தெளிவாகிறது.

நிறைவுரை

சைவ சமயப் பற்றுடையார்க்குத் துணையாகும் சிறந்த நூலாக அமைகிறது. பிறர் வேண்ட, பிறருக்காக நூலியற்றுதல் என்பதனை விடுத்துத் தாமே திட்டமிட்டுப் புதிய நோக்கில் புத்திலக்கியம் படைத்திருப்பின் இவரது கற்பனைத் திறனும், கவியாற்றலும் நன்கு வெளிப்பட்டுத் தமிழ் உலகில் இன்றும் கோலோச்சும் கவிஞரிடையே தாமும் ஒருவராக இடம் கொண்டிருந்திருப்பார்; இன்றைய மாணவருலகு அறிந்த பெரும் புலவராகவும் வீற்றிருந்திருப்பார் என்பதையும் இவர் படைப்புகள் அறிவுறுத்துகின்றன.

கருவிநூல்

திரு அம்பர்ப்புராணம்; உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்; சென்னை, 1965.

பார்வை நூல்கள்

இலக்கியத்தின் நோக்கமும் பயனும்-தொகுதி:2 (தலபுராணம் - ச.சிவகாமி, பக்.1-34);உலகத் தமிழாராய்ச்சி. நிறுவனம்; சென்னை; 1995.

தமிழில் தலபுராணங்கள்(2தொகுதிகள்); வே.இரா.மாதவன்; பாவை வெளியீட்டகம்; தஞ்சாவூர்; 1995.

ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம்; உ.வே.சாமிநாதையர்; தமிழ்ப்பல்கலைக் கழகம்; தஞ்சாவூர்; 1986.

43. பிள்ளையவர்களின் புலமைத்திறம்

வீ.சிவபாதம்
பூண்டி

தெய்வ மணம் கமழும் பலவகைப் பரிபந்தங்களைப் பாடி, சைவமும் செந்தமிழும் தம்மிரு கண்களாகக் கொண்டு பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி, தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், சைவ உலகிற்கும் தமது அளப்பரிய ஆற்றலால் வளப்பருந் தொண்டினைச் செய்தவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையாவார்.

இப்புலவர்பிரானால் தமிழ்மக்கள் பெற்ற பயன் மிகப்பெரிதாகும், புதிய புதிய நூல்களை இயற்றித் தமிழ் நயங்களை அமைத்துக் காட்டிய இவருடைய செய்யுளால் பலவகைச் சுவைகளை அறியும் பயனைத் தமிழ்மக்கள் பெறுகின்றனர். புதுநூல்களை இயற்றியதோடல்லாமல் தாம் வருந்தித் தேடிய பழைய நூல்களை விளக்கி வைத்த இவர் செயல் தமிழ்நாட்டாரால் என்றைக்கும் நினைக்கத்தக்கதாகும். தமிழ்ப்பாடம் சொல்லிச் சொல்லி மாணாக்கர் கூட்டத்தை வளர்த்து அவர்கள் மூலமாகத் தமிழறிவைத் தமிழ் மக்களுக்குப் பயன்பெறச் செய்த வள்ளல் இவர். எங்கெங்கே தமிழ் நூல்களை முறையாகப் படித்தறியும் உணர்வும் பழைய புராணங்கள் பிரபந்தங்கள் முதலியவற்றைப் பயின்றும் இன்புறும் இயல்பும் திகழ்கின்றனவோ அங்கெல்லாம் இவருடைய தொடர்பேனும் இவரிடம் பாடங்கேட்டவர்களின் தொடர்பேனும் இருக்கும். இன்றளவும் ஒரளவு புலவர்களுடைய நூல்களின்பால் மக்களுக்கு உள்ள மதிப்புக்கு மூலகாரணம் இவரென்றே சொல்லலாம். தமிழ்த் தெய்வத்தின் திருத்தொண்டர்களுடைய வரிசையில் இவரும் நிற்பர். தமிழ் நூற்கோவைகளில் இவருடைய நூல்களும் முத்துக்களைப் போல இன்பத்தை உண்டாக்கிக் கொண்டே என்றும் குன்றா இளமையோடு விளங்கும். அவற்றை ஊன்றிப் படிப்பவர்கள் பிள்ளையவர்களின் புலமை உருவத்தை உணர்ந்து மகிழலாம் என்பது திண்ணம் என்று உ.வே.சா. அவர்கள் குறிப்பிடுகின்றார்.

அம்பர்ப்புராணம்

அம்பர் என்பது சோழ நாட்டிலுள்ள ஓர் ஊராகும். 'காவிரியணையுந் தாழ்நீர்ப் படப்பை', 'நெல்விளை கழனி அம்பர்' என்று இவரைப் புறநானூறு 385ஆம் பாடல் கூறுகிறது. அப்பாடல் அவ்வூரில் விளங்கிய 'அம்பர்கிழான் அருவந்தை' என்ற வள்ள்லைக் கல்லாடனார் பாடியதாக அமைந்துள்ளது. 'அரிசில்' என்ற ஓர் ஆறு இவ்வூரின் அருகே ஓடுகிறது. நற்றிணை 14ஆம் செய்யுளில், ,

ஏந்து கோட்டியானை யிசைவெங் கிள்ளி
வம்பணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த
அரிசிலந்த தென்றல்

என்று இவ்வூரும் இவ்வாறு பாடப் பெறாமையால் சங்க காலத்திலேயே இவைமிகச் சிறப்புற்று விளங்கின என்பது புலனாகிறது. அன்றியும் தமிழில் மிகப் பழமையான 'திவாகர நிகண்டு' என்ற நூல் இந்த ஊரில் அரசனாக விளங்கமி சேந்தன் என்பவனால் ஆதரிக்கப் பெற்ற திவாகர முனிவரால் இயற்றப்பட்டதாகும். இந்த அரசனைப் பற்றி, 'அம்மர் கிழவோன் சேந்தன்' 'அவ்வை பாடிய அம்பர்கிழான் தேன்தார்ச் சேந்தன்', 'அம்பர் மன்னன் சேந்தன்' என்று பிற்கால நூல்கள் பகரும். மேலும் அம்பர் கணபுரத்தேவன் என்பவர் களவு நூல் ஒன்று இயற்றியுள்ளமையும் அறியமுடிகிறது.

தண்ணிருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே - பெண்ணாவாள்
அம்வர் இலம்பின் அரவிந்தத் தாளணியும்
பொற் சிலம்பே சிலம்பு

என்ற தனிப்பாடலில் சொல்லப்பட்டதும் அவ்வூரேயாம். இவற்றால் சங்காலம் முதல் மன்னர்களும் புலவர்களும் வள்ளல்களும் கலைஞர்களும் வாழ்ந்து விளங்கி வந்த இடம் என்பதும் அறியமுடிகிறது.

'நல்லம்பர் நல்ல குடியுடைத்தார்' என்பதும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. இத்தகைய ஊர்த் தலச்சிறப்பால் பெருமைபெற்று விளங்குகிறது. இவ்வரில் ஆனைக்கா அமுதலிங்கேசரின் ஆலயத்தை கோச்செங்கணான் நிறுவினான். இத்தலத்தில் பிரமன், இந்திரன், காமன் முதலிய தேவர்களும் விலமலம், சோமாசிமாறன் என்ற அந்தணர்களும் கோச்செங்கட் சோழன் நந்தன் என்ற மன்னர்களும் வழிப்பட்டு நற்பேர் அடைந்தனர்.

இவ்வாறு பழமையும் புண்ணியச் சிறப்பு மிக்க இத்தலத்திற்கு வடமொழியிலிருந்த புராணத்தை அரிதின் முயன்று பெற்று அதனைத் தமிழில் உரைநடையில் மொழிபெயர்த்து பிள்ளையவர்கள் செய்யுள் வடிவில் பாடியிருக்கிறார். இப்புராணம் பற்றி உ.வே.சா. அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

"இவர் முன்பு வாக்களித்திருந்தபடி திருவாவடுதுறை செல்லப் புறப்பட்டார். அம்பர்ப்புராணத்தை எடுத்துக்கொண்டு உடன்வரும்படிச் சொன்னமையால் அதனையும் என் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு உடன் சென்றேன். மாயூரத்திற்கு மேற்பாலுள்ள கூறைநாடு செல்லும்வரையில் பொதுவாகப் பாடவகைகளைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்துவிட்டு பின்னர் அம்பர்ப்புராணச் சுவடியை எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லி ஆனப்பாகத்தின் இறுதிப்பாடலைப் படிக்கச் செய்து கேட்டார். பின்பு மேலே தொடர்ச்சியாகச் செய்யுட்களை இயற்றிக்கொண்டே போனார். இவர் அப்போது பாடத்தொடங்கியது அப்புராணத்தில் நந்தன் வழிபடு

படலத்தில் 54-ஆவது பாடலாகும். திருவாவடுதுறைத் தெற்குவீதி செல்லும்வரையில் மேற்பாகத்தைச் சொல்லிக்கொண்டே சென்றார். நான் எழுதிக்கொண்டே போனேன். அப்பகுதி நந்தன் என்னும் அரசன் தன் நகரிலிருந்து புறப்பட்டு இடையிலுள்ள சிவத்தலங்கள்தோறும் சென்று தரிசனம் செய்து கொண்டு, திருவம்பரை அடைந்தான் என்பது. அதிலுள்ள செய்யுட்களில் தலப்பெயர்களும், தலங்களின் சரித்திரங்களும் இன்பத்தை உண்டுபண்ணின. இவர் விரைவாக செய்யுள் செய்யும் ஆற்றலை உடையவர் என்று பலரும் புகழ்ந்து சொல்லுதலைக் கேட்டு அந்த நிலைமையை எப்பொழுதாவது பார்க்கும்படி நேருமோ என்று ஆவலோடு பல நாளாக எதிர்பார்த்திருந்த எனக்கு இவர் பாடல்களை சொல்ல அவற்றை எழுதும் பாக்கியம் அன்று கிடைத்ததைக் குறித்து மெத்த சந்தோசம் அடைந்தேன். இனி யாரேனும் இவர்களைப் போலப் பாடப்போகிறார்களா என்ற எண்ணமும் எனக்கு அப்போது உண்டாயிற்று. சிறிதேனும் பெருமிதமின்றியும் தம்முடைய கவியைப் பாராட்டாமலும் வேறு பேச்சின்றியும் மேலே மேலே செய்யுள் செய்து கொண்டு போதலைப் பார்த்த எனக்கு விம்மிதம் உண்டாயிற்று.

கவிஞர்களுடைய பேராற்றல் இத்தகையதென்பதைச் சரித்திரங்களின் வாயிலாக அறிந்தவனேயன்றி அன்று போல நான் நேரிற் பார்த்தில்லை. ஆதலின் ஒரு மகா கவியின் வாக்கிலிருந்து ஆற்றொழுக்கைப் போலக் கவிதாப் பிரவாகம் பெருகிக்கொண்டிருப்ப அதனைக் காதினாற் கேட்டும் கையினாலெழுதியும் மனத்தினால் அறிந்தும் இன்புற்ற எனது நிலை இங்கே எழுதற்கரியது.

இப்புராணம் 15 படலங்களையும் 1007 செய்யுட்களையும் கொண்டுள்ளது. காப்பிய முறையில் மிக அழகாக அமைந்துள்ளது. இவ்வாறு சிறப்பு வாய்ந்த இப்புராணத்தில் பிள்ளையவர்களின் புலமைத் திறத்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவர்கள் இயற்றிய புராணங்கள் பலவற்றுள் பழுத்த புலமைக் காலத்து எழுந்த 'ஞானக்குழந்தை' இது எனலாம். அழகும் தெளிவும் ஆழமும் அனுபவமும் விளங்கக் காணலாம். இக்கட்டுரையில் பிள்ளையவர்களின் கற்பனை வளம், அணிநயம், சொல்நயம், இலக்கண நுட்பங்களை எடுத்தாளும் ஆற்றல், சைவசித்தாந்தக் கருத்துக்கள் முதலியவற்றைச் சுருக்கமாகக் காணலாம்

கற்பனை வளம்

கற்பனையாவது கவிஞன் தான் உணர்ந்த உணர்ச்சியால் பெற்ற அழகின்ப அனுபவத்தையோ அல்லது கண்ட காட்சியையோ நாமும் முழுமையாகவும் தெளிவாகவும் உணர்ந்தோ அனுபவித்தோ கண்டோ இன்புறுமாறு அமைத்துக் காட்டும் அரிய கலைத்திறனாகும். கவிஞனுடைய கவி ஒளி அனைத்தும் கற்பனை ஒட்டத்தில் தனியழுகு பெறுகின்றது. இலக்கியங்களுக்கு மாற்று உயர்வதும் படிப்போர் மனம் ஈடுபடுவதும் கற்பனைச் சிறப்பினால்தான். இக்கவிஞர் பெருமான் தெய்வநெறிக்

காப்பியமாகிய இப்புராணத்தில் நவரசங்களும் தரும் கற்பனைகளை அமைத்துக் காட்டுகின்றார். எடுத்துக்காட்டாக,

அலங்குமலர்க் கரமூன்று முத்தொழிலாள்
றிடும்யாமெலன் றாற்றே மாகில்
இலங்குபய னென்னையென வெண்ணுபு மற்
றிரண்டுநவிற் றிருதா ளுள்ளும்
கலங்குதறிர்த் தருளொன்றைக் காட்டிடுதல்
பூண்டொருகை கவியா நிற்கத்
துலங்குமணி மயமன்று ணின்றுநடம்
புரிமுதலைத் தொழுது வாழ்வாம் (பாடல்:7)

இப்பாடலில் நடராசர் பஞ்ச கிருத்தியங்களைத் தம் நடனத்தால் புரிகின்றார் என்று கற்பனை நயந்தோன்றக் கூறியுள்ளார்.

செறிகுறி லுடையைந் தோடு
குறியிலா விரண்டும் சேர்த்து
மறிவினெட் டுயிரே ழென்று
மாத்திரை நோக்கிக் கொள்வார்
அறியிய லுடைய பாவோ
டியலிலா வடியேன் பாவும்
குறியிலான் சரித நோக்கிக்
குறிகொள் பாவென்றே கொள்வார் (பாடல்:31)

இப்பாடலில் குற்றெழுத்துப் பெறாத 'ஐ'யையும் 'ஔ'வையும் நெடில் என்று கொள்வது இப்பாடலில் குற்றெழுத்தப் பெறாத 'ஐ'யையும் ஔவையும் நெடில் என்று கொள்வது போல என் பாவையும் உலகம் மதிக்கட்டும் என்று கற்பனை வளந்தோன்றக் கூறியுள்ளார்.

அம்பர் படலத்தில் காளியின் பேரழகை வருணிக்கும் அழுகுமிக்க கற்பனை வளம் சான்றது. காளியின் கொங்கையை

குற்றமில் பொன்னிற் செய்த குடங்களோ விளநீர் கொல்லோ
பற்றமை தாளங் கொல்லோ பருப்பதப் பண்பு கொல்லோ
வுற்றசக் கரவா கங்கொல் லோவெனக் கருது வார்க்கோர்
வெற்றமொன் றுதவா தாய மேதகு கொங்கைச் சீரும் (பாடல்:593)

என்று வருணிக்கிறார். இவ்வாறே ஏனை உறுப்பு நலன்களைக் கற்பனை நயந்தோன்ற வருணிக்கின்றார்.

அணிவகைகள்

உவமையணி

இலக்கியக் கலைத்துறையில் படைப்பாளர் கையாளும் கலை நுணுக்கத் திறன்களுள் மிகப் பழமையானதும் கவிஞனின் வெளியீட்டு முறைக்கு ஒளியும் தெளிவும் சேர்ப்பதும் கவிஞன் கண்ட காட்சியை மற்றவர் அவனது கற்பனை எல்லைக்குள் மிக நெருங்கிச் சென்று உள்ளபடி

கண்டுகொள்ளத் துணைக் கலைக்கருவியாய் இருப்பது உவமை அணியாகும். பொருள்களிடையே ஓர் ஒப்புமை தோன்றும்படியாகப் பாடுவதே உவமையணியாகும்.

திருநாட்டுப் படலத்தில் காவிரி வெள்ளம் பல நீர்நிலைகளிலும் சென்ற பரந்தமைக்கு அப்பூதியடிகள்பால் அப்பரைக்காண ஆசை எழுந்ததை உவமை நயந்தோன்றப் பாடுகின்றார்.

திங்களூ ரவத ரித்த திருமறை யவர்த முள்ளத்
தெங்கணா வரசைக் காண்டற் கெழுநசை பரந்த தென்னப்
பொங்குகா வேரி வெள்ளம் போற்றுபன் மதகூ டும்போய்த்
தங்குபல் கழனி யோடை தடமெலாம் பரந்த தம்மா (பாடல்:92)

உருவக அணி

உவமையணியிலுள்ள உவமஉருபுகள் இன்றி உபமானத்தையும் உவமேயத்தையும் இரண்டாக அன்றி ஒன்றாகக் காட்டுவது உருவக அணியாகும். பிள்ளையவர்கள் பல்வேறு இடங்களில் உருவக அணியைப் பயன்படுதியுள்ளார். எடுத்துக்காட்டாக,

தளவில் காப்பின்மா றாரணி யணையதா ரணியுள்
வளவ நாடவன் மார்பக மனையமார் பகத்துள்
கிளர்நி லாமணி யம்பரக் கிளர்மணி சூழ்ந்த
துளவ மாலிகை யம்பர்மா நகர்கலாஞ் சோலை (பாடல்:157)

இப்பாடலில் பூமியே திருமாலாகவும் சோழநாடு திருமாலின் மார்பாகவும் அம்பர் அம்மார்பில் அணிந்த கவுத்துவ மணியாகவும் அம்பரைச் சூழ்ந்துள்ள சோலைகள் அம்மணியைச் சூழ்ந்துள்ள மாலையாகவும் உருவகித்துள்ளார்.

சிலேடையணி

ஒருவகையால் நின்ற தொடர் சொல் பல பொருள்களது தன்மை தெரிய வருவது சிலேடை அணியாகும்.

கோடிரண் டுடைமை யானுங் குலமணி யொளியி னாலும்
மாடுயர் தருக்கள் சாய்த்து மதநனி யொழுக்க லானும்
பாடமை முழக்கத் தானும் பயம்பட வியக்க லானும்
நீடுமால் யானை போலு நிகரில்கா வேரி வெள்ளம்

இப்பாடலில் யானைக்கும் காவிரிக்கும் ஒற்றுமை கூறி சிலேடை நயந்தோன்றப் பாடியுள்ளமை சிறப்புடையதாகும். இவ்வாறே பிற அணிகளும் பல்வேறு இடங்களில் அமைத்துப் பாடியுள்ளார்.

சொல்லணிகள்

பிள்ளையவர்கள் நைமிய சாரண்ய படலத்தில் சொல்லணிகளின் வகைகளை மிக அற்புதமாகக் கையாண்டுள்ளார்.

திரிபு

முதலெழுத்து ஒழிய இரண்டு முதலான எழுத்துக்கள் அடிதொறும் ஒத்திருக்கையில் பொருள் வேறுபடுஞ் செய்யுள் திரிபு ஆகும்.

வாவித் தாமரை வண்டு பெடையொடும்
கூவித் தாமரை யெண்கொளப் பாடுபண்
மேவித் தாமரை யாதி விலங்குணா
ஓவித் தாமரை சோருற் றுவர்க்குமால் (பாடல்:269)

தடாகங்களிலுள்ள தாமரைப் பூக்களிலிருந்து வண்டுகள் தங்கள் பெண்களோடும் இரைந்து தாமரை என்னும் அளவு கொள்ளப் பாடுகின்ற இராகங்களை விரும்பித் தாவுகின்ற மரை முதலான விலங்குகள் தங்கள் உணவையும் நீக்கித் தங்களுக்கு அரசனாகிய சிங்கத்தோடும் அத்தடாகங்களின் கரையில் வந்து மகிழ்ச்சி அடையும் என்பது இதன் பொருள்.

யமகம்

வந்த எழுத்துக்களே பொருள் வேறுபடச் செய்யுளின் சீர் அல்லது அடிகளில் பின்னும் வருவதாகிய மடக்கணி யமகம் ஆகும்.

போத கத்தினை யாவளி போற்றுகைப்
போத கத்தினை நோக்கரிப் போத்தினம்
போத கத்தினை யார்புனத் தென்னுநூல்
போத கத்தினை யாயுமப் பொங்கரில் (பாடல்:271)

இதன் பொருள், போகத்திணையா வளிபோற்று கைப்போதத்தினை என்பது பூக்களிடத்துத் தேனையுண்டு வருந்தாத வண்டுகள் விரும்புகிற கையினையுடைய யானையை, நோக்கரிப் போத்தினம் என்பது பார்க்கின்ற ஆண் சிங்கத்தின் கூட்டங்கள், போதகத்தினை யார் புனத்தென்னும் என்பது போகக் கடவாய் தகுதியாகத் தினைப் புனத்தனென்று சொல்லும். நூல் போகத்தினை யாயுமப் பொங்கரில் என்பது சிவஞானபோதம் என்னும் நூலை முனிவர்கள் ஆராய்ந்த நைமியவனத்தில் என்று பொருள்படும்.

தகர வருக்கச் செய்யுள்

தகர வருக்க எழுத்துக்களைக் கொண்டே பாடுவது தகரவருக்கச் செய்யுளாகும்

தித்தித்த தேதூத் தொத்தூத்துதைதேத்
துத்தத்து தேத்தி துத்தத்த தோத (பாடல்:274)

தூத்தொத்துத் துதை தேத்து தத்து தேத்தி என்பது தூய்மையான பூங்கொத்துக்கள் நெருங்கியவிடத்துத் தாவுகின்ற தேனீக்கள், துத்தத்தோத என்பது ஏழிசையில் ஒன்றைப் பாட, தித்தித்ததே என்பது இனிப்பாயிருந்தது என்பதாகும்.

ஏகபாதம்

ஓரடியே நாற்கால் உச்சரித்தால் பாட்டுப்பொருள் வேறுபட்டு முடிவது ஏகபாதம் ஆகும்.

சந்த மூடுவ சந்தமுடுவ சந்தமுடுவ சந்த மூடுவ (பாடல்:275)

இதன் பொருள் சந்தமுடுவ சந்தமுடுவ சந்தமுடுவ என்பது சந்தனமரங்களில் பொருந்திய கொடிகளிடையே தென்றற் காற்றானவை பிணங்குவன; சந்தமுடுவ என்பது அழகு முடியிருப்பன என்பதாகும்.

கோமுத்திரி

கோமுத்திரி என்பது இரண்டு இரண்டு வரியாக ஒரு செய்யுளை எழுதி மேலும் கீழும் ஒன்றிடையிட்டு வாசித்தாலும் அச்செய்யுளே யாவது.

ஆய வாழை குராவத வாருவ நேயமாழை மராநித மோருவ
பாய காஞ்சி பலவு நிரம்புவ தூயதாஞ்சுப மேவுப ரம்பவ (பாடல்:276)

இதன் பொருள்: ஆய வாழை குராவத வாருவ - உண்டாகிய வாழைமரம், குராமரம், அத்திமரம் பொருந்துவன; நேய மாழை மராநிழ மோருவ - விருப்பம் பொருந்திய மாமரமும் கடப்ப மரமும் எப்போதும் யாவராலும் ஆராயப்படுவன; பாயகாஞ்சி பலவு நிரம்புவ - பரவிய காஞ்சி மரமும் பலா மரமும் நிரம்பி யிருப்பன; தூயதாஞ் சுபமேவு பரம்புவ தூய்மையான சுகங்கண் மேவுதல் பரவியிருப்பன அந்த நைமிச வனத்தில் என்பதாகும்.

பசுவானது நடந்துகொண்டே நீர் விடும்போது அந்நீர் ஒழுகிய தாரையானது இவ்வாறே நெளிந்த வடிவமாயிருக்கும். அது பற்றியே இது கோமுத்திரி எனப் பெயர் பெற்றது

கூட சதுக்கம்

ஈற்றடி எழுத்துக்கள் ஏனை மூன்றடியுள்ளும் கரந்து நிற்கப் பாடுவது கூட சதுக்கமாகும்.

சந்து வம்பு தழுவு மகிழினும்
நந்து வண்கிளை கொண்டொளிர் நாகத்தும்
முந்து வஞ்ச முகிழ்தவி றாலினும்
வந்து வந்து வளைந்து விழுமளி (பாடல்:277)

இதன் பொருள்: சந்து வம்பு தழுவு மகிழினும், நந்து வண்கிளை கொண்டொளிர் நாகத்தும், முந்து வஞ்ச முகிழ்த்த விறாலினும் சந்தன மரத்தினும், வாசனை பொருந்திய மகிழ மரத்தினும், மிகுதியான கொம்புகளையுடைய புன்னை மரத்தினும் உயர்ந்த மூங்கில் மரத்தில் கட்டியிருக்கின்ற தேனடையிலும் வந்து வந்து வளைந்து விழுமளி-வண்டுகளாவன வந்து வந்து சூழ்ந்து விழும் என்பதாகும்.

முரச பந்தம்

ஓரடி ஒருவரியாக நான்கு வரி எழுதி மேலிரண்டு வரியும் தம்முட் கோமுத்திரியாகவும் கீழிரண்டு வரியும் தம்முட் கோமுத்திரியாகவும் சிறுவார்

போக்கி, மேல்வரி இரண்டாம் வரியினும் மூன்றாம் வரியினும் நான்காம் வரியினும் கீழுற்று மீண்டு மேனோக்கவும், கீழ்வரியினும் அவ்வாறே மேலுற்று மீண்டு கீழ் நோக்கவும் பெருவார் போக்கி, இந்த வார் நான்கும் நான்கு வரியாகப் பாடுவது முரச பந்தமாகும்.

சார்ந்த தாம்ப ராமரை, நேர்ந்த தாம்ப ராமரை
சார்ந்த தாம் ராமரை நேர்ந்த தாம்ப ராமரை (பாடல்:278)

இதன் பொருள்: சார்ந்த தாம்ப ராமரை, நேர்ந்த தாம்ப ராமரை எண்ணிக்கையில் பொருந்திய ஆம்பல் எண்ணையும் தாமரை எண்ணையும் உடைய யானைகளையுந் தாவுகின்ற மரை என்னும் விலங்குளையும் பொருந்தியிருக்கின்றது என்பதாகும்.

எழுத்து வருத்தனம் (அக்கர வருத்தனம்)

ஓரெழுத்துள்ள ஒரு மொழியாய்ப் பொருள் பயந்து, பின் ஓரெழுத்தேற்றப் பிறிதொரு மொழியாய்ப் பொருள் பயந்து, அவ்வாறே முறை முறையான் ஏற்ற ஒவ்வொரு மொழியாய்ப் பொருள் பயப்பது எழுத்து வருத்தனம் ஆகும் (வருத்தனம்-வளர்தல்)

ஒரு குமாருயி ராற்பக வோதலுற்
றாரு மற்றொன்ற னாலுயி ராக்குபு
சேரு மற்றொன்றி னெத்தருச் செப்பலாம்
வாறு மற்றலீதெங்கு மலருமே (பாடல்:279)

ஆவென்றும், ஆவியென்றும், ஆவிரை என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

அக்கரச் சதகம்

ஒரு பொருள் பயப்பதொரு சொற்கூறி, அதனில் ஒவ்வோர் எழுத்தாக நீக்க வெவ்வேறு பொருள் பயக்கப் பாடுவது அக்கரச் சதகம் ஆகும்.

சாத மந்தவ னந்தழை வித்தலு
மேத மேதுமின் றாகவி ரித்தலுங்
காதல் பூப்ப விடந்தொறுங் காட்டலும்
போத கந்தகங் கம்மெனப் போற்றுமே (பாடல்:280)

போதகம்-ஞானம்; தகம்-வெப்பம்; கம்-சலம்.

சுழி குளம்

சுழி குளம் என்பது ஒரு செய்யுளை எட்டு எட்டு எழுத்தாய் நான்கு வரியாக எழுதி, மேலிருந்து கீழ் இழிந்தும் கீழிருந்து மேலேறியும் புற நின்று வந்து உள் முடிய உச்சரித்தாலும் அவ்வரி நான்குமேயாகி செய்யுளாளேயே முற்றுப் பெறுவதாகும்.

தவமகலார் சேர, வருதிரமா வார்சே
மதியி வருமேவார், கரவர் கரு மாலா (பாடல்:281)

இதன் பொருள்: தவமகலார் சேரவரு திர மா வார்சே மதி யிவரும் - தவத்தினின்றும் நீங்காதவர்கள் சேர வருகின்ற நிலைமையையுடைய மாமரம், ஆத்திமரம், செம்மரங்களில் சந்திரனேறும்; மேவார் கரவர்-கள்ளமுடையர்வள் பொருந்தார்கள்; கருமலா-சனைங்கள் கலப்பனவல்ல அவ்வனத்தில்.

சருப்பதோபத்திரம்

ஒரு நிரை எட்டாக அறுபத்து நான்கறை கீறி, ஒரு செய்யுள் எவ்வெட்டெழுத்தால் ஓரடியாக நான்கடி பாடி, மேலிருந்து கீழிறங்கவும் நான்கடியும் எழுதி, கீழ் நின்றும் மேலேறவும் நான்கடியும் எழுதி மேலிருந்து கீழிரங்கவும், கீழிருந்து மேலேறவும் முதல் தொடங்கி இறுதியாகவும், இறுதி தொடங்கி முதலாகவும், மாலை மாற்றாக நான்கு முகத்தினும் வாசித்தாலும் அச்செய்யுளே வருவது சருப்பதோபத்திரமாகும்.

மா வாயாவீ வீயா வாமா
வாயாவோவா வாவோ யாவா
யாவோவாமா மாவா வோயா
வீவாமாமே மேமா வாவீ (பாடல்:282)

இதன் பொருள், மா வா யா வீ யா-மாமரம், ஆச்சாமரம், யாமரம் இவைகளின் பூக்கள் கெடுவனவல்ல; வா மா ஆயா -தாவா நின்ற மான் கெடுவனவல்ல; ஒவா ஆவோ - பசுக்களோ நீங்காதன; யா வாயா - எவை கிடையாதன? ஒ-அசை, ஆமா மா வரவு ஒயா - காட்டுப் பசுக்கள் மற்றை மிருகங்கள் தாண்டுதல் ஒய்வனவல்ல; வீவு ஆம் ஆம் ஏ மே மாவா வீ -நீக்க மாகு மா நர் இன்பகும் பெரிய தடாகங்களெல்லாம் அவ்வனத்தில் என்பதாகும்.

மாலை மாற்று

ஒரு செய்யுளை ஈறு முதலாக வாசித்தாலும் அச்செய்யுளே ஆவது மாலை மாற்றாகும்

தேயாவாமா யாவாடாதே, தேனாரவே தாமோவாதே
தேவாமோதா வேரானாதே, தேடாவாயா மாவாயாதே

இதன் பொருள், தேயா ஆமா - காட்டுப்பசுக்கள் செய்வனவல்ல; யா வாடாதே - யா என்னும் மரம் வாடாது; தேன் ஆர் ஆவே தாம் ஒவாதே - தேன் பொருந்திய ஆச்சாமரம் தான் நீங்காது; தேவாம் ஒதா ஏர் ஆனாதே - தெய்வத்தன்மை யாகிய சொல்லமுடியாத அழகு நீங்காது; தேடா ஆயா மா ஆயாதே - தேட முடியாத ஆயக்கூடாத வண்டுகள் கெடாது.

காதை கரப்பு

ஒரு செய்யுள் முடிய எழுதி, அதன் ஈற்று மொழிக்கு முதலெழுத்துத் தொடங்கி, ஒவ்வோர் எழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுட் போவது காதைக் கரப்பு எனப்படும்

போது மேய ராகவி போருந்த
மீது பாயவு மாடுவ வேருந்தி
குமாது மோத நறாநகு முருங்க
மேது வாரவை நீடவ ணே ருந்து (பாடல்:284)

இதன் பொருள்: போது குமய மராகவி போருந்த மீது பாயவு மாடுவ குவர் பூக்கள் பொருந்திய கடம்ப மரங்கள் குரங்குகள் போரைச் செய்யவும் மேலே தாண்டவும் வேரொடும் ஆடுவன; தேவாம் ஒதா ஓர் ஆனாதே - தெய்வத் தன்மையாகிய சொல்ல முடியாத அழகு நீங்காது; தேடா ஆயா மா ஆயாதே - தேட முடியாத ஆயக்கூடாத வண்டுகள் கெடாது என்பதாகும்.

கரந்துறை செய்யுள்

கரந்துறைப் பாட்டு என்பது ஒரு செய்யுள் பிறிதொரு செய்யுள் சொற்புகாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளும்படி பாடுவது ஆகும்.

துருவ நீரது, கருகுறாதது, திருவமாயது, தருவிராயது (பாடல்:285)

இதன் பொருள், துருவ நீரது - தேடுகின்ற அழகிய குணத்தையுடையது; கருகுறாதது- வாடாதது; திருவமாயது-உலகிற்கெல்லாம் செல்வமாகியது; தருவிராயது-மரங்களைக் கலந்திருப்பது அவ்வனம் என்பதாகும்.

மாத்திரைப் பெருக்கம்

மாத்திரைப் பெருக்கம் என்பது, இதனை மறுதலைப்பட பாடுவதாகும். (மாத்திரையை அதிகப்படுத்துதல்)

ஏக மாத்திரை யேறு மடைத்தலை
ஏக மாத்திரை யேறும்வெற் பாற்றிடும்
ஏக மாத்திரை யேறுசங் கங்குலாய்
ஏக மாத்திரை யேறுபெண் கீளுமே

இதன் பொருள், ஏக மாத்திரை யேறு மடைத்தலை; அடை-தழை - தாழை; தென்னை மரங்களின் தலைகள், ஏகமாத்திரை யேறு வெற்பாற்றிடும் - நகம்-நாகம் - தேவலோகத்தைச் சுமக்கும். ஏக மாத்திரை யேறு சங்கங்குலாய்; சங்கம் கம்பு, காம்பு - மூங்கின் மரங்கள் வளர்ந்து, ஏகமாத்திரை பொன் கீளுமே; பொன் தன்ம , தானம் - தேவலோகத்தைக் கிழிக்கும்.

மாத்திரை சுருக்கம்

மாத்திரைச் சுருக்கம் என்பது ஒரு பொருள் பயந்து நிற்பதொரு சொல், ஒரு மாத்திரையைக் குறைப்பப் பிறிதொரு பொருள் பயக்கும் சொல்லாய் நிற்பது ஆகும்.

ஒன்றின் மாத்திரை யுற்ற கழுக்கடை
ஒன்றின் மேற்றிசைக் காற்றி னுயருவ
ஒன்றின் மேக வளமை யுரைத்திடில்

ஒன்றில் கார்க்கவி யெனில்கண் ணுற்றவே (பாடல்:289)

இதன் பொருள், ஒன்றில் மாத்திரை யுற்ற கழுக்கடை; ஆயுதம்-ஈட்டி - இட்டியாகமானவை, ஒன்றில் மேற்றிசைக் காற்றினுயருவ - மேற்காற்று; கோடை - கொடை கொடுத்தலால் உயருவன; ஒன்றில் மேக வளமை யுரைத்திடில்; மேகம்-வானம் - வனம் - நைமிச வனத்தின் வளமையைச் சொன்னால், ஒன்றில் கார்க்கவியென்னில் கண்ணுற்றவே; கருங்குரங்கு - யூகம் - யுகம் - நேக யுகங்களைக் கண்டிருக்கிறதாம்.

நாகபந்தம்

நாகபந்தம் என்பது இரண்டு பாம்புகள் தம்முள் இணைவனவாக உபதேச முறைமையினால் எழுதி, ஒரு நேரிசை வெண்பாவும் ஓர் இன்னிசை வெண்பாவும் எழுதிச் சந்திகளில் நின்ற எழுத்தே மற்றையிடங்களிலும் உறுப்பாய் நிற்கப் பாடுவது.

இரட்டை நாகபந்தம்

பரவ சோகுதண் பாடல ராசியும்
விரவி யுங்கு மிடைகர வீரமுங்
குரவ மாமல கங்குளி ரத்தியு
முரம னைபட வோங்கு குணத்தவே

இதன் பொருள், பரவிய அசோகு மரமும் குளிர்ச்சி பொருந்திய பாதிரி மரக்கூட்டமும் கலந்தவிடத்து நெருங்கும் அலரியும் குராமரமும் நெல்லி மரமும் குளிர்ச்சியாகிய அத்தி மரமும் அவ்வனத்தில் வலி நிலைபெற்று அழகுண்டாக வளருங் குணத்தினையுடையது என்பதாகும்.

புனைவண் பாடு மருத மரவம்பூ
நனைவம் பேய்தொடை பொங்கரா னாடியே
நினைகண் ணோகண்டா னீதம தாகுவ
தனைவ ராத தரமொய்க ராகவே

இதன்பொருள், அலவகாரமாகிய வண்டுகளோடு மருதமரத்தையும் குங்கும மரத்தையும் பூக்களையும் அரும்புகளையும் வாசனை பொருந்திய பூங்கொத்துக்களையும் கொண்டு கருதி நினைத்துக் கண்ணாற் கண்டால் நீதியே உண்டாகின்றன. அளவிடக்கூடாத தரத்தால் வலி குறையாதன அவ்வனம் இவை இரண்டு பாட்டும் இரட்டை நாகபந்தம்.

அட்ட நாகபந்தம்.

நான்காம் எழுத்து நாற்பத்தோராம் எழுத்தாகவும், ஆறாம் எழுத்து நாற்பத்தைந்தாம் எழுத்தாகவும், எட்டாம் எழுத்து இருபதாம் எழுத்தாகவும் பன்னிரண்டாம் எழுத்து பதினெட்டாம் எழுத்தாகவும் இருபத்திரண்டாம் எழுத்து நாற்பத்தேழாம் எழுத்தாகவும் இருபத்து நான்காம் எழுத்து முப்பத்து ஒன்பதாம் எழுத்தாகவும், முப்பத்து மூன்றாம் எழுத்து ஐம்பத்தோராம் எழுத்தாகவும் முப்பத்து ஏழாம் எழுத்து நாற்பத்து ஒன்பதாம் எழுத்தாகவும் வரும்படி ஒன்று உள்பட ஐம்பத்தோரெழுத்தினால் ஒரு செய்யுள் செய்து உபதேச முறையால் அட்ட நாக பந்தம் வரைந்து அதில் அடைத்துக் கொள்வது அட்டநாக பந்தத்தின் விதியாகும்.

சூத மேயவந் தீந்தழை துன்றுவ
சீத மாமலர் சீல்துற்ற மாண்மின
ஏத மென்றதொன் றின்நுண்டு தீவிய
போத நாறலின் மாறமும் பொங்கரே

இதன் பொருள், மாமரங்கள் பொருந்திய அழகிய இனிப்பாகிய தளிர்களால் நிறைவன; குளிர்ச்சியுடைய அழகிய பூக்கள் சிறப்படைந்த பெருமையினை உடையன குற்றமென்று சொல்லியது ஒன்றுமில்லை தித்திப்பானவை இருக்கின்றன; ஞானம் விளங்கலால் பகையை வெல்லும் அவ்வனத்தில்.

சக்கரமாற்று

இது நான்காரைச் சக்கரம், ஆறாரைச் சக்கரம், எட்டாரைச் சக்கரம் என மூன்று வகைப்படும்.

நான்கு ஆரைச் சக்கரம்

நான்கு ஆரக்கால்களையுடைய சக்கரம் எனப்படும்

தேய மாதர மேயதே, தேய மேதக வேயதே
தேய வேமிக வாயதே, தேய வாவின மாயதே

இதன்பொருள், தேய மாதர மேயதே - பூலோகத்தாரால் கொள்ளப்படும் ஆசையையுடையது; தேய மேதக வேயதே - ஒளியையே தகுதியாகப் பொருந்தியிருக்கிறது; தேயவே மிக வாயதே - தெய்வத்தன்மையுடைய இன்பமானது மிகவும் வாய்த்தலையுடையது; தேய வாவின மாயதே - தேய்ந்த ஆசையினையுடைய முனிவர் கூட்டங்களையுடையது அவ்வனம்.

பிறிதுபடுபாட்டு

பிறிதுபடு பாட்டு என்பது, ஒரு செய்யுளை அடியும் தொடையுட் வேறுபடுப்பச் சொல்லும் பொருளும் வேறுபடாது வேறொரு செய்யுளால் முடிவது ஆகும்.

அரியுங் கரியு மடுபுலி மாவும்
விரியுங் கலையு மிகவும் பிரிய
பிரிய முனிவர் பிரிகலர் மொய்ப்பர்
கனிகொண் டினிய கனுலு மாங்கே (பாடல்:298)

திரிபங்கி

ஒரு செய்யுளால் உறுப்பமைந்து ஒரு பொருள் பயப்பதனை மூன்றாகப் பிரித்து எழுத வெவ்வேறு செய்யுளாய்த் தனித்தனியே பொருள் பயந்து தொடையுங் குரியையும் தனித்தனியே காண வருவது திரிபங்கி ஆகும்.

இனிய பலாநிறை வாமலர் மாவியல் வாழையெலா
முனிவரி தாமிறை தீரளி தோய்மயன் மூசுறுமா
நனிசுவை கூர்கறை யோவமிர் தாவியல் கானயமார்
கனியொழி யாநறை மாமழை யாம் வயல்கால்படுமே (பாடல்:299)

இதில் அடங்கியுள்ள செய்யுள் மூன்றாவன

இனிய பலா, முனிவரிதா, நனிசுவைகூர்; கனியொழியா (பாடல்:300)

நிறைவா மலர்மா மிறைதீ ரளிதோய்
கறையே வமிர்தா நறைமா மழையாம் **(பாடல்:301)**

வியல்வா ழையெலா, மயன்மு சுறுமா,
வியல்கா னயமார், வயல்கால் படுமே **(பாடல்:302)**

நிரோட்டகம்

நிரோட்டகம் என்பது, இதழ் குவிக்கும் உயிரும் மெய்யுந் தீண்டாமல் பாடுவதாகும்.

அளியி னங்கலத் தாடிடத் தேனிழி
தளிர டர்ந்த செந் தாதக லாக்கணி
களிகி ளர்ந்த தழைசெறி காட்சியா
னளிய டைந்த தழலிட்டி நண்ணியே **(பாடல்:303)**

அகர உயிரால் வந்த செய்யுள்
அதவ மரவ மரச வகல மடல வனச
மலர வறல பனச மரந லதக மவண்

இதன்பொருள், அத்திமரம், குங்குமமரம், அரச மரம், அழகிய அகன்ற இதழ்களையுடைய தாமரை பூக்களையுடைய தடாகங்களையுமுடையன, பலாமரம், நல்ல சஞ்சீவி மருந்தும் அவ்வனத்தில் இருக்கின்றன.

ஆகார உயிரில் வந்த செய்யுள்
தாமா வாமா வாயா காயா யாவா யாமா வாயா மாயா (பாடல்:306)

இதன் பொருள், தாமா வாயா - தாவுகின்ற விலங்குகளும் காட்டுப் பசுக்களும் கெடுவன வல்ல; காயா யா - காயா மரமும் யா என்னும் மரமும், வாயா மா - எவ்விடத்தும் கிடையாத மாமரங்களும், ஆயா மாயா - ஆச்சா மரங்களும் இன்னும் பலவும் அந்த நைமிய வனத்தில் ஒழிவன அல்ல.

இகர உயிரில் வந்த செய்யுள்
விதிதி கிரியி நிதியி விரிதி கிரியி சிகியி மிதிதி கிரியி

இதன் பொருள், பிரமனால் விடப்பட்ட தருப்பைச் சக்கரத்தையுடையது; செல்வத்தினை உடையது; உயில்களையுடையது; சூரியனின் தேருருளையையுடையது அந்த நைமிச வனம்.

சொல்நயம்

ஆலடி வாழ் அரசடியை விரும்பி வாழ்வாம் **(பாடல்:9)**

கல்லாலின் கீழ் விளங்கும் தட்சிணாமூர்த்தியை பிள்ளையவர்கள் ஆலடி வாழ் அரசு என்று நயந்தோன்றக் கூறியுள்ளார்

ஒரு பசுப் புரக்கும் மாண்பில் . . . . . .
. . . .
பல் பசுப் புரந்த வையன் பாத தாமரை **(பாடல்:19)**

முரன் நயந்தோன்ற இப்பாடலில் பாடியுள்ளார்.

இலக்கண நுட்பங்களைக் கையாளுதல்

உடலும்-உயிரும் தனித்த நிலையில் அஃறிணையயானாலும் கூடிய பொழுது பகுத்தறிவு பெற்று உணர்திணை ஆனதுபோல இழிதகவுடையேன் சொல்லும் பொருளும் இறையவன் சரிதத்தோடியைந்து உயர்ந்தது என்கின்றார்.

இழிதிணை யுயிரு மெய்யு மிலங்கறி வொடுமி யைந்தே
. . . . (பாடல்:35)

இருதிணை யுயிர்முயற்சிக்கு இத்திணைதரும் இலாபத்து
ஒரு திணைக்கு இஃதாம் என்றே பொதுக்கினர் பலாலம் (பாடல்:119)
. . . . மொழி சுருக்கியே யுரைப்பர் (பாடல்:237)

சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

1, 7, 8, 9, 14, 25, 53, 55, 89, 104, 105, 123, 125, 241, 242, 253, 260, 364 முதலிய பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பொதிந்துள்ளார்.

44. மகாவித்துவான் மாணாக்கர்களிடம் காட்டிய பரிவு

கு.சிவலிங்கம்
கோவை

19ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தமிழ்ப்பெரும் கவிஞராக விளங்கியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். நாற்கவிராசராகவும் நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என்னும் மூவகை ஆசிரியராகவும் விளங்கியவர் நம் கவிஞர் பெருமான். 10 கம்பருக்கு இணையாகச் சொல்லப்படுபவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தமிழகத்திற்குக் கொடுத்த மிகப்பெரும் கொடை "தமிழ்த்தாத்தா. உ.வே.சாமிநாதையர்" என்றால் சற்றும் மிகையன்று.

இளமையிலேயே பாடல்களை நுட்பமாக ஆராய்ந்து உணரும் அறிவுத்திறன் பெற்றவராக இருந்தவர் பிள்ளையவர்கள். நினைத்ததை நினைத்த நேரத்தில் பாடும் ஆற்றல் மிக்கவர். இராமசுவாமி ஐயர் அவர்கள்,

எனைவைத்தி எனைவைத்தி யெனப்பதங்கள்
இடையிடைநின் றிரந்து வேண்ட
இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின்
பொறுத்திடுமின் என்று கூறி

என்னும் பாடலால் பிள்ளையவர்கள் செய்யுள் இயற்றும் பொழுது சொற்கள் என்னை வைத்து எழுது, என்னை வைத்து எழுது என்று வரிசையாக நின்று கெஞ்சும் எனக் கூறுகிறார். இவருடைய குணங்களாகப் பொறுமை, மனநிறைவு, சிவபக்தி, மாணாக்கர்களிடம் காட்டிய பரிவு முதலியவற்றைச் சொல்லலாம், அவற்றுள் மகாவித்துவான் மாணாக்கர்களிடம் காட்டிய இணையற்ற பரிவைப்பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூல்களை ஒய்வின்றிப் பொறுமையாகப் பாடஞ்சொல்லும் முறை இவர் காலத்தில் இவரைத்தவிர வேறு யாரிடமும் இருக்கவில்லை எனலாம், மகாவித்துவான் தம் இளமையில் பலரிடம் சென்று அவர்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்துகொடுத்துப் பாடம் கற்றார். ஒவ்வொரு நூலைப் படிப்பதற்கும் ஒவ்வொருவரிடத்தில் பலமுறை சென்று சிறிது சிறிதாகக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தார். பல நாட்கள் சென்றாலும் சில பாடங்களையே கற்பிப்பார். இந்த நிலை தம்மிடம் வந்து பாடம் கேட்கும் மாணாக்கர்களுக்கு இருக்கக்கூடாது என்னும் கருத்தினால் மிகவும் பொறுமையாகவும், தாயைக் காட்டிலும் மிகுந்த பரிவு காட்டியும் பாடம் கற்றுக்கொடுத்தார். தன் நலம் கருதாமல் மாணாக்கர்களுடைய

6.19.

நன்மையையே பெரிதாகக் கருதினார்.

நமக்குப் பிறர் ஏதேனும் தீங்கு செய்தாலும் பொறுத்துக்கொள்வார். ஆனால், தம் மாணாக்கர்களுக்குச் செய்தால் பொறுத்துக்கொள்ள மாட்டார். மற்றவர்களை அதட்டிக் கூடப்பேச மாட்டார். ஒன்றையே பலதடவை கேட்டாலும் அதற்குச் சிறிதும் கோபப்படாமல் மிகவும் பொறுமையாகக் கற்றுக்கொடுப்பார். புதிய மாணாக்கர்களுக்குப் பழைய மாணாக்கர்களைக் கொண்டு பாடம் சொல்விப்பது இவருக்கு வழக்கம். அதற்குக் காரணம் தம் மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லும் ஆற்றல் உண்டாக வேண்டுமென்பது தான். ஏதேனும் பிழையிருந்தால் சொன்னவரைத் தனியே அழைத்து உண்மையைத் தெரிவிப்பார். குறை கூறுபவர்கள் மலிந்தும் குறை களைபவர்கள் குறைந்த இந்நாட்களில் மகாவித்துவான் அவர்களின் இந்தச் சீரிய பண்பு எண்ணி எண்ணி வியக்கத்தக்கது.

மகாவித்துவானிடம் யார் வந்து கேட்டாலும் பாடம் சொல்வார். இவரிடம் படித்தவர்களிற் பல சாதியினரும், பல சமயத்தினரும் உண்டு. இப்படிப் பல சமயத்தினருக்கும் பாடல் சொல்வதால் இவர்மீது பொறாமை கொண்ட சிலர் இவர் சைவராக இருந்தும் பிற சமயத்தினருக்குப் பாடம் சொல்லுதல் முறையல்ல என்று குறை கூறினார்கள். அதைக் கேட்ட மகாவித்துவான் குறை கூறுகின்றவர்கள் இருக்கும்பொழுது பொதுவாகக் கூறுவது போல, "நான் தேம்பாவணியைப் பாடஞ் சொல்லுதலும் கிறிஸ்தவர் முதலிய பிற மத மாணாக்கர்கள் என்பாற் பாடங்கேட்டலும் கூடாத செயல்களென்று சிலர் சொல்லி வருவதாகத் தெரிகிறது. மாணாக்கராக யார் வந்தாலும் அன்போடு பாடஞ் சொல்லுதலையே எனது முதற்கடமையாக எண்ணியிருக்கிறேன். எல்லாத் தானத்திலும் வித்தியாதானமே சிறந்தது. அன்னமிடுதற்குப் பசியுள்ளவரே பாத்திரர்; அது போலப் பாடஞ் சொல்லுவதற்கு, படிப்பில் ஆர்வமுடைய யாவரும் பாத்திரர்களே. அன்றியும் தமிழ் நூல் யாதாயிருப்பினும் அதிலுள்ள சொற்பொருள் நயங்களை உணர்தல் பிழையாகாதே. தமிழ் நூல் என்னும் முறையில் யாதும் விலக்கப்படுவது அன்று" என்று கூறினார்.

தமிழ் படித்தவர் யாவரும் இவரிடத்திற் கவலையின்றிப் பழகலாம். ஒருவருக்கும் இவர்பால் அச்சம் உண்டாவதில்லை. தம்முடைய மாணாக்கர்களை நல்ல நிலையில் இருக்கச் செய்ய வேண்டுமென்னும் நினைவு எப்போதும் இவருக்கு உண்டு. அதனால் இவரிடம் கணக்கற்ற மாணவர்கள் பாடம் கேட்டனர். அவர்களில் தியாகராக செட்டியார், சுந்தரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர், ஆரியங்காவற்பிள்ளை, வன்றொண்டர், ஓர் ஏழை அந்தணர் ஆகிய சில மாணாக்கர்களைப் பற்றிக் காண்போம்.

தியாகராச செட்டியார்.

தியாகராச செட்டியாரென்பவர் பூவாளூரிலிருந்து வந்து இவரிடம் பாடங்கேட்டவர். விவசாயமும், வியாபாரமும் செய்து வந்தவர். கற்றவற்றைச் சிந்தித்துத் தெளிந்து பயன் படுத்தக் கூடியவர். எதையும்

ஊன்றிக் கேட்டுப் படிப்பதில் திறமையுடையவர். தாமே கவிபாடும் ஆற்றல் இவரிடம் இருந்தது. இவையே இவர்மீது மகாவித்துவானுக்கு அதிக அன்பு உண்டாவதற்குக் காரணமாக இருந்தது. தன் ஆசிரியர் சொல்லும் செய்யுள்களை அன்றே மனையேட்டில் எழுதுவார், எழுதியவற்றில் உள்ள சொல் பொருள் நயங்களை அறிந்து மகிழ்ந்து பலமுறை மனமுருகிப் படிப்பார். படித்தவற்றை மற்றவர்களிடம் இனிமையாக எடுத்துக் கூறுவார். ஆசிரியர் சொல்லும் வேலைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள மாட்டார். மகாவித்துவான் அவர்கள் தியாகராச செட்டியாரிடம் வைத்திருந்த அன்புக்கு அளவே இல்லை.

தன் ஆசிரியர் எப்படிப்பாடம் சொல்லுவாரோ, எப்படிப்பொருள் சொல்லுவாரோ அப்படியே செட்டியாரும் சொல்லுவாராம், செட்டியாருடைய குரலும் மகாவித்துவானின் குரலைப் போன்றே இருக்குமாம். மகாவித்துவானுக்கு அடுத்தபடியாகத் தமிழ் நாட்டில் புகழ் பெற்றவராக இருந்தாலும் செட்டியார் தம் ஆசிரியரின் கவிச்சுவையை நன்கு அறிந்து அதில் ஈடுபட்டவர். வியாசைக் கோவை என்னும் நூலைச் சுவாமிநாதையர் தமக்குத் தரும்படி கேட்டபொழுது, "அதனைக் கொடுப்பதற்கு என் மனம் துணியவில்லை" என்றார் செட்டியார். பின்னர் உ.வே.சா.விற்காக 100 பாடல்கள் மட்டும் படிக்கப்பட்டது. தொடர்ந்து படிக்க வேண்டாம் என்று கூறிவிட்டாராம். காரணம் முதல் நூறு பாடல்கள் பிள்ளையவர்கள் இயற்றியது, அடுத்துள்ளவை தான் பாடியவை என்று கூறினாராம். ஆசிரியப் பெருமானின் பாடலைத் தொடர்ந்து தன் பாடலைப் படித்தால் "அமிர்தத்தை யுண்டவன் பிண்ணாக்கை உண்டது போலிருக்கும்" என்று சொல்லி வருந்தினாராம், அந்த அளவிற்குப் பிள்ளையவர்கள் மீதும், அவருடைய பாடல்கள் மீதும் செட்டியார் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார்.

சில நேரங்களில் உரிமையோடு பேசக்கூடியவராகவும் இருந்தார். "சில பாடல்களைப்படிக்கின்ற பொழுது உங்களுடன் இருக்கும் எங்களுக்கே புரிவதில்லை. அப்படிப்பட்ட கடினமான பாடல்களை இயற்றும்பொழுது அவற்றிற்கு பதவுரையாவது எழுதக் கூடாதா?" என்று கேட்பாராம், பொருள் புரியாத பாடல்களைச் சிலர் கொண்டு வந்து என்னிடம் விளக்கம் கேட்கின்றனர். இந்த மாதிரியான யமகம் திரிபுகளாயிருந்தால் பெரும்பான்மையான பாகங்கள் எனக்கு விளங்கா", என்று கூறினார். அதுமட்டுமல்லாமல் "இதுபோன்ற கடினமான பாடல்கள் யாருக்கு விளங்கும்? ஒரு சமயம் ஐயாவுக்கே விளங்காமற் போனாலும் போகுமே. நான் உண்மையைச் சொல்லுகிறேன், கோபிக்க வேண்டாம்" என்று கூறுவார். இப்படிச் சிவபெருமானிடத்தில் சுந்தரர் வன்றொண்டராகக் கேட்பது போல் உரிமையோடு பேசுவாராம் செட்டியார். அந்த அளவிற்கு மாணாக்கர்களிடம் உரிமையோடு பழகுவாராம் பிள்ளையவர்கள்.

தியாகராசச் செட்டியாருடைய வேண்டுகோளால் ஒருமுறை கும்பகோணம் கல்லூரிக்குப் பிள்ளையவர்கள் சென்றிருந்தார். அவரைச் செட்டியார்

நாற்காலியில் அமரச்செய்துவிட்டு தான் நின்று கொண்டார். "ஐயா அவர்கள் மாணாக்கர்களைப் பரீட்சை செய்ய வேண்டும்" என்றார். அவரும் ஒரு மாணவரைப் பார்த்து பாடல் ஒன்றைச் சொல்லும்படிக் கூறினார். மாணவனும் சமயத்திற்குத்தக்க பாடலைக் கூறினான். அதைக்கேட்டதும் பிள்ளையவர்கள் "நீ கற்பித்து வைத்திருப்பது மிகப் பாராட்டற்குரியது" என்று செட்டியாரைப் பார்த்துச் சொல்லி மகிழ்ந்தார். செட்டியார் அவர்கள் தம் ஆசிரியரிடம் மிக்க பணிவுடையவராகவும், அன்புடையவராகவும், உரிமையோடு பேசுபவராகவும், தொண்டு செய்வதே தமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுபவராகவும் இருந்தார்.

சுந்தரம்பிள்ளை

பிள்ளையவர்களிடத்தில் மிக்க பக்தி உடையவர். உலக அனுபவம் மிகு உடையவர். எப்படிப்பட்ட செயலையும் எளிதில் சாதிக்கக்கூடிய புத்தி சாதுர்யம் மிக்கவர்.

பிள்ளையவர்களுக்குத் திருத்தணிகைப் புராணத்தில் அகத்தியன் அருள்பெறு படலத்திற் சில பாகத்திற்குப் பொருள் புலப்படவில்லை. பின்னர் சிவதருமோத்தரம் என்னும் நூலின் உதவியால்தான் அப்பகுதியின் பொருள் விளங்கும் என்று அறிந்தார். இருக்குமிடம் அறிந்து பலவாறாகக் கேட்டும் அந்த நூலை வைத்திருந்தவர் கொடுக்கவில்லை. அதைப் பெறுவதற்குரிய எந்த முயற்சியும் பலனளிக்காமல் மிகுந்த மனவாட்டடத்துடன் அமர்ந்திருந்தார் கவிஞர்பிரான். இதையறிந்த சுந்தரம்பிள்ளை சிவதருமோத்திரச் சுவடியைப் பெற ஒரு தந்திரம் செய்தார்.

சுந்தரம்பிள்ளை ஒரு நாள் சிவதருமோத்திரச் சுவடியை வைத்திருந்த தேசிகருடைய வீட்டிற்கு இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியொன்றில் சேவகர்கள் புடைசூழ வந்து நின்றார். சேவகன் ஒருவன் உள்ளே விரைந்து சென்று தேசிகரைப் பார்க்க ஒரு பிரபு வந்துள்ளார் என்று கூறினான். சேவகர்கள் கொண்டு வந்த விரிப்பில் பிரபு உட்கார்ந்திருந்தார். தேசிகர் வெளியில் வந்து திண்ணையில் இருந்த பிரபுவைப் பார்த்துவிட்டு, சேவகர்களிடம் இவரைப்பற்றி வினவ, "இவர் தென்னாட்டில் ஒரு ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவர்; தாயாருடன் சிதம்பர தரிசனம் செய்வதற்காக வந்தார்; வந்த இடத்தில் தாயார் சிவபதம் அடைந்துவிட்டார் என்று கூறினான். சில விவரங்களை விசாரிப்பதற்கு நினைத்துத் தக்கவர்கள் யாரென்று விசாரித்தபோது சிலர் உங்களைப் பற்றிச் சொன்னார்கள்; அதனால் உங்களைப் பார்க்க வந்துள்ளார்" என்று கூறினர். உடனே தேசிகர் இங்கே பணம் கொடுத்தால் எல்லாம் நடக்கும். அபரக்கிரியை செய்வதற்கும் தக்க இடம் இருக்கிறது என்று கூறினார். அதைக்கேட்ட சேவகன் பணத்தைப் பற்றிக் கவலையில்லை, வேலைக்கும் ஆட்கள் இருக்கின்றனர். சமூகத்திற்கு ஓர் எண்ணமிருக்கின்றது. சிவதருமோத்திரம் என்று ஒரு புத்தகம் இருக்கிறதாம். இந்தச் சமயம் அதைப்படித்துக்கொண்டே பொழுதுபோக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து என்று கூறினான். அந்தப் புத்தகம் என்னிடமே உள்ளது என்று கூறி அதைக் கொண்டு

வந்து கொடுத்தாராம் தேசிகர். நீங்கள் இந்த இடத்திற்கு இறுதிச் சடங்கிற்கு ஒருவாரத்திற்கு முன் வந்தாற்போதும் என்று கூறியவுடன் தாமதிக்காமல் ஐந்து ரூபாயைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டுவிட்டார்களாம்.

சுந்தரம்பிள்ளை மகாவித்துவானிடம் சிவதருமோத்திரச் சுவடியைக் கொடுத்தார். மகாவித்துவான் ஒரு வாரத்திற்குள் அந்நூலைப் படி எடுத்துக்கொண்டார். பிறகு சேவக வேடம் போட்டவரிடமே புததகத்தையும் ஒரு பவுனையும் கொடுத்துத் தேசிகரிடம் சேர்ப்பிக்கச் செய்தார்.

பிள்ளையவர்கள் நடந்தவற்றை அறிந்து வியப்புற்றுச் சுந்தரம்பிள்ளையின் அன்பை எண்ணி மகிழ்ந்தார். இதனால் மாணாக்கர்களுக்கு இவரிடம் இருந்த அன்பும், ஆசிரியர் மாணவர்களிடத்தில் எந்த அளவிற்கு அன்பு காட்டினால் இப்படிப்பட்ட செயலைச் செய்வார்கள் என்பதும் அறிய முடிகின்றன.

உ.வே.சாமிநாதையர்

"மகாவித்துவான் அவர்களிடம் பாடம் கேட்பதற்காகப் பலகாலமாகத் தவம் புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாசகனைப்போல நான் இருந்தேன்" என்று தமிழ்த்தாத்தா கூறுவார். பாடம் சொல்லும்பொழுது கடின சொற்களுக்குப் பொருள் கூறுவார். முதலில் பாடல்களை மாணவர்களையே படிக்கச் சொல்லிப் பொருள் கூறுவார். பதங்களைப் பிரித்துப் பழகுவதற்கும், மனனம் செய்வதற்கும் அனுகூலமாக இருக்குமென்று அந்தாதிகளை மாணாக்கர்களுக்குப்பாடம் சொல்லி வந்தார். சாமிநாதையரிடம் பிள்ளையவர்கள் காட்டிய அன்பிற்கு அளவே இல்லை.

ஒரு நாள் திருவாவடுதுறை மடத்தில் அத்தாளம்(இராப்போசனம்) நடைபெற்றது. அது "படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும், உடைப்பெருஞ் செல்வர்'' என்றபடி நூற்றுக்கணக்கானவர்கள் அறுசுவையுள்ள, நால்வகையுணவுகளையும் முறையேயிருந்து மெல்ல உண்ணும் பெருமை வாய்ந்தது. அங்கே இல்லறத்தாருடைய வரிசையில் முதலிடம் பிள்ளையவர்களுக்கு உரியது. அந்தப் பந்தியில் இவர் உண்ணத்தொடங்குவதற்கு முன்பு திடீரென்று எழுந்து, புறத்தே செல்லும் குறிப்போடு சிறிது தூரம் வந்துவிட்டார். யாரும் பந்தியில் அங்ஙனம் செய்வதில்லை; செய்யவும் கூடாது; வழக்கமே கிடையாதென்பர். தேசிகரே பிள்ளையவர்களைக் கேட்டபொழுது, ''சாமிநாதையரை வெளியே விட்டுவிட்டு வந்தேன். அவர் ஆகாரம் செய்தாரோ இல்லையோ தெரியவில்லை. விசாரித்து வரப்போகிறேன்" என்றார். தேசிகர் "அவருக்கு ஆகாரம் செய்விக்கும்படி முன்பே ஒருவரிடம் சொல்லியாய் விட்டது. அவர் இதற்குள் ஆகாரம் செய்துவிட்டு வந்திருக்கலாம். நீங்கள் கவலைப்பட வேண்டாம். இங்கேயிருந்து மெல்ல ஆகாரம் பண்ணிக்கொண்டு செல்லலாம்" என்று வற்புறுத்திச் செல்லவே இவர் திரும்பிப்போய் அமர்ந்து ஏதோ ஆகாரம் பண்ணுபவர் போலப் பாவனை பண்ணிவிட்டு, எல்லோரும் எழுவதற்கு முன்னரே எழுந்து, கையையும் சுத்தம் செய்யாமல் வேகமாகச் சென்று, சாமிநாதையரை நேரில் பார்த்து ஆகாரம் செய்தாயிற்றா? என்று

கேட்டு, ஆயிற்று என்று கூறிய பிறகே அவர் மனம் நிம்மதியடைந்தது.

இப்படித் தம் மாணவர் ஒருவருக்காக மடத்துச் சம்பிரதாயத்தையே ஒரு கணம் மறந்துவிட்டார். "தன் குழந்தை வயிறு வாடப்பாராத தாயின் அன்புக்கும் என் ஆசிரியர் காட்டிய அன்புக்கும் வேற்றுமையே இல்லை. பெற்ற தாயாரை விட மிகவும் அன்பாக நடத்துகிறார்" என்று சாமிநாதையர் கூறுவார்.

ஆரியங்காவற்பிள்ளை

திருநெல்வேலிப் பக்கத்திலிருந்தது ஆரியங்காவற் பிள்ளை என்ற மாணவர் ஒருவர் மகாவித்துவானிடம் பாடங்கேட்க வந்தார். அவர் செய்யுள் செய்யும் பயிற்சி உடையவர்.

ஒருநாள் இரவில் பாடஞ்சொன்ன பின்பு அவரைத் தெருத் திண்ணையில் படுக்கச் சொல்லிவிட்டு, இவர் படுக்கச் சென்றுவிட்டார். சற்று நேரம் ஆனபிறகு வழக்கம்போல் பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டார். அப்பொழுது ஆரியங்காவற்பிள்ளை உறங்காமல் இருப்பதைக்கண்டு அவர் நோக்கத்தை அறிவதற்குப் படுத்தபடியே விழித்தவராய்க் கவனித்துக் கொண்டே இருந்தார், அப்பொழுது ஆரியங்காவற் பிள்ளையின் வாக்கிலிருந்து

"விடவாளை வென்ற விழியாளைப். . . . . காண்பதுவே" என்னும் செய்யுள் எழுந்தது. இப்பாடலின் மூலமாக அவருடைய மனவருத்தத்தை அறிந்து, அவருக்குத் தெரியாமல் அவரைப்பற்றிய முழு விபரங்களையும் அறிந்து கொண்டார். பின்னர் அவருடைய பெற்றோர்களுக்கு நேரில் வருமாறு கடிதம் எழுதினார். சில தினங்களுக்குப்பிறகு தன்னுடைய பெற்றோரும், மனைவியும் வருவதைக்கண்டு ஆரியங்காவற்பிள்ளை அதிசயமடைந்தார். அவருக்குக் கோபம் ஒருபுறம் இருந்தாலும் தன் மனவருத்தம் நீங்கி மகிழ்ந்தார்.

மாணாக்கர்களுக்குப் பாடம்சொல்லிக் கொடுத்து அவர்களுக்கு உணவு கொடுப்பது மட்டுமல்லாமல், அவர்களுடைய பெற்றோர்களுக்கும் உணவளித்து அவர்கள் குடும்பத்தையும் தம் சொந்தக் குடும்பமாக நினைத்துப் பாதுகாத்தார். இவ்வாறு மாணவர்களுக்கு எந்த குறைகள் உள்ளனவோ அவற்றையெல்லாம் தாமே அறிந்து ஆராய்ந்து தீர்க்கும் அரிய தன்மை மகாவித்துவான் அவர்களிடம் இருந்தது.

வன்றொண்டர்

தேவகோட்டையில் தருமஞ்செய்தலிற் புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்தவர் நாராயண செட்டியார் என்பவர். நுண்ணிய அறிவுடையவர். இவருக்கு ஞாபக சக்தி அதிகம் உண்டு. அவருடைய ஒழுக்கத்தையும், சைவப் பற்றையும், திட பக்தியையும் அறிந்து அவருக்கு வன்றொண்டர் என்றே பெயரிட்டனர்.

"கந்தபுராணம் பாடம் நடந்து வருகையில் அதிலுள்ள கயமுகன்

உற்பத்திப் படலத்தில் 70ஆவது செய்யுளாகிய, "மாண்டவவ்வலியகலன்" என்ற செய்யுளுக்குப் பொருள் விளங்காமையால் இவர் நெடு நேரம் யோசனை செய்துவிட்டு, ''வன்றொண்டர் இந்நூலை முன்பு பாடங்கேட்டதுண்டு இவர் வரும்பொழுது கேட்டால் விளங்கும்" என்றார். அவ்வாறே அவர் வந்தபொழுது கந்தபுராணத்தில் சுபமுகனுற் பத்திப் படலத்தில் என்று சொல்லும் பொழுதே, இன்ன செய்யுளா? என்று செய்யுளைக் கூறிப் பொருளையும் கூறிவிட்டார். அவருடைய ஞாபக சக்தியை அனைவரும் வியந்தனர்.

இவ்வாறு மாணாக்கர்களிடம் உள்ள திறமையைப் பாராட்டி மகிழ்வதோடு, ஒவ்வொரு மாணாக்கர்களின் தனித்திறமையை மதித்து, மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லிப் பெருமைப்படுத்தினார். மகாவித்துவான் அவர்களின் தனிப்பெரும் சிறப்புக்களில் தலையாயது இது எனலாம்.

ஓர் ஏழை அந்தணரால் உபசரிக்கப்பெற்றது

மகாவித்துவான் கண்டதேவிப்புராணம் செய்வதற்குத் தேவகோட்டைக்கு மாணாக்கர்களோடு திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டுச்சென்றார். பட்டுக்கோட்டையைக் கடந்து இரவு 9 மணிக்கு ஒரு சிற்றூர் போய்ச் சேர்ந்தனர். அங்குள்ளவர்களை விசாரித்தபோது அக்கிரகாரத்திற்குச் சென்றால் வசதியாக இருக்குமென்றார்கள். அக்கிரகாரத்தில் மிகச் சிறிய பனையோலைக் குடிசை ஒன்று மட்டும் இருந்தது. அந்தக் குடிசையில் குழந்தைகளுடன் கணவன் வரவை எதிர்பார்த்து ஓர் இளம் பார்ப்பினி இருந்தார்.

இவர்கள் சமையல் செய்வதற்கு வழி இல்லாமையால் பசியுடன் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது உணவுப்பொருள் மூட்டையுடன் சீட்டுக்காரராகிய பிராமணர் வந்தார். கொண்டு வந்த பொருளை மனைவியிடம் கொடுத்து விட்டுத் தம்முடைய நியமத்தை முடித்துக்கொண்டு கட்டிலொன்றைப் போட்டுப் படுத்துக் கொண்டு, பாடல்களைப் பாடினார். அவருடைய பாட்டைக் கேட்ட மாணவர்கள் அவர் தமிழ் படித்தவர் என்பதை மகாவித்துவானிடம் கூறினர். மகாவித்துவான் அவரை அழைத்துப் பாடும்படிக் கூறினார். அவரும் தமிழ் வித்துவானாக இருந்த தன் தந்தை கற்றுக் கொடுத்தவற்றைப் பாடினார். மேலும் படிப்பதற்கு வசதியில்லை என்று கூறிவிட்டு, "மாயூரத்தில் மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்று ஒரு சிறந்த வித்துவான் இருக்கிறாராம்; ஏழைகளாயுள்ளவர்களுக்குச் சாப்பாடும், துணியும் கொடுத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கின்றாராம். இப்படிப்பட்ட மகோபகாரியைப் போல இக்கலியுகத்தில் யார் இருக்கிறார்? அந்தப் புண்ணியவானிடத்திலே போய்ப்படிக்க அவா இருக்கிறது. அதற்கு முடியவில்லை" என்று தன் கஷ்டங்களை எல்லாம் கூறினார்

அதைக்கேட்ட மாணாக்கர் ஒருவர் நீங்கள் காணத்துடிக்கும் மகாவித்துவான் இவரே தான் என்று கூற அம்மறையவர் ஆனந்த வெள்ளத்தில் துள்ளிக்குதித்தார். தான் செய்த புண்ணியமாக நினைத்து ஆனந்தமடைந்தார். அங்குள்ளவர்கள் உணவுப்பொருள்களைக் கொடுத்தனர்.

அவர் அவற்றைப்பெற்று விரைவில் சமையல் செய்து மகாவித்துவான் அவர்களையும், மற்றவர்களையும் உண்பித்தார்.

மகிழ்ச்சி மேலீட்டால் இரவு முழுவதும் உறங்காமல் சில நூல்களில் இருந்த ஐயங்களைக் கேட்டுக்கேட்டு நீக்கிக் கொண்டார். அவருடைய குடும்பத்திற்குத் தேவையான பொருளுதவி செய்துவிட்டு அவரையும் உடனழைத்துச்சென்று, சில மாதம் அவரை உடன் வைத்திருந்து படிப்பித்து அப்பால் ஊருக்கு அனுப்பினார். இப்படிக் குக்கிராமங்களிலும் மகாவித்துவான் அவர்கள் புகழ் பரவியிருந்தது.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் மகாவித்துவானைப் பற்றி ஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் கூறியது

திருவாவடுதுறையாதீனத்தில் "இவரை ஆதீன வித்துவான் பணியில் அமர்த்தத் தக்க சம்பளம் கொடுக்க வேண்டுமே. மற்றவர்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாகக் கொடுக்க முடியாதே" என்று ஸ்ரீ அம்பலவாண தேசிகர் கூறினார். அதற்கு மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் ''அதைப்பற்றிக் கவலைச் சிறிதும் வேண்டாம் இவருடைய மாணாக்கர்களைப் போஷித்துப் பாதுகாத்தலே போதும், அதனாலேயே இவர் மிகவும் திருப்தியடையவார். அதற்கு மேல் ஒன்றும் வேண்டாம்" என்று கூறினாராம். அதைக்கேட்ட ஸ்ரீ அம்பலவாண தேசிகர் இப்படியும் ஒருவர் உண்டோ என ஆச்சரியப்பட்டாராம்.

நம் மகாவித்துவான் இறைவன் திருவடி நிழலை அடைந்ததை அறிந்த மகாவைத்திய நாதையர் கையறு நிலையாகப் பாடிய செய்யுள் வருமாறு

விண்நாடும் பெரும் கவிஞன் மீனாட்சி சுந்தரவேள்
மண்ணாத மணி அனையான் மாதேவன் மலரடி சார்ந்து
உணாநின் றனன்துன்பம் உலப்புறுவார் மாணவர்என்று
எண்ணாநின் றனன் இலையே என்னேவிவ் வுலகியல்பே!"

எண்ணிய பலவும் மாணவர்கள்கனவின்
    ஈந்திடும் நிதிதமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன் னாவலன்

என்று உ.வே.சாமிநாதையர், பிள்ளையவர்கள் மாணாக்கர்களிடம் காட்டிய பரிவினைக் கூறுவார்.

இதுகாறும் பார்த்தவற்றால் மகாவித்துவான் பொருட்செல்வத்தை நாடாமல், எழுமிறப்பும் பெருமை சேர்க்கும் கல்விச் செல்வத்தைப் பெற்றார். பெற்ற செல்வத்தை உலகிற்கு அளித்தார் என அறிந்தோம். கையில் நூல் வைத்துக்கொள்ளாமல் பலமணி நேரம் காலைக்கூட அசைக்காமல், கேட்பவர்கள் மனதைத் தன்பால் ஈர்த்துக் கல்வி புகட்ட இவரையன்றி யாரால் முடியும்? அவ்வளவு செய்யுளும் மனப்பாடம், தடையில்லாமல் சொல்லக்கூடியவர். இவர்கள் பாடம் போதிப்பதற்காகவே உதித்தவர்கள். தானத்தில் சிறந்தது வித்தியாதானமே என்னும் கொள்கைப்பிடிப்போடு வாழ்ந்தவர் மாணாக்கர்களிடத்துத் தாயினும் அன்பு காட்டியவர். மகாவித்துவான் இருக்கின்ற இடத்தில் மாணாக்கர்கள் இருப்பார்கள், தம் மாணாக்கர்கள் இல்லாமல் மகாவித்துவான் இருந்ததில்லை. இப்படி மாணாக்கர்களிடம் பரிவு காட்டியவர்கள் உலகில் எவரும் இல்லையென்று கூறுவது மிகையாகாது.

45. பிள்ளையவர்கள் நோக்கில் சேக்கிழார் வாக்கு

வி. சீதாலட்சுமி
திருப்பனந்தாள்

உழுவார் உலகத்தார் காணி

என்பதற்கொப்ப வேளாண்குலமே நாடும், மக்களும், அரசனும், உயர்நிலை பெறுதற்கு உறுதுணையாக இருக்கும். பிள்ளையும் சேக்கிழாரை, "வேளாளர் குலதிலக", "வேளாண்குல காவல", "சேவையர் குல சிகாமணி" என்று போற்றுகின்றார். வேளாளர் கை தாற்றுக்கோல், அரசன் குட்டிக் கொள்வதற்குரிய மணிமுடியை எடுத்துக் கொடுக்கும் பெருமையுடையது, வேளாளர்களும் பெரும் பேறுடையவர்கள்.

அநபாயச் சோழற்கு அருள்மொழித் தேவர் தம் அறிவுத் திறமையால் அறிமுகமாகி, முதன்மை அமைச்சனாம் பேறு பெற்றார். அரசற்கு ஓர் ஐயம் எழுந்தது. அதனைக் கம்பர்,

காவலன் மண்ணில் மலையில், கடலிற் பெரியதென
எண்ணி எழுதிக் கொடுத்த ஏற்றகை

எனக் கேட்டதாகக் குறிப்பிடுகிறார். நுண்மான் நுழைபுலம் மிக்க சேக்கிழார் அதற்கு விடையாக,

நிலையிற் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

பயன் தூக்கார்

காலத்தினாற் செய்த உதவி ஒருவற்கு
ஞாலத்தின் மாணப் பெரிது

என்று திருக்குறள்களை எடுத்துக் கூறி உணரச் செய்தார்.

ஞானசூரியன்

மன்னன், மக்கள் இவரது அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானம் ஒளிரச் செய்த ஞான சூரியன் சேக்கிழார். காமப் பனுவலாம் சிந்தாமணியைப் படித்து மன்னன் அதில் திளைத்தபோது மனங்கலங்கிய சேக்கிழார் துணிவுடன் மன்னனிடத்து "பார்கொண்ட தொண்டரின் பாயசீரைக் கூறி" நல்வழிப் படுத்தியவர். அரசன் அறிகொண்டு அறியான் எனினும், அருகிருக்கும் அமைச்சரே ஏற்றது செய்ய வேண்டும். அதற்கேற்ப சேக்கிழாரும்,

பார்கொண்ட மன்னர் அல்லவை நீக்கி
சிவமணங் கமழ்தலில்லாது இயைந்த சிந்தாமணி முதல்

என்று நல்வழிப்படுத்தியமையைக் குறிப்பிடுகின்றார். மாந்தரின் அகவிருளை அகற்றி மெய்யொளி ஒளிரச் செய்யும் ஞானசூரியனே சேக்கிழார் ஆவார் பெரியபுராணமும்,

பொங்கிய இருளை ஏனைப்புறவிருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்

என்பதால் மேற்கருத்தின் சிறப்பையும் அறிய முடிகிறது. பிள்ளையவர்கள் சேக்கிழாரைச் "சிவபோகம் கொள்ளும் சைவப் பயிர் வளர்க்கும் கொண்டல்", "சைவப் பயிர் தழையத் தழையும் புயல், "திருத்தொண்டர் சாத்திரமாம் மழை பொழிந்த கொண்டல்", "நீடும் சைவப் பெருவாழ்வு", "போக்கு வரவு இல் பூரணமே" என்று சிவத்துக்கும் சைவத்துக்கும் அருட்கொடையாக இவர் விளங்கியமையைக் குறிப்பிடுகிறார்.

சேக்கிழாரின் பக்திநோக்கு

பிள்ளையவர்கள் சேக்கிழாரை, "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்றும் "முதிரும் அருட்கவி பாடிய புலவன்", "கனிவில் எமைப் பொருவார்களும் நெஞ்சு கரைந்து கரைந்து உருக", "நெஞ்சம் கனியக் கனியக் கண்ணீர் வாரக் கவிபாடிய இறைவா", கல்லும் கரையக் கவிபாடும் கனிவாய்" என்று பலமுறை எடுத்தோதுகிறார். இக்கூற்றினை மெய்ப்பிப்பது போல, சேக்கிழார், 'புண்ணியந் திரண்டுள்ளது போல்வதம்மலை" என்றும், "அண்ணல் ஆளுடையபாகத்து நாயகி உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது" பொன்னி ஆறென்றும்,

பத்தியின் பாலராகி பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்குமாபோல்
மொய்த்த நீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கிமற்றை
வித்தகர் தன்மைபோல விளைந்தன காலியெல்லாம்

என்று சாலி நெல்லின் விளைச்சலையும்,

"கமல வண்டலர் கைதை, துன்று நீறுபுனை மேனியவாகித் தூயநீறு புனை தொண்டர்களென்ன வண்டுகள் இருந்தன என்றும் வண்ணாரின் உவர்மண் மேனி சேரமானுக்கு முழுநீறு பூசிய அடியவர் மேனியாகவும் திகழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார்.

எழுபரவையும் ஒருதூக்கில் நிறுத்தியவர்

ஒரு சிறிய துலாக்கோலில் ஏழு கடல்களையும் நிறுத்திய திறமை சேக்கிழார்க்குரியது என்கிறார் பிள்ளை.

முறையின் ஒரு சிறு தூக்கி னெழு பரவையும்புக
முடித்து நிறத்தானிவன்

எனும் பிள்ளையின் வாக்கில் "பரவை" என்ற ஒரு சொல்லை ஏழு பொருளில் கையாண்ட சேக்கிழாரின் திறம் போற்றப்படுகிறது.

பேர்பரவை பெண்மையெனில் பெரும் பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர் பரவை ஆயினாள் திருஉருவின் மென் சாயல்
ஏர் பரவை யிடைப்பட்ட என்னாசை எழுபரவை

என்று சேக்கிழார் பாடியுள்ளார். 1. பரவை நாச்சியார் 2. பெரு+உம்பர்+அவ்வை= தேவருலகரும் விரும்பும் தாய் 3. ஆர்பு+அரவு+ஐ அல்குலுக்கு ஒப்புமை கூறும் ஆதிசேடனும் பாராட்டும் தலைவி 4. அரும்பர் அவை பற்கள் முல்லையரும்பு போன்றவை 5. இலக்குமியும் போற்றும் அழகுடையவள் 6. பரவு+ஐ=பரப்பினையுடையது. 7. கடல் என ஏழு பொருளை உள்ளடக்கிய இப்பாடல் சேக்கிழாரின் புலமை நயத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர்

சேக்கிழார் மேற்கண்ட நான்கு பெருமைகட்கு உரியவர் என்பதனைப் பிள்ளையவர்கள் ஒரு பாடலில் விளக்குகின்றார். பெரியபுராணம் விரிநூல் என்பதனை விளக்குதலைத் திருக்கூட்டம் தொடங்கி திருநாட்டுச் சிறப்பு ஈறாக, தொகையடியார் வரை விரித்துள்ளமையால் 'நூலாசிரியர் சேக்கிழார் என்பார் கூற்று மெய்ம்மையாகின்றது. "வாழ்க அந்தணர்" என்ற பாடலுக்கு, பன்னிருபாடல்களில் விளக்கம் கூறியமையால், நல்லுரையாசிரியராகவும், அரச காவலானது ஐவகையாக, அதாவது "அரசன் தன்னால், பரிசனத்தால், ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால் உயிர்கள் தம்மால்" ஏற்படுதல் கூடாது என்று அறிவுறுத்தும் நிலையில் நல்ல போதகாசிரியராகவும், "அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த திருவளர் ஒளிசூழ் சிற்றம்பலம்" என்பதனால் ஞானாசிரியனாகவும் விளங்கும் தகைமை பாராட்டுக்குரியது. இதனைப் பிள்ளையவர்கள் தம் பனுவலுள்.

நாடியவிரிநூல் சொற்றிடும்திறனால் நல் நூலாசிரியன்
நகுபாசுரம் முதல் உரை செய்தலினால் நவில் உரையாசிரியன்

நீடிய பரசமயக் குழிவீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய் நிலையால்
போதகாசிரியன்

நிகழ்தொறும், நிகழ்தொறும் ஆடிய ஞானத்திறன் உறலால்
ஞானாசிரியனும்

என்று குறிப்பிடுகின்றார்.

பல்துறையறிவு

நூல் முழுமையிலும் பல்துறையறிவின் செறிவு காணப்படுகின்றது. அப்பூதியடிகளில், மருத்துவ அறிவும், பிளாஸ்டிக் சர்ஜரி முறை கண்ணப்பர் புராணத்துள்ளும், மனுநீதி வழி சட்ட நுணுக்கமும், ஆனாயர் வழி இசை அறிவும், திருக்குறிப்புநாயனார் வழி வண்ணார் துணி வெளுத்தல்

தொழிலறிவும், கட்டட அறிவும், சோதிட, வான, ரேகை, சாத்திர அறிவும் எனப் பல்துறை அறிவும் மிளிர்கின்றன.

சிவனடியாரை சிவனாகப் பாவிக்கும் மனம்

இளையான்குடி மாறர் சிவனடியார்களை இல்லத்திற்கு அழைத்து வந்து வணங்கிப் போற்றியமையை,

> **கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே**
> **மண்டு காதலின் ஆசனத்திடைவைத்து அருச்சனை செய்தபின்**
> **உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா**
> **அண்டர் நாயகர் தொண்டரிச்சையால் அமுது செய்தளித்துளார்**

என்று தெளிவுற உயர்த்திக் காட்டியுள்ளார்.

அமங்கலச் சொல் புணர்க்காமை

ஒரு நூலின் சிறப்பு அதன் அளப்பரும் பெருமையென்பது அமங்கலச் சொல் புணர்க்காது அமைந்திருக்கும் திறனாகும். சேக்கிழாரின் பக்திப்பனுவல் அமங்கலச் சொல் புணர்க்கப் பெறாது அமைந்த சிறப்புடையதாகும். முத்தநாதன் மெய்ப்பொருளாரைக் கொன்றபோது,

> **புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் விளக்கும்போதில்**
> **பத்திரம் வாங்கித் தான் முன்நினைத்த அப்பரிசே செய்ய**

என்றும், ஏனாதிநாதரை அதிசூரன் கொன்றபோது,

> **முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்**

என்றும், திலகவதியாருக்கு நிச்சயித்த மணவாளர் கலிப்பகையார் போர் மேற்செல்லுங்கால் போரில் உயிர் துறந்தமையை,

> **உயிர்கொடுத்துப் புகழ் கொண்டார்**

என்றும், நூல் முழுவதும் அருமையான சொற்றொடர்களைக் கையாண்டுள்ளமை சேக்கிழாரின் புலமை நயத்திற்கு எடுத்துக் காட்டாகிறது.

செறிந்த சொற்றொடர்கள்

ஒரு நூலின் சொற்றொடரின் ஆழமும், நூலாசிரியனை படிப்போரின் கண்முன் கொணர்ந்து நிறுத்துதல் வேண்டும். திருநீலகண்டர் பரத்தைபால் பற்றுக்கொண்டு வாழ்ந்தமையை மிக நாகரிகமாக, "இன்பத்துறையில் எளியரானார்" என்ற தொடராலும், செயல்களில் காட்டாது வீணான பேச்சுக்களைப் பேசி காலத்தை அவமே போக்குதல் தகாது என்பதனை, "வித்தகம் பேச வேண்டாம் பணி செயல் வேண்டும் என்றார்"என்ற தொடராலும், மனுநீதிச் சோழனின் நீதி முறைமைக்கு மனமுகந்த இறைவன், இளவரசனையும், கன்றையும் உயிர்ப் பித்ததுடன் விடைமேல் காட்சி நல்கியமையைச் சேக்கிழார், "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளவோ" என்ற தொடராலும், நன்மையும் தீமையும் ஒன்றிலேயே அமையப் பெறுவதனை, "அருமைமணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்" என்ற தொடராலும் சேக்கிழார் பாடியுள்ள திறம் அவரது கவித்துவ மேன்மையை விளக்குவதாக உள்ளது.

சேக்கிழாரின் இலக்கணச் செறிவு

சேக்கிழார் தமது புராணத்துள் இலக்கணச் செறிவுடன் பாடல்களை அமைத்துள்ளார்.சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், சொல்லணி, பொருளணிகளைத் தக்க இடத்தில் தக்கவாறு அமைத்தல், சேக்கிழாரின் புலமை நுணுக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அப்பூதியடிகள் புராணத்துள் அப்பூதி அடிகளைப்பற்றிய விவரங்களை வினாவிய அப்பர்க்கு அப்பூதியின் வேலையாள் விடுத்த பதில் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகும்.

துன்றிய நூல்மார்பரும் இத்தொல்பதியின் மனையின்கண்
சென்றனர் இப்பொழுததுவும் சேய்த்தன்று நணித்தென்றார்

என்ற தொடரில் அந்தணர், தொல்பதியினர், தொண்டு செய்பவர், அருகிருக்கும் வீட்டிற்குத் தற்பொழுது சென்றுள்ளார். உடனே வந்துவிடுவார் என்ற பதில்களைப் பலவாறாக இத்தொடரில் கூறியுள்ளமை போற்றத்தக்கது.

சொல்லணி

மாடத்துக்குசித்திரமும், மாநகர்க்கு கோபுரமும் அழகு செய்வது போலவும் உடலுக்குயிர்போலவும் செய்யுளுக்கு அணி செய்வன சொல்லணி, பொருளணிகளாகும். இவ்வணிகளைச் சேக்கிழார் தம்பனுவலுள் பயின்று புராணத்தைச்சிறக்கச் செய்தமையைப் பிள்ளையவர்கள்,

ஈற்றுத்தலையொரு மவுலிபுனைந்தால் என்னச் சொல்லணிஒன்
றெய்திப் பொலியப் பொருளணி ஆயின

என்ற தொடரால் பெருமைப்படுத்துகின்றார்.

பண்தரு விபஞ்சி எங்கும், பாதசெம்பஞ்சி எங்கும்
வண்டறைகுழல்கள் எங்கும், வளரிசைக் குழல்கள் எங்கும்
தொண்டர்தம் இருக்கை எங்கும், சொல்வது இருக்கை எங்கும்
தண்டலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும்

என்று சேக்கிழாரின் சொல்லணிச் சிறப்பை அறியலாம்.

வம்புலா மலர்நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்
தெம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகற் கண்பரும் ஒக்குமால்

என்ற பாடலுள் காவிரியாரானது தனது அலைகளால் பூவினைக் கொண்டு வந்து கரைகளில் சேர்ப்பது, தொண்டர்கள் பூவினைக் கொண்டு சிவனை வழிபாடு செய்வது போலுள்ளது என்று வருணித்து ஒப்புமைப்படுத்துவதன்வழி பொருளணியின் சிறப்பினை உணரமுடிகின்றது. இத்துணைச் சிறப்புடைய பெரியபுராணத்தை "நோய்பிறவிபோக்குவார்க்கு நோற்றவர் புராணமல்லாது அமைதராதாம்" என்று பிள்ளையவர்கள் சிறப்பிக்கின்றார். மேலும் சாதகப் பறவைக்கு மழைத்துளியும், சகோரப் புள்ளிக்கு வெண்மதியின் நிலவொளியும், தாமரை மலருக்கு

செஞ்ஞாயிற்றின் திறல்ஒளியும், மேன்மைத் தவத்திற்கு அருளுடைப் பண்பும், அப்பண்பிற்கு சிறப்புறு காரணமாக உள்ள அன்புடைப் பண்பும், உயர் கல்விக்கு கூர்மையான இயற்கை யறிவும், நுண்ணறிவால் வரும் கல்வியறிவின் பெருமைக்கு உயர்நடை ஒழுக்கமும் எத்துணை இன்றியமையாததோ அத்துணை இன்றியமையாதது மாந்தர்க்கு இத்திருத்தொண்டர் புராணமென பிள்ளையவர்கள் உயர்வுவமைகளின் வழி சிறப்பிக்கின்றார். இத்துணைத் திறம்மிக்க புராணமருளிய சேக்கிழாரையும் பிள்ளையவர்கள் பொருள்துறைந்த உருவக உவமைகளில் பாராட்டுகின்றார்.

புண்ணிய முதலே, பொங்கு ஒளிமணியே, பொய்யாப்பெருவாழ்வே,
பொள்ளலில் முத்தே, கள்ளமில் வித்தே, புரையில் சுவைப்பாகே
தண்ணிய அமுதே மண்ணியல் மதியே, தமிழ் நாவலரேறே
பொத்திய மலநோய் சாடு பெரும்பகையே

என்று பலவாறாகச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

இங்ஙனம் சேக்கிழாரின் பெருமையும், பக்தியும், நுண்மான் நுழைபுலமும் அவர்தம் அருட் தொண்டர்களின் அருள்நலம் பழுத்த பக்தியினைப் பறைசாற்றும் ஞானப் பனுவலும் பிள்ளையவர்களால் சிறப்பித்துப் பாடப்படுவது சாலப் பொருத்தமென்பது வெள்ளிடை மலையாம்.

46. மகாவித்துவானும் வேதநாயகரும்

ச. பொ. சீனிவாசன்
திருவனந்தபுரம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பெருமைகள் பலவுண்டு. அவற்றுள், ஏடுகளில் இருந்த தமிழ் இலக்கியங்கள், அச்சில் ஏறியமையும், செய்யுளில் மட்டுமே வெளிப்பட்டு வந்த இலக்கிய வடிவம், புதினம், சிறுகதை, புதுக்கவிதை என்று புதுவடிவங்களில் பரிணமித்தமையும் குறிப்பிடத்தக்கவை. மேலும், நாளும் நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், நல்ல தமிழ் நூற்களை முதன் முதலில் அச்சேற்றிய சி.வை. தாமோதரம் பிள்ளையும், புதின இலக்கிய வகையை அறிமுகப்படுத்திய நீதிபதி வேதநாயகம்பிள்ளையும், சமயசமரசப் பாடல்களைப் பாடிய இராமலிங்க வள்ளலாரும், தூய தமிழ் நடையில் எழுதியும், சைவ நூற்களைத் திருத்தியும் வெளியிட்ட ஆறுமுகநாவலரும், இறைவன் முன் அனைவரும் சமம் என்னும் கருத்தை விளக்கிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனையின் ஆசிரியராகிய கோபாலகிருஷ்ண பாரதியாரும் தோன்றிப் புகழடைந்ததும் இந்நூற்றாண்டில்தான்.

இவர்களில், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தனக்கென்று தனித்த செய்யுள்நடையைக் கையாண்டவர், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த மாணவர்களை உருவாக்கியவர், தமிழறிஞர்களையெல்லாம் ஒருங்கு சேர்த்தவர், சைவமடங்களில் தமிழ்மொழிப்புலமையை வளர்த்தவர், சென்ற இடங்களிலெல்லாம் தலபுராணங்களையும், பல்வகைச் சிற்றிலக்கியங்களையும் பாடியவர். தனது சமகாலத்தில் வாழ்ந்த பல்வேறு தமிழ்ப்புலவர்களோடு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டவர்.

இவ்வாறு, மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், தானே நெருங்கித் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்ட அவருடைய நண்பர்களில் மாயூரம் நீதிபதி வேதநாயகம்பிள்ளை முக்கியமானவராவார். நற்பண்புகளாலும், அறிவாலும் ஒத்த இருவரும், ஒருவரை ஒருவர் பார்க்காமலே உள்ளன்பை வளர்த்திருந்தனர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பதற்கேற்ப ஒருவரை ஒருவர் காணும் வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தனர். இருவரும் சந்தித்துக் கொள்ள தருமபுர மடத்தின் 'வழக்கு' ஒன்று காரணமாக அமைந்தது.

கி.பி.1850-1857 வரையுள்ள காலக்கட்டத்தில் வேதநாயகர், திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக வேலை பார்த்து வந்தார். அக்காலத்தில் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் உள்ள தாயுமானவர் கோவில், தருமபுர ஆதீனத்தின் மேற்பார்வையில்

இருந்தது. கோயில் அலுவல்களைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டிருந்த கட்டளைத் தம்பிரான், ஆதீனத்தாரின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. இதனால் அவரை அப்பதவியிலிருந்து நீக்க ஆதீனத் தலைவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதற்காகக் கட்டளைத் தம்பிரான் மீதுள்ள குற்றங்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் எழுதி நீதி மன்றத்தில் கொடுக்க வேண்டியிருந்தது. அப்பொறுப்பினை ஆதீனத் தலைவர், மகாவித்துவானிடம் ஒப்படைத்திருந்தார். இப்பணியினைச் செம்மையாகச் செய்யக் கூடியவர் வேதநாயகரே என்பதை அறிந்து மகாவித்துவான் அவரைக்காணத் தானே சென்றார். வீட்டில் வேதநாயகரோடு கட்டளைத்தம்பிரானின் ஆட்கள், பெரும்பொருளைக் கொடுக்க எண்ணி தமக்குரிய ஆதாரங்களைக் காட்டிக் கொண்டிருந்தார்.

இதனைக் கண்ணுற்ற மகாவித்துவான், ஓரன்பர் மூலம்,

மெய்யே உருக்கொள் புகழ்வேத நாயக, வித்தகன்தன்
கையே உனைப்புகழ் வேன்புகல் வேறிலைக் கண்டுகொள்ளே

என்று முடியும் செய்யுளைக் கொடுத்தனுப்பினார். வேதநாயகர், சூழலையறிந்து, மகாவித்துவானை அழைத்து மிகப்பணிவோடு உபசரித்து மொழிபெயர்த்தும் கொடுத்தார். இதனால் இருவருக்குமிடையே நல்லதொரு நெருக்கம் ஏற்பட்டது.

வழக்கு முடிவு தருமபுர ஆதீனத்துக்குச் சாதகமாக இருந்தால், ஆதீனத்தார் பெரும்பொருளை வேதநாயகருக்குக் கொடுக்க முன்வந்தனர். அவரோ அதனை வாங்க மறுத்துவிட்டார். இந்நன்றிப் பெருக்கால் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும், வேதநாயகரின் பெருமைகளையும், அவரின் செய்யுள் சுவையுணர்திறத்தையும் பாராட்டி அவர் மீது கி.பி.1853-ல் "ஐந்திணைக்கோவை" என்னும் "குளத்தூர் வேதநாயகன் கோவை" யைப் பாடினார். 438 பாடல்களைக் கொண்ட இந்நூல் மிகுந்த இலக்கிய சுவையுடையது. இந்நூலில்,

கல்லாது நல்லவர்க்(கு) ஈயாது வீணிற் கழித்திநாள்
இல்லாது வாழும்புகழ் வேத நாயக வேந்தல்"

என்று வரும் அடிகள், அவரின் கல்விச் சிறப்பையும், ஈகைத் திறத்தையும் குறிப்பிடுவதினின்று இதனை நன்கறியலாம்.

மகாவித்துவான், தமிழறிஞர்களை ஒருங்கிணைக்கும் பெரும்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். திருவாவடுதுறை ஆதீனத்தின் 16-வது பட்டத் தலைவராக கி.பி. 1869-முதல் இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரும், நீதிபதி வேதநாயகம் பிள்ளையும் நட்புறவு கொள்ளக் காரணமாக இருந்தார். கவிதைகளால் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட அவர்கள் இருவரையும்,

கூடு புகழ்மலி திருவா வடுதுறைச் சுப்பிரமணிய குரவர் ஏறே
பீடு மலிவளக் குளந்தை வேத நாயக மேகம் செய்யும் பாமுன்

பாடு திறலாளர்பா உயிர்முன் குற்றிய லுகரம் படும்பா டெய்தும்
நீடு திறல்நின் புகழ்முன் ஏனையோர் புகழ்போலாம் நிகழ்த்தல் என்னே”

என்று பாடி நட்புறவினை வலுப்படுத்தினார்.

வேதநாயகர் அடிக்கடி திருவாவடுதுறை மடத்திற்கு வருவதுண்டு. அவ்வாறு வரும்பொழுதெல்லாம் சுப்பிரமணிய தேசிகர் குறித்து செய்யுட்கள் புனைந்து வருவார். அச்செய்யுட்களைக் கேட்டு, தேசிகரும், மகாவித்துவானும், பிறரும் மகிழ்வார்கள். சில நேரங்களில் பெரும் புலவரும் அச்சூழல் குறித்து பாடுவதுண்டு. வறுமையும் புலமையும் பிரிக்கமுடியாதது என்பது பண்டையோர் நம்பிக்கை. ஆனால் வேதநாயகர், இதற்கு மாறாக புலமையும் வளமையும் உடையவராகத் திகழ்ந்தார். இதனை மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

தருவேசிந் தாமணி யேயென்று பாவலர் சாற்றிடவும்
பொருவேது மின்றியுந் தானே தனக்கொத்துப் பூமிசையே
இருவேறு உலகத் தியற்கைக் குறளை எதிர்மறுத்து
வருவேத நாயக மால்நீடு வாழ்கஇம் மாநிலத்தே

என்று வியந்துபாடுகின்றார். மடத்திற்கு அவர் வந்திருந்தபோது பாடிய இப்பாடல்,

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு

என்ற திருவள்ளுவரின் ஊழ்வினைக் கோட்பாட்டிற்கு எதிராக அமைந்த வேதநாயகர் வாழ்க்கையின் மேன்மையினை உணர்த்துவதாகும்.

ஒருமுறை, தேசிகர், மகாவித்துவான், வேதநாயகர், மாவட்ட துணை ஆட்சியரான சூரியமூர்த்தியாபிள்ளை ஆகியோர் மடத்தில் உரையாடிக்கொண்டிருந்தனர். வேதநாயகர் தனது இனிமையான வித்தார, ஆசு கவிதைகளால் அனைவரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தார். அக்கவிதைகளில் மனதைப் பறிகொடுத்த மகாவித்துவான்.

நாமேவு வேதநாயக சுகுணன் சான்று எவரோ நவிறி என்னில்
கோமேவு பலர்புகழ் சூரியமூர்த்தி மன்னன் இது குறித்துக் கொள்வீரே

என்று நீதிபதியின் பண்பினையும், பாத்திறத்தையும் மக்களாட்சியின் மன்னராகிய சூரியமூர்த்தி குறித்துக்கொள்ள வேண்டுமாய் பாடியுள்ளார்.

இதே போல் தேசிகரின் அன்பினையும், மகாவித்துவானின் புகழினையும்,

கற்றவர்சி ரோமணியாம் மீனாட்சி சுந்தரமா கலைவல் லோய்!மா
சற்றவன் சுப்பிரமணிய தேசிகனைத் தினங்காண அவன்சொல் கேட்க
மற்றவனோ டுரைகூறப் பெற்றநின் காதுநா மண்ணிற் செய்த
நற்றவம் யாது? அறிதர என்கண் காதுநா அறிய நுவலுவாயே

மி.20.

என்று பல இடங்களில் வேதநாயகரும் பாடியுள்ளார். இம்மூவரின் நட்பும் ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாத முக்கோணச் சட்டகம் போன்றிருந்தது. இந்நட்பு, இம்மூவருடைய இறுதிக் காலம் வரையும் தொடர்ந்திருந்ததை வரலாறு புலப்படுத்துகின்றது.

பெரும்புலவர், நீதிபதியின் உயிர் நண்பராக இருந்தமையால் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். அப்பொழுதெல்லாம் இருவருமே மற்றவரின் நற்பண்புகளையும், திறத்தையும் வியந்து பாடுவதுண்டு. அப்பாடல்கள், அவர்களின் உண்மை அன்பின் வெளிப்பாடாகவே இருக்கும்.

கனியிற் பொலிபொழில் சூழ்குளத் தூரன் கரிசறுத்து
அவனியிற் பொலியும் புகழ்வேத நாயக வள்ளல் நட்பு
நுனியில் கரும்பு தினல்போல் இனிக்கும் நுவலரிய
பனியில் பொலிபிறை போல் வளரா நிற்கும் பான்மதியே

என்ற மகாவித்துவானின் பாடல், அவர்களின் உறவு "பிறைமதி நிறைநீர நீரவர் கேண்மையாக" வளர்ந்து நின்றமையைக் காட்டும்.

கி.பி. 1858-ஆம் ஆண்டு சென்னை செல்லும் நிமித்தமாக மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சீர்காழிக்கு வந்தார். அக்காலக்கட்டத்தில் வேதநாயகரும் சீர்காழியில் நீதிபதியாக இருந்தார். அவர் மகாவித்துவானை வரவேற்றுச் சிலகாலம் தங்கியிருக்கச் செய்தார். அப்பொழுது, தாம் அவ்வப்போது எழுதிவைத்திருந்த நீதி கருத்துக்கள் அடங்கிய பாடல்களை அவரிடம் காட்டினார். அப்பாடல்களின் கருத்துச் செறிவினையும், நீதியையும் கண்ட மகாவித்துவான், அதனைத் தொகுத்து நூலாக வெளியிடத் தூண்டினார். இந்நூல் கி.பி.1859-ஆம் ஆண்டு முதற்பதிப்பாக அச்சில் வெளிவந்தது. இந்நீதிநூலுக்கு சிறப்புப்பாயிரம் எழுதிய மீனாட்சிசுந்தரனார்,

ஓதிநூல் உணர்ந்த குளத்தூர் வேத நாயகிமால் உவப்பிற் செய்த
நீதிநூல், தேவியல், ஆசிரியன்இயல் உணர்த்துதலால் நிகரில் ஞானச்
சோதிநூல் எனச்சொல்லலாம் இந்நூல்முன் எந்நூலும் சொல்லிற் காநூல்
பாதி நூல் முக்கால்நூல் உவட்டுநூல் சிலம்பிநூல் பத்தி நூலே

என்கிறார். இது நீதிநூலின் தனிச்சிறப்பைக் காட்டும் மிகச் சிறந்த பாராட்டாகும்.

இதனைக் கேட்ட வேதநாயகரும்,

வித்தகமார் மீனாட்சி சுந்தர வேளே ஒருநூல் விளம்பும் என்னைப்
புத்தமுதார் நின்வாக்கால் துதித்தனை நீ பாடியது இப்பொருள் நூல் ஒன்றோ
எத்தனையோ கோவைகள் மற்றெத்தனையோ புராணம் இன்னும் எண்ணில் நூல்கள்
அத்தனையும் இத்தனை என்று எத்தனைநா இருந்தாலும் அறையப்போமோ?

என்று தனது நன்றியைக் கவிதையாக்கினார். இக்கூற்று, மகாவித்துவான் பாடிய எண்ணற்ற நூற்களின் சிறப்பைக் காட்டும் சான்றாகும்.

சீர்காழியிலிருந்த புலவர்களும், செல்வந்தர்களும், மகாவித்துவான் எழுதிய குளத்தூர்க் கோவையின் சுவையைக் கண்டு, இதே போன்றதொரு கோவையை இப்பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். ஆனால் அவரோ சென்னை சென்றுவிட்டுவந்து செய்வதாகக் கூறினார். மகாவித்துவானுக்கும், நீதிபதிக்குமிடையில் இருந்த நட்பின் ஆழத்தை உணர்ந்த அவர்கள், வேதநாயகரிடம் கூறினர். அவரும் மகாவித்துவானிடம் அந்நூலினைச் செய்தால் உண்டாகும் பயனையும், மகிழ்ச்சியையும் எடுத்துக் கூறி எழுத ஒப்புக் கொள்ளச் செய்தார்.

மகாவித்துவான், நாள் தோறும் பல பாடல்களை எழுதி, நீதிபதியிடமும் காட்டிவந்தார். சில மாதங்களில் சீர்காழிக்கோவை பாடி முடிக்கப்பட்டது. அரங்கேற்றம் சீர்காழியிலுள்ள திருப்பிரமபுரேசர் கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் நடைபெற்றது. அரங்கேற்றத்தின் இடையில் சிலர், தேவையற்ற கேள்விகளைக் கேட்டனர். தக்க பதிலளித்தும் வீண்வாதம் செய்துகொண்டிருந்தனர். அரங்கத் தலைவராக இருந்த வேதநாயகம்பிள்ளை, அவர்களைச் சேவகர்கள் மூலம் வெளியேற்றினார். அதன்பின் அரங்கேற்றம் நடைபெற்ற ஒவ்வொருநாளும், வந்து மகாவித்துவானைக் குறித்தும், அவர்பாடல்கள் குறித்தும் ஒவ்வொரு பாடல் பாடினார். அவற்றுள் கிடைத்த இருபது பாடல்களை மட்டும் உ.வே.சாமிநாதையர், மீனாட்சி சுந்தரம்பிள்ளை பிரபந்தத் திரட்டில் தொகுத்துக் கொடுத்துள்ளார்.

சீர்காழிக்கோவையின் அரங்கேற்ற இறுதியில் கி.பி.1861-ஆம் ஆண்டு வேதநாயகர், அந்நூலின் பொருட்சுவையும், நுணுக்கமும் புலப்படும்படியாக,

> பன்னூலும் ஆய்ந்து ஆய்ந்து ஓர்பயன் உறாது உளம்வருந்தும் பாவலனே
> நன்னூல் ஓர் மீனாட்சி சுந்தரமால் ஒரு கோவை நவின்றான் காழிக்கு
> அந்நூலுள் ஒருபாவில் ஓர் அடியில் ஒருசீரை ஆய்வீராயின்
> எந்நூலும் கற்றவராய் இகபரமும் பெற்றவராய் இலகுவீரே.

என்று சிறப்புப் பாயிரம் பாடினார், மேலும், "ஈசரே விதவிதமான பாமாலைச் சூடியிருப்பீர் அவற்றிலே எதுவும் இந்தக் காழிக்கோவையைப் போல் உண்டா? நீதிபதியாகிய என்முன் சத்தியமாகச் சொல்லும்" என்னும் பொருள் பொதிந்த பல பாடல்களைப் பாடினார்.

வேதநாயகரின் அன்புடைமையினை உணர்ந்த மகாவித்துவானும்,

நாட்டுக்கு நல்ல குளத்தூர் வேதநாயக நன்நாம மாலே
வீட்டுக்கு வாயிலெனும் காழிக்கு கோவை எனைவிளம்பச் செய்தே
ஏட்டுக்கும் அடங்கதே துதிகவிகள் சொற்றனை நின் இயற்பாட்டுள் ஓர்
பாட்டுக்கு நான் செய்த தொன்றோ பல்செய்தாலும் பற்றா அன்றே

என தனது நன்றியை வெளிப்படுத்தினார். சீர்காழிக்கோவை 534 செய்யுட்களைக் கொண்டது. இலக்கண விளக்கத்தின் விதியைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலில், பிற கோவைகளில் இல்லாத பலதுறைகள் காணப்படுகின்றன. இதிலுள்ள உவமைகள் சைவசமயத் தொடர்பாகவே அமைந்துள்ளன.

கி.பி. 1860-ல் நீதிபதி வேதநாயகர் மாயூரத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார். பின்னர் தனது இறுதிக்காலம் வரை அங்கேயே இருந்தார். அக்காலத்தில் மகாவித்துவானும் அதே ஊரில் வசித்து வந்தார். கி.பி. 1876-78 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தாது மற்றும் ஈசுவரவருடப் பஞ்சம் பல ஏழை மக்களின் உயிரைப் போக்கியது. அற்றார் அழிபசி தீர்த்தல் பொருள் பெற்றார் கடமையென்பதை உணர்ந்த வேதநாயகர், அதனைப் போக்க மயிலாடுதுறையில் கஞ்சித் தொட்டியைத் தொடங்கினார். பசிப்பிணி போக்கும் மருத்துவராகிய நீதிபதியின் இவ்வரிய செயலை நேரில் கண்ட மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்,

வாயுதவும் இனியபத நுகர்ந்தறிவு பெருத்திடலான் வானந் தாங்கா
தாயுதவு கருணையினுங் கையுதவும் இனியபதம் அவாவி யார்ந்து
வேயுதவும் உடல்பெருத்த லான்மண்ணுந் தாங்காது மெலியா நிற்கும்
மீயுதவும் புகழ்வேத நாயகமால் இளைப்பாற்றும் விதமெற் றாமே

என வியந்து பாடியுள்ளார்.

வேதநாயகர், கோபால கிருஷ்ணபாரதியாரின் நட்பால் தனக்கு ஏற்பட்ட இசைப்புலமையைப் பயன்படுத்தி பல கீர்த்தனங்களைப் படைத்திருந்தார். அக்கீர்த்தனங்களை இராமசாமி ஐயங்கார் என்னும் வழக்குரைஞர் மூலம் மகாவித்துவானுக்குப் பாடிக்காட்டச் செய்தார். கீர்த்தனங்களில் நீதிபதி, தமது பண்புகளைத் தாமே இகழ்ந்து பாடியிருந்தார். இதனைக் கேட்ட மகாவித்துவான், ஒரு விருத்தமும், ஒரு கீர்த்தனமும் பாடினார். அதில்,

என்னகற் றான்ஆதி சேடனே - இவற்கு
    எதிருறு வான்எனின் மூடனே
பன்னும் இவனிடைக் காடனே - மிகு
    பல்கலை யோர்ந்தவி சேடனே
பொழிந்தானே பதமாரி வேதநாயக
    பூபதி அருள்வாரி

என்று அவரின் நற்பண்புகள் எல்லாவற்றையும் இசையோடு எடுத்துக்காட்டியுள்ளார். இக்கீர்த்தனை, இருவருக்குமிடையிலிருந்த ஆழ்ந்த நட்பின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றதெனலாம்.

உண்மை நட்பு, காலத்தை வென்று நிற்பது, பலனை எதிர்பாராதது இதனை இவ்விருவர் வாழ்க்கையில் காண முடிகின்றது. காலச்சுழற்சியில் மகாவித்துவான் மறைந்துவிட்டார். அவர் குடும்பம் வறுமையில் வாடியது. அவரது மகனாகிய சிதம்பரம் பிள்ளையின் வறுமையைப் பலர் மூலம் கேள்வியுற்ற நீதிபதி வேதநாயகர் மிகவும் வருந்தினார். அவரின் நிலைகுறித்து சுப்பிரமணிய தேசிகருக்கு 5 பாடல்கள் எழுதியனுப்பினார். அதில்,

கந்தனை நேர்சுப் பிரமணி யைய கவிஞரெலாம்
வந்தனை செய்தற் குரியன் பெரியன்மண் வாழ்வை விட்டென்
சிந்தனை வாழ்பவன் மீனாட்சி சுந்தரச் செல்வனென்பான்
மைந்தனை நிந்தனைப் பஞ்சம் உறாவண்ணம் வாழ்வருளே

என்று தேசிகரைக் கேட்டுக் கொண்டார். அவரும் வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தார்.

வேதநாயகர், அதோடு நில்லாமல், சிதம்பரம்பிள்ளைக்கு ஆங்கிலம் தெரியுமென்பதால், மாவட்டத் துணை ஆட்சியராக விருந்த முருகேசம் பிள்ளை என்பவரிடம் சொல்லி, மாயூரம் வட்டத்திலுள்ள 'கடம்பூர்' என்னும் ஊரில் கணக்கு வேலை வாங்கிக் கொடுத்தார். இச்செயல், பாரி இறந்தபோது அவன் மகளிரை மணஞ்செய்து கொடுத்த கபிலரின் உயிர் நட்போடு இணைத்துக் காணத்தக்க உயர்வும், சிறப்பும் உடையது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், நீதிபதி வேதநாயகரும் ஒரே காலத்தவர்கள் திருச்சிராப்பள்ளியை அடுத்தடுத்துள்ள ஊரினர், இருவரும் திரிசிரபுரத்தில் குடியேறியவர்கள், பின்னர் ஒரே மாதிரியாக சீர்காழியிலும், மாயூரத்திலும் வாழ்ந்தவர்கள், இருவருமே திருவாவடுதுறை ஆதீனத்தின் மீதும், அதன் தலைவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் மீதும் பற்றுக்கொண்டவர்கள், இனிய எளிய கவிதைகளைப் படைக்கும் இயல்பினர், தமிழ்மொழி, இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள், முன்னவர் கம்பருக்குப் பின் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடிக் குவித்தவர்., பல்வகைச் சிற்றிலக்கியங்கள், தலபுராணங்கள் படைத்தவர். பின்னவர் 'புதினம்' என்னும் புதுவகை இலக்கியவடிவம் தழைத்தோங்க வழிகோலியவர். மகாவித்துவான், எங்கெங்கு தமிழ் மாணவர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று பாடம் சொன்னார். நீதிபதி, எங்கெங்கு தமிழ் அறிஞர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று பாடி உரையாடினார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தீவிர சைவ சமயப் பற்றுடையவர், வேதநாயகர், தீவிர கத்தோலிக்க கிறித்தவ சமயப் பற்றுடையவர், இருந்தபோதிலும் கிழக்கும் மேற்கும் (சைவமும் கிறித்தவமும்)இணைந்து விளங்க, இருவரின் தமிழ்ப்பற்றும், புலமையும், நட்பும், உயர்ந்த பண்புகளுமே காரணங்களாகத் திகழ்ந்தன. "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?"

47. இயற்கை வருணனைகள்

ம. சுந்தரமூர்த்தி
கோவை

இயற்கை வருணனை
பெருங்கெடுத் துவருபா லாற்றலை
பிறங்குவளை வீசவலீதத்
துறைக்கண்ட நிமிர்கந்தி யஞ்சோலை தவழ்தருந்
தொண்டை வளநாடு

மிகுந்த வேகத்துடன் பெருகிவருகின்ற பாலாற்றின் அலையால் வெண்மையான சங்குகள் சிதறடிக்கப்படுகின்றது. இச்சங்குகள் பாலாற்றின் கரையோரமுள்ள பாக்குமரத் தோப்பில் உள்ள சோலைகளில் தவழ்கின்றது. இத்தகைய வளம் நிறைந்த நாடு தொண்டை வளநாடு என்று சேக்கிழார் பிள்ளைத் தமிழில் ஆசிரியர் வருணிக்கின்றார்.

வாய் மலர்ந் தவவாவிவாய்
இருந்துசூழ் கொழவுண்டு புண்டரீ கத்தின்வா
யியைபுல வறத்துவட்டி
யிருஞ்சங் கனம்பே டெனத்தழவி நாணமுற்
றியல்பேடு மற்றென்றுனஞ்
செருந்து சூழ் குன்றையம் பதியருண் மொழித்தேவ

அன்னப் பறவையானது நீர்நிலையிலே தமது இரைக்காகக் காத்திருக்கும் வேளையில் அங்கு வருகின்ற கொழுத்த மீனினைக் கொத்தி உண்கிறது. அவ்வாறு உண்ணும்போது தமது அலகில் பொருந்திய புலாலை பக்கத்தில் உள்ள தாமரை மலர்களில் நீக்கித் துவட்டிக் கொண்டு அங்குள்ள பெரியசங்குகளை தமது துனை என்று தழுவும் போது அவை சங்கு என்றறிந்து நாணமடைகின்றது. பின் தனது துணையானது தன்னிடம் வரும்போது சங்கு என்று கருதி தழுவாமல் இருக்கிறது. செருந்து என்னும் மரத்தின் சிவந்த வட்டமான மலர்கள் நிறைந்துள்ள குன்றையம்பதி என்னும் நாடு என்று நாட்டின்வளம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

நந்தி என்னும் மலையில் வசிக்கக் கூடிய வசிட்ட முனிவரது காமதேனு என்னும் பசுவானது பொழிகின்ற பாலானது தொண்டை நாட்டில் ஆறுபோல ஓடி, கிணறு, ஏரி, குளம், வாய்க்கால், ஓடை தடாகம் முதலியவற்றில் பாலாறு போல் பாய்வதால் திருமால் துயிலக்கூடிய இடம் இதுவா அல்லது அதுவா? என்று வியக்கக்கூடிய அளவிற்கு செழுமை நிறைந்த நாடு தொண்டைவளநாடாகும்.

திருவிழாக்கள் பல நடைபெற்றுக்கொண்டிருக்கும் குன்றத்தூரிலே எல்லாத் திருமடங்களிலும் சோறு மணம் வீசும். அங்குள்ளவர்களின் மனங்களில்

எல்லாம் குற்றமில்லாத தூய்மை மணம் வீசும். அவர்களின் உடைகளில் எல்லாம் பொன்இழைமின்னும். அங்குள்ளவர்களின் தோள்களில் மாலை தங்குவதால் அதன் மணம் வீசும். வயல்களிலெல்லாம் தாமரை முதலிய மலர்கள் இருப்பதால் தேன் மணக்கும். வீடுகளில் செல்வ வளம் கொழிக்கும். மேடைகளில் பாடக்கூடிய பாடல்களில் கருத்தாழம் மிகுந்திருக்கும். ஓயாமல் வேள்விக் குண்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். சிறப்பு மிகுந்த ஊர் குன்றத்தூர் ஆகும் என்று இதன் சிறப்பு வருணிக்கப்படுகின்றது.

அளவில்லாத பெருமை பொருந்திய கலப்பையில் உள்ள பேழியிணைத்தார் என்று சொல்லக்கூடிய கோலுடன் பிடிக்கும் சிவந்த கைகளை உடையவன் என்றும், கரும்பின் அழகிய சாற்றினை பொழியும் இனிய கனி போன்ற வாயைக் கொண்டவன் என்றும் பாட்டுடைத்தலைவன் வருணிக்கப்படுகிறான்.

மலரிற் காலாறு பாயவம் மலர்மதுப் பாயக்
கமழ்ந்தபட் டத்தி னின்றுங்
கற்பங் கழத்தொடிய வாளைபா யப்பொய்கை
கருமேதி பாய

பூக்களில் வண்டுகள் அமர்வதனால் தேன் பாய்ந்து குளத்திலே கலக்கிறது. அதனால் குளத்தில் உள்ள வாளை மீன்கள் விண்ணுலகத்தில் உள்ள கற்பக மரம் ஒடியும் அளவிற்குப் பாய்கின்றது. அதனால் கருமையான எருமைகள் பொய்கையை நோக்கி ஓடி வருகின்றது. இத்தகைய வளமான பாலாறு வாய்க்கால் வழியாகத் தொண்டை நாட்டில் பாய்ந்து வளம் செய்கின்றது. எருமை தடாகத்தில் பாய்ந்து வர அதனைக் கண்ட வாளைமீன் சினம்கொண்டு அருகிருந்த தென்னை மரத்தின் மீது மோதுகின்றது. அவ்வாறு மோதுவதால் அம்மரம் சிந்திய தேங்காய் எருமையை தடாகத்தை விட்டு விரட்டுகிறது. எருமை தடாகத்தில் படிந்த அசுத்தம் நீங்க அமுத மழை பொழிகின்றது. அத்தகைய சிறப்பான தொண்டை வளநாடன் என்று ஆசிரியர் வருணிக்கின்றார்.

மிக்குவரு வெள்ளத் தெதிர்ந் தேறு பருவரால்
வேகத் துருண்டு போதும்
வேழத்தை முட்டுபு வெகுண்டு வெடி கொண்டுதாய்
விண்ணந் துளைத்து விரைவிற்
புக்குமகிழ் மழவிளங் கன்றது தெறித்தெழீ இப்
போயதெங் கென்று நாடும்
புந்திப் பெருங்காம தேனுவின் மடித்தலைப்
பொம்மல் குழை வெய்த முட்ட

மிகவேகமாக வரக்கூடிய வெள்ளத்தில் எதிர்ந்தேறும் வரால் மீனானதுஅந்த வெள்ளத்தில் உருண்டு வரக்கூடிய யானையை முட்டுகின்றது. இதனால் வரால் மீனானது தாவி வானின் மேலிடத்தை துளைத்துக் கொண்டு தெய்வ உலகம் செல்கின்றது. அங்கு கன்றைக்

காணாத காமதேனுவின் மடித்தலத்தை வரால் மீன் முட்ட, கன்று என்று அப்பசு பொழிகின்ற பாலானது பாலாறுபோல் வரால் மீன் செய்த துளை வழியே இறங்கி வளப்படுத்தும் தொண்டை நாடு என்றும்,

பெரிய கருமையான எருமைகள் சுரசுரப்புடைய தனது பெரிய கொம்பினால் எளிதில் நீக்கமுடியாத வேலியை அகற்றி கரும்பு வயல்களில் புகுந்து கரும்புகளைத் தின்கிறது. அப்போது கரும்பஞ்சாறானது எருமையின் வாய்வழியே வழிகின்றது. அச்சாறானது அந்தக் கரும்புத் தோட்டத்தை நிரப்பியும், அருகிலுள்ள வாழைத்தோட்டம் மற்றும் நெல்வயல்களை எல்லாம் நிரப்பியும் கடலில் கலக்கின்றது. இதனால் கடலின் உவர்ப்புத் தன்மை மாறி இனிமை பெறுகின்றது. கடலில் நீராடுபவர்கள் அழகிய தமிழ் வழங்கும் நாட்டிலிருந்து வருவதால் இனிமையாய் விளங்குகிறது, என்று உண்டு மகிழ்கின்றனர் என மருதநிலத்தின் வருணனையை ஆசிரியர் சிறப்பாக உரைக்கின்றார்.

செறிவாக வளர்ந்துள்ள கரும்புத்தோட்டத்தின் இடையே விளைந்துள்ள முத்தினையும், செழுமையான பாக்குச் சோலையிலே விளைந்துள்ள முத்தினையும், பெரிய தந்தத்தை உடைய யானைகள் மறையும்படி வளர்ந்துள்ள நெல் வயல்களில் விளைந்துள்ள முத்தினையும், வாழைத்தோட்டத்தில் விளைந்துள்ள முத்தினையும், பாலாற்றில் உள்ள மாணிக்கங்களையும் தொழிற் செய்வோர் வாரிச் சுமந்து வந்து தமது வீட்டில் தனித்தனிக் குவியலாகக் குவித்து வைப்பர். அக்குவியல்கள் மீது ஏறிக் கூத்தாடி கையில் அள்ளி ஒன்றாக்கி விளையாட வாராய் என்று தொண்டை வள நாட்டின் இயற்கை வளத்தைக் கூறி சேக்கிழாரின் பிள்ளைத் தமிழை ஆசிரியர் விளக்குகின்றார்.

தடாகத்தில் உள்ள மலர்கள் தேவைன் செ...கின்றது. அப்போது அங்கு நீராட வந்த மகளிர் இது நீரல்ல என்று நீங்குகின்றனர். அப்போது தடாகத்தில் இருந்த அன்னப்பறவைகள் அலைவீச்சினால் எழுந்து பறக்கின்றது. அப்பறவையின் உடம்பிலிருந்து சிந்திய தேனால் நனைந்த பெண்கள், வெண்மையான முகில் கொண்ட ஆகாயத்தில் தேன்மழை பொழிகின்றதே, என்று வியப்பாகப் பார்த்தனர். அத்தகைய சிறப்பைக் கொண்ட குன்றையம்பதி என்னும் நாட்டின் தலைவன் என்று சேக்கிழார் பிள்ளைத் தமிழில் இயற்கை வருணனை வருணிக்கப்படுகின்றன.

பாலாறு ஊற்றெடுத்துப் பாய்வதனால் பெரிய யானைகள் தம் தும்பிக்கையை உயர்த்தினால் கூட அதுவும் மறையும்படி நெருங்கி வளர்ந்துள்ள நன்னெல்கள் செழித்திருக்கும் சிறந்த வயல்களை உடைய தண்டக நாடன் என்றும், உலகமெல்லாம் கண்டு வியப்படையக்கூடிய அளவிற்கு கரும்பும், வாழைத்தாறும், பசுமையான பாக்குமரமும் விளங்கக்கூடிய இளநீர்க்காயையுடைய தென்னையும் இந்திரனின் அரசவைக்கு அணி செய்யும் படி வானுலகம் வியக்கும் வகையில் உயர்ந்து விளங்கக் கூடிய தண்டக நாட்டை உடையவன் என்றும், மயிலிறகின் அடிப்பகுதி போன்ற பல்லினைப் பெற்றிருக்கின்ற

மென்மையான பெண்கள் கூடி விளையாடும் சோலையில் கரிய வண்டுகள் ஓசைசெய்கின்ற இராகத்தைக்கேட்டு, அள்ளிக் கொடுக்கின்ற பொற்காசுகளைப் போல செருந்தி என்னும் மரமானது பொன்நிறமான பூக்களைப் பூத்திருக்கும் வளமான நாடு என்றும், வாழை மரத்தின் குருத்தானது சந்திரனின் நடுவிடம் வரை வளர்ந்து இருப்பதால் அது சந்திரனின் குடைக்கு ஒப்பற்ற குடைக்காம்போ என்று வியக்கும் வகையில் அமைந்துள்ளது. அத்தகைய செல்வ வளங்கள் நிறைந்த தண்டக நாடன் என்று ஆசிரியர் வருணிக்கின்றார்.

ஆறுகளில் இருந்து தெரிக்கக் கூடிய சிவந்தமணிக்கல்லும், வெள்ளையான வயிரக்கல்லும் ஆற்றின் கரையிலே காணப்படுகிறது. அங்கு ஆற்றோரத்தில் புல்லைமேய வருகின்ற வளைந்த கொம்பையுடைய எருமையானது அதனைக் கண்டு அஞ்சி கத்திக்கொண்டு ஓட்டமெடுக்கின்றது. இத்தகைய வளம் கொண்ட நாட்டின் தலைவன் என்று கூறப்படுகின்றது.

புழங்குங் கதிர்ப்பருதி யெழுமுறுக் குடைமுகப்
  புண்டரீ கத்தடத்துப்
பொலிதரச் சூழ்ந்துநிற் கின்ற தரு விடபமலர்
  பொழிமது முழுக்கவீழ்ந்தே
எழுங்குங் குமத்தோளிணைந்த முலையார்கள் கன
  விரதமன் றென்று நீங்க
வெளிதிரை கொளுங்காலை யலகிலோ திமமாங்க
  ணெய்திப் படிந்துளையா
அழுங்குந் தரத்தவாய் மேலெழ முன் னீங்கியோ
  நாகமுழு வது நனைந்தே
யருமைவெண் முகில் செய்ய தேன் பொழித லெனவியந்
  தாகாய நோக்கி நிற்கும்
செழுங்குன்றை யம் பதிச் சேவையர் குலாதிபன்

தடாகத்தில் உள்ள மலர்கள் தேனைச் சொரிகின்றது. அப்போது அங்கு நீராட வந்த மகளிர் இது நீரல்ல என்று நீங்குகின்றனர். அப்போது தடாகத்தில் இருந்த அன்னப்பறவைகள் அலைவீச்சினால் எழுந்து பறக்கின்றது. அப்பறவையின் உடம்பிலிருந்து சிந்திய தேனால் நனைந்த பெண்கள், வெண்மையான முகில் கொண்ட ஆகாயத்தில் தேன்மழை பொழிகின்றதே, என்று வியப்பாகப் பார்த்தனர். அத்தகைய சிறப்பைக் கொண்ட குன்றையம்பதி என்னும் நாட்டின் தலைவன் என்று சேக்கிழார் பிள்ளைத் தமிழில் இயற்கை வருணனை வருணிக்கப்படுகின்றது.

48. பிள்ளையவர்கள் வாழ்க்கையும் தலபுராணங்களும்

கோ. சுப்பிரமணியனார்
திருவையாறு

"திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்துப் பெருங்கவிஞர் கோவாகத் திகழ்ந்தவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பர்" என அழைக்கப்பெறும் சிறப்பிற்குரியவர்கள், தமிழ்ப் புலவர் உலகில் தனிப்பெரும் ஆற்றலுடன் விளங்கியவர்கள், இவர்கள் இயற்றிய நூல்கள் ஏராளம் ஏராளம் உலா. பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம், என சிற்றிலக்கிய நூல்கள் பலவற்றுடன் தலபுராணங்கள் மட்டமே இருபத்திரண்டாகும். தமிழில் இவ்வளவு தலபுராணங்கள் இயற்றிய புலவர் இதுகாறும் எவரும் இல்லை என்றே உறுதியாக அறுதியிட்டுக் கூறலாம். காரணம். 21ஆம் வயது முதற்கொண்டு பலரிடம் புராணநூற்கள் பாடம் கேட்டவர்கள். கந்தபுராணம் பாடிய கச்சியப்பமுனிவரிடமும், காஞ்சிபுராணம் பாடிய சிவஞான முனிவரிடம், பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். அதனால்தான் அவர்கள்தம் பேராற்றல் முழுமையாக இவர் மாட்டுப்பதிந்து, புராண நூற்களை நிறையத்தந்தன போலும். இவர்களைப் பற்றி மகாமகோபாத்தியாய திரு உ.வே.சா ஐயர் அவர்களே "தமிழ்த்தலபுராண வரலாற்றில் இவரைப்போன்று இவருக்கு முன்பும்-பின்பும் இவ்வளவு நூல்கள் இயற்றிய புலவர் எவருமே இல்லை-என்பதை இப்பெரும் புலவரின் சிறப்பாகும்" என்பார்கள். அக்காலத்து, 'பிள்ளைவாள்' என்றால் திருமிகு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களையே குறிக்கும். இவர்கள்தம் 30ஆவது வயது தொடங்கி (1845) அவர்களது 58ம் வயது வரை (1873) 22 தலபுராணங்கள் இயற்றியுள்ளார்கள்.

எனவே, நம் தலபுராண ஆய்வில் பிள்ளையவர்களின் முதல் நூலான தியாகராஜ லீலையையும், இடையில் உறையூர்ப் புராணத்தையும் இறுதி நூலான, திருப்பெருந்துறை புராணத்தையும்' எடுத்துக் கொள்வோம்.

தலபுராணம்

'தலம்- தெய்வீகத்திருவிடம். புராணம்- பழைய வரலாறு' இதனைத் "தொன்மம்" என்று தொல்காப்பியம் கூறும்.

பழமையிலிருந்துதான் புதுமை பிறக்கிறது. நம்நாட்டுச் சமயநிலையை உணர்த்த வல்லது புராண நூற்கள் ஆகும். பழமைக்குப்பழமையாய் இறைவன் விளங்குகிறான் என்பதை உணர்த்த வல்லது புராணங்கள் ஆகும். தலப்பெருமையையும், கோவில் மூர்த்தச் சிறப்பினையும் உணர்த்தவல்லது. பரமன் அருள் பெற்ற முன்னோர் பலரது வரலாற்றைப் பின்னோராகிய நாமும் உணர்ந்து நடப்பதற்கு உதவுவன . புராணங்கள்

ஆகும். மேலும், சாத்திர உண்மைகள் பலவற்றையும் தத்துவங்கள் பலவற்றையும் உள்ளடக்கி அவற்றைக் கதை வடிவில் நமக்கு அளித்து எளிதில் அதன் உண்மைகளை உணர்ந்து அதன்படி வாழ்வதற்கு வழிவகை செய்ய வல்லனவும், புராணங்கள் ஆகும். புராணங்கள் மக்களின் மனமாற்ற மருந்து மெய்ப்பொருள் உண்மைக் கொள்கைகளை உணர்த்த வல்லனவும், புராணங்களே எனலாம்.

ஆதி புராணவரலாறு

திருக்கயிலாய மலையில் எழுந்தருளி இருக்கும் எல்லாம் வல்ல சிவபரம் பொருள் திருநந்தி தேவர்க்குப் பதினெண்புராணங்களையும், திருவாய் மலர்ந்தருளினார். அவர் சணற்குமார முனிவர்க்கு அருளிச் செய்ய, அவர் வியாசமுனிவருக்கு விளம்ப, அவர் சூதமுனிவருக்குச் சொல்ல, சூத முனிவர் நைமிசாரண்யவாசிகளாகிய 'அத்திரி' முதலான முனிபுங்கவர்களுக்கு உரைத்தருளினார் என்பதே - ஆதிபுராண வரலாறாகும். இதனை அடியொற்றியே அனைத்துப் புராணங்களும் அமைக்கப் பெறும்.

புராணம் தரும் உண்மை

'சமய உண்மைகள் நம் நாடு முழுவதும் பரவி நிற்பதற்குக் காரணம் புராணங்களே அதனால்தான் எண்ணிறந்த சமய நோக்குடைய புராணங்கள் பெருகின. அதனால் விண்ணுலகம்-மண்ணுலகம் தம்மில் கலந்து உறவாடின. தேவர்களும், முனிவர்களும் விஞ்சையரும் நம் நாட்டுப் பண்பாடு அமைந்த மக்களாக வாழ்ந்தனர்' என்பன போன்ற பல உண்மைப்பொருள்களைப் புராணங்கள் நமக்கு அறிவுறுத்திக் கொண்டு இருக்கின்றன எனலாம்.

1. தியாகராஜலீலை அல்லது தியாகராஜர் திருவிளையாடல்

இந்நூல் இயற்றத் தொடங்கிய காரணம் - காலமும் சூழலும்.

வாழ்வியல் நிகழ்ச்சி

ஒரு சமயம் இவர்தம் 30ஆம் வயதில் (குரோதி வருஷம் கி.பி. 1845) பங்குனித் திருவிழாவிற்குத் திருவாரூர் சென்றிருந்தார்கள். ஆரூர்க்கோயிலில் ஆயிரக்கால் மண்டபம் எனும் தேவாசிரிய மண்டபம் வரலாற்றுச் சிறப்புமிக்க தெய்வீகத் திருவிடம் இங்குதான் 8ஆம் நூற்றாண்டில் 'விரண்மிண்டர்' எனும் சிவனடியார், அடியார் பெருமக்களுடன் அமர்ந்திருத்தலைக் காணாது ஒதுங்கிச் சென்ற சுந்தரரைக் கண்டு சினந்து, "இவன் அடியார்களுக்குப் புறகு - அவனை ஆட்கொண்ட சிவபெருமானும் புறகு'' - எனச் சினந்து கூறினார். இதுகேட்ட சுந்தரர் அஞ்ச - சிவபெருமானால் "தில்லைவாழ் அந்தணர்" என அடியெடுத்துக் கொடுக்க 'திருத்தொண்டத்தொகை' பாடி திருக்கூட்டத்தை வணங்கினார். விரண்மிண்ட நாயனார் சினத்துடன் சிவபெருமானும் புறகு என்று கூறிய இந்நிகழ்ச்சியே சுந்தரமூர்த்திசுவாமிகளை 'திருத்தொண்டர் தொகை' பாடச்செய்து சைவ உலகிற்கு சேக்கிழார் தம் பெரிய புராணத்தைத் தந்தது.

அவ்வாறே இன்றும் ஆயிரக்கால் மண்டபத்தே பேசிக்கொண்டிருந்த

சான்றோர் பெருமக்கள் இவரது புலமையாற்றலைக் கண்டு வியந்து, மகிழ்ந்து, பாராட்டி "ஐயன்மீர் தாங்கள் தான் நம் தியாகராசப்பெருமானது லீலைகளை (மதுரைத் திருவிளையாடற்புராணம் போன்று) செய்யுள் வடிவில் யாத்தருள வேண்டுமென வேண்டிக் கொண்டார்கள். ஐயா அவர்களும் மனமுவந்து தியாகராசலீலையைப் பாடத்தொடங்கினார்கள். இதனை,

தண்ணிய குணத்தர் சுத்த சைவசித் தாந்த ராய
புண்ணியர் பலருங் கூடிப் புகழ்மிகு தியாக ராசர்
பண்ணிய வாடன் மற்றும் பாடுக தமிழ லென்று
மண்ணிய மணியே நேரும் வாய்மலர்ந் தருளி னாரால்

என்னும் இச்செய்யுளால் நன்கறியலாம்.

தியாகராஜர் லீலையின் அமைப்பு

தல புராணங்கள் வடமொழியில் சரித்திரத்தை மட்டுமே புலப்படுத்துமேயன்றி அவற்றில் கற்பனை அமைந்திரா, "பெருங்காப்பிய நிலை" - எனும் தண்டியலங்கார சூத்திரப்படி பெரியபுராணம், கந்தபுராணம், முதலியவற்றைப் பின்பற்றி நாடு, நகரச் சிறப்புகளுடன் விரிவாகப் பாடினார்கள். இதன் காப்பியத் தலைவராக 'தேவிற் சிறந்த கிண்கிணித்தாட்சிங்காதன சிந்தாமணி" - ஆகிய தியாகராசப்பெருமானும், நாட்டுவளம் கூறச் சோழ வளநாடும், நகர் வளம் கூற நிறை செல்வத் திருவாரூரும் - கிடைத்தமையின் இவர் தமது நாவீறு முழுவதையும் இம் முதற் காப்பியத்திலேயே காட்டியுள்ளார்கள்.

வாக்கியல்
சான்றிற்குச் சில

நாயன்மார்களுடைய அருமைச் செயல்களை உவமைகூறும் செய்யுட்கள் பல.

இழிதக விறைச்சி யெச்சி லெம்பிரா னுண்ண நல்கி
அழிவில் பேரின்பந் துய்த்த அன்பர்கண் ணப்பரே போல்
இழிதக வுவர்நீ ரெச்சி லெழிலிக ளுண்ண நல்கி
அழிவிலின் சுவைய நன்னீ ரருந்திய தாழி மாதோ

(திருநாட்டுப்படலம்:28)

ஆங்காங்கேயுள்ள சிவத்துதிகள் சிறந்த கருத்துக்களைத் தம்பால் கொண்டு விளங்கும்.

வானாடு வெறுத்துநெடு மண்ணாடு குடிபுகுந்த வள்ளால் போற்றி
தேனாடு செங்கழுநிர்த் தேமாலை செறிந்தபுயத் தேவா போற்றி
ஆனாடு கொடியுயர்த்த வம்மானே கம்பிக்கா தழகா போற்றி
பானாடு பூங்கோயி லிடமேய கிண்கிணிப் பொற்பாதா போற்றி

(முதலாவது:36)

வாழ்வியல் நிகழ்ச்சி

"தியாகராஜலீலை செய்து கொண்டிருக்கும் நாட்களுள் ஒருநாள் சூரியோதயத்தில் திரிசிரபுரத்திலிருந்து உறையூருக்குச் சிலருடன் சென்ற பொழுது இடையேயுள்ள ஒரு வாய்க்காலின் கரையிலிருந்து பற்கொம்பினால் தந்த சுத்தி செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது அவர்களுடைய தலையிற் கட்டியிருந்த வஸ்திரத்திற் பல ஒற்றையேடுகளும் எழுத்தாணியும் செருகப்பட்டிருந்தன. அந்த இடம் பலரும் வந்து செல்லும் இடம். சாலையில் பலரும் பார்த்துக் கொண்டே சென்றார்கள். பகல் 10 நாழிகைக்கு மேற்பட்டும் தமது சரீரத்தில் வெய்யில் மிகுதியாக தாக்கியும் கூட, அவர்கள் அவ்விடம் விட்டு எழவே இல்லை. வேறுபக்கம் திரும்பவும் இல்லை. தந்தசுத்தி செய்தல் நிற்கவும் இல்லை. காலையில் அவர்களைப் பார்த்து விட்டு உறையூர் சென்று வந்தவர்களில் சிலர் அருகில் வந்து "உதயகால முதல் இவ்விடத்திலேயேயிருந்து பல்துலக்கிக் கொண்டிருக்கக் காரணம் என்ன?" என்று கேட்டபொழுதுதான் பிள்ளையவர்கள் திடீரென்றெழுந்து கையையும் - வாயையும் சுத்தி செய்து கொண்டு தலை வஸ்திரத்திலிருந்த ஏடு எழுத்தாணிகளை எடுத்து அந்நேரம் வரை யோசித்து முடித்து வைத்திருந்த சில செய்யுட்களை முடித்த வண்ணமே எழுதிக் கொண்டு அவர்களோடு திரிசிரபுரம் வந்துவிட்டார்கள். அச்செய்யுட்கள் நைமிசப்படலத்தில் உள்ளவை".

இச்செய்தி கொண்டு இந்நூலை இயற்றுங்கால் பிள்ளையவர்களுக்கு மனவொருமையிருந்து வந்ததென்பதும், மிக ஆராய்ந்தே ஒவ்வொரு பாடலையும் செய்தார் என்பதையும் அறிகிறோம்.

தியாகராஜ லீலைகள் தொடக்கம்

நரசிங்கச் சோழனென்பவன் வேட்டை மேற் சேரலும், சங்கரச் சேவகச் சோழன் சிவபெருமானைப்பணிந்து வரம் பெறலும், தியாகராசப் பெருமான் அரசத்திருக்கோலங்க கொள்ளுதலும், அவரோடு வந்த சேனைகளின் சிறப்பும், அவர் மந்திரிகளுக்கு இடும் கட்டளை வகைகளும், பல நதிக்கரையிலுள்ள மறையோர்களின் பெருமையும், பலநாட்டு மன்னர்களின் சீரும் அவர் நாட்டு வளங்களும், பிறவும் இனிய சொற்பொருளமைதியுடன் 360 லீலைகளாற் கூறப்படுகின்றன. இந்நூலில் (திருவிருத்தத்தொகை:699)

திருவாரூர் தியாகராஜர் லீலைகளுடன் ஸ்தல வரலாறு

எனும் சிறிய புத்தகம் திருவாரூரில் கிடைக்கப்பெற்றோம். அதில் உள்ள லீலைகள்

1. ஸுத முனிவருக்கு ஸுகூர்ம மார்க்கத்தை உரைத்த லீலை.
2. நகர நிர்மானம் செய்த லீலை.
3. தியாகராஜராய்த் தோன்றிய லீலை
4. திருவாரூர்ச் சிறப்புரைத்த லீலை
5. திருமணம் நடத்திக் கொண்ட லீலை
6. நவக்கிரகங்களின் நிலைமையை காத்த லீலை
7. கலியிடமிருந்த காத்தருளிய லீலை..

8. சிருஷ்டி முறை உரைத்த லீலை
9. கல்யானையை ஓடச்செய்த லீலை
10. குருமூர்த்தியாய்ச் சோலையில் தோன்றியருளிய லீலை
எனப் பத்து குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலின் தனிச் சிறப்பு

அவ்வக்காலத்திற் பிள்ளையவர்கள் தம் உள்ளத்தில் ஆராய்ந்து தொகுத்து வைத்திருந்த அரிய கருத்துக்களும், இனிய கற்பனைகளும், நிறைந்து விளங்கும். இத்தியாகராசலீலை தேனீக்கள் பல மலர்களிலே உள்ள தேனைப் பலநாள் தொகுத்து அளித்த தேனீறாலைப் போன்று உள்ளது. இவராற் செய்யப்பெற்ற முதற்காப்பிய மாதலின் இதில் ஒரு தனியான அழகு அமைந்திருக்கின்றது. ஒரு பெருஞ்சிறப்பாகும்.

உறையூர்ப் புராணம்

வாழ்வியல்

திருச்சி அருணாசல முதலியார் எனும் அன்பர் திருபிள்ளையவர்கள் சொந்த வீடு இல்லாமல் குடிக்கூலிக்கு இருத்தலை அறிந்து இவர்தம் 33ஆம் வயதில் (பிலவங்க வருஷத்தில்) மலைக்கோட்டை தெற்கு வீதியில் சைவத்தெருவில் தென் சிறகிலிருந்த மெத்தை வீடொன்றை தம் சொந்தப் பொருளில் வாங்கி அதில் இருக்கச் செய்து இல்வாழ்க்கை நிகழற்குரிய பண்டவகைகளும் பொருளும் உதவி ஆதரித்துவந்தார். "திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களென்று" உலகமே கொண்டாடும் வண்ணம் செய்தது-திரு அருணாசலம் முதலியாரது பேருதவியே.

மனநிம்மதி அமைதியுடன் திரிசிரபுரத்தே வாழ்ந்து வருகையில் உறையூரிலுள்ள நண்பர்களும், செல்வர்களும் இவரிடம் தாங்கள் உரையூர்ப்புராணத்தைத் தமிழில் செய்யுள் நடையில் செய்து தரவேண்டுமெனவும், தியாகராஜலீலையைப்போல நாடுநகரச் சிறப்புக்களுடன் அமைத்துப்பாட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். சமயத்தை எதிர்நோக்கியிருந்த பிள்ளையவர்களுக்கு இவ்வேண்டுகோள் ஊக்கத்தைத் தந்து, வடமொழியில் உள்ள புராணத்தைத் தக்கவர் மூலம் தமிழில் வசன நடையாக்கிக் கொண்டு இவர்தம் 35ஆம் வயதில் (1850) ஒரு நல்ல நாளில் பாடத் தொடங்கினார்கள்.

இடையில் பெங்களூர் செல்லும் வாய்ப்பு ஏற்படவே, பெங்களூரில் ஓய்வு நேரங்களில் மெல்ல மெல்லயோசித்து அதனை நல்லமுறையில் செய்யுளாகப் பாடிவந்தனர். யாதொரு கவலையும் இல்லாத காலத்தில் உறையூர்ப் புராணம் பாடப்பெற்றமையால் அதற்கும் பிற்காலத்தில் பாடியவற்றிற்கும் வேறுபாடுகள் காணப்படும்.

உறையூர்ப்புராண அரங்கேற்றம்

பெங்களூரில் பாடிமுடித்த உறையூர்ப்புராணத்தை அரங்கேற்ற வேண்டுமென யாவரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க திருக்கோயில் வளாக்கத்தில் அழகுற அமைத்த பந்தலில் - பல வித்துவான்கள் -

கனதனவான்கள் முன்னிலையில் பிள்ளையவர்கள் அரங்கேற்ற ஆரம்பித்தனர். நாட்டுச்சிறப்பையும், நகரச் சிறப்பையும், சாதிவருணனையும் பற்றிப் பாடிய பொழுது உளமுவந்து மகிழ்ந்து கண்ணீர் வார்த்தனர் பலர். உறையூர்ப்புராணம் செவ்வனே அரங்கேறி பிள்ளையவர்கட்குப் பரிசிலாகப் பொன்னாபரணங்களும், பொன்னாடைகளும், பொருளும், சன்மானமாக வாரி வழங்கினர். புலவர் பெருமானை எப்படி எல்லாம் எவ்வளவு போற்றினாலும் தகும்.

உறையூர்ப் புராண அமைப்பு

காப்பிய உறுப்புகளெல்லாம் அமையப் பாடவேண்டும் என்று எண்ணித் தொடங்கிய தியாகராஜ லீலையில் ஏற்பட்ட மனக்குறையாவும் உறையூர்ப்புராணம் பாடியதால் தீர்ந்துவிட்டது. மலை, நாடு, நகர், ஆறு, இவை நன்கு புனைந்து பாடப்பட்டதன்றி சூரிய உதயம் மறைவு சந்திர உதயம் மணம், பலவகைக்காப்பிய உறுப்புக்களுடன் நன்கு அமைந்துள்ளன. சிவபெருமான் தோத்திரங்களை பலவகையில் இடையிடையே பக்திச் சுவை நனி சொட்டச்சொட்ட நன்கு பாடியுள்ளார். மகாவித்துவான் அவர்கள் புராணத்தின் இடையே தம்மை ஆதரித்தவர்களைப் போற்றத் தவறியதில்லை. அவ்வாறே வரலாறுகள் அந்தந்த இடங்களுக்கு ஏற்ப மன உணர்ச்சியை எழுப்பத்தக்க நிகழ்ச்சிகளையும் கூறத்தவறியதில்லை.

வாக்கியல்

ஒரு சமயம் திருப்பராய்த்துறை தலத்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்த சமயம் ஒரு வணிகன் ஆதி சைவர் வழங்கிய திருநீற்றைக் கீழே சிந்தக் கண்டு ஆதி சைவர்தாம். அஞ்சிச்சினந்து கூறுவதாக அமைந்த செய்யுள்.

நீற்றைச் சித்தினை யல்லையிந் நிகழ்பவத் தடையும்
பேற்றைச் சிந்தினை யறவினை உளனெனப் பேசும்
கூற்றைச் சிந்தினை, யிவணடைந் துறுசுகங் குலவும்
ஆற்றைச் சிந்தினை, சிந்தினை நின்றிரு வனைத்தும் (வில்வாரணியம்-12)

சிவத்துரோகச் செயலை அறிவிக்கும் அற்புதப்பாடல் இது அருமையிலும் அருமை.

அடுத்து, பஞ்சவர்ணப்படலத்தில் உறையூர்ச் சிவபெருமான் உதங்க முனிவருக்கு ஐந்து வர்ணமுடைய திருக்கோலத்தை ஐந்து சாமங்களிற் ஐந்துவிதமாகக் காட்டியருளிய செய்தி அற்புதம். மூர்த்திகளில் ஸ்படிக மூர்த்தியாக, உளியினால் செதுக்கப்படாத விடங்க மூர்த்தியாக - இருப்பது ஒரு கோலம். சப்தவிடங்கத தலங்கள் போல உறையூர்ப் பெருமானும் தன் ஸ்படிகத்திருமேனி கொண்டு ஐந்து காலமும் ஐந்து நிறங்காட்டி உதங்கமுனிவர் தரிசித்து இன்புறச் செய்தார். அக்கோலத்தை சிவபெருமான் கொண்டதற்குரிய பலவகைக் காரணங்களை இந்த வித்தாரகவி மூலம் அமைத்துக்காட்டிய விதம் அருமை.

வெள்ளிய மால்வரை வெள்ளிய மாலிவிடை வெண்டும்பை
வெள்ளிய வான்மதி வெள்ளிய வான்புனல் வெண்ணீறு
வெள்ளிய வார்குழை கொண்டு விளங்குறு தற்கேற்ப
வெள்ளிய மாபடி கத்துரு வாயினைமேலோயே

(பஞ்சவர்ணப்படலம்:15)

மகாவித்துவான் திரு. பிள்ளையவர்களுக்கே கை வந்த கலை எனலாம். ஈடுஇணையற்ற அவர்தம் கவித்திறத்தின் அருமையே அருமை.

3. திருப்பெருந்துறைப் புராணம்

தொடக்கம்

திருவாவடுதுறை, குருமகாசன்னிதானத்திடமிருந்து விடைபெற்றுக் கொண்டு ஒரு நல்ல நாளில் (1873 டிசம்பர் ஸ்ரீமுக மார்கழி மாதம் முதலிற்)திருவாதிரை தரிசனத்திற்காகத் திருப்பெருந்துறை புறப்பட்டார்கள். கூடவே பழனிக்குமாரத் தம்பிரான் முதலிய அன்பர்களும் துணை வந்தார்கள். திருப்பெருந்துறையை அடைந்து அங்கு தெற்கு வீதியில் உள்ள திருவாவடுதுறை மடத்தில் இவர் தம் பரிவாரங்களுடன் சென்று சேர்ந்தார்கள். அங்கு கட்டளை ஸ்தானத்தில் இருந்த ஸ்ரீசுப்பிரமணியத் தம்பிரான் அறிந்து நன்கு வரவேற்று சுவாமி தரிசனம் செய்வித்து தக்க வசதிகளுடன் தங்க வைத்தனர்.

அரங்கேற்ற விழா ஆரம்பம்

நல்ல நாளில் புராண அரங்கேற்றம் ஆரம்பிக்கப்பெற்றது. அப்பொழுது தம்பிரான் அவர்கள், பல இடங்களுக்கும் சொல்லி அனுப்பிய சுற்றுவட்டார ஜமீன் பிரதிநிதிகளும், மிராசுதார்களும், உத்தியோகத்தரும், நாளும் வந்து கூடுவார்கள். புராணம் முற்பகல் 3 மணிக்குத் தொடங்கி 5 மணி வரை நடக்கும்.

திருப்பெருந்துறை புராண ஏட்டுப்பிரதியை அருள்மிகு ஆர்மநாத ஸ்வாமி திருமுன்பு பீடத்தில் வைத்துப் பூசித்துப் பிள்ளையவர்களிடம் நம்பியார் (சிவாச்சாரியார்) கொண்டு வந்து கொடுத்து, விபூதிப் பிரசாதம் வழங்கி, மாலை அணிவித்து, சிரத்தில் பட்டு வஸ்திரம் கட்டுவித்த பின்பு இவரை உபசாரத்துடன் அழைத்து வந்து குதிரை ஸ்வாமி மண்டபத்தில் இருக்கச் செய்து தொடங்கச் சொன்னார்கள். திரு பிள்ளையவர்கள் கட்டளைப்படி முதலில் இருந்து பாடல்களை நம் ஐயர் (உ.வே.சாமிநாத ஐயர்)அவர்கள் படிக்க, பிள்ளையவர்கள் ஒவ்வொன்றிற்கும் அழகாகப் பதசாரம் சொல்லி உபன்யாசம் செய்வார். மக்கள் அனைவரும் கேட்டு இன்புறுவர்.

திருப்பெருந்துறை புராண அமைப்பு

முதலில் 27 செய்யுட்கள் அடங்கிய கடவுள் வாழ்த்தும் அவையடக்கம், திருநாட்டுப் படலம் முதலிய 32 படல உறுப்புக்களுடன் 1659 செய்யுட்களை யாத்தனர். உருவம் அருவம், அருவுருவம் இன்னும் மூவகை திருமேனிகளுள்ளே சிவபெருமான் அம்பிகையும் தாமும் அருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்கும் இடம் இத்திருப்பெருந்துறை பதியேயாகும். இதனை பல இடங்களில் அருமையாகப் புலப்படுத்தியுள்ளார்கள்.

வாழ்வியல் நிகழ்ச்சி

அரங்கேற்றத்திற்கு நாகப்பட்டினத்திலிருந்து வந்தவர் சிலரும் நாளும் கூடுவர். ஒரு நாள் வெளியூர் அன்பர் இருவர் வரச்சற்று காலதாமதத்தினால் அவர்கள் வந்தபிறகு புராணத்தை ஆரம்பித்தார்கள். இது சுப்பிரமணியத் தம்பிரானுக்குத் தன்னை மதிக்கவில்லை என கோபப்பட்டு ஒன்று பேசாது சென்றுவிட்டார். மறுநாள் காரணம் அறியச்சென்ற பிள்ளையவர்களையும் மதிக்காது, புராணம் நடக்கும் இடத்திற்கும் அவர் வரவில்லை. பின் பலரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தம்பிரான் வந்தார். எனினும் பிள்ளையவர்களுக்கு மனம் வருத்தமாகவே இருந்தது.

வாக்கியல்

அச்சமயம் மனவருத்தத்தோடு பாடிய பாடல் அவருடைய உள்ளத்தை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

என்னைநான் அறியேன் ஐயகோ பகலோ டிரவெனப் படுவதும் அறியேன்
முன்னைநான் செய்த தவமெவ னென்னை முழுமதோன் மத்தனாக் கிளையால்
அன்னையே அப்பா ஒப்பிலோ மணியே அடியவர்க் கெய்ப்பினில் வைப்பே
கொன்னைமா மதில்சூழ் திருப்பெருந் துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே. (உபதேசப்படலம்:78)

அவ்வாறே மணிவாசகரை பாண்டியனின் தண்டல்காரர்கள் துன்புறுத்தியபோது மனமுருகிச் சிவபெருமானை நினைத்து முறையிட்டனவாகக்கூறும் பாடல்கள்:

அறத்தனிச் செல்வி பாக வன்பிலே னின்பா லென்று
வெறுத்திடி னடியேற் கிங்கு வேறொரு துணையு மில்லை
செறுத்துயர் புரங்க ளெல்லாஞ் செற்றவ னடியான் றன்னை
நிறுத்தினர் வெயிலி லென்றா னின்புகழ்க் கேற்ற மாமோ."
(பெருந்துறைச்சருக்கம்:132)

இதனைப்படிக்கையில் கேட்போரும் மனம் உருகிக் கண்ணீர் விடுவார்கள்.

புராணத்தின் தனிச்சிறப்பு

திருப்பெருந்துறைப்புராணத்து, கடவுள் வாழ்த்துப் பாடலோடு, ஒவ்வொரு படலத்தின் தொடக்கத்திலும் மாணிக்கவாசகர் தோத்திரமாக ஒவ்வொரு பாடல் இயற்றிய பிறகு படலச் செய்தியை அறிவிக்கிறார். இத்தலபுராணத்தில் மாணிக்கவாசகர் தோத்திரமாலையாக 33 பாடல்களும் இறுதி வாழ்த்து ஒன்றுமாக அமைந்துள்ளன.

வாத பூர்தம் பாத தாமரைப்
போதுஅ வாய்மனம் ஏதம் நீங்குமே. (30)

வாத வூரெம் வள்ளல்பொற் பாத தாம ரைப்புகழ்
ஓத ஓத ஓதமாம், ஏதும் ஓவும் இன்பமே. (31)

செந்தமிழ் வேந்தர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பொற்றாள் போற்றி.

பி.21.

49. பிள்ளைத்தமிழ் – மரபும் மாற்றமும்

பெ. சுப்பிரமணியன்
பூண்டி

கவிச் சக்கரவர்த்தி, தமிழ்க்கடல், பிற்காலக் கம்பன் என்றெல்லாம் போற்றப்படும் சிறப்புடன் விளங்கிய திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ்மாமணி திருவாவடுதுறை ஆதீனப்பெரும் புலவராக விளங்கிய இப்புலவர்மாமணி எண்பது நூல்களுக்கு மேல் படைத்தும், மிகச் சிறந்த மாணாக்கர் பரம்பரையினை உருவாக்கியும் தமிழன்னைக்குப் பெருந்தொண்டாற்றியவர். இவர் பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் மரபும் மாற்றமும் குறித்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிள்ளையவர்களின் நூல்களில் சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

பிள்ளையவர்கள் பாடிய பிள்ளைத்தமிழ் நூல்கள் பத்து. இவர் பாடிய பிள்ளைத் தமிழ் நூல்களில் உமையம்மை, முருகன் முதலான தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடியவை எட்டு. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் திருத்தொண்டர்புராணம் பாடிய அடியவராகிய அருளாளர், அநபாயச் சோழனின் அமைச்சர் சேக்கிழாரைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியது. மற்றொன்று திருவாவடுதுறை ஆதீனத்தில் சீலத்திரு சுப்பிரமணிய தேசிகருக்குப் பின் பட்டத்திற்கு வந்த சீலத்திரு அம்பலவாண தேசிகர் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ். பிள்ளைத் தமிழ் இலக்கியவரலாற்றில் குமரகுருபர முனியவர் பாடிய மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருப்புள்ளிருக்கு வேளூர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், பகழிக்கூத்தர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ், மாதவச்சிவஞான முனிவர் பாடிய குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் போன்றவை சிறப்புடையன. அவ்வரிசையில் மகாவித்துவான் பிள்ளைத்தமிழ் நூல்களும் இடம்பெறுகின்றன. அவற்றுள்ளும் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடற் பொருளாலும் புலமைத்திறத்தாலும் தமிழுலகத்தால் போற்றத்தக்கது.

பிள்ளைத்தமிழ் இலக்கியமரபு

தமிழிலக்கிய வடிவங்களில் பிள்ளைத்தமிழ் இலக்கியம் சிற்றிலக்கிய வகையினைச் சார்ந்தது. வடமொழியில் பிரபந்தம் என்பது தமிழில் சிற்றிலக்கியம் எனப்படும். மனிதனின் வாழ்நாளில், வளரும் பருவங்களில் பிள்ளைப் பருவம் சிறப்புடையது. பிள்ளையின்பம் கொள்ளையின்பம். "பிள்ளையில்லாச் செல்வம் கள்ளியில் சோறே" (மனோன்மணீயம்) "பிள்ளையில்லாத பாக்கியம் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்" (இராம நாடகக்கீர்த்தனை)என்னும் இலக்கிய அடிகள் பிள்ளையின்பத்தின் –

மழலையின்பத்தின் சிறப்பினைக்காட்டும். சங்க இலக்கியத்தில் புறநானூறு "குறு குறு நடந்து சிறுகை நீட்டி" என்னும் பாடலில் மழலை இன்பத்தைப் பேசும். திருக்குறளில் மழலையின்பம் பேசப்படும் சிறப்பினைக் கீழ்வரும் குறட்பாக்களாலும் பிறவற்றாலும் அறியலாம்.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (60)

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ். (64)

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் (66)

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் இடம் பெற்றிருந்த பிள்ளைப் பருவம் பற்றிய இலக்கியக்கூறு, "குழவி மருங்கினும் கிழவ தாகும்" என்னும் தொல்காப்பிய இலக்கணத்திற்கேற்ப பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கிய வடிவத்தைப் பெற்றது.

பிறவாயாக்கை பெரியோனாகிய சிவபெருமானைத் தவிர்த்து ஏனைய கடவுளரையோ பெரியோர்களையோ பிள்ளையாகப் பாவித்து, பத்துப் பருவங்களமைத்துப் பெரும்பான்மையும் பருவத்திற்குப் பத்துப்பாடல்களாகப் பாடுதல் இலக்கிய மரபு, ஆண்பாற் பிள்ளைத்தமிழாயின் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களாகவும், பெண்பாற் பிள்ளைத்தமிழாயின் முதல் ஏழு பருவங்கள் பொதுவென வைத்து, இறுதி மூன்று பருவங்கள் மட்டும் அம்மானை, நீராடல், ஊசல் எனவேறுபடுவதாகவும் அமைப்பது மரபு. பன்னிரு பாட்டியல் முதலிய இலக்கண நூல்கள் இவ்விலக்கியத்தின் இலக்கண மரபுகளை விரிவாகப் பேசுகின்றன.

பிள்ளைத்தமிழில் காப்புப் பருவம்

திருமால் முதலிய தெய்வங்கள் பாட்டுடைத் தலைவராகிய குழந்தையைப் பாதுகாக்க வேண்டுமென்று அமைப்பது காப்புப் பருவம். திருமால் காப்புக் கடவுளாதலின் காப்புப் பருவத்தின் முதற் செய்யுளை அவரது காப்பாக அமைத்தல் மரபு" என்பர் டாக்டர் உ.வே.சாமிநாதய்யர். (குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு ப-79)குமரகுருபர அடிகள் அருளிய மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலும், திருப்புள்ளிருக்குவேளூர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழிலும் முதலில் விநாயக வணக்கமும், காப்புப் பருவ முதற்பாடலாகத் திருமால் வணக்கமும், பின்னர் ஏனைய கடவுளர் வணக்கமுமாக அமைந்திருப்பதையும் பிற பிள்ளைத்தமிழ் நூல்களிலும் அவ்வாறே பெரும்பான்மையாக அமைந்துள்ளமையும் காணலாம்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழும் திருத்தொண்டத் தொகையும்

மகாவித்துவான் பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் முதலில் விநாயக வணக்கம், அடுத்து குரு வணக்கமும் அவையடக்கமும் அமைந்துள்ளன. காப்புப்பருவத்தில் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்தில் இடம்பெற்ற அடியார்களையே காப்புக் கடவுளர்களாகக் கொண்டு பாடியுள்ளனர். பெரிய புராணம் சார்புநூல், இதற்கு முதல்நூல் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை;வழிநூல் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி. சேக்கிழார் பெரியபுராணத்தில் பதின்மூன்று சருக்கங்களை அமைக்கும்போது, திருமலைச் சருக்கம் முதலாகவும், வெள்ளானைச் சருக்கம் இறுதியாகவும் அமைத்து, இடையிலுள்ள பதினொரு சருக்கங்களுக்கும் சுந்தரர் திருத்தொண்டர்த் தொகையில் பாடிய பதினொரு பாடல்களின் முதற் குறிப்பையே பெயர்களாக அமைத்தார். மகாவித்துவான் பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் காப்புப்பருவ முதற்பாடல் தில்லைவாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருளார், விறன்மிண்டர், அமர்நீதியார் என்னும் எழுவரையும் காப்புக் கடவுளராகக் கொண்டு குன்றத்தூர்பிரானாகிய தெய்வச் சேக்கிழார் எனும் குழந்தையைக் காக்கும்படி வேண்டியுள்ளார். முதற்பாடல் 'கார் கொண்ட சோலை' எனத் தொடங்குகிறது. ஏனைய பத்துப் பாடல்களும் சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகைப் பாடல்களின் முதற்குறிப்பையே முதலாகக் கொண்டு அமைந்துள்ளமையும் அறியத்தக்கது.

திருத்தொண்டத் தொகை	சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-காப்புப் பருவம்
1. தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்	- கார்கொண்ட சோலை
2. இலைமலிந்தவேல் நம்பி எறிபத்தற்கடியேன்	- இலைமலியெனும் கவியுள்
3. மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்	- மும்மை மறையும் பரவும்
4. திருநின்ற செம்மையே செம்மை யாக்கொண்ட திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்	- திருநின்ற செய்யுள்
5. வம்பறா வரிவண்டு மணநாற மலரும் மது மலர் நற்கொன்றையான் அடியலாற் பேணும் நம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்.	- வம்பறா வரிநவில்

திருத்தொண்டத் தொகை	சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-காப்புப் பருவம்
6. வார்கொண்ட வனமுலையாள் உமையங்கள் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்	-வார்கொண்ட வனமுலையெனும் கவியுள்
7. பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்	- பொய்யடிமை இல்லாத செய்யுள்
8. கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்	- கறைக் கண்டன்யாப்பினை.
9. கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற் சிங்கன் அடியார்க்கும் அடியேன்	- கடல் சூழ்ந்தயாப்பமர்
10. பத்தராய்ப் பணிவார்களெல் லார்க்கும் அடியேன்	-பத்தராய் என்றெடுத்த அருந்திருக்கவி
11. மன்னிய சீர் மறைநாவன் நின்ற வூர்ப்பூசல் வரிவளையான் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்	- மன்னிய திருப்பாட்டில்.

இவ்வாறு இப்பருவத்தில் பத்துப்பாடல்களும் திருதொண்டத் தொகைப் பாடல்களின் முதற் குறிப்பைக் கொண்டு தொடங்குவது மட்டுமல்லாமல், ஒவ்வொரு பாடலுக்கும் திருத்தொண்டத் தொகைப்பாடல்களின் முதலடிகளையே தலைப்பாகக் கொண்டும் நூல் அமைந்துள்ளது.

பிள்ளைத் தமிழ் மரபில் மாற்றமும் மரபு போற்றலும்

பிள்ளைத்தமிழ் இலக்கியக் காப்புப் பருவங்கள் கடவுளர் வணக்கமாக அமைந்து, குறிப்பிட்ட பிள்ளைத்தமிழின் பாட்டுடைத் தலைவராகிய குழந்தையைக் காக்கும்படி அக்கடவுளரை வேண்டலே மரபாக அமைய, சேக்கிழார் பிள்ளைத்தமிழ் காப்புக் கடவுளராக அடியார்களைக் கொண்டுள்ளது மரபு மாற்றமாகும். பிள்ளைத் தமிழ் இலக்கிய மரபு மாற்றமாக இருப்பினும், சைவப்பயிர்தழையத் தோன்றிய புயலாகிய சேக்கிழார் பெருமான் குறிக்கோளும், சைவசமய நெறியின் உயர் குறிக்கோளும் 'அடியாரை வணங்குவதும் அம்பலவரை வணங்குவதே' என்பதும், 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' என்னும் திருமூலர் வாக்கிற்கேற்ப, தீக்கையளிக்கும் குருநாதரைச் சிவபெருமானாகக் கருதி வணங்குவதும் முறையானதே என்னும் சிவநெறிமரபு பிள்ளையவர்களால்

இப்பிள்ளைத்தமிழில் போற்றப்பட்டிருப்பதை அறியலாம். 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' 'இறைவன் தொண்டர் உள்ளத்து அடக்கம்' என்னும் பழமொழிகள் அடியவர் பெருமையைச் சாற்றுவன.

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டாது
அம்மலம் கழிஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே

என்னும் சிவஞானபோத நூற்பாவினைக் கொண்டு, சிவவேடம் பூண்ட, சிவபெருமானிடம் மயக்கமற்ற பக்தி பூண்ட அடியவர்களையும், சிவாலயங்களையும் சிவன் எனக் கருதி வணங்குவது சைவமரபு என்பது புலனாகும். ஆதலின் அடியாரை வணங்குவதும் ஆண்டவனை வணங்குவதே என்னும் மரபினை உணர்ந்து திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப் புலவர் மாமணியாக விளங்கிய மகாவித்துவான் அடியார்களையே காப்புக் கடவுளராகக் கொண்டு போற்றியமை புலப்படும்.

சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் திருக்கூட்டச் சிறப்புப் பகுதியில் அடியார்களின் பெருமையினைப் பேசுகின்றார்.

மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால்எத்திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்.
. . . .
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்னும் பாடல்களில் போற்றியவாறு, உறைப்பின் நெறிநின்ற உயர்ந்த சான்றோர்களைச் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகைத் தமிழ் பாடிய வண்ணம் உரை செய்வோம் என்று சேக்கிழார் பாடியவாறு, மகாவித்துவான், அடியார்களையே அரனாகப் போற்றிய சேக்கிழார் பெருமானின் பிள்ளைத்தமிழ் தழைத்திடக் காப்புக் கடவுளராக அவ்வடியார்களையே பாடியது, பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபு மாற்றம் எனினும், செந்தமிழ் சிவநெறிமரபு போற்றும் சீரிய செயல் எனக் கருதலாம்.

மகாவித்துவான் போற்றும் சேக்கிழார் பெருமை

சேக்கிழார், வேளாண்குலக்கதிர், அருளாளி, அருள்மொழித்தேவர், வேளாண்குல திலகர்/அருளாகரர், சகலாகம பண்டிதர், குன்றைத் திருமுனி, கவிவலவர், சைவப்புயல், சேவையர்பிரான், சேவையர் குல சிகாமணி, குன்றைப்பிரான்;அருட் கொண்டல், சைவப்பயிர் வளர்க்கும் கொண்டல், முத்திதரும் கவிபாடிய புலவன், முனிவில் தமிழ்க்கவி பாடிய புலவன், முந்துதமிழ்க் கவிபாடிய புலவன் போன்ற பல்வேறு சிறப்புப்பெயர்களைச் சூட்டி சேக்கிழாரின் பெருமை போற்றும் மகாவித்துவான் புலமைத்திறம்

குறிப்பிடத்தக்கது.

குருவணக்கமும் அவையடக்கமும் ஆக அமைந்த பாடலில் சேக்கிழார் பெருமானை, முருகனுக்கும், விநாயகருக்கும், சிவபெருமானுக்கும் ஒப்புமை கூறும் சிலேடைநயம் மிகுந்தபாடல் அறிந்து இன்புறத்தக்கது.

செங்கீரைப்பருவத்தில் 'ஒப்பரிய தொண்டர்தம் அருமையும் பெருமையும், எனத் தொடங்கும் பாடலில், அடியார் பெருமைகளையெல்லாம் தமிழ்மறையில் உள்ள திட்பநுட்பத்துடன் அநபாயச் சோழர் அவையில் விரித்து உரைத்தருளியபிரான் என்று சேக்கிழாரைப் பாராட்டுகின்றார்.

தாலப்பருவத்தில்,

சோறுமணக்கும் மடங்களெல்லாம் தூய்மை மணக்கும்
சிந்தையெல்லாம்
....
சாறு மணக்கும் குன்றத்தூர்த் தலைவா தாலோ தாலேலோ
சகலாகம பண்டித தெய்வச் சைவா தாலோ தாலேலோ

என்னும் பாடல் பலராலும் சொல்லப்படுவது.

அடியார்பெருமையும் அருமையும் விளக்கிச் சொல்லும்படி சிவபெருமானே சேக்கிழார் பெருமானுக்கு அடியெடுத்துக் கொடுத்து நூலைச் செய்யச் செய்த பெருமை உலகில் தமிழைத்தவிர வேறு எம்மொழிக்கு உள்ளது என்று கேட்டு இது தமிழும் தமிழரும் செய்த தவப்பயன் என்று (பா.28) விளக்குகின்றார்.

மேலும் "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ"(பா.29) என்பன போன்ற சுவையானபாடல்கள் சேக்கிழாரைச் செந்தமிழ்த் தெய்வச் சேக்கிழார் என்னும் பெருமையுடன் போற்றுகின்றன.

இவ்வாறு பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபினின்றும் மாறுபடினும், சைவத்தமிழ் நெறியின் மரபினைப் போற்றி, மகாவித்துவான் சேக்கிழார் பெருமானின் பெருமைகள் தோன்ற, உவமை, உருவகம், சிலேடை, சித்தாந்த சாத்திர நுட்பம், புராணச் செய்திகள் ஆகிய பல்வேறு சிறப்புக் கூறுகளுடன் இப்பிள்ளைத்தமிழைப் பாடியுள்ளமை தமிழுலகம் போற்றி இன்புறத்தக்கதாகும்.

50.சீகாழிக் கோவையில் அறத்தொடு நிற்றல்

சே.செந்தமிழ்ப்பாவை
காரைக்குடி

சிற்றிலக்கியங்கள் 96 வகை என்பது மரபு. இதில் எண்பதுக்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் பாடிப் புகழ்பெற்றவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. இச்சிற்றிலக்கியங்களுள் அகச் செய்திகளைக் கூறுவதில் தலைசிறந்தது கோவை. "யாவையும் பாடிக் கோவை பாடு" என்பது பழமொழி. இப்பழமொழிக்கேற்ப மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் பாடப்பட்டது மூன்று கோவைகள். இதில் சீகாழிக் கோவையில் வரும் அறத்தொடு நிற்றல் என்னும் துறை பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

கோவை இலக்கணமும், சீகாழிக் கோவையும்

கோவையின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல்,

கோவை என்பது கூறுங்காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப (ப.பா.221)

என்றுரைக்கும். சீகாழிக் கோவையும் இவ் இலக்கணத்தைப் பின்பற்றி கட்டளைக் கலித்துறையில் பாடப்பட்டுள்ளது. பாடல் எ்ண்ணிக்கை மட்டும் மாறுபட்டு 531 ப்ாடல்களைக் கொண்டுள்ளது.

அறத்தொடு நிற்றல் விளக்கம்

அறத்தொடு நிற்றல் என்னும் தொடருக்கு அறம் என்பது 'தக்கது', 'தக்கதைச் சொல்லி நிற்றல்' எனவும், அறம் என்பது 'கற்பு', 'கற்பின் தலைநிற்றலே', அறத்தொடு நிற்றல் எனவும் பொருள் கொள்வர்" இறையனார் களவியல் உரையாசிரியர்.

அறத்தொடு நிற்றலின் நோக்கம்

தலைவன் தலைவி என்னும் இருவரும் இயற்கைப் புணர்ச்சியாகிய முதற் காட்சியில் ஒருவரையொருவர் கண்டு கூடிய முறைமை தூய அன்பொடு பொருந்திய அறத்தின் வழிப்பட்ட நற்செயலே என்பதனைத் தோழி செவிலிக்கு எடுத்துரைத்தலும் களவை வெளிப்படுத்தலுமே அறத்தொடு நிற்றலின் நோக்கமாகும்.

சீகாழிக் கோவையில் அறத்தொடு நிற்றல் தொடர்பாக 19 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நம்பியகப் பொருளில் வரும் அறத்தொடு நிலைத் துறைகளே இதில் விளக்கம் பெற்றுள. இதில் தலைவி அறத்தொடு நிற்றல்-5

பாடல்களிலும், தோழி அறத்தொடு நிற்றல்-5 பாடல்களிலும், செவிலி அறத்தொடு நிற்றல்-3 பாடல்களிலும், நற்றாய் அறத்தொடு நிற்றல்-2, பாடல்களிலும் பாடப்பெற்றுள்ளன.

களவுக் காலத்தில் கூடிமகிழ்ந்த தலைவன் வரைவுக்குரிய செயல்களை மேற்கொள்ளாது தன்னை விட்டு நீங்கிச் சென்றதால் வருத்த மிகுதியால் தலைவி கண்ணீர் விடுகின்றாள். தலைவியின் கண்ணீர் கண்ட பாங்கி அவள் வருத்துவதற்கான காரணத்தைக் கேட்கின்றாள். இதுவே கையறுதோழி கண்ணீர் துடைத்தல் என்னும் முதல் துறையாக அமைகின்றது. (346).

தலைமகள் கலுழ்தற் காரணங்கூறல்

தலைவி தான் வருந்துவதற்கான காரணத்தை மூன்று பாடல்களில் கூறுகின்றாள். அரவை அணியாகச் சூடிய சீகாழிப் பெரியன் ஊரைச் சார்ந்தவனாகிய தலைவனைக் கண்டதனால் நிலைபேறுடைய திருமகள் போல் என்னுடைய இருவிழிகளும் அழுகின்றன. பொன் போன்ற எனது தோழியே! தலைவன் காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகப் பகுதியில் மின்னல் போன்ற கடற் தெய்வத்தைக் காட்டி சூளுறவு செய்து என்னோடு கூடினான். அவன் தெய்வத்தின் மீது ஆணையிட்டுக் கூறியதெல்லாம் பயனுள்ள சொற்களே என்றிருந்தேன். அன்று கடற்கரையில் குருகும், முள் நிறைந்த தாழை மரமும் இருந்தன. அவைகள் எனக்குச் சாட்சி சொல்லுமோ? நீயே சொல் என்றாள் (347).

தலைவன் இகந்தமை இயம்பல்

குளிர்ந்த மதிசூடிய சிவபெருமான் வீற்றிருக்கக் கூடிய புலித் துறையில் தலைவரோடு நான் கூடியதை கொலைத்தன்மை வாய்ந்த குருகு சாட்சி சொல்லாது என்று துணிந்ததால் துன்பத்தில் ஆளும்படி என்னை விட்டுச் சென்றுவிட்டார்.(348).

தோழி இயற்பழித்துரைத்தல்

தலைவி கூறியதைக் கேட்ட தோழி, தலைவியே இவரே தக்கவர், மிக்கவர், இவரினும் நல்லவர், அன்புடையவர் ஒருவருமில்லை என்றுரைப்பாய். ஆனால் இப்பொழுது அவன் செயலைப் பார்த்தாயா என்று பழித்துரைத்தாள். (349).

தலைமகள் இயற்பட மொழிதல்

தோழி இகந்து மொழிந்ததைக் கேட்ட தலைவி தலைவன் முன்பு சொன்ன சூளுறவை மறந்தகலும் கொடியார் என்றாலும் அவரே எனக்குக் குலதெய்வம் என்றாள் (350).

தெய்வத்தை வழிபடச் செல்வோம் என்று கூறுதல்

தலைவியின் நெஞ்சில் தரைவன் நீங்காமல் இருப்பதை அறிந்த தோழி, தலைவ:ன் முன்பு செய்த சூளுறவைப் பொய்த்ததால் தெய்வம் அவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் என்பதை உணர்ந்தவளாய் தலைவியிடம்

நொதுமல ரல்லர்தஞ் சூண்மறந் தாரென்று நோதலுறப்
புதுமலர் மாலைப் புயத்தாரைச் சீறல் பொறுத்தியென்று
விதுமலர் வாண்முகத் தாயெழு வாவப்பி மென்புழுகு
மதுமலர் தூவிப் பணிவாம் புகலி வடுகனையே (351)

என்றாள்.

தலைவி இல்வயிற் செறித்தமை இயம்பல்

இதைக் கேட்ட தலைவி தோழியிடம், சில நாட்களுக்கு முன் தலைவன் கையில் வேலொடு வந்து நின்றான். இருளில் அவனைக் கண்ட தாய் அவரை முருகப்பெருமான் என்று நினைத்து அவ்விடத்தை விட்டு நீங்கினாள். எனினும் தாய் என்னைப் புனைகளிலோ, சோலைகளிலோ சென்று விளையாடுதல் கூடாது என்று கூறிவிட்டாள் என்றாள். (352)

செவிலி தலைமகள் வேற்றுமை கண்டு பாங்கியை வினாதல்

தலைவி இற்செறிக்கப்பட்டதால் அவள் மேனி பசலை பாய்ந்தது. கை வளையல்கள் கழலத் தொடங்கின. இதனைக் கண்ட செவிலி பாங்கியிடம் என் பெண்ணினுடைய கை வளையல்கள் கழலுகின்றனவே! இதற்குக் காரணம் என்ன? புனக்காவலைக் கைவிடச் சொன்னதுதான் காரணமா? கூறுக என்றாள். இதற்குப் பாங்கி பதில் கூறாததால் செவிலி வெறியாட்டு நிகழ்த்த முற்படுகின்றாள். (354)

வெறிவிலக்கல்

வெறியாட்டு நிகழ்த்த வந்த வேலனைப் பார்த்து, நாளும் மெலிந்து கொண்டே செல்லும் எம் தலைவியின் நோயை வெல்ல வந்தீர்களா? அல்லது வெறும் மறியைக் கொல்ல வந்தீர்களா என்று வினவினாள். இதனால் வெறியாட்டு தடைப்பட்டது. கோபமடைந்த செவிலி பாங்கியிடம் திருந்திய அணிகலன்களையுடைய பெண்ணே!புகலியின் குழகர்மலையில் மறியாட்டை வெட்டி, குறிபார்த்து நடந்ததைச் சொல்லும் வேலன் ஆடும் ஆட்டத்தை என்னைக்காட்டிலும் நீ கண்டுள்ளாயோ என்று கடிந்துரைத்து வெறியாட்டை தடுத்ததற்கான காரணத்தைச் சொல்லுவாயாக என்றாள் (355-56).

தோழி அறத்தொடு நிற்றல்

தோழி செவிலியிடம் தலைவன், தலைவி இடையே உள்ள அன்பினை பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என்ற மூன்று நிலைகளில் எடுத்துரைக்கின்றாள்.

பூத்தரு புணர்ச்சி

சிவபெருமான் வீற்றிருக்கும் புகலிக்கடற்கரைக்கு நானும், தலைவியும் சென்றிருந்தோம். அங்கு வண்டல் மண்ணில் தாழம் பூ பூத்திருந்தது. அப்பூவைப் பார்த்த உன் மகள் அப்பூவில் குருகு அமர்ந்துள்ளது என்றாள். யான் தாழம்பூவின் மடல் என்றேன். அதைப் பற்றி உன் கையில் தருகிறேன் என்று தலைவி கூறிக் கொண்டிருக்கும் பொழுதே வலிமையுடைய ஒருவர் அதனை முறித்துக் கொண்டு வந்து தலைவியிடம் கொடுத்தார். அன்றே இவளுடைய உள்ளத்தில் இடம்பெற்று விட்டார் (357).

புனல்தரு புணர்ச்சி

புகலியை உறைவிடமாகக் கொண்ட அத் தலைவன் தலைவிக்காக வளநாட்டு நதியின் ஒரு துறையில் மூழ்க நீரானது அவனை இழுத்தது. எனினும் வேலவனைப் போல இவன் கரையேறினான். நமக்காக உயிரையும் பொருட்படுத்தாது சென்றார் என்பதால் தலைவனை விரும்பினாள்(358).

களிறுதரு புணர்ச்சி

சிகாழியின் தென்திசையில் உள்ள புனத்தில் தலைவி இருந்தபொழுது கூர்மையான கொம்பினை உடைய களிறொன்று இவள்மீது பாய்வதற்காக விரைந்து வந்தது. அழகு பொருந்திய உன் மகள் நடுக்கமுற்றாள். ஆங்கு ஓர் ஏறுபோல் முன்னுதவிய அவனே வந்துதவினான் என்று கூறி அறத்தொடு நின்ற தோழி செவிலியிடம் தளிர்போன்ற இப்பெண்ணை வேற்றிடத்தில் மணம்புரிய நினைக்கின்றாய். அது சரியன்று என்றாள் (359).

தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல்

தலைவியது மேனி வேறுபாடு கண்ட நற்றாய் செவிலியிடம், தலையில் கங்கைசூடிய தென் கழுமலத்தீசர் கழலினை நினைப்பவர்களுக்கு அச்சம் தோன்றுவதில்லை. நினையாதார்க்கு அச்சம் உலகம் முழுவதும் போர்த்திருப்பது போல வளைகரத்தால் மேனி முழுவதும் பொன்போன்று காட்சியளிக்கிறது. மங்காத மயில்போன்ற என் பெண்ணிற்கு என்னவாகி விட்டது என வினவினாள் (361).

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

செவிலி தாயிடம் நாம் நம்மகளை பால்மணம் மாறாத வாயினையுடையவள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அவளோ நாற்று முற்றி சூலுற்றதைப் போல அறிவு மிக்கவளாகி விட்டாள். தேனாறும் கூந்தலையுடைய நம் பூங்குழலிக்கு மணம் செய்வதே சிறந்தது என்றுரைத்தாள் (362).

நற்றாய் தமருக்கு அறத்தொடு நிற்றல்

செவிலி கூறியதைக் கேட்ட நற்றாய் தென்றற் காற்று இசைந்து வரக்கூடிய மணிமாடங்களையுடைய சீகாழிநாதரின் மலையில் இவளுடைய தந்தையும், தமரும், உள்ளனர். அவர்களிடம் நம் மகள் அறிவுடையவளாகி விட்டாள். அவளுடைய கருத்துக்கிசைந்தவரை நாடி மணம் புரிதல் வேண்டும் என்று கூறுகிறேன் என்றனள்(363).

ஆசிரியரின் புலமைத்திறம்

ஆசிரியரின் புலமைத்திறம் பல பாடல்களில் வெளிப்பட்டுள்ளது. கோவையில் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என்று இருவேறு தலைவர்கள் பாடப்படுவர். பாட்டுடைத் தலைவரின் நாடும், நகரமும், பெயரும் கூறுதலும், கிளவித் தலைவர்க்கு வாளா கூறுதலும் இலக்கண மரபு. சிகாழிக் கோவையிலும் பாட்டுடைத் தலைவராகிய சீகாழிநாதர் பத்தொன்பது பாடல்களிலும் இடம் பெற்றுள்ளார். சான்றாக,

தென்காழிப் பொருப் பிறைவற் (346)

குளிர்மதி சூடும் பிரான் (348).

கங்கா தரர்தென் கழுமலத் தீசர் கழனினைவார் (361)

போன்றவைகளைக் குறிப்பிடலாம். களவித் தலைவன் புகலித்துறையைச் சார்ந்தவன் என்று குறிப்பிடப் படுகின்றான்.

உவமை கூறும் முறை

சைவ சமயத்தின் பாலும், சிவபெருமான் மீதும் ஆராக் காதல் கொண்ட பிள்ளை அவர்கள் உவமை கூறும்பொழுதுகூட இறையடியார்களையே குறிப்பிடுகின்றார். தலைவிக்காக மலர் பறிக்கச் சென்ற தலைவன் நீரில் மூழ்கி மேலே வருகின்றான். இக்காட்சி ஆசிரியருக்கு நாவுக்கரசரை நினைவு படுத்துகின்றது. கல்லில் கட்டி கடலில் இட்ட போதும் மேலே வந்த நாவுக்கரசர் போல தலைவன் வந்தான். என்பதை,

கருதுறை நாவுச் கரசெனத் தோன்றுமக் காலை (358)

என்று குறிப்பிடுவர். உவமையிலும் சமயத்தை நாடும் திறம் சுட்டத்தக்கது.

பண்டை இலக்கியப் புலமை

சிற்றிலக்கியங்களை அதிக அளவு பாடினாலும் பண்டை இலக்கியங்களில் தோய்ந்து அம்மலரைப் பின்பற்றியும் ஓரிடத்தில் மாறுபட்டும் பாடியுள்ளார். பண்டை இலக்கியங்களில் தலைவனைக் குறிப்பிடும்பொழுது அவனை முருகனோடு ஒப்பிட்டுக் கூறுதல் மரபாகும். சான்றாக சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெரிய புராணம் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

கண்டேத்தும் செல்வேள்..........
. . . . (சிலம்பு)

முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ (பெரியபுராணம்)

சீகாழிக்கோவையிலும் களவித் தலைவன்

மைவாய் விழியொரு பாலார் புகலி மணிவரைப்பாற்
கைவாய் வடிநெடி வேலோடு வந்துதங் காளைநிற்கப்
. . . .
தைவாய் முருகென் றொழிந்தா ளதுநந் தவப்பயனே (353)

என்று முருகனோடு ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளான்.

சங்க இலக்கியச் சார்பு

தலைவனை விட்டுப் பிரிந்த நிலையில் தலைவி வருந்துவது இயல்பு. இதனைச் சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகை தலைவி தோழிக்குக் கூறியதாக

யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ

....

குருகு முண்டுதான் மணந்த ஞான்றே (குறுந். 25)

என்ற பாடலில் குறிப்பிடும். சீகாழிக் கோவையிலும் இதே அமைப்புடன் கூடிய

பொன்னே பொருசடை யார்காழி நாதர் புகார்த்துறைவாய்
மின்னே கடற்றெய் வதங்காட்டி யன்பர் விரித்ததெல்லாங்
கொன்னே யலவென் றிருந்தேன் கயல்கொல் குருகினொடாங்
கென்னேமுட் கைதையு முண்டோது மோகரி யென் செய்வனே (347)

என்ற பாடல் காணப்படுகின்றது. இரண்டு பாடல்களும் தலைவி தோழியிடம் கூறுவதாகும். குறுந்தொகைத் தலைவி கூறும் பொழுது தலைவனும், நானும் கூடிய அவ்விடத்தில் ஒருவருமில்லை. குருகு மட்டுமேயிருந்தது. அதுவும் தன் இரையாகிய மீனைப் பார்த்துக் கொண்டிருந்தது. தலைவனே பொய்ப்பானாயின் என்னால் என்ன செய்ய இயலும்? என்றுரைப்பதும், கோவைத் தலைவியும் இதனைப் போன்றே கடற் தெய்வத்தைக் காட்டி கடற்கரைச் சோலையில் என்னோடு கூடினான். அவ்விடத்தில் குருகு மட்டுமே இருந்தது. அது எனக்குச் சாட்சி சொல்லுமா என்றுரைப்பதும் ஒரேவிதமாக அமைந்துள்ளன. இது மட்டுமன்றி இருவருமே தலைவன் திருமணம் புரிய மறுத்தால் உயிர்விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் உள்ளனர். இதனை,

யானெவன் செய்கோ? (குறுந்:25)

என் செய்வனோ? (சீ.கோ:347)

என்னும் அடிகள் உணர்த்தும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டாக இருந்தாலும் 19-ஆம் நூற்றாண்டாக இருந்தாலும் அல்லது எந்த நூற்றாண்டாக இருந்தாலும் பெண்களின் நிலை ஒன்றுதான் என்பதையே மேலே உள்ள செய்திகள் உணர்த்துகின்றன என்பது முடிபு. இதனைப் போன்றே வெறியாட்டெடுக்கும் மரபும் இவர் பாடலில் இடம் பெற்றுள்ளது.

வெறி விலக்கும் தோழி

தலைவி உடல் மெலிந்த நிலையைக் கண்ட செவிலி முதலியோர் தெய்வக் குற்றத்தால் தலைவி இளைத்தாள் போலும் எனறு எண்ணுகிறார்கள். வெறியாட்டெடுத்து வேலனுக்குச் சிறப்புச் செய்தால் இந்நோய் நீங்கிவிடும் என்று எண்ணி வெறியாட்டுக்கு ஆவண செய்கிறார்கள். வேலன் ஆவேசம் வந்து ஆடிக் கொண்டிருக்கிறான். ஆட்டுக் குட்டியைப் பலிகொள்ள இருக்கும் நேரம்; அப்போது தோழி வருகிறாள். தலைவனால் வந்த நோய் என்று அறியாததனால், ஒன்றும் அறியாத ஆட்டின் குட்டியையும் அறுத்து உயிர்க்கொலை புரியவும் முற்பட்டுள்ள அறியாமையை எண்ணி இரங்குகின்றாள். வேலனைப் பார்த்து நயம்பட,

. . . . மெலிவாளுட் படர்தருநோய்
வெல்லவந் தீர்கொல் வெறிவேல ரேயிவ் வெறுந்தகரைக்
கொல்லவந் தீர்கொல் சொலவேண்டுங் கோபங் கொளாதெனக்கே (356)

என்றுரைக்கின்றாள். இவ்வாறு கூறுவதன் மூலம் தலைவன் ஒருவனை தலைவி விரும்பியிருக்கின்றாள். என்ற செய்தி வெளிப்பட வேண்டும் என்பதே அவள் நோக்கம். இப்பாடலும்,

முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவலோம்பு மதி வினவுவதுடையேன் (குறுந். 322)

என்ற குறுந்தொகைப் பாடலை அப்படியே ஒத்துள்ளமை சுட்டத்தக்கது.

மரபு மாறுபட்டமை

இங்ஙனம் பண்டை இலக்கியங்களின் மரபைப் பின்பற்றிய மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் மரபு மாற்றமாகவும் ஒரு பாடலைப் புனைந்துள்ளார். தலைவனும், தலைவியும் இயற்கைப் புணர்ச்சியில் கூடியதன் பின்பு தலைவன் அவளை விடுத்துப் பிரிந்து செல்வதைப் போன்ற பாடல்கள் பண்டை இலக்கியங்களில் இல்லை. பிள்ளை அவர்கள் இம்மரபு மாறி தலைவியோடு கூடிய தலைவன் தலைவியை விட்டுச் செல்கின்றான். அப்படித் தைரியமாக அவன் செல்வதற்குக் காரணம் அவ்விடத்தில் இருந்தது குருகு ஒன்று மட்டுமே. அதுவும் 'கயல் கொல் குருகு' எனவே அது சாட்சி சொல்லாது என்று துணிந்ததால் அவளை விடுத்துச் செல்கின்றான்.

இதனை,

போழுங் குளிர்மதி சூடும் பிரான்புக லித்துறைவாய்
வாழுந் தலைவர் கலந்தவந் நாளங்கு வைகு கொலை
சூழுங் குருகு கரியுரை யாமை துணிந்தனரி
லாழும் படியெனை நீத்தடைந் தார்த மகனகரே (348)

என்று பாடுகின்றார். இப்பாடல் அவர் கால சமுதாயச் சூழலை வெளிப்படுத்துவதாகக் கருத இடமுண்டு.

தொகுப்புரை

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் என்று புகழப்படும் பெருமையுடையவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. இவர் எண்பதுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களைப் பாடிப் புகழ் பெற்றவர். பிள்ளையவர்கள் பாடிய கோவைகள் மூன்று. இதில் சீகாழிக்கோவையில் அறத்தொடு நிற்றல் துஃறையில் 19 பாடல்கள் உள்ளன. நம்பியகப் பொருளில் வரும் அறத்தொடு நிலைத்துறைகளே இக்கோவைக்கும் அடிப்படையாய் அமைந்துள. அறத்தொடு நிற்றலில் தோழி அறத்தொடு நிற்கும் மூன்று துறைகள் சிறப்பாகப் பாடப் பெற்றுள்ளன. பாட்டுடைத் தலைவராகிய சீகாழிநாதர் அனைத்துப் பாடல்களிலும் போற்றப்படுகின்றார். பண்டை இலக்கியங்களில் தோய்ந்து அதைத் தம் இலக்கியத்தில் ஏற்றிப் போற்றும் மரபு இவர்தம் பாடல்களின் தனிச் சிறப்பாகும்.

51. தமிழ்ப்பணியில் ஒரு துளி

சு. செல்லையா பிள்ளை
நாகர்கோவில்

தமிழில் பல படைப்புகளைப் படைத்து அருந்தொண்டாற்றிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தமிழ்ப்பணியாகிய தேனில் ஒரு துளி, அதாவது சேக்கிழார் பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவம் பெறும் சிறப்பிடம் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

பிள்ளைத் தமிழ் நூல்களுக்கு அம்புலிப் பருவமே ஒரு அளவுகோலாக விளங்குகிறது. இப்பருவத்திலேயே கவிஞனின் அறிவுத் திறங்கள் வெளிப்படுகின்றன. குழந்தையின் 18-ஆம் மாதம் பாடப்படுவது. இப்பருவம் மற்றைய பருவங்களைப் போலப் பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியாகிய குழந்தையை வேண்டிப் பாடப்படும் பருவம் அல்ல. இது சந்திரனை வேண்டிப் பாடப்படும் பருவமாகும். பிள்ளைத்தமிழ்ப் பாட்டுடைத் தலைவனாம் குழந்தையின் பெருமைகளைப் பேசி, அப்பெருமைகள் சந்திரனுக்கு இல்லை என்பதைக் காட்டியும், பாட்டுடைத் தலைவனுக்கும் சந்திரனுக்கும் ஒப்புமை காட்டியும் பாட்டுடைத் தலைவனாம் குழந்தையுடன் வந்து விளையாடுமாறு அழைக்கும் முறையில் பாடப்படுவதாகும். இவ்வாறு அழைக்கும்போது சாதி, பேத, தான, தண்டம் என்னும் நால்வகை உபாயங்களால் அழைத்தல் மரபு.

சேக்கிழார் பிள்ளைத்தமிழில் அம்புலிப்பருவம் முதல் இரண்டு பாடல்கள் சாம உபாயத்திலும் 3,4,5,6, என்னும் நான்கு பாடல்கள் பேத உபாயத்திலும் 7,8,9 என்னும் மூன்று பாடல்கள் தானம் உபாயத்திலும், பத்தாவது பாடல் தண்டம் உபாயத்திலும் அமைந்துள்ளன. செவிலித்தாயர் அம்புலியைப் பாட்டுடைத் தலைவனாம் குழந்தையோடு விளையாட வருமாறு அழைப்பதாகப் பாடப்பட்டுள்ளன.

சாமம்

சந்திரன் பதினாறு கலைகளுடன் திகழ்பவன்	-சேக்கிழார் பெருமை மிக்க அறிவுடையவர்
குவளை மலர் சந்திரனைக் கண்டு உவக்கும்	-சேக்கிழார் வேளாளர், வேளாளர்க் குரிய மாலை செங்கழுநீர் மாலை - ஆகவே கழுநீர் மாலை உவக்கும்.
சந்திரன் திருப்பாற்கடலில் தோன்றியவன் அவனது குளிர்ந்த ஒளியைக் கண்டால் கடல் பொங்கும்.	-சேக்கிழாரின் தோற்றத்தால் நெடிய வம்பர் அவைவாய் அடங்கும்
சந்திரன் இடபராசிக்கு உரியவன்	சேக்கிழார் காளையை உரிமை கொண்டவர்

இத்தகைய காரணங்களால் சேக்கிழார் சந்திரனுக்கு ஒப்பாவார்- ஆகவே சந்திரனே குழந்தையோடு விளையாட வா - என அழைக்கிறார் (பா. 62)

சந்திரன் தோன்ற தாமரைகள்குவிந்து விடும். அத்தகைய ஒளிக்கதிர்களைப் பெற்றவன்	-சேக்கிழாரும் அன்பர்களது கைகளாகிய தாமரைகள் குவிய விளங்குபவர்.
சாலி என்னும் நட்சத்திரங்களோடு பொலிபவன்	-சேக்கிழார் வீடு முழுவதும் சாலி நெல் கொண்டு மகிழ்பவர்.
சந்திரன் அத்திரிமா முனிவரின் வழியில் வந்தவன்	-சேக்கிழார் சிவபிரானின் கண் போல பொலிபவர்.
இறைவனின் சடாமுடியில் இருக்கும் கங்கையுடன் இருக்கும் சம்பந்தம் உடையவன் சந்திரன்	-வோளளர்கள் கங்காநதி சம்பந்தம் உடையவர்கள். கரிகாலன் இவர்களைக் கங்கைக் கரையில் இருந்து குடியேற்றினான் என்பது வரலாறு. வேளாளர் குலத்தில் தோன்றிய சேக்கிழார் வரநதி பந்தம் உடையவர்.
திருமால் செய்யும் காக்கும்தொழிலைச் செய்பவன் சந்திரன். பயிர்களின் விளைச்சலுக்குபால் சுரப்பித்து உலக உயிர்களைக் காப்பவன். அதனால் திருமால் காக்க வேண்டியது இல்லை.	- வோளாளர் உலக உயிர்களை உழவுத் தொழில் செய்து காப்பவர். அதனால் காப்புத் தொழில் வேளாளராம் சேக்கிழார்க்கும் உண்டு.

(பா. 63)

இன்னோரன்ன காரணங்களால் சந்திரனும் சேக்கிழாரும் ஒருவரையொருவர் ஒப்பாவர். ஆகவே சந்திரனே! குழந்தையோடு விளையாட வா, என அழைக்கிறார். இவ்விரு(1.2) பாடல்களும் சிலேடை அணி அமையப்பெற்றுள்ளன. செவிலித்தாயார் சந்திரனுக்கும் குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெறும் பாட்டுடைத் தலைவனாம் சேக்கிழார்க்கும் ஒப்புமை கூறி அவனோடு விளையாட வருமாறு சந்திரனை அழைக்கின்றனர்.

பேதம்

இனி 3,4,5,6 ஆகிய நான்கு பாடல்களில் பாட்டுடைத் தலைவனாகிய சேக்கிழார்க்கும் சந்திரனுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறி, சந்திரனை விளையாட அழைக்கிறார்.

சந்திரன் இரவில் தோன்றுபவன் யாசிப்பவனும் ஆவான். ஆதலால் இரவோன் எனப்படுவான்.	-சேக்கிழார் இல்லை என்னாத வேளாளர் குலத்தில் பிறந்தவர். ஆகவே பிரபு என அழைக்கப்பட்டார்.
கள்ளர்கள் சந்திரன் வருகையை விரும்புவர்.	-சேக்கிழார் கள்வர்களை (சமண பௌத்தர்களை) வெறுப்பவர்.

சந்திரன் நண்டு (கள்வன்) ராசியில் சஞ்சரிப்பவர் -சேக்கிழார் உரவோர் (நல்லவர்) நண்டு முதலிய புலாலை வெறுப்பவர்.

சந்திரன் தேவர்களில் ஒருவனே ஆயினும் ராட்சதன் என்று பொருள் படும் தானவன் என்னும் பெயர் உடையவன் ஆதலின் சிறுமைஉடையவன் -சேக்கிழார் தேவர்களில் ஒருவராக எண்ணப்பட்டுக் கோயில்களில் வணங்கப் படுகிறார்.

சந்திரன் பரவுவோன் அல்லாதான் என்னப்பட்டான் -சேக்கிழார் பரவோன்- எல்லோரும் சேக்கிழாரைப் பரவுகின்றனர். ஆதலின் பரவோன் எனப்பட்டார். (சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-64)

சந்திரன் பெரியோனாகிய பிரகஸ்பதியிடத்தில் நிக்கிரகம் (சாபம்)பெற்ற பேதை -சேக்கிழார் தில்லையில் தாண்டவம் செய்யும் இறைவன், இனிது செய்யும் பேறு பொருந்திய அனுக்கிரகம் (அருள்)பெற்ற பெரியவன்.

மாற்றுயர்ந்த சிறந்த பொன்னோடு கரும்பொன் என்று கூறப்படும் இரும்பு 'பொன்' என்ற பெயரால் ஒத்த போதிலும், செம்பொன்னுக்குள்ள சிறப்பே பெரிதாகும். இதை விண்ணும் மண்ணும் உணரும். அதுபோல சந்திரனே! உன்னைவிட சேக்கிழார் உயர்ந்தவர் அப்படியிருந்தும் தமது கருணைப் பண்பால் சந்திரனை விளையாட அழைத்தது அவரது அருள் கிரக்கத்தைக் காட்டுகிறது. ஆகவே அம்புலியே! விளையாட வா. என்கின்றனர். (பா. 65)

சந்திரன் வெண்மை மதி உடையவன் (வெள்ளறிவு உடையவன்) அறிவீனன். -சேக்கிழார் செம்மையான அறிவு உடையவர்

வெம்மையான சூரியன் மற்றும் 12 ராசிகளில் மாதந்தோறும் கலந்துஉறவு கொள்பவன் சந்திரன். -சேக்கிழார் எக்காலத்தும் குளிர்ந்த அருள்பண்பு உடையவர்களோடு உறவுகொள்ளும் இயல்பினர்.

சந்திரன் மாதந்தோறும் 15 நாள் வளர்ந்து நிறைதலும் 15 நாள் தேய்ந்து குறைதலும் இயல்பாக உள்ளவன். -சேக்கிழார் ஒரே தன்மை உடையவர். அவரது வாழ்வில் குறைவு இல்லை என்றும் நிறைவே உண்டு. குறையற்றவர்.

இத்தகைய கறைகள் பல சந்திரனிடத்து இருந்தும் சந்திரனை விளையாட வா என்று அழைத்தது சேக்கிழாரது கருணையே ஆகும். (பா:66)

பி. 22.

சந்திரன் ராகு என்னும் பாம்பு விழுங்கி உமிழ்ந்திடநடுநடுங்கி திரிபவன். சந்திரன் ஒரு சிறு பாம்பினால் அலைக்கழிக்கப்படுபவன்	-சேக்கிழார் முன் பேரறிஞனாகிய ஆதிசேடனும் பர அஞ்சுவான். (வடமொழி இலக்கணம் செய்த பாணி ஆதிசேடன் - அம்சம் ஆகும்)
சந்திரனை ஈன்ற கடல்(பரவை) காமதேனு, கற்பகமரம், லட்சும், முதலானவர்களைஈன்று அதன்பிறகு உன்னை எளிதாக ஈன்றது.அதனால் சந்திரனுக்குத் தனிச்சிறப்பு இல்லை.	-சேக்கிழார் ஒரு பாட்டில் ஏழு முறை 'பரவை' என்னும் சொல்லை நிறுத்தினார்.. இச் செயல் திறமை மிக்க செயல்.

(பா. 67)

இத்தகைய சிறப்புமிக்க சேக்கிழார் சந்திரனை, 'விளையாட வா' என்று அழைப்பது சேக்கிழாரின் கருணைத் திறத்தைக் காட்டுகிறது எனக்கூறிச் செவிலித்தாயார் அம்புலியை அழைக்கின்றனர். 3,4,5,6 ஆகிய நான்கு பாடல்களும் பேதம் என்ற உபாயத்தில் அமைந்து விளங்குகின்றன.

தானம்

இவ்வாறெல்லாம் கூறி அழைத்தும் சந்திரன் குழந்தையோடு விளையாட வரவில்லை. ஆதலால் அம்புலி வந்து விளையாடினால் சந்திரனுக்குக் கிடைக்கபெறும் நன்மைகள் அடுத்துக் கூறப்படுகின்றன.

கன்னிப்பெண்கள் விரைவில் திருமணம் நடக்கவேண்டி சந்திரனை வணங்குவர். பிறைதொழுது நிலாச்சோறு படைத்தலை எருவிட்டுச் சந்திரனை வளர்ப்பர். சேக்கிழார் சிறப்புடைய உழவுத்தொழிலையே எவர்க்கும் காட்டுதலின் உழவுத்தொழில் இவர் காட்டும் தொழில். சந்திரனிடத்தில் முயல் (களங்கம்) உள்ளது. சேக்கிழார் முயற்சியாகிய முயலைக் காட்டுவார். ஆசு, மதுரம், சித்திரம் வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகள் பாட வல்லவர். உழவுத் தொழிலைக் கைம்மாறு கருதாமல் செய்பவர். அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நான்கை விரித்துப் பாடும் பாங்குடையவர். இத்தகைய சிறப்புடைய சேக்கிழாருடன் அம்புலி ஆட வா-என அழைக்கிறார். (பா.68)

மருத நிலத்தில் சந்திரன் தன் ஒளியால் பைங்கூழ் வளர்த்தலை அறிந்து அதனைப் பாராட்டாமல் இரார் சேக்கிழார். சுந்தரர் கூனையும், குருடையும், நீக்கி அருள் செய்தார். திருஞான சம்பந்தரும் கூன் பாண்டியனது கூனைப் போக்கினார். சேக்கிழாரும் தான் பாடிய பாடல்களில் 'கூன்' என்னும் உறுப்பைப் பாடியதே இல்லை. சம்பந்தம் என்னும் பொன்னை விடச் சிறந்த பெரிய புராணத்தைப் பாடியவர். இத்தகைய சிறப்புடைய சேக்கிழாரிடம் வந்து சந்திரனே விளையாடு. உன்னிடத்தில் காணப்படும் கூன் ஒழியும் இதுவே நன்மை, என்று கூறி விளையாட அழைக்கிறார். (பா. 69)

சமண மதத்தின் களங்கம் நீக்கி உயர்ந்த சைவ நிலையை எங்கும்

ஆக்கிய தம்பிரானாகிய சேக்கிழார், சந்திரனே! உனது களங்கத்தையும் போக்கி, பரிசுத்த நிலையை ஆக்குவான். இதை விடச் சிறந்த உறுதி வேறு என்ன உள்ளது? மேலும் சான்றோர்கள் பல கலைகளும் ஒன்று சேர்ந்தாற்போல உருக்கொண்டு சேக்கிழாரின் திருவருள் நோக்கிற்கு எதிர்பார்த்து நிற்பார். அவர்களையும் புறக்கணித்து விட்டுச் சந்திரனைக் கடைக்கண்ணால் கண்டு 'என்னோடு ஆடவா' என்று அழைத்தது சேக்கிழாரின் பெருங்கருணையாகும். (பா.70)

தண்டம்

இவ்வாறு தான உபாயம் மேற்கொண்டழைத்தும் அம்புலி வரவில்லை. எனவே தண்ட உபாயம் மேற்கொண்டு குழந்தையோடு விளையாட வருமாறு அழைக்கிறார். சேக்கிழார் சந்திரனிடம் கடுஞ்சினம் கொண்டிருக்கிறார். அன்பாகப் பலமுறை விளையாட அழைத்தும் சந்திரன் வராமையால் சேக்கிழார் முகம் வெதும்புகிறார். சேக்கிழார் பக்கம் செல்ல சந்திரன் நாணம் மேற்கொள்கிறான். சேக்கிழார் முனிந்தால் உனக்கு வேறுபுகலிடம் இல்லை. புன்மையான சந்திரன் என்று சேக்கிழார் சொன்னால் சிவபெருமானும் உன்னை வெறுப்பார். சேக்கிழார் சந்திரனை வெறுத்தால் சிவபிரானும் வெறுத்துவிடுவார். அப்படியெனில் சந்திரனே! உனக்குச் சாவதைத் தவிர வேறு வழி இல்லை. ஆதலால் நீ சேக்கிழாரை அடைந்தால் நலம் உண்டு. மேல் உலகு வாழ்க்கையை விரும்பும் சேக்கிழாருடன் 'அம்புலியே விளையாட வா' என்று செவிலித்தாயார் அழைக்கின்றனர். இவ்வாறு சாம, பேத, தான, தண்டம் உபாயங்களால் சந்திரனைச் சேக்கிழாரோடு விளையாட வா எனச் செவிலித்தாயார் அழைக்கின்றனர்.

பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் அம்புலிப்பருவம் திட்ப நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இயற்கை வருணனைக்கு மட்டுமே பாடுபொருளாயிருந்த நிலவை முன் வைத்துப் பாட்டுடைத் தலைவனின் சிறப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. படைப்பாசிரியர்களின் உழைப்பும் ஆற்றலும் வெளிப்பட இப்பருவமே மிகுதியும் துணைபுரிவதைக் காண முடிகிறது. அம்புலிப் பருவமே ஆசிரியரின் திறமைக்கு அறைகூவலாகவும் அளவுகோலாகவும் விளங்குகிறது.

52. சிவனடியார்கள் காப்பு

தவத்திரு சொக்கலிங்க சுவாமிகள்
தஞ்சாவூர்

சோறு மணக்கு மடங்க ளெலாந்
　　தூய்மை மணக்குஞ் சிந்தையெலாம்
சுவண மணக்கு மாடையெலாந்
　　தொங்கன் மணக்குந் தோள்களெலாஞ்
சேறுமணக்குங் கழனியெலாஞ்
　　செல்வ மணக்கு மாடமெலாந்
தென்றல் மணக்கு மேடையெலாந்
　　தெய்வ மணக்குஞ் செய்யுளெலா
நீறு மணக்கு நெற்றியெலா
　　நெய்யே மணக்குங் கறிகளெலா
நெருப்பு மணக்குங் குண்டமெலா
　　நேய மணக்கும் வீதியெலாஞ்
சாறு மணக்குங் குன்றத்தூர்
　　தலைவா தாலோ தாலேலோ
சுவலா சுமபண் டிததெய்வச்
　　சைவா தாலோ தாலேலோ (தாலப்பருவம் . . . .5)

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பெரியபுராணம் பாடிய கவிவல்வராம் சேக்கிழார் மீது பிள்ளைக்கவி பாடிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திருமிகு மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் குழந்தையைத் தொட்டிலிட்டு வாய் மணமும் கமழப் பாடித் தாலாட்டுகிறார்.

காப்பு செங்கீரை தால் முத்தம் எனத் தொடங்கும் பிள்ளைக்கவி இலக்கணப்படி காப்புப் பருவம் பாடுகின்றார். பொதுவாகப் பாடும்போது காத்தற் கடவுளாம் திருமாலை அழைத்து, இக்குழந்தையைக் காக்க என்று வேண்டுவதுதான் மரபு. ஆனால் சைவந் தழைக்கத் திருப்புராணம் நல்கிய சேக்கிழாரோ அத்திருப்புராணமே அதன் சருக்கங்களே காக்க வேண்டுமென்று வேண்டுகின்றார்.

முதற்கண் பாயிரமாக விநாயக வணக்கம் கூறிய பிற்றை, குருவணக்கமும் அவையடக்கமும், கூறுங்கால், தன்னை ஆதரித்த திருவாவடுதுறை ஆதீன, அப்போது செங்கோலோச்சிய சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளைப் புகழ்ந்து அவர் குமரவேளுக்கொப்பானவர் என்று கூறி மகிழ்கின்றார்.

காப்புப் பருவத்தில் திருமால் பள்ளிக் கொள்ள வேண்டிய பாற்கடலைத் தில்லைவாழ் அந்தணர், 2. திருநீலகண்டர், 3. இயற்பகையார், 4. இளையான்குடிமாறர், 5. மெய்ப்பொருள் நாயனார், 6. விறன்மிண்டர், 7. அமர்நீதியார் ஆகிய எழுவரும், நம் குன்றத்தூர் பிள்ளையைக் காக்க

வேண்டும் என்று வேண்டுகின்றார். இதனை,

கார்கொண்ட சோலைசூழ் ஆரூர ரோரரைக்
 கானம்பி யாரூரர்முக்
காலரைக் காலாக முடிவுசெய் தருண்மாக்
 கவித்திசையின் வீற்றிருக்கும்
ஏர்கொண்ட தில்லைமூ வாயிரர்முன் வழுவரும்
 மெழுவருந் தழுவருமெம
திதயந் தழால்கொண் டுறைந்திடச் செய்தவரை
 யெப்போது மேத்தெடுப்பாம் என்று கூறுகின்றார்.

இவ்வாறே எஞ்சியுள்ள ஒன்பது பாடல்களிலும், இலைமலிந்தவேனம்பி, மும்மையாலுலகாண்ட, வம்பறா வரிவண்டு, வார்கொண்ட வனமுலையாள், பொய்யடிமையில்லாத, கறைக்கண்டன கழலடியே, கடல் சூழ்ந்த உலகெலாம், பத்தராய்ப் பணிவார்கள், மன்னியசீர் மறைநாவன் ஆகிய சருக்கங்களைத் தலைப்பிட்டு, திருத்தொண்டர்கள் அறுபத்துமூவரில் மேற் சொன்ன எழுவரேயன்றி எஞ்சிய ஐம்பத்தாறு தனியடியார்களையும் (பத்தராய்ப் பணிவார்கள்)ஒன்பது தொகையடியார்களையும் ஆக எழுபத் திருவரையும், தேசுபொலி அருண்மொழித் தேவரைக் காக்க வேண்டுமென்று பாடுகின்றார். இது இச்சேக்கிழார் பிள்ளைத்தமிழில் ஒருதனிச் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.

தமிழுலகில், "பிள்ளை" என்று சொன்னால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களையும், "அய்யர்" என்று சொன்னால் டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்களையும் குறிக்கும். இத்தகைய பிள்ளை என்று பெயரெடுத்த திரிசிரபுரத்தார், குன்றத்தூராரைக் குழந்தை, பிள்ளையாக்கிப் பாடி மகிழ்கின்றார்.

இப்பிள்ளைத்தமிழில் பிள்ளையவர்கள், இலக்கிய நயம் தோன்ற (முதற்பாட்டிலேயே)ஒரரைக்கால், முக்காலரைக்கால் என்றெல்லாம் கூறித் தம் கவித் திறத்தினை வெளிப்படுத்துகிறார்.

இப் பிள்ளைத்தமிழின் காப்புப் பருவத்தின் சிறப்பு நயம் காண பிற பிள்ளைத்தமிழ் நூல்கள் சிலவற்றின் காப்புப் பருவத்தினைக் காணவேண்டும்.

பிறநூலான, "திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழில், காப்புப் பருவத்தில் விநாயகர் சிவபெருமான், உமாதேவியார், (மீண்டும்) விநாயகர், சுப்பிரமணியர், திருஞானசம்பந்த மகாமந்திரம் திருநாவுக்கரசர், ஆலாலசுந்தரர், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார், கண்ணப்ப நாயனார், சண்டேசுவரர் ஆகியோர் திருஞானசம்பந்தனைக் காக்கின்றனர்.

செங்கோட்டு வேலவர் பிள்ளைத்தமிழில், திருமால் பிரணவம், நாரிகணபதி, பிரமன், தேவேந்திரன், கார்த்திகை மாதர்கள், நாமகள், அழகு நாச்சியார், சத்தமாதர்கள், அஷ்ட வயிரவர், தெய்வானை, வள்ளிநாயகி,

வேலாயுதம், தகர்வாகனம், எழுபெயர்ப் பெரும்பதி மலைகாவலர், ஆகிய 16 பேர்களை காக்கின்றனர்.

சிதம்பரம் ஸ்ரீபாண்டிநாயகம் எனும் முருகப் பெருமான் பிள்ளைத்தமிழில் திருமால், சிவபிரான், உமாதேவியார், விநாயகர், நவக்கோள்கள், கலைமகள், இலக்குமி, பலதேவர், சமயச்சின்னம், பொதுத்தெய்வம் ஆகியோர் காக்கின்றனர்.

சென்னை, கந்தகோட்டம் முருகக்கடவுள் பிள்ளைத்தமிழில் திருமால், பரமசிவன், பராசக்தி விநாயகர், திருமகள், பிரமன் கலைமகள், நவக்கோள்கள் பலதேவர், ஒருமை ஆகிய பதின்மர் காக்கின்றனர்.

இவ்வாறு காப்பதில் முப்பத்து முக்கோடி தேவர்கள் உள்ளிட்ட தெய்வங்கள் பல பேசப்படும். நம் பிள்ளையவர்கள் தெய்வ அடியார்கட்கு சிவனடியார்கட்கு முதன்மை தந்து காக்கச் சொல்வதன் மூலம் சேக்கிழார் பாடிய பெரியபுராணத்திற்கு மேலும் புகழ் சேர்க்கின்றார். காக்கக் கடவ தெய்வங்கள் பொலியுமிடத்தில், சிவனடியார்களை எழுந்தருளச் செய்து, சிவ மாகப் பாவித்து சேக்கிழாரைக் காக்க அழைக்கும் திறம் பிள்ளையவர்கள் நாயன்மார்களிடம் கொண்ட பேரன்பினைக் காட்டுகிறது. சிவனடியார்களைக் காக்க அழைத்தால் அவ்வடியார்கள் உள்ளத்துறைகின்ற சிவனே காப்பார் என்று பிள்ளையவர்கள் கருதினார்கள் போலும்.

செங்கீரை முதலான பருவங்களில் பாடப்பட்டுள்ள பாடல்கள் அருமையிலும் அருமை. பாலேரி பாய, தேன்மாரி பெய்ய, நற்பாகு கற்கண்டாலே எருவிட, அமுதவயல் முப்பழச்சாற்றில் விளைந்த கரும்பு போன்றன சுவைத்து இன்புறத் தக்கன. முழுமையும் கூறினால் பெருகும் என்றஞ்சி இக்கட்டுரையின் முதற்கண் கூறிய "சோறு மணக்கும் மடங்களெல்லாம்" எனத் தொடங்கும் பாடலையே சான்றாக்குகிறோம்.

அப்பாடல் எளிமையிலும் எளிமை, பலருக்கும் பொருள் புரியும். மடங்களிலெல்லாம் ஏராளமான சிவனடியார்கள் திருவமுது செய்வார்கள். நாடோறும் மாகேசுவர பூசை (அன்னம் பாலிப்பு)நிகழும். சோறும் மணக்கும். பெரியவாழை மல்லலங்குறுத்தினில் அன்னமிட்டு, அகப்பையினால் நெய்யினை மொண்டு ஊற்றுவது திருவாவடுதுறை ஆதீன வழக்கம். அதனால் நெய்யே மணக்கும். கறிகளெல்லாம் என்பதோடு சோறும் நெய்மணக்கும். அப்படி அகப்பையினால் நெய் ஊற்றும் வழக்கம் இன்றும் திருவாவடுதுறை ஆதீனத்தில் உண்டு.

எதுமணத்தால் எது சிறப்பு என்பதனை அழகாக எடுத்துக்கூறிய பாங்கு அழகுடைத்து. "சோழநாடு சோறுடைத்து" என்பது வெளிப்படையாகச் சோழநாட்டின் பெருமையுரைப்பது.

இத்தகு சிறப்பு வாய்ந்த சேக்கிழார் பிள்ளைத் தமிழேயன்றி, வேறுபல நூறு நூல்களையும் யாத்து நமக்களித்த திருவாவடுதுறை ஆதீனச் சான்றோர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் உலகம் உள்ளளவும் போற்றத் தக்கவர்.

வாழ்க மகாவித்துவான் பிள்ளையவர்கள்

53.சேவையர் பிரான் பிள்ளைத்தமிழ்

ப. ஞானம்
அண்ணாமலைநகர்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய பிள்ளைத்தமிழ் நூல்களுள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் தனிச்சிறப்புடையதாகக் காணப்படுகிறது. மக்களிடையே அறிவும், அன்பும், பண்பும் வளர சமுதாய ஒருமைப்பாடு தழைக்க வாழ்ந்த புலவர் பெருமக்களுள் பெரியபுராணம் அருளிய சேக்கிழார் குறிப்பிடத்தக்கவர். இப்புலவர் பெருமானைக் குழந்தையாக்கி செந்தமிழ் மணக்கும் கவிமாலையைச் சூட்டி மகிழ்கிறார். பிள்ளையவர்கள், பக்திச்சுவை பாடுவதில் சேக்கிழாரையும் விஞ்சிவிடக்கூடிய வகையில் இலக்கிய செழுமையுடையதாகவும், சைவமணம் கமழ்வதாகவும் விளங்குகிறது சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

பக்தி இயக்க-இலக்கியக் காலக் கட்டத்தில் தோன்றிய பிள்ளையவர்கள் தம் முன்னோர்களான குமரகுருபரரையும், சிவப்பிரகாசரையும், சிவஞான முனிவரையும், கச்சியப்ப சிவாச்சாரியாரையும் பின்பற்றிப் பிரபந்தங்களையும் தலபுராணங்களையும் எழுதித் தமிழையும் சைவத்தையும் வளர்த்தார். திருவாவடுதுறை ஆதீனப் பெரும்புலவரான இப்பெருமகனாரின் புலமைத் திறனுக்கு சேக்கிழார் பிள்ளைத்தமிழும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றமை கருதத் தக்கதாகும். சேக்கிழார் பிள்ளைத்தமிழ் தோன்றக் காரணம், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பெற்ற பல்வேறு பதிப்புகள். காப்புப் பருவச் சிறப்பு, குருவணக்கம், சேக்கிழார் பெருமை. அவர் புராணம் பாடிய வரலாறு. வேளாளர் குலச் சிறப்புகள், புராண இதிகாச, பிற வரலாற்றுக் குறிப்புகள் சமயக் கருத்துக்கள். முன்னோர் புகழ், போன்ற கருத்துக்கள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

முதல் நூல் - வழி நூல்

திருக்கயிலாயப் பரம்பரையில் சிறந்த ஞானாசிரியராகத் திகழ்ந்தவர் உமாபதி சிவாச்சாரியார். இவர் சேக்கிழார் வரலாற்றை நூற்று மூன்று பாக்களில் சேக்கிழார் புராணம் என்ற பெயரால் பாடினார். அப்பரம்பரையின் சிறந்த சீடராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். தம் குருநாதரைப் பின்பற்றி சேக்கிழார் பெருமைகளையெல்லாம் பாராட்டி நூற்று மூன்று பாக்களால் சேக்கிழார் பிள்ளைத் தமிழ், என்ற பிள்ளைத் தமிழ் இலக்கியத்தைப் பாடினார். இந்நூல் சொற்சுவையும், பொருட்சுவையும் மிகுந்த சைவ சமயக் கருவூலமாக விளங்குகிறது.

பல்வேறு பதிப்புச் சிறப்புகள்

கி.பி. 1876-இல் சென்னையிலிருந்த கலாரத்னாகரம் அச்சகத்தில் முதல் முதலில் ஆறுமுக சுவாமிகள் என்பார் இந்நூலை அச்சிட்டனர். இதன் பின்னர் கி.பி. 1902- இல் தஞ்சையிலிருந்த பூரணச் சந்திரோதய அச்சகத்தில் திருப்பரங்குன்றம் அ. நாராயண சரணர் என்பார் இதனை அச்சிட்டுள்ளனர். கி.பி. 1926-இல் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் கணப்பாக்கம் சதாசிவ செட்டியாரவர்களின் குறிப்புரையுடன் அச்சிட்டனர். இதன் பின் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணவருள் ஒருவராகிய டாக்டர் உ.வே. சாமிநாதைய்யர் 1926 இல் பதிப்பித்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டில் இப்பிள்ளைத்தமிழைச் சேர்த்துப் பதிப்பித்துள்ளனர். அடையாறு கலாட்சேத்திரம் பதிப்பொன்றும் குறிப்புரையுடன் வந்துள்ளது. கி.பி.1964 இல் வித்துவான் பாலூர்கண்ணப்ப முதலியார் எழுதி வெளியிட்ட பதிப்பொன்றும் வந்துள்ளது. கரந்தைப் புலவர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு அடிகளாசிரியர் 1967-இல் சொற்பொருளுரையுடன் வெளியிட்ட பதிப்பொன்றும் வந்துள்ளது. இவ்வாறு பலரும் இதனை விரும்பிப் பதிப்பித்த காரணம் ஒன்றே இந்நூலின் சிறப்பை இனிது விளக்கும்.

காப்புப் பருவச் சிறப்பு

சேக்கிழார் பிள்ளைத்தமிழிலும் காப்புப் பருவத்திலும் பாட்டியல் இலக்கணம் கூறும் தெய்வங்கள் எதனையும் காப்புத் தெய்வமாக வைத்துப்பாடாமல் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையில் அமைந்த நாயன்மார்கள் அனைவரும் காக்க என்ற முறையில் அத்திருத்தொண்டத் தொகையிலுள்ள பதினொரு பாடல்களின் முதல் குறிப்புகளையே தலைப்பாகக் கொண்டு பதினோரு பாடல்களைப் பாடி காப்புப் பருவத்தை அமைத்துள்ளார் பிள்ளையவர்கள்.

குரு வணக்கம்

"ஓங்கு கயிலாய பரம்பரை நந்தி அடிகட்கு உறும் மரபு எட்டாவது பின்தோன்றல் ஆய்'' எனத் தொடங்கும் பாடலில் (பாயிரம்-2) குருவணக்கமும், அவையடக்கமும் தெரிவிக்கின்றார் பிள்ளையவர்கள்.

திருக்கைலாயப் பரம்பரையில் நந்தியம் பெருமானுக்குப் பின்வரும் குருமரபில் எட்டாவதாக எண்ணும்படிப் பின்தோன்றும் குருமூர்த்தியாகி உயர்ந்த திருவாவடுதுறை பதியில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணிய தேசிகற்கு முன்வந்த குருமரபில் பத்தொன்பதாகக் கருதும்படி முன்தோன்றிய குரு மூர்த்தியாகி விளங்கி, "தேங்கு சிவப்பிரகாசம் முதலிய வாய்மலர்ந்து திகழ் உமாபதி சிவனே அருண்மொழித் தேவன்புராணம் விரித்து உரைத்தான்"

அவன் திருவடிகளை வணங்கி என் சிற்றறிவுக்குப் பொருந்த பிள்ளைத்தமிழ் என்ற நூற்று மூன்று திருவிருத்தத்தாலான சிற்றிலக்கியம் ஒன்றை சேக்கிழார் மேல் யான் உரைப்பேன். அது அறிவால் மிக்க

பேரறிஞர் கூட்டத்துள் பெரிய நகைப்பினையே தரும் என அவையடக்கம் கூறும் பாங்கு மனம் கொள்ளத் தக்கதாகும்.

சேக்கிழார் பெருமை

சிவபெருமானைப் பாடுவதையே இப்பெரும்புலவர் தம் குறிக்கோளாக-தலையாய கொள்கையாக வைத்திருந்தார். இக்காரணம் கருதியே பக்திநெறியைப் பாடினார். எனவே, சைவ நெறிப் பெரும்புலவரான சேக்கிழாரை, 'புலஞ்சார் பக்தி விளை நிலமே' என்றும் 'ஒழியா பக்திக் கடல் வருக' என்றும் அழைத்து மகிழ்கிறார்.

அருண்மொழித் தேவன் என்ற இயற் பெயரைக் கொண்ட சேக்கிழாரின் பெருமைகளைக் கூறுமிடத்து, "குன்றை உற மேவி திருந்தும் ஏர் வளம் கொண்டு பெருமையின் மேல் ஆகி சிறத்தலால் செம்மேனி குமரவேள் ஒத்தும்" என (பாயிரம்-2) முருகனுக்கும் சேக்கிழாருக்கும் சிலேடை நயம்பட ஒப்புமை கூறுமிடத்து பிள்ளையவர்களின் புலமைத்திறன் இனிதே புலப்படுகிறது.

சிவபெருமானின் அவதாரமாகவே சேக்கிழாரைக் கருதுகிறார் பிள்ளையவர்கள். இதனை "உயிர்த்த திரு தாதை ஒத்தும்" (பாயிரம் -2) என்ற கருத்தால் அறிய முடிகிறது.

சேக்கிழார் இவ்வுலகில் தோன்றியது மும்மலத்தால் பிணிக்கப்பட்டுப் பிறந்த பிறப்பன்று. அவர் ஆதி முத்தராயிருந்து தொண்டர் சீர் பரவுதரை உலகத்திற்கு அறிவுறுத்தற்காகவே தோன்றினார். ஆதலின் 'விமலா நீ அவதாரம் செயாவிடின்' என்கிறார் பிள்ளையவர்கள்.

விரிநூலைச் சொற்றிடு திறனால் நூலாசிரியன் என்றும், பாசுரம் முதலியவற்றிற்கு உரை செய்தலினால், உரையாசிரியன் என்றும், பரசமயக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனை செய் நிலையால் போதகாசிரியன் என்றும், இவை நிகழ் தொறும் ஞானத்திறன். உறவால் ஞானாசிரியனும் நீ என்று கூறும் கருத்துக்களெல்லாம் உள்ளம் கொள்ளத் தக்கதாகும். (சப்பாணி-9)

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவன் (தால்-8)

சைவப்பயிர் தழையத் தழையும் புயல் (தால்-7)

முனிவில் தமிழ்க்கவி பாடிய புலவன் (சிறுபறை-8)

கவிபாடிய இறைவ (சப்பாணி-8)

சிவபோகம் கொள்ளும் சைவப்பயிர் வளர்க்கும் கொண்டல் (வருகை-10)

என்றெல்லாம் கூறும் கருத்துக்கள் எண்ணத்தக்கதாகும். சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தின் அருமை பெருமைகளைக் கூறவந்த பிள்ளையவர்கள் "புலவரெல்லாம் போற்றும் அத்தி தரும் கவி; புத்தி

தரும் கவி; சித்தி தரும் கவி; என்றெல்லாம் (சிறுபறை-7) சொல் நயம் பொருள் நயம் ததும்பப் பாடுகின்றார்.

சேக்கிழார் பெரியபுராணம் பாடிய வரலாறு

இறைவன் திருவருள் பெற்றுத் தில்லையம்பதி திருக்கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து, அநபாயச் சோழன் பாராட்டி மகிழும்படி திருத்தொண்டர் வரலாற்றினை சேக்கிழார் பாடிய திறத்தை பல பாடல்களில் உள்ளம் தோய்ந்து பாடுகின்றார் பிள்ளையவர்கள். அடியார் பெருமையும் அருமையும் அறிந்தவரான அம்பலவாணர், தொகுத்தும் வகுத்தும் கூறுப்பட்ட தொண்டர்களுடைய வரலாற்றை இவ்வுலகில் கூறக்கூடிய உத்தமர் யார் என்று தம் திருவருட்கண்ணால் கண்டு சேக்கிழாரே பொருத்தமுடையவர் எனக்கருதி 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்த வரலாற்றைப் பாடுகிறார் பிள்ளையவர்கள் (தால்-7).

இக்கடல் சூழ் புவியிடை இப்படி யார் பெற்றார்
தமிழ் மான்மியம் எப்பாடைகளுக்கு உளது இந்த
பாக்கியம் நம் தவம் என்று எல்லோரும் பகரப்படுவர் (தால்-7).

என்று கூறும் பகுதி தமிழ்மொழியிடத்தும், தமிழ் மாநிலத்தும் பிள்ளையவர்களுக்கிருந்த பெருமையும் பக்தியையும் பறைசாற்றுகிறது.

பயன் இலது ஆகும் சிந்தாமணி வழி படர்தல் (தால்-8).

என அநபாயனுக்குப் போதித்து அச்சோழனின் மனம் திருத்தொண்டர் சென்ற செயற்றிறனையே கருதும்படிச் செய்த சேக்கிழாரின் அரிய தொண்டினைப் பாராட்டுகின்றார் பிள்ளையவர்கள்.

தில்லைவாழ் அந்தணர்கள் சேக்கிழார் திருத்தொண்டர் வரலாற்றைப் பாடுவதற்கு ஏற்றம் தந்து அதிசயித்து, சந்தனக் குழம்பினை சேக்கிழார் மீது பூசி, மாலை அணிவித்து பரிவட்டம் அளித்து யானை மேலேற்றி ஊர்வலமாக அழைத்து வந்த காட்சியினை சித்திரமாக்கிக் காட்டுகின்றார் பிள்ளையவர்கள். சைவ அன்பர்களையெல்லாம் இந்நிகழ்ச்சி நிகழ்ந்த 12-ஆம் நூற்றாண்டிற்கே அழைத்துச் சென்று விடுகிறார். முத்தாய்ப்பாக,

பரிவட்டம் எடுத்து அம்பு இட்டு ஒளிர் சடையவரே
இவர் என்று ஐயம் அற (சப்-6) என்று

கூறுமிடத்து சிவபெருமானே சேக்கிழாராக அவதரித்தார் என்று கூறும் கருத்து உள்ளம் கொள்ளத்தக்கதாகும்.

"மருவாய் நறு தாதகி தொங்கல் வளவர் கோமகன் உடன் இவர்ந்து இழிகையும் மணி கவரி வாங்கி வீச" (சிறுதேர்-1) என்ற பாடலால் சேக்கிழார் பெற்ற பெருமையினை நாம் முழுவதுமாக அறிய முடிகிறது. இவ்வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் சொற்சித்திரமாக்கிக் காட்டும் பிள்ளையவர்களின் புலமைத் திறனையும் தமிழ்ப்பற்றையும் சைவமயத் தோய்வையும் பல நிலையில் கண்டு மகிழ முடிகின்றது.

வேளாளர் குலச் சிறப்புக்கள்

பிள்ளையவர்களின் குருவான உமாபதி சிவாச்சாரியார் தாம் இயற்றிய சேக்கிழார் புராணத்துள் சேக்கிழாரை, சேவையர் காவலர், சேவை காவலர், சேவை குலதிலகர், சேவையாதிபதி, பகிரதிகுலத் திலகர் என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கதாகும். சேவை குலம் என்பது வேளாண் குலத்தையே குறிக்கும். பிள்ளையவர்களும் தம் குருவைப் பின்பற்றியே சேக்கிழாரைப் பாடுமிடத்து, வேளாண்குலக்கதிர், பெருவள்ளல், வேளாளர் குலத்திலகம், சேவையர் காவல, சேவையர் குல சிகாமணி, சேவையர் பிரான் என்றெல்லாம் பாராட்டுகின்றார். 'கார்கோல மாலோன் புரந்தருள்வான்' என்பது உபசார மொழியாகும். 'உண்மை வேளாண்மையைக் கருத அபிதானம்கொள் குலமே என பன் நூல் கற்றவர் இயம்ப" (சப்-2)என்று சேக்கிழார் பிறந்த கொடுக்கும் கொடைத் தன்மையுடைய வேளாளர் குலத்தை பல பாடல்களில் பாராட்டுகின்றார்.

கரிகாற்சோழன் முற்காலத்தில் தொண்டை மண்டலத்தில் குடியேற்றிய நற்குடி நாற்பத்தொண்ணாயிரவருள் நீயும் ஒரு குடிமகன் என்ற செய்தியால் (சிற்றில்-7) வேளாண் குலத்தின் தொன்மையையும் விளம்புகின்றார். வணிகர் ஒருவனுக்கு 'நின் உயிர்க்கு இறுதிநேருமாயின் யாங்களெல்லாம் உயிர் துறப்போம் என்று உரைத்தபடி, தீயிலே மூழ்கி உயிர்துறந்த எழுபதின் மருக்குரிய வேளாண் குலத்தில் பிறந்தவனே' என (வருகை-6) சேக்கிழாரைப் பாராட்டுமிடத்து சொன்னசொல் தவறாத வேளாண் குல வரலாற்றுப் பெருமைகளையும் தவறாத அக்குடியிலே பிறந்த சேக்கிழாரையும் பல பாடல்களில் உவந்து உவந்து பாடுகின்றார். உமையம்மையார் இரு நாழி நெல்லினை வேளாளரிடம் கொடுக்க அதனைப் பெற்ற அறம் வளர்த்த வேளாளர் குடியிலே பிறந்தவரே சேக்கிழார் என்று போற்றுகின்றார். (சிறுதேர்-2)

புராண இதிகாச வரலாற்றுக் குறிப்புகள்

வசிட்ட முனிவரின் பசுவாகிய காமதேனு உலகம் வாழ பாலைப் பொழிந்த வரலாறு (செங்.10) திருமால் பாற்கடல் கடைந்த காலத்தில் கருநிறமடைந்த வரலாறு(தால்-4). சிவபெருமான் திரிபுர மெரித்த வரலாறு போன்ற, பல புராண வரலாற்றுக் குறிப்புகளும், சம்பந்தர் திருமணத்தில் அனைவருக்கும் முக்தி கிடைத்த வரலாறு (தால்-3)குன்றத்தூரில் நகேசுவரரை எழுந்தருளச் செய்து சேக்கிழார் வழிபட்ட வரலாறு (சப்-10)சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலையில் இறைவன் முன் திருக்கைலாய ஞானஉலா பாடிய வரலாறு (முத்-2) திருஞானசம்பந்தர் பூம்பாவையை உயிர்ப்பித்த வரலாறு. அரவுதீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை திருநாவுக்கரசர் உயிர்பித்த வரலாறு. சுந்தரர் பாடிய தமிழ், முதலை, உண்ட சிறுவனை மீட்டுத் தந்த வரலாறு(முத்-2)திருநாவுக்கரசரும், சீகாழியாரும் கூன் தீர்த்த வரலாறு (அம்புலி-8) போன்ற வரலாற்று நிகழ்வுகளையுஃ. பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சமயக் கருத்துக்கள்

சிவபெருமானிடத்தும், சைவ சமயத்திலும் ஆழ்ந்த, பற்றுடையவர் பிள்ளையவர்கள், சேக்கிழார் பிள்ளைத் தமிழ் இலக்கியம் முழுதும் சைவம் போற்றுதலையே கொள்கையாக் கொண்டுள்ளது.

'பங்கம் இலாத சமயம் சைவம்'-(தால்-6)என்று போற்றுகிறார். 'பெண்களுடன் கூடி இருத்தலே பேரின்பம் என்று கூறும் உலகாயதர். கந்தங்களெல்லாம் அழிவதே நிலைத்த பேரின்பம் என்று கூறும் புத்தமும், இவ்வாறே சங்கியர், சைவசேடிகர், சைனர், பேதவாதியர், மாயாவாதி, சாங்கியர் சித்தர் ஆகியோர் உண்மைநெறி அறியாதவர்கள் இத்தகைய புறச்சமய நெறிகளை அழித்த உயர் சமயம் (வருகை-3);எச்சமய வழிபாடும் இறுதியில் சிவவழிபாடாகவே அமைந்துவிடும் என்ற நாராயண உபநிடதக் கருத்தையும் முன்வைத்து சைவ சமயத்தின் பெருமையை போற்றிப் புகழ்கின்றார். (சப்-4)பிள்ளையவர்கள்.

மேவாத பாய் உடீஇ தலைமயிர் பறித்து உதறல்
மேய சமய பாழ்குழி விழ்ந்தவர் (சப்-3)

என்ற பாடலில் உடலை வருத்துதலை மேற்கொண்ட சமணசமயமாகிய பாழான குழியிலே விழ்ந்த மக்களை மீட்ட சேக்கிழாரின் அரிய செயல் கூறுப்படுகிறது. சேக்கிழாரைப் போற்றுமிடத்து, சமணர் தம் சமயமாகிய களங்கம் உலகமெங்கும் பரவியிருக்க அக்களங்கத்தை நீக்கி உயர்ந்த சைவ சமயநிலையை உலகெங்கும் பரப்புவதில் சேக்கிழாருக்கிருந்த பங்கினைத் தெளிவு படுத்துகின்றார். (அம்புலி-9)இந்நூலாசிரியர்.

"சாறு சால் வீதி திரு தில்லை அம்பலம் தன்னில் எஞ்ஞான்றும் நின்று தாண்டவம் நவிற்றி உலகு உய்ய செயும் பரம சத்குரவன்" (அம்புலி-4)என கூத்தபிரானைப் போற்றி வணங்குகிறார் பிள்ளையவர்கள்.

ஆணவம், கன்மம், மானய, சரியை, கிரியை, யோக, ஞான மார்க்கங்கள் போன்ற சைவசித்தாந்தக் கருத்துக்களையும்

வெள்கீறு கண்மணி புனைந்து ஐந்து எழுத்து
ஒண் சிவமணம் (சிறுபகை-5)

என சைவ சமயத்திற்கேயுரிய குறியீடுகளையும், அதன் பெருமைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னோர் புகழ்

"பண்பு கெழு நின் சரித்திரம் இனிய பாவால் பரப்பிய திருக்கைலாய பரம்பரை உமாபதி சிவன் புகழும் அவன் முன்னோர் பை புகழும் அவன் வழிவரு நண்பு புனை தவர் புகழும் இனிமேலும் வருபவர் நய புகழும் நீடுவாழி என" (சிறுதேர்-10).

உமாபதி சிவாச்சாரியார் புகழும் அவர் முன்னோராகிய மறைஞான சம்பந்தரும் அருணந்தி சிவாசசாரியாரும், மெய்கண்ட தேவரும்,

பரஞ்சோதியாரும், சத்தியஞான தரிசனியும், நந்தியெம் பெருமானும், ஆகியோர் புகழும் உமாபதி சிவாச்சாரியாருக்குப் பின்வந்த அருணமச்சிவாயர் முதல் சுப்பிரமணிய தேசிகர் இறுதியான பதினெண்மரின் புகழும் நெடிது வாழவும், நாயன்மார்களின் பெருமை வாழவும், சைவசமயக் குரவர்கள் அருளிய தமிழ் மறைகள் வாழவும், சேக்கிழாரைப் போற்றும் பாங்கு மனம் கொள்ளத் தக்கதாகும்,

திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான்' திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் செந்தமிழ்ச்சுவையும் சைவமணமும் இயைந்த ஒப்பற்ற இலக்கியமாகும். 'சேக்கிழார் நற்றமிழ்க்கவி தழையவே' (பாயிரம்-1) என்றும், 'அருண்மொழித்தேவன் புராணம் விரித்துரைத்தான் அவன் அடி தாழ்ந்து என்னறிவிற்சேற்ப மேய பிள்ளைத்தமிழென வொன்றுரைப்பல்' (பாயிரம்-2) என்றும் பிள்ளையவர்கள் கூறுவதிலிருந்து, இப்பெரும்புலவரின் நோக்கம் இனிதே புலப்படுகிறது.

சமணம் வீழ்த்தி சைவம் தழைக்கச் செய்த சேக்கிழாரின் அரிய தொண்டினை உள்ளம் உவந்து பாடுகின்றார் பிள்ளையவர்கள். சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பல்வேறு வடிவங்களில் பல்வேறு இடங்களில் அமைத்துப் பாடுகின்றமை கருதத்தக்கதாகும். திருவாவடுதுறை மடத்தையும் அங்குள்ள அங்குத்திகளையும் பல இடங்களில் பாராட்டியுள்ளமை உள்ளம் கொள்ளத் தக்கதாகும். காப்புப் பருவப் புதுமையும் பிள்ளையவர்களின் தனிச்சிறப்பாகும் பல்வேறு அணி நலன்கள், உவமைகள் இவர் பாடல்களில் மலிந்து காணப்படுகின்றன. பிள்ளையவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமை, சைவ சமயப்பற்றிற்கு சேக்கிழார் பிள்ளைத்தமிழ் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

54. சைவ சமய பத்திநெறி

சு. தங்கத்துரை
விருத்தாசலம்

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில், பிள்ளைத்தமிழ் இலக்கண அமைப்பு சிறப்பாகக் காணப்பட்டாலும், சேக்கிழாரின் ஊரான குன்றத்தூரின் சிறப்பைப் பெருமைப்படுத்திக் கூறிஇருந்தாலும், அதிகமாக சைவநெறி வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. அவை எந்த எந்த நிலைகளில் ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதை விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

கணபதி

நூலை ஆரம்பிக்கின்ற போதே பிரணவமந்திர நாயகனாகிய கணபதியையே பாயிரத்தில் துதிக்கின்றார்.

விரவ மேல் ஓங்குபோர் உரு பண்ணவனை அஞ்சலிப்பாம் (பாயிரம்:1.4)

பாயிரத்தின் இரண்டாவது பாடலிலும்,

பாங்குபெற துதிக்கையொடுஓர் கோட்டத்தன் ஆய
பயிற்சின் அ குமரவேள்திரு தமயன் (பாயிரம்:2.5)

எனக்குறிப்பிட்டுள்ளார்.

முருகன்

விநாயகப் பெருமானைக் குறிப்பிட்ட ஆசிரியர் அடுத்து முருகப்பெருமானை இரண்டாவது பாடலில் குறிப்பிடுகின்றார்.

. . . குன்றையுற மேவித்
. . . செம்மேனிக் குமரவேள் (பாயிரம்:2,3,4)

சிவன்

நூல் முழுக்க முழுக்க சிவனின் பெருமையை வெளிப்படுத்தினாலும் பாயிரத்தில் 'திகழும்மாபதி சிவனே' (பாயிரம்:2,3) என்ற ஒரு தொடரிலே அவர் பெருமையைச் சுட்டிக் காட்டியிருப்பதைக் காணமுடிகிறது.

சேக்கிழார், சோழமன்னன் அநபாயனின் கீழ் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது அந்த நாட்டிலுள்ள திருநாகேச்சுரத்தில் எழுந்தருளிக் கொண்டிருக்கும், 'திருநாகேசுவரரை' வழிபடு கடவுளாகக் கொண்டார். அதனால்தான் தன் சொந்த ஊராகிய குன்றத்தூரிலும் திருநாகேச்சுரப் பெருமானுக்கு திருக்கோயில் கட்டி வழிபட்டு வந்தார். இதனை ஆசிரியர்,

நிலவிய நாகேசுரர் இனிதுஅமர்தலின் நிகழ் நாகேசுரம்ஆய்
நீள் மணிமாடம் நிலாவலின் இந்திர நீலபருப்பதம் ஆய் (41.1)

எனக்குறிப்பிட்டுள்ளார்.

சைவமதச் சிந்தனைகளைத் தெரிவிக்க வேண்டும் என்ற உணர்வு ஆசிரியர்க்கு இருந்ததால் சிவனின் பெயர்களையும் சிறப்புகளையும் பல பாடல்களில் சுட்டிக்காட்டியுள்ளார். சிவபெருமான் நடனமாடினார் என்பதை, கனக சபையார் (2:3), தில்லைச் சபாநடனநாதன் (15:1), பொதுநடனம் செய்வார் (37:1), அம்பலம் நடனம் நவிலும் பரஞ்சோதி (83:2), மன்றுள் நடனம் நவில்வார் (9:3), என்றும்; தில்லை கோயிலில் இருப்பவர் என்பதை, அம்பலவாணர் (28:1), அம்பலவர் (44:3), சிற்றம்பல நாயகர் (59:3), பொன்னம்பல வாணர் (91:3), என்றும் கூறியுள்ளார். மேலும் உம்பர்கோன் (14:2), முக்கண் புராதனன் (71:4), (94:1), செறிதமிழ் சங்கத்து முதன்மை யோன் (68:1), கறைகண்டன் (8:1), ஒளிர் சடையவர் (37:3), ஆத்திமாலையை அணிந்தவன் (94:2), என்றும் ; எல்லோர்க்கும் உரியவன் தனக்கும் உரியவன் என்பதை, எம்பெருமான் (43:2), எம்பிரான் (93:1) என்றும் குறிப்பிட்டுள்ளார். இவைதவிர அவரது சிறப்பியல்புகளையும் பல பாடல்களில் குறித்துள்ளார்.

அவரது உடலில் உள்ள பொருட்களைச் சுட்டிக் காட்டியிருப்பதைக் காணமுடிகிறது. திரிபுரத்தை எரித்த சிவபெருமான் (7:2), (89:2) பிறைமதியை சடையில் அணிந்துள்ள முதல்வன் (21:4) என்கிறார். வாரானைப்பருவத்தில் ஐந்து பாடல்களின் இறுதி வரியில், 'கொன்றை மலரை அணிந்தவன்' எனக்குறிப்பிட்டுள்ளார். எ-டு, 'கொன்றைச் சடாடவியர் மன்றை' (52:4). சிவன் தலையில் கங்கையை வைத்தவன் (37:3),(63:2), பாம்பை அணிந்தவன், அம்புலியின் துண்டை அணிந்தவன் (64:3,4) எப்பொழுதும் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கும் தில்லையில் நடனமாடுபவன் என்கிறார், இதனை,

சாறுசால் வீதிதிரு தில்லை அம்பலம்தன்னில் எஞ்ஞான்று நின்று
தாண்டவம் நவிற்றி உலகு உய்யச் செயம்பரம சற்குரவன் (65:1,2)

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

புகலின் மூவருளும் ஒருவன் நாதம் அகன்ற பரமன் (74:2,3)

என மும்மூர்த்திகளில் சிறந்தவன் சிவன் என்கிறார்.

இவற்றிற்கெல்லாம் சிறப்பாக ஐந்து தொழிலையும் செய்பவன் என்றும் ஐவர்களுக்கெல்லாம் மேலானவன் என்றும் குறிப்பிடுகிறார்.

ஐந்து அதிகாரிமேல் ஓர் அதிகாரி (8:1), படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழிற்கும் உரிமையுடையவராகிய பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்னும் ஐந்து அதிகாரிக்கும் மேலான ஒப்பற்ற அதிகாரியாவார். மேலும்,

அலைக்கும் புனல்சூழ் அம்பலத்தில் ஆடும் பெருமான் அருள்பெற்றால்
அவன் செய்தொழில் ஓர் ஐந்துண்டு (81:1,2)

என்றும் குறித்துள்ளார்.

சிவன் எல்லோரையும் காப்பவன் (63:3) இப்படிப்பட்ட சிவனுடைய நாமத்தை எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்கிறார்.

நாவால் எவரும் அரமுழக்கம் நாளும்செய (23:2)

இதிலிருந்து எப்பொழுதும் சிவநாம மணம் பரவவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் எனலாம்.

உமையம்மை

சிவமும் அருளும் சேர்ந்தவை என்று உணர்ந்த ஆசிரியர் சிவபெருமானைக் குறிப்பிட்ட சில இடங்களில் உமையம்மையையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். சிதம்பரத்தில் பெயர்பெற்ற அம்மையை, சிவகாமவல்லிதாயே (83:1) என்கிறார். மேலும் உமையம்மை (93:1), மாதேவி (93:2), மலைமங்கை (8:2), வார் கோலமுலை மங்கை (33:3) போன்ற சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.

சைவ சின்னங்கள்

சைவர்கள் என்று கூறுவதற்கு அவர்கள் அணிந்துள்ள பொருட்களை வைத்துக் கூறுவர். சைவர்களுக்குரிய பொருட்களாக திருநீறு, உத்திராட்சம், ஐந்தெழுத்து இவற்றைக் கூறுவர். ஆசிரியர் இவற்றை நூலில் தெளிவாகச் சுட்டியுள்ளார்.

(1)திருநீறு

திருநீற்றுக்குப் பல சிறப்புகள் உண்டு. அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் ஆசிரியர் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

வெண்ணீறு (10:3, 52:4, 86:1, 99:1), நீறு(79:1), நெற்றிநீறு (12:4), நல் நுதல் திருநீறு (100:2),. புண்டரநீறு (மூன்று குறியாக அணிந்த நீறு)(19:2), நலம்கூர் நீற்றின்(23:1), நீறிட்டு (35:1), நறுமணக்கும் நெற்றி யெலாம் (26:5), நீறிட்டு (35:1) என நீறு ஏன் பூசவேண்டும், அதன்பயன் என்ன போன்ற செய்திகளை விளக்கியுள்ளார்.

திருநீற்றை விபூதி எனவும் வழங்குவர் என்பதை,

நின்னர் விபூதி (32:6), வில்தங்கிய விபூதியினால் (59:1) எனச் சுட்டியுள்ளார்.

(2) உத்திராக்க மாலை

சிவனடியார்களுக்கு உத்திராக்கமாலை உகந்த ஒன்றாகும். இதனை ஆசிரியர் கண்மணி (86:1), ஆய்கண்மணி (10:6) என வெளிப்படுத்தியுள்ளார். உத்திராக்கத்தை சிவனின் கண் என்று கூறுவதால் இவ்வாறு ஆசிரியர் கையாண்டிருக்கலாம்.

(3)ஐந்தெழுத்து

ஐந்தெழுத்து சைவர்களின் மந்திரமாகும். தூலமந்திரமும் சூக்கும மந்திரமும் அஞ்செழுத்துதான். எனவே எப்பொழுதும் ஐந்தெழுத்து ஓதவேண்டும் என்றும் அவ்வாறு ஓதாதவர்கள் பயனற்றவர்கள் என வலியுறுத்துகிறார்.

ஐந்தெழுத்து எணா வீணர் (86:1)

தேவாரம்

அருளாளர்கள் பாடியதை மறை என்றும் வேதம் என்றும் குறிப்பிடுகின்றார். 'மூவரும் புகலும் வேதம்' (3:4), 'மூவர் அருள்மறை' (5:3), என்றும், திருமுறைகளை, 'தமிழ்மறை' (14:4) என்றும் தேவாரத்தை வேதம் என்றும் குறிப்பிடுகிறார்.

மேற்கோள்கள்

முன்னோர் சொற்களையும், கருத்துகளையும் பொன்போல் போற்றவேண்டும் என்பது ஆசிரியரின் நிலையானக் கொள்கை. சைவ சமய வளர்ச்சிக்குப் பாடுபட்ட, அருந்தொண்டாற்றிய பெரியார்களை, அருளாளர்களை தம்முடைய நூலில் ஆசிரியர் சுட்டிக் காட்டியிருப்பது அவரின் அடியார்(அன்பு) தன்மையையும் முன்னோர்களைப் போற்ற வேண்டும் என்ற குரு பத்தியையும் காணமுடிகிறது.

சேக்கிழார்.

சிவபெருமானே 'உலகெலாம்' என சேக்கிழார் பெருமானுக்கு அடியெடுத்து கொடுத்தார். அது மந்திரம் என பாயிரத்தில் கூறி அந்த சொல்லைப் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

உலகெலாம் என்னும் மறை ஆதிஆ கொண்டு (பாயிரம்-1:3)

உலகெலாம் எனும் சுருதி நாப்பண்ணும் ஈற்றும் (1:6)

உலகெலாம் அறியத் தெருட்டு குரலில் (9:3)

உலகெலாம் என்ற தீஞ்சொல் (12:1)

சேக்கிழார் தம் நூலில் குறிப்பிட்டுள்ள 64 அடியார்களையும் 9 தொகை அடியார்களையும் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் ஞான சம்பந்தரின் தந்தை சிவபாதஇருதயர் (3:3) பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.

நாயன்மார் (101:2) என மொத்தமாகவும், தனித்தனியாகவும் சுட்டியுள்ளார். தில்லை மூவாயிரர் (1:3) எனவும், பூசலாரை, 'பூசல் வித்தகர் (11:3) எனவும் குறிப்பிடுகின்றார். மேலும் சேரமான் பெருமாள் நாயனார் (43:3), பதஞ்சலி வியாக்கிரமபாதர் (83:1) பெயர்களைத் தனியாகவும் சுட்டியுள்ளார்.

சுந்தரர்.

சேக்கிழார்க்கு பெரியபுராணம் எழுதக் காரணமாக இருந்த 'திருத்தொண்டர் தொகை' நூலை பொன்போல் போற்றியுள்ளார். திருத்தொண்டர் தொகையிலுள்ள பத்துப்பாடல்களின் முதல் சொல்லை, காப்பு பருவத்திலுள்ள பத்துப் பாடல்களின் முதல் சொல்லாகவே கையாண்டுள்ளார்.

காப்பு பருவ முதல்பாடலை ஆரம்பிக்கும்போது சிவபெருமான் சுந்தரர்க்கு அருள் கொடுத்தான் என்ற கருத்தைக்கூறி, "தில்லை" என்றச் சொல்லை எடுத்தக் கூறுகின்றார்.

பு.23.

'முகில் தவழ்தலைக் கொண்டே சோலைகள் நிறைந்த திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் அரைக்கால் அடியும் சுந்தரர் முக்காலரைக்கால் அடியுமாகப் பாடி முழுப்பாட்டாக முடிவு செய்தருளிய, "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கும் பாடல்' என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இரண்டாவது பாடல் முதல் பத்தாவது பாடல்வரை திருத்தொண்டர் தொகை முதல் குறிப்பையே பயன்படுத்தியுள்ளார்.

சுந்தரர் மனைவியர் பரவையார், சங்கிலியார் செய்தியையும், கோப்புலியாரின் மக்களை தன்மக்களாகக் கருதிய செய்தியும் உள்ளன (10:1). சுந்தரர் முதலைஉண்ட சிறுவனை மீட்ட செய்தி (43:3) அற்புதமாகும்.

உமாபதி சிவம்

புறச்சந்தான குரவர்களுள் ஒருவரான உமாபதி சிவத்திற்குச் சிறப்புக் கொடுத்துள்ளார். பாயிரத்தின் இரண்டாவத பாடலில் சேக்கிழாரின் பெருமையை உலகறியச் செய்தவர் உமாபதி சிவனே என்கிறார்.

தேங்குசிவப்பிரகாசம் முதலிய வாய்மலர்ந்து
திகழ் உமாபதி சிவனே குன்றையுற மேவித்
....
வீங்கு புகழ் படைத்த அருண்மொழித்தேவன் புராணம்
விரித்துரைத்தான் அவனடி தாழ்ந்தேன் (பாயிரம்-2:3,7)

என உமாபதி சிவனைப் புகழ்ந்து தன் வணக்கத்தையும் தெரிவித்துள்ளார்.

செங்கீரை பருவத்தின் நான்காவது பாடலில் உமாபதி சிவன், சிவபெருமானின் வேண்டுகோளுக்கிணங்க பெத்தான் சாம்பானுக்கு நிருவாண தீக்கையால் முத்தி கொடுத்த வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தாயவொளி இருள் தபுபொன் மாளிகைத்தில்லைச்
சபாநடஎ நாதர் பெத்தான்
சாம்பானை உய்த்தனம் நிருவாண தீக்கையால்
தகு முத்தி அடைவி என்றே (15:1,2)

வாரானைப் பருவத்திலுள்ள மூன்றாவது பாடலின் கருத்து உமாபதிசிவத்தின் சிவப்பிரகாசம் என்ற நூலின் 50ஆவது பாடல் கருத்தை ஒட்டியே அமைந்துள்ளது (பிறமதத்தார்கள் கருத்தை மறுத்தல் பாங்கு).

உமாபதி சிவத்தை 101ஆவது பாடலில் சிறப்பாகப் புகழ்ந்துள்ளார். 'பண்பு கெழு நின் சரித்திரம் இனிய பாவால் பரப்பிய திருக்கைலாய் பரம்பரை உமாபதி சிவன் புகழும்' (101:1) என உன் பெருமையை சிவபெருமானே போற்றுவான் என சிறப்பித்துள்ளார்.

ஞானசம்பந்தர்

ஞானசம்பந்தப்பெருமான் ஆற்றிய அற்புதங்களை விளக்கியுள்ளார்.

1. ஞானசம்பந்தப்பெருமானின் திருமணம் காணவந்த எல்லோர்க்கும் உயர்கதி கொடுத்தார்.

அருள் சம்பந்தர்மண நண்ணியவர்க்கும் கதிகொடுத்த (24:3)

2. மயிலாப்பூரில் பூம்பாவை பிழைக்கவைத்த செய்தியை

வெள்என்பு அழத்திற்கு உயிர் அருளி (43:2)

எனக்குறிப்பிட்டுள்ளார்.

3. பாண்டிய மன்னனுடைய சுரம்போக்கினார் என்ற செய்தியையும் ஆசிரியர் சுட்டியுள்ளார் (69:3). வாழ்த்துப்பாடலிலும் இவர் பெயரைக் குறிப்பிட்டுள்ளார் (101).

திருநாவுக்கரசர்

நாவுக்கரசரின் அருள் நிலைகளையும், அவர் உழவாரத்தை எடுத்து தொண்டாற்றிய நிலைகளையும் ஆசிரியர் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

நாடும் உழவாரவலம் இயைதலால் யாவோரும்
    நாவலர்பிரான் என்னலால் (3:6)

தம்மை, சமணர்கள் கொடுமைப்படுத்திய செயல்களிலிருந்து மீண்டார் என்பதையும், சிவன் அருளால்தான் அது முடிந்தது என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

. . . நீற்றஅறையுள் அருகந்தர் சிந்தைவெந்திடவமர்ந்தும்
செறிதுயர்க் கடன்மறக் கல்லொடுஅவர் ஆழ ஓர்திரைகடல் கல்
    மிதந்தும் கருநின்றகண்டர் அருள்வெளி செய் நாவரசர் (4:1,2)

நாவுக்கரசர், அப்பூதியடிகளாரின் மூத்தமைந்தன் பாம்பு தீண்டி இறந்துவிட அவன் உயிரை மீட்டுத்தந்து (43:3) என்ற செய்தியையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

சைவசித்தாந்த சிந்தனைகள்

நால்வகை நெறி

சைவசித்தாந்தம் வெளிப்படுத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குவகை வழிமுறைகளை ஆசிரியர் பல இடங்களில் சுட்டியுள்ளார்.

'நால் சீரில்கால் நெறி விளக்கி (பாயிரம்:8) என்றும் தொண்டர்களில் பலர் நால்வகையில் இருப்பர் என்பதை,

இவர் சரியையர் இவர் கிரியையர் யோகத்தினர் இவர் இவர்ஞான'(20:1) என்றும், 'அடியார்கள் நால்வகை மார்க்கம் உடையவர்களாக இருப்பர்' (56:2) என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மலம்

சைவசித்தாந்தத்தில் ஆணவம், கன்மம், மாயை மூன்றையும் மலம் என்பர். மலம் நீங்கினால் இறைவன் திருவடி அடைய முடியும் என்பது சைவசித்தாந்தம், இதனை பலவகையாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரைமுடியுள்ள ஆணவமலம் விளைக்கும் நோயினைக்
கெடச்செய்ய வேண்டும் (18:2) என்றும்

கருமம் முதல் எமலமும் நீத்து இன்பம் கடைக்கணித்திடுதி (35:3) என்றும்,

ஓவா திண்ணிய மலசெருக்குஎல்லாம் ஒழித்தனம் (36:2) என்றும் குறிப்பிடுகின்றார்.

மும்மலங்களையும் இறைவன் திருவருளால்தான் நீக்க முடியும் என்றும் மும்மலமும் நீங்கினால் சிவபெருமான் திருவடியை அடையமுடியும் என்றும் விளக்கியுள்ளார் (56:1,2; 74:1.2).

குணம்

சத்துவகுணம், ராசகுணம், தாமதகுணம் மூன்றையும் கெடுத்தால் பேரின்பம் (54:1) என்பர் இதனை,

குணம் மூன்றும் ஒழிதலே நிரம்பல் உறும் இன்பு என விளக்கியுள்ளார்.

தீக்கை

நிருவாண தீக்கை பெற்றவர்களால்தான் முத்திஅடைய முடியும் என்ற கருத்தை ஆசிரியர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நிருவாண தீக்கையால் தருமுத்தி அடைவி (15:1)

பிறமதத்தவர்களை மறுத்து சைவமதமே சிறந்தது என்பதை அநபாயனுக்கு சேக்கிழார் கருத்துரைத்துள்ளார் (34). பிறமதத்தவர் கருத்துகளை அழிக்கவேண்டும் என்பதை சிற்றிற்பருவ மூன்றாம் பாடலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

சைவம் என்ற சொல்லாட்சியும் ஆசிரியரின் எண்ணமும்

மீனாட்சி சுந்தரம்பிள்ளை சைவம் எங்கும் நிலைத்திருக்க வேண்டும் என்ற உணர்வோடு வாழ்பவர். அதனால்தான் அவர் நூலில் 'உயர் சைவநிலை எங்கும் நிகழ' (52:6) என்றும் 'சைவநிலை எங்குமாக்கும்' (70:2) என்றும் சைவம் உயர்ந்த நிலையிலுள்ளது என்பதை 'உயர்சைவம்' (6:1) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சைவ வாழ்வே பெரிய வாழ்வு என்றும் (46:2) சைவ சமய வழக்காறுகளே உலகில் சிறந்தது (1:4) என்றும் உயர்வு படுத்திக் கூறியுள்ளார். சைவத்தை, 'தெய்வச் சைவம்' என தாலப்பருவத்தில் முதல் ஐந்து பாடல்களில் விளக்கியுள்ளார். தாலப்பருவத்தின் கடைசி ஐந்து பாடல்களிலும் 'சைவப் பயிர்தழைய' பாடுபட வேண்டும்(6-10) என்றும் சைவப்பயிர் வளர்க்க வேண்டும் (61:4) என்றும் சைவ நிலையை எங்கும்

பரப்ப வேண்டும் (70:2) என்றும் குறிப்பிடுகிறார். 'சைவமானது பசுமையான பயிர்' (82:1) என்றும் 'சிவபோகம்' (61:3) எங்கும் நிலவ வேண்டும் என்றும் ஆசிரியர் தன் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

தொகுப்புரை

1. முன்னோர் கருத்துகளைப் போற்றியுள்ளார்.
2. சைவ சமயமே சிறந்தது. அதனை எல்லோரும் வளர்க்கப் பாடுபடவேண்டும்.
3. நீறு, உத்திராக்கம் போன்றவற்றை அணிய வேண்டும்.
4. ஐந்தெழுத்து மந்திரத்தை எப்பொழுதும் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.
5. அருளாளர்கள் செய்த அற்புதங்களைக் கூறி தமிழ் மறையின் உறைப்பால் எல்லாம் சாதிக்க முடியும் என்பதை விளக்கியுள்ளார்.
6. நான்குயோக நிலைகளை விளக்கியுள்ளார்.
7. தீக்கையில் சிறந்தது நிருவாண தீக்கை என்கிறார்.
8. மலங்களை நீக்கினால் இறைவன் திருவடியை அடையலாம்.
9. சைவ சித்தாந்த தொடர்புகளுடைய எல்லா சிந்தனைகளையும் நூலில் அதிகமாக சுட்டப்பட்டிருப்பதால் இந்த நூல் சைவ சமய பத்தி நெறியை வலியுறுத்த எழுந்த நூல் என்பதில் ஐயமில்லை.

55. சம்பந்தர் அருள் விளையாடல்

இராம. தனசேகரன்
மதுரை

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் தம் இலக்கியப் பங்களிப்பின்வழி தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பிற்குரியவர். இவர் பிள்ளைத்தமிழ், கலம்பகம், உலா, அந்தாதி, மாலை, தூது, தனிப்பாடல்கள் மற்றும் தனிவிருத்தங்கள் முதலான பல்வேறு இலக்கிய வகைகளைப் படைத்த பெருமைக்குரியவர். பிள்ளையவர்கள் படைத்த இலக்கிய வகைகளுள் குறிப்பிடத்தக்கது. "மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆனந்தக் களிப்பு" ஆகும். திருஞானசம்பந்தர் அவதரித்தது முதல் சோதியில் கலந்தது வரையிலான அவரது வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு அற்புத விளையாட்டுக்களை எடுத்துரைத்து ஆனந்தம் கொள்ளும் நிலையில் ஆசிரியர் நூலினைக் கட்டமைத்துள்ளார். அவ்வகையில் திருஞானசம்பந்தர் தம் அருளிச்செயல்களை மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பதிவு செய்துள்ளப் பாங்கினை மதிப்பிடும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

சம்பந்தர் அருள் விளையாடல்

"சிவபிரானது திவ்ய ஒளியே மெய்ஞ்ஞான சம்பந்தராகிய நான்" என்று குறிப்பிடும் திருஞானசம்பந்தர், ஏழாம் நூற்றாண்டில் சீகாழிப் பதியில் அந்தணர் மரபில் கவுணியர் குலத்தில் சிவபாத இருதயர்-பகவதி அம்மையாருக்கு அருமை மகவாகத் திருவாதிரைத் திருநாளில் அவதரித்தார். திருஞானசம்பந்தர் தம் வாழ்நாளில் பல்வேறு அருள் விளையாடல்களை நிகழ்த்தி, பெற்றோர் விருப்பத்திற்கிணங்கவும் வேதநெறியில் நிற்கவும் நம்பாண்டார் நம்பிகள் திருமகளை மணமகளாக ஏற்று, கல்லூர்ப் பெருமணப் பதிகம் பாடி, பெருமானது அசரீரியின்படி மனைவியொடும் உடன் வந்தாரொடும் வைகாசி மூல நன்னாளில் அங்குத் தோன்றிய சோதியில் கலந்தருளினார்.

"திருவருள் மேலோங்கித் தூண்டித் துணைபுரிய மெய்யடியார்களின் வாயிலாக நிகழும் வியத்தகு நிகழ்ச்சிகள் அற்புதங்கள்" எனப்படும். இதனை மருட்கை எனவும் கூறுவர். அற்புதம் எனினும், அருள் விளையாடல் எனினும், அருளிச்செயல் எனினும் பொருள் ஒன்றே. திருஞானசம்பந்தர் சிவபெருமானைத் தந்தையாகவும் (குரு), பார்வதி தேவியைத் தாயாகவும் (ஞானப்பால் ஊட்டல்) கொண்டு அவதரித்து, சிவனம்சம் கொண்டு விளங்குவதால் அற்புதங்கள் (அருள் விளையாடல்)பல நிகழ்த்தும் ஆற்றல் வாய்ந்த அருளாளர் ஆவர். இத்தகு திறன்கொண்ட திருஞானசம்பந்தர் இறைவனிடத்தும் மெய்யடியார்களிடத்தும் சைவந்தழைக்கச் சமயச்சார்பாகவும் பல அற்புதங்கள் புரிந்துள்ளார். அவர்தம் வாழ்வில் நிகழ்ந்த அருள் விளையாடல்களை அவற்றின் தன்மைக்கேற்ப இறைத்

தொடர்புடையவை என்றும், அடியவர் பொருட்டு நிகழ்ந்தவை என்றும், சமயச்சார்பு பெற்றவை என்றும் மூவகைப்படுத்தலாம்.

இறைத்தொடர்பு நிகழ்வுகள்

சிவஞானச்சம்பந்தராகவும் ஆளுடையபிள்ளையாகவும் திகழ்ந்த சம்பந்தப்பெருமான் சிவபெருமானுடன் நெருங்கியத் (மகன்மை-தந்தையார்)தொடர்புடையவர். சம்பந்தப் பெருமானே இறைவனுக்கும் தமக்குமுள்ள தொடர்பு குறித்துக் குறிப்பிடும்பொழுது, ''எனது பூர்வநிலையில் சிவபிரான் எந்தை தன் தந்தை என்றும், சிவபிரானது திருவொளியே தான் என்றும், இறைவன் எப்பொழுதும் என்னுள்ளே விளங்குகின்றான் என்றும், நாள்தோறும் என் கனவிலும் நனவிலும் சிவவொளி தன்னிடம் நிலைபெற்று விளங்குகின்றது என்றும், தனது உரை சிவனுரையே என்றும், சிவபிரான் தன்னிடம் ஒன்றியுள்ளான் என்றும், சிவபிரான் போலத் தானும் அந்தமிலான் என்றும் சுட்டுகின்றார்." மேலும் "தேவர்களும் வியக்கும்படி சிவபெருமான் தேவியுடன் என்னைப் பெற்று ஆட்கொண்டனர் என்றும், அவரே எனக்கு குரு என்றும், யாவர்க்கும் அரியவராயிருக்கும் இறைவன் என்னிடம் விளையாடுவார்" என்றும் கூறுகின்றார். இத்தகு இறையம்சம் கொண்ட திருஞானசம்பந்தர் வாழ்வில் ஞானப்பால் உண்ணல், பொற்றாளம் பெறல், முத்துச்சிவிகை மற்றும் முத்துப்பந்தல் பெறல், சோதியில் கலத்தல் முதலான இறைத்தொடர்பு அருளிச் செயல்கள் நிகழ்ந்துள்ளன.

ஞானப்பால் உண்ணல்-சம்பந்தர் மூன்றாண்டு நிறைந்த நிலையில் நீராடச்சென்ற தந்தையாருடன் தாமும் திருக்குளம் சார்ந்தார். நீருள் மூழ்கிய சிவபாத இருதயரைக் காணாத சம்பந்தர் திருத்தோணிச் சிகரம் பார்த்து, 'அம்மே!அப்பா!' என அழுதார். இவ்அழுவொலி கேட்ட திருத்தோணிபுரப் பெருமான் உமாதேவியாரோடும் விடைமீதமர்ந்து திருக்காட்சி கொடுத்தனர். மேலும் 'கலைஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த திருமுலைப் பால் ஊட்டுவாயாக' எனப் பெருமான் பணிக்க, தேவியுடன் அவ்வாறே 'எண்ணறிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி உண் அடிசில்' என ஊட்டினார். ஞானம் உண்ட பிள்ளையார் சிவஞானச்செல்வராய்த் திகழ்ந்தார். இதனை மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்,

கூடும் பருவமோர் மூன்றி - லம்மை
  கொங்கை சுரந்த கொழுஞ்சுவைத் தீம்பா
னாடுபொன் வள்ளத்தி னூட்ட - உண்டு
  ஞானசம் பந்த ரெனப்பொலிந் தாரால்,

(திருஞானசம்பந்தர், ஆனந்தக்களிப்பு.2)

என்று குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

பொற்றாளம் பெறல் - ஞானசம்பந்தர் திருக்கோலக்காவில் எழுந்தருளியுள்ள நீலகண்ட பெருமானை வழிபடும் பொருட்டு, 'மடையில் வாளைபாயு' மென்னும் பதிகத்தைக் கைத்தாளம் இட்டுப் பாடியருளினர்.

அதனைக் கண்ணுற்ற இறைவன் கனிந்து, திருவைந்தெழுத்தெழுதிய செம்பொற்றாளத்தை ஈந்தருளினார். தாளம் பெற்ற ஞானசம்பந்தர் அதனைத் திருமுடிமேல் வைத்து ஏழிசையும் தழைத்தோங்க இன்னிசைப் பதிகம் பாடியருளினார். இதனைத்,

திருக் கோலக் காவி - லைந்
தெழுத்துப் பொறித்தபொற் றாளம்பெற் றாரால் (5)

என்று மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்.

முத்துசிவிகை பெறல் - ஞானசம்பந்தர் திருமுதுகுன்றம், திருப்பெண்ணாகடம் பணிந்து திருநெல்வாயிலரத்துறை வரும்பொழுது (ஒவ்வொருகால் தந்தையார் தோள் மேல் ஏறி வரும்)பாதத் தாமரை நோதலையும் நோக்காது பைய நடந்துவந்த களைப்பினால் மாறன்பாடியில் அமர்ந்து அன்றிரவு துயில்கொண்டார். சிவனருளால் கனவிற் கண்டவாறு, அறத்துறை அந்தணர் திருக்கோயில் கண்ட ஞானவேந்தர் ஏற முத்துச்சிவிகையும், அவர்க்கு நிழலிட முத்துக்குடையும், அவர் வருகையைத் தெரிவித்து ஊத முத்துச்சின்னங்களும் இருந்தன. அவற்றை அன்பர் பலரொடும் சென்று மகிழ்வுடன் ஆளுடையபிள்ளையாரிடம் கொடுத்தனர். அதனைப் பெற்ற ஞானசம்பந்தர் 'எந்தை ஈசன் எம்பெருமான்' என்ற திருப்பதிகம் பாடிப்பரவினார். இதனை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்,

மும்மை யுலகும் புகழச் - செழு
 முத்தின் சிவிகை குடைதிருச் சின்னஞ்
செம்மை யரத்துறை மேய - தேவ
 தேவ னருளச் சிறப்பிற் பெற்றாரால் (8)

என்று குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

முத்துப்பந்தல் பெறல் - ஞானசம்பந்தர் திருச்சத்திமுற்றத்தை வழிபட்டு திருப்பட்டீச்சரத்தை அணைந்தபோது வெயில் மிக்கிருந்தபடியால், திருவருளால் சிவபூதம் ஒன்று ஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தல் வழங்கிற்று. சம்பந்தப்பெருமான் முத்துப்பந்தர் நிழலில் அமர்ந்து, தொண்டர்கள் புடைசூழ திருக்கோயிலை வலம்வந்து சிவபெருமான் திருவடியினைத் தொழுது மகிழ்ந்தார். இதனைத்,

தாவில்பட் டீச்சரத் தையர் - நன்கு
 தந்த மணிமுத்துப் பந்தர் விரும்பி
மேவு திருச்சத்தி முத்தத் - திடை
 மெய்ம்மையிற் பெற்றனர் வெங்குரு வேந்தர் (13)

என்று மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்.

சோதியில் கலத்தல் - பதினாறு வயது நிரம்பிய ஞானசம்பந்தர் திருவுள்ளக் குறிப்பின்படி திருநல்லூர் நம்பாண்டார் நம்பி திருமகளைத் திருமணம் புரிவித்தனர். திருமணங்காண வந்த மெய்யடியார்களும்

திருத்தொண்டர்களும் உடன்வரச் சம்பந்தப்பெருமான் காதலியம்மையாருடன்'குலமணம் புரிவித்தார்தம் கோயிலை நோக்கி எழுந்தருளினார். அப்பொழுது திருப்பெருமணத் திருக்கோயில் முழுவதும் இயற்கைப் பேரொளிப் பிழம்பு தோன்றியது. அனைவரும் அப்பேரொளியில் புகுந்து திருவடிப்பேறெய்தினர். இதனை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்,

திருஞான சிந்தாமணி நல்லெழி லென்றுங்
காட்டும் பெருமண நல்லூர் - மணங்
காணவந் தார்சிவம் பூணச்செய் தாரால் (37)

என்று குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் வாழ்வில் இறைவனோடு தொடர்புடைய அருளிச்செயல்கள் பல நிகழ்ந்துள்ளன. சம்பந்தருக்கும் இளைவனுக்கும் இடையில் நிகழ்ந்த அருளிச் செயல்களான மூன்றுவயதில் ஞானப்பால் உண்ணல்-சம்பந்தர் சிவஞானச்செல்வராய்த் திகழ்வதற்கும்; பொற்றாளம் பெறல்-இறைவன் பெருமையினை இன்னிசையால் பாடிப் பரவுவதற்கும்; முத்துச்சிவிகை முதலியனப் பெறுதல் - பல்வேறு திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவனை நேரிற் சென்று கண்டு மகிழ்தற்பொருட்டு பதிநடை மேற்கொள்ளவும்; பதினாறு வயதில் சோதியில் கலத்தல் - சம்பந்தப்பெருமான் தம் காதலியம்மையாருடன் திருவடிக்கலப் பெய்தவும் முறையே வழிவகை செய்யும் நோக்கில் அமைந்துள்ளன.

அடியவர் பொருட்டு நிகழ்ந்தவை

திருஞானசம்பந்தர் மெய்யடியார்களினிடத்துப் பேரருளும் இரக்கமும் பெருங்கருணையும் மிகக்கொண்டவர். ஆதலால் அடியார்தம் வறுமைநிலை, அவர்களைப் பிணித்துள்ள நோய்கள் மற்றும் அவர்கள் உற்ற மனவருத்தம் போன்றவற்றினைப் போக்கியருளும் பொருட்டு சில அருள் விளையாடல்களை அவர்களிடத்து நிகழ்த்தியுள்ளார். அவை பொற்கிழிப்பெறுதல், படிக்காசு பெறல், முயலகன் நோய் தீர்த்தல், நளிர்சுரம் தீர்த்தல், மணவணிகன் விடன் தீர்த்தல், யாழ்முரிப் பாடுதல், பாலை நெய்தலாதல், ஆண்பனை பெண்பனையாதல், மற்றும் எலும்பைப் பெண்ணாக்குதல் என்றவாறு அமைந்துள்ளது.

பொற்கிழிப் பெறுதல் - சிவபாத இருதயர் சிவவேள்வி செய்வதற்குப் பொன் வேண்டி சம்பந்தரிடம் விண்ணப்பிக்க, சம்பந்தப்பெருமான் மெய்யடியார்களுடனும் சிவபாத இருதயருடனும் பதிநடையாக திருவாவடுதுறையினை அணைந்து, சிவபெருமான் திருமுன்பு பெருமானே 'நீள் நிதி வேண்டினார்க்கீவதொன்றும் மற்றில்லேன் உன்னடி அல்லதொன்றறியேன்' என்று பேரருள் விளைய வேண்டினார். இறைவரின்னருளால் பூதமொன்று விரைந்து பசும்பொன் ஆயிரக்கிழியொன்றை நல்கியது. அதனைச் சம்பந்தர் தம் தந்தையார்பால் கொடுத்துச் சிவ்பெருமானை முழுமுதல்வனாகக் கொண்டு வேள்வியியற்றும்படி வேண்டியருளினார். இதனைத்,

தந்தை கருத்து முடிப்பான் - வளஞ்
சார்பொழி லாவடு தண்டுறை யார்பா
லந்தமின் முத்தமி ழாள - ருல
வாக்கிழ யாயிரம் பொன்னிற் பெற்றாரால் (14)

என்று மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

படிக்காசு பெறல் - திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசருடன் திருவீழிமிழலையில் வீற்றிருந்தபோது பெரும்பஞ்சம் உண்டாக உயிர்கள் பசியால் வாடின. அதுகண்டு அடியவர்கள் உள்ளம் வருந்தினர். நாயன்மார்கள் 'கண்ணுதலான் திருநீற்றுச்சார்பினோர்க்கும் கவலை வருமோ' எனத் திருவுளத்து எண்ணித் துயின்றனர். அன்றிரவு இறைவன் அவர்கள் கனவில்தோன்றி, 'காலமாறுதலினால் நீங்கள் கவல்வீரல்லீர்; எனினும் உங்கள் அடியார்களின் வாட்டத்தைத் தீர்க்கும் பொருட்டுப் பஞ்சம் நீங்கும்வரை பீடத்தின் கிழக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலுமாகப் படிக்காசு ஒவ்வொன்று அளிக்கின்றோம் என்று அருளினர்;விடியலில் இருவரும் சென்று அவ்வாறே பொற்காசு இருக்கக்கண்டு அவற்றை எடுத்து வந்து அடியார்கட்கு அமுதளித்தனர். சின்னாட்களில் பஞ்சம் நீங்கிற்று. இதனை மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்,

காமரு வீழி மிழலை - யமர்
கண்ணுத லாரடி யார்க்கமு தாக
மாமரு வோர் செம்பொற்காசு - தினம்
வைக்கப்பெற் றார்சண்பை வந்த விரகர் (18)

என்று குறிப்பிடுகின்றார்.

முயலகன் நோய்தீர்த்தல்-திருஞானசம்பந்தர் திருப்பாச்சிலாச்சிராமத்திற்கு எழுந்தருளியபொழுது, அந்நாட்டு மன்னன் கொல்லி மழவன் மகள் 'முயல்கன்' என்றும் நோயினால் பெரிதும் வருந்த, அவளைப் பாச்சிலாசிராமத்திறைவன் திருமுன் கொண்டுவந்து பாடுகிடத்தி வைத்திருந்தனர். திருக்கோயிலை வலம்வந்த ஞானசம்பந்தர், உணர்வழிந்து நிலத்தில் சோர்ந்து கிடந்த கன்னியைக் கண்டு, இது என்னவென்று மழவனை வினவ, மழவன், 'இவள் என் மகள்;நெடுநாளாக முயலகன் என்னும் நோயால் வருந்துகின்றாள். அதனைத் தீர்க்கும் உபாயம் அறியாமல் இறைவன் திருமுன்பு சேர்ப்பித்திருக்கிறேன்' என்று கூறினான். ஞானசம்பந்தர் மனமிரங்கி திருவருள் நினைந்து, பிணிதவிர்க்கும் பெரும் பதிகமாகிய 'துணிவளர் திங்கள்' என்பதனை அருளிச்செய்தார். உடனே மழவன் மகள் பிணிநீங்கி எழுந்து தந்தையின் பக்கம் சார்ந்தாள். தந்தையும் மகளும் பெருமானார்த் திருவடியில் விழ்ந்து வணங்கினர். இதனை,

-பாச்சி
லாச்சிரா மத்தெம் மடிகண்மு னன்பு
கொண்ட மழவன் மகளைப் - பற்று
கொடிய முயலக நோயொழித் தாரால்

என்று மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

நளிர் சுரம் தீர்த்தல்-திருஞானசம்பந்தர் எண்ணிலா மெய்யடியார்களுடன் கொடிமாடச் செங்குன்றூர் திருப்பதியினை அடைந்து, அங்குள்ள இறைவனை வழிபட்டு அத்திரு ஊரின்கண் தங்கியருளினர். அக்காலம் மிக்க பனியும் குளிரும் விரவியகாலமாதலால் மெய்யடியார்கள் பல காலம் அந்நாட்டில் தங்கினமையினால் அந்நாட்டின் இயல்பால் வரக் கூடிய 'குளிர் சுரம்' அவர்களையும் பற்றியது. நோயுற்ற மெய்யடியார்கள் ஞானசம்பந்தரிடம் வந்து முறையிட்டனர். பெருமானார் இந்நோய் இந்நிலத்தின் இயல்பெனினும் நமக்கெய்தப் பெறா என்றருளினர். எவ்விடத்தும் அடியார் இடர்காப்பது கண்டமென்றே 'அவ்வினைக் கிவ்வினை' என்றெடுத்துச் செய்வினைத் தீண்டா திருநீலகண்டம் எனத் திருநெறி தமிழ்த் திருமாமறை யோதியருளினார். பெருமானார் தம் நிறைமொழியாணையால் அப்பிணி மெய்யடியார்களையும், அத்திருவூரின்கண் வாழ்வார் அனைவரையும் விட்டு விலகிற்று. இதனை மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்,

கொங்கி னடியரைச் சார்ந்த - வெங்
குளிர்ப்பிணி யாதி குலைந்தொழி வெய்த
வெங்கும் புகழ்திரு நீவ - கண்ட
மீற்றி னுறுதமிழ் வாய்மலர்ந் தாரால் (12)

என்று குறிப்பிடுகின்றார்.

மணவணிகன் விடம் தீர்த்தல்-ஞானசம்பந்தர் மெய்யன்பர் திருக்கூட்டத்துடன் திருமருகலுக்கு எழுந்தருளி, அங்கு கோயில் கொண்டுள்ள மாணிக்க வண்ணரையும் வண்டுவார் குழலியம்மையையும் வணங்கி, ஆண்டுள்ள திருமடத்தில் தங்கியருளினர். அப்பொழுது ஒரு வணிகன்தன் மாமன் மகளை மணத்தற்பொருட்டு அவளைத்தன்னூர் அழைத்துச் செல்லும் வழியில் திருமகள் திருமடம் ஒன்றில் இரவு தங்கித் துயின்றனன். அந்நிலையில் அவனை வாளரவுத் தீண்ட அவன் இறந்தனன். உடனிருந்த மணப்பெண் திருக்கோயில் திருவாயிலை நோக்கி அழுதுபுலம்பினள். அந்நேரம் வழிபாட்டிற்கு எழுந்தருளிய சம்பந்தப்பெருமான் திருச் செவியில் அழுகையொலி படவே அமுதவளைக் கண்டு நிகழ்ந்ததை அறிந்து, அவள் நிலைக்கு மிகவும் இரங்கியருளினார். திருவருளினால் திருப்பதிகம் பாடி இறந்த வணிகனை உயிர்ப் பித்தருளியதுடன், அவர்களுக்கு அக்கோயிலின் கண்ணே திருமணமும் புரிவித்தார். மணமக்கள் பெருமானார் திருவடிகளை வணங்கிச் சென்றனர். இதனை,

திருமருகலிற் பிள்ளையார் வாக்கெழு முன்னே
தூங்கி யெழுந்தவன் போல - விடத்
தோய்வா லிறந்தவன் றானெழுந் தானால் (16)

என்று பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்.

யாழ்முரிப் பாடுதல் - திருத்தருமபுரம் எழுந்தருளிய திருஞானசம்பந்தரை

நீலகண்டப் பெரும்பாணர் தம் சுற்றத்தினருடன் வந்து எதிர்கொண்டு வாழ்த்தி வணங்கினர். பாணர் தாம் சம்பந்தப்பெருமானார் பாடியருளும் திருப்பதிகங்களை அவர்தம் திருவருளால் யாழில் மீட்டும் பேறு பெற்றேனென்று தம் சுற்றத்தார்க்கு உவகையுறக் கூறினார். சுற்றத்தினர் பிழைபட உணர்ந்து, பாணர் அத்திருப்பதிகங்களை யாழில் மீட்டுவதனாலேயே அவை உலகெங்கும் பரவுவதாயிற்று என்றனர். அதுகேட்ட பாணர் மிகவும் வருந்தி, ஞானசம்பந்தர் திருவடியில் வணங்கி இவர்கள் பிழைபட உணர்ந்துள்ளதைப் போல் உலகவரும் உணர்ந்து மயங்காதிருத்தற்பொருட்டு ஏழிசை யாழிற்கடங்காத் திருப்பதிகம் பாடியருள வேண்டுமென்று விண்ணப்பித்தார். சம்பந்தரும், 'செய்ய சடையாரளித்த திருவருளின் பெருமையெலாம் யாழிலடங்குமோ' என்று கூறி யாழ்மூரிப் பதிகம் பாடியருளினர். இதனை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்,

நீலகண் டப்பெரும் பாணர் - திரு
நெஞ்ச முவந்து நெடுங்களி கூறக்
கோலத் தரும புரத்தி - லிசை
கோலிய யாழ்மூரி வாய்மலர்ந் தாரால் (15)

என்று குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

பாலை நெய்தலாதல் - திருநனிபள்ளி திரிவூரின்கண்ணுள அந்தணர்களும் சிவனடியார்களும் சிகாழித் திருப்பதி வந்து ஞானசம்பந்தரை வணங்கித் தம்திருவூர்க்கு மிக்கச் சிறப்புடன் அழைத்தேகினர். பெருமானார் திருநனிபள்ளியை நெருங்கியதும், 'வானனையும் மலர்ச்சோலை சூழ்ந்த பதி 'யாதென்று வினவ, அதனைச் செவிமடுத்த சிவபாத இருதயர் அது திருநனிபள்ளி என விடையளித்தார். அதனைக்கேட்ட சம்பந்தப் பெருமான், 'இது நனிபள்ளி போலு நமர்காள்' என்னும் மறைமொழியினைத் திருப்பாட்டின் இறுதியில் அமைத்துத் திருப்பதிகம் பாடியருளினர். உடனே திருக்குறிப்பால் முன் அத்திருவூர் பாலை நிலமாகவிருந்தமை மாறி நெய்தல் நிலமாகத் திகழ்ந்தது. இதனை,

ஐயரேழிசை யோங்க வினிமை ததும்பப்
பன்னும் புகழ்த்திரு வாக்காற் - கொடும்
பாலை குளிர்நெய்த லாகிய தென்னின் (6)

என்று பிள்ளையவர்கள் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

ஆண்பனை பெண்பனையாதல்-திருஞானசம்பந்தர் திருவண்ணாமலையை வழிபட்டு, திருவோத்தூரையடைந்து இறைவனை வணங்கியிருக்கையில் அடியவர் ஒருவர் அழுதவாறே வந்து சம்பந்தரை வணங்கினார். மேலும் அவர், 'அடியேன் இறைவனுக்காக வைத்த பனைகள் எல்லாம் ஆண்பனையாய்க் காயாவாயின. அதனைக் கண்ட சமணர்கள் நீர் வைத்த பனைகள் காய்க்குமோ? என்று ஏளனஞ் செய்தனர் என்று விண்ணப்பித்துக் கொண்டார். ஞானசம்பந்தர் கோயிலடைந்து 'பூத்தேர்ந்தாயன்' என்னும் பதிகம் பாடி 'குரும்பை யாண்பனையீன்குலை ஓத்தூர்' என்று திருக்கடைக் காப்பு அருளியபோது அப்பனைகள் எல்லாம்

குலை தள்ளின. அடியார்கள் வியந்தனர். குலையீன்ற ஆண்பனைகள் தமது கால எல்லைவரை வாழ்ந்து பிறவி ஒழிந்து சிவத்தைச் சார்ந்தன. இதனை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்,

திருவோத்தூரில் யார்க்கு மதிசய மேவ
வையர் திருவருள் வாக்காற் - பல
வாண்பனை பெண்பனை யாயின மாதோ (33)

என்று குறிப்பிடுகின்றார்.

எலும்பைப் பெண்ணாக்கல் - திருஞானசம்பந்தர் திருவொற்றியூரை வழிபட்டு மயிலாப்பூரை அடைந்து திருக்கபாலீச்சுவரரை வணங்கி, சித்தம் இன்புறு சிவநேசர்பால் திருவருள் செலுத்தினார். அரவு கடித்து இறந்த மங்கை என்புசேர் குடத்தினைத் திருமதிற் புறவாயிலிற் கொண்டுவரச் செய்து வைத்து வணங்க நோக்கி, மண்ணோரும் விண்ணோரும் காணப் பூம்பாவை பேர் செப்பி மண்ணினிற் பிறந்தார் பெறும் உண்மைப்பயன் உணர்த்தி, இறைவனை உலகவர் முன் வருக என்றுரைத்து, 'மட்டிட்ட புன்னை' என்னும் பதிகம் பாடியருளினார். அக்குடத்துள் இருந்த என்பு பெண்ணுருவாயிற்று. பூம்பாவையும் சிவநேசரும் சம்பந்தப்பெருமானை வணங்கிச் சென்றனர். இந்நிகழ்வினை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்

மேவு சமயம் பலவுஞ் - சைவ
மேபொரு ளென்று விரும்பிக் கொண் டாடத்
தூவு மெலும்பு பெண்ணாக - அருள்
சொல்லி னதிசய மல்லதெ துண்டாம் (36)

என்று குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் அடியவர்கள் பொருட்டு நிகழ்த்திய அருள் விளையாடல்கள் மெய்யன்பர்களின் வறுமையினைப் போக்குதல் என்ற நிலையில் பொற்கிழிப் பெறுதல், படிக்காசு பெறல், பாலை நெய்தலாதல் ஆகிய அருள் விளையாடல்களாகவும்;பிணி நீக்குதல் என்ற வகையில் முயலகன் நோய் தீர்த்தல், நளிர் சுரம் தீர்த்தல், மணவணிகன் விடம் தீர்த்தல் ஆகிய அருள் விளையாடல்களாகவும்; அடியவர்தம் மனவருத்தம் போக்குதல் என்ற நிலையில் யாழ்முரிப் பாடுதல், ஆண்பனையைப் பெண்பனை ஆக்குதல், எலும்பைப் பெண்ணாக்குதல் ஆகிய அருள் விளையாடல்களாகவும் அமைந்து சமுதாய நல்வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் வகையில் அமைந்துள்ளன.

சமயச் சார்பு நிகழ்வுகள்

திருஞானசம்பந்தர் சைவநெறி தழைக்க இறையருளால் இந்நிலவுலகில் அவதரித்தார். இதனை அவரே, ''எப்பொழுதும் சைவத்தைப் பழித்துரைக்கும் சமணர்களையும் சாக்கியர்களையும் வாதில் வென்று, சைவ நெறியை ஓங்குவிக்க இறைவன் தன்னைத் தோற்றுவித்தருளினன்'' என்று குறிப்பிடுகின்றார். சைவத்தின் உயர்வினை நிலைநாட்ட வந்த திருஞானசம்பந்தர் மதுரையில் பாண்டிய மன்னன் வெப்பு நோய் பெறவும், பின்னர் தாம் திருநீறளித்து அவ்வெப்பு நோயினைப் போக்கியும் அருளினர்.

மேலும் சமணர்களுடன் அனல் வாதம் மற்றும் புனல் வாதம் புரிந்து அதில் அவர்களை வென்று சைவத்தை நிலைநிறுத்தும் வகையில் அருள் விளையாடல் புரிந்துள்ளார்.

வெப்பு நோய் பெறல்-சிவநெறி வளர்த்தற்பொருட்டு மதுரை வந்தருளிய திருஞானசம்பந்தர் திருமடம் ஒன்றில் தங்கியருளினார். அப்பொழுது சமணர்கள் ஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தில் மந்திரத்தால் செந்தீச் சேரச் செய்தனர். இறையருள் மிக்க சம்பந்தர்பால் மந்திரம் பலியாது என்பதையுணர்ந்த அக்கீழ்மையோர் கூடி, திருமடப் புறச்சுற்றினில் தழல் கொண்டு புகந்து தீத்தொழில் புரிந்தனர். இதனை அறிந்த ஞானசம்பந்தர் 'அவ்வஞ்சனை மனத்தோர் எண்பொட்டுச் செய்த தீங்கு ஆயினும் சிவபத்தருக்கு எய்துமோ?" என்றார். மேலும் பாண்டியன் அரசியல் முறைமை வழுவிற்று என்று எண்ணி, வெய்ய தீங்கு ஆகிய இது வேந்தன் மேலதாகும் என்னும் விதிமுறையால், சைவர் வாழ் மடத்தில் இட்ட தீத்தழல் பையவே சென்று பாண்டியனுக்கு ஆகுக என்றார். இதனைத்

தீய வமணக் கொடிய - ரையர்
திருமடத் திற்செய்த தீமை யருளான்
மேய வழுதி யுடம்பு - பற்றி
வெஞ்சுரமாகத் திருவாய் மலர்ந்தார் (23)

என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்.

வெப்பு நோய் தீர்த்தல்-மதுரையில் அமணர்தம் தீத்தொழிலால் பாண்டிய மன்னனை வெப்பு நோய்ப் பற்றியது. அந்நோய் நீக்க முயன்ற பலராலும் தீர்க்க முடியாததாய் இருந்தது. திருஞானசம்பந்தர் கடைக்கண்ணோக்கம் பெற்றால் பிறவி நோயே ஒழியுமெனின், இந்நோய் ஒழிவதில் ஐயமில்லை என்று அமைச்சர் குலச்சிறையார் எடுத்துக்கூற, பாண்டியனும் சம்பந்தப்பெருமானை அழைத்து வருமாறு வேண்டினான். அமைச்சர் முதலோர் வணங்கி வேண்ட திருவுளம்பற்றி திருஞானசம்பந்தர் எழுந்தருளினார். நோக்கும் புண்ணியனானான் காக்கும் பாண்டியன். சம்பந்தப்பெருமானார் ஆலவாய் அவிர்சடைக் கடவுளின் திருவருளால் வேந்தன் வெப்புநோயினைத் திருநீற்றுப் பதிகம் பாடி நீக்கியருளினார். இதனை, மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்,

செம்மையில் கூனோடு வெப்பு - நின்ற
சீர்நெடு மாறற்கு நீங்கப் பொலிவு
வெம்மை யமணர்க்கு நீங்க - ஐயர்
மேதகு நீறு திருக்கை தொட்டாரால் (24)

என்று குறிப்பிடுகின்றார்.

ஏடு தீயில் இடல்

பாண்டிய மன்னன் வெப்பு நோயினைப் போக்கவியலாத சமணர்கள், சம்பந்தப்பெருமானிடம் தங்கள் சமய உண்மையை மதவழக்கிட்டு நாட்டுதல் வேண்டுமென்றனர். அதனை அளஃவை முறையாற் பேசாமல் குறித்த கொள்கையினைக் கண்ணுக்கு நேரே காட்டுந் தன்மையாக ஆக்குதல்

வேண்டுமென்றும், சமய உண்மையினை ஏட்டிலெழுதி அதனை வெந்நெருப்பிலிட்டால் அவ்வேடு வேவுறாமலிருப்பது வெற்றியாகும் என்றும் உரைத்தனர். அவர்கள் கருத்திற்கு உடன்பட்ட ஞானசம்பந்தர் திருவருள் உந்துதலால், 'என்னை யாளுடை யீசன் தன்நாமமே மன்னு மெய்ப்பொருளாமென'க் காட்ட எண்ணி, 'தளரிள வளரொளி' பாடித் தீயிலிட்டனர். இட்ட அவ்வேட்டினி லெழுதிய பதிகம் பரம்பொருளைப் (சிவன்) பொருளெனக் கொண்டமையால், பட்ட தீயிடைப் பசுமையாய் விளங்கியது. அமணர்கள் தங்கள் கொள்கையினை வரைந்த ஏட்டினைப் பெருந்தீயில் இட்டனர். அவ்வேடு பஞ்சு தீயிடைப் பட்டது போல் பட்டது. சமணர்கள் ஞானசம்பந்தரிடம் தோல்வியைத் தழுவினர். இதனை,

அருகர் முகமு மனையா - ரழ
 லாங்கிட்ட வேடு மொருங்கு கருகப்
பெருகிய சைவர் முகமு - மையர்
 பேரழ லேடும் பசந்தன காணாய் (25)

என்று பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஏடெதிர் செல்லல் - ஏடு தீயிலிட்ட நிகழ்ச்சிக்குப் பின் சம்பந்தப்பெருமான் சமணர்கள் பால் கழிவிரக்கங்கொண்டு, இனி என் செய்வதென்றருளினர். அமணர்கள் நீடு மெய்ப்பொருளினுண்மை நிலைபெறுந் தன்மை யெல்லாம் ஏட்டில் எழுதி அவ்வேட்டை ஓடும் புனலில் இட்டால் அவ்வேடு ஒழுகுதல் செய்யாது, புனலை எதிர்த்து நின்றால் நற்பொருள் பயப்பதும், அதுவே வெற்றியுமாகும் என்றனர். சம்பந்தர் நன்று என்றனர். மன்னன் முன்னிலையில் வைகையாற்றில் சமணர்கள் 'அத்தி நாத்தி' என்றெழுதி ஆற்றுப்புனலில் விடுத்தனர். அவ்வேடு அமணர்களை நட்டாற்றில் விட்டுப் போயிற்று. அதுகண்ட அமணர்கள் செய்வதறியாது திகைத்தனர். ஞானசம்பந்தர் திருவருளினால் 'பர சமயம் நிராகரித்து நீறாக்கும்' என்று திருவேட்டில் எழுதுவித்து ஆற்றின்கண் திருக்கையால் இட்டார். அவ்வேடு பொருபுனல் வைகையாற்றிலெதிர்த்து நீர் கிழித்துப் போகி, இருநிலத்தோர்கட்கெல்லாம் இது பொருளென்று காட்டிற்று. கண்ணுற்ற அனைவரும் மகிழ்ந்தனர். இதனை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்,

அண்ணுங் கொடிய வமண - ரோரெண்
 ணாயிர ருங்கொடுங் கூர்ங்கழு வேற
வெண்ணு முயிர்களீ டேற - வையை
 யாற்றிட்ட வேடெதி ரேறிய தம்மா (26)

என்று குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் எந்நோக்கத்திற்காக புவியில் அவதரித்தாரோ அந்நோக்கத்தினை சமயச்சார்பான அருள் விளையாடல்களின் வழி நிறைவு செய்தருளினர். சமணர்தம் தீத்தொழிலால் பாண்டிய மன்னன் வெப்பு நோய் பெறவும், பின்பு திருவருளால் சம்பந்தர் திருநீறளித்து அவ்வெப்பு நோயினைப் போக்கியும் அருள் புரிந்தார். இதனால் பாண்டிய மன்னன் சமணம் தவிர்த்துச் சைவம் சார்ந்தான். மேலும் ஞானசம்பந்தர் சமணர்களுடன் சமயவாதம் மேற்கொண்டு அனல்வாதம் மற்றும்

புனல்வாதம் புரிந்து திருவருளினால் சமணர்களை வாதில் வென்று அவர்களைக் கழுவேற்றி சமணம் அழிந்தொழியவும், சைவம் தழைத்தோங்கவும் செய்தருளினர்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அருளாளர் திருஞானசம்பந்தர்தம் வாழ்வில்நிகழ்ந்த அனைத்து அற்புதங்களையும் தொகுத்து முழுமை நோக்கில் வழங்கியுள்ளார். சம்பந்தர் மூன்று வயதில் தேவிபார்வதி வழங்கிய ஞானப்பால் உண்டு சிவஞானச்சம்பந்தராய்த் திகழ்ந்தது தொடங்கி, அவர் பதினாறு வயதில் நம்பாண்டார் நம்பிகள் திருமகளை மணந்து சோதியில் கலந்து திருவடிக்கலப்பு எய்திய நிலை வரையிலான இறைத்தொடர்பு அருள் விளையாடல்கள், அடியவர் பொருட்டு நிகழ்ந்த அருள் விளையாடல்கள் மற்றும் சமயச் சார்பு அருள் விளையாடல்கள் முதலானவைகளை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பதிவுசெய்துள்ள திறனை இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

நிறைவு

1. திருஞானசம்பந்தர் தம் வாழ்வியல் பல்வேறு அருள் விளையாடல்களைத் தன்னகத்தே கொண்ட சிறப்பிற்குரியது.

2. சம்பந்தர்தம் இறைத்தொடர்பு அருள் விளையாடல் அவரைச் சிவஞானச்சம்பந்தராக்கவும், இறைவன் பெருமைகளை இன்னிசையால் பாடி மகிழவும், இறைவன் எழுந்தருளியுள்ள பல்வேறு திருத்தலங்களைப் பதிநடை மேற்கொண்டு கண்டுகளிக்கவும் தன் காதலியாருடன் திருவடிக்கலப்பெய்தவுமான தன்னிலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளன.

3. சம்பந்தர் மெய்யடியார்பால் கொண்ட ஈடுபாட்டினால் அவர்தம் வறுமைநிலை, அவர்களைப் பிணித்த நோய்கள், அவர்கொண்ட மனவருத்தம் போன்றவற்றினைப் போக்கியருளும் நோக்கில் அவர்களிடத்துச் சில அருள் விளையாடல்களைப் புரிந்துள்ளார்.

4. சம்பந்தப் பெருமானின் சமயச்சார்பு பெற்ற அருள் விளையாடல்களான பாண்டிய மன்னன் வெப்பு நோய் பெறுதல், சம்பந்தர் திருநீறால் வெப்பு நோயினைப் போக்குதல், சமணர்களுடனான சமய வாதில் ஏடு தீயில் இடல், ஏடெதிர் செல்லல் முதலானவைகளின்வழி பாண்டிய மன்னன் சைவம் தழுவவும், சமணர்கள் வாதில் தோல்வியுற்று கழுவேற்றவும், சைவ நெறி தழைக்கவும் வழிவகை செய்துள்ளது.

5. திருஞானசம்பந்தரின் அருள் விளையாடல்களுள் இறைத்தொடர்புடையவை சம்பந்தரின் தன்நிலை வளர்ச்சிக்கும், அடியவர்பொருட்டு நிகழ்ந்தவை மெய்யடியார்களின் குறை களைதல் என்ற நிலையில் சமுதாய நல்வளர்ச்சிக்கும், சமயச்சார்பு நிகழ்வுகள் சமணம் அழியவும் சைவம் தழைக்கவுமான சமயவளர்ச்சிக்கும் உதவும் நோக்கில் அமைந்துள்ளன.

